வெளியீடு : 11-9-2023 Issued: 11-9-2023

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு
(பதினாறாவது பேரவை)

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT
(SIXTEENTH ASSEMBLY)

புதன்கிழமை, ஜனவரி 11, 2023—தொகுதி 51—எண் 2

Wednesday, the 11th January 2023—Volume 51—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. 3.00] **[Price Rs. 3.00**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

11–1–2023

உள்ளடக்கம்

		பக்கங்கள்
1	**இரங்கற்குறிப்பு—**	7-8
	முன்னாள் உறுப்பினர் திரு. து. புருடோத்தமன் அவர்கள் மறைவு	7-8
2.	**வினாக்கள்-விடைகள்—**	8-71
	(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்	8-71
	(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1 முதல் 4 வரை)	71
	(இ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் (பட்டியல்கள் 5 முதல் 7 வரை)	71
3.	**தகவல் கோரல்—**	72-81, 82-88, 96-97
	(அ) சென்னை, சாலிகிராமத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பாதுகாப்புப் பணியிலிருந்த பெண் காவலருக்கு பாலியல் தொல்லை உள்ளிட்ட சட்டம்-ஒழுங்கு பிரச்சினை	72-81, 82-88
	திரு. எடப்பாடி K. பழனிசாமி	72-73, 75-76, 78, 80, 83-84

பக்கங்கள்

3. **தகவல் கோரல்**—தொடர்ச்சி

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் 74-75, 77-80, 82-87,

திரு. எஸ்.பி. வேலுமணி 81

(ஆ) Digital survey என்ற பெயரில் தமிழக எல்லைப் பகுதிகளை கேரள அரசு அளந்து கொண்டிருப்பது 96-97

திரு. ஓ. பன்னீர்செல்வம் 96-97

*மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன் 97

4. **உரிமைமீறல் பிரச்சினை**—

9-1-2023 அன்று மாண்புமிகு ஆளுநர் உரையாற்றுகையில் முக்கிய விருந்தினர்கள் பார்வையாளர்கள் மாடத்திலிருந்த ஆளுநர் அவர்களின் விருந்தினர் பேரவை நடவடிக்கைகளைத் தனது கைபேசியில் பதிவு செய்தது 81-82, 88-89

முனைவர் T.R.B. ராஜா 81-82, 88-89

5. **9-1-2023 அன்று மாண்புமிகு ஆளுநர் உரையாற்றுகையில் பேரவையில் நடைபெற்ற நிகழ்வுகள் மற்றும் பேரவை விதி 92 (vii)-க்கு உட்பட்டு உறுப்பினர்கள் உரையாற்றுதல் குறித்து பேரவைத் தலைவர் அவர்களின் தீர்ப்புரை** 89-96

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

6. சிறப்புக் கவன ஈர்ப்பு—

புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல், ஆதி திராவிடர் குடியிருப்பு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மனிதக் கழிவுகளைப் போட்டு அசுத்தம் செய்தது — 98-113

*திரு. மா. சின்னதுரை — 98-100

திரு. S.S. பாலாஜி — 100-101

திரு. ட்டி. இராமச்சந்திரன் — 101-102

*முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா — 102

திரு. தி. வேல்முருகன் — 103

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் — 104

திரு. ஜி.கே. மணி — 104-105

திரு. கு. செல்வபெருந்தகை — 105-108

டாக்டர் சி. விஜயபாஸ்கர் — 108-109

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் — 109-113

7. அறிவிப்பு— 113

மாற்றுத் தலைவர்கள் பட்டியல் — 113

8. அறிக்கைகள் அளித்தல்— 113-115

(அ) பொதுக் கணக்குக் குழு — 113

(ஆ) பொது நிறுவனங்கள் குழு — 114

(இ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு — 114

(ஈ) அரசு உறுதிமொழிக் குழு — 114

(உ) மனுக்கள் குழு — 114-115

பக்கங்கள்

9. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—	115-188
*திரு. நா. இராமகிருஷ்ணன்	115-123
திரு. க. சுந்தர்	116
திரு. கே.பி. முனுசாமி	124-135, 145-149
*மாண்புமிகு திரு. கே.என். நேரு	128, 147, 179-181
*மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு	130-132, 148
*மாண்புமிகு முனைவர் க. பொன்முடி	135-136
திரு. எடப்பாடி K. பழனிசாமி	136-138, 140-142, 144
*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்	136-137, 144
மாண்புமிகு திரு. இ. பெரியசாமி	138, 148, 182, 184
மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்	138-143, 185-187
டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்	149-152
திரு. ஜே.ஜி. பிரின்ஸ்	153-157
*முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா	157-162
திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்	163-169

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

9. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்— *தொடர்ச்சி*

**திரு. நத்தம் ஆர். விசுவநாதன்*	170-171, 173-175, 177-178, 185,188
**மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி*	171-172
**மாண்புமிகு திரு. எ.வ. வேலு*	173-177, 182-183
மாண்புமிகு திரு. சா.மு. நாசர்	178
திரு. எஸ்.பி. வேலுமணி	180-181, 183-184,

10. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 189-196

11. **இணைப்புகள்** 197-905

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மார்கழி 27, திருவள்ளுவர் ஆண்டு–2053

2023 ஜனவரி 11, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“அஞ்சாமை யல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி யிடத்தாற் செயின்.”

ஒரு செயலுக்குரிய வழிமுறைகளைக் குறையின்றிச் சிந்தித்துச் செய்யுமிடத்து, அஞ்சாமை ஒன்றைத் தவிர, வேறு துணை தேவையில்லை.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் கருப்பு சட்டை அணிந்திருந்தனர்.)

1. இரங்கற்குறிப்பு

முன்னாள் உறுப்பினர் திரு. து. புருடோத்தமன் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கற்குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. து. புருடோத்தமன் அவர்கள் 9–1–2023 அன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. து. புருடோத்தமன் அவர்கள் 1977–1980 மற்றும் 1980–1984 ஆகிய ஆண்டுகளில் சைதாப்பேட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

1—

பாதாள சாக்கடைத் திட்டம்

***20724—திரு. ஆர்.பி. உதயகுமார்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுவது குறித்த திருத்திய விடையை அளிப்பதற்கு தாங்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஜனவரி 11]

(அ) திருமங்கலம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) நிதிநிலைக்கேற்ப விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டினுடைய முதல் கேள்வியாக இந்த அவையிலே கேட்கின்ற நல்வாய்ப்பினை எனக்கு வழங்கியிருக்கிற, மறைந்த பாரத ரத்னா புரட்சித் தலைவர் அவர்களையும் இதய தெய்வம், தமிழர் குலச் சாமி புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், வருங்கால முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் தயவுசெய்து-கூடுதலாக இரண்டு பேர் கேள்வி கேட்க அந்த time–ஐ நான் பயன்படுத்துவேன். எனவே, கேள்வியை மட்டும் நீங்கள் சுருக்கமாகக் கேட்டீர்களென்றால், பதில் சொல்பவர்களும் உடனே பதில் சொல்வார்கள். கூடுதலாக 4 பேர் பயனடைவார்கள். நன்றி.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இல்லை. 11–12–2012 அன்று ரூ.40 கோடி மதிப்பீட்டில் ஏற்கெனவே மேற்படி திட்டத்திற்கு proposal கொடுக்கப்பட்டிருக்கிறது. அது தொடர்ந்து கிடப்பிலே இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உள்ளது. தற்போது, மக்கள்தொகையும் 65 ஆயிரம் என்றளவில் உயர்ந்திருக்கிறது. 27 வார்டுகள் இருக்கக்கூடிய அந்த மிகப் பெரிய நகராட்சிக்கு மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களும் நேரிலே வந்து ஆய்வுகள் மேற்கொண்டிருக்கிறார்கள். மிகவும் அத்தியாவசியத் தேவையாக இருக்கின்ற காரணத்தினால், பரிசீலிக்கிறேன் என்பதைக் காட்டிலும், செய்து கொடுக்கிறேன்

என்று சொன்னால், அந்தப் பகுதி, தொகுதி மக்கள் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதில் நீண்டதாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூர்ந்து கவனித்துக்கொள்ள வேண்டும். எங்களுக்கெல்லாம் மிகப் பெரிய பெருமை. 10 ஆண்டுக்காலம் மூத்த அமைச்சராக, சிறப்பான அமைச்சராக செயலாற்றி, உங்களால் முடியாததை நாங்கள் செய்து தருகிறோம் என்ற உறுதியை இப்போது நாங்கள் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நான் உறுதியாக செய்து தருகிறேன்.

திருமங்கலம் நகராட்சி முதல்நிலை நகராட்சியாகச் செயல்பட்டு வருகிறது. இது 27 வார்டுகளை உள்ளடக்கிய 10.70 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகும். 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, மக்கள்தொகை 51,194 ஆகும். தற்போதைய மக்கள்தொகை 60,459 ஆகும். இந்நகராட்சியில், 19,672 குடியிருப்புகள் இருக்கின்றன. ஏற்கெனவே இந்நகரின் தென்பகுதியில் 1962 ஆம் ஆண்டு உசிலம்பட்டி ரோடு மற்றும் தெற்குத் தெரு பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டம், 8 வார்டுகளுக்கு முழுமையாகவும், 5 வார்டுகளுக்கு பகுதியாகவும் செயல்பட்டு வருகிறது. 61 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில், இத்திட்டத்தின்கீழ் சேகரிக்கப்படும் கழிவுநீர் தெற்குத் தெருவில் அமைந்துள்ள இந்நகராட்சி கழிவுநீர் நீரேற்று நிலையம்மூலம் நேரடியாக நீரேற்றம் செய்யப்பட்டு, இந்நகராட்சியின் கினியா புல் பண்ணைக்கு பயன்படுத்தப்படுகிறது.

முற்பகல் 10–05

தற்போது, இந்நகரில் 21 கி.மீ. நீளத்திற்கு பாதாள சாக்கடைக் குழாய்கள் அமைக்கப்பட்டு 3,742 பாதாள சாக்கடை இணைப்புகள் மற்றும் 95 எண்ணிக்கையிலான பராமரிப்புத் தொட்டிகள் உள்ளன. இந்நிலையில், இந்நகரின் மற்ற பகுதிகளிலுள்ள வீடுகளில் கசடு கழிவினை அகற்றும் வகையில் 40 K.L.D. கொள்ளளவு திறன்கொண்ட கசடு கழிவு சுத்திகரிப்பு

2023 ஜனவரி 11]

நிலையம் தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது. கசடு கழிவுநீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் திருமங்கலம் நகராட்சிப் பகுதியிலுள்ள வணிக நிறுவனங்கள் மற்றும் வீடுகளில் உள்ள கழிவுநீர் தொட்டிகளில் சேகரமாகும் கசடு கழிவுகள் தனியார் வாகனங்கள்மூலம் அகற்றப்பட்டு, கழிவுநீர் உயிரி செயலாக்கமுறையில் சுத்திகரிக்கப்பட்டு பாதுகாப்பான முறையில் வெளியேற்றப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னாள் அமைச்சராக இருந்தவர், உங்களுக்கு நன்றாகத் தெரியும். 61 ஆண்டுகளுக்கு முன்னால் அமைக்கப்பட்ட குழாய்கள் இப்போது பழுதடைந்து செயல்படாத நிலையில் இருப்பதை நாங்கள் அறிவோம். ஏற்கெனவே அரசினுடைய கொள்கை முடிவு இருக்கிறது. ஒரு இலட்சம் மக்கள்தொகை இருக்கின்ற இடத்திலே பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கலாம். மற்ற இடங்களிலே அவர்களால் அதைப் பராமரிப்பதற்குக்கூட வருவாய் காணாது என்கிற காரணத்தால் அதைச் செயல்படுத்த முடியவில்லை. ஆனால், இப்போது இந்த அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, மதுரை போன்ற மாநகரங்களுக்கு அருகில் இருக்கின்ற நகரங்களுக்கும் மதுரையில் உள்ளதைப் போன்று அனைத்து வசதிகளும் செய்ய வேண்டும்; அதுபோல், தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற பெரிய மாநகரங்களுக்கு அருகில் இருக்கின்ற நகரங்களிலும் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அதுவும், குறிப்பாக மக்கள்தொகை 60 ஆயிரம், ஒரு இலட்சம் என்ற அடிப்படையில் இல்லாமல், எங்கு தேவையோ அங்கே செய்ய வேண்டுமென்ற ஒரு கொள்கையை தமிழ்நாடு அரசு எடுத்திருக்கிறது. எனவே, இந்த ஆண்டு இதற்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பகுதியில் நிறைவேற்றித் தரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், திருமங்கலத்தில் அனைத்து வசதிகளையும் செய்து தருவோமானால் மதுரைக்கு குடியேறுவது குறைந்து, மதுரையில் இட நெருக்கடி குறையும் என்ற அந்தக் கொள்கையின் அடிப்படையில், தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற மாநகரங்களின் அருகில் இருக்கின்ற நகரங்களை அனைத்து வசதிகளும் கொண்ட நகரங்களாக உருவாக்குவதற்கு அரசு கொள்கை முடிவு எடுத்திருக்கிறது. நீங்கள்கூட பணிகளை விரைந்து முடிக்க வேண்டுமென்று கேட்டீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அணுகி,

நிதிநிலைமைக்கு ஏற்ப எவ்வளவு விரைவாக பணிகளைச் செய்து தர முடியுமோ, இந்த அரசு நிச்சயமாக செய்து தரும் என்கிற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவ்வளவு பெரிய திட்டத்தை உங்களுக்குத் தந்திருக்கின்றார்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, இதற்கு ஏற்கெனவே 11-12-2012-லேயே proposal போய் இருக்கிறது. உங்களுக்கும் அது தெரியும். நீங்களும் ஆய்வு செய்திருக்கிறீர்கள். நீங்கள் சொன்ன தகவலிலே 1962-ல் 27 வார்டுகளில் அன்றைக்கு இருந்த ஊரக அமைப்பின்மூலம் முழுமையாக 8 வார்டுகளுக்கும், பகுதியாக 5 வார்டுகளுக்கும், நீங்கள் சொன்ன உசிலம்பட்டி ரோடு மற்றும் அதன் தென்பகுதியில்தான் அந்தப் பணிகளையெல்லாம் செய்தோம். இது ஏற்கெனவே நாங்கள் கொடுத்த திட்டம்தான். 10 ஆண்டுகாலமாக அமைச்சராக இருந்தார்; செய்யவில்லை என்று நீங்கள் சொன்னீர்கள். 10 கோடி ரூபாய்க்கு Integrated Urban Development Mission-லும், SRP Scheme-லும், TURIP Scheme-லும் திருமங்கலம் நகராட்சியிலே அதிகமாக கொடுத்தது அம்மா அவர்களின் அரசில், எங்களுடைய முதலமைச்சர் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய மேலான கவனத்திற்குச் சொல்கிறேன்; அதுபோல, 21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பேருந்து நிலையத் திட்டத்தையும் நீங்கள் இரத்து செய்துவிட்டீர்கள். பழைய பேருந்து நிலையத்தையே விரிவுபடுத்தினீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் கேள்விக்கு வாருங்கள். குடிநீர் திட்டத்தை நாங்கள் தந்திருக்கிறோம். நீங்கள் செயல்படுத்தவில்லை என்றுதான் மாண்புமிகு அமைச்சர் சொல்லியிருக்கிறார்களே தவிர, மற்ற திட்டங்களைச் செயல்படுத்தவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் சொல்லவில்லை. (குறுக்கீடு) நீங்கள் கேள்விக்கு வந்துவிடுங்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்காகச்

2023 ஜனவரி 11]

சொல்கிறேன். இது ஏற்கெனவே கொடுக்கப்பட்டது. பாதி பகுதியில் இருந்து, மீதி பகுதியில் இல்லாததால், நடைமுறைச் சிக்கல்கள் நிறைய இருக்கின்ற காரணத்தால், ஒரு இலட்சம் மக்கள்தொகை என்ற கொள்கை முடிவை—பல சந்தர்ப்பங்களில் அவசர, அவசியம் கருதி, நீங்கள் சொன்னதுபோல் மதுரைக்கு அருகாமையில் இருக்கின்ற காரணத்தினால்—தளர்த்தி முன்னுரிமை அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைச் செய்து தர முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் காலையில் வரும்போது அதிகாரிகளிடத்தில் இதுகுறித்து கலந்து பேசினேன். திருமங்கலம் நகரத்தில் முழுமையாக பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட 400 கோடி ரூபாய் செலவாகும் என்றும் அந்த 400 கோடி ரூபாயை அரசு செலவு செய்தாலும்கூட, அதைப் பராமரிக்கின்ற அளவிற்கு அவர்களுக்கு வருவாய் இருக்கிறதா என்பதைக் கண்டறிய வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். நான் இல்லையென்று சொல்வதற்காக இங்கே வரவில்லை. செய்து தர வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் நாங்கள் இருக்கின்றோம். பாதாள சாக்கடைத் திட்டத்தை அங்கே கொண்டு வந்தால், Sewage Treatment Plant ஒன்று அமைக்க வேண்டும். இப்போது நடைமுறையில் இருக்கின்ற Faecal Sludge Treatment Plant மூலம் பல தனியார் லாரிகளில் கழிவுநீரை எடுத்து, ஓர் இடத்தில் கொண்டு சேர்த்து அதைக் காய வைத்து சுத்தம் செய்கின்ற பணிகள்தான் தற்போது நடைபெற்று வருகின்றன. எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, இந்தத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றுவதற்கு முழு ஒத்துழைப்பைத் தருவோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2023 ஜனவரி 11

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள்.

திரு. கோ. தளபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகர் 14 இலட்சம் மக்கள்தொகைக் கொண்ட பெரிய மாநகரமாகும். மதுரை மாநகரிலே 50, 60 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டப் பகுதிகளில், மக்கள்தொகை அதிகமான காரணத்தினால், சாக்கடை நீர் பொங்கி வழிகிறது. ஆகவே, பழைய பாதாள சாக்கடைத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட குழாய்களை அகற்றிவிட்டு, பெரிய குழாய்களை அமைத்து, புதுப்பித்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 21 மாநகராட்சிகள் இருக்கின்றன. அவற்றில் 19 மாநகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மீதமுள்ள ஓசூர் மற்றும் சிவகாசி ஆகிய இரண்டு மாநகராட்சிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். எனவே, அந்தப் பணிகளும் நடைபெறவிருக்கின்றன. இதில் இருக்கிற சங்கடம் என்னவென்றால், அன்றைய காலக்கட்டத்தில் இருந்த மக்கள்தொகை மற்றும் மக்கள் அடர்வினைப் பொறுத்து ஏற்கெனவே அமைக்கப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டன. தற்போது, அந்தப் பகுதிகளில் மக்கள் அடர்வு அதிகமாகிவிட்ட காரணத்தினால், கூடுதலாக கழிவுநீர் வெளியேறுகிறபோது, சில இடங்களில் சிறிய குழாய்களாக இருப்பதால், அப்பகுதிகளில் கழிவுநீர் அதிகப்படியாக வழிகிறது. இதுகுறித்து அதிகாரிகளோடு விரிவாகக் கலந்து பேசுகிறபோது, இதற்காகத் தனியாக pipeline அமைக்கிற முயற்சி எடுக்கலாம் என்றும் இது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்றும் தெரிவித்தார்கள். அதனடிப்படையில், மதுரை, கோவை போன்ற பெரிய நகரங்களிலும், சென்னையில் குறிப்பாக தலைவர் கலைஞர் பெயரில் இருக்கும் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர்க் குழாய்கள், ஆலந்தூரில் உள்ள

2023 ஜனவரி 11]

குடிநீர்க் குழாய்கள் தற்போது மாற்றப்பட்டு வருகின்றன. அதனைத் தொடர்ந்து, மதுரையில் ரூ.500 கோடி மதிப்பீட்டில் புதிய பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது. எனவே, அதிகாரிகளோடு கலந்துபேசி, ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள குழாய்களை மாற்றுவதற்குரிய வழிகளைக் கண்டறிந்து, அப்பணிகளும் செய்து தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பூமிநாதன் அவர்கள்.

திரு. மு. பூமிநாதன்: மரியாதைக்குரிய, வணக்கத்திற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரை தெற்குத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கெனவே இருந்த ஆட்சியில் அமைக்கப்பட்ட manholes join செய்யப்படாமல் தனித் தனியாகவே இருக்கின்றன. தற்போது manholes மட்டும் இருக்கின்றன. அதைப்பற்றி மாநகராட்சி அதிகாரிகளிடம் எடுத்துச்சொல்லி தற்போது அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்தப் பணிகளை வேகமாகச் செய்து, pipeline–ஐ சரிசெய்தால் நன்றாக இருக்கும். நிறைய வார்டுகளில் குடிநீரோடு சாக்கடை நீர் கலந்து வருவதால், அதனைச் சரி செய்து தரவேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் நடைபெற்ற பணிகளை நானும் நேரில் சென்று கண்டறிந்து வந்திருக்கிறேன். அங்கே sewage treatment plant அமைப்பதற்குண்டான பணிகள் நிறைவுறும் நிலையில் இருக்கின்றன. அந்தப் பணிகள் ஓரிரு மாதங்களில் முடிவடைந்துவிடும். அந்தப் பணிகள் முடிவடைந்துவிட்டால், கழிவுநீர் வெளியே வருவதைக் கண்டறிந்து, அந்தந்த இடங்களில் manholes–ஐப் புதிதாக மாற்றி, அவற்றை முழுமையாகச் செப்பனிடுவதற்கு மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தினைக் கருத்தில்கொண்டு, அந்தப்

பணிகளை விரைவாக முடிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக மதுரை மாநகரின் விரிவாக்கப்பட்ட பகுதிகளுக்கு ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தன்னுடைய பதிலாகவும், அறிவிப்பாகவும் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால், அறிவிக்கப்பட்டு ஏறக்குறைய ஆறு மாதங்களுக்கு மேலாகியும்கூட, இதுவரையில் அதற்கான அரசாணை வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை; விரிவான திட்ட அறிக்கையும் தயாரிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் மதுரை மாநகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தி, விரிவான திட்ட அறிக்கையை உடனே தயார்செய்து, விரிவாக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அதில் பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன என்பதை நன்றாக உணர்வோம். குறிப்பாக, மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சியில் பல்வேறு பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தைக் கொண்டுவந்து முடித்திருக்கிறார்கள். அந்தத் திட்டங்கள் முடிக்கப்பட்டாலும்கூட, அதன் மேல் பகுதியிலே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: ஒரே நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன். பாதாள சாக்கடைத் திட்டத்தை முடித்துவிட்டு, சாலையைப் போடும் பணிகளைச் சரியாக முடிக்கவில்லை. அதற்கு மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களுடைய தொகுதியே உதாரணமாக இருக்கிறது. அங்கே பாதாள சாக்கடைத் திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்கு வாருங்கள். என்ன செய்ய வேண்டுமென்று எழுதிக்கொடுத்துவிடுங்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: சாலை அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். எழுதிக் கொடுத்துவிடுகிறேன். ஆகவே, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் இத்திட்டத்தினை விரைவாகச் செயல்படுத்துவதற்கு, இத்திட்டத்திற்கென அறிவிக்கப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினைக் கொண்டு இப்பணியினை விரைவாகச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திற்கு 291.37 கோடி ரூபாய் செலவில் பாதாள சாக்கடைத் திட்டம் எடுக்கப்பட்டு, 50 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டு, மீதிப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மேலும், விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளில், புதிய பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். இத்திட்டம் சுமார் ரூ.500 கோடி செலவில் அமைக்கப்படவிருக்கிறது என்பது ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவது என்பது சாலைகள் அமைப்பதுபோல், கட்டடங்கள் கட்டுவதுபோல் எளிது அல்ல. குடிநீர் குழாய்கள் பதிப்பதிலும், பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதிலும் அதிக சிரமங்கள் உள்ளன. முக்கியமாக இப்பணிக்கு ஒப்பந்ததாரர்கள் கிடைப்பது கஷ்டம். 4 அடி அல்லது 7 அடி ஆழங்களில் தோண்டுவதற்கான DPR போடும்போது, 7 அடி ஆழத்தில், அடியில் மண்ணாக இருக்கும்போது, DPR சரியாக இருக்கும், ஆனால், கீழ்ப் பகுதிகளில் கருங்கற்கள் மற்றும் பாறாங்கற்கள் வந்துவிட்டால், அவற்றை அப்புறப்படுத்துவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் இவ்வாறு பல சிரமங்கள் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடந்த காலத்தில் பாதாள சாக்கடைத் திட்டம் போடப்படுகின்ற சாலைகளையெல்லாம்—வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தொகுதியிலுள்ள சாலைகளே

உதாரணம் என்று சொன்னார்கள். நாங்கள் தற்போது எந்த முறையில் இத்திட்டத்தைச் செயல்படுத்துகிறோம் என்றால், பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கப்படும் இடத்தை அறிந்து, அதற்கு எவ்வளவு செலவு ஆகும் வாய்ப்புள்ளது, precast முறையில் manholes தயாரித்து, விரைந்து செயல்படுத்தவும், அதே நேரத்தில் அவை அமைக்கும்போது சாலை அமைக்கும் பணிக்கான நிதியையும் சேர்த்தே DPR போடப்படுகின்றது. எனவே, இத்திட்டம் அமைக்கும்போது உடனேயே சாலைகளும் அமைக்கப்படும் வாய்ப்புகள் உள்ளன. ஏற்கெனவே கடந்த காலத்தில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கும்போது, சாலைகள் அமைப்பதற்குரிய நிதி ஒதுக்கப்படாத காரணத்தினால், சில இடங்களில் சாலைகள் அமைக்கப்படாமல் உள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவற்றிற்கும் நிதி ஒதுக்கி அந்தச் சாலைகளை அமைப்பதற்கும் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்திட அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***13171—திரு. ஐ.பி. செந்தில்குமார்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதி, கொடைக்கானல் பகுதியில் ஆண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பழனி தொகுதி அமைந்துள்ள திண்டுக்கல் மாவட்டத்தில், தற்பொழுது நான்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 3 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும்,

2023 ஜனவரி 11]

19 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர, 13 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், ஒரு பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியும், ஓர் அரசு உதவி பெறும் தொழில்நுட்பக் கல்லூரியும் மற்றும் 12 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியரின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதி, கொடைக்கானல் பகுதியில் புதியதாக ஓர் ஆண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து நமது அரசின் நிலைப்பாட்டினை நாங்கள் அறிந்தோம். இருந்தபோதிலும், கொடைக்கானல் என்பது பழனி சட்டமன்றத் தொகுதியின் மலைப் பகுதி கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாகும். கொடைக்கானல் நகரத்தில் கிட்டத்தட்ட 4 அரசு மேல்நிலைப் பள்ளிகளும், மேல்மலைப் பகுதிகளில் 3 அரசு மேல்நிலைப் பள்ளிகளும், கீழ்மலைப் பகுதிகளில் 2 அரசு மேல்நிலைப் பள்ளிகளும் அமைந்திருக்கின்றன. குறிப்பாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போன்று, பெண்கள் உயர் கல்வி பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன; ஆனால் ஆண்களுக்கு அந்த வசதிகள் குறைவாக இருக்கின்ற நிலை உள்ளது. ஏனென்றால், அவர்கள் 12 ஆம் வகுப்பு படிப்பு முடித்தவுடன், மதுரை மாவட்டத்திற்கு 115 கி.மீ. தூரமும், திண்டுக்கல் பகுதிக்கு 94 கி.மீ. தூரமும், பழனிக்கு 65 கி.மீ. தூரமும் சென்று பயில வேண்டிய நிலை இருக்கின்றது. தரைப் பகுதிகளை வைத்து நாம் மலைப் பகுதிகளை எடை போட முடியாது. ஏனென்றால் மழைக்காலங்களில் நெரிசல் காரணமாக, போக்குவரத்து 1 நாள் மட்டுமல்ல, 2 நாட்கள் தடைபடுகின்ற வாய்ப்புகள் ஏற்படுகின்றன. மாணவர்களின் எதிர்கால வாழ்வினை முன்னிட்டு, அவர்களுக்குக் கல்வி என்கிற ஒளியினைப் பெறுவதற்கு தடை ஏற்படுகிறது. எனவே, மலைப் பகுதிகளில் வாழ்கின்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்கள் பயிலுவதற்கு குறிப்பாக*

[2023 ஜனவரி 11

ஆண்களுக்கு எந்த ஒரு கல்லூரியோ அல்லது தொழில்நுட்பக் கல்லூரியோ அப்பகுதியில் இல்லை. எனவே, நம்முடைய மக்கள் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு, இதனைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், குறிப்பாக, 6 அரசு கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. பழனி தொகுதியைப் பொறுத்தவரையில், அப்பகுதியில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகக் கல்லூரியானது, தற்போது அரசு கலைக் கல்லூரியாக மாற்றப்பட்டிருக்கிறது. அந்தக் கல்லூரியின் மொத்த மாணவிகளின் இருக்கை எண்ணிக்கை, 660 ஆகும். ஆனால் சேர்ந்திருப்பவர்களின் எண்ணிக்கை 223 மட்டுமே; 437 இருக்கைகள் காலியாக உள்ளன. அது மகளிர் கல்லூரி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆண்களுக்கு கல்லூரி வேண்டுமென்று கேட்கிறார். அது நியாயமான கோரிக்கைதான்.

முற்பகல் 10–20

ஆனால், பழனியில் இருக்கின்ற கல்லூரிகளில்கூட மிகவும் அதிகமான காலியிடங்கள் இருக்கின்றன. அருள்மிகு பழனியாண்டவர் இருபாலர் கல்லூரியும், பெண்கள் கல்லூரி இரண்டும் இருக்கின்றன. பெண்கள் கல்லூரிகள் இரண்டிலும் இருக்கின்ற மொத்த இடங்களின் எண்ணிக்கை 749 ஆகும். 749 இடங்களில் 523 மாணவிகள்தான் சேர்ந்திருக்கிறார்கள். இருபாலர் கல்லூரியிலும் 226 இடங்கள் காலியாக இருக்கின்றன. கொடைக்கானல் மாணவர்கள் பழனியில் வந்து படிக்கலாம். அதுதான் சிரமமாக இருக்கிறது, கொடைக்கானலில் கல்லூரி வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார். நியாயமான கோரிக்கைதான். இருந்தாலும்கூட, மற்ற மாவட்டங்கள், மற்ற தொகுதிகளைவிட, பழனி தொகுதியில், அந்த மாவட்டத்தில், அதிக எண்ணிக்கையில் அரசு கலைக் கல்லூரிகள் இருக்கின்ற காரணத்தினால், கொடைக்கானலில் இப்போது கல்லூரி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. அதுவும் குறிப்பாக கடந்த காலத்தில், மாண்புமிகு ஊரக

2023 ஜனவரி 11]

வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரத்தில் ஒரு கலைக் கல்லூரி துவங்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூரில் கூட்டுறவுத் துறை சார்பில் ஒரு கலைக் கல்லூரி துவங்கப்பட்டுள்ளது. ஆகவே, பழனி தொகுதியைப், பொறுத்தவரையில், தேவையான அளவிற்குக் கல்லூரிகள் இருக்கின்றன.

தமிழ்நாட்டில் இருக்கின்ற கலைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை ஓரளவிற்குக் குறைந்துதான் இருக்கின்றது. இந்த எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில், அரசு கலைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை 20 சதவிகிதம் உயர்த்தியதோடு மட்டுமல்லாமல், இப்போது மாணவர்களின் எண்ணிக்கையை 25 சதவிகிதமாக உயர்த்தலாம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அப்படி உயர்த்தி பல கல்லூரிகளில் முழுமையாக நிரப்பப்பட்டிருக்கிறது. ஆனால், பல கல்லூரிகளில் காலியிடங்கள் இருக்கின்றன. ஆகவே, இப்போது கொடைக்கானலில் கல்லூரி துவங்குகின்ற அவசியம் ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எங்கள் மாவட்டத்திற்கு பல கல்லூரிகளை நம்முடைய அரசு வழங்கியதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு எங்கள் மாவட்ட மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தபோதிலும் 'கற்று தெளிவது கல்வி; அறிந்து தெளிவது அறிவு' என்று சொல்வார்கள். அந்தவகையில் நம்முடைய மக்கள் தலைவர் மாண்புமிகு தளபதியார் அவர்களுடைய அரசு, இந்த திராவிட மாடல் அரசு, சமூக நீதியினுடைய அரசு, படிக்கின்ற மாணவர்களின் எதிர்காலத்தை கருதி, குறிப்பாக கல்வித் துறைக்கு அதிகளவில் முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய ஓர் அரசாக இந்தியாவில் இருக்கக்கூடிய அரசுகளுக்கு முன்னுதாரணமான*

அரசாக இந்த அரசு இருக்கின்றது. இதுவரை வரலாற்றில் இல்லாத அளவிற்கு, இந்த அரசு அமைந்த கடந்த ஓராண்டில், ஒரே ஆண்டில் 10 கல்லூரிகளை வழங்கியது மக்கள் தலைவர் அவர்களுடைய அரசு. ஆகவே, கல்விக்கு அதிக முக்கியத்துவம் வழங்குகின்ற அந்த நோக்கத்தைப் புரிந்துகொண்ட மக்கள், இந்த அரசு நிச்சயம் செய்யும் என்கின்ற உணர்வோடுதான் இந்தக் கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்கள். நான் நிறைவாகச் சொல்ல விரும்புவது ஒன்றே ஒன்றுதான். மலைப் பகுதிகளை முழுமையாக அறிந்துகொண்டு, அங்கிருக்கக்கூடிய காலச் சூழ்நிலைகளை, அங்கு இருக்கக்கூடிய மக்களின் வாழ்வியல் சூழ்நிலைகளை அறிந்துகொண்டு, மலைப் பகுதிகளுக்கு விதிவிலக்குகளை வழங்கி, இதுபோன்ற மாணவர்கள் பயில்வதற்குக் கல்லூரிகளை எதிர்காலத்திலே வழங்க ஒரு புதிய வரைவுத் திட்டத்தை உருவாக்கிட வேண்டுமென்று இந்த நேரத்திலே எனது தொகுதி மக்களின் சார்பில் நம்முடைய அரசைப் பணிவோடு கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த ஆண்டு 10 கல்லூரிகள் துவங்கப்பட்டன என்று சொன்னார். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று 20 மாதங்களில் 31 கல்லூரிகள் துவங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அரசுக் கலைக் கல்லூரிகள் மட்டும் 20.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்தனைக் கல்லூரிகள் துவங்கிவிட்டு எனது ராதாபுரம் தொகுதிக்கு ஏதும் அமைக்கவில்லை.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களும் கேட்டுக்கொண்டேயிருக்கிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி, இந்த budget–ல் அறிவிக்க முடியுமா என்று பார்க்கிறேன். உங்களுடைய கோரிக்கை நீண்ட நாட்களாக இருக்கிறது. ஆனால், உங்கள் மாவட்டத்திலேயும் தனியார் கல்லூரி, பல்கலைக்கழகக் கல்லூரிகளை அரசு கல்லூரிகளாக மாற்றியிருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே, அவற்றுக்கும் தொடர்ந்து ஏற்பாடு செய்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ராதாபுரம் தொகுதிக்கு ஒரு கல்லூரி வேண்டும்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: 20 அரசுக் கலைக் கல்லூரிகளும், கூட்டுறவுத் துறையின் மூலமாக ஒரு கல்லூரியும், அறநிலையத் துறையின் மூலமாக 10 கல்லூரிகளும் என மொத்தம் 31 கல்லூரிகளை 1½ ஆண்டுகளில் துவக்கிய ஒரே அரசு நம்முடைய தளபதி அவர்களுடைய அரசுதான் என்பதை யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்தளவிற்கு அரசு கலைக் கல்லூரிகளுடைய எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டுதான் இருக்கிறது. குறிப்பாக, நான் முன்பே சொன்னதைப்போல, பழனியில் இருக்கிற கல்லூரிகளில் காலியிடங்கள் இருக்கின்றன. எந்தெந்தத் தொகுதிகளில் கல்லூரிகள் இல்லையோ அந்தத் தொகுதிகளுக்கு வருங்காலங்களிலே முன்னுரிமை வழங்கப்பட்டு அங்கு கல்லூரிகளும் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையிலே புதிய கல்லூரிகளை உருவாக்குவதற்கு வருகிற காலங்களில் அவற்றையெல்லாம் நிதிநிலைக்கேற்ப நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.

முற்பகல் 10–25

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்தில், 5 மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. அப்பள்ளிகளின் தேர்ச்சி சதவிகிதம் 96 விழுக்காடு ஆகும். 5 மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற சுமார் 300 மாணவ மாணவிகள் சமவெளியிலுள்ள நாமக்கல், ராசிபுரம் ஆகிய பகுதிகளுக்குச் சென்றுதான் கல்லூரியிலே படிக்கின்ற நிலை இருக்கிறது. ஆகவே, கொல்லிமலை மலைமேல், அரசு கலைக் கல்லூரியை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதிகளிலெல்லாம் இதுபோன்ற கோரிக்கைகள் வருவது இயற்கைதான். நிச்சயமாக, நான் முன்பே சொன்னதைப்போல, நிதிநிலைமைக்கேற்ப, வருங்காலங்களிலே அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரியாகத் தொடங்கப்பட்டு, பின்னர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியாக மாற்றப்பட்ட நாகப்பட்டினம், செல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் போதிய உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமல் மாணவர்கள் மிகப் பெரிய இன்னலைச் சந்திக்கிறார்கள். சுற்றுச் சுவர், நடைபாதை, ஆய்வகம், நூலகம், கூட்ட அரங்கம் போன்ற எந்த அடிப்படை வசதிகளும் இல்லாமல், ஒரு கட்டடம் மட்டும் இருக்கிறது; வகுப்புகள் நடந்துகொண்டிருக்கின்றன. எனவே, அரசு உடனடியாகப் பரிசீலித்து, அங்கு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். அதுபோல, அந்தக் கல்லூரியின் நிருவாகச் செலவுகளுக்கு, பல்கலைக்கழகத்தைச் சார்ந்து இருப்பதா அல்லது அரசைச் சார்ந்து இருப்பதா என்கின்ற குழப்பம் நீண்ட நாட்களாக நீடித்துக் கொண்டிருக்கிறது. எனவே, நிருவாகச் செலவுகளுக்குப் போதிய நிதி இல்லாமல் அவர்கள் திண்டாடக்கூடிய ஒரு சூழலைக் காணமுடிகிறது. அதையும் அரசு உடனடியாகக் கவனத்தில் எடுத்து, உரிய தீர்வைத் தருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கலைக் கல்லூரிகளில் கடந்த காலத்தில் ஏற்பட்ட இதுபோன்ற குறைகள் களையப்பட வேண்டுமென்றுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். வருங்காலங்களிலே, நிச்சயமாக இதுபோன்ற கல்லூரிகளுடைய கோரிக்கையை ஏற்று, அந்தக் கல்லூரிகளில் ஆய்வுக்கூடங்களை உருவாக்குவதற்கும்,

2023 ஜனவரி 11]

அதேபோன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான விடுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, வருங்காலங்களில், அதற்கான முயற்சிகளை நிச்சயமாக இந்த அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி அவர்கள்.*

டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மைக்கை கொஞ்சம் பக்கத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.*

டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட, எழுமாத்தூர் ஊராட்சியில் செயல்பட்டு வரும் எழுமாத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு பல பகுதிகளிலிருந்து மாணவ, மாணவிகள் படிக்க வருகிறார்கள். ஆனால், கல்லூரியில் போதிய வகுப்பறைகள் இல்லாததால், மாணவ, மாணவிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். மேலும்,* shift *முறையில்தான் இப்போது* classes *நடந்து கொண்டிருக்கின்றன.* Morning *ஒரு* session, evening *ஒரு* session *என நடக்கிறது. இன்னும் கூடுதல் வகுப்பறைகள் அமைத்துக்கொடுத்தால்,* regular *ஆக* college–*ஐ நடத்த முடியும். எழுமாத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குத் தேவையான வகுப்பறைகளை அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற கேள்வியிலேயே இதற்கான பதிலையும் சொல்லியிருக்கிறேன். பல இடங்களில் இதுபோன்ற வகுப்பறைகள் இல்லை என்ற பிரச்சினை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நிச்சயமாக வெகுவிரைவில் அவையெல்லாம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

3—

புறவழிச் சாலை

***12797—திரு. பெ. ராமலிங்கம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் நகருக்கு புறவழிச் சாலை அமைக்கும் பணிகளை மீண்டும் துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாமக்கல் நகரத்திற்கு 22.40 கி.மீ. நீளமுள்ள புறவழிச் சாலை அமைக்க நிலம் கையகப்படுத்த 2012 ஆம் ஆண்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டு, மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ரூ.7.80 கோடி அதற்காக ஒதுக்கப்பட்டது. அதற்கு 142 ஏக்கர் நிலம் கையகப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் முதலைப்பட்டி, மரூர்பட்டி, விட்டநாயக்கன்பட்டி, வீசானம், வேட்டப்பட்டி, ரெட்டிபட்டி, பொம்மிசமுத்திரம், வசந்தபுரம், வகுடம்பட்டி, ரத்துவாடி, தோட்டப்பட்டி ஆகிய 11 கிராமங்களிலே உள்ள நிலங்களை எடுப்பதற்காக அரசாங்கம் முடிவு செய்தது. இந்த நிலையிலே நில எடுப்புப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றபோது, இந்திய அரசின் நில எடுப்புப் பணிக்காக 2014–ல் ஒரு புதிய சட்டம் இயற்றப்பட்டது. அது நடைமுறைக்கு வருவதற்குக் காலதாமதம் ஏற்பட்டது. ஒன்றிய அரசினுடைய புதிய நில எடுப்பு சட்டத்தின் அடிப்படையில் நில எடுப்புப் பணிகள் தொடர்ந்து இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

முற்பகல் 10–30

தமிழ்நாடு அரசின் நில எடுப்பிற்கான புதிய வழிமுறை 23–5–2022 அன்று நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. புதிய வழிமுறைகளைப் பின்பற்றி, மீண்டும் நிலம் கையகப்படுத்தும் பணி இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நிலம்

கையகப்படுத்துவதற்காக திருத்திய மதிப்பீட்டின்படி தற்போது 87 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. புறவழிச் சாலை அமைப்பதற்குத் தேவையான நிலப் பரப்பான 142 ஏக்கரில் இதுவரைக்கும் 76.21 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்டன. மீதமுள்ள நிலம் 31–3–2023–க்குள் கையகப்படுத்தப்பட வேண்டுமென்பதற்காக, அரசு முயற்சி செய்து அந்தப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. மேலும், நிலங்கள் முழுமையாகக் கையகப்படுத்தப்பட்ட உடனேயே இந்தப் புறவழிச் சாலை கட்டாயமாக அமைத்துத் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம் அவர்கள்.*

திரு. பெ. ராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் புறவழிச் சாலை திட்டமானது நாமக்கல்–கரூர் தேசிய நெடுஞ்சாலையில் ஆரம்பித்து கிட்டத்தட்ட நாமக்கல்–சேந்தமங்கலம், நாமக்கல்–துறையூர், நாமக்கல்–மோகனூர், நாமக்கல்–திருச்சிராப்பள்ளி, நாமக்கல்–கரூர் வழியாக 22.38 கிலோ மீட்டர் சாலையில் முடிவடைகிறது. இந்தத் திட்டம் முழுமையாக முடிவதற்குக் காலதாமதமாகின்ற காரணத்தினால், முதற்கட்டமாக நாமக்கல்–துறையூர் சாலை வரை, 9 கிலோ மீட்டர் தூரத்திற்கு அந்தச் சாலையை அமைத்துக் கொடுத்தால், நாமக்கல்லில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க முடியும். நாமக்கல் புறவழிச் சாலையில்தான் நாமக்கல் புறநகர் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. எனவே, முதற்கட்டமாக இந்த 9 கிலோ மீட்டர் தூரம் உள்ள சாலையை அமைத்துக் கொடுத்தால், அங்குள்ள பேருந்து நிலையத்தையும் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர முடியும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதற்கட்டமாக இந்த 9 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை அமைக்கும் பணியினைச் செய்ய ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நாமக்கல் சட்டமன்றத்*

தொகுதிக்குட்பட்டிருக்கிற நாமக்கல் முதல் திருச்சிராப்பள்ளி செல்லும் சாலையான நளா ஹோட்டல் முதல் நாமக்கல் பேருந்து நிலையம் வரை அகலப்படுத்த வேண்டுமென முடிவு செய்யப்பட்டு, அதற்காக இந்த ஆண்டே 2 கிலோ மீட்டர் தூரம் சாலையை விரிவுபடுத்தினால் போக்குவரத்து நெரிசல் குறையும். இதனை சென்ற ஆண்டே எடுக்க வேண்டும் என முடிவு செய்தோம். ஆனால், அந்தச் சாலை எடுக்கப்பட்டு ஐந்தாண்டுக் காலம் முடிவடையாமல் இருந்தது. இந்த ஆண்டுதான், அந்த ஐந்தாண்டுகள் முடிவடைகின்றன. எனவே, ஐந்து ஆண்டுகள் முடிவடைகிற நிலையிலே நளா ஹோட்டல் முதல் நாமக்கல் பேருந்து நிலையம் வரையில் உள்ள இரண்டு கிலோ மீட்டர் சாலை நடப்பாண்டிலேயே விரிவுபடுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம் அவர்கள்.

திரு. பெ. ராமலிங்கம்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், புதுச்சத்திரம் ஒன்றியத்திலுள்ள முக்கிய சாலையான புதுச்சத்திரம்–ஏலூர் வேலக்கொண்டம் ஒன்றிய சாலை 11 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையாகும். இந்தச் சாலையில் அதிகளவில் கோழிப் பண்ணைகள் இருக்கின்றன. இங்கு போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளதால், ஒருவழித் தடம் மற்றும் இடைவழித் தடமாக உள்ள இந்தச் சாலையை இருவழித் தடமாக மாற்றியமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருவழிச் சாலைகளையெல்லாம் நான்குவழிச் சாலைகளாக மாற்றியமைக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, 'முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டம்' என்ற புதிய திட்டத்தைச் சென்ற ஆண்டு அறிமுகம் செய்து, சென்ற ஆண்டு ஏறத்தாழ 32 சாலைகளை விரிவுபடுத்தும் பணிகளில் இத்துறை ஈடுபட்டு வருகின்றது. அதேபோன்று, இந்த ஆண்டும் 23–க்கும் மேற்பட்ட சாலைகளை விரிவுப்படுத்த

திட்டமிடப்பட்டுள்ளது. ஓர் ஆட்சியில் நிதியின் அளவுகோலை வைத்துக்கொண்டுதான் எப்போதும் திட்டங்களை நிறைவேற்ற முடியும். அந்தந்த ஆண்டில் இருக்கிற நிதியை மையப்படுத்தித்தான் சாலைகளை அமைக்க முடிகிறது. எனவே, நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம் அவர்கள் சொன்னதைக் கருத்தில் எடுத்துக்கொண்டு, வரும் ஆண்டில் அதற்கு முன்னுரிமை கொடுக்கலாமா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்துபேசி அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன்மிக நகரமான திருவண்ணாமலை நகரத்திற்கு மாதந்தோறும் இலட்சக்கணக்கான மக்கள் கிரிவலம் செல்வதற்காக வருகிறார்கள். அவர்களின் நலனை முன்னிட்டு தற்போது வேலூர் சாலையிலிருந்து செங்கம் சாலை வரை அமைக்கப்பட்டிருக்கிற சுற்று வட்டப் பாதையை மேலும் நீட்டித்து அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்றும், அதைப்போல, போளூர் நகரத்தில் ஏற்பட்டிருக்கிற போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக போளூர் நகர், வசூரிலிருந்து ஜவ்வாது மலை செல்கின்ற பாதையிலுள்ள அரசு மருத்துவமனை வரை* By–pass *சாலை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. அக்ரி. எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொல்கின்ற சாலையை நான் அறிவேன். வேலூர்–திருவண்ணமலை சாலை என்பது தேசிய நெடுஞ்சாலையாகும். அதைப்போன்று திருவண்ணாமலை–செங்கம் சாலையும் தேசிய நெடுஞ்சாலையாகும். மாநில அரசின் சார்பாக புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்று ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டு, அரசின் சார்பாக நிலங்கள் எல்லாம்*

கையகப்படுத்தப்பட்டு, திட்ட மதிப்பீடுகள் எல்லாம் தயார் செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதற்குரிய நிதியை ஒதுக்கிவிட்டார்கள். இப்படிப்பட்ட நிலையில், நான் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்களைச் சந்தித்துப் பேசுகிறபோது, ஒரு தேசிய நெடுஞ்சாலையை இன்னொரு தேசிய நெடுஞ்சாலையுடன் இணைக்கும்பொழுது, அதற்கான புறவழிச் சாலைக்கு தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம் நிதி வழங்குகிறோம் என்று அவர் தெரிவித்ததன் அடிப்படையில் தற்போது அதற்கான கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. நிதி பெறப்பட்டவுடன் அதற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டு, தேசிய நெடுஞ்சாலையுடன் செங்கம் சாலையும், வேலூர் சாலையும் இணைக்கப்படும்.

அடுத்து, போளூர் சாலையில் உள்ள போக்குவரத்து நெரிசலைக் கருத்தில் கொண்டு அங்கே ஒரு புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். சென்ற முறை சட்டமன்றத்தில் அவர்கள் பேசுகின்றபோதும்கூட இதைக் குறிப்பிட்டிருந்தார்கள். அதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு அதற்கான DPR தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டிருக்கிறது. பணிகள் முடிந்ததும் அந்தப் புறவழிச் சாலை கட்டாயம் வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்கள்.

திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் போற்றிப் பாதுகாக்கின்ற கீழடி அருங்காட்சியகத்தை நம்முடைய மக்களின் மனதை வென்று மக்களாட்சி புரிகின்ற மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் திறந்து வைக்கவுள்ளார்கள். அப்படி அவர்கள் திறந்து வைக்கின்ற நேரத்தில் கீழடியிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் பொது மக்கள் அதிகமாக வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்போது மதுரை-இராமேஸ்வரம் செல்கின்ற தேசிய நெடுஞ்சாலையை மக்கள் கடக்கின்றபோது அதிகமான போக்குவரத்து நெரிசலும், விபத்துகளும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதற்காக அங்கே ஓர் இயங்கும் படிக்கட்டு அல்லது subway அமைப்பதற்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

அதை விரைவில் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர் பெருமையை வெளிப்படுத்துகின்ற வகையில் கீழடியில் அமைக்கப்பட்டிருக்கின்ற திட்டத்திற்கான கட்டடம் கட்டும் பணிகளை பொதுப் பணித் துறை மேற்கொண்டிருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று கிட்டத்தட்ட 6 முறை நான் கீழடிக்குச் சென்றிருக்கிறேன். அந்தப் பணிகள் இப்போது முழுமையாக நிறைவுற்றிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இசைவினைப் பெற்று அதைத் திறந்து வைக்கும் நிலை அரசுக்கு இருக்கிறது. நான் அங்கு சென்றிருந்தபோது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நேரடியாக என்னிடத்தில் அந்தக் கோரிக்கையை வைத்திருந்தார்கள். தேசிய நெடுஞ்சாலையில் மேம்பாலம் அமைக்க வேண்டும் அல்லது சுரங்கப் பாதை அமைக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதுகுறித்து தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு ஏற்கெனவே கடிதம் எழுதியிருக்கிறோம். அதை அமைத்துத் தருமாறு வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். அதற்கான அனுமதி கிடைத்தவுடன், தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமாக அங்கு மேம்பாலமோ அல்லது சுரங்கப் பாதையோ அமைத்துத் தரப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் இருக்கையில் இருக்கிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) பேசுங்கள்.*

திருமதி S. விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் NHAI மூலமாக நான்குவழிச் சாலை அமைக்கும் திட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக எந்தப் பணியும் நடைபெறாமல் கிடப்பில் போடப்பட்டிருக்கின்றன. அதற்கான*

நிலம் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். நிலம் வழங்கியதற்கான இழப்பீடு தருவதும் காலதாமதமாகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 12 கிராமங்களில் இருக்கக்கூடிய மக்களுக்கு இழப்பீடு தருவதற்காக Arbitration Clause invoke செய்து அதற்கான procedure–ஐ initiate செய்திருந்தார்கள். ஆனால், அதை challenge செய்து NHAI மூலம் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு, Arbitration Clause–ன்மூலம் இழப்பீடு வழங்க முடியாது என்ற கருத்து நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கான கால நிர்ணயம் செய்து இழப்பீட்டுத் தொகையைக் கொடுக்க முடியாமல் திணறக்கூடிய சூழ்நிலை தற்போது அங்கு இருக்கிறது. குறிப்பாக, என்னுடைய தொகுதியில் குன்னத்தூர் பகுதியில் வசிக்கக்கூடிய மக்கள் இதில் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விளாத்துறை உள்ளிட்ட 12 கிராமங்களில் வசிக்கக்கூடிய மக்கள் இந்த இழப்பீடு கிடைக்காமல் போராடி வருகிறார்கள். அதனாலும்கூட இந்த project delay ஆகிக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரே கேள்வியாகக் கேளுங்கள். நிலம் கையகப்படுத்த முடியவில்லை; திருவனந்தபுரம் சாலையை அமைத்துத் தர வேண்டும் என்று மட்டும் கேளுங்கள்.

திருமதி S. விஜயதரணி: அந்த நான்குவழிச் சாலைப் பணிகள் விரைவாக நடைபெற்றால்தான் மற்ற இடங்களிலுள்ள சாலைப் பணிகள் தொடர்பான பிரச்சினைகள் solve ஆகி, traffic பிரச்சினைகளெல்லாம் தீரும். ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தச் சாலைப் பணி என்பது தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமாக நடைபெற்றுவரும் பணியாகும். அது மாநில அரசாங்கத்திற்குட்பட்டதல்ல. ஆனாலும்கூட, கன்னியாகுமரி மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து இதை வலியுறுத்தி வருவதன் அடிப்படையில், நான் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்

2023 ஜனவரி 11]

தலைமைப் பொறியாளரையும், சம்பந்தப்பட்ட துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் அணுகி இதுகுறித்துப் பேசினேன். இதில் என்ன பிரச்சினை என்றால், கன்னியாகுமரி மாவட்டத்தில் எங்கேயுமே gravel *எடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதற்கென்று ஓர் அமைப்பை வைத்திருக்கிறார்கள். மலைகள் போன்ற இடங்களில் எங்கேயுமே* gravel *எடுக்கக் கூடாது; ஜல்லி எடுக்கக் கூடாது என்ற சூழ்நிலை இருந்துகொண்டிருந்தது. பெரும்பாலும் திருநெல்வேலியிலிருந்துதான்* gravel *மற்றும் ஜல்லி எடுத்துக்கொண்டு போக வேண்டிய சூழ்நிலை இருந்தது.*

முற்பகல் 10–40

'எந்தெந்த இடங்கள் என்று நீங்கள் ஒதுக்கி, கட்டாயம் நீங்கள் gravel *எடுத்தால்தான் ரோடுகள் எல்லாம் போட முடியும்; மக்கள் பிரதிநிதிகளை ஒத்துழைக்கச் சொல்கிறேன்' என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் நான் பேசியிருக்கிறேன். இந்த நிலையில் ஏற்கெனவே இருந்த ஒப்பந்ததாரர்கள், 'நாங்கள் இனிமேல் சாலையைப் போடமாட்டோம், நாங்கள்* withdraw *செய்துகொள்கிறோம்' என்று* tender*–ஐ* cancel *செய்துவிட்டு போய்விட்டார்கள். இப்போது நாங்கள் என்ன சொல்லியிருக்கிறோம் என்றால், 'தேசிய நெடுஞ்சாலை ஆணையம்தான் முடியாது என்று சொல்லிவிட்டார்கள்; நாங்கள் மாநில நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக செய்கிறோம்' என்று ஒன்றிய அரசாங்கத்திற்கு கடிதம் கொடுத்திருக்கிறோம். அதற்கு இசைவு பெற்றவுடன், மாநில நெடுஞ்சாலைத் துறையே தேசிய நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக அந்தப் பணிகளைச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறது. இது ஒன்று.*

நில எடுப்புப் பிரச்சினையில் பணப் பிரச்சினை என்ற ஒன்று உண்டு. ஏற்கெனவே இருந்த Guidelines*–படி முடிவு செய்து, அந்தப் பணத்தைக் கொடுப்பதாகச் சொல்லிவிட்டார்கள். அதை மக்கள் ஒத்துக்கொள்ளவில்லை. இப்போது நான், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம், நீங்கள் அதையெல்லாம் விட்டுவிடுங்கள். இப்போது இருக்கும்* guidelines*–ன் அடிப்படையில் அவர்களுக்கு பணம் கொடுத்தால்தான் ஒத்துக்கொள்வார்கள் என்று பேசியிருக்கிறேன். எங்கள் துறையின் செயலாளர் அவர்கள் அதனைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் அந்தப் பிரச்சினை தீர்க்கப்படும். ஒன்றிய அரசாங்கத்தின்*

அனுமதி பெற்றவுடனே, மாநில நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக இந்தச் சாலை அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

4—

முந்திரி தொழிற்சாலை

***12237—திரு. மா. சின்னதுரை:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, கந்தர்வகோட்டையில் முந்திரி தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கந்தர்வகோட்டை தொகுதி, கந்தர்வகோட்டையில் முந்திரி தொழிற்சாலை துவங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய மாவட்டமான புதுக்கோட்டையில், கந்தர்வகோட்டை தொகுதி மிகவும் பின்தங்கியிருக்கிறது. வேளாண்மைத் தொழிலை மட்டுமே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மக்கள் உள்ளனர். பல்லாயிரம் ஏக்கர் நிலங்களில் முந்திரி சாகுபடி செய்து வருகின்றனர். விவசாயிகள் மற்றும் அரசு வனக் காடுகளில் முந்திரி உற்பத்தி அதிகரித்து வருவதால், உடலுக்குத் தீங்கு விளைவிக்காத முந்திரி பழத்திலிருந்து மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையைத் துவக்கி, சந்தைப்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

2023 ஜனவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையைப் பொறுத்தமட்டில், இத்தகைய தொழிற்சாலைகளைத் தொடங்க யாரேனும் தனியார்,* private participants *நேரடியாக வருவார்கள் என்று சொன்னால், அரசு அவர்களுக்கு எல்லாவகையிலும் உதவி செய்வதற்குக் காத்திருக்கிறது. இந்தத் துறை என்பது தொழில் துறை மாத்திரமல்ல; தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு துறை என்று இந்தத் துறையின் பெயரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாற்றியமைத்திருப்பதற்குக் காரணம், இத்தகைய தொழிற்சாலைகள் உருவாக்குவதற்கான தகுந்த சூழ்நிலைகள் அந்த இடங்களில் இருக்கும் என்றால், அத்தகைய தொழிற்சாலையை நிறுவுவதற்கு தனியார் நிறுவனங்கள் முன்வருமென்றால், தொழில் துறை எல்லாவகையிலும் அத்தகைய நிறுவனங்களுக்கு தன்னுடைய ஒத்துழைப்பை நல்கி, அத்தகைய தொழிற்சாலையை உருவாக்குவதற்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.*

திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர், கன்னியாகுமரி, அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம், புதுக்கோட்டை மாவட்டங்களில் முந்திரி அதிகம் விளைகிறது. பல இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வாய்ப்புள்ள தொழிலாக அது இருக்கிறது. பதப்படுத்தப்பட்ட முந்திரி பருப்பு வணிக ஏற்றுமதியில் ஒன்றிய, மாநில அரசுகள் அந்நிய செலாவணியை ஈர்த்திட வாய்ப்புள்ளது. அதனால், முந்திரி விவசாயத்தை அதிகரிக்கவும், முந்திரி பழச்சாறு, முந்திரி எண்ணெய், பதப்படுத்தப்பட்ட முந்திரிப் பருப்பு தயாரிக்கும் தொழிற்சாலைகளை அமைத்திட, பனைத் தொழிலுக்கு வாரியம் அமைத்திருப்பதுபோல் தமிழ்நாடு முந்திரிக் கழகம் ஏற்படுத்தி, முந்திரி தொழிலைப் பாதுகாத்திட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியம் அமைப்பது என்பது அரசினுடைய கொள்கை முடிவுக்குட்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய நேரத்தில் முடிவு எடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில், பண்ருட்டி, நெய்வேலி, கடலூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மாவட்டங்களில் முந்திரி அதிகமாக உற்பத்தியாகிறது. முந்திரிக் கொட்டையை நாம் பருப்பாகப் பயன்படுத்துகிறோம். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம். ஆனால், அந்தப் பழம் எதற்கும் பயன்படாமல் வீணாகிறது. அந்தப் பழத்திலிருந்து கோவா மாநிலத்தில் feni என்கிற ஒரு wine–ஐ தயாரிக்கிறார்கள். அதுபோன்று மதிப்புக் கூட்டப்பட்ட, உடலுக்குச் சத்தான பல்வேறு வகையான ஊட்டச் சத்துகளைத் தயாரிக்கிறார்கள். அதுபோன்று தயாரிக்க முடியுமா என்று நான் கேள்வி எழுப்பியபோது, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் ‘நிச்சயமாக அரசு அதை பரிசீலிக்கும்; அதற்குரிய ஆய்வுகளை மேற்கொள்ளும்’ என்று சொன்னார்கள். இதே பதிலை, கடந்த தலைவர் ஆட்சியில் நான் கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் திரு. வீரபாண்டியார் அவர்களும், அதற்கான ஓர் ஆய்வுக் குழுவை கோவாவுக்கு அனுப்பியுள்ளதாகச் சொன்னார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது? கண்டிப்பாக அப்படி ஒரு தொழிற்சாலை என்னுடைய தொகுதியில் தொடங்கப்படுமா என்பதை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய கருத்தை நான் அறிவேன். அவருடைய தொகுதியில், முந்திரிக்காக ஏற்கெனவே 2007–ல் Sattva Agro

Processing Limited என்ற நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. TIDCO நிறுவனம் அதற்கான உதவிகளை அப்போது செய்திருக்கிறது. அவர் கூறியதைப்போல வெளிநாடுகளிலிருந்து முந்திரியை இறக்குமதி செய்து, அதை இங்கே process செய்து, மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்புகளும் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் ஆய்வுக் குழு ஒன்று கோவாவிற்குச் சென்றதைப் பற்றியெல்லாம் தற்போது எடுத்துரைத்திருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தமட்டில், பொதுவாக இத்தகைய தொழிற்சாலைகளை-after globalisation நீங்கள் பார்த்தீர்களென்று சொன்னால்-தனியார் துவங்குவதற்கு முன்வருமேயானால், அந்தத் தொழிலுக்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று சொன்னால், நம்முடைய தொழில் துறை சார்ந்ததாக இருந்தாலும், அல்லது தொழில் துறையின் அங்கமாக இருக்கக்கூடிய TIDCO நிறுவனம் சார்ந்ததாக இருந்தாலும், அத்தகைய முயற்சிகளை முழுமையாக ஊக்குவிப்பதற்கு நாம் எந்த வகையில் உதவிகள் செய்யலாம் என்பதை அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரு சக்கர மின் வாகனம் தயாரிக்கும் தொழிற்சாலையான Ather Energy என்கிற நிறுவனம், தமிழ்நாட்டில் 1500 ஏக்கர் பரப்பளவில் அதன் தொழிற்சாலையைத் தொடங்குவதற்குத் தற்போது முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அப்படி 1500 ஏக்கர் நிலம் இருக்கக்கூடிய செய்யாறு சிப்காட் தொழிற்பேட்டையில் அதற்கான இடத்தை ஒதுக்கி, அந்தத் தொழிற்சாலை செய்யாறு பகுதியில் அமைவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் வாகன உற்பத்தியைப் பொறுத்தமட்டில், இந்தியாவிலேயே, தமிழ்நாடு மிக முக்கியமானதொரு மாநிலமாக இருக்கிறது; முதன்மையானதொரு மாநிலமாக இருக்கிறது.

பல்வேறு நிறுவனங்கள் future mobility என்று சொல்லக்கூடிய மின் வாகன உற்பத்தியை e–vehicle manufacturing தமிழ்நாட்டில் தொடங்குவதற்கு மிகுந்த ஆர்வம் காட்டுகின்றன. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல இந்த Ather Energy என்ற நிறுவனமும் அத்தகைய நிறுவனங்களில் ஒன்று. எந்த இடத்திலே அவர்கள் அமைக்க வேண்டும் என்று வருகிறபொழுது தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சிப்காட் தொழிற்பேட்டைகள் மற்றும் SEZ ஆகியவற்றை நாம் காட்டுகிறோம். எந்த இடத்தில் தொழிற்சாலையைத் துவங்குவதற்கு அவர்களுக்கு ஆர்வம் இருக்கிறதோ, அந்த இடத்தில் துவங்குவதற்கு அவர்கள் முன்வருகிறார்கள். செய்யாறு, வளர்ந்து வரக்கூடிய ஒரு நல்ல பகுதி. அந்த நிறுவனத்தை அங்கு துவங்குவதற்கு அவர்கள் இசைவு தெரிவித்தால், நிச்சயமாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய கருத்தை நாங்கள் ஆய்வு செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா அவர்கள்.

முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமை வாய்ந்த எங்களுடைய மன்னார்குடி சட்டமன்றத் தொகுதி டெல்டா பகுதியின் மையப் பகுதியாகும். அங்கு விவசாயம் சார்ந்த ஒரு தொழிற்பேட்டை அமைய வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கை. ஏற்கெனவே, அது ஒரு Agriculture Corridor ஆக அறிவிக்கப்பட்டுள்ளது. பல தொழில்முனைவோர் அங்கே சிறுதொழில்கள் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்து வருகிறார்கள். அங்கு விவசாயம் சார்ந்த ஒரு பெரிய தொழிற்பேட்டை அமைந்தால், அங்கு இருக்கும் படித்த இளைஞர்களுக்கு நிச்சயமாக ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதமாக அமையும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செய்து கொடுக்க வேண்டும். அதேபோல், IT சார்ந்த தொழில்களுக்கும் அங்கே நிறைய dearth இருக்கிறது. Educated youth அங்கே அதிகமாக இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சற்று சத்தமாக பேசலாமே!

2023 ஜனவரி 11]

முனைவர் T.R.B. ராஜா: IT படித்த, IT சார்ந்த படிப்புகளைப் படித்த இளைஞர்கள் பலர் இருப்பதால், அவர்களுக்கும் அங்கே நல்லதொரு வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு mini IT Hub–ஐ அங்கு உருவாக்கித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நஞ்சை கொஞ்சும் தஞ்சை பூமி' என்பது ஒரு விவசாய வேளாண் பொருளாதார மண்டலமாக உருவாக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவிப்புச் செய்திருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியினுடைய புவியியல் அமைப்பு, அது வேளாண் உற்பத்தி மண்டலமாக இருக்கக்கூடிய காரணத்தால் வேளாண்மைத் தொழில் சார்ந்திருக்கக்கூடிய தொழில்களுக்கு அதிலே முக்கியத்துவம் தரப்படுகிறது. குறிப்பாக, Food Processing Industries–க்கும் அதிலே முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்று இந்த அரசு திடமாகக் கருதுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கக்கூடிய மன்னார்குடி பகுதியும் அந்த வகையிலே Food Processing Industry வருவதற்கான நல்ல வாய்ப்புகள் இருக்கக்கூடிய பகுதிதான். என்னைப் பொறுத்தமட்டில் அத்தகைய ஒரு நல்ல தொழிற்சாலையை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே துவங்க முன்வருவார்களேயானால், அதற்கு எல்லாவிதமான ஆதரவையும் அரசு நல்கும்.

அதேபோல், IT industries பற்றி அவர் குறிப்பிட்டிருக்கிறார். எங்கள் இயக்கத்தின் IT Wing Secretary ஆகவும் அவர் இருக்கிறார். அவருடைய முக்கியமான கோரிக்கையை ஏற்றுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த முறை தஞ்சையிலே TIDEL Park அறிவித்திருக்கிறார்கள். அதேபோல, மன்னார்குடி பகுதியிலும் IT hub உருவாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். பொதுவாக இன்றைய சூழ்நிலையில் சென்னை போன்ற பெருநகரங்களுக்கு மட்டுமல்லாமல் Tier–2 cities என்று சொல்லக்கூடிய இரண்டாம் கட்ட நகரங்களை நோக்கி இதை நாம் கவனம் செலுத்த வேண்டும். உதாரணத்திற்கு, IT industries–ல் வேலை பார்க்கக்கூடியவர்களெல்லாம், கிராமப்புறங்களிலிருந்துதான், rural areas–லிருந்து சென்னை

[2023 ஜனவரி 11

போன்ற நகரங்களுக்கு வந்து வேலை பார்க்கிறார்கள். It should be the other way around என்பதுதான். அங்கே இருக்கிறவர்களையெல்லாம் சென்னையிலே நாம் அடைப்பதற்குப் பதிலாக, இதுபோன்று இரண்டாம் கட்ட நகரப் பகுதிகளிலே, தஞ்சை, திருச்சி, மன்னார்குடி போன்ற இடங்களில் எல்லாம் இந்த I.T. Hub–ஐ உருவாக்கினோமென்று சொன்னால், அங்கேயே நாம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு இருக்கும் என்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து சிறந்த கருத்து. நம்முடைய தொழில் துறையும், அதைப்போல, தகவல் தொழில்நுட்பத் துறையும் அதை நோக்கி பயணிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பழமொழி சொல்வார்கள்.*

“காலையில் இஞ்சி; கடும்பகல் சுக்கு;
மாலையில் கடுக்காய்; மண்டலம்
உண்டிடில் கோலை ஊன்றி குறுகி
நடப்பவனும் கோலை வீசி குலாவி நடப்பானே”

என்று சொல்வார்கள். கடுக்காய் சாப்பிட்டவர்கள் மிடுக்காக நடப்பார்கள் என்று சொல்வார்கள். எங்கள் கல்வராயன் மலையிலும், சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற சின்ன கல்வராயன் மலையிலும் அதிகமாக கடுக்காய் விளைகிறது. சிறிய தரகர்களால் அந்தப் பழங்குடியின மக்களுக்கு உரிய தொகை கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே, சாயம் தயாரிப்பதற்கும், மருத்துவக் குணமும் கொண்டுள்ள கடுக்காய்க்கு எங்கள் மாவட்டத்தில், சங்கராபுரம் தொகுதியிலுள்ள கல்வராயன் மலையில் தொழிற்சாலையை உருவாக்கித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்கு அரசு கடுக்காய் கொடுக்காமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

5—

மணிமண்டபம்

***57840—முனைவர் இசக்கி சுப்பையா:**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி, காருகுறிச்சியில் நாதஸ்வர வித்வான் காருகுறிச்சி அருணாசலம் அவர்களுக்கு மணிமண்டபம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அம்பாசமுத்திரம் தொகுதி, காருகுறிச்சியில் நாதஸ்வர வித்வான் காருகுறிச்சி திரு. அருணாசலம் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா அவர்கள்.*

முனைவர் இசக்கி சுப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலம் தருகின்ற உயரத்தை கவனத்தோடும், மக்கள் தருகின்ற மகுடத்தை நிதானத்தோடும் ஏற்று, ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், மக்களுக்காக, மக்களின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், கழகத்தின் பொதுச் செயலாளர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் சேர்த்துதான் சொல்கிறேன். தயவுசெய்து கேள்வி நேரத்தில் அதுகுறித்து மட்டும் நீங்கள் கேளுங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் சேர்த்துதான் நான் சொல்கிறேன். நீங்கள் வினாக்கள்-விடைகள் நேரத்தில் கேள்வியைக் கேளுங்கள். பதிலை வாங்குங்கள்.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்றாண்டைக் கடந்து காலத்தை வென்றவர் நாதஸ்வர சக்கரவர்த்தி திரு. அருணாசலம் அவர்கள். அம்பாசமுத்திரம் தொகுதி, காருகுறிச்சி என்னும் குக்கிராமத்தில் தோன்றிய தமிழகத்தின் பொக்கிஷம், இசை உலகின் மாமனிதர், நாதஸ்வர வித்வான் காருகுறிச்சி திரு. அருணாசலம் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க வேண்டுமென்று கோரியிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்று தெரிவித்துள்ளார்கள். இசைக் கருவிகளில் முக்கியமானது நாதஸ்வரம். கோயில் திருவிழாக்களிலும், திருமண நிகழ்ச்சிகளிலும் முதலிடம் வகிப்பது நாதஸ்வரமாகும். இந்த நாதஸ்வரத்திற்கான சிறப்பினைக் கொஞ்சும் சலங்கை என்ற திரைப்படம்மூலம் உலகத்திற்கு எடுத்துக் காட்டியவர் காருகுறிச்சி திரு. அருணாசலம் அவர்கள். அந்தத் திரைப்படத்திற்குப் பின்னர்தான் நாதஸ்வரம் என்னும் வாத்தியக் கருவியின் பெருமையைப் பாமர மக்களும் உணர்ந்தனர். தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின்மூலம், இசைக் கல்லூரிகள் நடத்தப்படுவதுடன், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு உதவித் தொகையும் வழங்கப்படுகிறது. இசையின் பெருமையை உலகத்திற்குக் காண்பிக்கும்பொருட்டு, இசைக் கலைஞர்களுக்கு மணிமண்டபம் அமைப்பது அவர்களுக்கு மரியாதை தருவதாக அமையும். மேலும், இதுபோன்ற இசைக் கலைஞர்களுக்கு

2023 ஜனவரி 11]

மணிமண்டபம் அமைப்பது இளைஞர்களிடையே இசையின்மீது பற்று ஏற்படவும் வழிவகுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு இன்னொரு கேள்வியும் இருக்கிறது. மணிமண்டபம் அமைக்கப்படுமா என்று கேட்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்குப் பதில் சொல்லிவிட்டார்கள். உங்களுக்கு இன்னொரு கேள்வியும் இருக்கிறது.*

முனைவர் இசக்கி சுப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களது சொந்த மாவட்டத்தில் தோன்றிய உலகப் பிரசித்திபெற்ற ஓர் இசைக் கலைஞர் காருகுறிச்சி திரு. அருணாசலம் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க தாங்களும் பரிந்துரை செய்ய வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காருகுறிச்சி திரு. அருணாசலம் அவர்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே விளக்கமாக எடுத்து வைத்திருக்கிறார்கள். அதை அரசும் அறியும். அவர் நம்முடைய நினைவில் வாழும் மரியாதைக்குரிய திருவாவடுதுறை இராஜரத்தினம் பிள்ளை அவர்களுடைய சீடரும் ஆவார். எனவே, அரசு நன்கு அறியும். அரசினுடைய நிதிநிலைமைக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி எதிர்காலத்திலே அதைப்பற்றி நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா அவர்கள்.*

முனைவர் இசக்கி சுப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஜய நகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு விஜய நகரத்தின்கீழ் மதுரை ஆட்சியாளர்களாக இருந்து வந்த விசுவநாத நாயக்கர் மதுரைக்கும், திருநெல்வேலிக்கும் இடையில், இறையாண்மை பெற்ற ஆட்சித் தலைவராக ஆண்டுவந்தார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா அவர்கள், நீங்கள் நிறைய படித்திருக்கிறீர்கள். புலமை இருக்கிறது. இப்போது காருகுறிச்சி திரு. அருணாசலம் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கக் கேட்டீர்கள். என்னிடம் 10 மாதங்களுக்கு முன் அவர்கள் மனுவாக தந்து, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். நம்முடைய மாவட்டத்திற்கு நீங்கள் அதைக் கேளுங்கள். அதை எவ்வளவு நாட்களில் செய்து தருவீர்களென்று கேளுங்கள்.

முனைவர் இசக்கி சுப்பையா: அடுத்து, நான் ஒரு கேள்வி கேட்கிறேன். சிங்கம்பட்டி ஜமீன், அதாவது, நம்முடைய சுதந்திர இந்திய நாட்டின் கடைசி ஜமீன்தாராக இருந்தவர் சிங்கம்பட்டி ஜமீன்தார். அவருக்கு மணிமண்டபம் கட்டித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு ஒரு தனிக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் எழுப்பும்பட்சத்தில் அரசு அதைப்பற்றி பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள்.

திரு. க. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–11, 150–வது வார்டில் துள்ளம் என்கிற தண்டலம் கிராமம், தமிழ்த் தென்றல் திரு.வி.க. என்கிற திரு. வி. கலியாண சுந்தரனார் அவர்கள் பிறந்த இடமாகும். தற்போது அந்த இடத்தில் ஒரு சிறிய நூலகமும், அவருடைய மார்பளவு சிலையும் இருக்கிறது. அது தமிழ் வளர்ச்சித் துறையின் பராமரிப்பிலே உள்ளது. அவர் பிறந்த இடத்தில் நினைவரங்கம் கட்ட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

2023 ஜனவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அண்ணன் தளபதி அவர்களுடைய தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு மணிமண்டபம் அமைப்பதைக் கொள்கை முடிவாக மாற்றி, பெரும்பாலும், சம்பந்தப்பட்டவருடைய பெயரில் அரங்கம் அமைப்பதாகக் கொள்கை முடிவு எடுத்து, அதன்படி செயல்பட்டு வருகிறது. அது அமைக்கப்படும்பட்சத்தில், அங்கே அரசு விழாக்களை நடத்துவதற்கும், அதைப்போல பொதுமக்களுடைய சுப காரியங்களை நடத்துவதற்கும் நிச்சயமாக அது பயன்படும் என்ற வகையிலேதான் அந்த முடிவு எடுத்து செயல்படுத்தி வருகிறது. எனவே, மணிமண்டபம் அல்லது நினைவு அரங்கம் என்கிற பெயர்களிலே அமைக்கப்படுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே கடிதம் மூலமாக இந்தக் கோரிக்கையை என்னிடத்திலே தந்திருக்கிறார்கள். ஏற்கெனவே, அமைந்திருக்கக்கூடிய மரியாதைக்குரிய நம்முடைய தமிழ்க் காவலர் திரு.வி.க. அவர்களுடைய சிலையையும், அங்கேயிருக்கக்கூடிய நூலகத்தையும் தமிழ் வளர்ச்சித் துறை பராமரித்து வருகிறது. இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, அங்கேயிருக்கக்கூடிய இட சூழ்நிலை, அரசினுடைய நிதியாதாரம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, அரசு எதிர்காலத்தில் அதைப் பரிசீலிப்பதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜூ அவர்கள்.*

திரு. செல்லூர் கே. ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் உட்பட அனைத்து அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வெளிநாடு சென்று வந்ததற்கும் என்னுடைய வாழ்த்துகளையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

தன் குரல் வளத்தால் திரையுலகை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த, மதுரையின் மைந்தன், திரு. டி.எம். சௌந்தரராஜன்

அவர்களுக்கு இந்த அரசு மணிமண்டபம் அமைத்துத் தருமா; எப்போது அமைத்துத் தரும்; அப்படியென்றால், எங்கே அமைத்துத் தரப்படும் என்பதையும் இந்த நேரத்தில் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருப்பதை அரசு பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, அதற்கேற்ப நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். திரு. T.M.S. அவர்களைப் பற்றி அரசு நன்கு அறியும். அவர் திரையுலகில் பிரபலமாக விளங்கியவர். அதைப்போல, அவர் சிறந்த பாடகர் என்கிற வகையில் நிச்சயமாக அரசு அதைப் பரிசீலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள்.

திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், கவர்னகிரி ஊராட்சி, வீரன் சுந்தரலிங்கம் நகரில் மாவீரன், சுதந்திர போராட்ட வீரர் வீரன் சுந்தரலிங்கம் மணிமண்டபம் அமைந்துள்ளது. அந்த மணிமண்டபத்தில் அவரின் மார்பளவு கற்சிலை உள்ளதால், மார்பளவு கற்சிலையை மாற்றம் செய்து, முழு உருவ வெண்கலச் சிலையையும், நூலகமும் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்த நினைவிடத்தை விரைவில் நேரடியாக நாங்கள் பார்வையிடுவதற்கு திட்டமிட்டிருக்கின்றோம். அந்த

நினைவிடத்தை நேரடியாகப் பார்வையிட்டு, அதற்கேற்ப நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகச் சிறந்த கல்வியாளர்களாக விளங்கிய ஆற்காடு சகோதரர்கள் என்று சொல்லக்கூடிய ஆற்காடு இராமசாமி முதலியார், ஆற்காடு இலட்சுமணசாமி முதலியார் ஆகிய இருவரும் மிகச் சிறந்த கல்வியாளர்களாக, சேவை செய்யக்கூடியவர்களாக இந்த மண்ணில் விளங்கியிருக்கிறார்கள். குறிப்பாக, இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் எந்த நீட் தேர்வும் எழுதாமல் மிகச் சிறந்த மருத்துவராக (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாட்டிற்கு வந்த Queen Elizabeth அம்மையார் அவர்களுக்கே பிரசவம் பார்த்த ஒரு சிறந்த மருத்துவர் என்ற பெயர் பெற்றவர். Madras University–யினுடைய நீண்டகால சற்றேறக்குறைய 27 ஆண்டுக்காலம் Vice–Chancellor ஆக, துணை வேந்தராக விளங்கிய சிறந்த கல்வியாளர். அதைப்போல, ஆற்காடு இராமசாமி முதலியார் அவர்களும் நீதிக் கட்சியினுடைய மூத்த தலைவர்களில் ஒருவராக இருந்து ஒரு மிகச் சிறந்த அரசியல் தலைவராய் விளங்கியவர்; வழக்கறிஞராக விளங்கியவர். பல்வேறு சேவைகள் செய்திருப்பதைப்போல, சென்னையிலேயே அதிகளவில் மருத்துவமனைகளை, கல்வி நிலையங்களை உருவாக்குவதற்கு முன்நின்றவர்கள். எனவே, அவர்கள் இருவருக்கும் சேர்ந்தார்போல ஒரு மணிமண்டபத்தை சென்னையிலோ அல்லது ஆற்காட்டிலோ அமைப்பது அவசியம் என்பதனை இந்த நேரத்தில் அரசிடம் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

அதேநேரத்தில், சென்னை நகரங்களிலோ, மாநகரங்களிலோ, பெருநகரங்களிலோ பெரும்பாலும் அரங்கங்கள் அமைப்பதற்கான இடவசதி பற்றாக்குறையாக இருக்கிறது. எனவே, எதிர்காலத்தில் அதைப் பற்றிப் பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம், மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

6—

ஆதரவற்றோர் இல்லம்

***51186—திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் தொகுதி, இராமேஸ்வரத்தில் ஆதரவற்றோர் இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராமநாதபுரம் தொகுதி, இராமேஸ்வரத்தில் ஆதரவற்றோர் இல்லம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் தொகுதி, இராமேஸ்வரத்தில் நாள்தோறும் வரக்கூடிய வெளி மாவட்ட மற்றும் வட மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் வயதான பெரியவர்களை அழைத்து வந்து இப்பகுதியில் விட்டுச் செல்லும் நிலை

2023 ஜனவரி 11]

தொடர்கிறது. ஆகவே, இராமேஸ்வரத்தில் ஆதரவற்ற நிலையில் வாழும் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் தங்கும் வகையில் ஓர் ஒருங்கிணைந்த வளாகம் அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வரும் ஆதரவற்றோருக்கான முதியோர் இல்லங்கள் மற்றும் ஆதரவற்ற முதியோர்கள் மற்றும் குழந்தைகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்களுக்கு சமூக நலத் துறையின் வாயிலாக மானியம் வழங்கப்பட்டு வருகிறது.*

இராமநாதபுரம் மாவட்டத்தில் பதிவு பெற்ற 6 முதியோர் இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. அதில், ஓர் இல்லம் ஒன்றிய அரசின் நிதியுதவியுடனும், 2 இல்லங்கள் தமிழக அரசின் மானியத்துடனும் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 3 இல்லங்கள் தனியார் தொண்டு நிறுவனங்களின் சொந்த நிதியில் செயல்பட்டு வருகின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூடுதலாக ஆதரவற்றோர் இல்லம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவருடைய தொகுதியிலேயே அமலா அன்னை முதியோர் இல்லம் செயல்பட்டு வருகிறது. எனினும், தேவைப்படும்பட்சத்தில் ஆதரவற்றோருக்கான முதியோர் இல்லங்கள் மற்றும் ஆதரவற்ற முதியோர்கள் மற்றும் குழந்தைகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகம் அமைத்திட அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் பகுதிக்கு அமாவாசை மற்றும் பௌர்ணமி காலங்களில் வட இந்தியாவிலிருந்து வரக்கூடிய பக்தர்கள் முதியவர்களை அழைத்து வந்து, அப்பகுதியில் விட்டுச் சென்றுவிடுகிறார்கள். இராமநாதபுரம்*

[2023 ஜனவரி 11

மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் அமைப்புகள் இருந்தாலும், இராமேஸ்வரத்தில் கூடுதலாக ஓர் ஒருங்கிணைந்த வளாகம் தேவைப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கருத்திற்கொண்டு, இந்த நிதியாண்டிலாவது அமைத்துத் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டு நிறுவனங்கள் முன்வரும்பட்சத்தில் அரசு மானிய உதவிகளை அவர்களுக்கு வழங்கும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இணைந்து புதிய தொண்டு நிறுவனம் தொடங்கிட முன்வந்தால் அரசு உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

7—

மீன் உலர் தளம்

***17863—திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவைகுண்டம் தொகுதி, பெரியதாழை கிராமத்தில் மீன் உலர் தளம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தொகுதி, பெரியதாழை மீனவக் கிராமத்தில் மீன் உலர் தளம் அமைக்க வேண்டும் என்று

கோரியுள்ளார்கள். தேவையிருப்பின், ஆய்வு மேற்கொண்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ் அவர்கள்.

திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியதாழை என்பது 2,000 குடும்பங்களுக்குமேல் உள்ள மீனவக் கிராமம் ஆகும். அங்கே கடல் சீற்றம் அதிகமாக ஏற்படுவதால், கடல் மண் அரிப்பு ஏற்படுகிறது. அதைப்போல, அங்குள்ள படகுகள் கவிழ்கின்றன; உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. அவற்றைத் தடுக்கும் வகையில், நம்முடைய அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. எனினும், அங்கேயுள்ள 800 மீட்டர் நீளமுள்ள தூண்டில் வளைவுப் பாலத்தை நீட்டித்து, இன்னும் கூடுதலாக 600 மீட்டர் நீளம் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தொகுதி, பெரியதாழை மீனவக் கிராமத்தில் 370 நாட்டுப் படகுகள் உள்ளன; சுமார் 1,500 மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். இங்கே நாள்தோறும் 30 டன் முதல் 40 டன் வரை மீன்கள் பிடிக்கப்பட்டு வருகின்றன. இந்த மீன்கள் அனைத்தும் அன்றைக்கன்றே விற்பனை ஆகிவிடுகின்றன. மீன்களைச் சேமித்து வைக்க வேண்டிய நிலை எழவில்லை. இங்குள்ள மீனவர்கள் தங்கள் பகுதியில் மீன் ஏலக் கூடம் உள்ளிட்ட வசதிகளுடன்கூடிய மீன் இறங்குதளம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வந்தனர். அதனையேற்று, கடந்த 2021–2022 ஆம் நிதியாண்டில் ரூ.9 கோடி செலவில் மீன் இறங்குதளம் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதன்படி 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரியதாழை மீனவக் கிராமத்தில் கடல் அரிப்பினைத் தடுத்திட 50 மீட்டர் நீளத்தில் இரண்டு

நேர்கல் சுவர், 6 மீன் ஏலக் கூடங்கள், 900 மீட்டர் நீளத்திற்கான சாலை வசதி ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. இந்த வசதிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன் மீனவர்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

முற்பகல் 11–05

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தூண்டில் வளைவை நீடிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை எங்கள் துறையினுடைய அலுவலர்களுடன் ஆய்வு செய்து, தேவையிருப்பின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ் அவர்கள்.*

திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல் என்னுடைய தொகுதியில் பழைய காயல் என்ற கிராமம் இருக்கிறது. அங்கு கடல்நீர் உட்புகுந்து வருவதால், அங்கேயும் 500 மீட்டர் நீளமுள்ள தடுப்புச் சுவர் அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா என்ற கேள்வியையும் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பழைய காயல் பகுதியில் தூண்டில் வளைவு அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை இன்றைக்கு வைத்திருக்கின்றார்கள். தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற கடற்கரைப் பகுதிகளில் தூண்டில் வளைவு வேண்டும்; தடுப்புச் சுவர் வேண்டும்; என்ற கோரிக்கைகள் வரப்பெற்றிருக்கின்றன. ஆனாலும், இன்றைக்கு தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் கடலில் கடினமான கட்டுமானப் பணிகளான அலை தடுப்புச் சுவர்,*

2023 ஜனவரி 11]

நேர்கல் சுவர் போன்றவற்றை மேற்கொள்ளக் கூடாது எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்தீர்ப்பின்படி கடற்கரை மேலாண்மைத் திட்டம் தயாரித்து ஒன்றிய அரசுக்கு அனுப்பி (மேசையைத் தட்டும் ஒலி) அனுமதி பெறுகின்றவரை, கடலில் கடினமான கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின்மூலம் கடலோர மேலாண்மைத் திட்டத்திற்கான ஒப்புதல் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அந்த வகையிலே அந்தத் திட்டங்கள் நிறைவேறுகின்றபோது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்ட பழைய காயல் கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்கின்ற திட்டத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, நிதிநிலைக்கேற்றாற்போல், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

பழுப்பு நிலக்கரி திட்டம்

***7404—திரு. க.சொ.க. கண்ணன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி திட்டத்தைச் செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் ஆண்டில்*

ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பை 6 மாதங்களில் வழங்கியும், இந்த ஆண்டு 50,000 விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்குவதற்கான திட்டத்தை 11–11–2022 அன்று தொடங்கி வைத்து, 61–வது நாளில் 50,000 ஆவது விவசாயிக்கான இலவச மின் இணைப்பிற்கான ஆணையை இன்று தன் திருக்கரங்களால் வழங்கி, ஒன்றரை ஆண்டுகளில் ஒன்றரை இலட்சம் விவசாயிகளுக்கான இலவச மின் இணைப்பை வழங்கி வரலாற்று சாதனை படைத்த விவசாயிகளின் பாதுகாவலர் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டின் ஒப்பற்ற முதலமைச்சர், மாண்புமிகு தளபதி அவர்களுக்கு ஒட்டுமொத்த விவசாயப் பெருமக்கள் சார்பாகவும், மின்சாரத் துறை சார்பாகவும் மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி திட்டத்தைச் செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள்.

திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் நிலக்கரி திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு முன்பாக 8,374 ஏக்கர் நிலம் அரசால் கையகப்படுத்தப்பட்டு, பொதுமக்களுக்கு இழப்பீட்டுத் தொகையும் வழங்கப்பட்டது. இடையில் பல்வேறு காரணங்களால் அந்தத் திட்டம் செயல்படுத்தப்படாமல் இருந்தது. அந்தச் சூழ்நிலையில் விவசாயிகள் அந்த நிலத்தைத் திரும்பவும் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து, பல்வேறு போராட்டங்களை நடத்தினார்கள். இந்தச் சட்டமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுடைய அரியலூர் மாவட்டத்திற்கு வந்த நேரத்தில் அந்த நிலங்களைத் திரும்பவும் ஒப்படைக்க வேண்டும் என்று விவசாயிகள் நேரடியாக அவர்களிடத்தில் கோரிக்கை வைத்தார்கள். அதன்பிறகு சட்டமன்றத்தில் நான் முதன்முறையாக 22–3–2022 அன்று உரையாற்றுகின்ற நேரத்தில் ஜெயங்கொண்டம் நிலக்கரி திட்டத்தை முடிவுக்குக் கொண்டு

2023 ஜனவரி 11]

வரவேண்டும் என்று கோரிக்கை வைத்து பேசினேன். அதோடு, நம்முடைய அண்ணன் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும், நானும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே இந்தத் திட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கையை நேரடியாக வைத்தோம். அதன் பின்னால், 2–6–2022 அன்று ஓர் அரசாணைமூலம் ஜெயங்கொண்டம் நிலக்கரி திட்டத்திற்கு வழங்கப்பட்ட நிலங்களை அரசு வழங்கிய அந்த இழப்பீட்டுத் தொகையையும் திரும்பப் பெறாமல், விவசாயிகளுக்கே திரும்ப வழங்கும் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–10

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் அரசாங்கம் கையகப்படுத்திய நிலத்தைத் திரும்ப வழங்கியதாக வரலாறு இல்லை. ஆனால், தமிழ்நாட்டில்தான் மாண்புமிகு நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் விவசாயிகளினுடைய நலனைக் கருதி, மக்கள் நடத்திய போராட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து, அந்த நிலங்களைத் திரும்ப வழங்குவதற்கு அவர் ஆணையிட்டதோடு மட்டுமல்லாமல், 29–11–2022 அன்று எங்களுடைய அரியலூர் மாவட்டத்திற்கு வருகை தந்து, நேரடியாக அந்த விவசாயிகளிடத்திலே அவர்களுடைய நிலங்களைத் திரும்ப ஒப்படைத்த ஒரே முதல்வர், நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதியார் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அவர்களுக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, கேள்வியைக் கேளுங்கள்.

திரு. க.சொ.க. கண்ணன்: அதேபோன்று, ஜெயங்கொண்டம் தொகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையாக இருந்த கோட்டப் பொறியாளர் அலுவலகத்தையும் எங்களுக்கு வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜெயங்கொண்டம் நிலக்கரி திட்டம் கைவிடப்பட்ட காரணத்தினால், இன்றைய மின்சாரத் தேவையைக் கருத்தில்கொண்டு, ஜெயங்கொண்டம் தொகுதியிலே சூரிய மின் சக்தி உற்பத்தி நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வி, பழுப்பு நிலக்கரி. ஆனால், தற்போது சோலார் கேட்கிறீர்கள். அப்படித்தானே? மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள், இதற்கு பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து மாவட்டங்களும் சோலார் மாவட்டங்களாக உருவாக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, முதல் திட்டமாக, திருவாரூர் மாவட்டத்தில் சோலார் மின் உற்பத்திக்கான பூங்கா அமைக்கக்கூடிய அந்தத் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைக்கவிருக்கின்றார்கள். எனவே, அனைத்து மாவட்டங்களையும், சோலார் மாவட்டங்களாக மாற்றும் திட்டத்தினைச் செயல்படுத்தக்கூடிய வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்கும் முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள். நன்றி சொல்லி, அமருங்கள்.*

திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஜெயங்கொண்டம் துணை மின் நிலையத்திலிருந்து நெய்வேலி முதல் கும்பகோணம் வரை 110 கிலோ வாட் இருவழி மின் பாதை, தேவமங்கலத்திலிருந்து ஒரு வழி மின் பாதையாக ஜெயங்கொண்டத்திற்கு விநியோகிக்கப்படுகிறது. இந்த ஒரு வழிப் பாதையில் மின் தடை ஏற்பட்டால், மாற்று மின்சாரம் வழங்குவதற்கு இயலாத நிலையுள்ளது. எனவே, மாற்று மின்சாரம் வழங்க பொய்யூரில் உள்ள 230 கிலோ வாட் மின்சார நிலையத்திலிருந்து சுத்தமல்லி துணை மின்சார நிலையத்திற்கு அமைக்கப்பட்டுள்ள 110 கிலோ வாட் மின் பாதையை ஜெயங்கொண்டம் வரை நீட்டித்துத் தர அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 ஜனவரி 11]

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, வருகின்ற ஆண்டுகளில் அந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நன்னிலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வலங்கைமானுக்கு அருகில் இருக்கின்ற விளத்தூர் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டுவிட்டது; அந்தப் பகுதி மக்கள் இடமும் தானமாக கொடுத்துவிட்டார்கள், அதிகாரிகளுடைய ஆய்வும் நடைபெற்றுவிட்டது, ஆனால் இன்னும் பணிகள் தொடங்கப்படவில்லை. சென்ற ஆண்டே முடித்துவிடுகிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னிடத்தில் இதே அவையில் சொல்லியிருக்கிறார்கள். எனவே, உடனடியாக இந்த ஆண்டின் துவக்கத்திலேயே முடித்துத் தர வேண்டுமெனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதியில் அமைக்கப்பட வேண்டிய துணை மின் நிலையத்திற்கு ஐந்து கோடியே முப்பத்தைந்து இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது. ஒப்பந்தப்புள்ளிக்கான அந்தப் பணிகள் முடிந்த பிறகு, உடனடியாகப் பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

[2023 ஜனவரி 11

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே விவசாயத்திற்கு இணையாக செயல்படுகின்ற மாட்டுப் பண்ணைகளுக்கு வழங்கப்படுகின்ற மின்னிணைப்பு, வணிக நோக்கத்திலே இருக்கின்ற மின்னிணைப்பாக இருக்கிறது. அது, விவசாயம் சார்ந்த தொழில் என்பதால், விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற மானியத்துடன்கூடிய மின்னிணைப்பாக வழங்குவதற்கு அரசு கொள்கை முடிவு எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, துறைரீதியாக ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள்.

திரு. பொன். ஜெயசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எனது கூடலூர் சட்டமன்றத் தொகுதியில் சுமார் 12,000 இல்லங்களுக்கு மின் விளக்கு வசதியில்லை என்ற கோரிக்கையினை மூன்றாவது முறையாக இந்த மாமன்றத்திலே பதிவு செய்கின்றேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்தலுக்கு முன்பான பரப்புரையின்போது மேட்டுப்பாளையம் வருகை தந்திருந்தபோது, அங்கிருந்த தமிழரசி என்ற ஒரு சிறுமியின் கேள்விக்கு, ஆட்சிக்கு வந்த 100 நாட்களில் மின்னிணைப்பு வசதி செய்து தரப்படும் என்ற உறுதிமொழியினைத் தந்தார்கள். ஆட்சிக்கு வந்து 20 மாதங்கள் கடந்துவிட்டன. இன்னும் அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. எனவே, அந்த உறுதிமொழியினை நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 ஜனவரி 11]

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும் இந்த அவையிலே, இந்தக் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றார்கள். தமிழகம் முழுவதும் இதுபோன்ற வனப் பகுதியை உள்ளடக்கிய பகுதிகளில் குடியிருப்பவர்களுக்கு —இது ஒரு கொள்கை ரீதியான முடிவு. எனவே, இதை கொள்கை ரீதியாக ஆய்வு செய்து—அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய மக்களுக்கு விரைவில் மின்னிணைப்பு வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில், அந்தப் பகுதி மக்களுக்கு மிக விரைவாக மின்னிணைப்பு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அனல் மின் நிலையத்தில் இலட்சக்கணக்கான டன் பழுப்பு நிலக்கரி வெறும் நிலத்தில், திறந்தவெளியில் கொட்டப்பட்டிருக்கிறது. எனவே, கான்கிரீட் தளம் அமைத்து, பழுப்பு நிலக்கரியை அந்த இடத்தில் கொட்ட வேண்டும். மேலும், நிலக்கரி சாம்பல் பறந்து வந்து மக்கள்மீது விழாமல் இருக்க மேற்கூரை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாம்பல் விற்பனையைப் பொறுத்தவரை, உற்பத்தி நிலையங்களிலிருந்து பொதுமக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் வராத வகையில் ஒவ்வொரு மின் நிலையம் வாரியாக தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, கடந்த ஆட்சிக் காலங்களில், ஒரு மாதத்திற்கு*

ரூ.7 கோடி வருவாய் வந்தது என்பதை மாற்றி, இப்போது ஒரு மாதத்திற்கு 13 கோடியே 71 இலட்சம் ரூபாய் வருமானம் வரக்கூடிய அளவிற்கு அதை திருத்தியமைத்ததால், மின் வாரியத்திற்கு வருவாய் அதிகரித்திருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய மேட்டூர் அனல் மின் நிலையத்திலும் அதற்கான பணிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு விரைவில் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

9—

குடமுழுக்கு

***1210—திரு. இரா. அருள்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், சூரமங்கலம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலை புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சூரமங்கலம் மாரியம்மன் திருக்கோயிலில், உபயதாரர்கள் நிதி கொண்டு, சுமார் 12 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் ஏற்கெனவே திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதில், உபசந்நிதியாக இருக்கக்கூடிய விநாயகர் திருக்கோயிலுக்கு 7 இலட்சம் ரூபாய் மண்டலக் குழுவிலே பரிந்துரைக்கப்பட்டு, மாநிலக் குழுவினுடைய ஒப்புதலுக்கு சென்றிருக்கிறது. கூடியவிரைவில் ஒப்புதல் வழங்கி, உபயதாரர்கள் நிதி இல்லையென்றாலும், ஆணையருடைய பொது நல நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டு, வருகின்ற ஜூன் அல்லது ஜூலை மாதத்தில்

2023 ஜனவரி 11]

திருப்பணியும், கும்பாபிஷேகமும் நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனிக்கு பாதயாத்திரை செல்லக்கூடிய பக்தகோடிகளுக்கு 20 நாட்களுக்கு அன்னதானம் வழங்க, நேற்று ஆணையிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வருமானம் இல்லாத திருக்கோயில்களுக்கு இந்தமாதிரி திருப்பணி, கும்பாபிஷேகம் செய்வதற்கு இந்து சமய அறநிலையத் துறை என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதையும், இந்த அரசு ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, சேலம் மாவட்டத்திலுள்ள எத்தனை கோயில்களுக்குக் கும்பாபிஷேகம் நடத்தியிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

சூரமங்கலம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலைப் பொறுத்தவரை, வருமானம் இல்லாத கோயிலாக இருந்தாலும், தினசரி ஆயிரக்கணக்கான பக்தர்கள் இத்திருக்கோயிலுக்கு வருகின்றார்கள். ஆகவே, இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து, மிகச் சிறப்புற திருப்பணியும், கும்பாபிஷேகமும் செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாக அன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளாமல் கொடுக்கின்ற அரசு இது. கேட்டதெல்லாம் தருகின்ற அரசு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய அரசு என்பதற்கிணங்க, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, சேலம் மாவட்டத்தில் மாத்திரம் 15 திருக்கோயில்களில் 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் திருப்பணிகள் முடிவுற்றிருக்கின்றன. 20 திருக்கோயில்களில் 3 கோடியே 60 இலட்சம் ரூபாய்

செலவில் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 15 திருக்கோயில்களில் சுமார் 3 கோடி ரூபாய் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, 3 திருத்தேர்களின் திருப்பணிகள் 43 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்றிருக்கின்றன. 9 இலட்சம் ரூபாய் செலவில் மேலும் ஒரு திருத்தேருக்கு திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான் ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோயில்களைப் புனரமைப்பதற்குப் போதிய நிதி வசதி இல்லையென்ற காரணத்தினால், சுமார் 100 கோடி ரூபாயை இதுவரையில் எந்த அரசும் செய்யாத அளவிற்கு, (மேசையைத் தட்டும் ஒலி) அரசே நிதி ஒதுக்கீடு செய்து, 104 திருக்கோயில்கள் திருப்பணிக்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருமானம் இல்லாத திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் மேற்கொள்வது எப்படி என்றும் வினா எழுப்பினார். தற்போது வருமானம் அதிகமாக இருக்கின்ற திருக்கோயில்களோடு வருமானம் இல்லாத திருக்கோயில்களை உபகோயில்களாக இணைத்து அதற்குத் திருப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதோடு வருமானமே முழுவதுமாக இல்லையென்றாலும்கூட நீங்கள் குறிப்பிட்ட சூரமங்கலம் மாரியம்மன் திருக்கோயிலில்கூட பசலிக்கு ஒரு இலட்சத்து 7 ஆயிரம் ரூபாய்தான் வருமானம். அதில், பணியாளர்கள், மின் கட்டணம் போன்றவற்றிற்குப் போதுமான தொகையே இல்லாத சூழ்நிலையில் ஆணையருடைய பொது நல நிதியிலிருந்து இந்தத் திருக்கோயில்களுக்கெல்லாம் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு திருப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

தகவலுக்காக ஒன்றைச் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, இதுவரையில் 406 திருக்கோயில்களில் குடமுழுக்குப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஜனவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.*

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், என்னுடைய தொகுதியில் இருக்கின்ற வெண்ணங்குடி முனியப்பன் திருக்கோயில் மிகப் பெரிய அளவில் வருமானம் வருகின்ற கோயில். வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கிட்டத்தட்ட பதினைந்தாயிரம் பக்தர்கள் வந்து செல்லக்கூடிய மிகப் பெரிய கோயில். அந்தக் கோயிலுக்குக் கூரை அமைக்கக் கூடாது என்பது விதி. பல்லாயிரக்கணக்கில் அந்தக் கோயிலுக்கு வரும் பக்தர்கள் வெயில் காலத்திலும், மழைக் காலத்திலும் பெரிய அளவிற்குப் பாதிப்புக்குள்ளாகிறார்கள். கோயிலுக்கு முன்பாக ஒரு முன்மண்டபம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் வேண்டுகோள் விடுத்திருந்தேன். அங்கே முன்மண்டபம் அமைத்துத் தர வேண்டும்.*

அதேபோல், சேலம், குரங்குச்சாவடியில் அமைந்துள்ள அருள்மிகு சென்றாயப்பெருமாள் திருக்கோயில் மலை ஏறுவதற்கு படிக்கட்டுகள் இல்லை. புரட்டாசி மாதத்தில் இலட்சக்கணக்கில் பக்தர்கள் வருகிறார்கள். அந்தக் கோயிலுக்கு படிக்கட்டுகள் அமைத்துத் தந்து, கோயிலைச் சுற்றி வருவதற்கு கிரிவலப் பாதையையும் அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ள வெண்ணங்குடி திருக்கோயில் என்பது தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ளது. ஏற்கெனவே தேசிய நெடுஞ்சாலையில் போதிய அளவு இடவசதி இல்லாததால் அங்கே நிழற்கூரைகள் அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் இல்லையென்று நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருந்தாலும், மீண்டும் அறிவுறுத்தி கருத்துரு பெற ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். தற்போது*

உறுப்பினர் கேட்டுக்கொண்ட, சென்றாயப்பெருமாள் திருக்கோயில் என்பது 700 அடி உயரமும், 650 படிக்கட்டுகளையும் கொண்டது. 6 கிலோ மீட்டர் சுற்றளவுக் கொண்ட அந்தப் பகுதியை மேம்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றவுடன், முதற்கட்டமாக 20 இலட்சம் ரூபாயை திருப்பணிக்கு ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். தொடர்ந்து, வருகின்ற காலங்களில் முழுமையாக அதற்கு நிதி பெறப்பட்டு, இலட்சக்கணக்கான பக்தர்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றுகின்ற அரசாக, ஆன்மிகத்தில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்துகின்ற அரசாக விளங்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அமைந்திருக்கின்ற அரசு, நிச்சயம் சென்றாயப்பெருமாள் திருக்கோயிலுக்கு வேண்டிய அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுக்கு 20 கோடி ரூபாய்க்குமேல் வருமானம் ஈட்டுகின்ற பிரசித்தி பெற்ற பண்ணாரியம்மன் ஆலயத்திற்கு இராஜகோபுரம் கட்டும் பணியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு அறிவித்தார்கள். அந்தப் பணிகள் எப்போது துவங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ணாரியம்மன் திருக்கோயிலுக்கு ஏழுநிலை இராஜகோபுரம் அமைப்பதற்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, டெண்டர் கோரப்பட்டது. கடந்த 2 ஆம் தேதி அன்று டெண்டர் திறந்தபோது, டெண்டர் எடுக்க யாரும் வரவில்லையென்பதால் மீண்டும் மறு ஒப்பந்தத்திற்கு அதை அறிவுறுத்தியிருக்கின்றோம். பண்ணாரியம்மன் திருக்கோயில் பற்றி கேள்வி வந்ததால் சொல்கிறேன். எந்த ஆட்சியிலும்

2023 ஜனவரி 11]

இல்லாத அளவிற்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் ஆட்சியமைந்த பிறகுதான், அந்தத் திருக்கோயிலுக்கு இலட்சக்கணக்கான மக்கள் வருவதையறிந்து இலவச சிகிச்சைக்காக மருத்துவ மையம் அமைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம்; முழுநேர பிரசாத திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்; முழுநேர அன்னதானத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அடுக்கடுக்கான திட்டங்களை திருக்கோயில்களுக்குக் கொண்டு வந்திருக்கின்றோம். இப்போது எந்தத் திருக்கோயிலை எடுத்துக்கொண்டாலும், இலட்சக்கணக்கான மக்கள் பக்திப்பரவசத்தோடு இறையன்பர்கள் மகிழ்ச்சியுற்றிருக்கும் ஆட்சியாக இந்த ஆட்சி இருப்பதால், கூடியவிரைவில் ஏழுநிலை இராஜகோபுரம் அமைப்பதற்குண்டான பணிகளை நிச்சயம் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை துவக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள்.

திரு. A.P. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட விரிஞ்சிபுரம் ஈஸ்வரன் திருக்கோயில், பள்ளிகொண்டா ரங்கநாதர் திருக்கோயில் இவை இரண்டும் மிகவும் பழமை வாய்ந்த திருக்கோயில்கள். இந்த இரண்டு திருக்கோயில்களையும் புனரமைத்து, குடமுழுக்கு நடத்திட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகொண்டா அருள்மிகு ரங்கநாதர் திருக்கோயிலும், விரிஞ்சிபுரம் அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயிலும் 1,000 ஆண்டுகள் பழமையான திருக்கோயில்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. அதற்கான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களையும் அழைத்துச் சென்று, அக்கோயில்களுக்கான திருப்பணிகள் கூடியவிரைவில் அதாவது

2 அல்லது 3 மாத காலங்களில் துவக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவில், திருமுட்டம் பகுதியில் அமைந்திருப்பது அருள்மிகு பூவராக சுவாமி ஆலயம் ஆகும். அந்த ஆலய உற்சவருடைய திருவுருவச் சிலை பழுதடைந்த நிலையில், எனது கோரிக்கையையேற்று, ஐடிமந்திரத்தை செய்து, மக்கள் மனதைக் குளிர வைத்திருக்கின்ற தமிழக அரசுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றி.

அதைப்போலவே, வைணவக் கோயிலும், சைவக் கோயிலும் ஒரே வளாகத்தில் இருக்கக்கூடிய வகையில், மேற்குப் புறத்தில் அருள்மிகு பூவராக சுவாமி வைணவத் திருக்கோயிலும், கிழக்கு முகமாக அருள்மிகு நித்தீஸ்வரர் சைவத் திருக்கோயிலும் அங்கே அமைந்திருக்கின்றன. 1,000 ஆண்டுக்கால பழமைமிகுந்த அந்தக் கோயில், தற்போது ஒன்றிய அரசின். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வரலாறை நிறுத்திவிட்டு, கேள்விக்கு வந்துவிடுங்கள். நேரமில்லை.

திரு. ம. சிந்தனை செல்வன்: ஒன்றிய அரசின் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. உரிய அனுமதியைப் பெற்று, திருமுட்டத்திலுள்ள அருள்மிகு நித்தீஸ்வரர் ஆலயத்திற்குக் குடமுழுக்கு நடத்தித் தர தமிழக அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைவமும், வைணமும் இணைந்த, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திருக்கோயில், ஏற்கெனவே ASI control–லில் இருக்கிறது. அதற்குண்டான கருத்துரு, துறைச் செயலாளர் வாயிலாக ASI–க்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. அப்பணியை விரைவுபடுத்துவதற்கும், தொடர்ந்து அழுத்தம் கொடுப்பதற்கும், இந்து சமய அறநிலையத் துறை முயற்சித்துக்

2023 ஜனவரி 11]

கொண்டிருக்கிறது. வெகுவிரைவில் நல்ல செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத் தலைநகர், தருமபுரி நகரில் பிரசித்திபெற்ற, பழமைவாய்ந்த கோட்டை சிவன் கோயிலும், அதே வளாகத்தில் கோட்டை பெருமாள் கோயிலும் அமைந்துள்ளன. இக்கோயில்கள் 6 ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டதாகவும், மன்னர்கள் காலத்தில் பாடல்பெற்ற தலமாகவும் விளங்கி வருகிற பிரசித்திபெற்ற திருக்கோயில். அந்தக் கோயில் இதுவரையில் புனரமைக்கப்படாமலும், குடமுழுக்கும் செய்யப்படாமலிருக்கிற நிலையில், பொதுமக்கள் கடந்த வாரம் ஒன்றுகூடி அரசுக்குக் கோரிக்கை வைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்திருக்கிறார்கள். ஆகவே, தமிழக அரசு, தருமபுரி நகரிலுள்ள கோட்டை பெருமாள் கோயில் மற்றும் சிவன் கோயில் ஆகியவற்றில் குடமுழுக்கு செய்வதற்கும், புனரமைப்பு செய்வதற்கும் ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *தருமபுரி, கோட்டை சிவன் மற்றும் பெருமாள் திருக்கோயில்கள் 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கோயில்கள் என்பதால், இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரைத் தொடர்ந்து, தைத் திங்கள் முடிவடைந்தவுடன், நேரடியாக ஆய்வுக்கு வருகைதந்து, அத்திருக்கோயில்களின் தொன்மையை ஆராய்ந்து, உடனடியாக திருப்பணிகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1,000 ஆண்டுகளுக்குப் பழமையான 509 திருக்கோயில்களைப் பட்டியலிட்டு, 509 திருக்கோயில்களுக்கும் திருப்பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டிருக்கின்றார்கள். அவற்றில் முதற்கட்டமாக 104 திருக்கோயில்கள் ரூ.100 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகளை மேற்கொள்ள எடுக்கப்பட்டுள்ளன. வருகின்ற ஆண்டுகளில்*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையுள்ளத்தோடு மேலும் நிதி தரவிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தத் திருக்கோயில்களையும் பட்டியலில் இணைத்துக்கொண்டு, குடமுழுக்கு உள்ளிட்ட திருப்பணிகளை விரைவாக மேற்கொள்வதற்குண்டான வழிவகைகளை இந்து சமய அறநிலையத் துறை காணும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள்.

திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாடு அருகில் அமைந்துள்ள வன்மீகநாதர் ஆலயம் மிகவும் பழமையானது. அக்கோயிலுக்கு 100 ஏக்கர் நிலம் இருக்கின்றது. 20 வருடங்களுக்கு முன்னால் குடமுழுக்கு செய்யப்பட்டது. ஆகம விதிப்படி 12 வருடங்களுக்கு ஒரு முறை குடமுழுக்கு செய்யப்பட வேண்டும். நிதிப் பற்றாக்குறையால் குடமுழுக்கு செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே, வன்மீகநாதர் திருக்கோயிலுக்குக் குடமுழுக்குப் பணி செய்ய அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வன்மீகநாதர் திருக்கோயில் பட்டியலில் இடம்பெற்றிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2022–2023 ஆம் ஆண்டு சுமார் 1,500 திருக்கோயில்களில் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டிருந்தார்கள். அந்த வகையில், அந்தத் திருக்கோயிலைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே மண்டலக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு, மாநிலக் குழுவின் பரிந்துரைக்காக அனுப்பப்பட்டிருக்கின்றது. அதற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கின்றது. மாநிலக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் வெகுவிரைவில் திருப்பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

10—

சார்நிலைக் கருவூலம்

***51733—திரு. பொ. அர்ஜுனன்:**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி, மரக்காணம் வட்டத்தில் சார்நிலைக் கருவூலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி, மரக்காணம் வட்டத்தில் புதிய சார்நிலைக் கருவூலம் அமைப்பது தொடர்பாக கருத்துரு வரப்பெற்று அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், அரசின் நிதி நிலைமை மற்றும் திட்டத்தின் செயல்படுத்தப்படும் தன்மை அறிந்து, திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி, மரக்காணம் வட்டத்தில் சார்நிலைக் கருவூலம் புதியதாக அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன் அவர்கள்.

திரு. பொ. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் இடைக்கால பொதுச் செயலாளர், ஏழை எளிய மக்களின் அன்பைப் பெற்ற இரும்பு தேசத்தின் கரும்பு மனிதர், (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சித் தலைவர், ஐயா அவர்களை

வணங்குகிறேன். என் மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான என் அரசியல் ஆசான், அண்ணன் திரு. சி.வி. சண்முகம் அவர்களையும் வணங்குகிறேன். மேலும், இந்த அவையில் அமர்ந்திருக்கும் அனைவருக்கும் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விழுப்புரம் மாவட்டத்தில் அமைந்த 13 வருவாய் வட்டங்களில் மரக்காணம் வட்டமும் ஒன்றாகும். விழுப்புரம் மாவட்டத்தில் கிழக்குக் கடற்கரைப் பகுதி முதல் மரக்காணம் வட்டம் அமையப் பெற்றுள்ளது. இதன் நிருவாகத் தலைமையிடம், வட்டாட்சியர் அலுவலகம், மரக்காணத்தில் இயங்குகிறது. மரக்காணம் வட்டம் 60 வருவாய்க் கிராமங்களைக் கொண்டது. இவ்வட்டத்தில் அமைந்த மரக்காணம் ஊராட்சி ஒன்றியம் 56 கிராம ஊராட்சிகளைக் கொண்டது. இங்குள்ள மக்கள், ஓய்வூதியதாரர்கள், அரசுப் பணியாளர்கள் பல்வேறு தேவைகளுக்கு சார்நிலைக் கருவூலத்தை அணுகவேண்டுமென்றால், நீண்டதூரமுள்ள திண்டிவனத்தில் அமைந்துள்ள கருவூலத்திற்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளதால் ஒரு நாள் முழுவதும் செலவாகிறது. இதனால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். ஒவ்வொரு வருவாய் வட்டத்திலும் சார்நிலைக் கருவூலம் அமைக்கப்படும் என்ற அரசின் கொள்கை முடிவின் அடிப்படையில், மரக்காணம் வட்டத்தில் புதிய சார்நிலைக் கருவூலம் அமைக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஊதியம் மற்றும் ஓய்வூதியம் செலுத்தும் முறையை, சென்ற அரசிலேயே அதனை தொழில்நுட்பம் மூலமாக automation செய்து—அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட—இன்றைக்கு அனைத்து தேவைகளுக்கும் வங்கியின் மூலம் ஊதியம் அனுப்பப்பட்டு, SMS மூலமாகத் தகவல் அனுப்பப்பெற்று, அவற்றில் ஏதேனும் பிரச்சினை வந்தால், help desk–ஐ அழைக்கும்வகையிலும், pay slip–ல் எந்த அடிப்படையில்—TDS குறைக்கப்பட்டது போன்ற அனைத்து தகவல்களையும் பொதுமக்கள் online மூலமே பெறுமாறு, phone–லேயே தட்டியவுடன் கிடைக்குமாறு செய்திருக்கிறோம்.

2023 ஜனவரி 11]

அதுமட்டுமல்லாமல், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஆண்டிற்கு ஒரு முறை Life Certificate வழங்குதல், மக்கள் அலுவலகத்திற்குச் செல்லும் தேவை இல்லாமல் அவரவர்கள் இல்லத்திலேயே Postal Service Bank–ஐ ஒப்பந்தம் போட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மக்கள் வீட்டிலிருந்தே Digital Certificate கொடுத்துவிட்டால், அவர்கள் அலுவலகத்திற்கு வரும் வாய்ப்பே எழவில்லை. எனவே, பொதுவாக மக்கள் அரசை தேடிவரத் தேவையில்லாதவகையில், online மூலம் அல்லது அரசே மக்களைத் தேடிச் சென்று சேவை செய்யும் வகையில்தான் நாங்கள் பணிகளை மாற்றியமைத்துக் கொண்டு வருகிறோம். இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும் தகவலின் அடிப்படையில், மற்றொரு முறை பரிசீலனை செய்து, அங்கு சேவைகள் குறைவாக இருந்து, தேவைகள் அதிகமாக இருக்குமேயானால், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன் அவர்கள்.

திரு. பொ. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை விரைவாகச் செயல்படுத்துமாறு தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1 முதல் 4 வரை)@

(இ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் (பட்டியல்கள் 5 முதல் 7 வரை)@@

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

@ 197 முதல் 551 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ 552 முதல் 863 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

முற்பகல் 11–35

3. தகவல் கோரல்

(அ) சென்னை, சாலிகிராமத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பாதுகாப்புப் பணியிலிருந்த பெண் காவலருக்கு பாலியல் தொல்லை உள்ளிட்ட சட்டம்-ஒழுங்கு பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள் அனுமதி தருகிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன். நான் முனைவர்* T.R.B. *ராஜா அவர்களிடம் கேட்டுவிட்டு உங்களுக்கு அனுமதி அளிக்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களுக்குத்தான் நான் முதலில் வாய்ப்பு அளிக்கிறேன், அவர் ஓர் உரிமை மீறல் கொண்டுவந்துள்ளார். அதைக் கேட்டுவிட்டு உங்களுக்கு வாய்ப்பு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்) சரி, பேசுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கு அடியோடு சீர்குலைந்து விட்டது. நாள்தோறும், கொலை, கொள்ளை, திருட்டு, வழிப்பறி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. இல்லை. (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் கேட்டுக்கொண்டு பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் நீங்கள் பேசுவதற்கு* time *தருகிறேன். எல்லா உரிமையும் உங்களுக்கு இருக்கிறது. நான் சொல்வது, ஒரு குற்றச்சாட்டை அரசுமீது சொல்லும்போது, (குறுக்கீடு) கேளுங்கள். என்ன சம்பவம் நடந்திருக்கிறது, நடவடிக்கை இந்த அரசு எடுக்கவில்லை. அதன்மீது நீங்கள் என்னிடம் (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) தயவுசெய்து நான் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) இல்லை, பேசும்போது சட்டம்–ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது என்று சொன்னால், அது என்ன சம்பவம், என்ன அடிப்படையில் சொல்கிறீர்கள் என்று சொன்னால் அது நியாயம். (குறுக்கீடுகள்) சரி, சுருக்கமாக அதை மட்டும் சொல்லுங்கள். நீங்கள் என்ன சம்பவத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லிவிட்டு நிறைவாக அதைச்*

2023 ஜனவரி 11] [பேரவைத் தலைவர்]

சொல்லுங்கள். பொத்தாம்பொதுவாக இல்லாமல், குறிப்பிட்டுச் சொல்லுங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கு அடியோடு சீர்குலைந்துவிட்டது. நாள்தோறும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் உரையில் பேசவிருக்கிறோம். (குறுக்கீடு) இல்லை, வேறு நோக்கம் இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) நீங்களாக முடிவெடுத்துச் சொன்னால் எப்படி? (குறுக்கீடு) நான் கருத்தே சொல்லவில்லையே? நீங்கள் சொன்னதற்கு நான் எதிர் கருத்துச் சொல்லவில்லை, தெரிந்துகொள்ளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் குறிப்பிட்டுச் சொல்லுங்கள். நேற்று இந்தச் சம்பவம் நடந்தது, இந்த சம்பவத்தில் இந்த அரசு பாராமுகமாக இருக்கிறது. அதைச் சொல்லுங்கள் என்கிறேன். (குறுக்கீடு) குறிப்பிட்டுச் சொல்லாமல் பதில் சொல்ல முடியாது இல்லையா? நீங்கள் எனக்கு எந்த ஆதாரமும் தரவில்லை. பத்திரிகை, TV–யை நாம் எல்லோருமே அரசியல்வாதிகள், பார்த்திருப்போம். நேற்று ஒரு பெரிய நிகழ்வு நடந்திருக்கிறது; நேற்று முன்தினம் நடந்திருக்கிறது; 10 நாட்களாக நடந்திருக்கிறது, இந்த அரசு பாராமுகமாக இருந்திருக்கிறது என்றால், நீங்கள் அதைப் பற்றி பேசுங்கள், நீங்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசுங்கள், நான் time தருகிறேன். இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். 100 சதவிகிதம் நான் உங்களை அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) ஆனால், பொத்தாம்பொதுவாக (குறுக்கீடு) இல்லை, கருத்து சொல்லக் கூடாது. (குறுக்கீடு) அதைச் சொல்லுங்கள்.

(திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் கையில் வைத்திருந்த நாளிதழை அவையில் காண்பித்தார்)

அதைச் சொல்லுங்கள் என்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசி விடட்டும்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரைப் பேச அனுமதித்துவிட்டீர்கள். எடுத்த எடுப்பிலேயே ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்கிறார். அவருடைய ஆட்சியிலே என்னென்ன நடைப்பெற்றது சட்டம்–ஒழுங்கு எப்படி இருந்தது என்பதற்கான பட்டியலை வைத்திருக்கிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி) *அவர் பேசட்டும். பேசியதற்குப் பின்னர் நான் பதில் சொல்கிறேன். பேச விடுங்கள்; அவரைப் பேச விடுங்கள். ஆனால், பத்திரிகைச் செய்திகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு பேசினால், அதை நீங்கள் அனுமதிக்கக் கூடாது. ஏனென்றால், நடைமுறையில் ஏற்கெனவே எப்படி இருந்தது என்பது உங்களுக்குத் தெரியும். அதனால், பத்திரிகைச் செய்திகளை வைத்துக்கொண்டு அவர் சொல்லக் கூடாது. ஆதாரங்களுடன் சொல்லட்டும், நானும் ஆதாரங்களுடன் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். அதற்கான பெரிய பட்டியலே என்னிடம். இருக்கிறது* (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்த அவைக்கு, எல்லோருக்கும் சேர்த்து, ஒரு கருத்தைச் சொல்கிறேன். ஆளுநர் அவர்கள் உரையை வாசித்துச் சென்றிருக்கிறார்கள். அதன்மீதுதான் விவாதம் இன்றைக்குத் தொடங்குகிறது. என்ன கருத்து என்றாலும், எதிர்க்கட்சித் தலைவருக்கு வாய்ப்பு வரும்போது நீங்கள் தாராளமாக பேசலாம். இப்போது நீங்கள் எதுவும் பேசவில்லையென்றால், அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டும், இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்கிறது என்று.* Zero Hour*–ல் அது ஒன்றுதான் சொல்ல வேண்டும்.* (குறுக்கீடு) *நீங்கள் ஒட்டுமொத்தமாக, பொத்தாம்பொதுவாகச் சொன்னால்,* (குறுக்கீடு) *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரமில்லா நேரத்தைப் பொறுத்தவரையிலும், ஏதாவது ஒரு* subject*–ஐ சொல்லி,*

2023 ஜனவரி 11] [*திரு. மு.க. ஸ்டாலின்*]

உங்களிடம் அனுமதி பெற்று, அந்த subject*–ல் மட்டும்தான் அவர் பேச வேண்டும். அதுதான் முறை; அதுதான் விதிமுறையில் இருக்கிறது; அதுதான் மரபு. அந்த முறையைக் கடைபிடித்து அவரை பேசச் சொல்லுங்கள். அப்படியில்லையென்றால், அவர் அப்படித்தான் பேசுவார் என்றால் நானும் பேசுவதற்குத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் சொல்லிவிடுகிறேன். எதிர்க்கட்சித் தலைவருக்கு (குறுக்கீடு) ஒரு* second *எனக்கு தாருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் சொல்வதற்கு நான் அனுமதி தருகிறேன். இந்த வார்த்தையை கேட்டுவிட்டு சேர்த்துச் சொல்லுங்கள்.*

Zero Hour *என்ற, நேரமில்லா நேரத்தில் எழுந்து, ஒரு முக்கிய நிகழ்வு, நேற்று, நேற்று முன்தினம் நடந்தது என்றால் அவையின் கவனத்தை ஈர்ப்பதற்காக அதைப் பயன்படுத்துவது. காலையில் திரு. வேலுமணி அவர்கள் என்னிடம் சொன்னார்கள்.* Zero Hour*–ல் ஒரு பிரச்சினை எழுப்புவார்கள் என்று. குறிப்பிட்டு, இப்படி ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கிறது, இதற்கு இந்த அவையினுடைய கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லுங்கள், நான் பதிவு செய்துவிடுகிறேன். அது அல்லாமல், வேறு எதைப் பேசினாலும் பதிவாகாது. பேசுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கருத்துகளைச் சொல்வது எங்களுடைய கடமை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கருத்தைச் சொல்லாதீர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *கருத்தைப் பதிவு செய்யுங்கள், செய்யாமல் விடுங்கள். அதைப்பற்றி எங்களுக்குக் கவலையே இல்லை. (குறுக்கீடுகள்) ஏனென்றால் நீங்கள் பதிவு செய்ய மாட்டீர்கள் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும்.*

[2023 ஜனவரி 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் முதல்வராக இருந்த * ஆளுமை. அதனால்தான் (குறுக்கீடு)* Zero Hour–*ல் என்ன சம்பவம் நடந்ததோ அதுகுறித்து கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். பேச வேண்டும், கருத்து நிறைய சொல்ல வேண்டுமென்றால் உங்கள் உறுப்பினர்கள் பேசுகிறார்கள்; நீங்கள் பேசுங்கள். அவையில் முழுவதும் பதிவாகும்.*

முற்பகல் 11–40

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினந்தோறும் நடைபெறுகின்ற சம்பவங்கள் ஒன்றிரண்டு அல்ல; நாள்தோறும் கொலை, கொள்ளை, திருட்டு, வழிப்பறி, பாலியல் வன்கொடுமை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அண்மையில், சென்னை மாநகரத்தில், விருகம்பாக்கம், சாலிகிராமத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. அந்தப் பொதுக் கூட்டத்தில், அங்கே பெண் காவலர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. அரசு நடவடிக்கை எடுத்துவிட்டது. இல்லை (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் (குறுக்கீடுகள்) இல்லை (குறுக்கீடுகள்) நான் பேசக் கூடாது என்று சொல்லவில்லை (குறுக்கீடுகள்) இது* zero hour–*ல் எழுப்பக்கூடியதா? நீங்கள் முதல்வராக இருந்தவர். இல்லை (குறுக்கீடுகள்) இல்லை இது* zero hour–*ல் எழுப்பக்கூடிய பிரச்சினையா என்று கேட்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை (குறுக்கீடுகள்) சொல்லியாகிவிட்டது இல்லையா? அடுத்ததைச் சொல்லுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்த சம்பவத்தைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்கிறீர்கள். குறிப்பிட்டுச் சொல்கிறேன். அதையும் நீங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்கிறீர்கள். எதைத்தான் பேசுவது? (குறுக்கீடுகள்)*

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.*

2023 ஜனவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. நீங்கள் (குறுக்கீடுகள்) இல்லை நீங்கள் முதல்வராக இருந்த * ஆளுமை. (குறுக்கீடுகள்) நான்கு வருஷம் இருந்த * ஆளுமை. ஒரு சம்பவம் நடந்தது என்பதைச் சொல்லி அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், (குறுக்கீடுகள்) இவ்வளவு பெரிய சம்பவம் நடந்திருக்கிறது (குறுக்கீடுகள்) இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், சரி. (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்கின்ற சம்பவத்தை பத்திரிகை, தொலைக்காட்சி போன்றவற்றில் எல்லோரும் பார்த்திருக்கிறோம் (குறுக்கீடுகள்) சம்பந்தப்பட்டவர்களை உடனே கைது செய்து சிறையில் அடைத்தாகிவிட்டது (குறுக்கீடுகள்) அதை (குறுக்கீடுகள்) இல்லை. இல்லை (குறுக்கீடுகள்) அது நீதிமன்றத்தில் உள்ளது. நீதிமன்றத்தில் உள்ள விவகாரத்தை எப்படிப் பேச முடியும்? (குறுக்கீடுகள்) வழக்கு பதிவு செய்யப்பட்டு, விவகாரம் நீதிமன்றத்தில் உள்ளது. அதை எதற்கு சொல்ல வேண்டும் இங்கே? இல்லை (குறுக்கீடுகள்) இல்லை (குறுக்கீடுகள்) இங்கே அவையில் பேசலாமா? (குறுக்கீடுகள்) இல்லை (குறுக்கீடுகள்) அவையில் எப்படிப் பேசலாம்? (குறுக்கீடுகள்) இல்லை நீங்கள் (குறுக்கீடுகள்) இல்லை நீங்கள் பேசியிருக்கிறீர்கள் இல்லையா? மாண்புமிகு முதல்வர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச விடுங்கள் (குறுக்கீடுகள்) ஏனென்றால் அவர் பேசினால்தான் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, பேசுங்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏனென்றால் அவர் பேசினால்தான் அவர்கள் ஆட்சியில் என்னென்ன நடந்தது என்பது பற்றி நான் சொல்ல முடியும். (குறுக்கீடுகள்) பேச விடுங்கள் (குறுக்கீடுகள்) பேச விடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேசுங்கள்.*

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.*

TRUTH ALONE TRIUMPHS

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏனென்றால் ஆளுங்கட்சியிலிருந்து ** வேதனை அளிக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கூறியது நீக்கப்படுகிறது. நான் உங்கள் நலனுக்காகச் சொல்கிறேன் (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சபாநாயகரை இப்படி பயங்கரமாகக் குற்றஞ்சாட்டிப் பேசுவது சரியல்ல; மரபல்ல; முறையல்ல. எனவே, அதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் சொல்ல விரும்புவது; Zero hour, நேரமில்லா நேரம், அதை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பது எல்லா உறுப்பினர்களுக்கும் தெரியும். இவரும் முதலமைச்சராக இருந்தவர்; இப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறார்; ஏற்கெனவே, பலமுறை சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தவர். எனவே, அவருக்கு நடைமுறை என்னவென்று தெரியும். எனவே, அதை முறையாகப் பின்பற்றினால் அவருக்கு நீங்கள் அனுமதி தர வேண்டும். அதையும் மீறி அவர் பேசினால், அதற்கு விளக்கம் சொல்வதற்கு எனக்கு நீங்கள் அனுமதி தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டுமே வேண்டாம். நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடுகள்) இல்லை (குறுக்கீடுகள்) இல்லை (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர்களையெல்லாம் சேர்த்துத்தான் நான் சொல்கிறேன். ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டதை, முதன்மைச் செய்தியாக கொண்டு வந்தால் (குறுக்கீடுகள்) தினம் இப்படி ஆயிரம் வழக்குகள் பதிவு செய்தது இருக்கும். உங்களுக்கு விரோதமாக இருக்கும்; எனக்கு விரோதமாக இருக்கும்; ஆளுங்கட்சிக்கு விரோதமாக இருக்கும். அதைப் பேசுவதற்கு zero hour–ஐ தேர்ந்தெடுப்பதில்லை. ஓர் அசாதாரண சூழ்நிலை நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. Zero hour–ல் அதுகுறித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன் என்று சொன்னால், அது ஓர் ஆரோக்கியமான விஷயம். (குறுக்கீடுகள்) பிரச்சினை (குறுக்கீடுகள்) இல்லை (குறுக்கீடுகள்) உங்கள் எல்லோருக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன். இதற்குமேல் நான்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஜனவரி 11] [பேரவைத் தலைவர்]

இதற்கு எப்படி விளக்கம் சொல்ல முடியும்? ஒரு சம்பவம் நடக்கிறது (குறுக்கீடுகள்) போலிஸ் நடவடிக்கை எடுத்திருக்கிறது (குறுக்கீடுகள்) கைது செய்திருக்கிறது. (குறுக்கீடுகள்) சிறையில் இருக்கிறார்கள் (குறுக்கீடுகள்) நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது. இதற்குமேல் இதுகுறித்துப் பேசினால் நியாயமா என்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இதிலே என்ன நியாயம்? (குறுக்கீடுகள்) 24 மணிநேரத்தில் (குறுக்கீடுகள்) அவர்கள் ஜெயிலில் இருக்கிறார்கள் (குறுக்கீடுகள்) இல்லை (குறுக்கீடுகள்) இல்லை (குறுக்கீடுகள்) இருக்கிறார்களா என்று தெரியவில்லையென்றால் (குறுக்கீடுகள்) ஆளுநர் உரை பற்றிப் பேசினீர்கள் என்றால், அது நியாயம் (குறுக்கீடுகள்) இதைப்பற்றி பேசினீர்கள் என்றால் அது நியாயம் இல்லை (குறுக்கீடுகள்) நாட்டு மக்களுக்கு முக்கியமான விஷயங்கள் நிறைய இருக்கின்றன (குறுக்கீடுகள்) நிறைய விஷயங்கள் குறித்து உங்கள் உறுப்பினர்களே எழுதித் தந்திருக்கின்றார்கள் (குறுக்கீடுகள்) நிறைய விஷயங்கள் குறித்து உங்கள் கட்சியிலேயிருந்து தந்திருக்கின்றார்கள் (குறுக்கீடுகள்) தென்னை மர பிரச்சினை, வாழை பிரச்சினை, மீன்வளம் (குறுக்கீடுகள்) கோழி பிரச்சினை குறித்தெல்லாம் எழுதித் தந்திருக்கிறார்கள். இது நாட்டு மக்களுடைய பிரச்சினை (குறுக்கீடுகள்) இந்த நாட்டிலே நடந்த சம்பவம் இது. (குறுக்கீடுகள்) வழக்கு பதிவு செய்யப்பட்டு, சிறையில் இருக்கிறார்கள். வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது. அதை இங்கே எடுக்க முடியாது (குறுக்கீடுகள்) தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்) கருத்து இல்லை (குறுக்கீடுகள்) Zero hour*–ல் ஓர் அசாதாரண சூழ்நிலை நடந்தால் அதை அவையின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். (குறுக்கீடுகள்) எனவே, இதுகூட தெரியும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரமில்லா நேரத்தைப் பயன்படுத்தி ஏதேனும் பிரச்சினைகளை அவையில் எழுப்பிட வேண்டும் என்றால், உங்களிடத்திலே தகவல் சொல்லி, உங்கள் அனுமதி பெற்று, அதற்குப் பிறகு பேச வேண்டுமென்பதுதான் சட்டமன்றத்தின் மரபாகக் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. எனவே, அந்த வகையில் அனுமதி ஏதாவது உங்களிடத்திலே கேட்டிருக்கிறாரா? பிரச்சினை பற்றி சொல்லியிருக்கிறாரா? அப்படியிருந்தால் சொல்லச் சொல்லுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை.* Zero hour*–ல் பேசுகிறேன் என்றார்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: என்ன பிரச்சினை என்று சொல்லியிருக்கிறாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்தப் பிரச்சினை என்பதை அவர்கள் particular ஆக என்னிடம் சொல்லவில்லை. இந்தப் பிரச்சினையை அவர்கள் என்னிடம் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) திரு. வேலுமணி அவர்கள், முடிந்துவிட்டது, பேசியாகிவிட்டது உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–45

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: ஏனென்றால், நீங்கள் அது என்னவென்று சொன்னால்தான் முதலமைச்சர் அவர்களோ அல்லது சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களோ அதற்குரிய பதிலை அல்லது விளக்கத்தை தர முடியும். (குறுக்கீடு) அதுதான் முறை; அதுதான் மரபு. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பதிவு செய்தாகிவிட்டது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவர்கள் சொல்லட்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதே அவையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்திருக்கிறார். அவர் பேசிய குறிப்புகளை நீங்கள் எடுத்துப் பாருங்கள். எத்தனை முறை அவர்கள் அனுமதி வாங்கி பேசியிருக்கிறார்கள் என்பதை எடுத்துப் பாருங்கள். வேண்டுமென்றே திட்டமிட்டு, எங்களைப் பேசக் கூடாது என்பதற்காக, சில கருத்துகளை இங்கே பதிவு செய்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) இதுதான் உண்மை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இல்லை. தயவுசெய்து இந்த மன்றத்தில், தவறாக. . .

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது எதிர்க்கட்சி தலைவரின் இருக்கைக்கு பின்னால் அமர்ந்திருக்கக்கூடிய திரு. தனபால் அவர்கள்தான் சபாநாயகராக இருந்தார்கள். அவர்களிடத்தில் முறையாக தகவல் சொல்லி விட்டுத்தான் ஒவ்வொரு முறையும் பேசியிருக்கிறேன். இல்லையென்று சொன்னால், அவரே எழுந்து அதனை மறுக்கட்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஜனவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி, அவர்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் தங்கள் அறைக்கு வந்து, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்* Zero hour*–ல் இந்தப் பிரச்சினையை, சட்டம்–ஒழுங்குப் பிரச்சினைப் பற்றி பேசவிருக்கிறார் என்று* mention *செய்து, சொல்லிவிட்டுத்தான் வந்தேன். அதற்கு முறைப்படி அனுமதி கேட்டிருக்கிறோம். எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, எதிர்க்கட்சித் தலைவராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருந்தபோது, ஒவ்வொரு நாளும் பல பிரச்சினைகளைப் பற்றி அதிகமாகப் பேசியிருக்கிறார்கள். எங்களுடைய முன்னாள் சபாநாயகர் திரு. தனபால் அவர்கள் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு)*

4. உரிமைமீறல் பிரச்சினை

9-1-2023 அன்று மாண்புமிகு ஆளுநர் உரையாற்றுகையில் முக்கிய விருந்தினர்கள் பார்வையாளர்கள் மாடத்திலிருந்த ஆளுநர் அவர்களின் விருந்தினர் பேரவை நடவடிக்கைகளைத் தனது கைபேசியில் பதிவு செய்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி. மாண்புமிகு உறுப்பினர் முனைவர்* T.R.B. *ராஜா அவர்கள். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர்* T.R.B. *ராஜா அவர்கள்.*

முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) அவை உரிமை மீறல் குறித்த ஒரு முன்னறிவிப்பினை 9–1–2023 அன்று (குறுக்கீடுகள்) நான் தங்களிடம் தந்துள்ளேன்.*

9–1–2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் (குறுக்கீடுகள்) பேரவையில் உரையாற்றுகையில், பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கைக்கு எதிரில் (குறுக்கீடுகள்) உள்ள முக்கிய விருந்தினர்கள், பார்வையாளர்கள் மாடத்தில் (குறுக்கீடுகள்) அமர்ந்திருந்த மாண்புமிகு ஆளுநர் அவர்களின் விருந்தினர்களில் ஒருவர் பேரவையின் (குறுக்கீடுகள்)

[முனைவர் T.R.B. ராஜா] [2023 ஜனவரி 11

நடவடிக்கைகளைத் தனது கைபேசியில் ஒளிப்பதிவு செய்து கொண்டிருந்தார். (குறுக்கீடுகள்) அதனைப் பார்த்த நான் உடனடியாக அவைக் காவலர் (குறுக்கீடுகள்) சார்ஜெண்ட் அவர்களிடம் தெரிவித்து, (குறுக்கீடுகள்) நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டேன். (குறுக்கீடுகள்) பேரவையில் கைப்பேசியைப் பயன்படுத்தக் கூடாது என்பது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 87 (X)–ன்கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர். ஓ. பன்னீர்செல்வம் தலைமையிலான உறுப்பினர்கள் தவிர.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசி முடிக்கட்டும், நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசுவதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(அ) சென்னை, சாலிகிராமத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பாதுகாப்புப் பணியிலிருந்த பெண் காவலருக்கு பாலியல் தொல்லை உள்ளிட்ட சட்டம்-ஒழுங்கு பிரச்சினை—*தொடர்ச்சி*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அவர்களைப் பேச அனுமதியுங்கள். என்ன பேசுகிறார் என்பதைக் கேட்போம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, பேசுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரைப் பேச அனுமதியுங்கள். என்ன பேசுகிறார் என்பதைக் கேட்போம். தேவையில்லையென்றால், நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து அதனை நீக்குங்கள். அதன் பின் அதற்குரிய விளக்கத்தை நான் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

2023 ஜனவரி 11] *[திரு. மு.க. ஸ்டாலின்]*

நான் ஓடி ஒளியத் தயாராக இல்லை. நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அவைக் குறிப்பில் இடம் பெறாத வகையில் பேசினால், உங்கள் அனுமதியை வாங்காமல் பல பிரச்சினைகளைப் பற்றிப் பேசினால், அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது அதனை நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள். ஆனால், அதற்கு நான் விளக்கம் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒன்று சொல்லிவிட்டீர்கள். அடுத்ததைப் பற்றி சொல்லுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில், விருகம்பாக்கம், சாலிகிராமத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அந்தப் பொதுக் கூட்டத்திலே (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதைத்தான் நீங்கள் சொல்லிவிட்டீர்களே! (குறுக்கீடு) சரி பேசுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இல்லையே. என்னை முழுவதுமாகச் சொல்ல விடவில்லையே! இடையில் இடையில் ஏன் என்னை மறிக்கிறீர்கள்? அது நடந்த சம்பவம். (குறுக்கீடு) நடந்த சம்பவத்தை அவையின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும் அல்லவா! (குறுக்கீடு) திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் கூட்டத்தில், பாதுகாப்புப் பணியில் பெண் காவலர்கள் ஈடுபட்டிருந்தார்கள். அந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியைச் சேர்ந்த இரண்டு பேர் ஒரு பெண் காவலருக்கு பாலியல் தொல்லை கொடுத்திருக்கின்றார்கள். அந்தப் பெண் காவலர் அழுது கொண்டே அங்கேயிருக்கின்ற காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளார். அந்தப் புகார்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. உடனடியாக அந்தப் பொதுக் கூட்டத்திலிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த முக்கிய பிரமுகர்கள் அதைப் பைசல் செய்ய, சமாதானப்படுத்த முயற்சித்திருக்கின்றார்கள்; அது முடியவில்லை. ஆக, பாலியல் தொல்லைக் கொடுத்தவர்களை, அந்தப் பெண் காவலர் புகார் கொடுத்தும், உடனடியாகக் கைது செய்யவில்லை. இரண்டு நாட்கள் கழித்துத்தான் அவர்கள் கைது செய்யப்படுகின்றனர். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கின்ற பெண் காவலருக்கு இப்படிப்பட்ட கொடுமை*

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [*2023 ஜனவரி 11*

தமிழகத்தில் நடந்தது என்பது கண்டிக்கத்தக்கது. நம்மைப் பாதுகாக்கும் காவலர்களுக்கே பாதுகாப்பு இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது என்பது மிகவும் வேதனையையும், வருத்தத்தையும் அளிக்கின்றது. ஆகவே, ஒரு சாதாரண பெண் இப்படி பாலியல் கொடுமைக்கு ஆளாகியிருந்தால் (குறுக்கீடு) இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா (குறுக்கீடு) அல்லது காவல் துறைதான் நடவடிக்கை எடுக்குமா என்ற அச்சத்தில் மக்கள் வாழ்கின்றார்கள். (குறுக்கீடு) அதோடு தமிழகத்தில், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு) சரி உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றார். (குறுக்கீடு) சரி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: Zero Hour–ல் ஒரு subject தான் பேச வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் பல பிரச்சினைகளைப் பற்றிப் பேச முடியாது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமில்லையா, நீங்கள் இப்படிச் செய்வது நியாயமா? (குறுக்கீடுகள்) இல்லை. நீங்கள் வேறு நோக்கத்தில் இருக்கிறீர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருகம்பாக்கத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைப் பற்றி (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். (குறுக்கீடு) அதற்குரிய விளக்கத்தைச் சொல்ல வேண்டிய பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் வேறு நோக்கத்தோடு வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கேள்வி கேட்டு அதற்குப் பதில் சொல்ல விடவில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

2023 ஜனவரி 11] [பேரவைத் தலைவர்]

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

(திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பி. அய்யப்பன், திரு. ஆர். வைத்திலிங்கம் மற்றும் திரு. மு. ஜெகன் மூர்த்தி ஆகியோர் அவையில் அமர்ந்திருந்தனர்.)

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: நீங்கள் ஓடி ஒளியக் கூடாது. அவையில் இருந்து பதிலைக் கேட்டிருக்க வேண்டும். குற்றச்சாட்டைச் சொல்லிவிட்டு, அவையில் இருந்து அதற்கான பதிலைக் கேட்டிருக்க வேண்டும். அதுதான் உள்ளபடியே நியாயமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அவையிலிருந்து வெளியே போவதற்காக ஒரு நொண்டிச் சாக்கை சொல்லிவிட்டுப் போகிறீர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: அதனால்தான், ஓடி ஒளிய நான் தயாராக இல்லை என்று சொன்னேன். நான் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன் என்றும் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 31–12–2022 அன்று இரவு 10:45 மணிக்கு பெண் காவலர் ஒருவர் R5 விருகம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, உடனே FIR போடப்பட்டிருக்கிறது. இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 353, 354 மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம், பிரிவு 4–ன்கீழும் பதிவு செய்யப்பட்ட அந்த வழக்கு, புலன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திலிருந்த காவலர்கள் மற்றும் சாட்சியங்களை விசாரணை செய்து, CCTV காட்சிகளும் கைப்பற்றப்பட்டன. இதனைத் தொடர்ந்து அச்சம்பவத்தில் ஈடுபட்ட பிரவீன்குமார் மற்றும் ஏகாம்பரம் ஆகியோர் 3–1–2023 அன்று இரவு 10:00 மணிக்கு கைது செய்யப்பட்டு, அடுத்த நாள் 4–1–2023 அன்று காலையே நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர். புகார் கொடுத்த அன்றே FIR பதிவு செய்து, புலன் விசாரணை நடத்தி, 72 மணி நேரத்தில் கைது செய்து, எந்த வழக்கிலாவது அ.தி.மு.க. ஆட்சியில் நடவடிக்கை எடுத்ததுண்டா என்ற அந்தக் கேள்வியைத்தான்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஜனவரி 11

நான் கேட்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) SP அந்தஸ்த்தில் உள்ள பெண் போலீஸ் அதிகாரிகள் இருவரையே இதுபோன்ற புகாரில் அலைக்கழித்த ஆட்சிதானே அ.தி.மு.க. ஆட்சி! (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்த அரசைப் பொறுத்தமட்டில், பெண்களுக்கு எதிராக, பெண் காவலர்களுக்கு எதிராக இதுபோன்ற குற்றங்களில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எதிர்க்கட்சித் தலைவர் தொடக்கத்திலேயே ஒட்டுமொத்தமாக தினந்தோறும் நடந்துகொண்டிருக்கிறது; தினந்தோறும் வழிப்பறி, கொலை, கொள்ளை எல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று சொன்னார். நான் அவர்களுடைய இலட்சணத்தை இப்போது சொல்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, இமானுவேல் சேகரன் நினைவு விழாவில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் மரணம்; யாருடைய ஆட்சியில்? தேவர் ஜெயந்தி விழாவில் மதுரையில் வெடிகுண்டு வீச்சு; 4 பேர் மரணம்; சிவகங்கை மாவட்டம், திருப்பாச்சி காவல் உதவி ஆய்வாளர் 2012 இல் ஆல்வின் சுதன் படுகொலை செய்யப்பட்டது; கன்னியாகுமரி மாவட்டம், காவல் உதவி ஆய்வாளர் திரு. வில்சன் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டது; தூத்துக்குடி ஸ்டெர்லைட் துப்பாக்கிச் சூட்டில் 13 அப்பாவிகள் மரணம்; யாருடைய ஆட்சியில்? அ.தி.மு.க. ஆட்சியில்தானே!

கூடங்குளத்தில் போராட்டம் நடத்திய மக்கள்மீது காவல் துறை தடியடி நடத்தியது; பொதுமக்கள் IG–யை தரையில் இழுத்துச் சென்றது; அவருடைய கைத் துப்பாக்கி காணாமல்போனது; அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற பொள்ளாச்சி சம்பவம் ஒன்று போதாதா! (மேசையைத் தட்டும் ஒலி) வன்னியர் சங்க மாநாட்டைத் தொடர்ந்து எழுந்த சட்டம்–ஒழுங்குப் பிரச்சினையில் 100 வாகனங்களை எரித்தது; 1,000 வாகனங்களை உடைத்தது அவர்கள் ஆட்சியில்தான். ஜல்லிக்கட்டு அனுமதிக்காகப் போராட்டம் நடத்தியவர்கள்மீது தடியடி நடத்தி, பொதுமக்களின் வாகனங்களைக் காவல் துறையினரே தீயிட்டுக் கொளுத்தியது யாருடைய ஆட்சியில்? அ.தி.மு.க. ஆட்சியில்தான். சாத்தான்குளத்தில் lockup மரணம்; காவல் நிலையத்திலேயே தந்தை, மகன் அடித்துக் கொலை

2023 ஜனவரி 11] [திரு. மு.க. ஸ்டாலின்]

செய்யப்பட்ட விவகாரம்; இதுபோன்ற சம்பவங்களெல்லாம் இந்த ஆட்சியில் இல்லை; அ.தி.மு.க. ஆட்சியில்தான்.

இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், யாராக இருந்தாலும் அரசியல் பார்க்காமல், கட்சி பார்க்காமல் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கக்கூடிய ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) *எனவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கின்ற குற்றச்சாட்டுக்கு இதையே பதிலாகச் சொல்லி நான் அமர்கிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எதிர்க்கட்சி கொறடா அவர்கள் காலையில் என்னுடைய அறைக்கு வந்து,* Zero Hour*–ல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சட்டம்–ஒழுங்கு பிரச்சினை ஒன்றைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசவிருக்கிறார்கள் என்று சொன்னதற்கு* zero hour*–ல் அதை நீங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவாருங்கள் என்று சொல்லியனுப்பியிருந்தேன்.* Zero Hour*–ஐப் பற்றி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். சமீபத்தில் நடந்த ஓர் அசாதாரண சூழ்நிலை அல்லது சம்பவத்தைப் பற்றி இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதுதான் மரபு. ஆனால், அதைத் தாண்டி, பல தினங்களுக்கு முன்னால் நடைபெற்ற ஒரு சம்பவம்; அதிலும் காவல் துறை உடனடியாக நடவடிக்கை எடுத்து, சம்பந்தப்பட்டவர் கைது செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த நிகழ்வுகள் நீதிமன்றம் வரை சென்றிருக்கும் என்று நான் நினைக்கின்றேன். அவர்கள் அப்படிப்பட்ட சம்பவத்தைப் பற்றிப் பேசுகிறார்கள் என்றால் எனக்கு சந்தேகமாக இருக்கின்றது. எதற்காக இதைப் பற்றி இவ்வளவு அவசரமாகப் பேசிவிட்டுச் செல்ல வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. ஏதோ ஒரு காரணத்தால் அவர்கள் அவையில் இருப்பதற்கு இஷ்டமில்லாமல் சென்றிருக்கிறார்களா என்றுகூட எனக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகின்றது. ஆகவே, இதை ஒரு முன்னுதாரணமாக எடுத்துக்கொள்வது சரியான முறை இல்லை என்று நான் எண்ணுகின்றேன்.*

முற்பகல் 11–55

உங்களுக்கே தெரியும்; ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்,—"நான்கூட—என்னிடம்

இப்படிப்பட்ட சம்பவங்கள் குறித்து பேசுவதாகச் சொல்லவில்லை உட்காருங்கள்" என்று சொன்னபோது, 'தாராளமாக பேசுங்கள்' என்று சொல்லி, நம்முடைய முதல்வர் அவர்கள் பெருந்தன்மையுடன் அனுமதித்திருக்கிறார்கள். 'அவர்கள் முழுமையாகப் பேசி முடித்தபின்பு நான் பதில் சொல்கிறேன்' என்ற பிறகும், பதில் சொல்லும்வரைகூட காத்திருக்காமல் செல்வது, உண்மையிலேயே இது சபை மரபுதானா, எந்த அளவில் அவர்கள் நடந்துகொள்கின்றார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை; புரியவில்லை. இந்தச் சட்டமன்றத்தில் அமர்ந்து பணியாற்றுவதில் அவர்களுக்கு என்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்று எனக்குத் தெரியவில்லை. மக்கள் பிரச்சினையைப் பேசுவதற்கு இந்த அவையைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கு மாறாக இப்படிப்பட்ட நிகழ்வுகளை zero hour-ல் எடுத்துப் பேசுவது கேலிக்கூத்தாகிவிடும். என்றோ நடந்த சம்பவங்களை எதற்காகவோ பேசிவிட்டு செல்வது, மரபை மீறிய செயலாகத்தான் நான் கருதுகிறேன்.

ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு அதற்குப் பதிலுக்குக்கூட— மாண்புமிகு முதல்வர் அவர்கள் தைரியமாக 'நான் பதில் சொல்கிறேன்' என்று பதிலும் சொல்கின்றார்கள்.—கேட்காமல் இருப்பது உண்மையிலேயே வருத்தம் அளிக்கிறது. ஆகவே, இதுபோன்ற சம்பவங்கள் இனிமேல் நடைபெறாமல் இருப்பதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

4. உரிமைமீறல் பிரச்சினை—*தொடர்ச்சி*

9-1-2023 அன்று மாண்புமிகு ஆளுநர் உரையாற்றுகையில் முக்கிய விருந்தினர்கள் பார்வையாளர்கள் மாடத்திலிருந்த ஆளுநர் அவர்களின் விருந்தினர் பேரவை நடவடிக்கைகளைத் தனது கைபேசியில் பதிவு செய்தது—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா அவர்கள்.*

முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 9 ஆம் தேதி அன்று அவை உரிமைமீறல் குறித்த ஒரு முன்னறிவிப்பினை நான் உங்களுக்குத் தந்துள்ளேன்.*

2023 ஜனவரி 11] [முனைவர் T.R.B. ராஜா]

9–1–2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் பேரவையில் உரையாற்றுகையில், பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கைக்கு எதிரேயுள்ள முக்கிய விருந்தினர்கள் பார்வையாளர்கள் மாடத்தில் அமர்ந்திருந்த மாண்புமிகு ஆளுநர் அவர்களின் விருந்தினர்களில் ஒருவர், பேரவை நடவடிக்கைகளைத் தனது கைபேசியில் ஒளிப்பதிவு செய்துகொண்டிருந்தார். அதனைப் பார்த்த நான், உடனடியாக அவைக் காவலர் சார்ஜெண்ட் அவர்களிடம் இதைத் தெரிவித்து, அவர்மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி கேட்டுக்கொண்டிருந்தேன்.

பேரவையில் கைபேசியை யாரும் பயன்படுத்தக் கூடாது என்பது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி *87* (X)–ல் வகை செய்யப்பட்டுள்ளது. இது எனக்கு மிக நன்றாகத் தெரியும்; உங்களுக்கும் நன்றாகவே தெரியும். ஆகவே, *9–1–2023* ஆம் நாளிட்ட என்னால் வழங்கப்பட்டுள்ள முன்னறிவிப்பினை அவை உரிமை மீறல் குழுவிற்கு அனுப்பி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய பிரச்சினையை மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது அவை உரிமைமீறல் இருப்பதாகத் தெரிவதால், பேரவை விதி *226*–ன்கீழ் ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.

5. 9–1–2023 அன்று மாண்புமிகு ஆளுநர் உரையாற்றுகையில் பேரவையில் நடைபெற்ற நிகழ்வுகள் மற்றும் பேரவை விதி 92 (vii)–க்கு உட்பட்டு உறுப்பினர்கள் உரையாற்றுதல் குறித்து பேரவைத் தலைவர் அவர்களின் தீர்ப்புரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *9–1–2023* அன்று பேரவையில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையின்போது நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து என்னுடைய தீர்ப்புரையை வழங்க விரும்புகிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 17–ல், "அரசமைப்புச் சட்டத்தின் 175 அல்லது 176–வது பிரிவின்படி, அவை கூடியிருக்கும்போது, ஆளுநர் உரை நிகழ்த்துகையிலோ, நிகழ்த்துவதற்கு முன்னரோ, பின்னரோ உறுப்பினர் எவரும் தமது பேச்சினாலோ, ஒழுங்கு பிரச்சினையினாலோ, வேறு எவ்வகையிலோ தடுக்கவோ, குறுக்கீடு செய்யவோ கூடாது. அவ்வாறு தடங்கலோ, குறுக்கீடோ செய்வது பேரவையின் ஒழுங்கிற்குப் பெருத்த ஊறு விளைவிப்பதாகக் கருதப்பெற்று, அடுத்து நிகழும் கூட்டத்தில் பேரவைத் தலைவரால் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பெறும்" என உள்ளது.

விதிகளில் இடம் இல்லாதபோதிலும், கடந்த காலங்களில் நடைபெற்ற, ஏற்றுக்கொள்ளப்பட்ட நிகழ்வுகளின்படி எதிர்க்கட்சியிலே இருக்கின்ற சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் அல்லது கட்சிக்கு ஒருவர் என்கிற விதத்தில் தங்களுடைய நிலைப்பாட்டை முன்வைத்து, சிறிது நேரம் இருக்கையில் இருந்தவாறே தங்களது கருத்துகளை எடுத்து வைத்து, வெளிநடப்பு செய்வது மரபாக, ஜனநாயக அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதை இப்பேரவையும் ஏற்றுக்கொள்ளும் என உறுதியாக நம்புகிறேன்.

9–1–2023 அன்றுகூட இந்திய தேசிய காங்கிரஸ் சட்டமன்ற கட்சி தலைவர் திரு. கு. செல்வபெருந்தகை உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. ப. அப்துல் சமது, திரு. தி. வேல்முருகன் உள்ளிட்ட உறுப்பினர்கள் தங்களுடைய இருக்கையிலிருந்து வந்து, இங்கே பேரவைத் தலைவர் இருக்கைக்கு முன்னர் நின்றுகொண்டு, வேகமாகக் கோஷமிட்டனர். மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையாற்றுகையில், உறுப்பினர்கள் தங்களுடைய இருக்கைகளைவிட்டு மாண்புமிகு ஆளுநர் இருக்கைக்கு முன்வந்து தொடர்ந்து கோஷமிட்டுக்கொண்டு இருந்தது தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

கோஷமிட்ட உறுப்பினர்களின் நியாயமான உணர்வுகளை உள்வாங்கிக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில், பேரவையின் மாண்பு தழைத்தோங்கி பெருமைபடத்தக்க வகையில், அனைத்து பேரவைகளுக்கும் முன்னுதாரணமாக

திகழும்வண்ணம் இதுபோன்ற நிகழ்வுகள் இனி வருங்காலங்களில் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் நான் தீர்ப்பளிக்கின்றேன்.

நண்பகல் 12–00

இதையொட்டி (குறுக்கீடு) ஒரேயொரு நிமிடம் இருங்கள். இதுபோல் பல ஊடகங்கள், பத்திரிகைகள் உள்ளிட்ட அனைத்துமே ஏன் இதை அனுமதித்தார்கள் என்றுகூட சொல்லலாம். இதுதான் பேரவை விதி எண் 17–ல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆளுநருக்கு மட்டும்தான் மைக் இருக்கும். மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையாற்றும்போது, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கோ, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கோ நிச்சயமாக யாருக்கும் மைக் இருக்காது. அவர்கள் நாகரிகம் கருதி, சிலர் சில பிரச்சினைகளை எழுப்புவது வழக்கம்தான். ஒரு நிமிடம், இரண்டு நிமிடங்கள், 5 நிமிடங்களுக்குள் அவர்கள் அங்கிருந்து கடந்து சென்ற பின்பு, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையைத் தொடங்குவார்கள். இதுபோல பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. உதாரணத்திற்குச் சொன்னால், 18–1–1998–ல், அப்போது ஆளுநராக இருந்த செல்வி பாத்திமா பீவி அவர்கள் உரையாற்றுகையில், எதிர்க்கட்சி வரிசையிலிருந்த உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் எழுந்துநின்று பேசி, அவர் சென்றுவிட்டார். அதன் பின்பு இருந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி, திரு. சுந்தரம் போன்றோர் இருக்கையின்மீது ஏறி நின்றுகொண்டு, வாயில் கருப்புத் துணியைக் கட்டிக்கொண்டு, பதாகையைக் காட்டி, எவ்வளவு பெரிய குழப்பம் செய்தார்கள் என்பதை நாடறியும்; பலபேர் அதை மறந்தும்கூட இருக்கலாம். அதுமட்டுமல்ல, 7–1–2011 அன்று இதே எதிர்க்கட்சி வரிசையிலிருந்த பல பேர் காய்கறி மாலையோடு பேரவைக்கு வந்து, அப்போதைய ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் உரையாற்றிக் கொண்டிருந்தபோது எப்படிப்பட்ட தர்மசங்கடமான நிலைகளை எல்லாம் உருவாக்கி, ஆளுநரை பேசவிடாமல் தடுத்ததோடு, ஆளுநர் முன்பு அமர்ந்து தர்ணா செய்கின்ற நிலை ஏற்பட்டபோதுதான், அன்றைய பேரவைத் தலைவர் அவர்கள், அவர்களை வெளியேற்றும்படி, அதாவது, பேரவை விதி 286–ல், விதிகளில் குறிப்பிடப்படாத விடுபெற்ற ஏதாவது நிகழ்வுகள் நடந்தால், பேரவைத் தலைவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் அவ்வாறு நடைபெற்றது. ஆகவே, இதை யாரும் மறந்துவிடக்

கூடாது. ஆகவே, இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில்தான் நாங்கள் அமைதியாக இருந்தால், பேரவை விதி 17–ன்படி அடுத்த நாள் நடைபெறுகின்ற கூட்டத்தொடரில், அது நடவடிக்கை எடுக்க வேண்டியதாக இருக்க வேண்டுமானால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

நேற்று முன்தினம் நடந்த சம்பவம், தங்களது உள்ளத்திலிருந்த கருத்துகளை அவர்கள் பேசிவிட்டுச் சென்றார்களே தவிர, எந்தவிதமான அசம்பாவிதமோ அல்லது தரையில் அமர்ந்து தர்ணாவோ அல்லது இருக்கையின்மேல் நின்றுகொண்டு அல்லது ஏதேனும் அப்படிப்பட்ட தவறான நிகழ்வுகளிலோ அவர்கள் கலந்துகொள்ளவில்லை என்ற காரணத்தினால்தான் என்னுடைய தீர்ப்பை இந்தளவில் நான் நிறுத்திக்கொள்ள விரும்புகின்றேன்.

ஆகவே, ஒருபோதும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் பேசும்போது, அவர்களுக்கு களங்கம் ஏற்படுத்துகின்ற வகையில் இந்த அவை நடக்காது. அதற்கோர் உதாரணத்தைச் சொல்லி நான் நிறைவு செய்கிறேன். விதி 92 (vii)–ல் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. குடியரசுத் தலைவர், ஆளுநர், மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதியரசர்களுடைய தீர்ப்புகள் குறித்தோ அல்லது தம்முடைய பேச்சுக்கு வலு சேர்க்கும்வண்ணம் அவர்களுடைய பெயரை பயன்படுத்துகின்றவண்ணமோ, அதைக் குறிப்பிட்டுப் பேசக் கூடாது என்று மிகத் தெளிவாக அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த விதியைக்கூட 1995 ஆம் ஆண்டு அப்போது ஆட்சியிலிருந்தவர்கள் ஏப்ரல் மாதம் 19 ஆம் தேதியும், ஏப்ரல் மாதம் 26 ஆம் தேதியும் என இரண்டு முறை பேரவை விதி 287–ஐ பயன்படுத்தி, 92 (vii) என்ற விதியைத் தளர்த்துவதற்காக ஒரு தீர்மானம் கொண்டுவந்து, அவையில் இருந்தவர்களில் நான்கில் மூன்று பங்கினர் அதை ஒத்துக்கொண்ட பிறகு, அதை ஏற்றுக்கொண்டு 92 (vii) என்ற விதியைத் தளர்த்தினார்கள். அவ்வாறு தளர்த்தி, அப்போதிருந்த ஆளுநர் திரு. சென்னா ரெட்டி அவர்களுக்கெதிரான கருத்துகள் அவைக் குறிப்பிலே பதிவு செய்யப்பட்டு இருக்கின்றன. அதை மீண்டும் சொல்ல நான் விரும்பவில்லை.

ஆனால், அது ஒரு தவறான முன்னுதாரணம் என்பதை அதற்குப்பின் ஆட்சிக்கு வந்த மாண்புமிகு முதல்வர் மறைந்த தலைவர் கலைஞர் அவர்கள், 1996 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்து, 1999 ஆம் ஆண்டு அவர் ஆட்சிப் பொறுப்பிலிருந்தபோது,

அதாவது, மே மாதம் 19 ஆம் தேதி என்று நான் எண்ணுகின்றேன். மே மாதம் 19 ஆம் தேதியன்று அன்றைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 'ஒருபோதும் குடியரசுத் தலைவர், ஆளுநர், நீதியரசர்களுக்கு விரோதமாக இந்த அவை பேசக் கூடாது, discuss செய்யக் கூடாது' என்பதை உறுதிபடுத்தும்வண்ணமாக, 92 (vii)–ஐ தளர்த்துவதற்காக விதி 287–ஐ பயன்படுத்தக் கூடாது என்று சொல்லி 'ஒருபோதும் அதைத் தளர்த்தக் கூடாது' என்ற விதியைக் கொண்டுவந்து, இந்த அவையினுடைய மாண்பைக் காக்கும் வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) கவர்னருக்கு எதிராகப் பேசுவதைத் தடுத்து நிறுத்தி, இன்றளவும் அது நடைமுறையில் இருக்கிறது. அவ்வாறு சட்டமாக மாற்றித் தந்திருக்கிறார் மறைந்த மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள்.

பிற்பகல் 12–05

அந்தவகையில்தான் கடந்த 9 ஆம் தேதி மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையாற்றியபோது, அவர் பல விஷயங்களை வாசிக்காமல் கடந்து சென்றார்கள். பல விஷயங்களைப் புதிதாக அதனுள்ளே சேர்த்தார்கள். மிகத் தெளிவாக இந்திய அரசமைப்புச் சட்டம் 175, 176–ன்படி, இந்த அவையில் உரையாற்ற ஆளுநருக்கு உரிமை கொடுத்திருக்கின்றது. என்ன உரிமை கொடுத்திருக்கிறதென்றால், இந்திய அரசமைப்புச் சட்டம் 163(1)–ன்படி அரசு, அதாவது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆட்சியில் அமர்ந்திருக்கின்ற ஓர் அரசு, பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட ஓர் அரசின் அமைச்சரவை, எவ்வாறு ஆளுநர் உரை நிகழ்த்த வேண்டுமென்று உரை தயார் செய்து, அதை அமைச்சரவை ஒப்புதல் செய்து, மாண்புமிகு ஆளுநருக்கு அனுப்பி, அதற்கு அவர்கள் இசைவு தெரிவித்தபின்பு, எழுத்துப்பூர்வமாக ஒப்புதல் அளித்து அவர்கள் கையொப்பமிட்டு கொடுத்தபின்பு, அந்த உரையை ஆளுநர் உரையாற்ற வரும்போது, இந்தப் பேரவை விதிகளுக்கோ, மாண்புக்கோ சற்றும் குறைபடாமல், அனைவரும் அவரை எழுந்து நின்று வரவேற்று, பேரவைத் தலைவர் மாடத்திற்கே சென்று, வரவேற்று, அழைத்து வந்து, இந்த அவையிலே அமர வைத்து, அவரே பேசுகிறார். என்னுடைய இருக்கையில் அவர்தான் இருப்பார். இங்கே அந்த அளவில் அவருக்கு அந்த மரியாதை கொடுத்து, அவரை இங்கே பேச வைக்கும்போது அவர்கள் உங்களுக்கே தெரியும்,—நான் மாண்புமிகு கவர்னரைக்

குறைவாகச் சொல்லவில்லை. அவர் பேசியதில் பல குளறுபடிகள் இருந்ததை நாம் எல்லோருமே அறிந்தோம். எதற்காக அப்படிச் செய்தார்களென்று தெரியவில்லை. ஆளுநர், உரையை வாசிப்பதற்கு மட்டும்தான் அவருக்கு அனுமதி, கடமை, பொறுப்பே தவிர, அதில் உள்ளே இருக்கின்ற கருத்துகளுக்கு அமைச்சரவையும், மாண்புமிகு முதலமைச்சரும்தான் பொறுப்பே தவிர, ஆளுநருக்கு அதில் எந்தப் பொறுப்பும் இல்லை. மாண்புமிகு கவர்னர் வாசித்து அளிப்பதோடு முடிந்துவிட்டது அவருடைய கடமை. எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி எந்தக் கட்சியாக இருந்தாலும் அதனுடைய அருமை பெருமைகளையோ அல்லது அதனுடைய எதிர்க்கருத்து சொல்ல வேண்டுமென்றால், அரசைத்தான் சொல்வார்களேதவிர, ஆளுநர் செய்தார் என்று இதுவரையில் கேட்டதில்லை. அப்படி ஒரு மரபும் இல்லை. நியமிக்கப்பட்ட ஒரு கவர்னர்தான் அவர். ஆகவே, அந்த அளவில் அவர் அதைக் கடந்து சென்றதால் ஓர் அசாதாரண சூழல் ஏற்படுகிறது. அந்த அசாதாரண சூழலில்தான் அவர் பேசி அமர்ந்த பின்பு, பெரும் கண்ணியத்தோடு,— அதற்கிடையில் பல பத்திகள் வாசிக்கப்படவில்லை. பல பத்திகள் புதிதாகப் புகுத்தப்பட்டபோதுகூட பல பேர்கள் சிறு சலசலப்பு வந்தபோதுகூட, மாண்புமிகு முதல்வர் திரும்பிப் பார்த்து அனைவரையும் அமைதிப்படுத்தி, இந்தச் சபையின் மாண்புக்கு ஒரு சிறு இடையூறுகூட வரக் கூடாது என்பதற்காக அமைதி காத்து, அதன்பின் பேரவை விதி 17—ஐத் தளர்த்த, என்னிடம் ஓர் அனுமதியைக் கேட்டார்—அமைச்சரவைகூடி, முடிவெடுத்து, மாண்புமிகு ஆளுநருக்கு அனுப்பி, அவர் ஒப்புக்கொண்ட பதிவுகளை அச்சிடப்பட்ட புத்தகமாகவும், கணினியிலும் ஆங்கிலத்திலும், தமிழிலும் வழங்குகின்றோம். விதியைத் தளர்த்தவும், அவற்றைப் பதிவு செய்வதற்கும் எனக்கு அனுமதி தாருங்கள் என்று மிகப் பெரிய கண்ணியத்தோடு அந்த வாய்ப்பைக் கேட்டார்கள். நான் அந்த வாய்ப்பைக் கொடுத்தேன். இந்தப் பேரவையில் அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, இன்னும் சொல்லப்போனால், அவையில் இருந்தவர்கள் அனைவரும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டபின்புதான், அவைக் குறிப்புகளில் இடம் பெற்றிருக்கிறது. பல பேர் கேட்கலாம், என்ன அவசரமென்று. மிக மதிநுட்பத்தோடு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த இடத்தில், அந்த நிமிடத்தில் அந்த முடிவெடுக்கவில்லையென்றால், (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து ஊடகங்களும் அனைத்து பத்திரிகைகளும் உலகம் முழுமைக்கும் அவற்றைப் பரப்பிவிடுவார்கள்; அதை

வெளிப்படுத்திவிடுவார்கள். ஆகவேதான், அப்படி ஒரு நிலை ஏற்பட்டது. அப்படி ஓர் அசாதாரண சூழலை உருவாக்கியது இந்த அரசல்ல; இந்த அவை அல்ல; மாண்புமிகு ஆளுநர் அவர்கள் பேசும்போது அவ்வாறு ஒரு சூழல் ஏற்பட்டுவிட்டது.

ஆனால், மதிநுட்பத்தோடு அதை மிகத் துல்லியமாக, அந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தீர்மானம் கொண்டு வந்த காரணத்தால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டமன்றத்தினுடைய மாண்பு காப்பாற்றப்பட்டுவிட்டது என்று மட்டும் நான் சொல்ல மாட்டேன்; இந்தியாவிலுள்ள அனைத்து மாநில அரசுகளுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) ஆளுநர்களுடைய உரிமை எது, எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்தச் சட்டமன்றம் நடந்து முடிந்த ஆளுநர் உரையிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானம்தான் இன்று இந்திய அளவில் பேசப்படுகின்ற மிக முக்கியமான ஒரு பொருளாக இருக்கின்றது என்பதையும் நாம் யாரும் மறந்துவிட முடியாது.

பிற்பகல் 12–10

மறைந்த தலைவர் கலைஞர் அவர்கள், இந்தியாவில் கோட்டையிலே கொடி ஏற்றுவது ஆளுநர் என்ற நிலையை மாற்றி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுதான் ஏற்ற வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) சொல்லி, இந்தியாவிற்கு எவ்வாறு பெருமை சேர்த்து, இன்றைக்கும் சுதந்திர தினத்தன்று கொடியேற்றுகின்றோமோ, அதே நிலையைத்தான், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தியா முழுவதும் இருக்கின்ற அனைத்து சட்டமன்றங்களிலும் ஆளுநர் எந்த நிலையில் இருக்க வேண்டுமென்பதை வரையறுத்துக் காட்டி, இந்தத் தமிழகத்தினுடைய சட்டமன்ற மாண்பு மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலச் சட்டமன்ற மாண்பையும் மிகச் சிறப்பாகக் காப்பாற்றிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பேரவை நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது.

இந்த அளவில், இப்போது வெளிநடப்புச் செய்திருக்கின்றவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். தயவுசெய்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், உண்மை நிலையை நீங்கள் புரிந்து, தெரிந்து, மக்களுக்காகப்

பணியாற்றுவதற்கு அவையிலே அமர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல்தான், இப்போது இந்தத் தீர்மானத்தின்மீது பேச வருகின்றவர்களும், மாண்புமிகு மறைந்த தலைவர் கலைஞர் அவர்களால் தெரிவித்தபடி, பேரவை விதி 92 (vii)*–க்கு மாறாகப் பேசக் கூடாது என்பதை நீங்களும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான், நான் இந்த அளவில் எல்லோருடைய கவனத்திற்கும் எடுத்துச் சொல்கின்றேன். தயவுசெய்து, நடந்தது நடந்தவையாக இருக்கட்டும். நடந்ததை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேரவைக்கு மட்டுமல்ல, தமிழ்நாடே இன்றைக்கு ஒட்டுமொத்தமாக, அவருடைய துணிவை பாராட்டிக் கொண்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொன்னால், இதுதான் அரசியல் கட்சியினுடைய, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய உரிமை என்பதையும், அதை நிலைநாட்டித் தந்திருக்கிறார்கள் என்பதையும் மீண்டும் ஒரு முறை நான் பாராட்டிக் கொண்டு, வருகை தந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பேசும்போது, மாண்புமிகு ஆளுநர் அவர்களைப் பற்றியோ அல்லது வேறு யாரைப் பற்றியோ, பேரவை விதி 92* (vii)*–க்குட்பட்டு பேச வேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) Digital Survey என்ற பெயரில் தமிழக எல்லைப் பகுதிகளை கேரள அரசு அளந்து கொண்டிருப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்போது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஏதோ ஒரு பொருள் குறித்து பேசுவதற்கு என்னிடம் வாய்ப்புக் கேட்டார்கள்; கேளுங்கள்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சகோதர மாநிலமான கேரளாவில் இன்றைக்கு பொறுப்பேற்றிருக்கின்ற அரசு,* digital survey *என்ற பெயரில் நமது எல்லைப் பகுதிகளை அளந்து கொண்டிருப்பதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்து கொண்டேயிருக்கின்றன. அதுகுறித்து அரசுக்குத் தெரியுமா; ஆராயுமா? நம்முடைய*

2023 ஜனவரி 11] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

எல்லைப் பகுதிகளான, நம்முடைய தமிழக பகுதிகளைக் காப்பதற்கு தமிழ்நாடு அரசு என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். பதில் இருந்தால் சொல்லுங்கள்; இல்லையென்றால், தெளிவாகத் தெரிந்துகொண்டு சொல்லுங்கள்.

***மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கூறியதைப்போல, நம்முடைய எல்லைப் பகுதிகளிலே வந்து அவர்கள் அளக்கவில்லை; அவர்களுடைய பகுதிகளில் அளந்து கொண்டிருக்கின்றனர். நம்முடைய எல்லைப் பகுதிகளில் வந்து அளக்க வரும்போது, நம்மிடம் அனுமதி வாங்கித்தான் அளக்க வேண்டுமென்று சொல்லி, கேரள அரசாங்கத்திற்கு நாங்கள் கடிதமும் எழுதியிருக்கிறோம்; border–ல் இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் நாங்கள் எச்சரிக்கை செய்திருக்கிறோம். பத்திரிகைகளின் வாயிலாக வந்த செய்திகளைப்போல, நம்முடைய border–ல், உதாரணத்திற்கு தேனி பகுதியைத்தான் நீங்கள் குறிப்பிட்டுச் சொல்கிறீர்கள் என்று நினைக்கிறேன். தேனி பகுதியிலே, நம்முடைய பகுதிகளிலே வந்து அவர்கள் digital survey செய்யவில்லை. அவர்கள், அவர்களுடைய பகுதிகளிலே செய்து கொண்டிருக்கின்றனர். நம்முடைய அரசாங்கம், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பத்திரிகைச் செய்தி வந்தவுடனேயே, எங்களை அழைத்து, அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் மிகுந்த எச்சரிக்கையோடு, விழிப்போடு, தேனி மாவட்டத்தை மட்டுமல்ல, நம்முடைய எந்த border பகுதியாக இருந்தாலும், கேரளா border ஆக இருந்தாலும் சரி, ஆந்திரா border ஆக இருந்தாலும் சரி, நம்முடைய பகுதியிலிருந்து ஒரு சென்ட் நிலத்தைக்கூட யாருக்கும் விட்டுத் தரமாட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி)

6. சிறப்புக் கவன ஈர்ப்பு

புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல், ஆதி திராவிடர் குடியிருப்பு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மனிதக் கழிவுகளைப் போட்டு அசுத்தம் செய்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *புதுக்கோட்டை மாவட்டம், முட்டுக்காடு ஊராட்சி, இறையூர் கிராமத்தில் குடிநீர் மாசுபடுத்தப்பட்டது குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வி.பி. நாகைமாலி, திரு. மா. சின்னதுரை, திரு. S.S. பாலாஜி, திரு. ம. சிந்தனை செல்வன், திரு. ட்டி. இராமச்சந்திரன், திரு. K. மாரிமுத்து, திரு. கு. செல்வபெருந்தகை, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. ப. அப்துல் சமது, திரு. தி. வேல்முருகன், டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. மு. பூமிநாதன், டாக்டர் A.R.R. ரகுராமன், திரு. கு. சின்னப்பா, திரு. ஜி.கே. மணி மற்றும் டாக்டர் சி. விஜயபாஸ்கர் ஆகியோர் விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து கட்சிக்கு ஒருவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.*

பிற்பகல் 12–15

***திரு. மா. சின்னதுரை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், முட்டுக்காடு ஊராட்சியில் உள்ள வேங்கைவயல் என்கிற கிராமத்தில் தலித் மக்கள் குடியிருக்கக்கூடிய பகுதியிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மர்ம நபர்கள் யாரோ மலத்தைக் கலந்த செய்தி டிசம்பர் மாதம் 26 ஆம் தேதி வந்தது. கந்தர்வகோட்டை சட்டப் பேரவைத் தொகுதிக்குள் அந்தப் பகுதி இருக்கிறது என்கின்ற அடிப்படையில், 'உடனடியாக நீங்கள் வாருங்கள்' என்ற தகவல் எனக்கு வந்தவுடன், ஒரு மணி நேரத்திற்குள் அந்தக் கிராமத்திற்குச் சென்று, தொழிலாளர்களை அந்த டேங்கில் ஏறி பார்க்கச் சொன்னபோது, அவர்கள் டேங்கினுள் மலம் கிடப்பதை பார்த்து வீடியோ எடுத்து கீழே அனுப்பினார்கள். டிசம்பர் 26 ஆம் தேதியன்றே அந்த டேங்கிலிருந்து தண்ணீர்*

2023 ஜனவரி 11] [திரு. மா. சின்னதுரை]

வழங்குவது துண்டிக்கப்பட்டு, புதிய டேங்க் வழியாக தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. பைப்லைன் புதியதாக மாற்றியமைக்கப்பட வேண்டுமென்கின்ற அடிப்படையில், புதியதாக பைப்லைன் மாற்றியமைக்கப்பட்டு, அதன் வழியாகத் தற்போது தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

மறுநாள் நான், மாவட்ட ஆட்சியர், மாவட்டக் காவல் துறை அதிகாரிகளுடன் சென்றபோது, பொதுமக்களிடம் என்ன குறைகள் உங்களுக்கு இருக்கின்றன என்று கேட்டோம். அப்போது, அங்குள்ள மக்கள் கோயிலில் எங்களுக்கு வழிபாடு செய்ய உரிமை இல்லை; டீ கிளாஸ் பிரச்சினை இருக்கிறது என்று தெரிவித்ததையடுத்து, உடனடியாக மாவட்ட நிருவாகத்தினர் தலையீடு செய்து, அதற்கும் உரிய நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். மறுநாள் R.D.O. அவர்கள் தலைமையில் சமாதானக் கூட்டம் நடத்தி, பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்கின்ற நோக்கத்துடன் அனைத்துப் பகுதி மக்களையும் ஒன்றாக அழைத்து, பேச்சுவார்த்தை நடத்தி, ஒரு சுமுகமான தீர்வைக் கொண்டு வந்து, சமத்துவப் பொங்கல் வைக்க அவர்கள் முயற்சித்தார்கள். அப்போது, நம்முடைய மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களும் அந்தக் கிராமத்திற்கு வருகை தந்து, அந்த மக்களை அமைதிப்படுத்துவதற்கும், ஒற்றுமைப்படுத்துவதற்கும், மலம் கலந்த குற்றவாளிகள்மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கும் உறுதியான தலையீடு செய்வோம்; தமிழ்நாடு அரசு தலையீடு செய்யும்; மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் உறுதியான நடவடிக்கையை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்தார்கள். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சிறப்புக் கவன ஈர்ப்பில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துவிட்டீர்கள்.

திரு. மா. சின்னதுரை: ஆனால், 10 தினங்களாகியும் மலம் கலந்த குற்றவாளிகள் கைது செய்யப்படாத காரணத்தால், அங்கே பல்வேறு அமைப்புகள் செல்கின்றபோது அங்கே ஒரு பதற்றமான சூழலாக மாறிக்கொண்டேயிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும்.

[2023 ஜனவரி 11

திரு. மா. சின்னதுரை: எனவே, மலம் கலந்த குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 21 ஆம் நூற்றாண்டிலும் இதுபோன்ற அவலங்கள் நடைபெறுவது என்பது மனித சமூகத்திற்கே வெட்கக்கேடானது. என்றாலுங்கூட, இத்தகைய கொடுமை நடந்தவுடனேயே நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள், அங்கே மாவட்டத்தினுடைய தலைமைப் பொறுப்பில் இருக்கக்கூடிய ஆட்சியர் அவர்களையும், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அவர்களையும் அனுப்பி, இதுகுறித்து ஆய்வு மேற்கொள்ளப் பணித்தார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் ஆய்வு மேற்கொண்டபோது, இந்தக் கொடுமையோடு சேர்த்து தொடர்ச்சியாக அந்தப் பகுதியில் நடைபெற்று வரக்கூடிய வன்கொடுமைகள் வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றன. இந்தக் கொடுமையை ஆய்வு செய்யச் சென்றவர்கள், அங்கே, கோயிலில் நுழையக் கூடாது என்கிற வன்கொடுமையும், இரட்டைக் குவளை முறை இருப்பதையும் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தப் பகுதியில் பல்வேறு இடங்களில் இதுபோன்று தொடர்ந்து இருக்கிறது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. குறிப்பாக, கடந்த சில நாட்களுக்கு முன்புகூட, புதுக்கோட்டை மாவட்டம், வைராண்டிக் கண்மாய் என்கின்ற பகுதியில் குளிப்பதற்குச் சென்ற ஸ்ரீதேவி என்ற ஓர் ஆதி திராவிடப் பெண்ணை, அந்தக் கண்மாயில் குளிக்கக் கூடாது என்று தடுத்திருக்கிறார்கள்; ஆதிக்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இதுகுறித்து, நாகுடி காவல் நிலையத்தில் FIR பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இதுவரை அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இப்படி தொடர்ச்சியாக பல்வேறு இடங்களில் வன்கொடுமைகள் நடைபெற்று வரக்கூடிய பகுதியாக புதுக்கோட்டை மாவட்டம் இருப்பதால், விடுதலை சிறுத்தைகள் கட்சியினுடைய தலைவர் அண்ணன் எழுச்சித் தமிழர் அவர்கள் ஏற்கெனவே வலியுறுத்தியதைப்போல, புதுக்கோட்டை மாவட்டத்தை வன்கொடுமைப் பகுதி என்று

2023 ஜனவரி 11] [திரு. S.S. பாலாஜி]

அறிவிப்பு செய்திடவும், பயங்கரவாத நடவடிக்கைகளைத் தடுப்பதற்காகக் காவல் துறையிலே அவற்றை முன்கூட்டியே கண்காணித்து, தடுத்து நிறுத்துவதற்கு முயற்சி மேற்கொள்வதைப்போல, சாதிய, மதவாதக் கொடுமைகளைக் களைந்திட, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கவனத்தை ஈர்த்துவிட்டு அமருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

திரு. S.S. பாலாஜி: காவல் துறையிலே ஒரு சிறப்புப் பிரிவை ஏற்படுத்திட வேண்டும். யார் சொன்னாலும், சொல்லாவிட்டாலும், யார் படித்தாலும் படிக்காவிட்டாலும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும்.

பிற்பகல் 12–20

திரு. S.S. பாலாஜி: புரட்சியாளர் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் நடைபோடும் அரசு இது. அதனை வழி நடத்துகின்ற நம்முடைய தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்மீது நாங்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டு மக்களும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இதிலே சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு உரிய தண்டனையை வழங்குவார்கள் என்ற நம்பிக்கையோடு அவரது கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள். சுருக்கமாகப் பேசவும்; மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன்தான் சுருக்கமாகப் பேசுவீர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், முட்டுக்காடு ஊராட்சி, வேங்கைவயல் கிராமத்தில் 80–க்கும் மேற்பட்ட பட்டியலின குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அந்தப் பகுதியிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மனிதக் கழிவுகளை சில விஷமிகள் கலந்திருக்கிறார்கள். இது மனித குலத்திற்கே

மாபெரும் தலைக்குனிவு. அதேபோல், அந்தப் பகுதியில் இரட்டைக் குவளை முறை, தனி சுடுகாடு, கோயில் கருவறைக்குள் நுழைய தடை போன்ற பல்வேறு தீண்டாமைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய சனாதன நச்சு மரத்தை வேரோடு பிடுங்கி எறிய வேண்டும். அதேபோல் இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட அத்தனைப் பேரையும் காவல் துறையினர் தயவு தாட்சண்யமின்றி கைது செய்ய வேண்டும். வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்கு பதிவு செய்ய வேண்டும். சட்டத்தின்முன் நிறுத்தி அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுத் தர வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் இராமச்சந்திரன் மாதிரி சுருக்கமாகப் பேசுங்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயலிலே நடைபெற்ற அந்தச் சம்பவம், மிகுந்த அதிர்ச்சியைத் தருகிறது. இருந்தபோதிலும், உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் கவிதா ராமு அவர்களும், அந்த மாவட்டத்தினுடைய காவல் துறை கண்காணிப்பாளர் வனிதா பாண்டே அவர்களும் அந்த இடத்திற்குச் சென்று உடனடியாக தகுந்த நடவடிக்கைகளை மிகப் பெரிய எதிர்ப்புக்கு மத்தியிலும் செய்திருக்கின்றார்கள். அவர்களை உரிய முறையிலே இந்த அரசு கண்ணியப்படுத்த வேண்டும். குடிநீரில் மலம் கலக்கப்பட்டதன் காரணமாக வேங்கைவயலை சார்ந்த சிறுவர்கள் ஒரு வகையான நோயால் பாதிக்கப்பட்டு அதன் காரணமாகத்தான் இது வெளிச்சத்திற்கு வந்தது. குடிநீர்த் தொட்டியில் மலத்தைக் கலந்தவர்கள் மனித இனத்திற்கு எதிரான ஒரு மிகப் பெரிய குற்றத்தைச் செய்திருக்கிறார்கள். அவர்களைக் கண்டுபிடித்து, வன்கொடுமை தடுப்புச் சட்டம் மட்டுமல்ல, இதுபோன்ற தீண்டாமையைக் கடைபிடிக்கக்கூடிய எவரும் அப்படிப்பட்ட செயலைச் செய்வதற்கு அஞ்சக்கூடிய வகையில் கடுமையான ஆயுள் தண்டனையை வழங்குவதற்கு இந்த அரசு முன்வர வேண்டும் என்று கூறி அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி.

2023 ஜனவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல் கிராமத்தில் ஆதி திராவிட மக்களுக்கு குடிநீர் வழங்குகின்ற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மனித மலத்தைக் கலந்த மனித மிருகங்கள் யாராக இருந்தாலும், 21 ஆம் நூற்றாண்டில் இந்த இழிவான எண்ணத்தோடு வாழ்கின்றவர்களை, சட்டத்தின் முன்பு நிறுத்தி, மிகக் கடுமையான உச்சபட்ச தண்டனையைப் பெற்றுத் தர வேண்டும். இனி வருங்காலங்களில் தமிழ்நாட்டில் இதுபோன்ற சம்பவங்களை மனிதனாகப் பிறந்த எவரும் செய்யத் துணியக்கூடாதவண்ணம் அரசு இரும்புக்கரம் கொண்டு அதனை அடக்க முன்வர வேண்டும். அதுபோன்று, நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க உடனடியாக மாவட்ட நிருவாகம் இதற்கான பணிகளை மேற்கொண்டு, அங்கு சட்டம்–ஒழுங்கை நிலைநாட்டுவதற்கான முயற்சியை சிறப்பாக மேற்கொண்டதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் கடந்த கால ஆட்சியில் நடந்தது என்னவென்றால், தந்தை பெரியார் சிலை, புரட்சியாளர் அம்பேத்கர் சிலை அல்லது தலைவர்கள் சிலை ஆகியவற்றை அசிங்கப்படுத்திய, அவமானப்படுத்திய அந்த சனாதன கும்பல்களை—சட்டம் ஒழுங்குப் பிரச்சினையாக மாறிவிடக் கூடாது என்பதற்காக—அவர்கள் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் என்கிற முத்திரையைக் குத்தி, கோப்புகளை மூடிவிடுவார்கள். அதுபோன்ற ஒரு நிலை புதுக்கோட்டையில் வந்துவிடக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள், போதும்.

திரு. தி. வேல்முருகன்: உண்மையான குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்களை சட்டத்தின் முன்பு நிறுத்தி, மிகக் கடுமையான தண்டனைக்குட்படுத்தி இனி வருங்காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாதவண்ணம் சமூக நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

பிற்பகல் 12—25

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், முட்டுக்காடு ஊராட்சிக்குட்பட்ட வேங்கைவயலில் பட்டியலின மக்கள் வாழ்கின்ற பகுதியில் இருக்கின்ற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மனிதக் கழிவு கலந்தது மிகவும் வேதனைக்குரியதாக இருக்கிறது. அங்கே அந்தத் தண்ணீரைப் பருகிய இளம் பிள்ளைகள் காய்ச்சல், வாந்தி, பேதி போன்ற நோய்களால் துன்பப்படும்போது, அந்தத் தண்ணீரை பரிசோதனை செய்ததில், தொட்டியில் மலம் கலந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையறிந்த மாவட்ட ஆட்சியர் அவர்களும், மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின்பேரில் அந்த இடத்திற்குச் சென்று, உடனடியாக நல்ல நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றார்கள். அதைப் பாராட்டுகின்ற அதேநேரத்தில், இதுபோன்ற இழி செயல்களைச் செய்கின்ற இழியவர்கள் யாராக இருந்தாலும், கொடியவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை அடையாளம் கண்டு, அவர்களை மட்டுமின்றி, யாரும் கனவில்கூட நினைத்துப் பார்க்காத அளவிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல் கிராமத்தில் பட்டியலின மக்கள் வாழ்கின்ற குடியிருப்புப் பகுதியிலிருக்கின்ற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மலம் கலந்திருப்பது கண்டறியப்பட்ட காரணத்தினால் காவல் துறையும், மாவட்ட ஆட்சித் தலைவரும் உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதனைக் கண்டுபிடிப்பதற்கு முன்பு, அந்தத் தண்ணீரைக் குடித்த சிலர் உடல்நலம் பாதிக்கப்பட்டு, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அதற்கான காரணத்தை அறிந்து, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை ஆய்வு செய்தபோது மலம் கலந்தது கண்டறியப்பட்டிருக்கிறது. அந்தச் செய்தி அரசுக்கு வந்தவுடன், மாண்புமிகு முதலமைச்சர்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அவர்கள் உடனடியாகத் தலையிட்டு, மாவட்ட ஆட்சியருக்கு உத்தரவிட்ட காரணத்தினால், மாவட்ட ஆட்சியர் திருமதி கவிதா ராமு அவர்களும், காவல் துறை கண்காணிப்பாளரும், காவல் துறை தலைவர் I.G. உள்ளிட்ட எல்லோரும் சேர்ந்து விரைந்து நடவடிக்கை எடுத்து அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார்கள். அந்த முற்றுப்புள்ளி வைத்த நடவடிக்கையை நம்முடைய மாநில அரசின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் பாராட்டியிருக்கிறது. ஆக, விரைந்து நடவடிக்கை எடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட நிருவாகத்திற்கும் பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல விரும்புவது, அந்தப் பகுதி மட்டுமல்ல, எந்தப் பகுதியிலேயும் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்படக்கூடாது. குடிநீரில் மலம் கலந்திருப்பது அதிர்ச்சியளிக்கின்ற, கண்டிக்கத்தக்க வன்மையான செயல். பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் அதை வன்மையாகக் கண்டிக்கிறேன். அதேநேரத்தில், இப்படி ஒரு சிறு சம்பவம் எங்கேயாவது நடந்தால் அது பெரிதாகிவிடக் கூடாது. இன்று நாடு முழுவதும் அதைக் கையிலே எடுத்துக் கொண்டிருப்பவர்கள் பெரிதுபடுத்தி, அதிலே கலவரத்தை உண்டாக்கக்கூடிய நிலையெல்லாம் வரக் கூடாது. எங்கு ஒரு சம்பவம் நடந்தாலும்கூட, இந்த வேங்கைவயல் சம்பவத்தைப்போல உடனடியாக அதை அமைதிப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26 ஆம் தேதி, புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியத்தில், வேங்கைவயல் என்ற கிராமத்தில் நடைபெற்ற சம்பவம் மனசாட்சியுள்ள எவரையும் உலுக்கியிருக்கும் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. பட்டியலின மக்களின் மீதான தன்னுடைய வெறுப்பை, வக்கிரத்தை வெளிப்படுத்தி மனித செயல் எல்லாவற்றையும் மறந்து இப்படிப்பட்ட ஒரு செயலைச் செய்திருக்கிறார்கள். நாம் எந்த நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற ஓர் எண்ணம் தோன்றுகிறது. இந்தச் சம்பவம் நடந்தது ஆறாம்

நூற்றாண்டிலோ, ஏழாம் நூற்றாண்டிலோ இல்லை. 21 ஆம் நூற்றாண்டில் நடந்திருக்கிறது. ஆனால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆறு மாதத்திற்கு ஒரு முறை இப்படிப்பட்ட வன்கொடுமைகளைத் தடுக்க வேண்டும், அறவே துடைத்தெறிய வேண்டுமென்று கூட்டங்களை நடத்தி வருகிறார்; எச்சரிக்கை விடுக்கிறார். இருந்தபோதிலும், சில விஷமிகள் வட நாட்டிலே அங்கும் இங்கும் ** போன்ற அமைப்புகளெல்லாம் பழங்குடியின, பட்டியலின மக்களை எப்படி வாட்டி வதைக்கிறார்களோ, அங்கிருந்து இங்கு உருமாறி வந்திருப்பதாகத்தான் நாங்கள் பார்க்கிறோம்.

பிற்பகல் 12–30

இந்தச் சம்பவம் நடைபெற்றது 26 ஆம் தேதி. திருச்சிக்கு நான் வானூர்தியிலே செல்லும்போது, என்னுடன் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அண்ணன் திரு. ரகுபதி அவர்கள் வந்திருந்தார்கள். திருச்சி விமான நிலையத்தில் இறங்கியவுடன், இப்படிப்பட்ட ஒரு சம்பவம் இன்று காலையில் நடந்திருக்கிறது உங்களுக்குத் தெரியுமா என்று கேட்டேன். அவர் என்னுடைய கவனத்திற்கு வரவில்லை என்றார். அரைமணி நேரத்தில் நான் உங்களை அழைக்கிறேன் என்று திருச்சி விமான நிலையத்திலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைத் தொடர்பு கொண்டார். அந்த இடைவெளியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய செயலாளர் அவர்களை நான் தொடர்புகொண்டு, இப்படிப்பட்ட செய்தி வந்திருக்கிறது, ஆனந்த விகடனில் Wrapper–ல் செய்தியாக வந்திருப்பதாக செய்தி அனுப்பினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அலுவலகத்தைத் தொடர்பு கொண்டவுடனே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சில நிமிடங்களிலே அங்கு செல்லச் சொல்லியிருக்கிறார்கள். நான் அங்கு சென்று கொண்டிருக்கிறேன். ஒரு மணி நேரத்தில் அனைத்தையும் ஆராய்ந்து தகவல் தருகிறேன் என்று நான் மயிலாடுதுறை செல்வதற்குள் என்னென்ன நடந்தது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் துரிதமாகச் செயல்பட்டு, அதில் ஈடுபட்டவர்கள் அனைவரையும் கண்காணித்து, கண்டுபிடிக்கிறோம் என்று வாக்குறுதி அளித்தார். அந்தச் சம்பவத்திற்குப் பிறகு ஆலய வழிபாடு மறுக்கப்படுகிறது;

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இரட்டைக் குவளை முறை இருக்கிறது என்பதையும் கண்டுபிடித்து அவர்களைச் சிறையில் அடைத்திருக்கிறார்கள்.

இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், எப்போதெல்லாம் ஒரு நல்லாட்சி ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் இப்படிப்பட்ட விஷமத்தனமான சம்பவங்கள் சிலருடைய பின்னணியோடு நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இதில் யாரையும், இவர்தான், அவர்தான் என்று பார்க்காமல், யார் இந்த நடவடிக்கையில் இறங்கி இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும். புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அவர்கள் மிகவும் துரிதமாகச் செயல்பட்டு, அங்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார். இது 26 ஆம் தேதி நடந்த சம்பவம். நான் 10 தினங்களுக்குள் அங்கு வருகிறேன் என்று சொன்னேன். கடந்த 6 ஆம் தேதி நான் அந்தக் கிராமத்திற்குச் சென்றிருந்தபோது, அங்கு நடந்த சம்பவத்திற்கெல்லாம் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இன்று காலையில்கூட மாவட்ட ஆட்சியரிடம் நான் பேசினேன். உடனே அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை அகற்றிவிட்டு வேறு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைக் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த பைப்லைன் அனைத்தையும் மாற்ற வேண்டுமென்று நாங்கள் சொல்லி, மாற்றியிருக்கிறார்கள். ஆகவே, வெகு விரைவில் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்போம் என்று சொன்னார். நானும் சில யோசனைகளைச் சொல்லியிருக்கிறேன். குற்றவாளிகளாக, யாரை எந்த அமைப்பு பயன்படுத்தியிருக்கிறது என்ற ஒரு தகவல் வந்திருக்கிறது. அந்தக் கோணத்திலும் நீங்கள் ஆய்வு செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே, இப்படிப்பட்ட சம்பவங்கள் இனி வருங்காலங்களில் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் எங்களுடைய வேண்டுகோள். சில அமைப்புகள், செயல்பாட்டாளர்கள், சமூக நீதிக்காகப் போராடுகிறோம் என்று சொல்பவர்களெல்லாம் அங்கே சென்று, கூச்சலிட்டு, குழப்பம் ஏற்படுத்தி அதோடு அணைந்துவிடுகிறார்கள். எப்போதெல்லாம் இதுபோன்ற சம்பவம் நடக்கின்றதோ அப்போதெல்லாம் ஒரு கூட்டம் அங்கே புறப்படுகிறது; அதோடு அந்தப் பக்கம் திரும்புவதில்லை; இப்படிப்பட்ட சம்பவங்களிலும் ஈடுபடுவதில்லை. 95–ல் நடைபெற்ற கொடியங்குளம் கலவரத்தின்போது, அங்கே இருக்கின்ற கிணறுகளிலே மலத்தைக் கலந்தார்கள். அதற்குப் பிறகு

இப்படிப்பட்ட ஒரு சம்பவம் அரங்கேறியிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இனி வருங்காலங்களில் இந்தமாதிரி நடைபெறாமல் இருக்க உறுதியளிக்க வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேங்கைவயலில் நடந்த விஷயம் குறித்து அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துகளைத் தெரிவித்தார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கேள்வி என்னவென்றால், புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் அமைதியான மாவட்டம். இம்மாவட்டத்தில் அமைதியாக, சகோதரத்துவத்தோடு எல்லா சமூகமும் ஒன்றாக சேர்ந்து வாழக்கூடிய ஒரு நல்ல சூழல்தான் இன்றைக்கும் இருந்து வருகிறது. அது தொடர வேண்டும்; அதில் மாற்றுக்கருத்து கிடையாது. இந்தச் சம்பவம் நடைபெற்ற பிறகு, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்று பாராட்டுகளைச் சொல்கிறபோது, 15 நாட்கள் ஆகின்றன. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மலம் கலந்திருப்பது என்பது மிகப்பெரிய வேதனையான விஷயம்; ஏற்றுக்கொள்ள முடியாத விஷயம்; மன்னிக்க முடியாத விஷயம். இன்னும் சொல்லப்போனால், யார் கலந்தார்கள்; என்ன நோக்கம்; என்ன காரண காரியம்; எதற்காக இந்த விஷமத்தனம் செய்யப்பட்டது என்பதையெல்லாம் ஆராய்ந்து, தொடர்ந்து வருகின்ற தகவல்கள், குழு அமைக்கப்பட்டிருக்கிறது; விசாரணை செய்து கொண்டிருக்கிறோம்; வாக்குமூலம் பெறப்பட்டிருக்கிறது; உரிய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்ற செய்திகள்தான் வருகின்றதே தவிர, அங்கே ஒரு பதட்டமான சூழ்நிலை உருவாக்கப்படுகிறது. ஓர் அமைதியான மாவட்டத்தில், ஓர் அமைதியான கிராமத்தில் எல்லோரும் சகோதரத்துவத்தோடு வாழக்கூடிய அந்த ஊராட்சியில் மீடியாக்கள் எல்லாம் குவிகிறார்கள். பதட்டமான நிலை உருவாக்கப்படுகிறது; உருவாகிறது. எல்லா கட்சியினரும் அங்கு வருகை தருகின்றார்கள், தங்களுடைய கருத்துகளைத் தெரிவிக்கின்றார்கள். இதற்கெல்லாம் இடம் அளிக்காமல், சம்பவம் நடந்ததற்குப் பிறகு உடனடியாக, இந்த அரசு விரைந்து தலையிட்டு, புலன் விசாரணை செய்து,*

2023 ஜனவரி 11] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

உரிய நடவடிக்கை எடுத்து, இந்தச் செயலை செய்திருப்பவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்திருந்தால் இன்றைக்கு இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம்கூட வந்திருக்காது என்பதுதான் என்னுடைய கருத்து என்பதை இந்த நேரத்திலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகிறேன். ஆகையினால், மாவட்ட ஆட்சித் தலைவர் விரைந்தார்; SP விரைந்தார் என்பதையெல்லாம் தாண்டி, 15 நாட்களாக ஒருவர்கூட கைது செய்யப்படவில்லை. இன்றும் பேசும் பொருளாக, பதட்டப் பொருளாக, அந்த மாவட்டத்திலே, அந்த ஊராட்சியிலே, அந்தக் கிராமத்திலே, ஒருவரையொருவர் பார்க்கும்போது இன்னும் புன்னகை ஏற்படாத ஒரு சூழல் இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக இதிலே உத்தரவுகளைப் பிறப்பித்து, தவறு செய்தவர்களை கைது செய்து சட்டத்தின்முன் நிறுத்தி, சிறையில் அடைத்தால்தான் இந்தப் பிரச்சினை முற்றுப் பெறும்; முடிவுக்கு வரும்.

பிற்பகல் 12–35

இனிமேல், இதுபோன்ற சம்பவங்கள் எந்த ஊராட்சியிலும், எங்கும் நிகழாதவண்ணம் மேல்நிலை நீத்தேக்கத் தொட்டிகளுக்கு பூட்டுகள் அமைத்து ஊராட்சிகளிடம் ஒப்படைக்கவோ (மணியடிக்கப்பெற்றது) அல்லது அம்மா அவர்களின் அரசில் அண்ணன் எடப்பாடியார் ஆட்சிக் காலத்தில், சென்னையில் CCTV–க்கள் பொருத்தப்பட்டு உடனடியாக குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதுபோன்று, கிராமங்களிலும் பொது இடங்களிலும், இதுபோன்று ஊராட்சியின் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கண்காணிப்பது போன்ற பணிகளையும் CCTV–க்கள் பொருத்தி இந்த அரசு மேற்கொள்ளலாம் என்ற யோசனையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்த அவையில் பதியவைக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல் கிராமத்தில் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மனிதக் கழிவுகளைப்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஜனவரி 11

போட்டு அசுத்தம் செய்தது தொடர்பாக இங்கே பல்வேறு கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தி, இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து உரிய நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டுமென்று ஒட்டுமொத்தமாக உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இது தொடர்பாக, அரசின் சார்பிலே மேற்கொள்ளப்பட்டுள்ள, தொடர்ந்து மேற்கொள்ளப்படவிருக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்து இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எல்லோருக்கும் எல்லாம்" என்பதை அடிப்படையாகக் கொண்டதுதான் சமூக நீதி. அனைவருக்கும் சமமான பொருளாதார, அரசியல், சமூக உரிமைகளும், வாய்ப்புகளும் அமைய வேண்டும் என்ற எண்ணம்தான் சமூக நீதி. அனைவருக்கும் சமமான வாய்ப்புகள் என்பதை உறுதி செய்வதன் மூலமாகத்தான் அத்தகைய சமூக நீதியை நாம் வழங்கிட முடியும். அந்த வகையில், தமிழ்நாட்டில் இன்றைக்கு அனைத்துத் துறைகளிலும் சமூக நீதி என்னும் அசைக்க முடியாத தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, திட்டங்கள் தீட்டப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

சாதிக் கொடுமையை, சான்றோர்களே தவறு என்று உணர்ந்துகொள்ளச் செய்து, தன் ஓங்கி உலகளந்த கல்வியால், சட்டமும், பொருளாதாரமும் கற்றுத் தேர்ந்தவர் மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய மாமேதை பிறந்த இந்த மண்ணில், சாதியப் பாகுபாடு சார்ந்த தீண்டாமை இன்னும் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருப்பதை, புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்வு வெளிப்படுத்தியிருக்கிறது. இந்த நிகழ்வு உண்மையிலேயே வருத்தத்திற்குரியது; கண்டனத்திற்குரியது; கண்டிக்கத்தக்கது.

வேங்கைவயல் கிராமத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மனிதக் கழிவு கலக்கப்பட்டுள்ளது தொடர்பான தகவல் எனக்குக் கிடைத்தவுடனே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய சிகிச்சை அளித்திடவும், பாதுகாப்பான குடிநீர் தங்குதடையின்றி கிடைப்பதை உறுதி செய்திடவும் தேவையான நடவடிக்கைகளை

மேற்கொள்ள நான் அறிவுறுத்தியதன் அடிப்படையில், கடந்த 27–12–2022 அன்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் கண்காணிப்பாளர் மற்றும் உயர் அலுவலர்கள் அக்குடியிருப்புப் பகுதிக்கு நேரடியாகச் சென்று கள ஆய்வு மேற்கொண்டார்கள். அவர்கள் உரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட துறைகள் வாயிலாக மேற்கொண்டு வருகின்றனர் என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

வேங்கைவயல் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு குழந்தைகள் உடல்நலம் பாதிக்கப்பட்டு, புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்தனர். மேலும், அந்தக் கிராமத்திலிருந்து இதுபோன்ற நோய்த் தொற்றுடைய நோயாளிகள் வருகை அதிகரித்த நிலையில், அவர்கள் பயன்படுத்தி வரும் குடிநீரைப் பரிசோதனை செய்திட மருத்துவர்கள் அறிவுறுத்தியிருந்தனர். அதனடிப்படையில், வேங்கைவயல் கிராமத்திலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை ஆய்வு செய்தபோது, மனிதக் கழிவுகள் கலந்துள்ளது தெரிய வந்தது. அதனைத் தொடர்ந்து, மருத்துவர்கள் குழு வேங்கைவயல் கிராமத்திற்குச் சென்று 26–12–2022 முதல் இன்றுவரையில் அந்தக் கிராமத்திலேயே முகாமிட்டு நோய்த் தடுப்புப் பணிகளையும், மருத்துவப் பரிசோதனைகளையும் மேற்கொண்டு வருகிறார்கள். தற்போது அந்தக் கிராமத்தில் பொது சுகாதாரப் பணிகளை மேற்கொள்வதற்காக வட்டார மருத்துவ அலுவலர் தலைமையில், ஒரு மருத்துவ அலுவலர், 3 செவிலியர்கள், 2 மருத்துவப் பணியாளர்கள், 3 சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் 10 பணியாளர்கள் அடங்கிய குழுவினர் பணியாற்றி வருகிறார்கள்.

பிற்பகல் 12–40

அதோடு மட்டுமல்லாமல், உள்ளாட்சி அமைப்பின் உதவியோடு, அந்தக் கிராமத்திலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, சிறு மின்விசைத் தொட்டி ஆகியவை சுத்தம் செய்யப்பட்டதோடு, குடிநீர் வழங்கும் அனைத்து குழாய்களும் கிருமி நீக்கம் செய்யப்பட்டு, அதன் மூலமாக நீரேற்றப்பட்டு, நீர்மாதிரி சேகரிக்கப்பட்டு, அறந்தாங்கி பொது சுகாதார ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டதில், தற்போது குடிநீர் சுத்தமாக உள்ளது என அறிக்கை வரப்பெற்றுள்ளது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஜனவரி 11

இந்தச் சூழ்நிலையில், அந்த கிராமத்திலுள்ள 32 வீடுகளுக்கும் 2 இலட்சம் ரூபாய் செலவில் முற்றிலும் புதிய இணைப்புக் குழாய்கள் மற்றும் குடிநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டு, 5–1–2023 முதல் சீரான குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. அதோடு, அங்கு ஒரு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 7 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்திடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், அங்கு தற்போது தினசரி டேங்கர் லாரிமூலம் சுகாதார ஆய்வாளர் மேற்பார்வையில் காலையும், மாலையும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சம்பவம் தொடர்பான புகாரின் அடிப்படையில், வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புதுக்கோட்டை மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மேற்பார்வையில் ஒரு சிறப்புப் புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில், இதுவரையில் 70 நபர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் ஈடுபட்ட உண்மைக் குற்றவாளிகளைக் கைது செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாம் எவ்வளவுதான் பொருளாதாரத்திலும், அறிவியல் தொழில்நுட்பத்திலும் முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தாலும், இதுபோன்ற நிகழ்வுகள் சமூக வளர்ச்சியில், ஒற்றுமையில் அவ்வப்போது தடைக்கற்களாக அமைந்து விடுகின்றன. சமூகத்தில் உள்ள இன்னும் சில பகுதிகளில் காணப்படும் சாதி மத வேறுபாடுகளே இதற்குக் காரணம் என்பதை உணர்ந்து, 'மதம் உன்னை மிருகமாக்கும்–சாதி உன்னை சாக்கடையாக்கும்' என்ற பகுத்தறிவுச் சுடர் தந்தை பெரியாரின் வார்த்தைகளை மனதிலே கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) நாம் அனைவரும் சகோதரத்துவத்துடன் வாழ வேண்டும்.

ஆனால், சாதி, மதங்களைத் தூக்கிப் பிடித்து, பிரிவினையை ஏற்படுத்தி வரும் சில சமூக விரோதிகள் இன்னும் இந்த நாட்டிலே இருக்கின்றார்கள் என்பதையும் நாம் நினைவிலே கொள்ளவேண்டும். இவர்களையெல்லாம் தாண்டி, சாதி, இன, மத வேறுபாடுகள் அனைத்தையும் களைந்து, நாம் அனைவரும் சம உரிமை கொண்ட மனிதர்கள் என்ற உணர்வோடும், மனிதநேயத்தோடும் விளங்கிட வேண்டும். இதுபோன்ற கீழ்த்தரமான செயல்களில்

2023 ஜனவரி 11] [திரு. மு.க. ஸ்டாலின்]

ஈடுபடுவோர்மீது மிகக் கடுமையான நடவடிக்கை இரும்புக் கரம் கொண்டு எடுக்கப்படும் என்பதையும் இந்தத் தருணத்தில் இங்கே கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்த அத்தனை பேருக்கும் விளக்கமாகத் தெரிவித்து, இந்த அளவில் எனது உரையை நிறைவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்:

1. திரு. க. அன்பழகன்
2. திரு. நா. இராமகிருஷ்ணன்
3. திரு. S.R. இராஜா
4. திரு. தா. உதயசூரியன்
5. திரு. துரை. சந்திரசேகரன்
6. முனைவர் T.R.B. ராஜா

8. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, பொது கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2023 ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து ஒன்பதாவது முதல் எண்பத்து ஒன்றாவது வரையிலான 23 அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

[2023 ஜனவரி 11

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. S.R. இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2023 ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து நான்காவது முதல் முப்பத்து ஒன்பதாவது வரையிலான 6 அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2023 ஆம் ஆண்டுகளுக்கான சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் ஐந்தாவது மற்றும் ஆறாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஈ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2023 ஆம் ஆண்டுகளுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் ஒன்பதாவது முதல் முப்பத்து மூன்றாவது வரையிலான 25 அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

பிற்பகல் 12–45

(உ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் முனைவர்

2023 ஜனவரி 11] [பேரவைத் தலைவர்]

கோவி. செழியன், அரசு தலைமைக் கொறடா, மனுக்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2023 ஆம் ஆண்டுகளுக்கான மனுக்கள் குழுவின் பதின்மூன்றாவது முதல் இருபதாவது வரையிலான 8 அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.*

9. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.*

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"தமிழ்நாடு அரசால் அனுப்பப்பட்டு, மாண்புமிகு ஆளுநர் அவர்களால் இசைவளிக்கப்பட்டு, பேரவைக்கு வழங்கப்பட்ட உரையில் சில பகுதிகளை இணைத்தும், விடுத்தும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையாற்றியமைக்கு @ இப்பேரவை தனது வருத்தத்தைப் பதிவு செய்கிறது.

பேரவையின் மாண்பினைப் போற்றிடும் வகையில், 2023 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 9 ஆம் நாளன்று பேரவையில் பதிவு செய்யப்பட்ட, மாண்புமிகு ஆளுநர் அவர்களின் பேருரைக்கு @@ இப்பேரவை உறுப்பினர்கள் நன்றியுடையவர்களாவர்."

என்னும் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தீர்மானத்தை வழிமொழிதல். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.*

@ *864 முதல் 866 வரையிலான பக்கங்களில் 9-1-2023 ஆம் நாளிட்ட பேரவை நடவடிக்கைக் குறிப்புகள் இணைப்பு* III *ஆக அச்சிடப்பட்டுள்ளது.*

@@ *867 முதல் 905 வரையிலான பக்கங்களில் இணைப்பு* IV *ஆக அச்சிடப்பட்டுள்ளது.*

திரு. க. சுந்தர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன், திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள், மாண்புமிகு ஆளுநர் அவர்களின் பேருரைக்கு நன்றி தெரிவித்து முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். மொத்தம் 7 உறுப்பினர்கள் இந்த விவாதத்தில் கலந்துகொள்ள இருக்கின்றார்கள். தயவுசெய்து முதல் இரண்டு உறுப்பினர்கள் தலா 10 நிமிடங்களும், மீதி 5 உறுப்பினர்கள் தலா 5 நிமிடங்களும் சுருக்கமாகப் பேச வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தற்போது நேரம் 12–45 ஆகிவிட்டது. நம்முடைய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பிற்பகல் 2–00 மணிக்குள் அவையை முடித்துத் தாருங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள். அதன் அடிப்படையில், அனைவரும் ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தற்போது விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சுவட்டில் என்றும் நீக்கமற நிறைந்திருக்கக்கூடிய ஒரு நிகழ்வில், ஒரு நெருக்கடியான சூழ்நிலையில், எனக்குப் பேச வாய்ப்பளித்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை எந்நாளும் நான் மறக்க மாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாள் வாழ்த்துகளைத் தங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும், குறிப்பாக, புதியதாக அமைச்சர் பொறுப்பை ஏற்று, 'பேச்சைக் குறைத்து நல்ல முறையில் செயல்படுவேன்' என்ற தெளிவான கருத்தை மக்களுக்குச் சொல்லி, பணியாற்றிக்கொண்டிருக்கின்ற இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், அன்புச் சகோதரர், மாண்புமிகு திரு. உதயநிதி அவர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக சட்டமன்றப் பேரவையின் மரபுகளைக் காப்பாற்றுகின்றவகையில் என் உரை அமைந்திருக்கும். நேரம்தான் 10 நிமிடங்கள். இந்த அவையின் கண்ணியத்தைக் காப்பாற்றுகின்ற பொறுப்பு, அனைவருக்கும் இருப்பதுபோல் எனக்கும் இருக்கின்றது. ஆகையால் வரையறுக்கப்பட்ட நேரத்தில் மிகமிக இரத்தினச் சுருக்கமாக உரையாற்றி முடிக்கலாமென்று நான் கருதுகிறேன்.

பிற்பகல் 12–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், கடந்த ஓராண்டுக் காலத்தில், 8,459 கி.மீ. தொலைவு பயணம் செய்து, 551 அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்று, 1 கோடியே 3,000 மக்களுக்கு நலத் திட்டங்களை வழங்கி, கோடிக்கணக்கான மக்களிடத்திலிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டு, அந்தக் கோரிக்கைகளின் விவரங்கள், கோரிக்கைகளின் தன்மைகள் அனைத்தையும் உள்வாங்கிக்கொண்டு, 'முதல்வரின் முகவரி' என்ற திட்டத்தின்கீழ் 17,70,000 மனுக்கள் வரப்பெற்று, அவற்றில், 16,28,000 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, அவையும் கண்காணிக்கப்பட்டு, அவற்றிலுள்ள விவரங்களை உள்வாங்கிக்கொண்டு, அரசியலில் நீண்ட அனுபவம் உடையவராக, ஐந்து முறை சட்டப் பேரவை உறுப்பினராக இருந்து, ஐந்தாண்டுகள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து, உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்து, துணை முதல்வராக இருந்து, இப்போது முதல்வராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிற இந்த வேளையில், அவருடைய அனுபவம், முதிர்ச்சி, தெளிவு, நிதானம், நிதி மேலாண்மை எல்லாம் உள்ளடக்கிய அதேநேரத்தில், அனைவருடைய வளர்ச்சியும் இந்த மாநிலத்திற்குத் தேவை, சமூகப் பொருளாதார முன்னேற்றம் தேவை என்பதனைக் கருத்திற்கொண்டு, நல்ல பல திட்டங்களை உள்ளடக்கிய உரைதான் இந்த மேதகு ஆளுநர் உரை. இந்த மேதகு ஆளுநர் உரையை அவர் வடிவமைப்பதற்காக எடுத்துக்கொண்ட முயற்சி என்பது, தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னாரே, உழைப்பு, உழைப்பு, உழைப்பு, அந்த உழைப்புதான், அவர்களுக்கு உந்துதல் சக்தியாக அமைந்து இந்த உரை இங்கே ஆளுநரால் வாசிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உரை குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஊடகத்திலே

பேசுகின்றபோது, ஏமாற்றம் அளிக்கின்றது என்று சொன்னார்கள். இது ஏமாற்றம் அளிக்கவில்லை. நல்லதொரு மாற்றத்தை, தமிழ்நாட்டிற்கு நல்லதொரு மாற்றத்தை அளிக்கும் உரையாக, ஏற்றம் தருகின்ற உரையாகத்தான் இது இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி). இந்த உரையிலே பொதிந்து கிடக்கின்ற அந்தத் திட்டங்கள் மூலமாகத் தமிழ்நாட்டில் முழுமையான முன்னேற்றம் காணுகின்ற வகையிலேதான் இந்த உரை அமைந்திருக்கின்றதே ஒழிய, ஏமாற்றம் என்கின்ற நிலை இல்லை என்பதனை மிகத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல,

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்,
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!'

என்று பாடிய அந்தக் கவிஞன், மிகத் தெளிவாகச் சொன்னான். இனத்தையும், மொழியையும் பிரிக்கவே முடியாது. இந்தி பேசாத மக்கள் விரும்பாத வரைக்கும் நிச்சயமாக இந்தியைத் திணிக்க மாட்டேன் என்று நேரு அவர்கள் உறுதி சொல்கின்றார்கள். ஆனால், அதற்கு மாறாக, 1965 ஜனவரி 26 ஆம் தேதி இந்தியை திணிக்கின்ற சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்போது இராஜாஜி அவர்கள் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். 1938 ஆம் ஆண்டு எந்த இராஜாஜி அவர்கள் இந்தியை கட்டாய பாடமொழி ஆக்கினாரோ, அவர்களே 1965 ஜனவரி 26 ஆம் தேதி சுயராஜ்யா நாளிதழில் ஒரு கருத்தை எழுதுகின்றார். மிகவும் நாகரிகமுள்ள, நாட்டுப்பற்றுள்ள, தேசிய உணர்வு கொண்ட 3 கோடி மக்களை இந்தச் சட்டத்தின் மூலமாக நீங்கள் பிரிவினைக்காரர்களாக மாற்றவுள்ளீர்கள் என்று சொல்லி, அந்த மொழிப் பிரிவு–17ஐ அரபிக் கடலில் தூக்கி எறியுங்கள் என்று அன்றைக்கே இராஜாஜி அவர்கள் சொன்னார்கள். மொழிப் பிரிவு–17 என்பது மிகக் கொடூரமான வாள்; விஷ வாள். Article 343(1)–ல் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. "The official language of the Union shall be Hindi in Devanagari script" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்திதான் ஆட்சி மொழி என்கின்ற அந்தப் பிரிவில் சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்பது நீண்டகால கோரிக்கை. அந்தப் பிரிவு முழுமையாக நீக்கப்பட

2023 ஜனவரி 11] *[திரு. நா. இராமகிருஷ்ணன்]*

வேண்டும் அல்லது எட்டாவது அட்டவணையில் இருக்கின்ற 22 மொழிகளும் ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட வேண்டும். அதைப்போல, Article *351-ம் ஆபத்தான பிரிவு.* "It shall be the duty of the Union to promote the spread of the Hindi language, to develop it" *என்று அந்த பிரிவு சொல்கின்றது. இந்தி மொழிக்கு மாத்திரம் தேவையான நிதியை ஒதுக்கி, அம்மொழியை வளர்ச்சியடையச் செய்வதை, பரவலாக்குவதை மத்திய அரசு தனது கடமையாகக் கருதுகிறது. நான் கேட்பது, இந்தியாவிலே பல தேசிய இனங்கள் இருக்கின்றன. ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்த தேசிய இனம். இனம், மொழி, பண்பாடு, கலாச்சாரத்தால் நாம் வேறுபட்டு இருந்தாலுங்கூட, இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கின்ற ஒவ்வொரு மொழி பேசக்கூடிய தேசிய இனம் என்பது, அவரவர்களது மொழியைக் கொண்டுதான் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.*

பிற்பகல் 12–55

மும்மொழித் திட்டம் ஒரு காலத்தில் இருந்தது. இப்போது மீண்டும் மும்மொழித் திட்டம் வரக்கூடிய சூழ்நிலையிலேதான் இன்றைக்கு நான் நின்று கொண்டிருக்கின்றேன். மும்மொழித் திட்டம் இருக்கின்ற வேளையில்தான், இதே அவையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் இரண்டு மொழிச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். தமிழ் இங்கு ஆட்சிமொழியாக இருக்கட்டும்; ஆங்கிலம் இணை மொழியாக, துணை மொழியாக இருக்கட்டும். மத்திய அரசோடு உறவாடுவதற்கு துணை மொழியாக ஆங்கிலம் இருக்கட்டும் என்று தெளிவுபட சொல்லிவிட்டு அண்ணா அவர்கள் சொன்னார்கள். நேருவின் சாசனம் அப்படியே உயிரோடு இருக்கின்றது. நேருவின் சாசனத்தை மீறி இன்றைக்கு மத்திய அரசு செயல்படுமேயானால், அது நேருவிற்கே களங்கம் ஏற்படுத்துகின்ற சூழலாக அமையும். அதைத்தான் மிக அழகாக, மிகத் தெளிவாக, அண்ணா சொன்னார்கள்.

நாம் எந்த அளவிற்குப் பணிய தயாராகயிருக்கின்றோம் என்பதைக் கண்காணிப்பதற்காக, அளவிடுவதற்காக, ஏகாதிபத்திய சிந்தனை கொண்டவர்கள் தங்கள் மொழியைத் திணித்து, இதுதான் ஆட்சி மொழி; இந்த மொழியில்தான் நீங்கள் படிக்க வேண்டும்; இந்த மொழியில்தான் தேர்வு எழுத வேண்டும்; இதுதான் சட்டமாக்கப்பட வேண்டும்; இந்த மொழி தெரிந்தால், பாராளுமன்றத்திற்கு வா, இல்லையென்றால், நீ இரண்டாந்தரக்

குடிமகனாக, மட்டரகமானவனாக நீ கிடக்க வேண்டும்; இருக்க வேண்டும், இதுதான் அவர்களுடைய சூழ்ச்சி, உட்பொருள் என்று, இன்றைக்கு அல்ல, கிட்டத்தட்ட 60 ஆண்டுகளுக்கு முன்பே இந்தக் கருத்தை, மிகத் தெளிவாக, அண்ணா அவர்கள் சொல்லியிருக்கின்றார். ஆகவே, மொழிப் பிரிவு 17, மொழிப் பிரிவு 351 ஆகியவற்றை முழுமையாக நீக்கம் அல்லது திருத்தம் செய்ய வேண்டும்.

தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தந்த தலைவர் கலைஞர் அவர்களையும் இந்த நேரத்தில் நான் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், ஒரு காலத்தில் தமிழ் மொழி செம்மொழியாகுமா என்ற சந்தேகம், ஐயம் இருந்தது. ஆனால், கிரேக்க மொழி, லத்தீன் மொழி, சீன மொழி, Hebrew மொழி, சமஸ்கிருத மொழியோடு தமிழும் இன்றைக்கு செம்மொழியாக இருக்கின்ற அந்த நிலையை ஏற்படுத்தித் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர், EPS அவர்கள் பேசுகிறபோது, ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த மாநிலம் அமைதிப் பூங்காவாக இல்லை; சீர்கெட்டுப் போயிருக்கிறது; சட்டம்—ஒழுங்கு கெட்டுப் போயிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், இந்த மாநிலம் அமைதிப் பூங்காவாக இருக்கின்ற காரணத்தினால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அமைதிப் பூங்காவாக இருக்கின்ற காரணத்தினால்தான், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாநிலத்திற்கு வந்து தொழில் துவங்குவதற்கு நான் முந்தி, நீ முந்தி என்று போட்டி போட்டுக்கொண்டு தொழில்முனைவோர்கள் இங்கு வருகை தந்துகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 1½ வருடத்திற்குள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, துடிப்போடு பணியாற்றக்கூடிய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் 207 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை 2,37,210 கோடி ரூபாயில் ஏற்படுத்தி, 3,45,150 பேருக்கு வேலைவாய்ப்பு தரக்கூடிய அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) முதலீட்டாளர்களைக் கவர்ந்து, ஈர்த்திருக்கின்றார்கள் என்று சொன்னால் என்ன காரணம்? இங்கு அமைதி நிலவுகிறது; சச்சரவுகள் இல்லை; குழப்பங்கள் இல்லை; அச்சுறுத்தல்கள் இல்லை. எங்கு அமைதி நிலவுகின்றதோ அங்குதான் தொழில்முனைவோர்கள் விரும்பி,

2023 ஜனவரி 11] [திரு. நா. இராமகிருஷ்ணன்]

விரும்பி வருவார்கள். அத்தகைய சூழ்நிலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தந்திருக்கின்றார்கள். நல்ல உட்கட்டமைப்பு வசதி, transparency–*வெளிப்படைத் தன்மை, அதைப்போல அவர்களுக்குத் தேவையான குடிநீர், மின்சாரம் இடவசதி ஆகியவற்றை ஏற்படுத்தி, அவர்களிடம் அன்போடு பேசி, கரம் குலுக்கி, அந்தக் கட்டமைப்புகளையெல்லாம் செய்து கொடுக்கின்ற காரணத்தினால்தான், இது அமைதிப் பூங்காதான் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகப் பதில் சொன்னார்கள். நிச்சயமாக சட்டம்–ஒழுங்கைப் பற்றி கூறுவதற்கோ, பேசுவதற்கோ மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி* K. *பழனிசாமி அவர்களுக்கு கொஞ்சமாவது ** என்பதை மாத்திரம். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் பேசிய அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விட்டேன். (குறுக்கீடுகள்) அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விட்டேன். அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

திரு. நா. இராமகிருஷ்ணன்: *பெருநகர சென்னை மாநகராட்சி–* Greater Chennai Corporation. *சென்னை கிழக்கு கடற்கரைச் சாலையையொட்டி, மாமல்லபுரம் அருகே (குறுக்கீடுகள்) இதை மட்டும் பேசிவிட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தயவுசெய்து சட்டமன்ற உறுப்பினர்கள் யாரும் உட்கார்ந்து கொண்டு பேச வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் பேச ஆரம்பித்து 13 நிமிடங்கள் ஆகிவிட்டன.*

பிற்பகல் 1–00

திரு. நா. இராமகிருஷ்ணன்: *சென்னை மாநகராட்சியில், கிழக்குக் கடற்கரைச் சாலையையொட்டி மாமல்லபுரம் அருகே புதிய துணை நகரம் அமைக்கப்படுவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

இந்த அவையிலே தெரிவித்திருக்கின்றார்கள். நாளுக்கு நாள் சென்னையில் மக்கள் நெருக்கடி அதிகமாகிக்கொண்டிருக்கிறது. மாமல்லபுரத்தில் எந்த இடத்தில் இந்தத் துணை நகரம் வரவிருக்கிறது என்று சொன்னால், உலகமே வியக்கத்தக்க வகையில் கிட்டத்தட்ட 180 நாடுகள், 1,800–க்கும் மேற்பட்ட வீரர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்ட பன்னாட்டு செஸ் ஒலிம்பியாட் நடத்திய அந்த இடத்தின் அருகில், மாமல்லபுரம் அருகே இந்தப் புதிய துணை நகரம் வருவது உண்மையிலேயே பாராட்டுக்குரியது. இதை அந்தப் பகுதி மக்கள் மிகவும் வரவேற்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொங்கல் திருநாளையொட்டி 35,323 நியாய விலைக் கடைகளில் 2 கோடியே 19 இலட்சம் அரிசி அட்டைதாரர்களுக்கு ரூ.2,429 கோடியில், ஆயிரம் ரூபாய், 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுக் கரும்பு ஆகியவை தரப்பட்டு, பேருவகையுடன் அதைப் பெற்றுக் கொண்ட தமிழ்நாட்டு மக்கள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மனதார, இதயம் குளிர பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நானும் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பொருளாதார வளர்ச்சிக் குழுக் கூட்டம் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. மோடி அவர்கள் தலைமையில் நடைபெறும். இக்குழுக் கூட்டத்தின் நோக்கம் என்பது சமூக வளர்ச்சி குறித்த ஆய்வு நடத்துவதாகும். அப்படி சமூக வளர்ச்சி குறித்து பேசப்பட்ட அந்த ஆய்வுக் கூட்டத்தில், இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களின் ஒட்டுமொத்த சமூக வளர்ச்சியைப் பார்த்தால் தமிழ்நாடு சமூக வளர்ச்சிக் குறியீட்டு அறிக்கையில் (Social Progress Index) 6.39 புள்ளிகளைப் பெற்று இந்தியாவிலேயே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது 63.3 புள்ளிகள்தானே! 6.33 புள்ளிகளா?

திரு. நா. இராமகிருஷ்ணன்: 63.9 புள்ளிகளைப் பெற்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது 63.3 புள்ளிகள்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: 63.3 புள்ளிகளைப் பெற்று இன்றைக்கு தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என்றால் அந்தப்

பெருமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத்தான் சேரும். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டு இந்தியாவிலேயே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்தான் Number One முதலமைச்சர் என்று சொன்னார்கள். அவர் அடக்கத்தோடு சொன்னார்கள்; இந்தியாவில் Number One முதலமைச்சர் என்று சொல்வதைக் காட்டிலும், இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் நல்ல வளர்ச்சி பெற்ற முதல் மாநிலம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று என்றைக்கு அந்த நிலையை அடைகின்றோமோ, அதுதான் என்னுடைய இலட்சியம் என்று சொன்னார்கள். அந்தவகையிலே இன்றைக்கு கல்வி என்றாலும் சரி, மருத்துவம் என்றாலும் சரி, வேளாண்மை என்றாலும் சரி, அனைத்திலுமே முதல், முதல், முதல் என்ற வகையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு இந்தியாவிற்கே வழிகாட்டியாக, இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக இருந்து செயல்படுவது தமிழ்நாட்டு மக்களுக்குப் பெருமை தருகின்ற ஒன்றாகும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள். 10 நிமிடங்களில் உரையை முடிக்க வேண்டும். ஆனால், இதற்கு முன்பு பேசிய உறுப்பினர் 14 நிமிடங்கள் உரையாற்றியிருக்கிறார்கள். அதனால், நீங்களும் 14 நிமிடங்கள் உரையாற்ற எடுத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, முதலமைச்சராக இருந்த ** என்று நான் சொன்ன வார்த்தையை, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள் வருத்தப்பட்டு கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆளுமை என்று மாற்றிக்கொள்ளலாம். கிராமப்புறங்களில் நாங்களெல்லாம் பேசிக்கொள்ளும் வழக்கமான சொல்தான் அது. (குறுக்கீடு) உங்கள் மனதை (குறுக்கீடு) அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதேபோல, திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[*2023 ஜனவரி 11*

பிற்பகல் 1–05

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் உரைக்கு நன்றி கூறுகின்ற வாய்ப்பினை நல்கிய எங்கள் கட்சியினுடைய தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) போற்றுதலுக்குரிய அன்புச் சகோதரர் எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலில், மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி கூறுகின்ற முகத்தான் இங்கே நான் நின்றுகொண்டிருக்கிறேன்.*

*மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய உரை, முழுமையாக இல்லை என்பதை நான் இங்கே அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். காரணம், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அவைக்கு வருகின்றபோது, சட்டமன்றத்தில் இருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணையின்பேரில், பேரவைச் செயலாளர் அவர்கள் ஒரு கையேடு கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கையேட்டில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் பேசி முடிக்கின்ற வரையில் அமைதி காக்க வேண்டும் என்று, நீங்களே இங்கே ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இங்கே ஆற்றிய உரையை முழுமையாக எங்களுக்கு நீங்கள் அளிக்கவில்லை. அதோடு மட்டுமல்ல, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் பேசுகின்ற பேச்சு குறித்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உங்களுடைய உரையில் கருத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். ** அதோடு மட்டுமல்ல,* Constitution–*படி, இந்த மாநிலத்தின் தலைவராகவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இருக்கிறார்கள். அப்படி இருக்கின்றபோது மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையாற்றிய உரை முழுமையாக இங்கே எங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அதற்குப் பின்பு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, அதோடு மட்டுமல்லாமல், இந்த அவையின் மாண்பைக் காக்கக்கூடிய இடத்தில் நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். அப்படி மாண்பைக் காக்கக்கூடிய இடத்தில் அமர்ந்திருக்கின்ற*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 ஜனவரி 11] [திரு. கே.பி. முனுசாமி]

நீங்கள், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் கருத்துகளைச் சொல்லிவிட்டு அமர்ந்திருந்தபோது, இடையில், **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தவறு. நான் கடைசியில் பதில் சொல்லலாம் என்று நினைத்தேன். நீங்கள் உட்காருங்கள். ஒரு நிமிடம், ஏற்கெனவே விரிவான பதிலை நான் சொல்லியிருக்கிறேன். எனக்கும் mike கிடையாது. மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் mike கிடையாது. (குறுக்கீடு) உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள், நான் சொன்னதற்குப் பிறகு உங்களுக்கு time தருகிறேன். இது சம்பந்தப்பட்டதை நான் ஏற்கெனவே பதிவு செய்திருக்கிறேன். என்ன நடந்தது என்பதற்குத் தெளிவான விளக்கத்தோடு பதிவு செய்திருக்கிறேன். மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய மாண்பிற்கு எந்தவகையிலும் இடையூறு இல்லாமல் அவரை அழைத்து வந்து, பேச வைத்து, அவர் விரும்பியதைப் பேசி சென்ற பின்புதான்—உடனடியாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரவில்லை என்றால், இது இந்தியாவிலேயே ஓர் அசாதாரண முன்மாதிரியாக ஏற்பட்டுவிடும். ஆகவேதான், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னிடம் பேசுவதற்கு அனுமதியும் கேட்டு, 'உடனடியாக பேரவை விதி 17–ஐத் தளர்த்தி, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தாருங்கள்' என்று சொன்னார்கள். இந்தப் பக்கத்தில் நாங்கள் இருந்தோம். நான் இருக்கும் இடத்தில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இருந்தார்கள். Mike இல்லாத காரணத்தினால் என்ன நடந்தது என்று உங்களுடைய கவனத்திற்கு வராமல் இருந்திருக்கலாம்.

பிற்பகல் 1–10

அதன் பின்புதான் என்னுடைய அனுமதியைப் பெற்றுத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். நிறைவேற்றித் தாருங்கள் என்று கேட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் என்ற முறையில் நிறைவேற்றினேன். எனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்றால், பேரவை விதி 286–ஐ எடுத்துக்கொள்ளுங்கள். எவையெல்லாம் அதிலே சொல்லப்படவில்லையோ, அனைத்திற்கும், அங்கிருக்கக்கூடிய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சூழலைப் பொறுத்து முடிவெடுக்கக்கூடிய எல்லா அதிகாரமும் இந்த அவையில் பேரவைத் தலைவருக்குத்தான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, விதிகளுக்குப் புறம்பாகவோ, வேறு எதற்கு புறம்பாகவோ இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரவில்லை. அவ்வாறு தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றப்படவில்லை என்று சொன்னால், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் பேசியது, அனைத்து ஊடகங்களிலும், பத்திரிகைகளிலும் செய்தியாகி, இந்தியாவிற்கே ஒரு தலைக்குனிவை ஏற்படுத்தியிருக்கும். அந்தத் தலைக்குனிவிலிருந்து மீட்டவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் அரசியலுக்காகப் பேசவில்லை. நீங்கள் அனைத்தையும் நன்றாக அறிந்தவர், உங்களுக்கு எல்லாம் தெரியும். அடுத்த subject–க்கு வாருங்கள்.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கோரிக்கையும் அதுதான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அரசியல் பேசக் கூடாது. ஓர் அரசியல் கட்சிக்கு சார்பாக நடந்துகொள்ளக் கூடாது என்பதற்காகத்தான் இந்தக் கருத்தை நான் வலியுறுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுவரை அவ்வாறு நடக்கவில்லை. அப்படி பாகுபாடு பார்க்காமல் உங்களையும் நடத்துவதால்தான், இந்தச் சட்டமன்றத்தின் மாண்பு காக்கப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு ஆளுநர் அவர்களைப் பற்றி பேச வேண்டாம். ஏனெனில், பேரவை விதி 92 (vii)–ல், அவர்கள் குறித்து discuss செய்ய வேண்டாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, தயவுசெய்து அடுத்த பொருளுக்கு வாருங்கள்.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தவறான கருத்தைப் பதிவு செய்ய வேண்டாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. தயவுசெய்து (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, 9 ஆம் தேதி கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் (குறுக்கீடுகள்) நீங்கள் தவறான கருத்தைப் பதிவு செய்தால் (குறுக்கீடுகள்) தவறான கருத்து

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஜனவரி 11] [பேரவைத் தலைவர்]

பதிவாகக் கூடாது. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடு) தீர்ப்பு வழங்கிவிட்ட பிறகு, அது தேவையில்லை.

திரு. கே.பி. முனுசாமி: *என்னுடைய கருத்தைப் பதிவு செய்கிறேன். அதற்கு அடுத்தபடியாக உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏற்கெனவே பதிவு செய்து, தீர்ப்பும் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடு) ஒரு விஷயத்திற்கு எத்தனை* rulings *கொடுக்க முடியும்? பேசுவதற்கு அனுமதி கொடுத்தது தவறு என்று நீங்கள்தான் சொன்னீர்கள். அதற்கு நான் ஒரு* ruling *கொடுத்துவிட்டேன். அது பதிவாகிவிட்டது. அடுத்த பொருள் குறித்து பேசுங்கள். (குறுக்கீடு)*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஒரு கருத்தைச் சொன்னீர்கள். நான் அனுமதி கொடுக்கவில்லை என்று சொன்னால், இந்திய துணைக் கண்டத்திற்கே தலைக்குனிவு ஏற்படக்கூடிய ஒரு சூழல் வந்துவிடும் என்று நீங்கள் சொன்னீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆமாம்.*

திரு. கே.பி. முனுசாமி: *அது என்ன கருத்து என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அவையிலே குறிப்பிடுவாரா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் அதை அழகாகச் சொல்கிறேன். பேரவை விதி 17–ல், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 175 அல்லது 176–வது பிரிவின்படி, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இந்த அவைக்கு வந்து பேசுவதற்கு எல்லா உரிமையும் உண்டு. என்ன பேச வேண்டுமென்றால் இந்திய அரசமைப்புச் சட்டம் 163 (1) மிகத் தெளிவாகச் சொல்கிறது. நீங்கள், அமைச்சரவை* (Council) *என்ன எழுதித் தருகிறார்களோ, அதை வாசிக்கிற உரிமை மட்டும்தான் அவருக்கு உண்டே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே எந்தப் பொறுப்பும், கடமையும், அதிகாரமும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். இதிலே விவாதம் தேவையில்லை. காரணம், பேரவை விதி 92* (vii) *(குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

*மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் ஒரு தெளிவான தீர்ப்பைச் சொல்லி முடித்துவிட்டீர்கள். அதே பிரச்சினை குறித்து, மீண்டும் மீண்டும் மாண்புமிகு ஆளுநரைப் பற்றி பேசுவது என்பது, ஏதோ திட்டமிட்டு, இவர்கள் குற்றஞ்சாட்டி, ஏதோ நடத்தவிருக்கிறார்கள். மாண்புமிகு ஆளுநர் அவர்களைப் பற்றி பேச அனுமதிக்கக் கூடாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் பேசுங்கள். (குறுக்கீடு) Subject–க்கு வாருங்கள். ஆளுநர் உரை வாசித்த பின்பு, அதில் உள்ளிருக்கக்கூடிய பொருட்கள் அனைத்திற்கும் பொறுப்பு மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சரவை. அது சம்பந்தமாகப் பேசுங்கள்.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஏதோ திட்டம்போட்டு நாங்கள் செயல்படுவதாக ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) சற்று அமைதியாக இருங்கள். கேளுங்கள். ** அனுபவமுள்ள ஒரு. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்பதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் ஒரு மூத்த உறுப்பினர். அரசியல்ரீதியாக அனுபவமுள்ளவர். மாண்புமிகு ஆளுநரைப் பற்றி discuss செய்யக் கூடாது என்று பேரவை விதி 92 (vii)–ல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அது ban–ல் இருக்கிறது. அதை விட்டுவிடுங்கள். நீங்கள் சப்ஜெக்ட்டிற்குள் வந்து பேசுங்கள். நீங்கள் ஆரம்பித்து 12 நிமிடங்கள் ஆகிவிட்டன.

பிற்பகல் 1–15

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் திட்டமும் நாங்கள் தீட்டவில்லை. மாறாக இந்த அவையின் மாண்பு காப்பாற்றப்பட வேண்டுமென்ற ஒரே தொலைநோக்கோடுதான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே இவ்வளவு கருத்துகளை நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். எனவே, நீங்கள் தயவுசெய்து **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

2023 ஜனவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் சொன்னதை நான் அவைக் குறிப்பில் ஏற்ற முடியாது. அவைக் குறிப்பிலிருந்து அதை நீக்குகிறேன். நீங்கள் திரும்பத் திரும்ப என்னைப் பேச வைக்கிறீர்கள்.* (குறுக்கீடு) *நீங்கள் கேளுங்கள். 1998–ல் என்ன நடந்தது; 2000–ல் என்ன நடந்தது; 2011–ல் என்ன நடந்தது; நீங்களும் இருந்தவர்கள். இனிமேல் இதற்கு விளக்கம் தேவையில்லை. தயவுசெய்து அதைத் தாண்டி வாருங்கள். இந்த சப்ஜெக்ட் குறித்து இத்தோடு போதும். நேரம் முடிந்துவிட்டது.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அடுத்த சப்ஜெக்ட்டுக்கு வந்துவிடுகிறேன். நடந்து முடிந்த பட்ஜெட் தொடரில் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் ஒரு கோரிக்கை வைத்தேன். அந்தக் கோரிக்கை என்னவென்றால், எங்களுடைய மாவட்டம் தென் மாநிலங்களுக்குத் தேவையான காய்கறிகள் விளையக்கூடிய ஒரு பகுதியாக இருக்கிறது. தமிழகத்தில் வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத ஒரு சீதோஷ்ண நிலை வேப்பனஹள்ளி தொகுதி, ஓசூர் தொகுதி, தளி தொகுதி ஆகிய இந்த மூன்று தொகுதிகளில் உள்ளது. அனைத்து வகைக் காய்கறிகளும், பூக்களும் விளையக்கூடிய ஒரு பகுதியாக இருக்கிறது. அப்படிப்பட்ட பகுதிகளில் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு அங்கிருக்கக்கூடிய நிலங்களைக் கையகப்படுத்தக் கூடாது என்று நான் வேண்டுகோள் விடுத்தபோது, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு நல்ல பதிலைக் கொடுத்தார்கள். நிச்சயமாக விளைநிலங்களில் தொழிற்சாலைகள் அமைக்கப்பட மாட்டாது என்ற வாக்குறுதியை நான் இதே அவையில் தருகிறேன் என்று கூறினார்கள். ஆனால், இப்போது சூளகிரி பகுதியில் உத்தனப்பள்ளி ஊராட்சி, அயனப்பள்ளி ஊராட்சி, நாகமங்கலம் ஊராட்சி ஆகிய 3 ஊராட்சிகளுக்குட்பட்ட 3,200 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் நிலம் எடுக்கின்ற நடவடிக்கையை கைவிடுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

அதோடு, ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு நஷ்ட ஈடாக, 34 இலட்சம் ரூபாய், 36 இலட்சம் ரூபாய் என்று விவசாயிகளுக்குக் கொடுத்து, அந்த நிலங்களிலுள்ள

[திரு. கே.பி. முனுசாமி] [2023 ஜனவரி 11

வாழ்வாதாரமான வீடுகளுக்கு உரிய நஷ்ட ஈடு வழங்காமல் தவிர்த்து வருகிறார்கள். எனவே, உடனடியாக அந்த வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இங்கே மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளிடத்தில் ஒரு ஏக்கர் 34 இலட்சம் ரூபாய் என்று வாங்கி, தொழில்முனைவோருக்கு ஒரு ஏக்கர் ஒரு கோடியே 28 இலட்சம் ரூபாய் என்று இந்தத் துறை, இந்த நிருவாகம் விற்கிறதென்று சொன்னால், விவசாயிகளை எந்தளவிற்கு இந்த நிருவாகம் ** என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ** என்ற வார்த்தையை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடு) சிட்கோ அதில் என்னென்ன வசதிகளைக் கொடுக்கிறார்களென்று நமது ஆட்சியில் நடந்ததுதான். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளுக்கு அல்லது சிப்காட்டிற்கு நிலங்களை எடுக்கக்கூடிய இந்தப் பணிகள் உங்கள் ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. உங்கள் ஆட்சிக் காலத்திலும் நில எடுப்பு நடந்திருக்கிறது. உங்கள் ஆட்சிக் காலத்திலும் எடுக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த நில எடுப்புக்கு நீங்களும் compensation கொடுத்திருக்கிறீர்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்திலும் தொழில்முனைவோர்களுக்கு இதைக் கூடுதல் விலைக்கு விற்றிருக்கிறார்களென்று சொன்னால், இந்த வார்த்தையை நான் திருப்பிச் சொல்வதற்கு நேரமாகாது. நான் உங்களுக்குக் கவனப்படுத்த விரும்புவது என்னவென்று சொன்னால், தொழிற்சாலைகளுக்காக நாங்கள் கையகப்படுத்தக்கூடிய நிலங்களை சிப்காட் மேம்பாடு செய்கிறது. சிப்காட் என்பது ரியல் எஸ்டேட் நிறுவனம் கிடையாது. உங்களிடமிருந்து அந்த நிலத்தை வாங்கி, அவருக்கு அதே இடத்தில் 'As is where is' condition–ல் வேறு இன்னொருவருக்குக் கொடுக்கக்கூடிய ஒரு ரியல் எஸ்டேட்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நிறுவனம் கிடையாது. ஒரு தொழிற்பேட்டைக்கான நிலத்தை நாங்கள் கையகப்படுத்துகிறபோது, அதிலிருக்கக்கூடிய development *முழுக்க நாங்கள் செய்கிறோம்.* Common facilities. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மின்சாரம் கொடுக்கிறோம், தண்ணீர் கொடுக்கிறோம்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *நாங்கள் மின்சாரம் கொடுக்கிறோம்; தண்ணீர் கொடுக்கிறோம்; உள்ளே இருக்கக்கூடிய சாலை வசதிகளைச் செய்கிறோம்.* Other facilities *மொத்தமாக செய்து கொடுக்கிறோம்.* It is a developed industrial plot. *அதைக் கொடுப்பதற்கான வழிகள்தான் இதில் நிர்ணயிக்கப்படுகிறதேயொழிய, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, விவசாயிகளிடத்திலே அதை நாம் அடிமாட்டு விலைக்குப் பெற்று, தொழில்முனைவோர்களுக்கு அதிக விலைக்குக் கொடுப்பது என்பது சரியான கருத்து அல்ல என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.*

பிற்பகல் 1–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 34 இலட்சம் ரூபாய் கொடுக்கக்கூடிய அந்த இழப்பீட்டை அரசு இன்னும் அதிகரித்து 25 இலட்சம் ரூபாய் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் அனைத்து பொறுப்புகளிலும் இருந்தவர். நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்கிறேன். ஒன்றிய அரசிடமிருந்து நிலம் எப்படிக் கையகப்படுத்த வேண்டுமென்று சொல்லி வரும்போது, உங்கள் ஆட்சியில்தான் ஒன்றரை மடங்கு போதும் என்று சொல்லி விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அது ஏற்கெனவே இருக்கிறது. நான்கு மடங்கு கொண்டு வந்ததை, ஒவ்வொரு மாநிலமும் எவ்வளவு செய்ய வேண்டுமென்பது மாநிலத்தினுடைய உரிமை. அ.தி.மு. கழகம் ஆட்சியில் இருந்தபோதுதான் ஒன்றரை மடங்கு என்று சொல்லி விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. நாங்களும் பாதிக்கப்பட்டிருக்கிறோம்; எங்களுக்கு வேண்டியவர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதையும் நீங்கள் கருத்தில்*

வைத்துக்கொண்டு, தயவுசெய்து பேச வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *அதில் இன்னொரு* irony *என்னவென்று கேட்டீர்களென்றால், ஒருபுறம் நீங்கள் என்ன சொல்கிறீர்களென்றால், விளைநிலங்களைக் கையகப்படுத்தாதீர்கள் என்று சொல்கிறீர்கள்; இன்னொரு பக்கம் அதற்கு* compensation*–ஐ உயர்த்தி வழங்குங்கள் என்று சொல்கிறீர்கள். நாங்கள் என்னதான் செய்வது? (மேசையைத் தட்டும் ஒலி) இல்லை, உங்கள் பகுதியில் விளைநிலங்களை– அதனால்தான், நான் சென்றமுறை பேசும்போது சொன்னேன். நீங்கள் பேசும்போது நான் அப்போது குறுக்கிட விரும்பவில்லை. விவசாயிகள் விரும்புகிறபட்சத்தில் அவர்களிடத்தில் இருக்கக்கூடிய விளைநிலங்களை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்கிறோம். அப்படி விளைநிலங்களை அவர்கள் கொடுக்கின்றபோது, அவர்களுக்கு முறையாக அரசினுடைய* guidelines *பிரகாரம் என்ன இருக்கிறதோ, அதன்படி கொடுக்கிறோம். இல்லையென்றால், மாவட்ட அளவில் அதற்கு ஒரு குழு இருக்கிறது. அதற்குப் பிறகு மாநில அளவிலும் ஒரு குழு இருக்கிறது–*private negotiations*–எந்த இடத்திலும் பார்த்தீர்களென்றால், விவசாயிகளை வஞ்சித்து ஓர் இடத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று, இந்த அரசு ஒரு போதும் கருதவில்லை; கருதாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரையை முடித்துவிடுங்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மேதகு ஆளுநர் உரையின் இரண்டாம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களிடம் தயவுசெய்து அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் ஆளுநர்*

அவர்களையே இழுக்காதீர்கள். (குறுக்கீடு) உரையைப் பேசுங்கள். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதுமே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு கருத்தை வலியுறுத்துகின்றபோது, கடுமையாக வலியுறுத்துவார்கள். அது முடிந்துவிட்டு, செய்திக்கு வருகின்றபோது, அங்கு சென்றுவிடுவார்கள். மீண்டும், உங்களிடத்தில் வர மாட்டார்கள். தைரியமாக எனக்கு அனுமதி கொடுக்கலாம்.

'கடந்த 50 ஆண்டுகளாக, பல்வேறு துறைகளில் தமிழ்நாடு நமது நாட்டில் உள்ள மாநிலங்களில் முன்னோடி மாநிலமாகப் பெரும் வளர்ச்சி கண்டுள்ளது' என்றும் அதுவே 'பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழு அண்மையில் மாநிலங்களின் வளர்ச்சி நிலை குறித்து ஆய்வு செய்து வெளியிட்டுள்ள சமூக வளர்ச்சிக் குறியீட்டு அறிக்கையில் (Social Progress Index) 63.3 புள்ளிகளைப் பெற்று, இந்தியாவின் பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மகிழ்ச்சியான விஷயம். ஏனென்றால், இதற்கு முன்னர் என்ன சொல்லியிருக்கின்றார்கள் என்றால், 50 ஆண்டு காலம் என்று வருகின்றபோது, தமிழகத்தை 30 ஆண்டு காலம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சி செய்திருக்கிறது. அந்த 30 ஆண்டு காலத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பத்தாண்டுக் காலம்; தமிழகம் அன்று வறுமையில் இருந்த காலகட்டத்தில் சத்துணவுத் திட்டத்தைக் கொடுத்து, ஏழையெளிய குழந்தைகளைப் பள்ளிக்குக் கொண்டுவந்து ஒரு புரட்சியை ஏற்படுத்தினார். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மட்டுமல்ல, அன்றிருந்த ஏழை தாய்மார்களுக்கு முதல் முறையாக மாதா மாதம் ஓய்வூதியமாக 50 ரூபாய் கொடுத்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மட்டுமல்லாமல், முதன்முறையாக வேட்டி, சேலையைக் கொடுத்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். பிறகு உங்களுடைய பதிலைச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. ராஜேஷ் குமார், அமைதியாக இருங்கள்.

திரு. கே.பி. முனுசாமி: அதைப்போல, தன்னிறைவுத் திட்டம் என்ற திட்டத்தை உருவாக்கி, மாநிலம் முழுவதும் அனைத்து வகையான உட்கட்டமைப்புகளையும் மேம்படுத்தியவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு இட ஒதுக்கீட்டு சதவிகிதத்தை ஐம்பது சதவிகிதமாக உயர்த்தி (மேசையைத் தட்டும் ஒலி) பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். புரட்சித் தலைவர் மறைகிறார்; புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக ஆகிறார்கள். 16 ஆண்டு காலம் முதலமைச்சராக இருக்கிறார். 16 ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்தபோது, மாநிலத்தினுடைய அவலங்களை ஒவ்வொன்றாக ஆய்வு செய்தார்கள். பெண் குழந்தைகள் பிறந்தால் அந்தக் குழந்தைகளை வளர்க்க முடியாது என்று கள்ளிப்பால் இட்டு கொல்கின்ற கொடுமையான நிகழ்வு தமிழகத்தில் இருந்துகொண்டிருந்தது. அந்தக் கொடுமையான நிகழ்வைப் போக்க வேண்டுமென்பதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே தொட்டில் குழந்தைத் திட்டத்தைக் கொடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) ஆயிரக்கணக்கான குழந்தைகளைக் காப்பாற்றியதோடு மட்டுமல்லாமல், இன்று பல பிள்ளைகள் உயர்ந்த வேலைவாய்ப்பைப் பெற்று நல்ல நிலையில் இருந்து கொண்டிருக்கின்றார்கள்.

பிற்பகல் 1–25

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவு கொடுத்ததைப்போல, தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை குழந்தைகளுக்கும் பெற்றோர்கள் வழங்க முடியாத அனைத்து வசதிகளையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கினார்கள். அதாவது, பள்ளிக் குழந்தைகளுக்கு 2 செட் சீருடைகள், புத்தகம், நோட்டு, பேனா, பென்சில், அதை எடுத்துச் செல்கின்ற பை, எட்டாம் வகுப்பு முடித்து ஒன்பதாம் வகுப்பு சென்றால் சைக்கிள், +1 சென்றால் மடிக்கணினி என அளித்து, கல்வியிலே புரட்சி செய்த காரணத்தினால்தான், இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழகம் உயர் கல்வியிலே முதன்மை மாநிலமாகத் தற்போது இருந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது உடனே வந்துவிடவில்லை; 16 ஆண்டு கால சாதனை. இதேபோன்று, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 50 விழுக்காடு என்றிருந்த இட ஒதுக்கீட்டை 69 விழுக்காடாக அரசமைப்புச் சட்டத்தின்

2023 ஜனவரி 11] [திரு. கே.பி. முனுசாமி]

9–வது அட்டவணையில் கொண்டு வந்தார்கள். அப்போது, திராவிடர் கழகத்தினுடைய தலைவர் திரு. கி. வீரமணி அவர்கள், 'சமூக நீதி காத்த வீராங்கனை' என்ற பட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வழங்கினார். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தொடர்ந்து மரியாதைக்குரிய இன்றைய எதிர்க்கட்சித் தலைவர், எங்களுடைய தலைவர் மாண்புமிகு திரு. எடப்பாடி பழனிசாமி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு திட்டங்களை வழங்கினார்கள். அதேநேரத்தில், நீட் தேர்வு வந்த காரணத்தினால், அரசுப் பள்ளி மாணவர்கள் மருத்துவக் கல்லூரிக்குச் செல்ல முடியாது என்ற நிலையை உணர்ந்தவுடன், தான் ஏற்றுக்கொண்ட தலைவர்களின் சிந்தனைகளோடு தானும் இணைந்து, (மேசையைத் தட்டும் ஒலி) உள் ஒதுக்கீடாக 7.5 விழுக்காட்டினைக் கொடுத்து, நூற்றுக்கணக்கான அரசுப் பள்ளி மாணவர்களை மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று இந்தியத் துணைக் கண்டத்திலேயே Social Progress Index*–ல் 63.3 என்ற நிலையில் உயர்ந்து, தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்குகிறது என்றால், அதற்கு மூல, முக்கியக்கர்த்தாக்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா, திரு. எடப்பாடி பழனிசாமி ஆகியோர் என்பதை நான் இந்த நேரத்தில் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடித்த பிறகு பதில் சொல்லலாமா! (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்துவிடட்டும்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் தேர்வைப் பொறுத்தவரையில், தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த வரையில் நீட் தேர்வை தமிழகத்தில் நுழைய விடாமல் தடுத்தார்கள்; அதை மறந்துவிட முடியாது. (குறுக்கீடு) அதுமட்டுமல்ல, பொறியியல் கல்லூரிகளுக்கு நுழைவுத் தேர்வே வரக் கூடாது என்று சட்டம் போட்டது 2006 ஆம் ஆண்டு; அந்தச் சட்டத்தை நிறைவேற்றி, நுழைவுத் தேர்வே கூடாது என்று கொண்டு வந்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான். அதைப் பின்பற்றித்தான், அதற்குப் பிறகு நீங்கள் செய்தீர்களே தவிர, நீங்கள் அதற்கு முதலில் செய்தது*

குறைவு. அதுமட்டுமல்ல, தாழ்த்தப்பட்டவர்களுக்காக இருந்த இட ஒதுக்கீடு முதன்முதலாக 2 சதவிகிதம் அதிகரிக்கப்பட்டதும் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் என்பதை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் தேர்வு எப்பொழுது வந்தது என்பது நாட்டிற்கே தெரியும்; மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். மத்தியிலே யார் ஆட்சியிலே இருந்தார்கள்? யார் அவர்களோடு கூட்டணி வைத்திருந்தார்கள்? அமைச்சரவையில் யார் இடம் பெற்றார்கள் என்பது அனைவருக்குமே தெரியும்; இது விவாதிக்கப்பட்டது. மத்தியில் காங்கிரஸ் ஆட்சியில் திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டணியில் இருந்தபோதுதான் நீட் தேர்வு வந்தது; (மேசையைத் தட்டும் ஒலி) 2010 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் தேதிதான் அது கொண்டுவரப்பட்டது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் தேர்வை தமிழ்நாட்டிற்குள் நுழையவிடாமல் தடுத்து நிறுத்தியவர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, நீங்கள் தலைவராக ஏற்றுக்கொண்ட அம்மையார் அவர்கள் முதலமைச்சராக இருந்தவரையிலும் நீட் தேர்வு தமிழகத்திற்குள் வரவில்லை; அதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். ஆனால், யாருடைய ஆட்சிக் காலத்தில் நீட் தேர்வு உள்ளே நுழைந்தது? அதுதான் முக்கியம். அதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், போதுமே! (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் தேர்வைக் கொண்டு வருகின்ற அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் இருந்தது; மாநில அரசாங்கத்திடம் இல்லை. நீட் தேர்வை இந்தியா முழுவதும் கொண்டு வருவதற்கு மத்திய*

அரசாங்கம் notification போட்டது 2010 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் தேதியாகும். அப்போது, காங்கிரஸ் ஆட்சியில் இருந்தது; அதிலே திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகித்திருந்தது; திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் மத்திய சுகாதாரத் துறை இணை அமைச்சராக இருந்தார் என்பதனை மறக்க வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத்தைச் சேர்ந்தவர் இணை அமைச்சராக இருந்தபோதுகூட நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை; அது எங்களை மீறி வந்தது. எங்களை மீறிதான் அது நிறைவேற்றப்பட்டது. (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். நான் கேட்க விரும்புவது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தவரை, தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தவரையில், தமிழ்நாட்டிற்குள் நீட் தேர்வை நுழையவிட்டோமா? நான் இப்பொழுதும் சொல்கிறேன். உங்களுடைய தலைவர் அம்மையார் அவர்கள் முதலமைச்சராக இருந்த வரையிலும் நீட் தேர்வை உள்ளே நுழைய விடவில்லை; தடுத்து நிறுத்தினார்கள். ஏன் உங்களால் நீட் தேர்வை தடுத்து நிறுத்த முடியவில்லை? அதற்கு முதலில் பதில் சொல்லுங்கள்.

(அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கோஷமிட்டனர்.)

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது உச்ச நீதிமன்றத் தீர்ப்பு. உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காமல் இருக்க முடியுமா? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அமல்படுத்த வேண்டுமா? வேண்டாமா! அதற்குப் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீட் குறித்து விவாதித்தது போதும். கலைஞர் ஆட்சிக் காலத்தில் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, அதற்கு மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு, தடுத்து நிறுத்தப்பட்டது. அதுதான் உண்மை. மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ஏற்க வேண்டுமா, வேண்டாமா என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்கிறார்கள். எங்கள் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர்தான் உச்ச நீதிமன்றத்தில் நுழைவுத் தேர்வை அனுமதிக்க முடியாது என்ற தீர்ப்பைப் பெற்றவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனை எதிர்த்து நாங்களும் வழக்கு தொடர்ந்தோம்; இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் இன்றைக்கும் நீட் தேர்வு தமிழகத்தில் இருக்கக் கூடாது என்பது எங்களுடைய நிலைப்பாடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி. (குறுக்கீடு) அவர்கள் நீட் வேண்டாம் என்று சொல்லிவிட்டார்களே! மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் தேர்வுக்கு எதிராக நாங்கள் வழக்கு தொடர்ந்தோம் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். 2021 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 4 ஆம் தேதி அன்றைய அரசின் சார்பில் ஒரு வழக்கு தொடுக்கப்படுகிறது. அந்த வழக்கு என்னவென்றால், காலாவதியான ஒரு சட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டு, அதனை அடிப்படையாகக் கொண்டு தொடுக்கப்பட்ட வழக்கு. அந்த வழக்கு தற்போது நடந்துகொண்டிருக்கிறது. அந்த வழக்கு தற்போது தொடர்ந்து நடந்தால், அது தமிழக மாணவர்களுக்கு எதிராக அமையும். அந்தமாதிரி காலாவதியான ஒரு சட்டப் பிரிவை முன்மாதிரியாகக் காட்டி, வழக்கு தொடுத்துவிட்டு, நாங்களும் வழக்கு தொடுத்துவிட்டோம் என்று மார்தட்டிக் கொள்வது என்பது ஏற்புடைய செயல் அல்ல.

இன்னொன்று 7.5 சதவிகித இட ஒதுக்கீடு குறித்து சொன்னார்கள். அந்த 7.5 சதவிகித இட ஒதுக்கீடும் சட்டரீதியாக செல்லுபடியாகாது என்ற ஒரு நிலை வந்தபோது, உச்ச நீதிமன்றத்தின் மிக உயர்ந்த வழக்கறிஞர்களைக் கொண்டு, அதனை இன்றைக்கு சிறப்பு செய்திருக்கிற பொறுப்பு நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னொன்று, நீட் தேர்வு விலக்கு மசோதா இங்கிருந்து மாண்புமிகு குடியரசுத் தலைவருக்கு சென்றதற்குப் பிறகு, மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்கள் அதை refuse செய்து திருப்பி அனுப்பிய செய்தியைக் கடைசி வரை இந்த மன்றத்தில் சொல்லாமல் மறைத்தது மட்டுமல்ல, நீட் என்ற ஒரு விஷயத்தை தமிழ்நாட்டில் முழுமையாகக் கொண்டு வந்த பெருமை நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைச் சாரும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முழுமையாக பேசி முடித்தவுடன் தங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் நீட் விலக்கு பெறுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளைத் தமிழக மக்கள் அனைவரும் மிகச் சிறப்பாக அறிவார்கள். இன்றைக்கு மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அதற்கு ஒப்புதல் தராத நிலையில் இரண்டாவது முறையாக மசோதாவை நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி, ஆளுநர் அந்த மசோதாவிற்கு வேறு வழியில்லாமல் ஒப்புதல் தந்து, மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டாவது முறையாக அதனைக் கொண்டு வந்தபோது, அவர்கள் அதனை ஆதரிக்கத்தான் செய்திருக்கிறார்கள். இதனை இதோடு நிறுத்திக்கொள்வோம். (குறுக்கீடு) மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியரசுத் தலைவர் அலுவலகத்திலிருந்து தொடர்ச்சியாக மூன்று முறை உயர் கல்வித் துறை, ஆயுஷ் நிர்வாகம், சுகாதாரத் துறை ஆகிய மூன்று துறைகளிலிருந்து

[திரு. மா. சுப்பிரமணியன்] [2023 ஜனவரி 11

தமிழகத்திடம் விளக்கம் கேட்கப்பட்டது. சட்ட வல்லுநர்கள்மூலம், அதற்குப் போதுமான விளக்கமும் அளிக்கப்பட்டு, தற்போது அது live–லேயே இருந்து கொண்டிருக்கிறது. எப்போதாவது அது நமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனால் நீங்கள் அனுப்பியபோது, அதனைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். திருப்பி அனுப்பிய தகவலைக்கூட தமிழகத்திற்கு மறைத்த பெருமைக்குரியவர்கள் நீங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீட் குறித்த விவாதம் போதும். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இத்தோடு முடித்து விடுங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனைக் கொண்டு வந்த பெருமை என்னைச் சாரும் என்று சொல்கிறார்கள். அது தவறான வார்த்தை. அதனை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டார். வேறு வழியில்லை; கொண்டு வந்துவிட்டோம் என்று சொன்னார்கள். இதனை அவையில் தற்போது சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொண்டு வந்தோம் என்று அவர்கள் சொல்லவில்லை. அந்த வார்த்தையை சொல்லவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: சரி, பிறகு எதற்காகப் பதிவு செய்கிறீர்கள். என்னை குற்றஞ்சாட்டி பதிவு செய்யக் கூடாதல்லவா? நாங்கள் தொடுத்த வழக்கில் தொடர்ந்து வாய்தா வாங்கிக் கொண்டிருக்கிறீர்கள். உச்ச நீதிமன்றத்தில் இன்றைக்கும் வாய்தா வாங்கி கொண்டிருக்கிறீர்கள். இந்த அரசுக்கு ** (குறுக்கீடுகள்) அதுமட்டுமில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் நேரம் தருகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டுமென்றே திட்டமிட்டு, தவறான தகவலை அவைக்குத் தந்து கொண்டிருக்கிறார்கள்.*

பிற்பகல் 1–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் என்னிடம் சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பதில் சொல்லவிடுங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *நீட் தேர்விற்கு பிள்ளையார் சுழி போட்டது, மத்தியிலே ஆண்ட காங்கிரஸ் கட்சி. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதைத்தான் சொல்லிவிட்டீர்களே! காங்கிரஸ் ஆட்சிதான் என்று சொல்லிவிட்டீர்களே! (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அது, நீங்கள் (குறுக்கீடுகள்) அது பதிவில் இருக்கிறது. அதை எதற்கு* repeat *செய்ய வேண்டும்? (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லாம் பேசியாகிவிட்டதே! (குறுக்கீடுகள்) மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2020 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 4 ஆம் தேதி. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஒரு வரியில் முடியுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம், இதையும் சேர்த்து பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலிருந்து கடைசி வரை, எங்களுடைய ஆட்சியின் இறுதி வரை நீட் தேர்வை எதிர்த்துக் கொண்டுதான் இருந்தோம். நீட் தேர்வை இரத்து செய்வதற்குப் பல்வேறு வழிகளில் நாங்கள் முயற்சி செய்தோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, எல்லோரும் சேர்ந்துதான். . . (குறுக்கீடுகள்)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *சட்டமன்றத்தில்கூட நீங்கள் எப்படி தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினீர்களோ அதேபோல நாங்களும் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பி வைத்தோம்; எந்தவிதத் தடங்கலும் இல்லை. ஆனால், அதையெல்லாம் மறைத்துவிட்டு ஏதோ இவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் நீட் தேர்விலிருந்து விலக்கு பெறுவதைப்போல தோற்றமளித்து பேசுவது சரியல்ல.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இரண்டு பேருமே மாறி, மாறி ஆரோக்கியமாகப் பேசினீர்கள். மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், பேசுங்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, 2020 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 4 ஆம் தேதி தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. அந்த வழக்கு என்னவென்றால், அதாவது 1956–ல் போடப்பட்ட ஒரு வழக்கு. 1956 ஆம் ஆண்டு இந்திய மருத்துவக் குழுமச் சட்டம் மற்றும் 1948 ஆம் ஆண்டு பல் மருத்துவச் சட்டம் ஆகியவற்றிற்குக் கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தத்தால் இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவப் பட்டப் படிப்புகளுக்கு 2016–2017 ஆம் கல்வியாண்டு முதல் நீட் என்னும் தேசிய தகுதி பொது நுழைவுத் தேர்வு மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சேர்க்கைக்குக் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆனால், மேற்குறிப்பிட்ட 1956 ஆம் ஆண்டு இந்திய மருத்துவக் குழுமச் சட்டம் திரும்பப் பெறப்பட்டு, மருத்துவப் படிப்புகளை ஒருங்கமைக்க தேசிய மருத்துவ ஆணையச் சட்டம், 2019, அதாவது*

2023 ஜனவரி 11] *[திரு. மா. சுப்பிரமணியன்]*

8–8–2019 அன்று மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்கள் ஒப்புதல் பெறப்பட்டு பின், நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அந்தச் சட்டத்தை வைத்து வழக்கு தொடுக்காமல், காலாவதியான ஒரு சட்டத்தை வைத்து ஏதோ ஒரு பொழுதுபோக்கிற்காக வழக்கு தொடுக்கின்றோம் என்கின்ற வகையில் (குறுக்கீடுகள்) ஒரு வழக்கைத் தொடுத்துவிட்டு எங்கள் அப்பனும் கச்சேரிக்குப் போனான் என்கின்ற மாதிரி சொல்வது. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி அவர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு செய்தியும்கூட. அவர், நாங்களும் இங்கிருந்து மசோதாவை நிறைவேற்றி அனுப்பினோம் என்று சொன்னார்கள். நான் இல்லை என்று சொல்லவில்லை. நிறைவேற்றி அனுப்பினீர்களே, குடியரசுத் தலைவர் கையிலே சென்றது, குடியரசுத் தலைவர் உள் துறை அமைச்சகத்திற்கு அனுப்பினார், உள் துறை அமைச்சகம் இங்கு திருப்பி அனுப்பியது. குடியரசுத் தலைவர் திருப்பி அனுப்பினாரே, அந்தத் தகவலைத் தமிழ்நாட்டிற்குச் சொன்னீர்களா? (குறுக்கீடுகள்) தமிழ்நாட்டில் 234 மக்கள் பிரதிநிதிகள் இங்கேயிருந்து ஒட்டுமொத்தமாக ஒருங்கிணைந்து அனுப்பியதுதானே? அதை நீங்கள் சொன்னீர்களா? மறைத்தீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) ஒட்டுமொத்தமாக நீட் என்கின்ற அந்தத் தேர்வு. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, உட்கார்ந்து கொண்டு தயவுசெய்து யாரும் பேச வேண்டாம்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *நீட் தேர்வு தமிழ்நாட்டிற்கு வந்ததற்கு முழு பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டியவர் எதிர்க்கட்சித் தலைவர். இதை ஆணித்தரமாக எங்கே வேண்டுமானாலும் சொல்வோம், எப்போது வேண்டுமானாலும் சொல்வோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி அவர்கள். (குறுக்கீடுகள்) போதுமே! (குறுக்கீடுகள்) இரண்டு பேருமே மாறி, மாறி ஒருவரை ஒருவர் குற்றச்சாட்டு சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இந்தளவுக்குப் போதும்.*

(குறுக்கீடுகள்) நீங்கள் பேசும்போது ** என்று ஒரு வார்த்தை சொன்னீர்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர் திரு. முனுசாமி அவர்கள்தான் பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்) டாக்டர் விஜயபாஸ்கர், (குறுக்கீடுகள்) இல்லையென்றால், அதற்கு பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அதற்கு அவர்கள் பதில் சொல்வார்கள். நீங்கள் இரண்டு பேரும்தான் பேசி முடிக்க வேண்டும். (குறுக்கீடுகள்) நான் தருகிறேன்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இப்போது இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்தான் பொறுப்பு ஏற்க வேண்டுமென்று குறிப்பிடுகிறார். இந்தப் பொறுப்பை முழுவதும் காங்கிரசும், தி.மு.க.-வும்தான் ஏற்க வேண்டும். கொண்டு வந்தது அவர்கள்; நாங்கள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைவாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மீண்டும், மீண்டும் அதே தவறான ஒரு குற்றச்சாட்டைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) இப்போது, நான் தெளிவாகச் சொல்கிறேன். இப்போது நீங்கள் பதிவு செய்துகொள்ளுங்கள். நான் சொன்னது, ஒன்றியத்தில் காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது இந்த மரபைக் கொண்டு வந்தார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் அதைக் கடுமையாக எதிர்த்தது. (குறுக்கீடுகள்) எதிர்த்த காரணத்தினால்தான் உள்ளே நுழையவில்லை. ஆனால், உங்களுடைய கூட்டணி ஆட்சி நடந்து கொண்டிருந்தபோது, உங்களுடைய கூட்டணிக் கட்சி BJP அங்கு ஆட்சியில் இருந்தபோதுதான் இதைக் கொண்டுவந்தார்களே தவிர, வேறு ஒன்றும் இல்லை. இதுதான் உண்மை. இதை முதலில் புரிந்துகொள்ளுங்கள். இதைப் புரிந்துகொண்டீர்களென்றால், இவ்வளவு விவாதம் வர வேண்டிய அவசியமே இல்லை.

பிற்பகல் 1–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள், நிறைவாகப் பேசி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) CM சொல்லியாகிவிட்டது, அதற்குப்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

பிறகு என்ன? (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) நல்லதுதானே! நடக்கட்டும். (குறுக்கீடு) இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. கே.பி. முனுசாமி: என்னுடைய நேரம் முழுவதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் எடுத்துக்கொண்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது நல்லதுதானே! எல்லோரும் சேர்ந்துதானே எடுத்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் எடுத்திருக்கிறார்.

திரு. கே.பி. முனுசாமி: அதனால் நான் நீட் தேர்வுக்குள் செல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடித்துவிடுங்கள்.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில், வரலாற்றில் நின்றவர்களுக்கு, வரலாற்றுத்தனமான ஒரு நல்ல நிகழ்வாக இராசராச சோழன் மற்றும் இராசேந்திர சோழன் ஆகியோரின் பிறந்தநாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். மகிழ்ச்சி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற இந்தக் காலத்தில், இவர் ஆட்சியிலிருக்கின்றபோது வரலாற்றில் பதிகின்ற வகையிலே, ஒரு வரலாற்றுத்தனமான திட்டம் ஏதாவது அறிவித்திருக்கிறாரா என்பதை நான் ஆளுநர் உரையிலே பார்த்தேன். அப்படிப் பார்க்கின்றபோது, தேர்தல் காலத்திலே கொடுத்த வாக்குறுதிகள் ஏதாவது இருக்கின்றதா என்று பார்த்தால், எதுவும் இல்லை. மாறாக, தேர்தல் காலத்தில் கொடுக்காத வாக்குறுதி ஒன்றை நிறைவேற்றியிருக்கிறார். என்னவென்று சொன்னால், 6 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற பெண் குழந்தைகள் உயர் கல்விக்குச் செல்கின்றபோது, மாதம் ரூ.1,000/– வழங்கப்படும் என்று நல்லதொரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். மகிழ்ச்சி. அதை ஒட்டுமொத்தமாக கணக்குப் போடும்போது, ஆண்டுக்கு ரூ.200 கோடிதான் வருகின்றது. ஆனால், தேர்தல் காலத்தில் வாக்காளப் பெருமக்களிடத்திலே வாக்குகளைப் பெறுவதற்காக, குடும்பத் தலைவிகளுக்கு ரூ.1,000/– கொடுப்பேன் என்று ஒரு வாக்குறுதியைக் கொடுத்தார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து, எல்லோரும் அமைதியாக இருந்து, கேளுங்கள். (குறுக்கீடு)

திரு. கே.பி. முனுசாமி: அப்படி ஆயிரம் ரூபாய் என்று சொல்கின்றபோது, இன்னொரு சாராம்சமும் இருக்கின்றது. அந்தத் தேர்தல் அறிக்கையை வைத்திருக்கின்றேன். அதாவது, ரேஷன் அட்டையில் உணவுப்பொருட்களை வாங்குகின்ற அனைத்து குடும்பத் தலைவிகளுக்கும் மாதம் ரூ.1,000/– வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனடிப்படையில் பார்த்தால் 2 கோடியே 19 இலட்சம் குடும்ப அட்டைகள் இருக்கின்றன. ஆயிரம் ரூபாய் என்று கொடுத்தால், அதாவது, 20 மாதத்திற்கு 40 ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்திருக்க வேண்டும். தேர்தல் நேரத்தில் வாக்காளப் பெருமக்களிடத்திலே, தாய்மார்களிடத்திலே வாக்குகளைப் பெறுவதற்காக இந்த வாக்குறுதி கொடுத்ததை மறந்து, இன்று, உயர் கல்வி பெறும் பெண் பிள்ளைகளுக்கு மாதம் ரூ.1,000/– கொடுக்கிறோம் என்று சொல்கிறார். எந்தளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று சொல்கிறீர்கள்.

திரு. கே.பி. முனுசாமி: அல்ல. தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவதோடு மட்டுமல்லாமல், **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** என்று சொன்ன அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதேபோல, உங்களுடைய தேர்தல் அறிக்கையை, இரண்டு பேருடைய தேர்தல் அறிக்கைகளைப் பற்றிப் பேசினால் இந்தச் சபை தாங்காது. நீங்கள் நன்றி சொல்லி அமருங்கள். (குறுக்கீடு) நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஜனவரி 11]

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டு தேர்தல் நேரத்தில், ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒரு செல்ஃபோன் வழங்கப்படும் என்று தேர்தல் வாக்குறுதி கொடுத்தார்கள். அவர்கள் ஆட்சியில் இருந்த வரைக்கும் கொடுத்தார்களா என்று கேளுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லுங்கள். நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) போதும்.*

திரு. கே.பி. முனுசாமி: *ஒரேயொரு நிமிடம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். (குறுக்கீடு) இன்னும் ஒரேயொரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். 1–44 மணிக்குள் உரையை முடியுங்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டு, சிரிக்கிறார். நானும் கேட்கிறேன், அவருடைய தலைவர் மறைந்த முன்னாள் முதலமைச்சர் 2 ஏக்கர் நிலம் கொடுக்கிறேன் என்று சொன்னாரே அதைக் கொடுத்தாரா? (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *20 இலட்சம் பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) வேறு யாரும் பேசாதீர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே பலமுறை இதுகுறித்து விளக்கிச் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *20 இலட்சம் பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *அவர்களுடைய தலைவி இருந்தபோதே இதுபற்றிச் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) இந்த அரசுக்குச் சொந்தமாகக் கையளவு நிலம் இருந்தால்கூட அதை மக்களுக்குத் தந்துவிடுவேன் என்ற விளக்கத்தையும் கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இருந்தவரை நிலம் தரப்பட்டிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 1–45

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு ஏக்கர் நிலத்தைப் பற்றி பேசினார்கள். இதற்கு பலமுறை நான் விளக்கமாக இந்த அவையிலே பதில் அளித்திருக்கிறேன். அரசுப் புறம்போக்கு நிலங்கள் ஒரு சென்ட் இடம் இருந்தாலும் அதை நிலமற்ற ஏழைகளுக்கு பிரித்துக் கொடுத்தது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இதுமட்டுமல்ல, அரசு நிலத்தை ஏழை மக்களுக்குக் கொடுத்தவர் கலைஞர். அரசு நிலத்தையும், டான்சி நிலத்தையும் எடுத்துக்கொண்டவர்கள் யார் என்று அவர்கள் சொல்ல வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் தலைவர் கொடுத்தாரா என்று எங்களைப் பார்த்து கேட்கிறீர்களே? உங்கள் தலைவி மதுரையில் 100 கோடி ரூபாயில் தமிழ்த் தாய் சிலை வைப்போம் என்று சொன்னார்களே, வைத்தார்களா? (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் மிக அழகான ஒரு கேள்வியை கேட்டார். நானும் கேட்கிறேன்; நீட் தேர்வு இரத்து செய்யும் இரகசியம் என் பாக்கெட்டில் இருக்கிறது, அந்த இரகசியத்தை வெளியேவிட்டால் உடனடியாக நீட் தேர்வு இரத்து செய்யப்பட்டுவிடும் என்று நீங்கள் வாக்குறுதி கொடுத்தீர்களே!*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சதன் திருமலைக்குமார் அவர்கள். (குறுக்கீடு) போதும் நிறைய பேசிவிட்டீர்கள்.*

2023 ஜனவரி 11]

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் 42 நிமிடங்கள் பேசியாகிவிட்டது, போதும். (குறுக்கீடு) சரி, நன்றி சொல்லி அமருங்கள். (குறுக்கீடு) நன்றி மட்டும் சொல்லுங்கள். புது விவாதங்களை உருவாக்க வேண்டாம்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் நாகரிகமாக நடந்துகொள்வோம். அவைத் தலைவர் அவர்களுக்கும், அவையில் அமர்ந்திருக்கின்ற அனைத்து உறுப்பினர்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு இந்த வாய்ப்பளித்த என்னுடைய தலைவன், கழகத்தினுடைய பொதுச் செயலாளர் எடப்பாடியார் அவர்களுக்கும் தங்களுக்கும் நன்றிகூறி, என் கருத்தைச் செவிமடுத்த அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி பகிர்ந்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சதன் திருமலைக்குமார் அவர்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள்,* please.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் உள்ளிட்ட அவையில் அமர்ந்திருக்கும் அனைவருக்கும் என்னுடைய புத்தாண்டு, பொங்கல், தமிழர் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையின்மீது நடைபெறுகின்ற விவாதத்தில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். தமிழ்நாடு சட்டப் பேரவையில் பதிவு செய்யப்பட்ட ஆளுநர் உரையில் 2030 ஆம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சி அடைய வேண்டும் என்ற இலக்கும், கிழக்குக் கடற்கரைச் சாலையை ஒட்டி மாமல்லபுரம் அருகே புதிய துணை நகரம் ஒன்று உருவாக்கப்படும் என்ற அறிவிப்பும் வரவேற்கத்தக்கதாகும்.

[டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்] [*2023 ஜனவரி 11*

நான் தென்காசி மாவட்டத்திலிருந்து வருகின்றேன். பொதிகைத் தென்றலை நாங்கள் அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம். அதுபோன்று நீங்கள் இயற்கைக் காற்றை அனுபவிக்க வேண்டும். வாகன நெருக்கடியிலிருந்து தப்பிக்க வேண்டும். பெருகி வரும் மக்கள்தொகையைக் கணக்கில் கொண்டு துணை நகரம் ஏற்படுத்த வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாமல்லபுரம் அருகே கிழக்குக் கடற்கரைச் சாலையில் ஒரு துணை நகரம் உருவாக்குவதை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் வரவேற்கின்றோம். குறு, சிறு தொழில் நிறுவனங்கள் வளர்ச்சியடைந்துள்ளன. 2 இலட்சத்து 23 ஆயிரத்து 210 கோடி ரூபாய் முதலீடுகள் வந்துள்ளன. வேலைவாய்ப்பு அதிகரித்து வருகிறது என்ற அறிவிப்பும் முதல்வரின் முகவரி திட்டத்தின்கீழ் இதுவரை பெறப்பட்டுள்ள 17.70 இலட்சம் மனுக்களில் 16.28 இலட்சத்திற்கும் மேலான மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. உலகெங்கும் விரவியுள்ள தமிழர்களுக்குத் தமிழ் மொழியைக் கற்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தவும், தமிழ்ப் பண்பாட்டினைப் பேணிக் காக்கவும், தமிழ் பரப்புரைக் கழகம் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், அயலகத் தமிழர்களுக்கும் தாய்த் தமிழ்நாட்டிற்கும் ஓர் இணைப்புப் பாலமாக இயங்குவதற்கும், அவர்களின் நலனைக் காப்பதற்கும் அயலகத் தமிழர் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி தருவதாக இருக்கிறது. பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழு அண்மையில் மாநிலங்களின் வளர்ச்சி நிலை குறித்து ஆய்வு செய்து வெளியிட்டுள்ள சமூக வளர்ச்சிக் குறியீட்டு அறிக்கையில் 63.3 புள்ளிகளைப் பெற்று இந்தியாவின் பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது என்பது வரவேற்கத்தக்கதாக இருக்கிறது.

பிற்பகல் 1–50

தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கை நிலைநாட்டிட அரசு உயர் முன்னுரிமை அளிப்பதும், வன்முறையில்லா அமைதிப் பூங்காவாகத் தமிழ்நாடு தொடர்ந்து திகழவும், இளைய தலைமுறையினரின் எதிர்காலத்தின்மீது அக்கறைகொண்டு போதைப் பொருட்களின் விநியோகத்தையும், பயன்பாட்டையும் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கவும் அரசு எடுக்கும் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியன.

'நம்ம பகுதி, நம்ம நியாய விலைக் கடை' என்ற புதிய முயற்சியைத் தொடங்கியுள்ளது, நுகர்வோர் பாதிக்கப்படாத வகையில், பசும்பால், எருமைப் பால் ஆகியவற்றின் கொள்முதல்

2023 ஜனவரி 11] [டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்]

விலையை லிட்டருக்கு ரூ.3 உயர்த்தி அரசு அறிவித்துள்ளது, 5 புதிய மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கும் பணிகள், மூன்று மீன்பிடித் துறைமுக மேம்பாட்டுப் பணிகள் ஆகியவை நடப்பது போற்றத்தக்கதாக இருக்கின்றன.

காலநிலை மாற்றம் குறித்து தகுந்த ஆலோசனைகளை வழங்கிட, பன்னாட்டு வல்லுநர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு அமைத்திருப்பதும், (மணியடிக்கப்பெற்றது) காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பெரும் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் ரூ.1,000 கோடி மதிப்பில் பசுமை காலநிலை நிதியம் ஏற்படுத்தியிருப்பதும் மக்களின் மனதைக் குளிர வைத்திருக்கின்றன.

மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம்–நம்மைக் காக்கும் 48, ஒமிக்ரானின் உருமாறிய புதிய வகை வைரஸ் காரணமாக கோவிட் தொற்று நிகழாவண்ணம் அனைத்து தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருப்பது பாராட்டுக்குரியதாக இருக்கிறது. முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளை அரசு அறிவித்துள்ளது, இப்போட்டிகளில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர், மாற்றுத் திறனாளிகள், அரசுப் பணியாளர்கள், பொதுமக்கள் என ஐந்து பிரிவுகளில் ஆண், பெண் இருபாலரும் பங்கேற்கும் வகையில் தடகளம், கால்பந்து, கபடி, சிலம்பம் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மாநிலமெங்கும் நடத்தப்படும் என்று அரசு அறிவித்திருப்பது மக்களின் நம்பிக்கையைப் பெறுகின்றது.

விளையாட்டுத் திறனை வளர்ப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற செயல்பாடுகள், பன்னாட்டு செஸ் ஒலிம்பியாட் போட்டியைத் திறம்பட நடத்தியது, விளையாட்டு வீரர்களையும், இளைய சமுதாயத்தினரையும் மகிழ்வித்துள்ளது. ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற எண்ணும், எழுத்தும் திட்டம், பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு புதுமைப் பெண் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஆகியவை ஏழையெளிய மாணவச் செல்வங்களின் கல்விக்கு உறுதுணையாக இருக்கும்.

சமூக நீதி, சமத்துவம், சுயமரியாதை, பகுத்தறிவு ஆகிய கொள்கைகளை அடித்தளமாகக்கொண்டு, கட்டமைக்கப்பட்ட தலைசிறந்த ஆட்சி முறையை நடத்திக் கொண்டிருக்கின்ற திராவிட மாடல் அரசு, (மணியடிக்கப்பெற்றது) தமிழ்நாட்டின்

வளர்ச்சிக்கு அனைத்துத் துறைகளிலும் சிறந்து செயலாற்றி வருவதற்கு எங்கள் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என் நெஞ்சம் நிறைந்த பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லுங்கள். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் தென்காசி மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் இருக்கின்ற மாவட்டம். அங்கே காட்டுப் பன்றிகளின் தொந்தரவு தாங்க முடியாத அளவிற்கு இருக்கிறது; அவை விளைநிலங்களை அதிகமாக சேதப்படுத்திவிடுகின்றன. ஆகவே, காட்டுப் பன்றிகளை வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின்படி வன விலங்குகள் பட்டியலிலிருந்து நீக்க வேண்டும். அங்கே ஆடு, மாடு வளர்க்கின்ற விவசாயிகளுக்கு மேற்குத் தொடர்ச்சி மலையில் மேய்ச்சல் நிலத்தை ஒரு குறிப்பிட்ட உயரம் வரையில் ஒதுக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதியிலுள்ள நெற்கட்டும்செவலை ஆண்ட மாமன்னன் பூலித்தேவனின் போர்ப்படைத் தளபதியாக இருந்த வெண்ணிக் காலாடி அவர்கள், வயிற்றில் வாள் வெட்டுபட்டு, குடல் சரிந்த நிலையிலும், குடலைத் திரும்ப உள்ளே தூக்கிப் போட்டு, துண்டால் கட்டிக்கொண்டு, போராடிய அந்தப் போர் வீரனின் நினைவாக மணிமண்டபம் மற்றும் நினைவுத் தூண் அமைத்து, அரசு விழா எடுக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதியில் 25–க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஆனால், அரசு கலைக் கல்லூரிகள் ஏதும் இல்லை. ஆகவே, ஓர் அரசு கலைக் கல்லூரி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, அமர்கிறேன். வணக்கம்.

பிற்பகல் 1–55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள், மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் என அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சீரிய பணியை நான் பாராட்டுகிறேன். குறிப்பாக, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும்வகையில் இந்த அவையில் மக்களுக்கு வழிகாட்டும் பல்வேறு நல்ல திட்டங்களைத் தந்தமைக்கு நான் மீண்டும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கக்கூடிய அனைத்துத் திட்டங்களும், குறிப்பாக மாண்டஸ் புயல், வடகிழக்குப் பருவமழை நேரத்தில் ஆற்றிய பணிகள் பாராட்டிற்குரியன. தொடர்ந்து சிறந்த பணிகளைச் செய்ய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீட் தேர்வுக்கு காங்கிரஸ் கட்சிதான் காரணம் என்ற அபாண்டமான பழியைக் கூறினார்கள். அதற்கு நாங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். NEET–ஐப் பொறுத்தமட்டில், மத்தியில் காங்கிரஸ் ஆட்சி செய்தபோது, எந்த மாநிலம் NEET–ஐ ஏற்றுக்கொள்கிறதோ, ஏற்றுக்கொள்ளலாம் என்று சொன்னது. காங்கிரஸ் ஆட்சியில் NEET–ஐ கட்டாயப்படுத்திச் சொல்லவேயில்லை என்பதை நான் இங்கு பதிவு செய்கிறேன். தவறாக, உண்மைக்குப் புறம்பாக, NEET–ஐ காங்கிரஸ் ஆட்சிதான் கொண்டு வந்தது என்று சொல்வது, ஏற்கத்தக்கதல்ல; ஏற்புடையது அல்ல. அது மட்டுமல்ல, இன்று GST–ஐ பற்றி சொல்கிறோம். நாங்கள் அதை one shot–ல் தான் கொண்டு வந்தோம். அதுபோன்று எத்தனைவிதமான GST வரிகளை நீங்கள் வழங்கிக்கொண்டிருக்கிறீர்கள் என்பதைப் பதிவு செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன். அன்பிற்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'மாடல் முதல்வர்' ஆகச் செயல்பட்டு, சிறப்பாக சட்டம்–ஒழுங்கை நிலைநாட்டியிருக்கிறீர்கள்.

அதேநேரத்தில் சில முக்கியமான கருத்துகளை நான் பதிவு செய்ய வேண்டும். குறிப்பாக, செவிலியர்கள் பிரச்சினை. செவிலியர்கள்

பணியிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணி விதிகள் 10 a(i)—ன்படி, செவிலியர்களுக்கு சிறப்புத் தேர்வு நடத்தி அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். யாரெல்லாம் அவ்வாறு பணியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்களோ, அவர்களுக்குத் தொடர்ந்து அந்தப் பணியினை வழங்க வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசால் அதனைச் செய்ய முடியும். அதேபோன்றுதான், கொரோனா நோய்த்தொற்று காலத்தில், தங்கள் உயிரையும் துச்சமாக நினைத்து மருத்துவர்கள் பணியாற்றியிருக்கிறார்கள். அவர்களது பணிக்கு முக்கியத்துவம், முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இது மட்டுமல்ல, கல்வி நிறுவனங்களைப் பொறுத்தவரையில், சிறுபான்மைக் கல்வி நிறுவனங்கள் இந்த அரசால் பாரபட்சமாக ஒதுக்கப்பட்டுள்ளதை நான் காண்கிறேன். நூற்றுக்கு நூறு விழுக்காடு சிறுபான்மை இன மக்கள் இந்த அரசிற்கு ஆதரவாகப் பணியாற்றி வருகிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். காலிப் பணியிடங்களை நிரப்ப இயலாத சூழ்நிலை இன்றைக்கு உள்ளது. சிறுபான்மைப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர், தலைமையாசிரியர் ஆகியோர் பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டால் அந்தப் பணியிடங்களை மீண்டும் நிரப்புவதற்கு வாய்ப்பில்லாத நிலை உள்ளது. அதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன.

சிறுபான்மைப் பள்ளிக்கூடங்களில் படிப்பவர்களுக்கு 7.5 விழுக்காடு ஒதுக்கீடு கிடைப்பதில்லை. அரசுப் பள்ளிகளில் படிக்கிற மாணவர்களுக்கு மருத்துவ சேர்க்கையில் 7.5 சதவிகிதம் இட ஒதுக்கீடு அளித்து முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. ஆனால், அந்த ஒதுக்கீடுகூட அரசு உதவி பெறும் சிறுபான்மை பள்ளிக்கூடங்களில் படிக்கின்ற மாணவர்களுக்குக் கிடைப்பதில்லை என்பதை நான் இங்கு பதிவு செய்கிறேன். இதற்கான நடவடிக்கைகளை அரசு வெகு விரைவில் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, Pension திட்டம். வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள மக்களின் தற்போதைய பட்டியலை அரசு ஆய்வு செய்வதாக நான் அறிகிறேன். வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள மக்களின் பட்டியல் 2011 ஆம் ஆண்டு எடுக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டிற்குப் பிறகு அந்தப் பட்டியல் சரிசெய்யப்படவில்லை. அவற்றில் ஆய்வு செய்கிறபோது சில பிரச்சினைகள் வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று, மத்திய அரசு இலவச cylinder வழங்குகிறது. ஒரு cylinder உள்ள மக்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழான பட்டியலில் சேர்க்கப்பட மாட்டார்கள். அம்மக்களுக்கு முதியோர் pension கிடைப்பதில்லை. எனவே, முதியோர் pension வழங்குகிறபோதும், அரசின் உதவித் தொகை வழங்குகிறபோதும், மக்கள் பாதிக்கப்படாத வகையில், அரசு அவற்றை ஏற்றுக்கொண்டு, சரியான முறையில் ஆய்வு செய்து, யார் ஏழை மக்கள் என்பதை அறிந்து, தக்கவகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய மக்கள், குறிப்பாக வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள மக்கள் மிகவும். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: 3 நிமிடங்கள்கூட பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 5 நிமிடங்கள் பேசியுள்ளீர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: முதியோர் pension திட்டத்தை ஏழையெளிய மக்களுக்குக் கொண்டு செல்கின்ற வகையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக Omni bus பிரச்சினை இருக்கிறது. இதற்கு முன்னால் நல்ல, சிறந்த Omni bus–ல் நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு வரவேண்டுமென்றால் 2 ஆயிரம் ரூபாய்தான் செலவாகும். இப்போது 4 ஆயிரம் ரூபாய், 5 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. இதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, போக்குவரத்துத் தொழிலாளர்கள் 7 வருடங்களாக அகவிலைப் படி வழங்கவில்லை என்று வருத்தத்தோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள். நீதிமன்றம்கூட உத்தரவிட்டிருக்கிறது. அவர்களுக்கு உடனடியாக அகவிலைப் படியை வழங்க

வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல போக்குவரத்துத் துறையில் பட்டதாரி வாரிசுதாரர்களுக்குப் பணி வழங்கப்படவில்லை என்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். உயர் நீதிமன்றம்கூட அவர்களை உடனடியாகப் பணியில் சேர்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. குறிப்பாக, திருநெல்வேலி கோட்டம், நாகர்கோவில் வட்டத்தைச் சார்ந்த போக்குவரத்துத் தொழிலாளர்களின் வாரிசுதாரர்களுக்குப் பணி வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். (குறுக்கீடு) Time 6 நிமிடங்கள் ஆகிவிட்டன. நன்றி சொல்லி உரையை முடியுங்கள். இப்போது 7 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முக்கியமான விஷயம், பதிவைக் கேளுங்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறுபான்மை சமூக மக்கள் காலங்காலமாக வழிபாடு நடத்திவரும் வழிபாட்டுத் தலங்களைக் குறி வைத்து, வேண்டுமென்றே அரசியல் இலாபத்திற்காக சில மதவாத அமைப்புகள் காவல் துறையில் புகாரளித்து, வழிபாடுகளைத் தடுத்து வருகின்றனர். இது ஒரு திட்டமிட்ட அரசியல் உள்நோக்கமாக இருக்கிறது. இந்தச் செயலில் ஈடுபடும் நபர்களைச் சட்டப்படி கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசின் கடமை. ஆனால், காவல் துறையினரிடம் கேட்டால், உங்கள்மீது புகார் வந்திருக்கிறது, எனவே, வழிபாடுகளை நிறுத்துங்கள் என்று சொல்வதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்று கேட்கிறேன். பட்டா நிலங்களிலே வழிபாட்டுத் தலங்களை அமைக்க வேண்டுமென்று கிறித்துவர்கள் கேட்டால், அவர்களுக்கு அனுமதி வழங்குவதில்லை. எனவே, அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல, வழிபாட்டுத் தலங்களைப் பொறுத்தமட்டில் கட்டுப்பாடுகள் என்பது சிறுபான்மை மக்கள் மீதுதான் திணிக்கப்படுகின்றன. எனவே, வழிபாட்டுத் தலங்களின் செயல்பாடு மற்றும் அனுமதி போன்றவற்றிற்கு Standard Operating Procedures உருவாக்குவதுதான் தகுதியான வழி என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

2023 ஜனவரி 11]

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு அதிக நேரம் தந்தால்தான் இதையெல்லாம் சரியாகச் சொல்ல முடியும். அன்பிற்குரிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டத்தில் கடலோரப் பகுதி அதிகமாக இருக்கிறது. குறிப்பாக, ஆழ்கடலில் சென்று மீன் பிடிக்கும் திறமையானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை.* Coast Guard *ஒவ்வொரு மீன்பிடி பகுதியிலும் வேண்டும்.* Helicopter *தளம் வேண்டுமென்று 11 ஆண்டுகளாக நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.* Helicopter *தளம் வேண்டும். ஆழ்கடலுக்குச் சென்று ஒரு மீனவர் மோசமான சீதோஷ்ண நிலையில் மாட்டிக்கொண்டுவிட்டால், பாதுகாப்பதற்கு வழியில்லை. பல உயிர்களை நாங்கள் இழந்திருக்கிறோம். இதற்கு முடிவு கட்ட வேண்டுமானால்,* helicopter *தளம் மிக முக்கியம்,* Coast Guard *மிக முக்கியம், நவீன படகுகள் எங்களுக்கு வேண்டும். என் தொகுதியில் இது ஒரு முக்கியமான பிரச்சினை.*

என் தொகுதியில் வாணியக்குடி பகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதிய harbour *அமைக்க உத்தரவிட்டுள்ளார்கள்.* Harbour *அமைப்பதற்கு ஆய்வு நடத்தப்பட்டிருக்கிறது. வருகிற* Budget session*–ல் கண்டிப்பாக அதற்கு நிதி ஒதுக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, குளச்சலில் இருக்கின்ற மீன்பிடித் துறைமுகத்தை 200 மீட்டர் விரிவுபடுத்துவதற்குச் சம்மதித்திருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பணியையும் துரிதமாக செய்ய வேண்டுமென்று வேண்டுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

பிற்பகல் 2–05

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழர் புத்தாண்டு நல்வாழ்த்துகளை உங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவித்து என்னுடைய உரையினைத் தொடங்குகிறேன். ஆளுநர் அவர்களால் ஆற்றப்பட்ட உரை, சட்டமன்ற ஏடுகளில் பதிவு செய்யப்பட்ட உரையிலே, எனக்கு முன்னர் உரையாற்றிய ஓர் உறுப்பினர், வரலாற்றுச் சாதனை*

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2023 ஜனவரி 11

எதுவுமே இதில் இல்லை என்று குறிப்பிட்டார். ஆனால், பல வரலாற்றுச் சாதனைகளைக் கடந்த ஒன்றரை ஆண்டுகால ஆட்சியிலே தளபதியார் அவர்கள் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி செய்திருக்கின்றது என்பதற்கு எடுத்துக்காட்டாக பல அறிவிப்புகள், பல செய்திகள் ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருக்கின்றன. குறிப்பாக, மேட்டூர் அணை, வழக்கத்திற்கு மாறாக, வரலாற்றுச் சிறப்பாக உரிய காலத்திற்கு 19 நாட்களுக்கு முன்பு திறக்கப்பட்டது. அதுமட்டுமல்ல, உழவர்களுக்கு 61.12 கோடி ரூபாய் மதிப்பிலான குறுவைத் தொகுப்பு வழங்கப்பட்டது. இதன்காரணமாக, காவிரி டெல்டா என்ற காவிரிப் படுகைப் பகுதிகளிலே, 5.28 இலட்சம் ஏக்கர் பரப்பில் குறுவை நெல் சாகுபடி செய்து, இந்த அரசு வரலாற்றுச் சாதனை படைத்திருக்கின்றது. அதுவும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய சொந்த மாவட்டமான, எங்கள் தஞ்சை மாவட்டத்தில் சம்பா பயிர் 36.20 இலட்சம் ஏக்கரிலே பயிரிடப்பட்டு, தஞ்சை மாவட்டத்திற்கு அது ஒரு வரலாற்றுச் சாதனையாக இருக்கிறது. இந்தச் சாதனைகளெல்லாம் அவர்கள் கண்களுக்குத் தெரியவில்லை போலும். அதுமட்டுமல்ல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சொந்த மாவட்டத்தில் தஞ்சையிலே 72,816 ஹெக்டேர் நெல் சாகுபடி செய்து அது ஒரு சாதனையாக அமைந்திருக்கிறது.

ஒன்றிய அரசு, முற்பட்டோரை வறியவர்கள் என்று சொல்லி, 10 விழுக்காடு இட ஒதுக்கீட்டை அறிவித்தது. ஆனால், தமிழகத்திலே, இது சமூக நீதி அரசு, திராவிடக் கொள்கையைப் பின்பற்றக்கூடிய அரசு. நீங்கள் என்ன சட்டம் வேண்டுமென்றாலும் போட்டுக்கொள்ளலாம். ஆனால், தமிழகத்தில், உயர் சாதியினர்களுக்கான இந்த பத்து விழுக்காடு இட ஒதுக்கீட்டைப் பின்பற்ற மாட்டோம் என்று தெரிவித்த திராணியுள்ள, வரலாற்றுச் சிறப்பு மிகுந்த அரசு இந்த அரசு என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கண்ணை இமை காப்பதுபோல, சிறுபான்மையினர்களுடைய உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்க இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே நான் உரையாற்றும்போது, சிறுபான்மை கல்வி நிறுவனங்கள், தாங்கள் சிறுபான்மை நிறுவனம் (Minority Institution)

2023 ஜனவரி 11] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

என்ற சான்றிதழைப் பெறுகின்றன. மாநில அரசாங்கத்திடம், அதிகாரம் பெற்ற முறையான அமைப்பு, அதாவது authorised, Empowered Body இல்லையென்பதன் காரணமாக, செல்வாக்குள்ள கல்வி நிறுவனங்கள் மட்டும் உச்ச நீதிமன்றத்தை நாடுகின்றார்கள் அல்லது ஒன்றிய அரசாங்கத்தின் ஆதரவு பெற்றவர்கள், ஒன்றிய அரசாங்கத்தினுடைய சிறுபான்மை அமைச்சகத்தினுடைய சிறப்பு முகமையிடம் பல இலட்சம் ரூபாய் கொடுத்து, அந்த Minority Certificate–ஐ வாங்குகின்றார்கள். இதே அவையிலே, Minority Certificate வழங்குவதற்கான அந்த அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கக்கூடிய வகையிலே, திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று நான் கோரிக்கை விடுத்தேன். அதே கோரிக்கையை தமிழ்நாடு சிறுபான்மை ஆணையமும் வெளிப்படுத்தியது. இந்தக் கோரிக்கையை ஏற்று தமிழக அரசே சிறுபான்மை நிறுவனங்களுக்கு சிறுபான்மை அந்தஸ்து சான்றிதழை வழங்கக்கூடிய முகமையை இப்போது ஏற்படுத்தியிருக்கின்றது. அதற்காக நம்முடைய அரசுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாகவும், சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களின் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், High Level Empowered Committee–ல் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும், சிறுபான்மை ஆணையத்தினுடைய தலைவரும் இடம்பெறக்கூடிய வகையிலே அதைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீட்டில் இந்த அரசு எத்தகைய கொள்கையைப் பின்பற்றியிருக்கிறது; சமூக நீதியினுடைய அடிப்படையிலே செயல்படுகின்றது என்பதற்கு எடுத்துக்காட்டாக நான் குறிப்பிட்டேன். இன்று சிறுபான்மையினருக்கான 3.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டை அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தந்தார்கள். பல்வேறு தளங்களில் சரியான முறையிலே பின்பற்றப்படாத ஒரு சூழல் இருக்கின்றது. Backlog vacancies இருக்கின்றன. எனவே, இந்த இட ஒதுக்கீடு சரியான முறையிலே கடைபிடிக்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்வதற்காக நம்முடைய அரசு Sachar Committee பரிந்துரையை ஏற்றுக்கொண்டிருக்கின்றது. அந்த Sachar Committee பரிந்துரையின் அடிப்படையில், இந்தியாவிற்கு முன்னோடியாக,

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2023 ஜனவரி 11
The Equal Opportunities Commission–சம வாய்ப்பு ஆணையம் அமைக்கப்பட்டு, அனைத்து இட ஒதுக்கீடும் சரியான முறையில் பின்பற்றப்படுகின்றதா என்பதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பள்ளிவாசல்களுக்கு Major Repair Grant (MRG) என்று ஒரு மானியம் வழங்குகின்றார்கள். அந்த மானியம் ஐந்து கோடி ரூபாயாக இருந்ததை நமது அரசு 6 கோடி ரூபாயாக உயர்த்தியது. அருகில் இருக்கக்கூடிய மாநிலங்களில், பள்ளிவாசல்களின் புனரமைப்பிற்காக 100 கோடி ரூபாய் அளவிற்கு மானியம் அளிக்கப்படுகிறது. நம்முடைய அரசு 6 கோடி ரூபாயாக இருக்கக்கூடிய மானியத்தை 50 கோடி ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இஸ்லாத்தை தழுவிய பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பட்டியலின மக்களுக்கான இட ஒதுக்கீட்டில் அவர்கள் BC(M) என்று கருதப்படவில்லை. தமிழ்நாடு அரசு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தை சமீபத்தில் அமைத்திருக்கின்றது. அந்த ஆணையத்தின் வழியாக அவர்களுக்கான அந்த இட ஒதுக்கீட்டினை உத்தரவாதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல சிறுபான்மையின பள்ளிக்கூடங்கள் மற்றும் கல்லூரிகளில் இருக்கக்கூடிய காலிப் பணியிடங்களை உடனே நிரப்புவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

எனக்கு முன்னால் உரையாற்றிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, வழிப்பாட்டுத் தலங்களை, குறிப்பாக சர்ச்சுகள், பள்ளிவாசல்களைக் கட்டுவதற்காக Standard Operating Procedures–SOP வழங்கப்பட்டு, உரிய நேரத்தில் அவற்றைக் கட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டெல்டா மாவட்டத்தில் மிகப் பெரிய சாதனையைச் செய்திருக்கின்றோம். ஆனால், எங்கள் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு மிகப் பெரிய இடையூறாக இருப்பது காட்டுப் பன்றிகள். குறிப்பாக, கல்லணை முதல் அணைக்கரை வரை காவிரிப் படுகைப் பகுதியில் காட்டுப் பன்றிகள் தொல்லையினால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம், காட்டுப் பன்றி

என்பது, வன விலங்கு பாதுகாப்புச் சட்டம், 1972 அட்டவணை 3–ன்கீழ் இருக்கின்றது. அதை அட்டவணை 5–ன்கீழ் மாற்ற வேண்டும். அப்படி அட்டவணை 5–ன்கீழ் மாற்றினால் காட்டுப் பன்றியினுடைய தொல்லையைத் தவிர்க்கலாம். ஏற்கெனவே, உத்தரகாண்ட் மாநில அரசும், பீஹார் மாநில அரசும் 2016–ல் அட்டவணை 5–ன்கீழ் காட்டுப் பன்றியைக் கொண்டு வந்துள்ளன. அதே நடவடிக்கையை தமிழக அரசும் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லுங்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *காட்டுப் பன்றியை ஒன்றிய அரசு அட்டவணை 5–ன்கீழ் கொண்டு வருவதற்கு முன்னர், இடைக்கால நடவடிக்கையாக கேரள அரசு என்ன செய்திருக்கிறது என்றால், அவர்களுடைய வனத் துறையின் மூலமாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் கொடுத்து கிராமக் குழுக்கள் வழியாக காட்டுப் பன்றிகளை ஒழிப்பதற்கான வழிவகை செய்திருக்கின்றது. அதே நிகழ்வை தமிழ்நாடு அரசும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது பாபநாசம் தொகுதியில் சுமார் 1,000 ஏக்கர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்யப்படுகின்றது. இதே அவையில் என்னுடைய தொகுதியில் குறிப்பாக, அய்யம்பேட்டை போன்ற பகுதிகளில் தயாரிக்கப்படும் அச்சு வெல்லம், மண்டை வெல்லம், நாட்டுச் சர்க்கரை போன்றவற்றுக்குக் குறைந்தபட்ச ஆதார விலை வேண்டுமென்று கேட்டேன். நம்முடைய இந்த ஆட்சியிலே இதுவும் ஒரு வரலாற்றுச் சாதனை என்று குறிப்பிட விரும்புகிறேன். அச்சு வெல்லம், நாட்டு வெல்லம், நாட்டுச் சர்க்கரை போன்றவற்றை உற்பத்தி செய்யக்கூடிய வேளாண்மை மக்களுடைய வசதிக்காக தமிழ்நாட்டில் முதன்முறையாக பாபநாசத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் அதற்கான ஏலம் கொண்டுவரப்பட்டதற்காக நான் பாபநாசம் தொகுதி மக்களின் சார்பாக அரசுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: என் தொகுதியில் உள்ள திரு ஆரூரான் சர்க்கரை ஆலையினுடைய உரிமையாளர்கள், தவறான தகவல்களைக் கொடுத்ததால் கரும்பை சப்ளை செய்த வேளாண் மக்கள் பெறாத கடனுக்காக இன்றைக்குக் கடனாளிகளாக வங்கியில் எதையும் பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். எனவே, அரசு இதில் தலையிட்டு, அந்த liability–யிலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–15

நான் இலங்கைக்குச் சென்றிருந்தேன். அப்போது, இலங்கை அரசின் மாண்புமிகு வெளி விவகாரத் துறை அமைச்சர் உள்ளிட்ட மாண்புமிகு அமைச்சர்கள் எல்லோரும் நான் எழுதிய 'நபிகளாரின் சமூக உறவு' என்ற நூல் வெளியீட்டு விழாவில் பங்கு கொண்டார்கள். அவர்கள் அப்போது சொன்ன செய்தியை நிச்சயமாக நான் இந்த அவைக்குச் சொல்ல வேண்டும். நாங்கள் பரிதவித்து நின்றபோது தமிழக அரசு ரூ.174 கோடிக்கு அரிசி, பால் பவுடர், உயிர் காக்கும் மருந்துகள் ஆகியவற்றை எங்களுக்கு அளித்தது; எங்கள் சார்பாக தமிழக அரசுக்கு நன்றி சொல்லுங்கள் என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நன்றியை இங்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

புற்றுநோயால் கடும் பாதிப்படைந்த, நாள்பட்ட நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்ற முதியவர்களை விடுதலை செய்வதற்காக ஆதிநாதன் குழு தனது பரிந்துரையை அளித்திருக்கிறது. அந்தப் பரிந்துரையின் அடிப்படையில், நெடுநாட்களாக சிறையில் இருக்கும் முஸ்லிம் சிறைவாசிகளை விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: இந்த வாய்ப்புக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

2023 ஜனவரி 11]

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 8 ஆம் தேதி அருட்செல்வர் பொள்ளாச்சி நா. மகாலிங்கம் அவர்களுடைய நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தது மட்டுமல்லாமல், பொள்ளாச்சி-கோயம்புத்தூர் சாலையையும், பொள்ளாச்சி-பல்லடம் சாலையையும் இணைக்கின்ற சாலைக்கு ஐயா அருட்செல்வர் அவர்களுடைய பெயரைச் சூட்டியதும் மிகவும் சிறப்பாக இருந்தது. அதற்காக பொள்ளாச்சி மக்களின் சார்பாக இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையில் அமைச்சராக புதிதாக பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளை கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப் பகுதிகளில் விளையாட்டுகள் இப்போது புதுவேகம் பிடித்திருக்கின்றன என்பதையும் மகிழ்ச்சியோடு பதிவு செய்துகொள்கிறேன்.*

கடந்த 9 ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் கொண்டு வந்தது தீர்மானம் அல்ல; அது தமிழர்களுடைய தன்மானம். அது தீர்மானம் கிடையாது. மொத்த தமிழர்களையும் தலைநிமிரச் செய்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். விவசாயிகளை வாழவைப்பதற்காக பால் விலையை 3 ரூபாய் உயர்த்தியது வரவேற்கத்தக்கது. ஆனாலுங்கூட, அதுவும் போதாது என்பது எல்லோருக்குமே தெரியும். அதையும் இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். அதேபோல, மின்னிணைப்புக்காக யாரெல்லாம் விண்ணப்பித்திருக்கிறார்களோ முழுமையாக அத்தனை விவசாயிகளுக்கும் மின்னிணைப்பு கொடுக்கக்கூடிய நிலையை நோக்கி இந்த அரசு சென்றுகொண்டிருக்கிறது. இதற்காக மின்சாரத் துறைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொங்கல் தொகுப்பில் கரும்பு கொடுத்ததற்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில், இன்றைக்கு விவசாயிகள் வாழ வேண்டுமென்று சொன்னால், அவர்களுடைய வருமானம் அதிகரிக்க வேண்டுமென்றால் மூன்று விஷயங்கள் இருக்கின்றன. ஒன்று, எத்தனால். எத்தனால் தயாரிப்பு ஊக்கப்படுத்தப்பட வேண்டும்; ஊக்கப்படுத்தப்படும்

[திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்] [2023 ஜனவரி 11

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது இன்னும் வேகப்படுத்தப்பட வேண்டும். அதேபோல், தேங்காய் எண்ணெய். ரேஷன் கடைகளில் தேங்காய் எண்ணெய் கொடுத்தால்தான் தென்னை விவசாயம் பாதுகாக்கப்படும். அதேசமயம், விவசாயிகளின் வருமானம் இரட்டிப்பாக வேண்டுமென்றால் கள் இறக்குவதற்கு அனுமதி கொடுக்க வேண்டும். கள் இறக்குவதற்கு அனுமதி கொடுத்தால், விவசாயிகள் நன்கு வாழ்வார்கள். இவற்றையெல்லாம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேசமயம், விவசாயிகளைப் பாதிக்கின்ற எந்தவொரு செயலையும் அரசு செய்யாது என்று அறிவித்திருப்பது, விவசாயிகளைத் தூண்டிவிட்டு போராட்டங்களைச் செய்கின்ற அத்தனை பேரும் இதை ஒரு பதிலாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, விவசாயிகளுக்கு தமிழ்நாடு முழுவதும் நீரேற்றுப் பாசன வசதி செய்து தர வேண்டும். நீரேற்றுப் பாசன வசதி வந்தால் தண்ணீர் பஞ்சம் இருக்காது. அதேபோல், பண்ணை சாராக் கடன். பண்ணை சாராக் கடன் தள்ளுபடி செய்யப்படவில்லை. மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் விவசாயிகளிடமிருந்து கோரிக்கைகள் வந்தபோது, 6 சதவிகித வட்டி நீங்கள் அந்தக் கடனை கட்டிவிடுங்கள் என்று சொன்னபோது விவசாயிகள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இல்லையென்றால் இந்தப் பிரச்சினை அன்றைக்கே முடிந்திருக்கும். இன்றுவரை 16 சதவிகித வட்டி வீதத்தில் அந்தக் கடன் சுமை அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. இதனால், நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அறிவித்ததுபோன்று, கிடப்பில் இருக்கும் பண்ணை சாராக் கடன்களை 6 சதவிகித வட்டியுடன் அரசு திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2—20

அதேபோல, கல்வி மற்றும் சுகாதாரம் இரண்டையும் இரண்டு கண்களாக அரசாங்கம் பார்த்துக்கொண்டிருக்கிறது. சுகாதாரத்தைப் பொறுத்தவரையில் 'மக்களைத் தேடி மருத்துவம்', 'இன்னுயிர் காப்போம்–நம்மைக் காக்கும் 48' என்று பல்வேறு புதிய திட்டங்களைக் கொண்டுவந்து சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்; பாராட்டுகிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு முழுவதும் பல கல்வி மாவட்டங்கள் மூடப்பட்டிருக்கின்றன. அதனால், நிருவாகத்திற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. அதனால், அந்தக் கல்வி மாவட்டங்களையெல்லாம் அறிவிக்க வேண்டும். குறிப்பாக, திருச்செங்கோடு கல்வி மாவட்டம் இருந்தது. இப்போது அது இல்லை. அதனால், திருச்செங்கோடு கல்வி மாவட்டம் வேண்டுமென்பதைப் பதிவு செய்துகொள்கிறேன்.

இந்து சமய அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில், ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் மீட்பு, அதேபோல, கோயில்களின் புனரமைப்புகள், குடமுழுக்குகள் நடைபெற்றிருக்கின்றன. இதுவரைக்கும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் யார் என்று தெரியாத காலமெல்லாம் இருந்தது. ஆனால், இன்றைக்கு இத்துறையிலே கோயில்களுக்கு இவ்வளவு நல்ல செயல்களையும் செய்துகொண்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். அதேநேரத்தில், ஸ்கீம் கோயில்களை அவரவர் செலவிலே புனரமைப்பதிலே தடங்கல்கள் நிறைய இருக்கின்றன. அந்த வழியை எளிமையாக்க வேண்டும். அவரவர் செலவிலே புனரமைப்பதற்கு, அந்த வழிவகையை எளிமையாக்குகின்ற முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று இந்து சமய அறநிலையத் துறையை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கோயில்களுக்குக் கவுந்தம்பாடி போன்ற பகுதிகளிலிருந்து கலப்படமில்லாத, சுத்தமான நாட்டுச் சர்க்கரை போன்ற பொருட்கள் பெறப்பட்டன. குறிப்பாக, பழனி கோயிலுக்குக் கவுந்தம்பாடி பகுதியிலிருந்து பெறப்பட்டது. ஆனால், இப்போது அது குறைந்திருக்கிறது. விவசாயிகளிடமிருந்து குறிப்பாக, எப்படி கரும்பை நேரடியாகக் கொள்முதல் செய்கிறோமோ அதேமாதிரி, கோயில்களுக்கு நாட்டுச் சர்க்கரையை விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இந்த ஆண்டு, சென்னையில் ஏற்பட்ட மழை வெள்ளத்தை, இந்த அரசு மிகச் சிறப்பாகக் கையாண்டதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், அந்தத் துறை அமைச்சர் அவர்களையும், அரசாங்கத்தையும் நெஞ்சார நான் பாராட்டுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின், காலை சிற்றுண்டித் திட்டத்திற்கு மிகச் சிறப்பான வரவேற்பு இருக்கிறது.

தமிழகம் முழுவதும் எல்லா பள்ளிகளுக்கும் அது விரிவுபடுத்தப்பட வேண்டும். அதுதான் எங்கள் கோரிக்கை.

நான் முதல்வன் திட்டம், அதுபோல மாற்றுத் திறனாளிகளுக்கு சலுகைகளை அதிகரித்துக் கொடுத்திருப்பது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய திட்டம். எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

சென்னை மெட்ரோ இரயிலின் இரண்டாம் கட்டப் பணிகள் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதேசமயத்தில் கோவைக்கும் மெட்ரோ இரயில் திட்டம் வேண்டும். அந்தப் பணிகளையும் நீங்கள் வேகமாக செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சேலம்—உளுந்தூர்பேட்டை இரண்டுவழிச் சாலையை நான்குவழிச் சாலையாக மாற்ற வேண்டுமென்று சபையிலும் பேசியிருக்கிறோம். அதையெல்லாம் புரிந்துகொண்டு, அரசாங்கத்தினுடைய, மாண்புமிகு முதலமைச்சருடைய, அந்தத் துறையினுடைய அமைச்சர் மூலமாக அழுத்தம் கொடுக்கப்பட்டு, இன்றைக்கு சேலத்திலிருந்து உளுந்தூர்பேட்டை வரை அனைத்து இடங்களிலுமே இரண்டுவழிச் சாலைகள் நான்குவழிச் சாலைகளாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதற்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்றிருந்தபோது சென்னை—செங்கல்பட்டு உயர்மட்டப் பாலம், மதுரவாயல்—காஞ்சிபுரம் உயர்மட்டப் பாலம் இவற்றையெல்லாம் கேட்டிருக்கிறார், மகிழ்ச்சி. அதேசமயத்திலே, சேலம்—சென்னை 8 வழிச்சாலை என்பது சேலம் வளர்ச்சிக்காக மட்டுமல்ல; தருமபுரி மாவட்டத்தினுடைய உள்பகுதி, திருவண்ணாமலை மாவட்டத்தினுடைய உள்பகுதி, காஞ்சிபுரம் மாவட்டத்தினுடைய உள்பகுதி ஆகியவை இன்றுவரையிலும் வளர்ச்சியிலே பின்தங்கியிருக்கின்றன. அவையெல்லாம் வளர்ச்சி பெறவேண்டுமென்று சொன்னால், கண்டிப்பாக அந்த 8 வழிச்சாலை தேவைப்படும். விவசாயிகளுடைய கருத்துகளைத் திரும்பவும் கேட்டு, அந்தச் சாலையை மாற்றுப் பாதையிலாவது அமைப்பதற்கு முயற்சிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஜனவரி 11] [திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்]

அதேபோன்று, தொழில் வளர்ச்சியைப் பற்றிப் பேசும்போது, 1965-க்கு முன்னால், இங்கே சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் கடலூருக்குச் செல்கிறார். கடலூர் நகர்மன்றத் தலைவர் சகோதரர் தாமோதரன் வரவேற்பு கொடுக்கின்றார். அங்கே அண்ணா அவர்கள் "சட்டமன்றம் ஒரு முனிசிபாலிட்டிபோல இருக்கிறது. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் சாக்கடை வசதி வேண்டும், சாலை வேண்டும், லைட் வேண்டுமென்றுதான் கேட்கிறார்கள். சட்டமன்றம், சட்டம் இயற்றுவதாக இருக்க வேண்டும்" என்று அன்றைக்குப் பேசியிருக்கிறார். 60 ஆண்டுகள் கழித்துகூட நமக்கு அந்தத் தேவைகள் எல்லாம் தீராமல் இருக்கின்றன. காரணம், கிராமப்புறத்திலே தொழில்கள் வளரவில்லை, நகரங்களை நோக்கி மக்கள் வரவேண்டிய அவசியம் இருக்கிறது. புதிது புதிதாக அந்தப் பகுதிகளுக்கு சாலை வசதிகள் செய்ய வேண்டியிருக்கிறது. அதனால், கிராமப்புறங்களுடைய தொழில் வளர்ச்சியை உறுதி செய்வதற்கு கண்டிப்பாக அரசு முயற்சிக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 2—25

Guidance Tamil Nadu மிகச் சிறப்பாக செயல்படுகிறது. அதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. One Trillion Dollar பொருளாதாரத்தை அடைய வேண்டுமென்று சொன்னால் Guidance Tamil Nadu அதனுடைய சிறப்பான செயல்பாட்டின்மூலம் உறுதி செய்யும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதேபோல், single window system மிக அருமையாகச் செயல்படுகிறது. எல்லோரும் பாராட்டுகின்ற வகையிலே இன்றைக்கு செயல்படுகிறது.

அடுத்து, மெத்தனால். மெத்தனால் தயாரித்தால், பல தொழிற்சாலைகள் வரும். 20 ஆண்டுகளாக அதற்கான அனுமதி கிடையாது. இப்போது மெத்தனால் தொழிற்சாலைகளை அனுமதிப்பதற்கான கோப்பு வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. சீக்கிரம் அனுமதி வந்துவிடும் என்ற செய்தி எனக்குக் கிடைத்திருக்கிறது; மிக்க மகிழ்ச்சி. அதை இன்னும் வேகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, அனுமதி கிடைக்காமல் பல தொழிற்சாலைகள் கிடப்பிலே கிடக்கின்றன. அதற்கொரு தனிக் குழுவினை அமைக்க வேண்டும். I.A.S. அதிகாரி ஒருவர் தலைமையில் தனிக் குழு அமைத்து எவையெல்லாம் பல ஆண்டுகளாக கிடப்பில்

இருக்கின்றனவோ, அவற்றிற்கான அனுமதிகளைப் பெறுவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) அதேபோல, சுற்றுலா. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள். (குறுக்கீடு) சரி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: அடுத்து, சுற்றுலா. சுற்றுலா மூலமாக அதிக வருமானம் வரக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. சென்னையிலிருந்து பாண்டிச்சேரி வரையில் கடல் பகுதியை சரியாகக் கவனித்து, ஒரு குழு அமைத்து, சுற்றுலா மேம்பாடு செய்தோமென்று சொன்னால், தாய்லாந்தைபோல, அதிக வருமானம் வருவதற்கான வாய்ப்பு இருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்கிறேன்.

அடுத்து, சேது சமுத்திரத் திட்டம். (குறுக்கீடு) ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். Mother vessel என்று சொல்லப்படுகின்ற பெரிய கப்பல்கள் நம்முடைய தூத்துக்குடிக்கு வரக்கூடிய வாய்ப்புகளை சேது சமுத்திரத் திட்டம் உருவாக்கியிருக்கும். நான் ஏற்றுமதியில் இருக்கிறவன் என்கின்ற முறையிலே, கணக்கு போட்டு பார்த்தேன். அந்தக் கணக்கைச் சொல்கிறேன். சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, கடந்த 15 ஆண்டுகளில் mother vessel வந்திருக்குமேயானால், இதுவரை குறைந்தபட்சம் சுமார் ரூபாய் 40,000 கோடி அளவிற்கு அத்தனை ஏற்றுமதியாளர்களும் மிச்சம் செய்திருப்போம். அதனால், அரசு கணக்கில் பல ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கும். அப்படி ஓர் அருமையான திட்டம் அந்தத் திட்டம். அதனால், அதில் என்ன முட்டுக்கட்டைகள் இருக்கின்றனவோ, அவற்றைத் தீர்த்து, mother vessel தூத்துக்குடிக்கு வரவேண்டும். அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்தது என்று சொன்னால், மிகப் பெரிய வளர்ச்சியை, சிங்கப்பூரைப்போல, மிகப் பெரிய வளர்ச்சியை அடைவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். அதைச் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) கடைசியாக சில.

பல இடங்களிலே, நகரப் பகுதிகளிலெல்லாம் completion certificate கொடுத்தால்தான் power connection கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். மிகவும் strict ஆக இருக்கிறார்கள். அதனால், பல ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட

கட்டடங்களுக்கு எல்லாம் power connection வாங்க முடியாமல் இருக்கிறார்கள். அவற்றில் வசதியானவர்களும் இருக்கிறார்கள். வசதியில்லாதவர்களும் இருக்கிறார்கள். எல்லோரும் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதுபோன்று pending இருக்கின்ற கட்டடங்களுக்கு, one–time scheme போன்று ஏதாவது ஒரு முறையில், அவர்களுக்கு உதவி செய்து, அந்தக் கட்டடங்களுக்கு மின்சார இணைப்பு கொடுக்கக்கூடிய வாய்ப்புகளைத் தந்தால், பலரும் பிழைத்துக்கொள்வார்கள். அதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பண்டிகைக் காலங்களில், பேருந்துகளில் பயணச்சீட்டுக் கட்டணம் அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அச்சமயங்களில் தனியார் பேருந்துகளைப் பயன்படுத்தலாம் என்பது என்னுடைய கோரிக்கை. அரசாங்கப் பேருந்துகளை மட்டுமே பயன்படுத்த வேண்டுமென்று இல்லை. தனியாரிடம் நிறைய பேருந்துகள் இருக்கின்றன. சபரிமலை சீசனில் பார்த்தீர்களென்றால், நமது பேருந்துகள் ஆயிரக்கணக்கில் சபரிமலைக்குச் செல்கின்றன. அவையெல்லாம் நம் பேருந்துகள்தான். அவற்றையெல்லாம் நாம் விழாக் காலங்களிலே பயன்படுத்த முடியும். அதற்கு என்ன சட்ட திட்டங்களோ, அதற்குத் தகுந்தாற்போல, அரசு அனுமதிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, துணை நகரம். துணை நகரம் என்பது கண்டிப்பாகத் தேவை. விமான நிலையம் என்பது கண்டிப்பாகத் தேவை. இன்றைக்கு பெங்களூருவைவிட, ஐதராபாத்தைவிட, அகமதாபாத்தைவிட, நாம் பின்தங்கி இருக்கிறோம். விமான நிலையம் கண்டிப்பாக வேண்டும். அவற்றிற்கான பணிகளை வேகப்படுத்த வேண்டும். விவசாயிகள் பாதிக்கப்படாத வகையில் அப்பணியினைச் செய்ய வேண்டும். (குறுக்கீடு) அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. விவசாயிகள் பாதிக்கப்படாத வகையில், விமான நிலையத்தை அமைப்பதற்கான பணிகள் வேகப்படுத்தப்பட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதி கோரிக்கை

சென்னையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரிலும், மதுரையில் கலைஞர் அவர்களின் பெயரிலும், ஈரோட்டில் தந்தை பெரியார் அவர்களின் பெயரிலும் நூலகங்கள் அமைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, நேரமாகிவிட்டது.

***திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின்மீது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, என்னுடைய கருத்துகளை முன்வைப்பதற்கு, பேசுவதற்கு எனக்கு வாய்ப்பினை வழங்கியிருக்கின்ற, எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இடைக்கால பொதுச் செயலாளரும், முன்னாள் முதலமைச்சரும், (மேசையைத் தட்டும் ஒலி) என்றைக்கு தேர்தல் வந்தாலும், வருங்கால முதலமைச்சராக மிக விரைவிலேயே வருவதற்கு வாய்ப்பு இருக்கின்ற அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், கழகக் கொறடா அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். வாய்ப்பினை வழங்கிய சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துகளை முன்வைக்க விரும்புகிறேன். அதிலே குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நேரத்தின் அருமை கருதி, அவருடைய உரையிலிருந்து ஒன்றிரண்டைக் குறிப்பிட்டு அதன்மீது என்னுடைய கருத்துகளைச் சொல்ல விழைகின்றேன். மாண்புமிகு கவர்னர் அவர்கள் உரையில் பத்தி எண் 4–ல் பொங்கல் பண்டிகைத் தொகுப்பைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அரசு பொங்கல் பண்டிகை தொகுப்பாக, ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் 1,000 ரூபாயும், ஒரு கிலோ பச்சரிசியும், ஒரு கிலோ சர்க்கரையும், ஒரு முழு செங்கரும்பும் வழங்கும் என்று மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நான் கேட்க விரும்புவதெல்லாம், சென்ற ஆட்சிக் காலத்திலே, கழக ஆட்சிக் காலத்திலே, எங்களுடைய முதலமைச்சர் தலைவர் எடப்பாடியார் அவர்கள் ஆட்சியிலே இருந்தபோது, முதலில் பொங்கல் தொகுப்பாக, ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும்

2,500 ரூபாயும், (மேசையைத் தட்டும் ஒலி) கரும்போடு, பொங்கல் இடுபொருள்களும் பொங்கல் தொகுப்பாக வழங்கப்பட்டன. அப்போது, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2,500 ரூபாயை இது என்ன கிள்ளிக் கொடுக்கிறீர்கள், கொஞ்சம் தாராளமாக அள்ளிக் கொடுங்கள் என்று சொல்லி, 2,500 ரூபாயை 5,000 ரூபாயாக வழங்குங்கள் என்று சொன்னார்கள். ஆக, நான் இன்றைக்குக் கேட்பதெல்லாம், நீங்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, 5,000 ரூபாய் வழங்கச் சொல்லி எங்கள் அரசை எப்படி வற்புறுத்தினீர்களோ, அதேபோல, இன்றைக்கு நீங்கள் முதலமைச்சராக இருக்கின்றபோது, நீங்கள் அன்றைக்கு எங்களிடம் வைத்த கோரிக்கையை நிறைவேற்றி இருக்கலாமே என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள்.*

***மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொங்கல் தொகுப்பைப் பற்றியும், அதேபோல, எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது நாங்கள் வைத்த கோரிக்கையைப் பற்றியெல்லாம் மரியாதைக்குரிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள் சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவராக எங்களுடைய தலைவர் இருந்த சமயத்திலே அன்றைக்குக் கொரோனா காலம்; மிகக் கொடுமையான நோய். வீட்டைவிட்டு யாரும் வெளியே வர முடியாது. அந்தக் காலகட்டத்தில் எங்கள் தலைவர் ஒரு குடும்பத்திற்கு 5,000 ரூபாய் கொடுங்கள் என்று கோரிக்கை வைத்தார்கள். ஆனால், நீங்கள் வெறும் 1,000 ரூபாய்தான் கொடுத்தீர்கள். (குறுக்கீடு) 1,000 ரூபாய்தான் கொடுத்தீர்கள். நான் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள். 1,000 ரூபாய்தான் கொடுத்தீர்கள். ஆனால், எங்களுடைய தலைவர் அவர்கள் தேர்தல் சமயத்திலே தேர்தல் வாக்குறுதியாகச் சொன்னார்; நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பிறந்த நாளன்று அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் தலா 4,000 ரூபாய் வழங்கப்படுமென்று சொன்னார். அதை வழங்கி இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் தலைவர் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி)*

[திரு. அர. சக்கரபாணி] [2023 ஜனவரி 11

அதேபோல, பொங்கல் தொகுப்பைப் பொறுத்தளவில், 2009 ஆம் ஆண்டுதான் இந்தப் பொங்கல் தொகுப்பு முதன்முதலில் வழங்கப்பட்டது. ஆனால், அன்றைக்குப் பணம் கொடுக்கப்படவில்லை. 2012 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அதிமுக ஆட்சியில் பணமோ, பொருளோ கொடுக்கப்படவில்லை. 2013–ல் 100 ரூபாய் கொடுத்தீர்கள். 2014–ல் 100 ரூபாய் கொடுத்தீர்கள். 2016–ல் 100 ரூபாய் கொடுத்தீர்கள். 2017–ல் ஒரு பைசா கொடுக்கவில்லை. அதேசமயத்தில், 2018 ஆம் ஆண்டு ஒரு பைசா கொடுக்கவில்லை; பொருள்தான் கொடுத்தீர்கள். 2019–ல் 1,000 ரூபாய் கொடுத்தீர்கள். 2020–ல் 1,000 ரூபாய் கொடுத்தீர்கள். 2021–ல் 2,500 ரூபாய் கொடுத்தீர்கள். அது எதற்காக என்று தெரியுமா? தேர்தலுக்காகக் கொடுத்தீர்கள். (குறுக்கீடுகள்) தேர்தலுக்காகக் கொடுத்தீர்கள். வேறொன்றுமில்லை. இன்றைக்கு 5,000 ரூபாய் கொடுக்கச் சொல்கிறீர்கள். எதற்காக 2,500 ரூபாய் கொடுத்தீர்கள்; தேர்தலுக்காகக் கொடுத்தீர்கள். ஆனால், மக்கள் தமிழக முதலமைச்சராக மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்கள் வரவேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) முடிவெடுத்து, வாக்களித்தார்கள். நீங்கள் கொடுத்த 2,500 ரூபாய்க்கு மக்கள் ஏமாறவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–35

இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு, தேர்தல் சமயத்தில், கொரோனா காலத்தில் வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு 4,000 ரூபாய் கொடுக்கிறோம் என்று வாக்குறுதி அளித்தார்; கொடுத்திருக்கிறார். 14 வகையான மளிகைப் பொருட்களையும் கொடுத்திருக்கிறார். அதேபோன்று 2 கோடியே 19 இலட்சம் அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் 1,000 ரூபாய், பச்சரிசி ஒரு கிலோ, சர்க்கரை ஒரு கிலோ, முழு செங்கரும்பு, வேட்டி–சேலை ஆகிய எல்லாவற்றையும் வழங்குவதற்கு உத்தரவு வழங்கி, இன்றைக்கு சுமார் 2,500 கோடி ரூபாய்க்கு பொருட்கள் வழங்கப்பட்டு, பொதுமக்கள் மகிழ்ச்சியோடு வாங்கி, பொங்கல் பண்டிகையைக் கொண்டாட இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று, இன்று மதியம் ஒன்றரை மணி வரை 72 சதவிகித மக்கள் இந்தப் பொருட்களையும் பணத்தையும் பெற்று பயனடைந்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஜனவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நல்ல, தெளிவான பதிலை வாங்கிவிட்டீர்கள். நீங்கள் உரையாற்ற ஆரம்பித்து 7 நிமிடங்கள் ஆகிவிட்டன.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொங்கல் பண்டிகை தொகுப்பு வழங்க வேண்டுமென்ற திட்டத்தையே புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் முதலில் அறிமுகப்படுத்தினார்கள். அது தெரியுமா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *நீங்கள் இந்தச் சட்டமன்றத்தில் ஒரு தவறான தகவலைப் பதிவு செய்வதால், நான் இதைச் சொல்கின்றேன். 2009 ஆம் ஆண்டில், என் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, நான் உணவுத் துறை அமைச்சராக இருந்தேன். உங்களுடைய ஆட்சியில் தலைமைச் செயலாளராக இருந்த திரு. சண்முகம் அவர்கள்தான், என்னுடைய துறையின் செயலாளராக மூன்று ஆண்டு காலம் இருந்தார். ஒரு நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களை உடனே அழைத்தார்கள். பொங்கலுக்கு ஏதாவது மக்களுக்கு நாம் செய்ய வேண்டுமென்ற ஒரு கருத்தின் அடிப்படையிலே அப்போது நிதித் துறைச் செயலாளராக இருந்த திரு. ஞானதேசிகன் அவர்களை அழைத்து, அறையிலே கலந்துபேசி, என்ன செய்யலாம் என்று முடிவு செய்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் சொன்னார், பொங்கல் என்று சொன்னால், அதற்கு வெல்லம் தேவை; அரிசி தேவை; பச்சரிசி தேவை; திராட்சை தேவை என்று அதற்கு வேண்டியவற்றையெல்லாம் அவரே பட்டியலிட்டு, இவையெல்லாம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். முதன்முதலாக 2009–ல் கலைஞர் அவர்கள் ஆட்சியில்தான் பொங்கலுக்கென்று இலவசத் தொகுப்பு வழங்கும் திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) உருவாகியது. அதை மறந்துவிட்டு, மறைந்துவிட்ட அம்மையார் அவர்கள் ஆட்சியில் நடந்தது என்று ஓர் அமைச்சராக இருந்த நீங்கள் இப்படி ஒரு தவறான தகவலை பதிவு செய்யக் கூடாது என்பதுதான் ஒன்று.*

இரண்டாவது, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாகப் பேசுவதிலே எங்களுக்கு எந்தவித மாற்றுக் கருத்தும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

இல்லை. உங்களுடைய கருத்துகளைப் பதிவு செய்யலாம். ஆனால், எப்போது எடுத்துக்கொண்டாலும், இந்த ஆட்சிக்கு ஐந்தாண்டு காலம் ஏற்கெனவே உறுதியளிக்கப்பட்டு, மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். தேர்தல் காலங்களிலே சொல்லப்பட்டவையெல்லாம் முதலாம் ஆண்டிலேயே செய்துவிடுவார்களா? ஆட்சிக் காலம் என்பது ஐந்தாண்டு காலம். வாக்களித்து நாங்கள் அமைச்சரவையிலே பொறுப்பேற்றிருக்கிறோம். இந்த ஐந்தாண்டு காலம் முடிகிறபோது, தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்டவை அத்தனையையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்து முடிப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இருப்பதற்கு வாய்ப்பே இல்லை.

சுமார் 6 இலட்சத்து 78 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வைத்துவிட்டு, நீங்கள் ஆட்சியை விட்டுவிட்டு சென்றிருக்கிறீர்கள். ஆனாலும், புதிய புதிய திட்டங்களை இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். நாட்டு மக்கள் நினைக்கின்ற அளவிற்கு பல்வேறு திட்டங்கள் சென்று சேர்ந்துகொண்டிருக்கின்றன. அதைப் பாராட்டுவதற்கு உங்களுக்கு மனமில்லை என்றாலும்கூட, குறை சொல்லாமலாவது இருக்கலாம் இல்லையா? ஏற்கெனவே நீங்கள் சுமார் 6 இலட்சம் கோடி ரூபாய் கடன் வைத்துவிட்டு, அதைச் செய்யவில்லை, இதைச் செய்யவில்லை என்று சொன்னால் எப்படிச் செய்ய முடியும்? ஐந்தாண்டு காலத்திலே கட்டாயம் செய்து முடிப்போம்; அதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இருப்பதற்கு வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவற்றை 2009–ல் கொடுத்தீர்கள்; 2010–ல் கொடுக்கவில்லை. பின்னர், தேர்தல் வந்தது; கொடுத்தீர்கள். அதைப்போல, எப்போதுமே ஆட்சியில் இருக்கின்றபோது ஒரு நிலைப்பாடும், எதிர்க்கட்சியாக இருக்கின்றபோது ஒரு நிலைப்பாடும் (மேசையைத் தட்டும் ஒலி) சொல்வது உங்களுக்கு வழக்கமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதுமட்டுமல்ல; இப்போது நீங்கள் 1,000 ரூபாய் கொடுப்பதைச் சொல்கிறீர்கள் அல்லவா? நீங்கள் சொன்ன 5,000 ரூபாயைக்

2023 ஜனவரி 11] [*திரு. நத்தம் ஆர். விசுவநாதன்*]

கொடுத்திருக்கலாம் அல்லது நாங்கள் கொடுத்த 2,500 ரூபாயைக் கொடுத்திருக்கலாம் என்றுதான் நான் கேட்டேனே தவிர, வேறு எதையும் கேட்கவில்லை. இரண்டில் ஒன்று செய்திருக்கலாமே என்பதைத்தான் சொன்னேனே தவிர, வேறொன்றுமில்லை.

அதேபோல, எதுவாயினும், முன்னால் இருக்கும்போது ஒரு நிலைப்பாடு; பின்னாலே இருக்கின்றபோது ஒரு நிலைப்பாடு. அருமை அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் சேலம் எட்டுவழிச் சாலை திட்டத்தைக் கொண்டுவந்தபோது, அன்றைக்கு அதைக் கடுமையாக எதிர்த்தது திராவிட முன்னேற்றக் கழகம். ஆனால், இன்றைக்கு அதே எட்டு வழிச் சாலைக்கு நீங்களே முன்னே இருந்து, அதற்கு ஏற்பாடு செய்வது என்பது உள்ளபடியே மகிழ்ச்சி. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், எதிர்த்தவர்களே இன்றைக்கு ஆதரிக்கின்ற நிலைக்கு வந்திருப்பதற்காக மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை எதற்காகச் சொல்கின்றேன் என்று சொன்னால், ஆட்சியில் இருக்கின்றபோது ஒரு நிலைப்பாடு, அது இயற்கைதான். எதிர்க்கட்சியாக இருக்கும்போது ஒரு நிலைப்பாடு என்பதும், ஆளுங்கட்சியாக இருக்கும்போது ஒரு நிலைப்பாடு என்பதும் சகஜம்தான்.

பிற்பகல் 2–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *நீங்கள் இதையும் தவறாகத்தான் பதிவு செய்கிறீர்கள். இப்போது நான் விளக்கமளித்து விடுகிறேன். எட்டுவழிச் சாலை குறித்த ஓர் அறிவிப்பு வருகிறது. அப்போது எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறார்.* Zero hour*–ல் பிரச்சினை வருகிறது. எட்டுவழிச் சாலைக்கு மட்டுமல்ல; சாலை போடுவதற்கு எப்பொழுதும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எதிர்ப்பானவர்கள் அல்லர். சாலை போடுவதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், விவசாயிகள் மத்தியில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகள் பற்றி அவர்களை நேரடியாக அழைத்துப் பேசிய பிறகு சாலை அமையுங்கள். இல்லையெனில், மாற்றுவழி காணுங்கள் என்று எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அப்போது சட்டமன்றத்தில் கூறியது அவைக் குறிப்பில் இன்றைக்கும் இருக்கிறது. அதற்குப் பிறகும், தொடர்ந்து*

விவசாயிகள் மத்தியில் நீங்கள் பேசி முடிக்கவில்லை; பிரச்சினை பெரிதாகிறது. எதிர்க்கட்சிகள் என்ற அடிப்படையில் எங்களுடைய தோழமைக் கட்சியினரும் விவசாயிகளை நேரடியாகச் சந்தித்து, சாலை போடுவதில் இவ்வளவு பிரச்சினைகள் இருக்கின்றன என்று கூறினார்கள். எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வெளியே சென்று விவசாயிகளுடைய நிலைமைகளையெல்லாம் பார்த்து, சாலை போடுவதிலே இவ்வளவு பிரச்சினைகளெல்லாம் இருக்கின்றன. எனவே, சாலை போட வேண்டாம். ஒன்று பேசி தீர்த்துவிட்டு சாலையைப் போடுங்கள்; இல்லையென்றால் சாலை போட வேண்டாம் என்று சட்டமன்றத்தில் பேசினார்கள். அதில், எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், தற்போது ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனேயே, எட்டுவழிச் சாலை போடுங்கள் என்று ஒன்றிய அரசாங்கம் தொடர்ந்து சொல்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், தயவுசெய்து யாரும் உட்கார்ந்து கொண்டு பேச வேண்டாம்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: அது எட்டுவழிச் சாலை அல்ல; தற்போது அது ஆறுவழிச் சாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டில் அவையெல்லாம் மாற்றப்பட்டு, ஒன்றிய அரசாங்கம் நாங்கள் ஆறுவழிச் சாலை போடுகிறோம். எட்டுவழிச் சாலை எனும்போது விவசாயிகளுடைய நிலங்கள் அதிகமாக எடுக்கப்படுகிறது; ஆறுவழிச் சாலை போடுகிறபோது விவசாயிகளுடைய நிலங்கள் குறைவாக எடுக்கப்படுகிறது என்று சுப்ரீம் கோர்ட்டிலேயே ஒன்றிய அரசாங்கத்தால் affidavit தாக்கல் செய்யப்பட்டு, அது ஆறுவழிச் சாலையாக மாறியிருக்கிறது. இந்நிலையில், யுவராஜ் என்பவர் மேல்முறையீடு செய்கிறார். அம்மேல்முறையீட்டு வழக்கு மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்பாகத்தான் தள்ளுபடி செய்யப்பட்டது. அவர்கள் தொடர்ந்து கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும்கூட, நான் பத்திரிகை நண்பர்களிடத்தில் பேசுகிறபோது, இதுவொரு கொள்கை முடிவு எடுக்க வேண்டிய விஷயம். சட்டமன்றத்தில் நாங்களே பேசியிருக்கிறோம். விவசாயிகள் மத்தியில் இப்படியொரு பிரச்சினை வந்ததால் நிறுத்தியிருக்கிறோம். தோழமைக் கட்சிகளெல்லாம் இதுபோன்ற பிரச்சினை இருப்பதால் அதில் உடன்பட்டிருக்கிறார்கள். எனவே, இது கொள்கை முடிவு– மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சம்பந்தப்பட்டவர்களை அழைத்து, அவர்களிடத்தில் சொல்லி ஒரு கொள்கை முடிவு

எடுத்துதான் அறிவிக்க முடியுமேயொழிய, உடனே அறிவிக்க முடியாது என்ற கருத்தில்தான் நாங்கள் இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறோம். நாங்கள் என்னவோ, நாளையே சாலை போட முடிவு எடுப்பதைப் போல, அப்போது ஒரு முடிவு எடுத்தீர்கள், இப்போது ஒரு முடிவு எடுக்கிறீர்கள் என்று மாற்றிப் பேசுவது என்பது தவறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மகிழ்ச்சியாக நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *நான் இன்னும் பேசவே ஆரம்பிக்கவில்லையே!*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, நீங்கள் 13 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை குறித்து ஒரேயொரு* point *மட்டும்தான் பேசியிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்கள் என்றால், நீங்கள் உரையாற்ற ஆரம்பித்த நேரத்தை வைத்துத்தான் நான் நேரம் சொல்ல முடியும்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *10 நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது உங்கள் கணக்குத்தான்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் கொள்முதல் விலையை 3 ரூபாய் அதிகரித்திருப்பது பற்றி ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது; மகிழ்ச்சி. இன்னும்கூட, பால் கொள்முதல் விலையை சற்று அதிகரித்துக் கொடுத்தாலும் மகிழ்ச்சிதான். ஆனால், பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு 3 ரூபாய் அதிகரித்துக் கொடுத்துவிட்டு, விற்பனை விலையை லிட்டருக்கு 12 ரூபாய் என அதிகரித்திருப்பதால், மக்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, விற்பனை விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மைக் எடுத்து பேச ஆரம்பித்துவிட்டார்கள்.

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, F.C.M.–க்கும் விலை மட்டுமே உயர்த்தப்பட்டுள்ளது என்பதையும், T.M.–க்கும், S.M.–க்கும் விலை உயர்த்தப்படவில்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பால் விலை பற்றி பேசுகிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலிருந்து அதற்கான பதில் பெற்று வாங்க வேண்டுமே! அதுதானே பெருமை. (குறுக்கீடு) சொல்லுங்கள், நீங்களே பேசுங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொத்து வரி உயர்வு, மின்சாரக் கட்டணம் உயர்வு என பல்வேறு விலை உயர்வுகளினால், மக்கள் சொல்லொணாத் துயரத்தில் இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், தற்போது பால் விலையையும் கூட்டியிருப்பது, அவர்களுக்குக் கூடுதல் சுமையாக அமைந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அதேபோல நேரமும் கூடியிருக்கிறது. நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொத்து வரி அதிகரிக்கப்பட மாட்டாது என்று உங்களுடைய தேர்தல் அறிக்கை, வாக்குறுதி எண் 487–ல் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், சொன்னதற்கு நேர்மாறாக தற்போது சொத்து வரி அதிகரிக்கப்பட்டிருக்கிறது. நான் அதைத்தான், ஆட்சிக்கு வருவதற்கு முன்பு ஒரு நிலைப்பாடு; ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு ஒரு நிலைப்பாடு என்று குறிப்பிட்டேன். வரலாற்று நிகழ்வுகளைச் சொல்கிறபோது, கி.மு. என்றும் கி.பி. என்றும் சொல்வோம். அதைப்போன்று தி.மு.க.–வின் வாக்குறுதிகளைப் பற்றி சொல்ல வேண்டுமென்றால், தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்பு என்று சொல்ல வேண்டும். அதாவது, ஆ.மு., ஆ.பி. . .

2023 ஜனவரி 11]

பிற்பகல் 2–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், இருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலைக் கேட்டுக்கொள்ளுங்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொத்து வரி ஏற்றியிருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். ஒன்றிய அரசிலிருந்து பணம் வர வேண்டியுள்ளது. இதைச் செய்தால்தான் அதைத் தருவேன் என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு) என்ன ஓஹோ, ஓஹோ; ஓஹோ என்றால் என்ன அர்த்தம்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இருக்கையில் அமர்ந்து கொண்டு தயவுசெய்து யாரும்* comment *செய்ய வேண்டாம்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒன்றிய அரசிலிருந்து நமது பங்குக்கு வரவேண்டிய பணம். இவ்வளவு தொகை உயர்த்திய பிறகும் இந்தியாவில் மிகக் குறைவான சொத்து வரி விதிக்கும் ஒரே மாநிலம் நம்முடைய மாநிலம் மட்டும்தான். எந்த மாநிலத்தை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள். (சிரிப்பு) நீங்கள் சிரிப்பதால் மட்டும் நாங்கள் சொல்வது பொய்யாகிவிடாது. எவ்வளவு உயர்த்தியிருக்கிறோம் என்று நீங்கள் கேட்கலாம். கிட்டத்தட்ட 80 சதவிகிதம் பேருக்கு 25 சதவிகிதம் வரி உயர்த்தியிருக்கிறோம்; கிட்டத்தட்ட 7 இலட்சம் பேருக்கு 75 சதவிகிதம் வரி உயர்த்தியிருக்கிறோம்; 100 சதவிகிதம் வரி உயர்த்தப்பட்ட வீடுகள் என்று சொன்னால் தமிழ்நாட்டில் மொத்தமே 1 இலட்சம் வீடுகள்தான் இருக்கும். இன்றைக்கு சென்னை மாநகரில் 2,400 சதுர அடிக்கு 2,500 ரூபாய் சொத்து வரி என்று சொன்னால், மகாராஷ்டிராவில் சொத்து வரி 12,000 ரூபாய் என்றிருக்கிறது. நாங்கள் வந்த பிறகுதான் உயர்த்தினோம் என்று நீங்கள் சொல்கிறீர்கள். உங்கள் காலத்தில் நீங்கள் சொத்து வரியை உயர்த்தவில்லையா? பேருந்து கட்டணத்தை உயர்த்தவில்லையா? மின்சாரக் கட்டணத்தை உயர்த்தவில்லையா? பால் விலையை ஏற்றிய பிறகும், பேருந்துக் கட்டணத்தை ஏற்றிய பிறகும், நாங்கள்தான் வெற்றி பெறுவோம் என்று இடைத்தேர்தல் நடக்கிறபோது இதே அவையில் உங்களுடைய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். ஆனால், ஆட்சிக்கு*

வருவதற்கு முன்பு ஒரு நிலைப்பாடு ஆட்சிக்கு வந்த பிறகு ஒரு நிலைப்பாடு என்று நீங்கள் சொல்கிறீர்கள். உங்களுடைய நிலை என்ன? ஆட்சிக்கு வருவதற்கு முன்பு என்ன சொன்னீர்கள்? ஆட்சிக்கு வந்த பிறகு என்ன செய்தீர்கள்? அதைச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள்.* (குறுக்கீடு) *உங்களுடைய உறுப்பினர்தான். அடையாளம் தெரிகிறதல்லவா! அனைவரும்* uniform*–ல்தானே வந்துள்ளீர்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, உங்கள் காலத்திலும் சொத்து வரியை உயர்த்தினீர்கள் என்று சொன்னார்கள். அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சொத்து வரி உயர்த்தவில்லை என்பது அனைவருக்கும் தெரியும். அதுமட்டுமல்ல, மத்திய அரசு நிதியைத் தரவில்லை; அதன் காரணமாக சொத்து வரியை உயர்த்த வேண்டிய கட்டாயம் இருந்தது என்று சொன்னார்கள். 15*th Finance Commission *நிதி கொடுக்கின்றபோது, மத்திய அரசு அதனை வலியுறுத்தியது. அதில் மாற்றுக் கருத்து ஒன்றுமில்லை. மத்திய அரசு சொன்னது உண்மைதான். அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தநேரத்தில் அந்த* circular *வந்தது. அப்போது கொரோனா பாதிப்பு கடுமையாக இருந்தது. கண்டிப்பாக சொத்து வரியை உயர்த்தக் கூடாது என்று நிறுத்தி வைத்தவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். இதன் காரணமாக மத்திய அரசு அந்த நிதியை நிறுத்தியிருந்தது. ஆனால், நாங்கள் சென்று வலியுறுத்தி இரண்டு முறை அந்த நிதியை வாங்கிவிட்டோம். சொத்து வரியை உயர்த்தாமல் இரண்டு முறை அந்த நிதியை நாங்கள் வாங்கியிருக்கிறோம். அதேபோல் அந்த நிதியை நீங்கள் வலியுறுத்திப் பெற்றிருக்கலாம். நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு கொரோனா நோய்த் தொற்று கடுமையாக அதிகரித்தது; நிறைய பேர் இறந்தார்கள். இதுபோன்ற பிரச்சினைகளெல்லாம் இருக்கும்போது சொத்து வரி உயர்வை நிறுத்தியிருக்கலாம். அதிகாரிகள்கூட மத்திய அரசாங்கத்தினுடைய* circular*–ஐ வைத்து,*

2023 ஜனவரி 11] [*திரு. எஸ்.பி. வேலுமணி*]

கண்டிப்பாக உயர்த்த வேண்டும் என்று ஒரு முடிவுக்கு வந்தார்கள். ஆனால், அண்ணா தி.மு.க. ஆட்சியில், அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இந்த நேரத்தில் கண்டிப்பாக சொத்து வரியை உயர்த்தக் கூடாது என்றும், நான் முதலமைச்சராக இருக்கும்போது உயர்த்த மாட்டேன் என்றும் சொல்லி நிறுத்தி வைத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இருந்தபோது இரண்டு முறை சொத்து வரியை உயர்த்த முடியாது என்று சொல்லி, ஒன்றிய அரசை வலியுறுத்தி நிதியைப் பெற்றிருக்கிறீர்கள். ஒன்று, நாங்கள் வலியுறுத்தி கேட்டபோதும், இதைச் செய்தால்தான் நாங்கள் தருவோம் என்று சொன்னார்கள். இரண்டாவது, உங்களுடைய காலத்தில் உயர்த்தாமல் இருந்ததற்குத் தேர்தல் வரப் போகிறது என்ற முக்கியமான ஒரு காரணம் உங்களுக்கு இருந்தது. எனவே, அதனை நீங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்போது தேர்தல் வரப்போகிற காலம்.*

நீங்கள் உள்ளாட்சித் துறையை முழுவதுமாகப் பார்த்தவர் என்பதால் இதனை நான் சொல்கிறேன். பல ஊராட்சிகள், பல நகராட்சிகள், பல பேரூராட்சிகள் சம்பளம் கொடுப்பதற்குக்கூட நிதி இல்லாமல் இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், நீங்கள் என்னென்ன பணிகளைச் செய்துவிட்டு சென்றீர்களோ, அதற்கான கடன்களைத்தான் நாங்கள் இப்போது அடைத்துக்கொண்டு வருகிறோம். அதையும் நான் உங்களுக்குச் சொல்கிறேன். இதைச் செய்தால்தான் தமிழ்நாடு அரசுக்கு வர வேண்டிய பணம் வரும் என்று சொன்னதால், அதனைச் செய்யக்கூடிய கட்டாயம் இருந்தது. அதிலும் மிக மிகக் குறைவாக உயர்த்துவதற்குத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு உத்தரவு தந்தார்கள். இந்தியாவிலேயே இங்குதான் குறைந்த சொத்து வரி என்ற அளவிற்குத்தான் உயர்த்தப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலுமணி அவர்கள் பேசுகின்றபோது, ஒன்றிய அரசு வலியுறுத்தினாலும் நாங்கள் வரியை உயர்த்தவில்லை என்று சொன்னார்கள். என்னவென்றால், பணமே ஒதுக்கீடு செய்யாமல், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 388 ஒன்றியங்களிலும், கடந்த காலத்தில் அவர்கள் எந்த நிதியும் இல்லாமல்* tender *விட்டுவிட்டு சென்றார்கள். கிட்டத்தட்ட இரண்டு ஆண்டு காலமாக ஊராட்சி ஒன்றியங்களில் அந்தப் பணத்தை திருப்பிச் செலுத்துகிற நிலைதான் இன்றுவரை இருக்கிறது. 388 ஒன்றியங்களிலும் நீங்கள் எந்த நிதியையும் ஒதுக்கீடு செய்யாமல், பல கோடி ரூபாய்க்கு* tender *விட்டுவிட்டு சென்றுவிட்டீர்கள். 388 ஒன்றியங்களில் உள்ள பெருந்தலைவர்கள், கவுன்சிலர்கள் எல்லா பணத்தையும் திரும்பச் செலுத்த வேண்டிய நிலையை ஏற்படுத்தியது உங்களுடைய அரசு.*

பிற்பகல் 2–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் எழுந்து நின்றால் எப்படி? (குறுக்கீடுகள்) இவர்களுக்கு அடுத்தாற்போல் வாய்ப்பு தருகிறேன் என்று சொன்னேன். (குறுக்கீடுகள்) எல்லா பக்கமும் உங்களுக்குக் கண் பார்வை இருக்கட்டும்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய* House record*–ஏ இருக்கிறது. நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது, நீங்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்து, நீங்கள் வரியை ஏற்றியது உண்மை. நானே* zero hour*–ல் எழுந்து இதுபோல் வரிகளை ஏற்றியிருக்கிறீர்கள், அதுவும் முறையாக ஏற்றவில்லை. உதாரணத்திற்கு வேலூர் என்பது* Corporation, *திருவண்ணாமலை என்பது நகராட்சி. நகராட்சிக்குக் கூடுதலாக இருக்கிறது,* Corporation*–க்குக் குறைவாக இருக்கிறது, இவ்வாறு முறையற்று ஏற்றியிருக்கிறீர்கள் என்று கவன ஈர்ப்பு தீர்மானத்தில் நான் பேசி, அது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அப்போது நீங்கள்,* committee *போடுகிறேன் என்று சொன்னீர்கள்.* Committee *போட்டு,* regularise *செய்து அந்த வரிகளையெல்லாம் முறையாகக் குறைக்கிறேன் என்று சொன்னீர்கள். கடைசி வரையில் நீங்கள்* committee*–யும் போடவில்லை; வரியையும் குறைக்கவில்லை. அங்கிருந்த அதிகாரிகளின் துன்புறுத்தலினால், சில பேர்* Court*–க்குச் சென்று* stay *வாங்கினார்களேயொழிய வரி*

போடவில்லை என்பதும், நீங்கள் வரியைக் குறைத்தேன் என்பதும் தவறான செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மூத்த அமைச்சர். இப்போதும் அதே அதிகாரிகள்தான் இருக்கிறார்கள். எந்த டெண்டர் விடும்போதும் நிதியாதாரத்தைப் பொறுத்துத்தான் டெண்டர் விடுவார்கள். சில ஒப்பந்தப்புள்ளிகளை அங்கிருக்கக்கூடிய வரி வசூலை வைத்து general fund–ல் விடுவார்கள். அப்படித்தானேயொழிய, நிதி இல்லாமல் எந்த ஒப்பந்தப்புள்ளியும் விடவில்லை. அதேபோல, எந்த அரசாங்கமாக இருந்தாலும், இதற்கு முன்னால் நடந்த வேலைக்கு பணம் பட்டுவாடா செய்வது சகஜம்தான். மேலும், 2011 ஆம் ஆண்டு நீங்கள் முடிந்து சென்றபோதும், அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்துதான் கிட்டத்தட்ட ஒன்றரை வருடமாக அந்தப் பணத்தையெல்லாம் கொடுத்தார்கள். இது routine subject.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும்.

திரு. எஸ்.பி. வேலுமணி: அதேபோல, Highways Minister பேசும்போது வரியை ஏற்றியதாகச் சொன்னார்கள். அதாவது, வரியை ஏற்றவில்லை. வரி எப்போது தமிழ்நாட்டில் ஏறியிருக்கிறது என்று சொன்னால், 1998 ஆம் ஆண்டு உங்கள் ஆட்சியில். அதேபோல, 2008 ஆம் ஆண்டு. அதற்குப் பிறகு இப்போது ஏற்றியிருக்கிறீர்கள். அதாவது, நீங்கள் சொல்கின்ற வரி, கடைகளுக்கு. நகராட்சியில் இருக்கக்கூடிய கடைகளுக்கு வாடகை அதிகரிப்பார்கள். அதற்கு அங்கு தீர்மானம் போட்டு அதிகரிக்க முடிவு செய்வார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபோதும் சரி, அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் இருந்தபோதும் சரி வரியை உயர்த்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: நீங்கள் சொன்ன கருத்துக்கு நான் சொல்வது, ஒன்றியங்களில் 15-வது நிதிக் குழுவினுடைய நிதியோ அல்லது மாநில நிதிக் குழுவினுடைய நிதியோ என எந்தவொரு நிதியாதாரமும் இல்லாமல் டெண்டர் விடப்பட்டு பணிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. நான் ஆதாரத்தோடு சபையில் கொடுக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் சொல்கிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. எதிர்பார்ப்பு என்பது வேறு விஷயம். (குறுக்கீடு) இல்லை, தொடர்ந்து இரண்டு வருடங்களாக ஊராட்சி ஒன்றியங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எந்தக் காரியமும் அவர்களுடைய சொந்த நிதியில்கூட செய்ய முடியாமல் இருக்கிறார்கள். அதற்குக் காரணம், நீங்கள் அந்தமாதிரி ஒரு நிலைப்பாட்டை எடுத்த காரணத்தினால்தான். எந்தப் பணிக்கும் பணமே இல்லாமல், டெண்டர் விட்டு பணிகளைத் துவங்கிவிட்டு, இப்போது அந்தப் பணத்தைக் கொடுக்க வேண்டிய நிலை வந்ததால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியப் பிரதிநிதிகளால் இரண்டு ஆண்டு காலம் செயல்பட முடியாமல் போனது அதற்குக் காரணம், நீங்கள் செய்த தவறுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) போதும், போதும். உங்கள் ஆட்களெல்லாம் பசியில் இருக்கிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், சொல்லுங்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறாகப் பதிவு செய்கிறார்கள். நான் இப்போதும் சொல்கிறேன். அப்போதிருந்த அதிகாரிகள்தான் இப்போதும் இருக்கிறார்கள். ஏதாவது Head of Account-ல் Central-லிருந்து நிதியைத் தருவார்கள். அந்தந்த District-ல் எந்தெந்த fund-ல் வேலை முடிந்ததோ அதற்கான பணத்தை வாங்கிக்கொள்வார்கள். அதேபோல, General fund-ல் சில நேர்வுகளில் அவரவர்களே டெண்டர் விட்டுக்கொள்வார்கள். அது நம்முடைய knowledge-க்கு வராது. அப்படித்தானேயொழிய, எந்த Head of Account-லும் நிதியில்லாமல் அதிகாரிகள் டெண்டர் விட மாட்டார்கள். அப்படிக் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 24 நிமிடங்கள் முடிந்துவிட்டன. நீங்கள், அறையில் வந்து திரு. வேலுமணி அண்ணன் என்னிடம் சொன்னீர்கள். எங்களுக்கு (குறுக்கீடு) இல்லை, ஐந்து நிமிடங்கள் (குறுக்கீடு) இல்லை, எல்லாம் உங்கள் account. (குறுக்கீடு)

2023 ஜனவரி 11] [பேரவைத் தலைவர்]

திரு. தனபால் அண்ணனிடம் கேட்டுக்கொள்ளுங்கள். உங்கள் account *தான் அவ்வளவும். (குறுக்கீடு) உங்கள்* account*–ல்தான் எல்லாமே இருக்கிறது. நன்றி சொல்லி உரையை முடித்துவிடுங்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லி உரையை முடித்துவிடலாம். கடைசி பக்கத்தை எடுங்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *இருங்கள், இரண்டே இரண்டு விஷயங்கள் பேசிக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களிடம்* paper *இல்லையென்றால், என்னிடம்* paper *இருக்கிறது. (சிரிப்பு) முடித்துவிடுங்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா காலத்தில் உயிரைப் பணயம் வைத்து, பணி செய்த தற்காலிகப் பணியாளர்களும், டாக்டர்களும், செவிலியர்களும் இன்றைக்கு தெருவில் நின்று போராடுகிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் சொல்லியாகிவிட்டது.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *முதலில் என்னைப் பேசவிடுங்கள். நீங்கள் அதற்குப் பிறகு பதில் சொல்லுங்கள். தி.மு.க.–வினுடைய வாக்குறுதி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அப்படியென்றால் அவர் பேச வேண்டுமல்லவா? நீங்கள் அதைத்தானே கேட்கிறீர்கள்! நான், நன்றி சொல்லுங்கள் என்று சொன்னால். (குறுக்கீடுகள்)*

பிற்பகல் 2–55

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா காலத்தில் உயிரைப் பணயம் வைத்துப் பணியாற்றிய ஒப்பந்தச் செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த களப் பணியாளர்கள் குறித்து அக்கறை கொண்டு*

[திரு. மா. சுப்பிரமணியன்] [*2023 ஜனவரி 11*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்; உண்மையிலே மகிழ்ச்சிதான். என்னவென்றால், இந்தத் தகவலை சொல்லித்தான் தீர வேண்டும். எங்கு கேட்காமல் சென்றுவிடுவார்களோ, பதில் சொல்ல முடியாமல் போய்விடுமோ என்று நான் கவலைபட்டுக் கொண்டிருந்தேன். என்னவென்றால், 2015-லிருந்து 2020 வரைக்கும், அந்த 6 வருடங்களில், 15,000 ஒப்பந்தச் செவிலியர்களைப் பணியில் அமர்த்தியிருக்கிறார்கள். இந்த 15,000 ஒப்பந்தச் செவிலியர்களை நியமனம் செய்தது குறித்து, இரண்டு முறை உயர் நீதிமன்றம் தடுத்திருக்கிறது. இதில் எவ்வளவு பணியிடங்கள் ஒப்பளிக்கப்படுகின்றனவோ, அதற்கு 10 சதவிகிதத்திற்கு மேல் கூடுதலாகப் பணி நியமனம் செய்யக் கூடாது என்று நீதிமன்றத்தால் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், 2015-ல் 7,200 பேரை எடுப்பதற்குப் பதிலாக, 8,200 பேருக்குமேல் எடுத்திருக்கிறார்கள். அப்போது ஒருவர் Court-*க்குச் சென்றபோது, எடுத்தது தவறு என்று* Court *கண்டித்தது மாதிரி ஒரு* judgement *வந்திருக்கிறது. அதற்குப் பிறகு 2016-ல் ஒரு* judgement *வந்திருக்கிறது. ஆக, நீதிமன்றத்தின் எந்த உத்தரவையும் இவர்கள் பின்பற்றவேயில்லை. 2015, 2016, 2018, 2019 ஆகிய ஆண்டுகளில் 15,000 ஒப்பந்தச் செவிலியர்களை நியமித்திருக்கிறார்கள். மீண்டும், 2020 ஏப்ரல் மாதம் 2,300 பேரை எடுக்கிறார்கள். அப்படி எடுத்ததில், பாதி பேருக்குமேல்* Certificate verification-*ம் இல்லை;* Communal rotation-*ம் இல்லை.* Certificate verification-*ம்,* Communal rotation-*ம் இல்லையென்றால், அவர்களையெல்லாம் பணி வரன்முறைப்படுத்தக் கூடாது என்று உயர் நீதிமன்றம் ஆணையிடுகிறது. அவர்களெல்லாம் 6 மாதங்கள்* temporary *என்று நீங்கள்தான்* order *கொடுத்திருக்கிறீர்கள். அம்மா மினி கிளினிக் மருத்துவமனைக்கு 1,820 மருத்துவர்களை எடுத்தீர்கள்.* MRB-Medical Services Recruitment Board *மூலமாக எடுத்திருக்க வேண்டும். அதற்குப் பதிலாக அவர்களை எங்கிருந்து எடுத்தீர்கள்.* District Health Society *மூலமாக மாவட்ட அளவில் எடுத்திருக்கிறீர்கள். நேரடியாக* MRB *மூலமாக எடுத்திருந்தீர்களென்றால், அந்த 1,820 மருத்துவர்களை இன்றைக்குப் பணி நிரந்தரம் செய்திருக்கலாம்.* District Health Society-*லிருந்து அவர்களை பணிக்கு எடுத்துவிட்டு, ஒரு வருடத்திற்கு மட்டும்தான் வேலை என்று அவர்களுக்கு* order-*ம் கொடுத்துவிட்டு, ஒரு வருடத்திற்கு மட்டும்தான் இந்த அம்மா மினி கிளினிக் என்று நீங்கள் உத்தரவும் போட்டுவிட்டு, அந்த மினி கிளினிக்கை மூடியவுடனே,*

2023 ஜனவரி 11] [திரு. மா. சுப்பிரமணியன்]
அம்மா மினி கிளினிக்கை மூடிவிட்டீர்கள் என்று நீங்கள் குரல் கொடுக்க ஆரம்பித்தீர்கள். சரி. உண்மையை அன்றைக்கே நாங்கள் தெளிவுபடுத்திவிட்டோம்.

ஆனாலும், ஒப்பந்தச் செவிலியர்கள், 15,000 பேருக்குமேல், உங்களுடைய ஆட்சியில் நியமிக்கப்பட்டதில் தவறு இருக்கின்றது. நேற்றைக்கு முன்தினம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலுக்கேற்ப, அந்தச் சகோதரர்களை, சங்க நிருவாகிகளை அழைத்து மூன்று மணி நேரம் உட்கார்ந்து பேசினோம். அப்படிப் பேசுகின்றபோது, ஆமாம் சார், நாங்கள் temporary ஆகத்தான் வந்தோம்; 6 மாதங்கள்தான் கொடுத்தார்கள். தயவுசெய்து எங்களுக்கு ஏதாவது செய்யுங்கள் என்று அவர்களே சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒப்பந்தப் பணியாளர்களாகச் சேர்ந்த ஒருவர்கூட இந்த அரசாங்கத்தில் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்று சொன்னார்கள். 2020—ல், ரூ.14,000/— சம்பளத்தில் சேர்ந்தார்கள். இப்போது, அவர்களுக்கு ரூ.18,000/— சம்பளம் கொடுத்து, அந்த 2,400 பேரில் தற்போது 1,800 பேர்தான் இருக்கிறார்கள். இந்த 1,800 பேரையும் reinstate செய்யுங்கள் என்று சொல்கிறார்கள். அப்படி reinstate செய்யும்போது, ரூ.14,000/— சம்பளம் என்பது ரூ.18,000/— ஆக மாறட்டும் என்று ரூ.18,000/— சம்பளம் கொடுத்து எடுப்பதிலும், இன்னொரு சிறப்புச் சலுகையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஏற்கெனவே எடுத்த ஒப்பந்தப் பணியாளர்கள், District Headquarters Hospital—ல் மட்டும்தான் work செய்வார்கள். அவர்கள் செல்லும் இடங்களிலெல்லாம் transfer கேட்டு சுற்றிக் கொண்டிருப்பார்கள். அதனால், அவர்களை District Health Society மூலமாக வேலைக்கு எடுக்கின்றபோது, அவரவர்களுடைய சொந்த ஊர்களிலே வேலை கிடைப்பதற்கான ஏற்பாடுகளை செய்யச் சொல்லியிருக்கிற ஒரு மகத்தான முதல்வர் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி) நேற்றைக்கு அதற்கான ஆணை வெளியிடப்பட்டுவிட்டது. நேற்றைக்கு அதற்கான அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. நாளையிலிருந்து அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான District Health Society—ல் அவர்கள் சென்று பணியில் சேரலாம். இதற்கான அழைப்பாணை நேற்றைக்கு விடுக்கப்பட்டுவிட்டது. இன்றைக்கு பத்திரிகைகளிலும் அதற்கான விளம்பரம் வந்திருக்கிறது. இதைப் பார்க்காமல் மன்ற உறுப்பினர் பேசுவது விந்தையாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) தெருவில் நின்று போராடியவர்களுக்கெல்லாம் ஏற்பாடு செய்து கொடுத்தாகிவிட்டது. நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போராட்டம் செய்பவர்களை அழைத்துப் பேசி, அவர்கள் திருப்திபடுகின்ற வகையிலே அவர்களை accommodate செய்துகொள்ள வேண்டும், பணி நியமனம் வழங்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை. ஏற்கெனவே, நீங்கள் சொன்னது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். அதற்குமேல் செல்லக் கூடாது. (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: உங்களுடைய தேர்தல் அறிக்கை, வாக்குறுதி எண் 356–ல் எந்த நிபந்தனையும் இல்லையென்று நீங்கள் சொன்னதைத்தான் நினைவுப்படுத்தி, அவர்களுக்கு மறுவாழ்வு கொடுங்கள்; கருணை காட்டுங்கள் என்று கூறுகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு சட்டம்–ஒழுங்குப் பிரச்சினைப் பற்றி இங்கே பலர் பேசியிருக்கின்றார்கள். சட்டம்–ஒழுங்குப் பிரச்சினையைப் பற்றிப் பேசும்போது, ஏதாவது சம்பவத்தைக் குறிப்பிட்டுத்தான் பேச வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டம்–ஒழுங்குப் பிரச்சினைப் பற்றி பேசியது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (12–1–2023), வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–59 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (ஏழாவது திருத்தம்) விதிகளை இயற்றியது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 27–9–2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 116–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றது.]

2. 2006 ஆம் ஆண்டைய தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் இரண்டாம் இணைப்புப் பட்டியலுக்கான விளக்கம் III–ன்கீழ் மங்களூர் ரிஃபைனரி மற்றும் பெட்ரோகெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனத்தை "எண்ணெய் நிறுவனம்" என்று சேர்த்தல் குறித்து 21–6–2022 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (பி2)த் துறையின் அரசாணை (நிலை) எண் 99–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. தமிழ்நாடு 1932 ஆம் ஆண்டு கூட்டாண்மை (நிறுவனங்களின் பதிவு) விதிகளில் புதிய கூட்டாண்மை நிறுவனத்தை இணையவழியாக பதிவு செய்வதற்கான நடைமுறைகளை இயற்றியது குறித்து 6–10–2021 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (எம்1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 127–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டாண்மை சட்டத்தின் (மத்தியச் சட்டம் IX/1932) 71(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

4. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் அவ்வறிக்கையில் இடம்பெற்றுள்ள பரிந்துரைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை. [1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1994) 28(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

5. 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் நாற்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

6. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் நாற்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

7. 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் இருபத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395 (1) (b) *பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)*

8. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் முப்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1) (b) *பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)*

9. 2021–2022 ஆம் ஆண்டிற்கான சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 394 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

10. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நாற்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) *பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)*

11. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் கழகத்தின் ஐம்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) *பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)*

12. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் நாற்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு

நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1) (b) *பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2022.) (ஆங்கிலம்)

2. தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டது குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 212-ன்கீழ் தகவல் தெரிவித்தல்.

3. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் உரையாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ்–ஆங்கிலம்)

4. 2023 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 9 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

5. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2021–2023)

6. பொதுக் கணக்குக் குழுவின் அறுபதாவது அறிக்கை. (2021–2023)

7. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து ஒன்றாவது அறிக்கை. (2021–2023)

8. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து இரண்டாவது அறிக்கை. (2021–2023)

9. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து மூன்றாவது அறிக்கை. (2021–2023)

10. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து நான்காவது அறிக்கை. (2021–2023)

11. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து ஐந்தாவது அறிக்கை. (2021–2023)

12. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து ஆறாவது அறிக்கை. (2021–2023)

13. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து ஏழாவது அறிக்கை. (2021–2023)

14. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து எட்டாவது அறிக்கை. (2021–2023)

15. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து ஒன்பதாவது அறிக்கை. (2021–2023)

16. பொதுக் கணக்குக் குழுவின் எழுபதாவது அறிக்கை. (2021–2023)

17. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து ஒன்றாவது அறிக்கை. (2021–2023)

18. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து இரண்டாவது அறிக்கை. (2021–2023)

19. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து மூன்றாவது அறிக்கை. (2021–2023)

20. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து நான்காவது அறிக்கை. (2021–2023)

21. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து ஐந்தாவது அறிக்கை. (2021–2023)

22. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து ஆறாவது அறிக்கை. (2021–2023)

23. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து ஏழாவது அறிக்கை. (2021–2023)

24. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து எட்டாவது அறிக்கை. (2021–2023)

25. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து ஒன்பதாவது அறிக்கை. (2021–2023)

26. பொதுக் கணக்குக் குழுவின் எண்பதாவது அறிக்கை. (*2021–2023*)

27. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்து ஒன்றாவது அறிக்கை. (*2021–2023*)

28. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து நான்காவது அறிக்கை. (*2021–2023*)

29. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து ஐந்தாவது அறிக்கை. (*2021–2023*)

30. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து ஆறாவது அறிக்கை. (*2021–2023*)

31. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து ஏழாவது அறிக்கை. (*2021–2023*)

32. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து எட்டாவது அறிக்கை. (*2021–2023*)

33. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து ஒன்பதாவது அறிக்கை. (*2021–2023*)

34. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஐந்தாவது அறிக்கை. (*2021–2023*)

35. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஆறாவது அறிக்கை. (*2021–2023*)

36. அரசு உறுதிமொழிக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை. (*2021–2023*)

37. அரசு உறுதிமொழிக் குழுவின் பத்தாவது அறிக்கை. (*2021–2023*)

38. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினொன்றாவது அறிக்கை. (*2021–2023*)

39. அரசு உறுதிமொழிக் குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கை. (*2021–2023*)

[2023 ஜனவரி 11

40. அரசு உறுதிமொழிக் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை. (2021–2023)

41. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினான்காவது அறிக்கை. (2021–2023)

42. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினைந்தாவது அறிக்கை. (2021–2023)

43. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினாறாவது அறிக்கை. (2021–2023)

44. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினேழாவது அறிக்கை. (2021–2023)

45. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினெட்டாவது அறிக்கை. (2021–2023)

46. அரசு உறுதிமொழிக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை. (2021–2023)

47. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபதாவது அறிக்கை. (2021–2023)

48. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து ஒன்றாவது அறிக்கை. (2021–2023)

49. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து இரண்டாவது அறிக்கை. (2021–2023)

50. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து மூன்றாவது அறிக்கை. (2021–2023)

51. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து நான்காவது அறிக்கை. (2021–2023)

52. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து ஐந்தாவது அறிக்கை. (2021–2023)

53. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து ஆறாவது அறிக்கை. (2021–2023)

54. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து ஏழாவது அறிக்கை. (2021–2023)

55. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து எட்டாவது அறிக்கை. (2021–2023)

56. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து ஒன்பதாவது அறிக்கை. (2021–2023)

57. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பதாவது அறிக்கை. (2021–2023)

58. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஒன்றாவது அறிக்கை. (2021–2023)

59. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து இரண்டாவது அறிக்கை. (2021–2023)

60. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து மூன்றாவது அறிக்கை. (2021–2023)

61. மனுக்கள் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை. (2021–2023)

62. மனுக்கள் குழுவின் பதினான்காவது அறிக்கை. (2021–2023)

63. மனுக்கள் குழுவின் பதினைந்தாவது அறிக்கை. (2021–2023)

64. மனுக்கள் குழுவின் பதினாறாவது அறிக்கை. (2021–2023)

65. மனுக்கள் குழுவின் பதினேழாவது அறிக்கை. (2021–2023)

66. மனுக்கள் குழுவின் பதினெட்டாவது அறிக்கை. (2021–2023)

67. மனுக்கள் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை. (2021–2023)

68. மனுக்கள் குழுவின் இருபதாவது அறிக்கை. (2021–2023)

69. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (முதலாவது பட்டியல்) (2023) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

70. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (இரண்டாவது பட்டியல்) (2023) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

71. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (மூன்றாவது பட்டியல்) (2023) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

[*2023 ஜனவரி 11*

72. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (நான்காவது பட்டியல்) (*2023*) (வரிசை எண்கள் *1* முதல் *100* வரை)

73. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (ஐந்தாவது பட்டியல் (*2023*)) (வரிசை எண்கள் *1* முதல் *150* வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)

74. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (ஆறாவது பட்டியல் (*2023*)) (வரிசை எண்கள் *1* முதல் *150* வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)

75. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (ஏழாவது பட்டியல் (*2023*)) (வரிசை எண்கள் *1* முதல் *150* வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I

(71 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல்கள் 1 முதல் 4 வரை) @

பட்டியல்-1

1—

கிளை நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4112—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் வட்டம், ஒட்டப்பிடாரம் ஒன்றியம், மருதன்வாழ்வு நியாய விலைக் கடை அமைந்துள்ள டி. அய்யப்பாபுரம் கிராமத்திற்கு கிளை கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி சரகம், திலி.தனி.169, புளியம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் லிமிடெட்டின்கீழ் 6 முழுநேர நியாய விலைக் கடைகளும், 5 பகுதிநேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கம் நடத்திவரும் மருதன்வாழ்வு நியாய விலைக் கடையில் டி.அய்யப்பாபுரம் பகுதியைச் சேர்ந்த 55 குடும்ப அட்டைதாரர்கள் அத்தியாவசியப் பொருட்கள் பெற்று வருகின்றனர்.

@ *இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.*

டி.அய்யப்பாபுரம் கிராமம் தாய்க் கடையான மருதன்வாழ்வு கடையிலிருந்து 1.5 கி.மீ. தொலைவில் உள்ளது. டி.அய்யப்பாபுரம் கிராமத்தில் 55 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன.

எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால், டி.அய்யப்பாபுரம் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2—

கிளை நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4116—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் வட்டம், ஒட்டப்பிடாரம் ஒன்றியம், மேலப்பாண்டியாபுரம் நியாய விலைக் கடை அமைந்துள்ள பாறைக்குட்டை கிராமத்திற்கு கிளை கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், ஒட்டப்பிடாரம் ஒன்றியத்தில், ஏ.149 ஒட்டப்பிடாரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் நடத்தும் மேலப்பாண்டியாபுரம் நியாய விலைக் கடையில் 213 குடும்ப அட்டைகள் உள்ளன. இக்கடையில் பாறைக்குட்டம் பகுதியைச் சேர்ந்த 90 குடும்ப அட்டைதாரர்கள் அத்தியாவசியப் பொருட்கள் பெற்று வருகின்றனர்.

பாறைக்குட்டம் நியாய விலைக் கடை தாய்க் கடையான மேலப்பாண்டியாபுரம் கடையிலிருந்து 2 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஜனவரி 11]

இந்நேர்வில் பாறைக்குட்டம் பகுதியில் 90 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும், குடும்ப அட்டைகளைப் பிரிக்காமலேயே தாய்க் கடையில் 213 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால், பாறைக்குட்டம் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

3—

கிளை நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4117—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தூத்துக்குடி வட்டம், தூத்துக்குடி ஒன்றியம், குலையன்கரிசல் நியாய விலைக் கடை அமைந்துள்ள பாண்டியாபுரம் கிராமத்திற்கு கிளை கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி சரகம், ஓ.961 தூத்துக்குடி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை நடத்திவரும் குலையன்கரிசல் முழுநேர நியாய விலைக் கடையில் மொத்தம் 652 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் பாண்டியாபுரம் பகுதியைச் சேர்ந்த 42 குடும்ப அட்டைகளும் அடங்கும். மேலும், பாண்டியாபுரம் கிராமம் தாய்க் கடையான குலையன்கரிசல் நியாய விலைக் கடையிலிருந்து 1 கி.மீ.–க்கும் குறைவான தூரத்தில் அமைந்துள்ளது.

[2023 ஜனவரி 11

இந்நேர்வில் பாண்டியாபுரம் பகுதியில் 42 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், தாய்க் கடைக்கும் உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பாண்டியாபுரம் பகுதிக்கும், இடைப்பட்ட தூரம் 1 கிமீ.–க்கும் குறைவாகவே உள்ளதாலும், அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், பாண்டியாபுரம் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

4—

கிளை நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4118—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தூத்துக்குடி வட்டம், தூத்துக்குடி ஒன்றியம், குமரகிரி நியாய விலைக் கடை அமைந்துள்ள திருமலையாபுரம் கிராமத்திற்கு கிளை கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி சரகம், இ.இ.1674 குலையன்கரிசல் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் 6 முழுநேர நியாய விலைக் கடைகள் மற்றும் 1 பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட சங்கம் நடத்தும் கூட்டாம்புளி தாய்க்கடையில் 1,239 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் திருமலையாபுரம் பகுதியைச் சேர்ந்த 200 குடும்ப அட்டைகளும் அடங்கும். திருமலையாபுரம் பகுதிக்கும் தாய்க் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1 கி.மீ.–க்கும் குறைவாகவே உள்ளது.

2023 ஜனவரி 11]

எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால், திருமலையாபுரம் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

5—

கிளை நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4123—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தூத்துக்குடி வட்டம், தூத்துக்குடி ஒன்றியம், கே.பி. தளவாய்புரத்தில் இயங்கிவரும் நியாய விலைக் கடையிலிருந்து மகிழம்புரம் கிராமத்திற்கு கிளை கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி சரகம், இ.இ.152 மேலத்தட்டப்பாறை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் 5 முழுநேர நியாய விலைக் கடைகள் மற்றும் 5 பகுதிநேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட சங்கம் நடத்தும் கே.பி. தளவாய்புரம் தாய்க் கடையில் 408 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் மகிழம்புரம் பகுதியைச் சேர்ந்த 60 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் மகிழம்புரம் பகுதிக்கும், தாய்க் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 0.5 கி.மீ. மட்டுமே உள்ளது. மேலும், குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின், தாய் நியாய விலைக் கடையில் 348 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும்.

[2023 ஜனவரி 11

எனவே, இந்நேர்வில் அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால், மகிழம்புரம் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய நிலை எழவில்லை.

6—

வேளாண்மை அறிவியல் நிலையம் தொடங்குதல்

வினா எண் 7160—திரு. கா. அண்ணாதுரை: மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒன்றிய அரசின் திட்டமான வேளாண்மை அறிவியல் நிலையம் (Krishi Vigyan Kendra) தஞ்சாவூர் மாவட்டத்தில் தொடங்க ஒன்றிய அரசை வலியுறுத்த தமிழக அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் உள்ள 40 ஆராய்ச்சி நிலையங்கள் அந்தந்த பகுதிகளுக்கு ஏற்றவாறு பல்வேறு பயிர்களில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன. மேலும், 14 வேளாண் அறிவியல் நிலையங்களும், சென்னையில் ஒரு நகர தகவல் மற்றும் பயிற்சி மையமும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இவை உழவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன.

2. புதிதாக வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் தொடங்குவதற்கு குறைந்தபட்சம் 50 ஏக்கர் நிலம் தேவைப்படும். அதில் 50 விழுக்காடு பரப்பிற்கு பாசன வசதியும், நீர்வள ஆதாரமும் தேவை. இதுவே, பல் பயிர் ஆராய்ச்சி நிலையமானால் கூடுதலாக 50 ஏக்கர் நிலம் தேவைப்படும். மேலும், ஆராய்ச்சி மற்றும் நிர்வாகப் பணிகள் மேற்கொள்ள கூடுதலான மனிதவளம் தேவைப்படும்.

3. ஏற்கெனவே, ஒரு வேளாண்மை அறிவியல் நிலையம் தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் தாலுகாவில் உள்ள

2023 ஜனவரி 11]

செங்கிப்பட்டி கிராமத்தில் ஆர்.வி.எஸ். அறக்கட்டளை என்ற தனியார் நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

4. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகக்கழகத்தின்கீழ் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் வேளாண் ஆராய்ச்சி நிலையமும், வேப்பங்குளத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையமும் செயல்பட்டு வருகின்றன. மேலும், திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்தில் ஒரு வேளாண்மை அறிவியல் நிலையம் (KVK) *செயல்பட்டு வருகின்றது.*

5. எனவே, தஞ்சாவூர் மாவட்டத்தில் வேளாண்மை அறிவியல் நிலையம் (Krishi Vigyan Kendra) *அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.*

7—

கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை வழங்குதல்

வினா எண் 11883—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கரும்பு விவசாயிகளுக்கு கூட்டுறவு ஆலைகளும், தனியார் ஆலைகளும் வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர்:

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள்

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் 2020–2021 அரவைப் பருவம் வரை கொள்முதல் செய்த கரும்பிற்கான நியாயமான மற்றும் ஆதாய கரும்பு விலை முழுவதையும் நிலுவையின்றி முழுமையாக வழங்கி விட்டன.

தமிழ்நாட்டில் உள்ள 18 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் நடப்பு 2021–2022 அரவைப் பருவத்தில் அரவைப் பணி மேற்கொண்ட 14 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் 15–6–2022 வரை சுப்ரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மட்டும் நியாயமான மற்றும் ஆதாய விலையை முழுமையாக விவசாயிகளுக்கு வழங்கி முடித்துவிட்டது.

தருமபுரி மற்றும் கள்ளக்குறிச்சி–2 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் கரும்பு தொகையை விரைவில் வழங்கி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ள 12 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் வழங்க வேண்டிய நியாயமான மற்றும் ஆதாய விலை நிலுவைத் தொகையினை வழங்கி முடிக்க ஏதுவாக வழிவகைக் கடன்மூலம் நிலுவைத் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தனியார் சர்க்கரை ஆலைகள்

நியாயமான மற்றும் ஆதாய விலை நிலுவை விவரம்

அரவைப் பருவம் வாரியாக நியாயமான மற்றும் ஆதாய விலை நிலுவை விவரம் 15-6-2022 அன்றைய நிலவரப்படி

பருவம்	நிலுவை (கோடியில்)	சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை
2016–2017 மற்றும் முந்தைய பருவங்கள்	18.82	4
2017–2018	60.70	3
2018–2019	73.10	3
2019–2020	—	—
2020–2021	—	—
2021–2022	162.07	10
மொத்தம்	314.69	

2023 ஜனவரி 11]

முந்தைய ஆண்டுகளில் (2016–2017 மற்றும் முந்தைய பருவங்கள் முதல் 2020–2021 வரை) உள்ள நிலுவைத் தொகையான ரூ.152.62 கோடியில்,

- *திரு ஆரூரான் (ரூ.46.26 கோடி) மற்றும் ஸ்ரீஅம்பிகா (ரூ.30.99 கோடி) சர்க்கரை ஆலைகள்மீது திவால் நிலை குறித்த நடவடிக்கைகள் தொடரப்பட்டு இடைக்கால கடன் தீர்வாளர்களிடம் கேட்பு மனுக்கள் கரும்பு விவசாயிகள் சார்பாக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*
- *தரணி குழும சர்க்கரை ஆலைகள் வழங்க வேண்டிய நிலுவைத் தொகை ரூ.73.10 கோடி. மேற்படி சர்க்கரை ஆலைகள்மீது தேசிய நிறும சட்டத் தீர்ப்பாயத்தின்மூலம் திவால் நடவடிக்கைகள் தொடரப்பட்டு இடைக்கால கடன் தீர்வாளர்களிடம் கேட்பு மனுக்கள் கரும்பு விவசாயிகள் சார்பாக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களால் தாக்கல் செய்யக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.*
- *இயங்காத சர்க்கரை ஆலைகளான பத்மாதேவி (ரூ.0.11 கோடி) மற்றும் அருணாச்சலம் (ரூ.2.15 கோடி) ஆகிய சர்க்கரை ஆலைகளில் நிலுவைத் தொகையாக உள்ளன.*

மாநில அரசு பரிந்துரை விலை நிலுவை

தமிழ்நாட்டில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைகள் தென் இந்திய சர்க்கரை ஆலைகள் சம்மேளனம் (SISMA) மூலமாக மாநில அரசு பரிந்துரை விலை அறிவிப்பதற்கு எதிராக வழக்கினைத் தொடுத்து 2013–2014 பருவம் முதல் 2016–2017 பருவம் வரை மாநில அரசு பரிந்துரை விலையை வழங்காமல் ரூ.1,300.87 கோடி நிலுவையாக வைத்துள்ளன. மாநில அரசு பரிந்துரை விலை நிலுவை தொடர்பாக, அரசளவில் சர்க்கரைத் துறை சார்பாக தனியார் சர்க்கரை ஆலைகள் நிலுவைத் தொகையினை வழங்கிட தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

[2023 ஜனவரி 11

8—

நிலுவைத் தொகை வழங்குதல் மற்றும் மீண்டும் ஆலையைத் திறத்தல்

வினா எண் 12106—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு வேளாண்மை—உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

போளூர் தொகுதியில் உள்ள தரணி சர்க்கரை ஆலை, விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாக வழங்கவும், மீண்டும் ஆலையைத் திறக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம் போளூரிலுள்ள தரணி சர்க்கரை ஆலை விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய கரும்பு நிலுவைத் தொகை ரூ.25.29 கோடி ஆகும்.

கரும்பு விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதற்காகவும், நியாயமான மற்றும் ஆதாய விலை நிலுவைத் தொகையினை முன்கூட்டியே வழங்குவதை உறுதி செய்வதற்காகவும், தரணி குழும சர்க்கரை ஆலைகளின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்களுடன் சர்க்கரைத் துறை ஆணையரகத்தால் கூட்டம் நடத்தப்பட்டு நிலுவைத் தொகையினை விரைந்து கொடுக்க அறிவுறுத்தப்பட்டது. தரணி குழும சர்க்கரை ஆலைகளின் தலைவரால் 31–8–2021–க்குள் நியாயமான மற்றும் ஆதாய விலை நிலுவைத் தொகை வழங்கி முடிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. ஆனால், இதுநாள் வரை நிலுவைத் தொகை வழங்கப்படவில்லை.

இதற்கிடையில் பாங்க் ஆப் இந்தியா வங்கியால் தரணி குழும சர்க்கரை ஆலைகளுக்கு எதிராக திவால் நடவடிக்கைகள் தேசிய நிறும சட்ட தீர்ப்பாயத்தால் தொடங்கப்பட்டுள்ளது. தேசிய நிறும சட்ட தீர்ப்பாயத்தால் இடைக்கால கடன் தீர்வாளர் நியமிக்கப்பட்டுள்ளார். கரும்பு விலை நிலுவை தொடர்பான

2023 ஜனவரி 11]

கேட்பு மனுக்களை கரும்பு விவசாயிகள் சார்பாக திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக இடைக்கால கடன் தீர்வாளரிடம் சமர்ப்பிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்காணும் திவால் நடவடிக்கையின்மீது தரணி குழும சர்க்கரை ஆலைகள் சார்பாக தேசிய நிறும சட்ட தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. எனினும், விவசாயிகளின் நலன் கருதி, போளூர் தொகுதியிலுள்ள தரணி சர்க்கரை ஆலையின் கரும்பு பகுதிகள் அருகிலுள்ள ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை, பண்ணாரி அம்மன் சர்க்கரை ஆலை, கொழுந்தம்பட்டு, ராஜஸ்ரீ சர்க்கரை ஆலை, செம்மேடு ஆகிய ஆலைகளின் பொதுப் பகுதியாக தற்காலிக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆலையினை மீண்டும் திறப்பது தேசிய சட்ட தீர்ப்பாயத்தில் உள்ள வழக்குகளின் முடிவின் அடிப்படையில் அமையும்.

9—

மானியத் தொகை அளித்தல்

வினா எண் 12355—திரு. இரா. அருள்: மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டு மொட்டை மாடிகளில் தோட்டம் அமைப்பவர்களுக்கு மானியத் தொகை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2022–2023 ஆம் ஆண்டு மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் காய்கறித் தோட்டம் அமைப்பதற்கு 6 வகையான காய்கறி விதைகள், செடி வளர்ப்பு பைகள் மற்றும் இதர இடுபொருட்கள் அடங்கிய தொகுப்பு ஒன்றிற்கு 50 சதவீத மானியமாக ரூ.450/– வழங்கப்படுகிறது.

10—

கால்நடை தீவனமாக மாற்றுதல்

வினா எண் 14359—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கரும்பு அறுவடைக்குப் பின் கரும்பு சோகைகள் தீ வைத்து எரிக்கப்படுவதை விடுத்து கால்நடை தீவனமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர்:

கரும்பு சோகையை கால்நடை தீவனமாக மாற்ற முன்மொழிவு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

கரும்பு அறுவடைக்குப் பின் கரும்பு சோகைகளை எரிக்கும் பழக்கம் விவசாயிகளிடம் பெருமளவு குறைந்து வருகிறது. சர்க்கரைத் துறைமூலம் கரும்பு விவசாயிகளிடம் கரும்பு சோகைகள் எரிப்பதன் தீமைகள், சோகைகளை கரிம உரமாக மாற்றி கரும்பு வயல்களிலே பயன்படுத்த விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

11—

உயர் இரகக் கரும்பு

வினா எண் 17599—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, தஞ்சாவூர் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை கரும்பு சாகுபடி பரப்பில் விளையும் கரும்பு இரகத்தை டன்னிற்கு 100 K.G.—க்கு மேல் சர்க்கரை கிடைக்கும் வகையிலான உயர் இரகக் கரும்பு வகைகளை விவசாயிகளுக்கு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடந்த நான்கு வருடங்களாக புத்தாக்கம் செய்யப்பட்ட கோ 86032 இரக கரும்பு விதை கரணைகளை திசு வளர்ப்பு நாற்றுகளாகவும், வல்லுநர் விதைக் கரும்பாகவும் கரும்பு இனப்பெருக்க நிறுவனம் கோவையிலிருந்து பெற்று அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைப் பகுதிகளில் பெருக்கம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், கோ.க.13339, கோ.11015, கோ.கு.6 ஆகிய புதிய உயர் சர்க்கரை சத்து மற்றும் உயர் விளைச்சல் வல்லுநர் விதைக் கரும்புகள் கரும்பு இனப்பெருக்க நிறுவனம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து பெறப்பட்டு வணிக நாற்றாங்கால்மூலம் பெருக்கம் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் பருவங்களில் ஆலைக்குட்பட்ட பெரும்பாலான பகுதிகளில் உயர் விளைச்சல், உயர் சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு இரகங்கள் பயிரிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

12—

சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 17883—திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேத்தியாதோப்பு MRK கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர்:

எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 1,000 மீட்டர் சுற்றுச்சுவர் அமைக்க மாவட்ட சுரங்க சுழல் நிதிமூலம் ரூ.1.24 கோடி நிதி ஒதுக்கீடு செய்யக் கோரி கடலூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களுக்கு திட்ட மதிப்பீடு 9–8–2021 அன்று அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

[2023 ஜனவரி 11

13—

சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 18249—திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கடலூர் மாவட்டம், சேத்தியாதோப்பு பேரூராட்சியில் உள்ள MRK *கூட்டுறவு சர்க்கரை ஆலையில் சுமார் 25 ஆண்டுகளுக்கு மேலாக தற்காலிக பணியாளர்களாக பணியாற்றி வருபவர்களை பணி நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர்:

எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் தினக்கூலி தொழிலாளர்கள் இரண்டு வருட காலத்தில் தொடர்ந்து 480 நாட்கள் பணிபுரியவில்லை. மேற்படி தினக்கூலி தொழிலாளர்கள் முறைப்படி பணி நியமனம் செய்யப்படவில்லை. தினக்கூலி பணியாளர்களின் பணி நியமனத்தில் முறையான இட ஒதுக்கீடு எதுவும் பின்பற்றப்படவில்லை. இவர்களின் பணி நியமனம் மாண்புமிகு உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற வழிகாட்டுதலின்படி மேற்கொள்ளப்படவில்லை என்ற காரணங்களையும் கருத்தில் கொண்டு சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தினக்கூலி தொழிலாளர்களை (NMR) *பணி நிரந்தரம் செய்ய வழிவகை இல்லை.*

14—

காலிப் பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 21444—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேளாண்மை விரிவாக்க மையங்களில் நீண்ட காலமாக காலியாக உள்ள இளநிலை உதவியாளர், இரவுக் காவலர் பணியை நியமனம் செய்ய அரசு முன்வருமா?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர்:

வேளாண்மை விரிவாக்க மையங்களில் தற்போது காலியாகவுள்ள இளநிலை உதவியாளர், (பிணையம்) பணியிட எண்ணிக்கை 82 ஆகும்.

மேற்கண்ட பணியிடங்களில் 60 இளநிலை உதவியாளர், (பிணையம்) பணியிடங்களானது 2020–2021 மற்றும் 2021–2022 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் தெரிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியிடங்களில் மீதமுள்ள 22 பணியிடங்களானது 2022–2023 ஆம் ஆண்டிற்கான காலிப் பணியிட மதிப்பீட்டுப்படி தயாரிக்கப்பட்டு அப்பணியிடங்களை கருணை அடிப்படை மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் நிரப்பிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வேளாண்மைத் துறையில் ஒப்பளிக்கப்பட்ட 1,133 காவலர் பணியிடங்களில் தற்போது காலியாகவுள்ள 851 காவலர் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

15—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கரும்புக்கு உரிய தொகை வழங்குதல்

வினா எண் 22889—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புவனகிரி தொகுதிக்குட்பட்ட கரும்பு விவசாயிகள் பெண்ணாடம் இறையூரில் உள்ள அம்பிகா சர்க்கரை ஆலைக்கு அனுப்பிய கரும்புக்கு உரிய தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதிக்குட்பட்ட பெண்ணாடத்தில் உள்ள அம்பிகா சர்க்கரை ஆலைக்கு எதிராக தேசிய நிறும சட்டத் தீர்ப்பாயத்தில் (NCLT) 2019 ஆம் ஆண்டு திவால் வழக்கு தொடங்கப்பட்டது. தேசிய நிறும சட்டத் தீர்ப்பாயத்தால் நியமிக்கப்பட்ட இடைக்கால கடன் தீர்வாளரிடம் கரும்பு விவசாயிகள் குறித்த முறையான ஆவணங்களுடன் 2016–2017 மற்றும் 2017–2018 அரவைப் பருவத்திற்குரிய நியாயமான மற்றும் ஆதாய விலை (FRP) நிலுவை, காலதாமதத்திற்குரிய வட்டி மற்றும் மாநில அரசு பரிந்துரை விலை நிலுவைத் தொகை குறித்த கோரிக்கைகளை தாக்கல் செய்யுமாறு கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அரசால் அறிவுறுத்தப்பட்டது.

கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 2019 ஆம் ஆண்டு இடைக்காலக் கடன் தீர்வாளரிடம் கரும்பு விவசாயிகளின் சார்பாக அம்பிகா சர்க்கரை ஆலை, பெண்ணாடம் நிறுவனத்திடமிருந்து ரூ.116,84,30,360/– உரிமை கோரி தாக்கல் செய்துள்ளார். மேற்கண்ட கேட்பு மனுக்கள் தேசிய நிறும சட்டத் தீர்ப்பாயத்தில் (NCLT) நிலுவையிலுள்ளதால், தேசிய நிறும சட்டத் தீர்ப்பாயத்தில் எடுக்கப்படும் முடிவின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

16—

கரும்பு இறக்குமிடத்தில் கான்கிரீட் தளம் அமைத்தல்

வினா எண் 22972—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், சேத்தியாதோப்பில் உள்ள எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு இறக்குமிடத்தில் கான்கிரீட் தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரூ.21.07 இலட்சம் செலவில் கரும்பு இறக்கும் தளத்தில் கான்கிரீட் சாலை அமைக்கப்பட்டு, 25–12–2021 முதல் பயன்பாட்டில் உள்ளது.

17—

துணை இயக்குநர் அலுவலகம் அமைத்தல்

வினா எண் 23361—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேப்பனஹள்ளி தொகுதியில் வேளாண்மைப் பொறியியல் துறை துணை இயக்குநர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேப்பனஹள்ளி தொகுதியில் வேளாண்மைப் பொறியியல் துறை துணை இயக்குநர் அலுவலகம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

தற்பொழுது, வேளாண்மைப் பொறியியல் துறையின்கீழ் ஒரு செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அலுவலகம் கிருஷ்ணகிரி மாவட்டத்திலும், உதவி செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அலுவலகங்கள் கிருஷ்ணகிரி மற்றும் ஓசூரிலும் உருவாக்கப்பட்டு வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களின் பயன்களும் கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகளுக்கு தங்குதடையின்றி வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, வேப்பனஹள்ளி தொகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளும் கிருஷ்ணகிரியில் உள்ள செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) மற்றும் உதவி செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அலுவலகங்களைத் தொடர்பு கொண்டு திட்டங்களின் பயனைப் பெறலாம்.

18—

நிவாரணத் தொகை வழங்குதல்

வினா எண் 11473—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழக நாட்டுப்புற கலைஞர்களுக்கு நிகழ்ச்சிகள் இல்லாத காலங்களில் நிவாரணத் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக நாட்டுப்புற கலைஞர்களுக்கு நிகழ்ச்சிகள் இல்லாத காலங்களில் நிவாரணத் தொகை வழங்கிட வழிவகை இல்லை.

19—

நிதியுதவி வழங்குதல்

வினா எண் 21183—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழக நாட்டுப்புற கலைஞர் நல வாரியம்மூலம், வயதான கலைஞர்களுக்கு மூக்குக் கண்ணாடி வாங்க நிதியுதவி வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், இதை உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு நாட்டுப்புற கலைஞர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாக பதிவுபெற்ற கலைஞர்களுக்கு மூக்குக் கண்ணாடி நிதியுதவியாக வழங்கப்பட்ட தொகை ரூ.500/—ஐ ரூ.1,500/— என உயர்த்தியும், ஒரு முறை மட்டும் என வழங்கப்பட்டு வந்த உதவித்தொகை தற்போது மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை வழங்கிட அரசாணை (நிலை) எண் 132, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் 17—9—2019—ன்படி ஆணையிடப்பட்டுள்ளது.

20—

நிவாரணம் வழங்குதல்

வினா எண் 22992—திரு. இரா. அருள்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெருந்தொற்று காலத்தில் பாதிக்கப்பட்ட சர்க்கஸ் கலைஞர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

கலை பண்பாட்டுத் துறையின்கீழ் இயங்கும் தமிழ்நாடு நாட்டுப்புற கலைஞர்கள் நல வாரியத்தில் சர்க்கஸ் கலை இடம் பெறவில்லை. எனவே, தமிழ்நாடு நாட்டுப்புற கலைஞர்கள் நல வாரியத்தின்மூலம் சர்க்கஸ் கலைஞர்களுக்கு நிவாரணம் வழங்கிட வழிவகை இல்லை.

21—

சர்க்கஸ் கலைஞர்களுக்கு உதவுதல்

வினா எண் 22993—திரு. இரா. அருள்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மானாமதுரை சிப்காட் கங்கையம்மன் குடியிருப்பு பகுதியில் வசிக்கும் சர்க்கஸ் தொழிலையே வாழ்வாதாரமாகக் கொண்ட கலைஞர்களுக்கு உதவிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

கலை பண்பாட்டுத் துறையின்கீழ் இயங்கும் தமிழ்நாடு நாட்டுப்புற கலைஞர்கள் நல வாரியத்தில் சர்க்கஸ் கலை இடம் பெறவில்லை. எனவே, தமிழ்நாடு நாட்டுப்புற கலைஞர்கள் நல வாரியத்தின்மூலம் சர்க்கஸ் கலைஞர்களுக்கு நிவாரணம் வழங்கிட வழிவகை இல்லை.

22—

புதிய கட்டடம் மற்றும் அடிப்படை வசதிகள்

வினா எண் 22036—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *போளூர் நகர வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய கட்டடம் மற்றும் அடிப்படை வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *போளூர் நகர வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கம் 5–6–1972–ல் பதிவு செய்யப்பட்டு 13–6–1972 முதல் செயல்பட்டு வருகின்றது. சங்கத்தில் சுமார் 4,000 அங்கத்தினர்கள் அங்கம் வகித்து வருகின்றனர். சங்கம் இந்நாள் வரையில் சுமார் 2,500 வீடுகள் கட்டியுள்ளதற்கான அடிப்படை சங்கமாக விளங்கி வருகின்றது. சங்கம் நாளது தேதியில் வாடகை கட்டடத்தில் இயங்கி*

2023 ஜனவரி 11]

வருகிறது. போளூர் பேரூராட்சிக்குச் சொந்தமான இடத்தில் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது தொடர்பாக உள்ளாட்சி அமைப்பிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. மேலும், சங்கம் 2021–2022 ஆம் ஆண்டு தணிக்கையின்படி கட்டட நிதி ரூ.56,216.70 மட்டுமே உள்ளது. எனவே, சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட உரிய இடம் மற்றும் நிதி ஒதுக்கீடு பெற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

23—

வீடு கட்ட கடன் வழங்குதல்

வினா எண் 23201—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்பட்டு வரும் வீட்டு வசதிச் சங்கங்களுக்கு நிதி வழங்கி, பொது மக்களுக்கு வீடுகட்ட கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்பட்டு வரும் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் சொந்த நிதி மற்றும் வைப்பீடுகள் திரட்டுதல்மூலம் பெறப்படும் நிதியினைக் கொண்டு அடமானத்தின் பெயரில் பொது மக்களுக்கு கட்டுமானக் கடன் வழங்கி வருகின்றன.

2021–2022 ஆம் நிதியாண்டில் 200 நபர்களுக்கு ரூ.102 கோடி கட்டுமானக் கடன் வழங்கப்பட்டுள்ளது. எனவே, கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களுக்கு அரசு நிதி வழங்கி பொது மக்களுக்கு வீடு கட்ட கடன் வழங்க ஆவன செய்யும் சூழ்நிலை எழவில்லை.

[*2023 ஜனவரி 11*

24—

புதிய கட்டடம் மற்றும் அடிப்படை வசதிகள்

வினா எண் 25494—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் நகர வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய கட்டடம் மற்றும் அடிப்படை வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் நகர வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. சங்கம் தற்போது வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு அரசின் கூட்டுறவு வீட்டு வசதியின்கீழ் செயல்பட்டு வரும் பெண்ணாகரம் பேரூராட்சி பகுதி பேருந்து நிலையம் அருகாமையில் அடிமனை (காலியிடம்) தெரிவு செய்யப்பட்டுள்ளது. சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு பெற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

25—

வீடு கட்ட கடன் வழங்குதல்

வினா எண் 28930—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நகர வீட்டு வசதிச் சங்கங்கள்மூலம் மீண்டும் வீடுகட்ட கடன் வழங்குவது குறித்து நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவு வீட்டு வசதித் துறையின்கீழ் செயல்பட்டு வரும் தொடக்க கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் முக்கிய நோக்கம் ஏழையெளிய மக்கள் ஏற்கத்தக்க வட்டி விகிதத்தில், சொந்த நிதி மற்றும் வைப்பீடுகள் திரட்டுதல்மூலம் பெறப்படும் நிதியினைக் கொண்டு அடமானத்தின் பெயரில் உறுப்பினர்களுக்கு கட்டுமானக் கடன்கள் வழங்குவதாகும்.

2021–2022 ஆம் நிதியாண்டில் தோராயமாக 200 நபர்களுக்கு ரூ.102 கோடி கட்டுமானக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இணையத்துடன் இணைந்துள்ள நகர்ப்புர கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் தவணை தவறாத சங்கங்களுக்கு அரசாணையின்படி புதிய கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 2022–2023 ஆம் ஆண்டில் தொடக்க கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களுக்கு நகைக் கடன் வழங்குவதற்கு ரூ.100 கோடி காசுக் கடன் வழங்கவும், சங்க உறுப்பினர்களுக்கு ரூ.500 கோடியளவிற்கு கட்டுமானக் கடன், அடமானக் கடன் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, நகர கூட்டுறவுக் வீட்டு வசதிச் சங்கங்கள்மூலம் பொது மக்களுக்கு வீடு கட்ட கடன் வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

26—

மீண்டும் பணி வழங்குதல்

வினா எண் 25259—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2006 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை புதுவாழ்வுத் திட்டத்தில் பணிபுரிந்த பணியாளர்ளுக்கு மீண்டும் பணி வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

புதுவாழ்வுத் திட்டம் 2006 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை செயல்பட்டு, திட்டம் முடிவடைந்துவிட்டது. இத்திட்டத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய பணியாளர்களை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்கீழ் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM), தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வதாரத் திட்டம் (NULM), தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டம் (DDU–GKY) போன்ற திட்டங்களும் மற்றும் இதர அரசு திட்டங்களான வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP) மற்றும் IFAD ஆகிய திட்டங்களில் தகுதியின் அடிப்படையில் ஒப்பந்த பணியாளர்களாக பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

27—

பட்டு வளர்ச்சித் துறை அலுவலகம்

வினா எண் 21835—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பருவதனஅள்ளி ஊராட்சி, இறங்காடு பகுதியில் உள்ள பட்டு வளர்ச்சித் துறை அலுவலகத்தை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, பருவதனஅள்ளி ஊராட்சி, இறங்காடு பகுதியில் பட்டு வளர்ச்சித் துறையின் பெண்ணாகரம் உதவி இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டின்கீழ் அரசு வெண் பட்டு கலப்பின வித்தகம் செயல்பட்டு வருகிறது.

2023 ஜனவரி 11]

அரசு வெண் பட்டு கலப்பின வித்தகத்தில் தரமான பட்டு முட்டைத் தொகுதிகள் உற்பத்தி செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த வித்தகத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பட்டு முட்டைத் தொகுதிகள் விவரங்கள் பின்வருமாறு:

வருடம்	**உற்பத்தி செய்யப்பட்ட முட்டைத் தொகுதிகள்**
2017–2018	*91,300*
2018–2019	*1,11,200*
2019–2020	*1,40,800*
2020–2021	*1,67,100*
2021–2022	*1,61,125*
மொத்தம்	*6,71,525*

பெண்ணாகரம் தொகுதி, பருவதனஅள்ளி ஊராட்சி, இறங்காடு பகுதியில் வெண் பட்டு கலப்பின வித்தகம் தொடர்ந்து செயல்பட்டு வரும் நிலையில் மீண்டும் செயல்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

28—

விவசாயிகளுக்கு மானியம்

வினா எண் 22866—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, தித்தியோப்பனஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மல்பெரி பயிர் செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் சுற்றுவட்டாரப் பகுதியில் பட்டு வளர்ப்பு தொழிலை மேம்படுத்துவதற்காக பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில் உதவி இயக்குநர் அலுவலகம் பெண்ணாகரத்தில் செயல்பட்டு வருகிறது. இதன்கீழ் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள பெண்ணாகரம், ஏரியூர், பாலக்கோடு, மாரண்டஅள்ளி, காரிமங்கலம் மற்றும் பாப்பாரப்பட்டி ஆகிய ஆறு இடங்களில் தொழில்நுட்ப சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் பாப்பாரப்பட்டி தொழில்நுட்ப சேவை மையத்திற்குட்பட்ட தித்தியோப்பனஅள்ளி ஊராட்சி பகுதியில் 5.50 ஏக்கரில் 5 விவசாயிகளால் மல்பெரி புது நடவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2021–2022 ஆம் ஆண்டில் 1.50 ஏக்கரில் மல்பெரி புது நடவு மேற்கொண்ட 1 விவசாயிக்கு மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2022–2023 ஆம் ஆண்டிற்கு மல்பெரி புது நடவு மேற்கொள்ள 3 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தேர்வு செய்யப்பட்ட 3 விவசாயிகளுமே மல்பெரி புது நடவு மேற்கொண்டுள்ளனர். இவர்களுக்கு மானிய உதவிகள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் இப்பகுதியில் மல்பெரி புது நடவு செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் நடவு மானியம் வழங்கப்படும்.

29—

விவசாயிகளுக்கு மானியம்

வினா எண் 22873—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மல்பெரி பயிர் செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் சுற்றுவட்டாரப் பகுதியில் பட்டு வளர்ப்பு தொழிலை மேம்படுத்துவதற்காக பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில் உதவி இயக்குநர் அலுவலகம் பெண்ணாகரத்தில் செயல்பட்டு வருகிறது. இதன்கீழ் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள பெண்ணாகரம், ஏரியூர், பாலக்கோடு, மாரண்டஅள்ளி, காரிமங்கலம் மற்றும் பாப்பாரப்பட்டி ஆகிய ஆறு இடங்களில் தொழில்நுட்ப சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் ஏரியூர் தொழில்நுட்ப சேவை மையத்திற்குட்பட்ட கெண்டையனஅள்ளி ஊராட்சி பகுதியில் 1 விவசாயி 1.00 ஏக்கரில் மல்பெரி நடவு செய்துள்ளார்.

மேலும், 2021–2022 ஆம் ஆண்டில் மல்பெரி புது நடவு மேற்கொள்ளப்படாததால் மானியத் தொகை ஏதும் வழங்கப்படவில்லை. 2022–2023 ஆம் ஆண்டிற்கு மல்பெரி புது நடவிற்கு 5 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். நடப்பாண்டில் இப்பகுதியில் மல்பெரி புது நடவு செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் நடவு மானியம் வழங்கப்படும்.

30—

விவசாயிகளுக்கு மானியம்

வினா எண் 22874—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, காளப்பன ஊராட்சி பகுதியில் மல்பெரி பயிர் செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் சுற்றுவட்டாரப் பகுதியில் பட்டு வளர்ப்பு தொழிலை

மேம்படுத்துவதற்காக பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில் உதவி இயக்குநர் அலுவலகம் பெண்ணாகரத்தில் செயல்பட்டு வருகிறது. இதன்கீழ் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள பெண்ணாகரம், ஏரியூர், பாலக்கோடு, மாரண்டஅள்ளி, காரிமங்கலம் மற்றும் பாப்பாரப்பட்டி ஆகிய ஆறு இடங்களில் தொழில்நுட்ப சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் காரிமங்கலம் தொழில்நுட்ப சேவை மையத்திற்குட்பட்ட காளப்பன ஊராட்சி பகுதியில் உள்ள விவசாயிகளால் மல்பெரி நடவு ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

2021–2022 ஆம் ஆண்டில் மல்பெரி புது நடவு மேற்கொள்ள 1 விவசாயி தேர்வு செய்யப்பட்டுள்ளார். நடப்பாண்டில் இப்பகுதியில் மல்பெரி புது நடவு செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் நடவு மானியம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

31—

விவசாயிகளுக்கு மானியம்

வினா எண் 22898—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சியில் மல்பெரி பயிரிடும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் சுற்றுவட்டாரப் பகுதியில் பட்டு வளர்ப்பு தொழிலை மேம்படுத்துவதற்காக பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில் உதவி இயக்குநர் அலுவலகம் பெண்ணாகரத்தில் செயல்பட்டு வருகிறது. இதன்கீழ் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள பெண்ணாகரம், ஏரியூர், பாலக்கோடு, மாரண்டஅள்ளி, காரிமங்கலம் மற்றும்

2023 ஜனவரி 11]

பாப்பாரப்பட்டி ஆகிய ஆறு இடங்களில் தொழில்நுட்ப சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் பெண்ணாகரம் தொழில்நுட்ப சேவை மையத்திற்குட்பட்ட பெரும்பாலை ஊராட்சி பகுதியில் 6.50 ஏக்கரில் 6 விவசாயிகளால் மல்பெரி நடவு செய்யப்பட்டுள்ளன.

2021–2022 ஆம் ஆண்டில் மல்பெரி புது நடவு மேற்கொள்ளப்படாததால் மானியத் தொகை ஏதும் வழங்கப்படவில்லை. மேலும் 2022–2023 ஆம் ஆண்டிற்கு மல்பெரி புது நடவு மேற்கொள்ள 4 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். நடப்பாண்டில் இப்பகுதியில் மல்பெரி புது நடவு செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் நடவு மானியம் வழங்கப்படும்.

32—

விவசாயிகளுக்கு மானியம்

வினா எண் 23073—திரு. இரா. அருள்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலத்தில் மல்பெரி செடி சாகுபடிக்கு வீரியமான விதைக் குச்சிகள் வழங்க அரசு வழிவகை செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

பட்டு வளர்ச்சித் துறையின்கீழ் செயல்பட்டு வரும் 32 அரசு பட்டுப் பண்ணைகளில் பட்டு விவசாயிகளுக்குத் தேவையான வீரிய இரக மல்பெரி நாற்றுகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், பட்டு விவசாயிகள் தோட்டங்களிலும் மல்பெரி நாற்றுகள் உற்பத்தி செய்து தேவைக்கேற்ப பிற பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மல்பெரி நாற்றுகள் விற்பனைமூலம் பட்டு விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கிறது. உதவி இயக்குநர், சேலம் கட்டுப்பாட்டில் செயல்படும் அரசு பட்டுப் பண்ணைகளில் வி1 இரக மல்பெரி நாற்றுகள் தேவைக்கேற்ப உற்பத்தி செய்யப்பட்டு இருப்பில் உள்ளது.

மேலும், சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டினம் வட்டாரம் டி.பெருமாபாளையம் கிராமத்தில் வி1 மற்றும் எம்.ஆர்.2 வீரிய இரக மல்பெரி நாற்றுகள் அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதன்மூலம் சேலத்தில் பட்டு வளர்ப்பு மேற்கொள்ளும் விவசாயிகளுக்குத் தேவையான வீரிய இரக மல்பெரி நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, பட்டு விவசாயிகளுக்கு தேவையின் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது.

33—

பட்டுக்கூடு வளர்ப்பு

வினா எண் 23074—திரு. இரா. அருள்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பட்டுக்கூடு வளர்ப்போருக்கு பட்டுக்கூடு விற்பனையில் உரிய இலாபம் விவசாயிகளுக்கு கிடைக்க அரசு செயல் திட்டம் வழங்க முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

பட்டு விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடுகளை இடைத்தரகர்கள் தலையீடு இன்றி இலாபகரமான விலைக்கு விற்பனை செய்திட ஏதுவாக பட்டு வளர்ச்சித் துறைமூலம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் 22 அரசு பட்டுக்கூடு அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. இந்தப் பட்டுக்கூடு அங்காடிகளில் விற்பனைக்காக எடுத்து வரப்படும் பட்டுக்கூடுகளை பட்டு சதவிகிதம் கணக்கிடப்பட்டு பட்டுக்கூட்டின் தரம் நிர்ணயிக்கப்படுகிறது. பின்னர், காஞ்சிபுரம் அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்தின் கடந்த வார கச்சா பட்டு நூலின் சராசரி விலை மற்றும் பட்டுக்கூட்டின் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் அடிப்படை விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. பின்னர், பட்டு நூற்பாளர்களால் திறந்தவெளி ஏலம்மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது.

2023 ஜனவரி 11]

பட்டுக்கூடுகளுக்கு தொடர்ந்து இலாபகரமான விலை கிடைத்திட பட்டு நூற்பாளர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதன் அவசியத்தை அறிந்து புதிதாக பட்டு நூற்பு மையங்கள் அமைத்திட தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பலமுனை பட்டு நூற்பு மையங்கள் மற்றும் தானியங்கி பட்டு நூற்பு மையங்கள் அமைக்க தொழில்முனைவோர்களை ஊக்கப்படுத்திட மத்திய பகுதி திட்டம் சில்க் சமக்ராவின்கீழ் 75% முதல் 90% வரை மானிய உதவிகள் வழங்கப்படுகின்றன. மேலும், பட்டுக்கூடுகளுக்கான சந்தை போட்டியினை அதிகரித்து இலாபத்தை கூட்டிடவும், வெளிப்படைத்தன்மையை அதிகரித்திடவும் மின்னணு ஏல முறையினை அறிமுகப்படுத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு பட்டுக்கூடுகளுக்கு இலாபகரமான விலை கிடைத்திட செயல் திட்டம் வகுத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

34—

இளைஞர்களுக்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்குதல்

வினா எண் 23075—திரு. இரா. அருள்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டத்தில் மல்பெரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பில் இளைஞர்கள் ஈடுபடவும், வருவாய் ஈட்டவும், உரிய வழிகாட்டுதல்கள் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

பட்டு வளர்ப்புத் தொழிலானது விவசாயம் சார்ந்த ஊரக குடிசைத் தொழிலாகும். மல்பெரி சாகுபடி செய்தல், பட்டுப் புழு வளர்ப்புமூலம் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்தல் முதலியவை பண்ணைசார் (On–Farm) செயல்பாடுகளாகும். பட்டுக்கூடுகளிலிருந்து பட்டு நூலை பிரித்தெடுக்கும் பட்டு நூற்புப் பணி, பட்டு முறுக்கேற்றுதல் மற்றும் பட்டு நெசவு முதலியவை பண்ணைசாரா (Non–Farm) செயல்பாடுகளாகும்.

பண்ணைசார் செயல்பாடுகள் குறைந்த முதலீடு மற்றும் குறுகிய காலத்தில் நிறைவான மாதாந்திர வருமானத்தை தரக்கூடியது. இதன்மூலம் ஊரகப் பகுதிகளில் இளைஞர்கள் மத்தியில் உள்ள வேலைவாய்ப்பின் தன்மையைக் குறைக்க இயலும். மேலும், ஊரகப் பகுதிகளின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கும். ஆகையால், இத்தொழிலின் அனுகூலங்கள் இளைஞர்கள் மத்தியில் எடுத்துரைக்கப்பட்டு, பட்டு வளர்ப்பு தொழிலுக்குள் ஈர்க்கப்பட்டு வருகின்றனர்.

பண்ணைசார் செயல்பாடுகளில் மாநில மற்றும் ஒன்றிய அரசுகள்மூலம் செயல்படுத்தப்படும் பயனாளர் நலத் திட்டங்களில் பயனடைய இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. பட்டுப் புழு வளர்ப்பில் இளம்புழு வளர்ப்பு மையம் மற்றும் பட்டு பல்நோக்கு ஆலோசனை மையங்களின் பங்கு இன்றியமையாததாக உள்ளது. இம்மையங்களை அமைத்து தொழில்முனைவோர்களாக உருவாகிடவும் இளைஞர்கள் தொடர்ந்து ஊக்கப்படுத்தப்பட்டு வருகிறார்கள்.

பண்ணைசார் செயல்பாடுகளான பட்டு நூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றுதல் தொழிலில் ஈடுபட பட்டு நூற்பு மையங்கள் மற்றும் பட்டு முறுக்கேற்று மையங்கள் அமைத்திட பட்டு வளர்ச்சித் துறைமூலம் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களிலும் இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் பட்டு வளர்ப்பு தொழிலில் இளைஞர்கள் ஈடுபட்டு வருவாய் ஈட்டிட பட்டு வளர்ச்சித் துறைமூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

35—

விவசாயிகளுக்கு மானியம்

வினா எண் 23292—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, புலிக்கரை ஊராட்சிக்குட்பட்ட கோயிலூர் பகுதியில் மல்பெரி பயிரிடும் விவசாயிகளுக்கு மானியம் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் சுற்றுவட்டாரப் பகுதியில் பட்டு வளர்ப்பு தொழிலை மேம்படுத்துவதற்காக பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில் உதவி இயக்குநர் அலுவலகம் பெண்ணாகரத்தில் செயல்பட்டு வருகிறது. இதன்கீழ் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள பெண்ணாகரம், ஏரியூர், பாலக்கோடு, மாரண்டஅள்ளி, காரிமங்கலம் மற்றும் பாப்பாரப்பட்டி ஆகிய ஆறு இடங்களில் தொழில்நுட்ப சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் பாலக்கோடு தொழில்நுட்ப சேவை மையத்திற்குட்பட்ட புலிக்கரை ஊராட்சிக்குட்பட்ட கோயிலூர் மல்பெரி நடவு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

மேலும், 2021–2022 ஆம் ஆண்டில் மல்பெரி புது நடவு மேற்கொள்ளப்படாததால் மானியத் தொகை ஏதும் வழங்கப்படவில்லை. 2022–2023 ஆம் ஆண்டிற்கு மல்பெரி புது நடவு மேற்கொள்ள 2 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். நடப்பாண்டில் இப்பகுதியில் மல்பெரி புது நடவு செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் நடவு மானியம் வழங்கப்படும்.

36—

விவசாயிகளுக்கு மானியம்

வினா எண் 23313—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் வட்டாரத்தில் மல்பெரி (பட்டுச் செடி) சாகுபடி அதிகம் உள்ளதால், விவசாயிகளை ஊக்கப்படுத்த மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டாரத்தில் பட்டு வளர்ச்சித் துறையின் உதவி இயக்குநர் கட்டுப்பாட்டின்கீழ் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள பெண்ணாகரம் மற்றும் பாப்பாரப்பட்டி ஆகிய இரண்டு இடங்களில் தொழில்நுட்ப சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த இரண்டு தொழில்நுட்ப சேவை மையங்களின் பணிவரம்பிற்குட்பட்ட பகுதிகளில் 581 பட்டு விவசாயிகளால் 836.15 ஏக்கரில் மல்பெரி சாகுபடி மேற்கொள்ளப்பட்டு பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. மல்பெரி சாகுபடி பரப்பினை அதிகப்படுத்திடவும் பட்டுத் தொழிலினை மேம்படுத்திடவும் பட்டு வளர்ச்சித் துறைமூலம் மாநில மற்றும் ஒன்றிய அரசு நிதியுதவிகளுடன் பல்வேறு மானியத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன்படி, 2021–2022 ஆம் ஆண்டில் 98.75 ஏக்கர் பரப்பில் மல்பெரி புது நடவு செய்த 77 விவசாயிகளுக்கு மல்பெரி புது நடவு மானியமும், தனி புழு வளர்ப்பு மனை அமைந்துள்ள 7 விவசாயிகளுக்கு தனி புழு வளர்ப்பு மனைக்கான மானியமும் மற்றும் 16 விவசாயிகளுக்கு நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. இதுபோன்று ஒவ்வோர் ஆண்டும் பெண்ணாகரம் வட்டாரத்தில் மல்பெரி சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில் பட்டு வளர்ச்சித் துறை சார்பாக பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

37—

வீடு இல்லாதவர்களுக்கு வீடு

வினா எண் 28047—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

(அ) திருவள்ளூர் மாவட்டத்தில் வீடு இல்லாதவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்மூலம் வீடு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டத்தில் வீடு இல்லாதவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்மூலம் வீடு வழங்க அரசு ஆவன செய்யும். மேலும், திருவள்ளூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் அனைவருக்கும் வீடு திட்டத்தின்கீழ் 8,384 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.1104.33 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்ட ஒப்புதல் பெறப்பட்டு, அவற்றுள் 7,544 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.992.27 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் கூடியவிரைவில் முடிவடைய திட்டமிடப்பட்டுள்ளன. இத்திட்டப் பகுதிகளில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகள் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் பரிந்துரைக்கப்படும் தகுதியான பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். அந்தப் பயனாளிகள், பயனாளிகளின் பங்களிப்பு தொகையினை வாரியத்திற்கு செலுத்த வேண்டும்.

38 —

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

வினா எண் 46539—திரு. இரா. அருள்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, தென் அழகாபுரம் ஆதி திராவிடர் குடியிருப்பு சேலம் தெற்கு தொகுதி, அம்மாபேட்டை மிலிடரி ரோடு, ஏற்காடு, ஜெரினாகாடு ஆகிய பகுதிகளில் வசிக்கும்

[2023 ஜனவரி 11

ஆதி திராவிடர்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

சேலம் மேற்கு தொகுதி, தென் அழகாபுரம் ஆதி திராவிடர் குடியிருப்பு, சேலம் தெற்கு தொகுதி, அம்மாபேட்டை மிலிடரி ரோடு, ஏற்காடு, ஜெரினாகாடு ஆகிய பகுதிகளில் வசிக்கும் ஆதி திராவிடர்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட தகுதி வாய்ந்த நிலம் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை ஒப்படைத்து, பயனாளிகள் பங்களிப்புத் தொகை செலுத்த முன் வருவார்களேயானால், அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட வாரியத்தால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

39 —

பாட நூல்கள்

வினா எண் 28927—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின்மூலம் பாட நூல்களை அச்சிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு பாடநூல் கழகம்மூலம் பாட நூல்கள் அச்சிட்டு விநியோகம் செய்யப்பட்டு வரும் நிலையில், தமிழகத்தில் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் சார்பாக பாட நூல்கள் அச்சிடப்படுவதற்கான தேவை எழவில்லை.

2023 ஜனவரி 11]

40 —

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 17948—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பேகாரஅள்ளி ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம் - மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பெண்ணாகரம் தொகுதி, பேகாரஅள்ளி ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் 16–3–2018 முதல் செயல்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

41 —

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 17949—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பாடி ஊராட்சி, பாடி கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம் - மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பெண்ணாகரம் தொகுதி, பாடி ஊராட்சி, பாடி கிராமத்தில் கால்நடை மருந்தகம் 23–5–2012 முதல் செயல்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

42 —

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 17951—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் பகுதியில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம் - மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் பகுதியில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 3000–க்கும் மேல் உள்ளதால் அங்கு புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளது.

(ஆ) அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஜனவரி 11]

43 —

கறவை மாடுகள்

வினா எண் 28238—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதியில் கறவை ஆடு, மாடு வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்தவும், கோழிகள் வழங்கும் திட்டத்தை மீண்டும் பயன்பாட்டிற்குக் கொண்டு வரவும், விதவை தாய்மார்களுக்குக் கறவை மாடுகள் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம் - மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2021–2022 ஆம் ஆண்டிற்கான ஊரக பகுதிகளில் வசிக்கும் ஏழ்மை நிலையில் உள்ள கணவனை இழந்த/கணவனால் கைவிடப்பட்ட, ஆதரவற்ற பெண்கள் மற்றும் தகுதியுள்ள திருநங்கைகள் பயனாளிகளுக்கு 100 சதவீத மானியத்தில் 38,800 பயனாளிகளுக்கு தலா 5 ஆடுகள் வீதம் மொத்தம் 1,94,000 வெள்ளாடுகள்/செம்மறியாடுகள் வழங்கி, பெண்களை தொழில்முனைவோராக உருவாக்கும் திட்டம் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை நீங்கலாக) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் மீண்டும் வெண்மை புரட்சியினை ஏற்படுத்தும் பொருட்டு ஊரகப் பகுதிகளில் ஏழ்மை நிலையிலுள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இலவச கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டம் 2011–2012 முதல் 2020–2021 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டு 1,11,444 பயனாளிகளுக்கு, 1,11,444 கறவைப் பசுக்கள் கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு இலவச கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டம் செயல்படுத்துவது அரசின் கொள்கை முடிவின் அடிப்படையில் அமையும்.

2020–2021 ஆம் ஆண்டிற்கான தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், நாட்டுக்கோழி வளர்ப்பின்மூலம் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் திட்டம் தொடங்கப்பட்டு சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஓர் ஒன்றியத்திற்கு 5 பயனாளிகள் வீதம், அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக) உள்ள ஒன்றியங்களில் மாவட்ட ஆட்சியர்மூலம் பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு தலா 1,000 எண்ணம் நாட்டுக் கோழிக் குஞ்சுகள், அதற்குண்டான தீவனம் மற்றும் குஞ்சு பொரிப்பான் ஆகியவற்றை கொள்முதல் செய்ய 50% மானியம் வழங்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏற்கெனவே பொன்னேரி தொகுதியில் மேற்காணும் கோழி வளர்க்கும் திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

44 —

மீன்வளக் கல்லூரி மற்றும் ஆய்வு மையம்

வினா எண் 28652—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆய்வு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம் - மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆய்வு மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

45 —

விலங்குகள் அறுவை சிகிச்சை மையம்

வினா எண் 13078—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

சேலம் குரும்பப்பட்டி உயிரியல் பூங்காவில் வன விலங்குகள் நலன் கருதி விலங்குகள் அறுவை சிகிச்சை மையம் (Animal Surgery Centre) அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

சேலம் குரும்பப்பட்டி உயிரியல் பூங்கா 1976 ஆம் ஆண்டு பொழுதுபோக்கு மையமாக 11.06 எக்டர் பரப்பளவில் ஆரம்பிக்கப்பட்டு 2001 ஆம் ஆண்டு 11.06 எக்டர் பூங்காவாக தரமுயர்த்தப்பட்டது. பின்னர் 2011 ஆம் ஆண்டு இப்பூங்கா 31.73 எக்டர் பரப்பளவில் சிறு உயிரியல் பூங்காவாக தரமுயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இந்நிலையில், 2020 ஆம் ஆண்டு நடுத்தரப் பூங்காவாக தரமுயர்த்த ரூ.8.00 கோடி செலவில் செயல் திட்டமும் ஒன்றிய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சேலம் குரும்பப்பட்டி உயிரியல் பூங்காவில், விலங்குகள் அறுவை சிகிச்சை மையம் (Animal Surgery Centre) அமைக்க நிதிநிலையைப் பொறுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

46 —

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி

வினா எண் 18421—திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, முத்துபாண்டிபட்டி நக்கலபட்டி அஞ்சல், தங்கம் பசுமடம் பகுதிகளில் வசிக்கும் மகளிர் குழு தயாரிக்கும் புதிய உர மேலாண்மை மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்திமூலம் மின் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி தொகுதி, முத்துபாண்டிபட்டி நக்கலபட்டி அஞ்சல், தங்கம் பசுமடம் பகுதிகளில் வசிக்கும் மகளிர் குழு தயாரிக்கும் புதிய உர மேலாண்மை மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்திமூலம் மின்சாரம் தயாரிக்க அக்குழு முன்வந்து, கிடைக்கப்பெறும் மின்சாரத்தினை அவர்களது தேவைக்கு பயன்படுத்திக்கொள்ள முன்வரும்பட்சத்தில் அனுமதி வழங்கப்படும்.

2. இதுகுறித்து சம்பந்தப்பட்ட மகளிர் குழு விண்ணப்பம் செய்தால் அதனை தகுந்த முறையில் பரிசீலித்து, தற்போது உள்ள திட்டங்களின் அடிப்படையில் அனுமதி வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

47 —

காகித பவுச்சுகளில் மது விற்பனை

வினா எண் 21711—திரு. இரா. அருள்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பீங்கான் மது குப்பிகளுக்கு பதிலாக காகித பவுச்சுகளில் மது அடைத்து விற்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் செயல்படும் டாஸ்மாக் மதுபான சில்லரை விற்பனைக் கடைகளில் விற்பனை செய்யப்படும் மதுபானங்கள் கண்ணாடி புட்டிகளில் அடைத்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கண்ணாடி புட்டிகளில் மதுபானங்களை அடைத்து விற்பனை செய்யப்படும்போது புட்டிகளைக் கையாள்வதற்கு எளிதாக

2023 ஜனவரி 11]

உள்ளது. கண்ணாடி புட்டிகள் சுற்றுச்சூழலுக்கு பாதகமில்லாமல் உள்ளது. பயன்படுத்தப்பட்ட கண்ணாடி புட்டிகள் மறுசுழற்சி முறையில் மீண்டும் பயன்படுத்தப்படுகிறது. மதுபானங்களை காகித பவுச்சுகளில் அடைத்து விற்பனை செய்யும்போது காகித பவுச்சு சேதமடைந்து நட்டம் ஏற்பட வாய்ப்புள்ளது. கலப்படம் செய்வதற்கும் அதிக வாய்ப்புகள் உள்ளன. காகித பவுச்சுகளில் தடை செய்யப்பட்ட நெகிழி பயன்படுத்தப்படுவதால் நுகர்வோர்களுக்கு கெடுதல் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, மதுபானங்களை கண்ணாடி புட்டிகளில் அடைத்து விற்பனை செய்வதே நுகர்வோர்களுக்கு பாதுகாப்பாகவும், வேதியியல் மாற்றத்திற்கு உட்படாமலும் உள்ளது. இந்நிலையில், மதுபானங்களை காகித பவுச்சுகளில் அடைத்து விற்பனை செய்வது தொடர்பான கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

48—

கடல் அலைகள்மூலம் மின்சாரம் தயாரித்தல்

வினா எண் 38140—திரு. ஜெ. கருணாநிதி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ECO WAVE POWER *தொழில்நுட்பம் கொண்டு கடல் அலைகள்மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

கடல் அலைகள்மூலம் மின்சாரம் (Eco Wave Power) *தயாரிக்கும் தொழில்நுட்பம் உலகளவில் பயன்பாட்டு ரீதியில் பலன் அளிக்கும் விதமாக நிரூபிக்கப்படவில்லை. வருங்காலத்தில் இத்தொழில்நுட்பம் மேம்பாடடையும் நிலையில், அதற்கான முதலீட்டுத் தொகையினை கருத்திற்கொண்டும், ஒரு யூனிட் மின் உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவினைக் கருத்திற்கொண்டும் இத்திட்டத்தைச் செயல்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

TRUTH ALONE TRIUMPHS

[2023 ஜனவரி 11

49—

மது பாட்டில்கள் வயல்வெளிகளில் உடைக்கப்படுவதைத் தடுத்தல்

வினா எண் 50517—திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுபாட்டில்கள் வயல் வெளிகளில் உடைக்கப்பட்டு விவசாயிகள், கால்நடைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன. பாட்டில்களுக்கு 10 ரூபாய் முன்பணம் பெற்றுக்கொண்டு, பாட்டில்களை திருப்பித் தந்தால் அந்த 10 ரூபாய் திருப்பித் தரப்படும் என அறிவிப்பு கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுடன் இணைந்த அனுமதி பெற்ற மதுக்கூடங்களில் மட்டுமே பெரும்பாலான வாடிக்கையாளர்கள் மது அருந்திவிட்டு காலி பாட்டில்களை மதுக்கூடங்களில் விட்டுச் செல்கின்றனர். விட்டுச் செல்லப்படுகின்ற மது பாட்டில்கள் மதுக்கூட உரிமைதாரர்களால் அவ்வப்போது சேகரம் செய்யப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், மதுக்கூடத்தின் சுற்றுப்புறத்தையும் பேணிக் காத்து வருகின்றனர். உள்ளாட்சி அமைப்புகள்மூலம் குப்பைகள் சேகரிக்கப்படும்போதும் காலி மது பாட்டில்கள் கவனமாக அகற்றப்பட்டு வருகின்றன. மாவட்ட மேலாளர்களால் தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, கடைகளுடன் இணைந்துள்ள மதுக்கூடங்களில் முறையாக காலி பாட்டில்கள் சேகரம் செய்யப்படுவது மற்றும் சுற்றுப்புறத்தினை சுகாதாரத்துடன் பேணிக் காப்பது போன்றவை கண்காணிக்கப்படுகிறது. எனவே, மதுப் பிரியர்கள் பொது இடங்களில் மது அருந்திவிட்டு காலி மது பாட்டில்களை சாலை ஓரங்களிலும், விவசாய நிலத்திலும் வீசி செல்லும் நிலை என்பது தற்போது குறைக்கப்பட்டுள்ளது.

2023 ஜனவரி 11]

எனவே, மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் விற்பனை செய்யப்படும் மதுபான பாட்டில்களுக்கு வாடிக்கையாளர்களிடமிருந்து ரூ.10/– பெற்றுக் கொண்டு திரும்ப ஒப்படைக்கும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

50—

கைத்தறி ஆடைகள் குறித்து விழிப்புணர்வு

வினா எண் 28577—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கைத்தறி ஆடைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பாலான கைத்தறி இரகங்களை இயற்கை இழைகளான பருத்தி நூல் மற்றும் பட்டு நூலினைப் பயன்படுத்தி உற்பத்தி செய்து வருவதாலும், மேற்படி கைத்தறி ஆடைகள் உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்காத மூலப்பொருட்களைக் கொண்டு சாயமிடப்படுவதாலும், கைத்தறி ஆடைகள் பயன்படுத்துவதால் உடல் நலன் எவ்வகையிலும் பாதிப்பு ஏற்படுத்தாது என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், கைத்தறித் துணி இரகங்களை பொதுமக்களிடையே பிரபலப்படுத்துவதற்காக மாநிலத்தின் பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் நடத்தப்படும் மாவட்ட அளவிலான கைத்தறி கண்காட்சிகளிலும், தலைமை நெசவாளர் கூட்டுறவுச் சங்கமான கோ–ஆப்டெக்ஸ்மூலம் இந்தியாவின் முக்கியத் தலைநகரங்கள் மற்றும் பிரபலமான சுற்றுலாப் பகுதிகளில் நடத்தப்படும் கைத்தறி

கண்காட்சிகளிலும் கைத்தறித் துணி இரகங்களின் சிறப்பு அம்சங்களைக் குறிப்பிட்டு, போதுமான அளவிற்கு விளம்பரங்கள் செய்யப்பட்டு, மக்களுக்கு கைத்தறி ஆடைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அணிவதற்கேற்ற கைத்தறித் துணி வகைகளை உற்பத்தி செய்து விற்பனை மேற்கொண்டு வருகின்றன. கல்லூரி மாணவ, மாணவியர்கள் கைத்தறி ஆடைகளை அதிக அளவில் அணிவதற்கு ஏதுவாக கோ–ஆப்டெக்ஸ் மற்றும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் கல்லூரி வளாகங்களில் கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனை மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், தெற்கு இரயில்வேயின் "One Station One Product" திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தயாரிப்புகளை முக்கிய இரயில்வே நிலையங்களில் நடைமேடையில் காட்சிப்படுத்தி, விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், ஒவ்வோர் ஆண்டும் துறையால் ஆகஸ்ட் 7 ஆம் தேதி தேசிய கைத்தறி தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அத்தினத்தன்று, துறை அலுவலர்கள் அனைவரும் கைத்தறி ஆடைகள் அணிந்து வந்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றனர். மேலும், அத்தினத்தன்று சிறப்பு கைத்தறி கண்காட்சி மற்றும் கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்கும் விதமாக கைத்தறி நெசவாளர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுகிறார்கள். மேற்காணும் செயல்பாடுகள்மூலம் கைத்தறி ஆடைகள் குறித்து மக்களுக்கு துறையால் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

51—

நெசவுத் தொழிலை மேம்படுத்துதல்

வினா எண் 28581—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கைத்தறி நெசவுத் தொழிலை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கைத்தறி நெசவுத் தொழிலை மேம்படுத்த அரசு எண்ணற்ற நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

கைத்தறி நெசவுத் தொழிலை மேம்படுத்தவும், கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தினை பாதுகாக்கவும், கைத்தறி நெசவாளர்களுக்கு அவரவர் நெய்யும் இரகங்களுக்கு ஏற்ப அரசு கடிதம் (நிலை) எண் 115, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி1) துறை, நாள் 26–10–2021–ன்படி 1–1–2022 முதல் அடிப்படை கூலியில் 10 சதவீத உயர்வும், அகவிலைப் படியில் 10 சதவீதம் (145 சதவீதத்திலிருந்து வழங்கப்பட்டு 155 சதவீதமாக) உயர்வும் வழங்கப்பட்டு வருகிறது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான அனைத்து வகையான சிட்டா நூல் வகைகளும், நியாயமான விலையில் தட்டுப்பாடின்றி கிடைப்பதற்கு ஒன்றிய அரசின் மூலப் பொருட்கள் விநியோகம் திட்டத்தின்கீழ், தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலமாக 15 விழுக்காடு சிட்டா நூல் மானியம், 2.5 விழுக்காடு போக்குவரத்து மானியம் மற்றும் 1 விழுக்காடு கிடங்கு மானியம் ஆகிய மானியங்களுடன், நியாயமான விலையில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சிட்டா நூல் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்கும் விதமாக அரசு வட்டி மானியம் திட்டம், தள்ளுபடி மானியம் திட்டம் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கைத்தறி ஆதரவுத் திட்டம் மூலமாக நடைமுறை மூலதனம் கடன் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான கைத்தறி உபகரணங்கள் கைத்தறி ஆதரவுத் திட்டம் மற்றும் குழும வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், முத்ரா கடன் உதவித் திட்டம் மூலமும் கைத்தறி நெசவாளர்களுக்கு பல்வேறு வங்கிகள்மூலம் கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்கும் விதமாக கைத்தறி நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி இரகங்களுக்கு

ஒவ்வோர் ஆண்டும் சிறந்த வடிவமைப்பாளர் விருது, சிறந்த ஏற்றுமதியாளர் விருது, சிறந்த நெசவாளர்கள் விருது மற்றும் திறன்மிகு நெசவாளர்கள் விருது போன்ற விருதுகள் துறையால் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்கூறிய நலத் திட்டங்கள்மூலம் தமிழ்நாட்டில் கைத்தறி நெசவுத் தொழிலை அரசு மேம்படுத்தி வருகிறது.

52—

கூலி உயர்வு

வினா எண் 38217—திரு. க. செல்வராஜ்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டத்தில் கூலிக்கு நெசவு செய்யும் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டத்தில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள நெசவாளர்கள் மற்றும் தனியார் நெசவாளர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தவும் அவ்வப்போது நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நெசவுக் கூலியானது உயர்த்தி வழங்கப்படுகின்றது.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியில் ஈடுபடும் நெசவாளர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் அவர்கள் நெய்யும் கைத்தறி இரகங்களுக்கு அவ்வப்போது கூலி உயர்வு வழங்கப்பட்டு வருகின்றது. அரசு கடிதம் (நிலை) எண் 115, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி1) துறை, நாள் 26–10–2021–ன்படி 1–1–2022 முதல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் வரவு வைக்கப்படும் இரகங்களுக்கு

2023 ஜனவரி 11]

வழங்கப்படும் கூலியில் 10% அடிப்படை கூலியிலும் மற்றும் 10% அகவிலைப் படியிலும் (145 விழுக்காட்டிலிருந்து 155 விழுக்காடாக) கூலியினை உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், 28–2–2022 மற்றும் 1–3–2022 ஆகிய தேதிகளில் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் முன்னிலையில், கோயம்புத்தூர், திருப்பூர் மாவட்டங்களில் கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறியாளர்களுக்கும், ஜவுளி உற்பத்தியாளர்களுக்கும் இடையே முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, தனியார் நெசவாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் கூலியில் தற்போதைய கால சூழ்நிலைக்கு ஏற்ப சோமனூர் இரகத்திற்கு 19 சதவீதமும், பல்லடம் இரகத்திற்கு 15 சதவீதமும் கூலியினை உயர்த்தி வழங்கிட ஒப்பந்தம் கையெழுத்தாகி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

53—

கைத்தறி துணி கொள்முதல்

வினா எண் 39021—திரு. சி. மகேந்திரன்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலை ஊராட்சி ஒன்றியம், தேவனூர்புதூர் ஊராட்சிப் பகுதியில் உற்பத்தியாகும் துணிகளை நேரடியாகக் கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம், கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் துணிகளை, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே கொள்முதல் செய்ய இயலும் என்பதால், மடத்துக்குளம் தொகுதி, உடுமலை ஊராட்சி ஒன்றியம், தேவனூர்புதூர் ஊராட்சிப் பகுதியில் உள்ள நெசவாளர்கள் புதிய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் துவக்கப்படும்பட்சத்தில்,

அதன் மூலமாக துணிகளைக் கொள்முதல் செய்யலாம் அல்லது அருகில் செயல்படும் சமத்தூர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அல்லது பெரியவாளவாடி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நெசவாளர்கள் உறுப்பினர்களாக சேர்த்து உற்பத்தி செய்து சேலைகளை சங்கங்களுக்கு வழங்குவதன்மூலம் தேவனூர்புதூர் ஊராட்சிப் பகுதியில் உற்பத்தியாகும் துணிகளை நேரடியாகக் கொள்முதல் செய்யலாம். எனவே, தேவனூர்புதூர் ஊராட்சிப் பகுதியிலுள்ள நெசவாளர்களை கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவந்தும், சம்பந்தப்பட்ட சங்கத்திற்கு உற்பத்தித் திட்டம் வழங்கி துணிகளைக் கொள்முதல் செய்யலாம்.

54—

விற்பனை அங்காடிகள்

வினா எண் 46583—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வெளிமாநிலத் தலைநகரங்களில் கோ—ஆப்டெக்ஸ் நிறுவனத்தின்மூலம் பட்டுத் துணிகள் விற்பனை அங்காடிகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

வெளிமாநிலங்களில் மட்டும் 46 கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. இதில், வெளிமாநிலத் தலைநகரங்களான திருவனந்தபுரம், ஐதராபாத், கொல்கத்தா, பெங்களூரு, மும்பை, அகமதாபாத், கோவா, புதுதில்லி, லக்னோ மற்றும் பாட்னா போன்ற வெளிமாநிலத் தலைநகரங்களில் 22 விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன.

மேற்கூறியவாறு விற்பனை முக்கியத்துவம் வாய்ந்த 46 வெளி மாநில கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் அனைத்திலும் பட்டு மற்றும் பருத்தி துணிகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

2023 ஜனவரி 11]

55—

பட்டு விற்பனை அங்காடி மேம்படுத்துதல்

வினா எண் 46584—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் பட்டு விற்பனை அங்காடியை அதிநவீன வசதிகளுடன் மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் 149 விற்பனை நிலையங்களுடன் பட்டு மற்றும் பருத்தி துணிகளை விற்பனை செய்து வருகிறது. பட்டு விற்பனை அதிகம் நடைபெறும் விற்பனை நிலையங்களைத் தேர்ந்தெடுத்து அதிநவீன வசதிகளுடன் மேம்படுத்த ஏதுவாக, கட்டடம் நவீனப்படுத்துதல் மற்றும் உள் அலங்கார அமைப்பு போன்றவை தமிழ்நாடு அரசின் கைத்தறி ஆதரவுத் திட்டத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு, புதுப்பொலிவுடன் இயங்கி வருகின்றன.

56—

கழிப்பிடங்கள்

வினா எண் 46594—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அனைத்து கோ–ஆப்டெக்ஸ் நிறுவனங்களிலும் ஆண், பெண் கழிப்பிடங்கள் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

கோ–ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகம், அனைத்து மண்டல அலுவலகங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்கள் ஆண்,

[2023 ஜனவரி 11

பெண் இருபாலரும் தனித்தனியாக பயன்படுத்தக்கூடிய வகையில் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகின்றன. விற்பனை நிலையங்களைப் பொறுத்தமட்டில், மொத்தமுள்ள விற்பனை நிலையங்களில், 106 விற்பனை நிலையங்களில் உரிய கழிப்பிட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது, புதிதாக விற்பனை நிலையம் அமைக்க இடம் தேர்வு மற்றும் விற்பனை நிலைய இட மாற்றம் செய்யும்போதே உரிய கழிப்பிட வசதி இருக்கிறதா என்று உறுதி செய்த பின்னரே புதிய விற்பனை நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

57—

கைத்தறி கண்காட்சி

வினா எண் 46650—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் மாவட்டந்தோறும் பெரிய அளவிலும், மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளிலும் கைத்தறி கண்காட்சி நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

தமிழக அரசின் நிதியுதவியுடன், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்டுவரும் பட்டு இரகங்களை விற்பனை செய்யும்பொருட்டு தமிழக பெருநகரங்களில் பட்டு மேளா கைத்தறி கண்காட்சியும், பட்டு மற்றும் இதர கைத்தறி இரகங்களை விற்பனை செய்யும்பொருட்டு மாவட்ட அளவில் விழாக்கால சிறப்பு கைத்தறி கண்காட்சியும் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்பட்டுவரும் அரசு பொருட்காட்சியில் கைத்தறி துறை சார்பாக அரங்கம் அமைக்கப்பட்டு, கைத்தறி இரகங்கள் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தவிர, ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ், தேசிய அளவிலான கைத்தறி

2023 ஜனவரி 11]

கண்காட்சி சென்னையிலும் மற்றும் மாநில அளவிலான கைத்தறி கண்காட்சி அந்தந்த மாவட்ட தலைநகரங்களிலும் ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், சர்வதேச அளவில் நடத்தப்படும் கைத்தறி கண்காட்சிகளிலும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்) பங்கேற்று, கைத்தறி இரகங்களை விற்பனை செய்து வருகிறது.

இது தவிர, இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்பு (India Trade Promotion and Organisation) *புதுதில்லி, கைத்தறி ஏற்றுமதி ஊக்குவிப்பு நிறுவனம்* (Handloom Export Promotion Council) *சென்னை ஆகிய நிறுவனங்கள்மூலம் ஜெர்மனி, மலேசியா, ஜப்பான் போன்ற வெளிநாடுகளில் நடைபெறும் கைத்தறி கண்காட்சிகளில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நேரடியாக பங்கேற்று, விற்பனை மேற்கொண்டு வருகின்றன.*

58—

புற்றுநோய் மருத்துவமனை

வினா எண் 3916—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் புற்றுநோய் மருத்துவ சிகிச்சைக்கான மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் இவ்வியக்ககத்தின்கீழ் செயல்படும் அனைத்து வட்டம், வட்டம் சாரா மருத்துவமனை மற்றும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் தொற்றா நோய் சிகிச்சை பிரிவு (NCD) *செயல்பட்டு வருகிறது. இதில், இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் மற்றும் பெண்களுக்கான மார்பக, கர்ப்பப்பை வாய்புற்று நோய் ஆகியவற்றை கண்டறிவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது பொதுவாக புற்றுநோயைத் தவிர்க்க புகையிலை, புகைப்பிடித்தல், பாக்கு*

[2023 ஜனவரி 11

மற்றும் மது ஆகியவற்றைத் தவிர்க்க அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், புற்றுநோய் பற்றி விவரங்களை அறியவும், அந்நோயினைக் கண்டறிய அரசு மருத்துவமனைகளில் உள்ள வசதிகள் குறித்தும் ஊடகங்கள் மூலமாக மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டு வருகிறது. எனவே, பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு உடனடியாக நோய் கண்டறியப்பட்டு, உரிய சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இந்நோயின் சிகிச்சை முறை கீமோதெரபி மற்றும் கதிர்வீச்சுமூலம் அளிக்கப்படுவதால், அதற்காக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பிரத்யேகமாக கட்டப்பட்ட அறைகளில் வைத்து மற்றவர்களுக்கு கதிர்வீச்சின் பாதிப்பு ஏற்படாத வகையில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இவ்வியக்குநரகத்தின்கீழ் பத்மநாபபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, கன்னியாகுமரி, பூதபாண்டி, கருங்கல், குழித்துறை, சேனன்விளை ஆகிய வட்ட மருத்துவமனைகள், அருமனை, குளச்சல், குலசேகரம் ஆகிய வட்டம் சாரா மருத்துவமனை என 9 அரசு மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், தொற்றா நோய் சிகிச்சை பிரிவு (NCD) தொடங்கப்பட்டு, அதில் பெண்களுக்கான மார்பக, கர்ப்பப்பை வாய்புற்று நோய் ஆகியவற்றைக் கண்டறிவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும், PIP–Program Implementation Plan–ல், தேசிய நலத் திட்டக் குழுமம்மூலம் தற்பொழுது மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் புற்றுநோய் சிகிச்சைக்கான Day Care Chemotherapy Unit ஒப்பளிக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் கண்டறியப்பட்டால் இந்நோயாளிகளுக்கு மேற்படி மருத்துவமனைகளில் ஆரம்ப நிலை சிகிச்சை வழங்கப்படுகிறது. உயர் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் அருகில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள். புற்றுநோய் மையம் அமைப்பதற்கு உயர் சிறப்பு மருத்துவர்கள் (Super Speciality Doctors) அவசியம். தற்சமயம் இம்மருத்துவர்கள் மருத்துவக் கல்லூரியிலேயே பணிபுரிந்து வருகிறார்கள்.

2023 ஜனவரி 11]

59—

கருத்தரிப்பு சிகிச்சை மையம்

வினா எண் 11467—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் வசதியற்ற பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் கருத்தரிப்பு சிகிச்சை மையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குழந்தையின்மைக்கான கருத்தரிப்பு சிகிச்சை மையம் அமைப்பது உயர் சிறப்பு சிகிச்சை பிரிவை சேர்ந்ததாகும். எனவே, இப்பிரிவு தற்போது முதல் நிலை சிகிச்சை வழங்கக்கூடிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சில மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் செயல்படும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் இரண்டாம் நிலை சிகிச்சை வழங்கும் மருத்துவமனைகளாகும். குழந்தையின்மைக்கான காரணங்கள் சிகிச்சைகள்மூலம் சரி செய்யப்படக்கூடிய இனங்களில் அத்தாய்மார்களுக்கு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள மகப்பேறியல் மற்றும் பெண்ணோயியல் சிறப்பு மருத்துவர்களால் உரிய சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இவ்வியக்குநரக கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் அரசு மருத்துவமனைகளில் மாதமொன்றுக்கு சராசரியாக 13,856 பிரசவங்களும், 6,917 அறுவை சிகிச்சை பிரசவங்களும் நடைபெறுகின்றன. கருத்தரிப்பு சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் மிக மிக குறைவாகவே உள்ளனர். எனவே, தமிழ்நாட்டில் செயல்படும் இரண்டாம் நிலை அரசு மருத்துவமனைகளில் கருத்தரிப்பு சிகிச்சை மையம் தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[*2023 ஜனவரி 11*

60—

108 ஆம்புலன்ஸ் நிறுத்துமிடம்

வினா எண் 18102—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, கொண்டப்பநாயக்கன்பட்டி, ஏற்காடு மெயின் ரோட்டில் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதால், கொண்டப்பநாயக்கன்பட்டி ஊராட்சி எல்லையில் அவசரக்கால 108 ஆம்புலன்ஸ் நிறுத்துமிடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்திலுள்ள கொண்டப்பநாயக்கன்பட்டி, ஏற்காடு மெயின் ரோட்டுக்கு அருகாமையில் அழகாபுரம் காவல் நிலையம் 4 கிலோ மீட்டர் மற்றும் சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை 5 கிலோ மீட்டர் ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு, 108 அவசரக்கால ஊர்திகள் ஏற்கெனவே நிலை நிறுத்தப்பட்டு, சேவையாற்றி வருகின்றன.

61—

தாய்–சேய் நல ஊர்தி

வினா எண் 25773—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனைக்கு தாய்–சேய் நல ஊர்தி வழங்கவும், செவிலியர்கள் மற்றும் மருத்துவர்கள் நியமனம் செய்யவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனையில் இலவச தாய்–சேய் நல ஊர்தி வாகன எண் TN 20 G 2173–ன்மூலம் தோராயமாக மாதத்திற்கு 20 பயனாளிகளுக்கு சிறப்பாக சேவையாற்றி வருகின்றது.

62—

இலவச அமரர் ஊர்தி

வினா எண் 25835—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் தொகுதி, மேலூர் அரசு மருத்துவமனைக்கு இலவச அமரர் ஊர்தி வாகனம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேலூர் அரசு மருத்துவமனையில் இலவச அமரர் ஊர்தி வாகனம் (வண்டி எண் TN 20 G 2324) ஏற்கெனவே நிலைநிறுத்தப்பட்டு, சிறப்பாக சேவையாற்றி வருகின்றது.

63—

பணி நிரந்தரம்

வினா எண் 38499—திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு பிரிவின்கீழ் (TNSACS) தமிழகம் முழுவதும் சுமார் 2,500 பேர் 20 ஆண்டுகள் வரையிலும் தற்காலிக ஊழியர்களாகப் பணியாற்றுகிறார்கள். இவர்களை பணி நிரந்தரம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் (TNSACS) *தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பின் வழிகாட்டுதல் மற்றும் நிதி ஆதாரத்தின்கீழ் செயல்பட்டு வருகிறது. குறிப்பிட்ட நோக்கம் மற்றும் காலத்திற்கேற்ப இச்சங்கத்தில் ஒப்பந்த அடிப்படையில் மாதாந்திர தொகுப்பு ஊதியத்தில் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இப்பதவிகள் தற்காலிகமானவை, திட்டத்துடன் இணைக்கப்பட்டவை, திட்டக் காலத்தின் நடைமுறை காலத்திற்கு மட்டுமே இப்பணியிடங்கள் இருக்கும். மேலும், ஒப்பந்தங்கள் ஓராண்டிற்கு மட்டுமே போடப்பட்டு, செயல்திறன் அறிக்கையின் மதிப்பீட்டு அடிப்படையில்* (Performance Assessment Report) *ஒவ்வோர் ஆண்டும், ஏப்ரல் 1 ஆம் தேதி ஒரு நாள் இடைவெளிவிட்டு, ஏப்ரல் 2 ஆம் தேதி முதல் மார்ச் 31 ஆம் தேதி வரை பணி நீட்டிப்பு வழங்கப்பட்டு, மீண்டும் ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்படுகின்றன. நிரந்தரப் பணியிடங்கள் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தில் இல்லாத காரணத்தினாலும், நிரந்தரப் பணியிடங்கள் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லாததாலும், திட்டம் நிறைவடையும் வரையில் ஒப்பந்தப் பணியாளர்களாக பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றார்கள் என்பதால், பணி நிரந்தரம் செய்ய வாய்ப்பில்லை.*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

64—

பெட்ரோல் விலையைக் குறைத்தல்

வினா எண் 21750—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெட்ரோல் விலையைக் குறைக்க மத்திய அரசை வலியுறுத்த தமிழக அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்தியாவில் பெட்ரோல் மீதான விலை என்பது சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய்யின் விலையைப் பொறுத்து ஒன்றிய அரசின்கீழ் இயங்கும் எண்ணெய் நிறுவனங்களால் நிர்ணயம் செய்யப்படுகிறது. இந்த விலை நிர்ணயம் செய்வதில் மாநில அரசுக்கு தொடர்பு இல்லை. இருப்பினும், இந்த விலை ஏற்றத்தால் சிரமப்படும் பொது மக்களின் நலன் கருதி, மாநில வரியில் இழப்பு இருந்தபோதிலும் 13–8–2021 முதல் தமிழ்நாட்டில் பெட்ரோல் விலையில் லிட்டருக்கு ரூ.3/– என்ற அளவில் வரியினை அரசு குறைத்துள்ளது. மேலும், மத்திய அரசும் நடப்பாண்டு மே மாதத்தில் பெட்ரோல் லிட்டர் ஒன்றுக்கு ரூ.8.69 காசும், டீசல் லிட்டர் ஒன்றுக்கு ரூ.7.05 காசும் குறைத்து விலை நிர்ணயம் செய்துள்ளது.

65—

வரிச் சலுகை

வினா எண் 38015—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, கும்பகோணம் தாலுகா, நாச்சியார்கோவில் ஊராட்சிப் பகுதியில் குத்து விளக்குகள் உற்பத்தி செய்வதால், உற்பத்தி செய்யும் குத்து விளக்குகளை வழிப்பாட்டு பொருளாகக் கருதி முழு வரிச் சலுகை அளித்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குத்து விளக்குகளின் வழங்கல்மீது முழு வரிச் சலுகை அளித்தால் அதன் உற்பத்திக்காக வாங்கும்

இடுபொருட்களுக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் செலுத்திய வரியை உள்ளீட்டு வரி வரவாகப்பெற இயலாது. இது உற்பத்தி செலவை அதிகரிக்கும். மேலும், வரி விலக்கு குறித்து சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தில் அனைத்து மாநிலங்களும் விவாதித்த பிறகுதான் இதுகுறித்து முடிவெடுக்க இயலும்.

66—

ஜவுளித் தொழிலைக் காப்பாற்றுதல்

வினா எண் 48826—திரு. இரா. அருள்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மத்திய அரசால் வரும் 1–1–2022 முதல் ஜவுளித் துறைக்கு 5%–லிருந்து 12% ஆக அதிகரிக்கப்பட்டுள்ள GST வரியை இரத்து செய்ய மத்திய அரசை வலியுறுத்தி, ஜவுளித் தொழிலைக் காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

ஜவுளிகளின் மீதான சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகிதத்தில் மாற்றம் செய்வது குறித்து 45–வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, 1–1–2022 முதல் 5 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாக உயர்த்தி ஒன்றிய அரசு அறிவிக்கை எண் 14/2021, மத்திய வரி (விகிதம்), நாள் 18–11–2021–ல் வெளியிட்டது. பின்னர், 46–வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, ஜவுளிகளின் மீதான உயர்த்தப்பட்ட வரி விகிதம் திரும்பப் பெறப்பட்டு, ஒன்றிய அரசு அறிவிக்கை எண் 21/2021, மத்திய வரி (விகிதம்), நாள் 31–12–2021–ன்படி 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது. எனவே, ஜவுளிகளின்மீது 5 சதவிகித சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மட்டுமே தற்போது விதிக்கப்பட்டு வருகிறது.

2023 ஜனவரி 11]

67—

Timer பொருத்துதல்

வினா எண் 7869—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழக சாலைகளில் உள்ள சிக்னல்களில் காத்திருக்கும் நேரம் அறியும்வண்ணம் Timer *பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் உள்ள மாவட்டங்களில் (நகரங்கள் உட்பட) 359 சிக்னல்களில் காத்திருக்கும் நேரம் அறியும்வண்ணம் Timer*–கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், பொருத்தப்படாத 733 இடங்களில் படிப்படியாக நேரம் அறியும்வண்ணம்* Timer *பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.*

68—

சிக்னல் அமைத்தல்

வினா எண் 11361—திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பல்லாவரம் தொகுதி, பம்மலிலிருந்து தாம்பரம், சென்னையிலிருந்து பம்மல் செல்லும் வாகனங்கள் பல்லாவரம் மேம்பாலம் அடியில் செல்ல சிக்னல் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) *பல்லாவரம் போக்குவரத்துக் காவல் நிலையத்திற்குட்பட்ட* GST *சாலையில் பல்லாவரத்தில் மேம்பாலம் கட்டும் பணிக்காக*

GST சாலையில் அமைந்துள்ள 1. GST ரோடு மற்றும் IG ரோடு ஜங்ஷன் மற்றும் சிக்னல், 2. GST ரோடு, பழைய சந்தை ரோடு ஜங்ஷன் மற்றும் சிக்னல், 3. GST ரோடு மற்றும் ஆராவா ஜங்ஷன் சிக்னல் (Areva Junction Signal) ஆகிய மூன்று சிக்னல்கள் தற்காலிகமாக அகற்றப்பட்டன. தற்போது, பாலம் கட்டும் பணி முடிவடைந்த நிலையில், சந்தை ரோடு, GST ரோடு மற்றும் IG ரோடு, ஆராவா ஜங்ஷன் ஆகிய இடங்களில் சிக்னல் அமைப்பதற்காக போக்குவரத்து நோக்கில் அனுமதி வழங்கப்பட்டு, அதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) GST ரோடு மற்றும் IG ரோடு சந்திப்பில் நெடுஞ்சாலைத் துறையினரால் சாலை விரிவாக்கப் பணி நடத்தப்படவுள்ளதால் அப்பணி முடிக்கப்பட்டவுடன், சிக்னல் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்படும்.

69—

நடைபாதை, சிமென்ட் தளம், தடுப்புச் சுவர் அமைத்தல்

வினா எண் 28024—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள கிராமக் கோயில்களுக்கு (குல தெய்வக் கோயில்கள்) நடைபாதை, சிமென்ட் தளம், தடுப்புச் சுவர் போன்றவை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினரால் நீலகிரி மாவட்டத்தில் உள்ள கிராமத் திருக்கோயில்கள் (குல தெய்வக் கோயில்) என பொதுவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அத்திருக்கோயில்களின் பெயர் மற்றும் ஊர் விவரத்தினைக் குறிப்பிட்டு, பட்டியலை அளிக்கும்பட்சத்தில், அவை இத்துறையின் ஆளுகையின்கீழ் உள்ளதா என்பதைப் பரிசீலித்து அவற்றுக்கு

2023 ஜனவரி 11]

நடைபாதை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

70—

காப்பீட்டுத் திட்டம்

வினா எண் 38970—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழக அரசில் இருக்கும் பல்வேறு காப்பீட்டுத் திட்டங்களை ஒருங்கிணைத்து ஒரே காப்பீட்டுத் திட்டம் கொண்டுவர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்:

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டமானது அரசின் முழுமையான பங்களிப்புடன் ஏழை மற்றும் குறைந்த வருவாய் பெறும் பொதுமக்கள் இத்திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் கட்டணமில்லா சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டு, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறையின்மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மேலும், இதில் ஆண்டிற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.899/– வீதம் அரசின் பங்களிப்பாக காப்பீட்டு நிறுவனத்திற்கு அரசால் செலுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் பொதுமக்கள் ஒவ்வோர் ஆண்டும் ரூ.5.00 இலட்சம் வரை மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் மருத்துவ சிகிச்சைகள் மேற்கொள்ள இயலும்.

மேலும், அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் இத்திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் கட்டணமில்லா சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டு, நிதித் துறை கட்டுப்பாட்டில் உள்ள கருவூலம் மற்றும் கணக்குத் துறைமூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் நான்காண்டுக்கு ரூ.5.00 இலட்சமும், உயர் சிகிச்சைகளுக்கு ரூ.10.00 இலட்சமும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதில், அரசானது ஒவ்வோர் ஆண்டின் தொடக்கத்தில் காப்பீட்டு நிறுவனத்திற்கு முழு காப்பீட்டு சந்தா தொகையை செலுத்திவிட்டு, பின்னர் அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களிடமிருந்து மாதந்தோறும் அவர்களின் சம்பளம்/ ஓய்வூதியத்தில் முறையே ரூ.300/– மற்றும் ரூ.497/– பிடித்தம் செய்துகொள்கிறது.

எனவே, தமிழக அரசில் பொதுமக்களுக்கு நடைமுறையில் இருக்கும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் அரசு அலுவலர்கள்/ஓய்வூதியதாரர்களுக்கு நடைமுறையில் உள்ள புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை ஒருங்கிணைத்து ஒரே மருத்துவ திட்டமாகக் கொண்டுவருவதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

71—

விலைவாசி உயர்வைத் தடுத்தல்

வினா எண் 46500—திரு. இரா. அருள்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அதிகரித்த பணப்புழக்கத்தை (Veloocity of Money) கட்டுப்படுத்தி விலைவாசி உயர்வைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக பருப்பு, அரிசி, எண்ணெய் வகைகள் மற்றும் இதர மளிகைப் பொருட்கள் மிகக் குறைந்த விலையில் அரசினால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் குறைவான கட்டணத்தில் மின்நுகர்வை பயன்படுத்தும் வகையில் மானியத்துடன்கூடிய விலை நிர்ணயம் செய்யப்பட்டு, அதன்மூலம் விலைவாசி ஏற்றம் குறைக்கப்பட்டு வருகிறது.

கொரோனா நோய்த் தொற்றின் காரணமாக பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களை குறைக்கும் வகையிலும், பெருந்தொற்று

2023 ஜனவரி 11]

நேரத்தில் பொதுமக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையிலும் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ.4,000/– வீதம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நோபல் விருது பெற்ற முனைவர் எஸ்தர் டப்லோ மற்றும் திரு. ரகுராம்ராஜன் உள்ளிட்ட பொருளாதார நிபுணர்களைக் கொண்டு உயர்மட்ட பொருளாதார ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டு, தேவைக்கேற்ப உரிய சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இனிவருங்காலங்களில், விலைவாசி ஏற்றம் குறித்த தேவையான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு விலைவாசியை கட்டுக்குள் வைப்பது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

72—

உற்பத்தி மதிப்பை உயர்த்துதல்

வினா எண் 63036—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *ஒட்டுமொத்த மாநில உற்பத்தி மதிப்பை* (Gross State Domestic Product–GSDP) *உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) அகில இந்திய அளவில் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, வேளாண்மை, தொழில் மற்றும் சேவை பிரிவுகளின் செயல்பாடுகளின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. அனைத்து பிரிவுகளின் செயல்பாடுகளும் அதிகரிக்கும் நிலையில், மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும். "2030–ல் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை நோக்கி" (*Towards one trillion Dollar Economy by *2030) என்பது*

[*2023 ஜனவரி 11*

இந்த அரசின் தொலைநோக்கு பார்வையாக உள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு பல்வேறு திட்டங்களையும், கொள்கைகளையும் இந்த அரசு வகுத்து வருகிறது. புதிய முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு ஒப்பந்தங்கள் இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், அனைத்து பிரிவுகளின் வளர்ச்சியினைக் கருத்தில்கொண்டு பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. எனவே, இந்த அரசின் பல்வேறு திட்டங்கள் மற்றும் கொள்கைகளால், அனைத்து பிரிவுகளும் மேம்பாடு அடைந்துவரும் நிலையில், மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியடையும். 2021–2022 ஆம் ஆண்டிற்கான முன்மதிப்பீட்டின்படி (நிலையான விலையில்), மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் 7.99 சதவிகிதமாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

73—

பள்ளிகளைத் தரமுயர்த்துதல்

வினா எண் 10081—திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லாவரம் தொகுதி, திருநீர்மலை பேரூராட்சி, பொழிச்சலூர், திரிசூலம் ஊராட்சிகளில் உள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பல்லாவரம் தொகுதி, திருநீர்மலை பேரூராட்சி, பொழிச்சலூர், திரிசூலம் ஊராட்சிகளில் உள்ள நடுநிலைப் பள்ளிகள் பூர்த்தி செய்யாததால் இப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

2023 ஜனவரி 11]

74—

விடுதி கட்டுதல்

வினா எண் 12011—திரு. T.M. தமிழ்செல்வம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஊத்தங்கரை தொகுதி, போச்சம்பள்ளி வட்டம், மத்தூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவிகள் தங்குவதற்கு விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் கட்டமைப்பில் பரவலான மக்கள்தொகை அல்லது கடின நிலப்பரப்பு கொண்ட அடர்ந்த காடு/மலைப் பகுதிகளில், அருகாமை பள்ளி விதிகளின்படி பள்ளி வசதியில்லாத குடியிருப்புகளில் உள்ள மாணவ/மாணவிகளுக்கு மட்டுமே விடுதி வசதி வழங்க இயலும். ஊத்தங்கரை தொகுதி, போச்சம்பள்ளி வட்டம், மத்தூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியானது அருகாமை பள்ளி விதிகளின்படி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி வசதியுள்ள குடியிருப்புப் பகுதியில் உள்ளது. எனவே, இப்பள்ளியில் மாணவிகள் தங்குவதற்கு விடுதி கட்ட இயலாது.

75—

மாதிரிப் பள்ளி துவக்குதல்

வினா எண் 12202—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியம், மேல்சிறுவள்ளூர் ஊராட்சியில் அரசு மாதிரிப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டிலுள்ள 120 கல்வி மாவட்டங்களில் ஒரு கல்வி மாவட்டத்திற்கு ஒரு மாதிரிப் பள்ளியென 120 கல்வி மாவட்டங்களிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகள் மாதிரிப் பள்ளிகளாக மாற்றம் செய்யப்பட்டு, அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சங்கராபுரம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாதிரிப் பள்ளியாக செயல்பட்டு வருவதாலும், மாவட்டம் வாரியாகவும்/கல்வி மாவட்டம் வாரியாகவும் மாதிரிப் பள்ளிகளை உருவாக்க அரசாணை உள்ளதால், ஊராட்சி ஒன்றிய அளவில் மாதிரிப் பள்ளிகளை உருவாக்க சூழல் எழவில்லை.

76—

நடுநிலைப் பள்ளி துவக்குதல்

வினா எண் 13148—திரு. A.J. மணிக்கண்ணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம், வடமாம்பாக்கம் ஊராட்சியில் நடுநிலைப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம், வடமாம்பாக்கம் ஊராட்சியில் ஏற்கெனவே தொடக்கப் பள்ளி செயல்படுகிறது. மேலும், 3 கி.மீ. சுற்றளவிற்குள் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, நத்தமூர் மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளி, கிளியூர் ஆகிய பள்ளிகள் செயல்படுகின்றன. மேலும், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. நேரடியாக நடுநிலைப் பள்ளி தொடங்க விதிகளில் வழிவகை இல்லை.

2023 ஜனவரி 11]

77—

மேசை, பெஞ்ச் வசதி

வினா எண் 14908—திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கம் தொகுதி, கொழுந்தம்பட்டு தொடக்கப் பள்ளிக்கு மேசை, பெஞ்ச் வசதி செய்து தரவும், இரண்டு வகுப்பறைகள் கட்டவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதி, கொழுந்தம்பட்டு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து பெஞ்ச், மேசை வசதி செய்து தரவும், இரண்டு வகுப்பறை கட்டடம் கட்டித் தரக் கோரியும், அப்பள்ளியின் தலைமையாசிரியர் மூலமாக சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவருக்கு கடிதம் அனுப்பப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

78—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 38222—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாநகராட்சி, 18–வது வார்டு, சமத்துவபுரம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள

[2023 ஜனவரி 11

நிபந்தனைகளை திருப்பூர் மாநகராட்சி, 18–வது வார்டு, சமத்துவபுரம் நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

79—

பயிற்சி மையம்

வினா எண் 21833—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருநெல்வேலியில் IAS, IPS போன்ற போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சி மையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசுப் பணிகளுக்காக நடைபெறும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு இலவசப் பயிற்சி அளிக்கும் வகையில், 38 மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் தன்னார்வ பயிலும் வட்டங்கள் செயல்படுகின்றன. இத்தன்னார்வ பயிலும் வட்டங்களில் போட்டித் தேர்வுகளுக்கு தயாராவதற்குத் தேவையான புத்தகங்கள், நாளிதழ்கள், வார, மாத இதழ்களுடன்கூடிய நூலகங்களும் செயல்படுகின்றன. மேலும், தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம் சென்னை, மதுரை ஆகிய இரண்டு அலுவலகங்களிலும், மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை மற்றும் மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்திலும் TNPSC, Bank Exams, RRB, SSC, NET, SET போன்ற தேர்வு முகமைகளால் நடத்தப்படும் அனைத்து போட்டித் தேர்வுகளுக்கும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் இறுதியாண்டு பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில், 10 கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகங்கள் மற்றும் அதன் உறுப்புக்

2023 ஜனவரி 11]

கல்லூரிகளில் கட்டணமில்லா பயிற்சி வழங்கும் மையங்கள்மூலம் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மேலும், 20–3–2022 முதல் பல்வேறு தேர்வு முகமைகளால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் காணொலியாக கல்வித் தொலைக்காட்சியில் காலை 7–00 மணி முதல் 9–00 மணிவரை திங்கள் முதல் வெள்ளி வரை ஒளிபரப்பப்படுகின்றன. இப்பயிற்சி வகுப்புகளின் காணொளியானது 'TN Career Services Employment' *என்ற* YouTube *சேனலின் வாயிலாக பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, தேர்வர்கள் எந்தப் பகுதியில் இருந்தாலும் அக்காணொளியை பதிவிறக்கம் செய்து பயன்பெறலாம். மேலும்,* https://tamilnaducareerservices.tn.gov.in *என்ற மெய்நிகர் கற்றல் இணையதளத்தில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து போட்டித் தேர்வுகளுக்கான அனைத்து பாடக் குறிப்புகளும் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இவற்றை இலவசமாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.*

IAS, IPS *பணிகளுக்காக முதல்நிலை மற்றும் முதன்மைத் தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் செயல்படும் அகில இந்திய குடிமைப் பணி தேர்வுப் பயிற்சி மையத்தால் நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சி மையத்தின்* YouTube Channel*–ல்* UPSC *தேர்வுகளுக்கான பதிவு செய்யப்பட்ட காணொளி பயிற்சி வகுப்புகளும் வெளியிடப்படுகிறது. எந்தப் பகுதியில் இருந்தும் மாணவர்கள் இணையவழியில் இக்காணொளி பயிற்சி வகுப்புகளைக் காணலாம்.*

எனவே, சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருநெல்வேலியில் IAS, IPS *போன்ற போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சி மையம் தனியே அமைக்கும் நிலை எழவில்லை.*

80—

கல்வி பயிற்சி மையம்

வினா எண் 22990—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இளைஞர்கள் இந்திய குடிமைப் பணி, இந்திய கடலோர காவல் படை, கப்பற்படை பணிகளில் சேருவதற்கு கல்வி பயிற்சி மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

அரசுப் பணிகளுக்காக நடைபெறும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு இலவசப் பயிற்சி அளிக்கும் வகையில், 33 மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் தன்னார்வ பயிலும் வட்டங்கள் செயல்படுகின்றன. இம்மையங்களில் போட்டித் தேர்வுகளுக்கு தயாராவதற்குத் தேவையான புத்தகங்கள், நாளிதழ்கள், வார, மாத இதழ்களுடன்கூடிய நூலகங்களும் செயல்படுகின்றன.

மேலும், 20–3–2022 முதல் பல்வேறு தேர்வு முகமைகளால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் காணொலியாக கல்வித் தொலைக்காட்சியில் காலை 7–00 மணி முதல் 9–00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை ஒளிபரப்பப்படுகின்றன. மேலும், https://tamilnaducareerservices.tn.gov.in என்ற மெய்நிகர் கற்றல் இணையதளத்தில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து போட்டித் தேர்வுகளுக்கான அனைத்து பாடக் குறிப்புகளும் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இவற்றை இலவசமாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். கல்வித் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் பயிற்சி வகுப்புகள் இவ்விணையதள YouTube (TN Career Services Employment) பக்கத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கிவரும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தால் TNPSC, Bank Exams, RRB, SSC, NET, SET போன்ற அனைத்து போட்டித் தேர்வுகளுக்கும் நேரடி மற்றும் இணையவழியிலான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

அனைத்து இந்திய குடிமைப் பணிக்கான பயிற்சி மையத்தில் நேரடியாகவும், இணையதளம் வாயிலாகவும் பயிற்சி

2023 ஜனவரி 11]

வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், காணொளியாக YouTube–ன் வாயிலாக பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, தேர்வர்கள் எந்தப் பகுதியில் இருந்தாலும் அக்காணொளியை பதிவிறக்கம் செய்து பயன்பெறலாம்.

இராணுவப் படை, கப்பல் படை மற்றும் கடலோர காவல் படை என்னும் பயிற்சிகள் தொடர்பிலான விழிப்புணர்வு முகாம்கள் அனைத்து மாவட்டங்களிலும் இராணுவம்/கப்பல் படை/விமானப் படையில் உள்ள அலுவலர்களைக் கொண்டு ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்படுகிறது. இந்திய இராணுவத்தின் முப்படை பணிகளில் சேர விருப்பமுள்ளவர்கள், இத்தகு விழிப்புணர்வு முகாம்களில் பங்கேற்று உரிய தேர்வுகளை எழுதி தேர்ச்சிப் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட பின், அத்துறையினால் மட்டுமே அளிக்கப்படும் பயிற்சியினை மேற்கொள்ளலாம்.

இந்நிலையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்திய குடிமைப் பணி, இந்திய கடலோர காவல் படை, கப்பற்படை பணிகளுக்கான பயிற்சி மையம் தனியாக துவங்க வேண்டிய நிலை எழவில்லை.

81—

வருமானம் ஈட்ட வழிவகை செய்தல்

வினா எண் 30534—திரு. இரா. அருள்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்தோர்க்கு உடலுழைப்புத் தொழிலில் ஈடுபட்டு வருமானம் ஈட்ட வழிவகை செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

உடலுழைப்புத் தொழிலாளராகப் பணிபுரிய வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் விருப்பம் தெரிவித்தால் மட்டுமே அவர்களுக்கு அப்பணிகளை வழங்க இயலும். வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் விருப்பம் தெரிவிக்கும் நேர்வில், அவர்கள் விரும்பும் தொழில்களுக்கு தமிழ்நாடு

திறன் மேம்பாட்டுக் கழகம் வாயிலாக உரிய திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அதனடிப்படையில், தனியார் துறைகளில் பணி நியமனம் பெற வழிவகை செய்யப்படும். மேலும், இவ்வாறு உடலுழைப்பு அடிப்படையிலான பணிகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவிக்கும் இளைஞர்களுக்கு சுயமாக அத்தொழிலினை சுய வேலைவாய்ப்பு அடிப்படையில் மேற்கொள்ளவும், அவ்வாறான தொழில்முனைவோர்களுக்கு அரசால் வழங்கப்படும் கடனுதவிகள் தொடர்பிலும் விழிப்புணர்வு அளிக்கப்படும். மேலும், தமிழ்நாடு அரசால் மாவட்டத் தொழில் மையம்மூலம் வழங்கப்படும் சுய வேலைவாய்ப்பு விருப்பம் தெரிவிப்போரின் தொழில் விவரங்கள் பெறப்பட்டு, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களால் பரிந்துரைக்கப்படுகிறது.

82—

தொழிற்பயிற்சி மையம்

வினா எண் 30634—திரு. இரா. அருள்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், வாழப்பாடியில் அரசு தொழிற்பயிற்சி மையம் (ITI) ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

சேலம் (மேற்கு) சட்டமன்றத் தொகுதி அமைந்துள்ள சேலம் மாவட்டத்தில் 4 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 17 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மொத்தம் 2,492 ஒப்பளிக்கப்பட்ட இருக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றன. ஒப்பளிக்கப்பட்ட 2,492 இருக்கைகளில், 1,624 இருக்கைகள் நிரப்பப்பட்டு, 868 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், சேலம் மாவட்டம், சேலம் (மேற்கு) பகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

2023 ஜனவரி 11]

83—

தொழிற்பயிற்சி அளித்தல்

வினா எண் 30761—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் திறன் மேம்பாட்டுத் துறைமூலம் கிராமப்புற இளைஞர்களை ஊக்குவிக்கும் விதமாக தொழிற்பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்கீழ் 91 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தமிழகத்தில் கிராமப்புறங்கள் உள்ள பல்வேறு மாவட்டங்களில் தொழிற்சாலைகளின் வேலைவாய்ப்புக்கேற்ப துவங்கப்பட்டுள்ளன. கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்கள் திறன் பயிற்சி பெறும் வகையில் இன்றைய தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு புதிய தொழிற்பிரிவுகள் துவங்கப்பட்டு, பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், முன்னணி நிறுவனங்களுடன் இணைந்து தொழில் 4.0 எனும் நவீன தரத்திற்கு உயர் உற்பத்தி தொழில்நுட்பங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி இளைஞர்களுக்கு வழங்கிடவும், அதற்குண்டான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிடவும் 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் ரூ.2,877.43 கோடி செலவில் தரமுயர்த்தப்பட உள்ளன. அத்தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள தொழிற்பிரிவுகளுக்கு புதிய தொழில்நுட்பங்களுடன்கூடிய இயந்திரங்கள், உபகரணங்கள், கருவிகள் மற்றும் மென்பொருட்கள் ஆகியவை நிறுவப்பட உள்ளன. மேலும், Robotics, Industrial Automation, Manufacturing Process Control, Advanced Manufacturing *மற்றும்* Mechanic Electric Vehicles *போன்ற நீண்டகால தொழிற்பிரிவுகளும்,* Innovation and Design Thinking, Process

Control and Automotion, Auto Electrical Maintenance, Internet of Things, Advanced Welding மற்றும் Advanced Plumbing போன்ற குறுகியகால தொழிற்பிரிவுகளும் துவங்கப்படவுள்ளன.

கிராமப்புற இளைஞர்களுக்கு பயனுள்ள வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதற்கும், தொழிற்சாலைகளுக்கு ஏற்றவாறு இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி அளித்து வேலைவாய்ப்பை உருவாக்கிடவும், கீழ்க்காணும் 11 மாவட்டங்களில் முக்கிய தொழில் நகரங்களுக்கு அருகில் புதிய அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் துவங்கப்படவுள்ளன:

வ. எண்	மாவட்டம்	அரசு தொழிற்பயிற்சி நிலையம்
1.	கடலூர்	மங்களூர்
2.	சிவகங்கை	மானாமதுரை
3.	திருவண்ணாமலை	செய்யாறு
4.	விருதுநகர்	திருச்சுழி
5.	திருவள்ளூர்	கும்மிடிப்பூண்டி
6.	திண்டுக்கல்	ஒட்டன்சத்திரம்
7.	இராமநாதபுரம்	கடலாடி
8.	தருமபுரி	அரூர்
9.	கிருஷ்ணகிரி	தேன்கனிக்கோட்டை
10.	பெரம்பலூர்	குன்னம்
11.	கோயம்புத்தூர்	வால்பாறை

எனவே, கிராமப்புற இளைஞர்களை ஊக்குவிக்கும் விதமாகத் தொடர்ந்து தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

2023 ஜனவரி 11]

84—

கொத்தடிமைத் தொழிலாளர்களைக் கண்டறிதல்

வினா எண் 30773—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பஞ்சாலை, பின்னலாடைத் தொழிற்சாலைகளில் கொத்தடிமைத் தொழிலாளர்கள் உள்ளதைக் கண்டறிய அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *கொத்தடிமைத் தொழிலாளர்கள் குறித்து புகார் பெறப்படும் நேர்வில், ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, கொத்தடிமைத் தொழிலாளர்கள் மீட்கப்படுகின்றனர். தற்போதுவரை, செங்கல்சூளை, அரிசி ஆலை, கரும்பு வெட்டும் தொழில், சவுக்கு மரம் வெட்டும் தொழில், ஆடு மேய்க்கும் தொழில் மற்றும் இதர தொழில் நிறுவனங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, கொத்தடிமைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு, மறுவாழ்வு அளிக்கப்படுகின்றனர்.*

பின்னலாடை மற்றும் பஞ்சாலைத் தொழிற்சாலைகளில் கொத்தடிமைத் தொழிலாளர்கள் பணிபுரிவது கண்டறியப்பட்டால், ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, கொத்தடிமைத் தொழிலாளர்கள் உடனடியாக மீட்கப்பட்டு, அவர்களுக்குரிய நிவாரணம் வழங்கப்படுகிறது. பஞ்சாலை, பின்னலாடைத் தொழிற்சாலைகளில் கொத்தடிமைத் தொழிலாளர்கள் தொடர்பாக, மாவட்ட கண்காணிப்புக் குழுவுடன் (District Vigilance Committee) *சேர்ந்து தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கொத்தடிமைத் தொழிலாளர்கள் உள்ளனரா எனக் கண்காணிக்கப்படுகின்றது. மேலும், அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது கொத்தடிமைத் தொழிலாளர்கள் எவரும் பணிபுரியவில்லை என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.*

85—

தொழிற்பயிற்சி மையம்

வினா எண் 30845—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி பகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் (ITI) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதி அமைந்துள்ள தருமபுரி மாவட்டத்தில் 1 அரசு தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் 5 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் ஒப்பளிக்கப்பட்டுள்ள மொத்தம் 780 இருக்கைகளுடன் (2021–ன்படி) செயல்பட்டு வருகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 780 இருக்கைகளில், 50% இருக்கைகள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது செயல்பட்டுவரும் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி பகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

86—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 30892—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 ஜனவரி 11]

(அ) பொன்னேரி தொகுதிக்குட்பட்ட பகுதியில் மாற்றுத் திறனாளிகளுக்கென ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள பொன்னேரி தொகுதியில் மூன்று அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும் மொத்தம் 1,288 ஒப்பளிக்கப்பட்ட இருக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றன. இந்த இருக்கைகளில், மாற்றுத் திறனாளிகளுக்கென ஒதுக்கப்பட்ட (5% ஒதுக்கீடு) 64 இருக்கைகளில், 4 இருக்கைகள் நிரப்பப்பட்டு, 60 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாற்றுத் திறனாளி பயிற்சியாளர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் நிலை தற்போது எழவில்லை.

87—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 30923—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதிக்குட்பட்ட களம்பூர் பகுதியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதிக்குட்பட்ட களம்பூர் பகுதியில் அமைந்துள்ள திருவண்ணாமலை மாவட்டத்தில்

2 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், 22 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மொத்தம் 2,180 ஒப்பளிக்கப்பட்ட இருக்கைகளுடன் (2021–ன்படி) செயல்பட்டு வருகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 2,180 இருக்கைகளில், 1,166 இருக்கைகளில் அதாவது 53% இருக்கைகளில் மட்டுமே மாணவர்கள் சேர்ந்துள்ளனர். மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சரின் 26–4–2022 அன்றைய அறிவிப்பின்படி, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு பகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் துவங்கப்படவுள்ளது. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதிக்குட்பட்ட களம்பூர் பகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் நிலை தற்போது எழவில்லை.

88—

ESI **மருத்துவமனை**

வினா எண் 30966—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூரில் ESI மருத்துவமனை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மண்டலம், திருப்பூர் மாவட்டத்தில் கீழ்க்காணும் 15 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை பின்வருமாறு:

i. *அவினாசி*

ii. *அவினாசிபாளையம்*

2023 ஜனவரி 11]

iii. தாராபுரம்

iv. காங்கேயம்

v. மடத்துக்குளம்

vi. நாரணபுரம்

vii. பல்லடம்

viii. பெதப்பம்பட்டி

ix. திருப்பூர்–1

x. திருப்பூர்–2

xi. உடுமலைப்பேட்டை (நிலை)

xii. உடுமலைப்பேட்டை (நடமாடும்)

xiii. வெள்ளக்கோவில்

xiv. பெருமாநல்லூர்

xv. ஊத்துக்குளி

காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மாநில அரசு மருத்துவ சேவையை மட்டுமே வழங்கி வருகிறது. கட்டடம் கட்டுதல், விரிவாக்கம், பராமரித்தல் மற்றும் அனைத்து முக்கிய கொள்கை முடிவுகளும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தைச் சார்ந்ததாகும்.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தின் கொள்கைபடி, 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அமைப்பதற்கு குறைந்தபட்சம் 50,000 காப்பீட்டு நபர்கள் வசிக்க வேண்டும்.

மேலும், திருப்பூரில் 100 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைப்பதற்கு 6–2–2022 அன்று பூமி பூஜை நடத்தப்பட்டுள்ளது. மத்திய பொதுப் பணித் துறை (CPWD) மருத்துவமனை கட்டடத்தை கட்டுவதற்கு ஆறு தொகுதிகளாக செயல்படுத்த திட்டமிட்டுள்ளது.

89—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 30974—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *கிள்ளியூர் தொகுதி அமைந்துள்ள திருவாரூர் மாவட்டத்தில் 2 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 11 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 1,452 ஒப்பளிக்கப்பட்ட இருக்கைகளுடன் (2021–ன்படி) செயல்பட்டு வருகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 1,452 இருக்கைகளில், 621 இருக்கைகளில், அதாவது 43% இருக்கைகளில் மட்டுமே மாணவர்கள் சேர்ந்துள்ளனர். இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், திருவாரூர் மாவட்டம், கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் நிலை தற்போது எழவில்லை.*

90—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 30975—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

(அ) *உதகமண்டலம் தொகுதிக்குட்பட்ட குந்தா தாலுகா, மஞ்சூரில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *உதகமண்டலம் தொகுதியில் அமைந்துள்ள நீலகிரி மாவட்டத்தில் 2 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும் மற்றும் 8 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் மொத்தம் 720 ஒப்பளிக்கப்பட்ட இருக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றன. இந்த ஒப்பளிக்கப்பட்ட 720 இருக்கைகளில், 446 இருக்கைகள் நிரப்பப்பட்டு, 274 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் தொகுதிக்குட்பட்ட குந்தா தாலுகா, மஞ்சூரில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் நிலை தற்போது எழவில்லை.*

91—

ESI **மருத்துவமனைக்கு கட்டடம்**

வினா எண் 30977—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *சோளிங்கர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் தொழிலாளர் நலன் கருதி* ESI *மருத்துவமனைக்கு நிரந்தரக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

[*2023 ஜனவரி 11*

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மண்டலம், ராணிப்பேட்டை மாவட்டத்தில் கீழ்க்கண்டுள்ள 4 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை பின்வருமாறு:

i. அரக்கோணம், ii. மேல்விஷாரம், iii. ராணிப்பேட்டை, iv. சோளிங்கர்

மாநில அரசு காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு மருத்துவ சேவையை மட்டுமே வழங்கி வருகிறது.

கட்டடம் கட்டுதல், விரிவாக்கம், பராமரித்தல் மற்றும் அனைத்து முக்கிய கொள்கை முடிவுகளும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தைச் சார்ந்ததாகும்.

மேலும், சோளிங்கர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவது போன்ற கொள்கை முடிவுகள் அனைத்தும் புதுதில்லி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தைச் சார்ந்ததாகும்.

92—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 31006—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புவனகிரி தொகுதிக்குட்பட்ட பகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புவனகிரி சட்டமன்றத் தொகுதி அமைந்துள்ள கடலூர் மாவட்டத்தில் 5 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 23 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஒப்பளிக்கப்பட்ட 4,372 இருக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள 4,372 இருக்கைகளில், அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்ட கலந்தாய்வில் கலந்துகொண்ட 18 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 1,254 இருக்கைகளில், 221 இருக்கைகள் நிரப்பப்பட்டு, காலியாக உள்ள 1,033 இருக்கைகள் உட்பட மொத்தம் 2,398 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. மேலும், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சரின் 26–4–2022 அன்றைய அறிவிப்பின்படி, கடலூர் மாவட்டம், மங்களூரில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் துவங்கப்படவுள்ளது. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதிக்குட்பட்ட பகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

93—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 31009—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதிக்குட்பட்ட பெரிய கொழப்பலூர், சேத்துப்பட்டு மற்றும் போளூர் பகுதிகளில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதியில் அமைந்துள்ள திருவண்ணாமலை மாவட்டத்தில் 2 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 22 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மொத்தம் 2,180 ஒப்பளிக்கப்பட்ட இருக்கைகளுடன் (2021–ன்படி) செயல்பட்டு வருகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 2,180 இருக்கைகளில், 1,166 இருக்கைகளில், அதாவது 53% இருக்கைகளில் மட்டுமே மாணவர்கள் சேர்ந்துள்ளனர். மேலும், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சரின் 26–4–2022 அன்றைய அறிவிப்பின்படி, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு பகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் துவங்கப்படவுள்ளது. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதிக்குட்பட்ட பெரிய கொழப்பலூர், சேத்துப்பட்டு மற்றும் போளூர் பகுதிகளில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் நிலை தற்போது எழவில்லை.

94—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 31018—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதிக்குட்பட்ட ஆரணி பேரூராட்சியில் (ITI) *அரசின் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதிக்குட்பட்ட ஆரணி பேரூராட்சி அமைந்துள்ள திருவள்ளூர் மாவட்டத்தில் 1 அரசு

2023 ஜனவரி 11]

தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் 17 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஒப்பளிக்கப்பட்ட 1,692 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 1,692 இருக்கைகளில், அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்ட கலந்தாய்வில் கலந்துகொண்ட 3 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 102 இருக்கைகளில், 2 இருக்கைகள் நிரப்பப்பட்டு, காலியாக உள்ள 100 இருக்கைகள் உட்பட மொத்தம் 1,374 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது இயங்கிவரும் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதிக்குட்பட்ட ஆரணி பேரூராட்சியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

95—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 35802—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் புதிய தொழிற்பயிற்சி நிலையம் (ITI) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதியில் அமைந்துள்ள தருமபுரி மாவட்டத்தில் ஓர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் 5 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 780 ஒப்பளிக்கப்பட்ட இருக்கைகளுடன் (2021–ன்படி) செயல்பட்டு வருகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 780 இருக்கைகளில், 388 இருக்கைகள், அதாவது 50% இருக்கைகளில் மட்டுமே மாணவர்கள் சேர்ந்துள்ளனர். இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள

TRUTH ALONE TRIUMPHS

இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பெண்ணாகரம் பகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

96—

போட்டித் தேர்வு மையம்

வினா எண் 36038—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுராந்தகம் தொகுதியில் உள்ள மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் போட்டித் தேர்வு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் அரசுப் பணிகளுக்காக நடைபெறும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு இலவசப் பயிற்சி அளிக்கும் வகையில், 38 மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் தன்னார்வ பயிலும் வட்டங்கள் செயல்படுகின்றன. இத்தன்னார்வ பயிலும் வட்டங்களில் போட்டித் தேர்வுகளுக்கு தயாராவதற்குத் தேவையான புத்தகங்கள், நாளிதழ்கள், வார, மாத இதழ்களுடன்கூடிய நூலகங்களும் செயல்படுகின்றன. மேலும், TNPSC, Bank Exams, RRB, SSC, NET, SET *போன்ற தேர்வு முகமைகளால் நடத்தப்படும் அனைத்து போட்டித் தேர்வுகளுக்கும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இவை நீங்கலாக துறையால் நிறுவப்பட்டுள்ள* https://tamilnaducareerservices.tn.gov.in *என்ற மெய்நிகர் கற்றல் இணையதளத்தில் அனைத்து போட்டித் தேர்வுகளுக்கான* (TNPSC, IBPS, RRB, SSC, TNUSRB) *பாடக் குறிப்புகளும்*

2023 ஜனவரி 11]

தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இவற்றை இலவசமாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

மேலும், 20–3–2022 முதல் பல்வேறு தேர்வு முகமைகளால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் காணொலியாக கல்வித் தொலைக்காட்சியில் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 7–00 மணி முதல் 9–00 மணி வரையிலும், இதன் மறுஒளிபரப்பு மாலையில் 7–00 மணி முதல் 9–00 மணி வரையிலும் ஒளிபரப்பப்படுகிறது. இப்பயிற்சி வகுப்புகளின் காணொலியானது 'TN Career Services Employment' *என்ற* YouTube *சேனலின் வாயிலாக பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, தேர்வர்கள் எந்தப் பகுதியில் இருந்தாலும் அக்காணொலியை பதிவிறக்கம் செய்து பயன்பெறலாம்.*

ஏற்கெனவே, மதுராந்தகம் தொகுதிக்கு அருகிலுள்ள காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் செயல்படுகின்றன. இவ்வலுவலகங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு மையங்கள் செயல்பட்டு, சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

எனவே, மதுராந்தகம் தொகுதியில் தனியே போட்டித் தேர்வுக்கான பயிற்சி மையம் அமைக்கும் நிலை எழவில்லை.

97—

சான்றுகள் வழங்குதல்

வினா எண் 12380—திரு. இரா. அருள்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரசு இ–சேவை மையங்களில் கூடுதல் கணிப்பொறியும், பணியாளர்களும் கூடுதலாகப் பணியமர்த்தி பொதுமக்களுக்குத் தாமதமின்றி சான்றுகள் பெற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது, தமிழ்நாட்டில் 13,484 இ–சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில், நகரப்புற பகுதிகளில் 4,871 இ–சேவை மையங்களும், ஊரகப் பகுதிகளில் 8,613 இ–சேவை மையங்களும் இயங்கி வருகின்றன.

இதில், நகர்ப்புற பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களிலும் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களிலும் தலா 02 செயலிட முகப்புகள் அமைக்கப்பட்டு, திறம்படச் செயல்பட்டு வருகின்றன. மேலும், ஊரகப் பகுதிகளில் பரிவர்த்தனைகள் அதிகம் நடைபெறும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களிலும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்களிலும் மற்றும் மகளிர் திட்ட அலுவலகங்களிலும் 02 செயலிட முகப்புகள் இயங்கி வருகின்றன.

தற்போது, தமிழகத்தில் சராசரியாக நாளொன்றுக்கு சுமார் 40,000 பரிவர்த்தனைகள் 13,484 இ–சேவை மையங்கள்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றைத் தவிர, இ–சேவை குடிமக்கள் இணைய முகப்புமூலம் சுமார் 10,000 பரிவர்த்தனைகள் 24/7 அடிப்படையில், அரசின் பல்வேறு சேவைகளுக்கு விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், இ–சேவை மையங்களின் எண்ணிக்கையைத் தொடர்ந்து அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக, கடந்த ஓராண்டில் மட்டும் சுமார் 1,500 புதிய இ–சேவை மையங்கள் அமைக்க தமிழ்நாடு மின்னாளுமை முகமைமூலம் பயனர் குறியீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நேர்வில், அரசு இ–சேவை மையங்களில் கூடுதல் கணிப்பொறி மற்றும் பணியாளர் தேவை இருக்குமாயின், தொடர்புடைய சேவை முகவர்களின்மூலம் கோரிக்கை பெறப்படும்போது, கூடுதல் செயலிட முகப்புகளை அமைக்கவும், புதிய இ–சேவை மையத்தை அமைக்கவும், பயனர் குறியீடுகள் வழங்கப்படும்.

2023 ஜனவரி 11]

98—

கிராமங்களில் இணையவசதி

வினா எண் 18143—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *தமிழ்நாட்டில் அனைத்து கிராமங்களிலும் இணைய வசதியை (பிராட்பேண்ட்) ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *ஒன்றிய அரசின் திட்டமான பாரத்நெட் திட்டத்தை சிறப்பு நோக்கு நிறுவனமான தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம்மூலம் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.*

இத்திட்டத்தின்மூலம் தமிழ்நாட்டில் உள்ள 12,525 கிராம பஞ்சாயத்துகளையும் கண்ணாடி இழை வடம்மூலம் இணைத்து 1 Gbps *அளவிலான அதிவேக அலைக்கற்றை இணைப்பினை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டமானது மாவட்டங்கள் அடிப்படையில்,* A, B, C *&* D *என நான்கு தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் பாரத்நெட் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக தொகுப்பு* A, B, C *மற்றும்* D*–க்கான முதன்மைத் திட்ட ஒருங்கிணைப்பாளர்/திட்ட ஒருங்கிணைப்பாளர்களுடன் முதன்மை சேவை ஒப்பந்தங்கள்* (Master Service Agreements) *மேற்கொள்ளப்பட்டு, களப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. பாரத்நெட் திட்டமானது அனைத்து திட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கும் பணி ஆணை வழங்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் நிறைவேற்றப்படும்.*

[2023 ஜனவரி 11

99—

இணைய சேவையின் தரத்தை உயர்த்துதல்

வினா எண் 26173—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் இணைய சேவையின் வேகம் மற்றும் தரத்தை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒன்றிய அரசின் திட்டமான பாரத்நெட் திட்டத்தை சிறப்பு நோக்கு நிறுவனமான தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம்மூலம் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்மூலம் தமிழ்நாட்டில் உள்ள 12,525 கிராம பஞ்சாயத்துகளையும் கண்ணாடி இழை வடம்மூலம் இணைத்து 1 Gbps அளவிலான அதிவேக அலைக்கற்றை இணைப்பினை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டமானது மாவட்டங்கள் அடிப்படையில், A, B, C & D என நான்கு தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு, செயல்படுத்தப்படுகிறது. தொகுப்பு–C–ல் உள்ள சூலூர் தொகுதிக்குட்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளை கண்ணாடி இழை வடம்மூலம் இணைத்து 1 Gbps அளவிலான அதிவேக அலைக்கற்றை இணைப்பினை வழங்குவதன் வாயிலாக இணைய சேவையின் வேகம் மற்றும் தரம் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2023 ஜனவரி 11]

100—

சிறப்புக் கூறு, உட்கூறு திட்டங்கள்

வினா எண் 28869—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பட்டியலின மக்களுக்கான சிறப்புக் கூறு திட்டத்தையும், பழங்குடியினருக்கான உட்கூறு திட்டங்களையும் சிறப்பாக செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டங்களுக்காக ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி, மக்கள்தொகை கணக்கெடுப்பு 2011 விகிதாசாரத்திற்கு ஏற்ப மாநில அரசின் ஆண்டு திட்ட ஒதுக்கீட்டில் இருந்து ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கு 20.01 சதவிகிதமும், பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கு 1.10 சதவிகிதமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கண்காணிப்பு துறையாக (Nodal Department) *ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை செயல்படுகிறது. இத்துறையின் செயலாளர் அவர்கள் மாநில அளவில் கண்காணிப்பு அலுவலராக நியமனம் செய்யப்பட்டு, திட்டங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.*

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் ஒவ்வொரு மாதமும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான முன்னேற்ற அறிக்கைகள் அனைத்து செயலாக்க துறைகளிலிருந்தும் பெறப்பட்டு, துணைத் திட்ட முன்னேற்றம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், தலைமைச் செயலாளர் அவர்களை தலைவராகக் கொண்ட மாநில அளவிலான கண்காணிப்பு குழு (State Level Monitoring

Committee) அனைத்து துறைகளின் திட்ட முன்னேற்றம் குறித்து அவ்வப்போது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. எனவே, சிறப்புக் கூறுகள் திட்ட நிதி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு முறையாக சென்றடைவதற்கு துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

பட்டியல்-2

1—

கண்காணிப்பு கேமரா

வினா எண் 617—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம் தென் ஊராட்சியில் உள்ள சாய் பாலாஜி நகரில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி அகரம் தென் ஊராட்சியில் உள்ள சாய் பாலாஜி நகரில் ஐந்து கண்காணிப்பு கேமராக்கள் ஏற்கெனவே பொருத்தப்பட்டுள்ளன.

2—

குளத்திற்கு கரை

வினா எண் 4389—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, மருதூர்குறிச்சி ஊராட்சியில் உள்ள இரட்டை குளத்தின் கரையை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, கல்குளம் வட்டம், மருதூர்குறிச்சி கிராமம், இரட்டைக்குளத்தின் கரையில் தடுப்புச்சுவர் கட்ட மருதூர்குறிச்சி பேரூராட்சிமூலம் ரூ.14.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3—

வைகை ஆற்றிற்கு கரை

வினா எண் 7589—திரு. ஆ. வெங்கடேசன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழவந்தான் தொகுதியில் அமைந்துள்ள வைகை ஆற்றின் கருட்டுப்பட்டி முதல் சமயநல்லூர் வரை ஆற்றின் கரையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, கரையின் இருபக்கமும், கரையின் பக்கவாட்டில் கான்கிரீட் சுவர் எழுப்பி, கரையை பலப்படுத்த கரையில் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட வைகை ஆற்றின் இருபுறக்கரைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும்பொருட்டு வட்டாட்சியர்மூலம் அளவீடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. முழுமையாக அளவீடு எல்லைகள் வரையறை செய்யப்பட்டு ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும். வைகை ஆற்றின் கரையில் கருட்டுப்பட்டி முதல் சமயநல்லூர் வரை பக்கவாட்டில் கான்கிரிட் சுவர் மற்றும் சாலை அமைக்க தற்போதைய நிலையில் சாத்தியக்கூறுகள் இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஜனவரி 11

4—

கல்லணைக் கால்வாயைப் புனரமைத்தல்

வினா எண் 11305—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லணைக் கால்வாய் புனரமைப்பு திட்டத்தை விரைந்து செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கல்லணைக் கால்வாய் புனரமைப்பு திட்டம் அரசாணையின்படி ரூ.2,639.15 கோடி மதிப்பீட்டில் ஆசிய உள்கட்டமைப்பு வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளது. தற்பொழுது முதற்கட்டமாக ரூ.1,036.70 கோடி மதிப்பீடில் 5 தொகுப்புகளாக பணிகள் நடைபெற்று வருகின்றன.

5—

பணியாளர்கள்

வினா எண் 11365—திரு. இ. பரந்தாமன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நியாயவிலைக் கடைகளில் ஒரு பணியிடம் மட்டுமே அரசினால் ஒதுக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக பில் போடுவது, பொருட்களை எடை போட்டு விநியோகிப்பதற்கான ஊழியர்களைத் தனியாக வைத்துக்கொள்ளும் நடைமுறை பல நியாயவிலைக் கடைகளிலிருந்து வருகிறது. அப்பணியிடங்களை உருவாக்கி, ஊழியர்களை நியமிக்க அரசு முன்வருமா?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கூட்டுறவுத் துறையால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளில் விற்பனையாளர்கள் மற்றும் கட்டுநர்கள் நியமனம் செய்வது தொடர்பாக பதிவாளர் சுற்றறிக்கை எண் 113209/1990/பொவிதி பொது 1, நாள் 26–7–1990–ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

நகர்ப்புறங்களில் 500 குடும்ப அட்டைகளுக்குக்கீழ் உள்ள நியாயவிலைக் கடைகளுக்கு ஒரு விற்பனையாளரும், மண்ணெண்ணெய் வழங்கும் நேர்வில் ஏற்படும் கூடுதல் பணிச் சுமைக்கு நாள் ஒன்றுக்கு ரூ.100 கூடுதல் செலவினமாகவும், நகர்ப்புறங்களில் 500 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாயவிலைக் கடைகளுக்கு ஒரு விற்பனையாளர் மற்றும் ஒரு எடையாளர் பணியிடமும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் 500 குடும்ப அட்டைகளுக்குக்கீழ் உள்ள நியாயவிலைக் கடைகளுக்கு ஒரு விற்பனையாளர் பணியிடமும், கிராமப்புறங்களில் 500 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாயவிலைக் கடைகளுக்கு ஒரு விற்பனையாளர் பணியிடமும் மண்ணெண்ணெய் வழங்கும் நேர்வில் ஏற்படும் கூடுதல் பணிச் சுமைக்கு நாள் ஒன்றுக்கு ரூ.100 கூடுதல் செலவினமாகவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஏற்கெனவே உள்ள நிபந்தனைகள் மற்றும் நடைமுறைப்படி நியாயவிலைக் கடைகளில் விற்பனையாளர்கள் மற்றும் கட்டுநர் பணியிடங்கள் பேணப்படுவதே போதுமானது என்பதால் கூடுதலாக கட்டுநர் பணியிடங்கள் அனுமதிக்க வேண்டிய தேவை எழவில்லை.

6—

நிலுவைத் தொகை வழங்குதல்

வினா எண் 478—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கரும்பு விவசாயிகளுக்கு கூட்டுறவு ஆலைகள் மூலமாக வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு நிதி உதவியுடன் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் 2019–2020 அரவைப் பருவம் வரை கொள்முதல் செய்த கரும்பிற்கான நியாயமான மற்றும் ஆதாய கரும்பு விலை முழுவதையும் நிலுவையின்றி முழுமையாக வழங்கிவிட்டன.

தமிழ்நாட்டில் உள்ள 18 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் 2020–2021 பருவத்தில் 14 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் அரவைப் பணி மேற்கொண்டு 25.96 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்தன. சுப்பிரமணிய சிவா மற்றும் கள்ளக்குறிச்சி–2 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மட்டும் நியாயமான மற்றும் ஆதாய விலையை விவசாயிகளுக்கு நிலுவையின்றி வழங்கி முடித்தன. மீதம் உள்ள 12 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளால் 31–7–2021 அன்றைய நிலவரப்படி ரூ.187.95 கோடி விவசாயிகளுக்கு வழங்கப்படாமல் நிலுவை வைத்திருந்தன. மேற்காணும் நிலுவைத் தொகையை கரும்பு விவசாயிகளுக்கு வழங்கி முடிக்க ஏதுவாக அரசாணை (நிலை) எண் 207, தொழில் துறை, நாள் 27–8–2021–ன்படி ரூ.182.1385 கோடி வழிவகைக் கடன் வழங்கப்பட்டது. சர்க்கரை விற்பனை மற்றும் வழிவகைக் கடன் ரூ.182.1385 கோடியை பயன்படுத்தி 12 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்கு 2020–2021 பருவத்தின் நியாயமான மற்றும் ஆதாய விலை நிலுவை முழுவதும் வழங்கி முடிக்கப்பட்டுவிட்டது.

7—

பயிர் காப்பீட்டுத் தொகை

வினா எண் 2195—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பயிர்சேதம் பாதி ஏற்பட்டாலும் பயிர் காப்பீட்டு தொகை முழுவதையும் வழங்க அரசு முன்வருமா?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்ட விதிமுறைகளின்படி, அறிவிக்கை செய்யப்பட்ட வருவாய் கிராமம் அல்லது பிர்கா (குறுவட்டம்) அளவில் மாநில புள்ளியியல் மற்றும் பொருளியல் துறையால் நடத்தப்படும் பயிர் அறுவடை பரிசோதனைகளில் பெறப்படும் சராசரி மகசூல் அந்த வருவாய் கிராமம் அல்லது பிர்காவின் உத்தரவாத மகசூலுடன் (கடந்த 7 வருடங்களில் சிறந்த மகசூல் பெறப்பட்ட 5 வருடங்களின் சராசரி) ஒப்பிடப்பட்டு மகசூல் இழப்பு சதவீதத்தின் அடிப்படையில் பயிர் இழப்பீட்டுத் தொகை காப்பீட்டு நிறுவனங்களால் வழங்கப்படுகிறது. இதன்மூலம் 1 சதவீதத்திற்கும் குறைவான மகசூல் இழப்பு முதல் 100 சதவிகிதம் வரை ஏற்படும் இழப்பிற்கு ஏற்றவாறு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

8—

இலவச தேனீ பெட்டிகள்

வினா எண் 2443—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விவசாயிகளுக்கு தேனீ வளர்ப்பிற்கு இலவச தேனீ பெட்டிகளை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தேனீ குடும்பங்களுடன்கூடிய தேனீ பெட்டிகள் 40% மானியத்தில் ஒரு பெட்டிக்கு ரூ.1,600/– வீதம் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் (NHM) மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

சேலம் மாவட்ட விவசாயிகளுக்கு 2021–2022 ஆம் ஆண்டில் 800 எண்கள் தேனீ குடும்பங்களுடன்கூடிய தேனீ பெட்டிகள் ரூ.12.80 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்பட்டுள்ளன.

[2023 ஜனவரி 11

9—

பயிர் காப்பீட்டுத் தொகை

வினா எண் 3592—திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த ஆண்டு (2020) சம்பா, தாளடி, பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2020–2021 ஆம் ஆண்டில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் காப்பீடு செய்யப்பட்ட சம்பா மற்றும் தாளடி பயிருக்கு திட்ட விதிமுறைகளின்படி ரூ.1,650.76 கோடி இழப்பீட்டுத் தொகையாக 6.18 இலட்சம் தகுதி வாய்ந்த விவசாயிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் திருவாரூர் மாவட்டத்தைச் சார்ந்த 1.17 இலட்சம் தகுதி வாய்ந்த விவசாயிகளுக்கு ரூ.314.69 கோடி ரூபாய் பயிர் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

10—

தேனீ வளர்ப்பு பயிற்சி

வினா எண் 11585—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, மகளிருக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் தேனீ வளர்ப்பு பயிற்சி பையூர் வேளாண் மையம்மூலம் அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேனீ வளர்ப்பு தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சியானது தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையம்மூலம் ஒரு நாள் பயிற்சியாக 25 நபர்களுக்கு ரூ.25,000/– செலவில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தருமபுரி மாவட்டம், அரூர் வட்டாரத்தில் தோட்டக்கலைத் துறைமூலம் 25 நபர்களுக்கு (7 பெண்கள் உட்பட) 7 நாட்கள் பயிற்சியானது தேசிய தேனீ வளர்ப்பு மற்றும் தேன் இயக்கத்தின் (NHBM) கீழ் வழங்கப்பட்டு பயன் பெற்றுள்ளனர்.

11—

பயிர் காப்பீட்டுத் திட்டம்

வினா எண் 11629—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விவசாயிகள் பயிரிடும் பயிர்களுக்கு பயிர் காப்பீட்டுத் திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், இத்திட்டத்தின்கீழ் அனைத்து விவசாயிகளும் எளிமையான முறையில் காப்பீடு பெற்று பயன்பெறும் வகையில் ஏற்பாடு செய்யவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டமானது, 2016 காரீப் பருவத்திலிருந்து தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் இத்திட்டத்தின்கீழ் பயிர் காப்பீடு செய்யும் விவசாயிகளுள் 75–85 சதவிகிதம் கடன்பெறா விவசாயிகள் ஆவர். இத்திட்டம் குறித்து அதிக அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தியதன் விளைவாக கடன்பெறா விவசாயிகள் அதிக எண்ணிக்கையில் பயிர் காப்பீடு செய்ததில், தேசிய அளவில், தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. வேளாண்மைத் துறையும், காப்பீடு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஜனவரி 11

நிறுவனமும் இணைந்து பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை அறிவிக்கை செய்யப்படும் கிராமங்களில் மேற்கொண்டு வருகின்றன. குறிப்பாக துண்டுபிரசுரம் விநியோகம், செய்தித் தாளில் விளம்பரம், வேன் விளம்பரம் மற்றும் இல்லம்தோறும் சென்று இத்திட்டத்தின் பயன்பாட்டினை எடுத்துரைத்தல் போன்ற செயல்பாடுகள்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், அனைத்து விவசாயிகளும் எளிமையான முறையில் காப்பீடு பெற்று பயன் பெற தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலமும், பொது சேவை மையம் மூலமும் அனைத்து தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலமும், இந்திய அரசின் வலைதளம் மூலமும் காப்பீடு செய்ய மாநில அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயிர் காப்பீடு செய்தமைக்கான ஒப்புகைச் சீட்டு பொது சேவை மையம்மூலம் பதிவு செய்யும் கடன்பெறா விவசாயிகளுக்கு உடனுக்குடன் வழங்கப்படுவதோடு, கடன் பெறும் விவசாயிகளுக்கும் பயிர் காப்பீடு செய்ததற்கான பாலிசியை காப்பீட்டு நிறுவனங்கள்மூலம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

12—

நெல் அறுவடை இயந்திரம்

வினா எண் 11806—திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாண்மைத் துறையின்மூலம் விவசாயிகளுக்கு நெல் அறுவடை இயந்திரம் மானியத்தில் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ் நிலமுள்ள தனிப்பட்ட விவசாயிகளுக்கு நெல் அறுவடை இயந்திரம் உட்பட பல்வேறு வகையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் சிறு, குறு, ஆதி திராவிட, பழங்குடியின மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியம் அல்லது அரசால் நிர்ணயம்

2023 ஜனவரி 11]

செய்யப்பட்ட அதிகபட்ச மானியத் தொகை இவற்றில் எது குறைவோ, அத்தொகை மானியமாகவும், இதர விவசாயிகளுக்கு 40 சதவிகித மானியம் அல்லது அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச மானியத் தொகை இவற்றில் எது குறைவோ, அத்தொகை மானியமாகவும் வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி வழங்கப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் பங்களிப்புத் திட்டமான வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தினை தற்போதைய நிதியாண்டில் (2022–2023) செயல்படுத்திடும்பொருட்டு, ஆண்டு செயல் திட்ட கருத்துரு ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு, ஒப்பளிப்பு ஆணை எதிர்நோக்கப்படுகிறது. அவ்வாறு, நடப்பாண்டில் (2022–2023) ஒன்றிய அரசிடமிருந்து மேற்படி திட்டத்திற்கான உரிய நிதி பெறப்படும்பட்சத்தில், உரிய அரசாணை பெறப்பட்ட பின்பு, 2022–2023 ஆம் ஆண்டில் வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ் தனிப்பட்ட விவசாயிகளுக்கு நெல் அறுவடை இயந்திரம் உள்ளிட்ட இதர வேளாண் இயந்திரங்கள்/உபகரணங்கள் மானிய விலையில் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் வழங்கப்படும்.

13—

பயிர் கொள்முதல் விலை

வினா எண் 12339—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரசு வேளாண் பல்கலைக்கழகப் பண்ணைகளில் சாகுபடி செய்யப்படும் பயிர்களின் உற்பத்திச் செலவைக் கணக்கிட்டு, அதற்கு கூடுதலாக கொள்முதல் விலையை நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் பண்ணைகளில் பயிரிடப்படும் பயிர்கள் முக்கியமாக

[2023 ஜனவரி 11

மாணவர்களின் கல்வி ஆராய்ச்சி, விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி மற்றும் விதை உற்பத்தியின் நோக்கத்திற்காக மட்டுமே சாகுபடி செய்யப்படுகின்றன. இந்த சாகுபடி செலவு விவரங்கள் அரசு கொள்முதல் விலையை நிர்ணயம் செய்வதற்கு உகந்ததாக இருக்காது.

14—

நீண்டகாலத் திட்டங்கள்

வினா எண் 12346—திரு. இரா. அருள்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைத் திட்டங்களில் தற்காலிக மேம்பாட்டிற்கு பதிலாக நிரந்தர முன்னேற்றத்திற்குரிய நீண்டகாலத் திட்டங்களை வகுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முதன்மையான கொள்கை சாகுபடிப் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதாகும். அதோடுமட்டுமல்லாமல், உழவர்களின் நலனைப் பாதுகாத்து மேம்படுத்துவதும் முக்கியக் கொள்கையாகக் கருதப்படுவதால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வேளாண்மைத் துறை என்பதற்கு பதிலாக, இத்துறை வேளாண்மை–உழவர் நலத் துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

மேலும், உழவர்களின் நலன் கருதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கீழ்க்காணும் தொலைநோக்குத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:

1. நிகர சாகுபடி பரப்பை 75 சதவீதமாக உயர்த்துதல்

2. இருபோக சாகுபடி நிலங்களை அடுத்த 10 ஆண்டுகளுக்குள் 20 இலட்சம் எக்டராக உயர்த்துதல்

2023 ஜனவரி 11]

3. உணவு தானியங்கள், தேங்காய், பருத்தி, சூரியகாந்தி, கரும்பு ஆகிய பணப் பயிர்களின் ஆக்கத்திறனால் தேசிய அளவில் முதல் மூன்று இடங்களுக்குள் தமிழகத்தை இடம்பெறச் செய்ய ஏதுவாக வேளாண்மைத் திட்டங்களில் தற்காலிக மேம்பாட்டிற்கு பதிலாக நிரந்தர முன்னேற்றத்திற்கு ஏற்ற நீண்ட, குறுகிய, மத்திய மற்றும் பருவத்திற்கேற்ற தொலைநோக்குத் திட்டங்களை வேளாண்மைத் துறை வகுத்து செயல்படுத்தி வருகிறது.

4. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் மாநிலத்தில் உள்ள அனைத்து கிராம பஞ்சாயத்துகளிலும் ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படவுள்ளது. மேலும், இத்திட்டத்தால் மாநிலத்தில் உள்ள அனைத்து பஞ்சாயத்துகளும் தன்னிறைவும், ஒட்டுமொத்த வளர்ச்சியையும் எய்தச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

5. மானாவாரி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம் 2016–2017 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

6. டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கென குறுவை தொகுப்புத் திட்டம் ஆண்டுதோறும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

7. தமிழகத்தின் பாரம்பரிய நெல் வகைகளைப் பாதுகாக்கும் விதமாக தமிழகத்தில் உள்ள அரசு விதைப் பண்ணைகளில் 200 ஏக்கர் பரப்பளவில் பாரம்பரிய நெல் இரகங்களைப் பயிரிட்டு, அதிலிருந்து வரும் விதைகளை விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

8. மேலும், நெல் மற்றும் இதர பயிர்களின் சாகுபடி பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்தோடு நெல் உற்பத்தித் திட்டம், ஊட்டச்சத்து மிகுந்த சிறுதானிய இயக்கம், பயறு உற்பத்திப் பெருக்க இயக்கம், எண்ணெய்வித்து உற்பத்தி இயக்கம், கார்/குறுவை/சொர்ணவாரி பருவத்திற்கான மாற்றுப் பயிர் சாகுபடித் திட்டம், தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுவதற்கான சிறப்புத் திட்டம், ஒருங்கிணைந்த பண்ணையம், தார்பாய் வழங்குதல், விவசாயிகளுக்கு உபகரணங்கள் வழங்குதல் ஆகிய திட்டங்கள் மற்றும் மின்னணு வேளாண்மை தொழில்நுட்பங்களைப் பரவலாக்கம் செய்வது போன்ற திட்டங்களையும் வேளாண்மை–உழவர் நலத் துறை செயல்படுத்தி வருகிறது.

[2023 ஜனவரி 11

15—

உணவுப் பாதுகாப்பு

வினா எண் 12347—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளாண் பெருங்குடி மக்கள் நகரத்தை நோக்கிச் செல்வதைத் தடுத்து, தமிழக உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு உழவுத் தொழிலைப் பாதுகாக்கவும், விவசாயிகளை மேலும் ஊக்கப்படுத்தி, தேவையான மானிய உதவிகள் வழங்கி விவசாயத்தின்பால் ஈர்க்கவும், பல்வேறு சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் அடிப்படையில் மாநில வரலாற்றில் முதல் முயற்சியாக வேளாண்மைக்கென்று தனி நிதிநிலை அறிக்கை கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த நிதிநிலை அறிக்கையில், உழவுத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் இளைஞர்களைத் தொழில் முனைவோராக்கும் திட்டம் மற்றும் ஊரக இளைஞர்களுக்கான வேளாண் திறன் மேம்பாட்டுப் பயிற்சி ஆகிய திட்டங்கள் சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, இவ்வாண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், விதை மானியம், உயிர் உரங்கள் மானியம், தார்பாய் விநியோகம், வேளாண் உபகரணங்கள் விநியோகம் மற்றும் முழு மானிய மரக்கன்றுகள் விநியோகம் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வேளாண் வளர்ச்சியை ஊக்குவிக்கும் விதமாக கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம், உணவுப் பாதுகாப்போடு ஊட்டச்சத்து பாதுகாப்பையும் உறுதி செய்யும் சிறுதானிய

இயக்கம் மற்றும் பயறு பெருக்கத் திட்டம், விவசாயிகளுக்கு நீடித்த நிலையான வருமானம் தரும் ஒருங்கிணைந்த பண்ணையம், பணப் பயிரான பருத்தி உற்பத்தியை ஊக்குவிக்க நீடித்த நிலையான பருத்தி இயக்கம், எண்ணெய்வித்துகள் உற்பத்தியில் தன்னிறைவு அடையும் நோக்கத்தோடு எண்ணெய்வித்துகள் உற்பத்திப் பெருக்குத் திட்டம், இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் இழப்புகளிலிருந்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க பயிர்க் காப்பீடு திட்டம் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், ஆதி திராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் உயர் மதிப்பு வேளாண் திட்டங்களில் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு கூடுதலாக 20 சதவீத மானியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டங்கள் பற்றி உழவர்களுக்குத் தெரியப்படுத்தும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்கண்ட திட்டங்கள் விவசாயிகளின் வருமானத்தையும், வாழ்வாதாரத்தையும் மேம்படுத்த உதவுவதுடன், உற்பத்தியில் தன்னிறைவு அடையவும் உதவுகிறது. இதன்மூலம் விவசாயிகள் சாகுபடியில் ஈடுபடுவது ஊக்கப்படுத்தப்படுகிறது.

16—

சலுகையில் வேளாண் இயந்திரங்கள்

வினா எண் 12350—திரு. இரா. அருள்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மனித உழைப்பைக் குறைக்கும் வேளாண் பண்ணை இயந்திரங்களை 50% கட்டணச் சலுகையில் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளாண்மைப் பொறியியல் துறையில் நில மேம்பாட்டிற்கும் சிறு பாசன வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கும் தேவையான பல்வேறு இயந்திரங்கள் மற்றும் கருவிகள் தேவைப்படும் விவசாயிகளுக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த வாடகையில் வழங்கப்பட்டு வருகிறது.

தனியாரால் வசூலிக்கப்படும் வாடகையைக் காட்டிலும் அரசால் குறைவாகவே விவசாயிகளுக்கு இத்துறையால் வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

உழவுப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற டிராக்டர்கள் தனியாரால் மணிக்கு ரூ.900/–க்கும் அதிகமாக வாடகையாக வசூலிக்கப்படுகிறது. ஆனால், வேளாண்மைப் பொறியியல் துறையில் டிராக்டர்கள் இணைப்புக் கருவிகளுடன் மணிக்கு ரூ.400/–க்கு விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்படுகிறது. இது தனியார் வாடகையுடன் ஒப்பிடுகையில் 55 சதவீதம் குறைவாகும். இவ்வாறு வேளாண்மைப் பொறியியல் துறையால் விவசாயிகளுக்குப் பயன்படுகின்ற நவீன மற்றும் புதிய வேளாண் இயந்திரங்கள் தனியார் வாடகையை ஒப்பிடுகையில் குறைந்த வாடகை அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. தற்சமயம் வேளாண்மைப் பொறியியல் துறையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள இ–வாடகை ஆன்லைன் செயலி மூலமாகவே தேவைப்படுகின்ற வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் வீட்டிலிருந்தபடியே முன்பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம்.

விவசாயிகளிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் திட்டம் தொடர்ந்து செயலாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

2023 ஜனவரி 11]

17—

செம்மை நெல் சாகுபடி முறை

வினா எண் 12444—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செம்மை நெல் சாகுபடி முறையினை அனைத்து விவசாயிகளிடத்திலும் செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் செம்மை நெல் சாகுபடியானது 2006 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டு, தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு, விவசாயிகளிடையே போதுமான அளவிற்கு பரவலாக்கம் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் நெல், கரும்பு போன்ற அதிக நீர் தேவை பயிர்களின் சாகுபடி பரப்பினைக் குறைத்து, குறைந்த நீர் தேவை பயிர்களை ஊக்குவிக்கும்பொருட்டு சிறுதானிய பயிர்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள், பருத்தி போன்ற குறைந்த நீர் தேவை பயிர்களின் சாகுபடி பரப்பினை அதிகரிக்கும் நோக்கத்தில் பல திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

18—

தென்னை தொழில்நுட்பப் பூங்கா அமைத்தல்

வினா எண் 12457—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பொள்ளாச்சி பகுதியினை சிறப்பு வேளாண் பொருளாதார மண்டலமாக அறிவித்து தென்னை தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

பொள்ளாச்சி பகுதியினை சிறப்பு வேளாண் பொருளாதார மண்டலமாக அறிவித்து தென்னை தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

19—

சிறப்பு வேளாண் மண்டலம்

வினா எண் 12461—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விழுப்புரம் மாவட்டத்தில் நெல், கரும்பு விளைவதால் சிறப்பு வேளாண் மண்டலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டத்தைச் சிறப்பு வேளாண் மண்டலமாக அறிவிக்கக் கோரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

20—

விவசாயிகளுக்கு செயல் திட்டங்கள்

வினா எண் 12467—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் துவரை, உளுந்து, பாசிப்பயறு ஆகியவற்றை அதிகளவில் பயிரிட விவசாயிகளுக்கு உரிய செயல் திட்டங்களை வழங்க அரசு முன்வருமா?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் துவரை, உளுந்து, பாசிப்பயறு ஆகியவற்றை அதிகளவில் பயிரிட கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

தமிழகத்தில் பயறு வகைப் பயிர்கள் இயல்பாக 8.17 இலட்சம் எக்டரில் பயிரிடப்படுகின்றன. பயறு வகைப் பயிர்களின் பரப்பை அதிகரிக்கும் நோக்கில் நடப்பு 2022–2023 ஆம் ஆண்டில் 9.48 இலட்சம் எக்டரில் துவரை, உளுந்து, பாசிப்பயறு போன்ற பயறு வகைப் பயிர்களைப் பயிரிட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக, துவரை பயிரின் பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. துவரையின் இயல்பான பரப்பான 47,300 எக்டரிலிருந்து 60,000 எக்டராக உயர்த்தி இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்மூலம் உற்பத்தி இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட உள்ளன.

மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் 2022–2023 ஆம் ஆண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கையில் 'பயறுவகை உற்பத்தியில் தன்னிறைவை அடையும்பொருட்டு, துவரை உற்பத்தியை அதிகரிக்க கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை மற்றும் சேலம் மாவட்டங்களைக் கொண்ட துவரை சாகுபடி சிறப்பு மண்டலம் அமைக்கப்படும்' என அறிவித்ததைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் குறிப்பாக, வடமேற்கு மாவட்டங்களில் அதிக அளவு துவரை சாகுபடி செய்யப்பட்டு வருவதால், இப்பகுதிக்கு அதிக முக்கியத்துவம் அளித்து, துவரை மேம்பாட்டிற்காக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், 2022–2023 ஆம் ஆண்டில் வேளாண்மை–உழவர் நலத் துறை மானியக் கோரிக்கை 5–ல் விளை நிலங்களில் மண் வளத்தினை அதிகரிக்கவும், விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம்

[2023 ஜனவரி 11

கிடைத்திடவும் மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களால் நெல் தரிசில் பயறு சாகுபடித் திட்டம் 10 இலட்சம் எக்டரில் ரூ.40 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என அறிவித்ததைத் தொடர்ந்து, இத்திட்டத்தினைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்ட நடவடிக்கைகள்மூலம் நடப்பாண்டில் பயறு வகைப் பயிர்களின் இயல்பான பரப்பைவிட கூடுதல் பரப்பில் பயறு சாகுபடி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

21—

வழிகாட்டுதல்கள் வழங்குதல்

வினா எண் 12473—திரு. இரா. அருள்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் இஸ்ரேல் நாட்டில் உள்ளதுபோல பசுமைக் குடில்கள் தொழில்நுட்பம்மூலம் பழங்கள் மற்றும் காய்கறிகளை உற்பத்தி செய்ய வழிகாட்டுதல்கள் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

பசுமைக் குடில்கள் தொழில்நுட்பம் குறித்த வழிகாட்டுதல்கள் தோட்டக்கலைத் துறை அலுவலர்களால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தோட்டக்கலைத் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்மூலம் (NHM) ஸ்ட்ராபெரி போன்ற பழங்கள் மற்றும் உயர் விலை காய்கறிகளான தக்காளி, வெள்ளரிக்காய், குடைமிளகாய் போன்ற தோட்டக்கலைப் பயிர்களை உயர் தொழில்நுட்ப பசுமைக் குடில்களில் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு பயனாளிக்கு 50 சதவீத மானியத்தில் சதுர மீட்டருக்கு ரூ.70/– வீதம் அதிகபட்சமாக 4,000 ச.மீ. வரை மானியம் வழங்கப்படுகிறது.

2023 ஜனவரி 11]

22—

நிருவாகப் பயிற்சி

வினா எண் 12478—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விவசாயிகளுக்கு நவீன வேளாண்மை மற்றும் பண்ணைத் தொழிலில் உரிய நிருவாகப் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

அட்மா திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணையம், ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மைமூலம் நெல், சிறுதானியங்கள், எண்ணெய்வித்துப் பயிர் உற்பத்திப் பெருக்கம், விதை நேர்த்தி, நுண்ணீர் பாசனம், உயிர் உரம் உற்பத்தி, மானாவாரி சாகுபடி, பாரம்பரிய நெல் சாகுபடி, இயற்கை வேளாண்மை (நீராபானம் உற்பத்தி மற்றும் மதிப்புக் கூட்டுதல்), ஊடுபயிர் சாகுபடி, பல்லடுக்கு பயிர் சாகுபடி, காய்கறிகளில் அடர்நடவு, மின்னணு ஏல முறையில் விளைபொருள் விற்பனை போன்ற பல்வேறு வகையான வேளாண்மை தொடர்பான தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மேலும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (Tamil Nadu Skill Development Corporation) *மூலமாக வேளாண்மை சார்ந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, மேற்கூறிய நவீன வேளாண்மை மற்றும் பண்ணைத் தொழில் தொடர்பான பயிற்சிகளில் கலந்துகொண்டு விவசாயிகள் பயன்பெறலாம் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.*

23—

மண்வள நிலை தகவல்கள்

வினா எண் 12480—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[*2023 ஜனவரி 11*

தமிழக நிலங்களின் மண்வள நிலை குறித்த வரைபடம் தயாரித்து விவசாயிகளுக்கு பயனுள்ள விவசாய தகவல்களை அளிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் தற்போது 32 மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் இயங்கி வருகின்றன.

மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் முறையே ஆண்டிற்கு 4.29 இலட்சம் மற்றும் 1.44 இலட்சம் மண் மாதிரிகளை பரிசோதனை செய்யும் ஆய்வுத் திறன் கொண்டதாகும்.

வேளாண் துறை களப் பணியாளர்கள் விவசாயிகளின் நிலங்களுக்குச் சென்று மண் மாதிரிகள் சேகரிப்பது மட்டுமல்லாமல், நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களை கிராமங்களுக்குக் கொண்டு சென்றும், மண் மாதிரிகளைப் பெற்று மண் பரிசோதனை செய்யப்பட்டு, மண் வள அட்டைகள் வழங்கப்படுகின்றன. பாசன நீர் மாதிரிகளும் பரிசோதனை செய்யப்பட்டு, அதன் தரம் குறித்து விவரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

2021–2022 ஆம் ஆண்டில் மண் ஆய்வுக்கூடங்களில் 2,89,274 மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, மண் வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 49,050 பாசன நீர் மாதிரிகளும் ஆய்வு செய்யப்பட்டு, பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையின் வேளாண் நிதிநிலை அறிக்கையில் (2022–2023) மண் வளம் எனும் இணைய முகப்பு தமிழில் உருவாக்கப்பட்டு, மண் வள அட்டையின் முடிவுகள் அடிப்படையில் புல எண் வாரியாக உரப் பரிந்துரையும், பயிர் பரிந்துரையும் வழங்கப்படும் என அறிவித்ததற்கு இணங்க, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பணிகள் முடிந்தவுடன் மேற்கூறிய இணைய முகப்பில் பதிவேற்றம் செய்யப்படும்.

2023 ஜனவரி 11]

24—

வேளாண்மையைத் தொழில் வடிவமாக்குதல்

வினா எண் 12484—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேளாண்மையை இயந்திரமயமாக்கல்மூலம் அதிக விளைச்சல், சிறந்த தரம், உரிய விலை ஆகியவற்றுக்கு வழி கோரி வேளாண்மையைத் தொழில் வடிவமாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் அதிக ஆற்றல் கொண்ட விவசாய இயந்திரங்கள் மற்றும் கருவிகள்மூலம் பண்ணை சக்தியின் பயன்பாட்டை அதிகரிக்கும்பொருட்டு, தனிப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்கவும், வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் கொண்ட வாடகை மையங்கள் அமைக்கவும் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் பங்களிப்பாக 60 சதவிகிதம் மற்றும் தமிழ்நாடு மாநில அரசின் பங்களிப்பாக 40 சதவிகிதம் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் 2002 முதல் 2022 வரை மொத்தம் 1,55,244 தனிப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. சிறு, குறு, ஆதி திராவிட, பழங்குடியின மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியமும், இதர விவசாயிகளுக்கு 40 சதவிகித மானியமும் வழங்கப்பட்டு வருகிறது.

இளைஞர்களை விவசாயத் தொழிலில் ஈர்த்திடும் வகையில் வட்டார, கிராம அளவிலான மற்றும் கரும்பு சாகுபடிக்கான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்களை நிறுவுவதற்கு கிராமப்புற தொழில் முனைவோர், பதிவு செய்யப்பட்ட விவசாய சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. 2021–2022 வரை 1,923 வட்டார அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் 40 சதவிகித

மானியத்திலும், 1,806 கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் 80 சதவிகித மானியத்திலும் மற்றும் 46 கரும்பு சாகுபடிக்கான வாடகை மையங்கள் 40 சதவிகித மானியத்திலும் நிறுவப்பட்டுள்ளன. வேளாண்மை இயந்திரமயமாக்கல்மூலம் அதிக விளைச்சல், சிறந்த தரம், உரிய விலை ஆகியவற்றுக்கு வழிகோலுவதுடன், வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு இயந்திரமயமாக்குதல் ஊக்குவிக்கப்படுகிறது.

தொழிலாளர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்திட மானிய உதவி வழங்குதல்மூலம் வேளாண் இயந்திரமயமாக்கலின் அதிகரிப்பால் வேளாண் இயந்திரங்களைப் பழுதுநீக்கும் பராமரிப்பு மையங்களின் தேவையும் அவசியமாகிறது. ஆதலால், தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் பழுதுநீக்கும் பராமரிப்பு மையங்கள் அமைக்கவும் திட்டம் வகுத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. பட்டம் அல்லது பட்டயம் முடித்த வேலைவாய்ப்பற்ற கிராமப்புற இளைஞர்களுக்கு முன்னுரிமை அளித்து விவசாயிகளின் விளை நிலங்களுக்கு அருகிலேயே வேளாண் இயந்திரங்களைப் பழுது நீக்கி பராமரித்திட ஏதுவாக ரூ.8 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும் பராமரிப்பு மையங்களுக்கு 50 சதவிகித மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.4 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

25—

உபகரணங்கள் வழங்குதல்

வினா எண் 12529—திரு. இரா. அருள்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோடைக்காலத்தில் நீர் பற்றாக்குறையைப் போக்க நிலக்கடலை, பயறு வகைகள், சோளம் போன்ற பயிர்களுக்கு தெளிப்பு முறை பாசன முறைகளை விவசாயிகளுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் நிலக்கடலை மற்றும் பயறு வகைகள் ஆகியவற்றிற்குத் தெளிப்பு நீர் மற்றும் மழை நீர் தூவான் பாசன முறைகளிலும் மற்றும் சோளம் போன்ற பயிர்களுக்குத் தெளிப்பு நீர் பாசன முறையிலும் நீர் பாய்ச்சுவதற்கான நுண்ணீர்ப் பாசன உபகரணங்கள் விதிமுறைகளுக்குட்பட்டு தகுதியுள்ள விவசாயிகளுக்கு ஆண்டு முழுவதும் வழங்கப்பட்டு வருகின்றன.

26—

வேளாண் முதலீடு

வினா எண் 12562—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேளாண் பொருளாதாரத்தை மேம்படுத்தி, தேவையான முதலீடு மற்றும் அரசின் கண்காணிப்பையும் உறுதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

வேளாண் பொருளாதாரத்தை மேம்படுத்தி, தேவையான முதலீடு மற்றும் அரசின் கண்காணிப்பையும் உறுதி செய்யும் வகையில் அனைத்துத் திட்டங்களும் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வேளாண் திட்டங்கள் அனைத்தும் மாவட்ட அளவில் வேளாண்மை இணை இயக்குநர் அளவிலும், மாநில அளவில் மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் மற்றும் வேளாண்மை இயக்குநர் ஆகியோரால் ARS Portal *மற்றும் காணொலிமூலம் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு, தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டங்களை*

[2023 ஜனவரி 11

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கண்காணிக்கும் வகையில் பிரத்யேக மென்பொருள் தளம் அமைக்கப்பட்டு வருகிறது.

27—

மரம் மற்றும் பழக் கன்றுகள் மானிய விலையில் வழங்குதல்

வினா எண் 12629—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை வேளாண்மைத் துறை அலுவலகம் சார்பில் மரம் மற்றும் பழக் கன்றுகள் மானிய விலையில் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதியில் தோட்டக்கலைத் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் (KAVIADP), *தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டம்* (NHM), *தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்* (NADP) *மற்றும் மானாவாரி பகுதி மேம்பாட்டுத் திட்டம்* (RAD) *போன்ற திட்டங்களின் வாயிலாக பழக் கன்றுகள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.*

2021–2022 ஆம் ஆண்டு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (KAVIADP) *தேர்ந்தெடுக்கப்பட்ட 8 கிராம பஞ்சாயத்துகளில், 8 வகையான பழச் செடிகள் மற்றும் மரக்கன்றுகள் அடங்கிய தொகுப்பு 100 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டன.*

2022–2023 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் (NADP) *வாயிலாக, மாற்றுப்பயிர் சாகுபடித் திட்டம், பழப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம் போன்ற இனங்களின்கீழ் மானிய விலையில் பழச் செடிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன.*

2023 ஜனவரி 11]

மானாவாரி பகுதி மேம்பாடு திட்டத்தின்கீழ் (RAD) தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களில் உள்ள விவசாயிகளுக்கு பழச் செடிகள் மானிய விலையில் வழங்கப்படவுள்ளன.

மேலும், தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ் (NHM) அதிகபட்சமாக ஒரு பயனாளிக்கு 4 எக்டருக்கு பழக் கன்றுகள் மானியத்தில் வழங்கப்படுகின்றன.

28—

ஏலக்கி வாழை இனங்கள் பயிரிடுதல்

வினா எண் 15381—திரு. இரா. அருள்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் பகுதியில் சுவை மிக்க ஏலக்கி வகை வாழைப்பழங்களைப் பயிரிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

சேலம் பகுதியில் ஏலக்கி வகை வாழை இனங்கள் பயிரிடுவதற்கு கீழ்க்காணும் திட்டங்களின் வாயிலாக மானியம் வழங்கப்பட்டு வருகிறது:

(i) தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) திட்டத்தின் வாயிலாக திசு வாழை இனத்தின்கீழ், ஏலக்கி வகை வாழை பயிரிடுவதற்கு ஒரு எக்டருக்கு 40% மானியமாக ரூ.37,500/– வழங்கப்படுகிறது. ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 4 எக்டர் வரை வாழை பயிரிடுவதற்கு மானியம் வழங்கப்படுகிறது.

(ii) மேலும், மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (SHDS) ஊடுபயிர் சாகுபடி இனத்தின்கீழ் தென்னையில் ஊடுபயிராக வாழை பயிரிடுவதற்கு ஏக்கருக்கு ரூ.10,500/–ம், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (NADP) மாற்றுப் பயிர் சாகுபடி இனத்தின்கீழ் நெல் அறுவடைக்குப்பின் வாழை (கன்றுகள்) சாகுபடி செய்வதை ஊக்குவிப்பதற்காக எக்டர் ஒன்றுக்கு ரூ.26,250/–ம் மானியம் வழங்குவதற்கு நடப்பாண்டில் (2022–2023) திட்டமிடப்பட்டுள்ளது.

[2023 ஜனவரி 11

29—

மிளகாய் சாகுபடியை மேம்படுத்துதல்

வினா எண் 15383—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் அதிக காரத் தன்மையுள்ள மிளகாய் விதைகளை வழங்கி, மிளகாய் சாகுபடியை மேம்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டம் (NHM) *சுவை தாளிதப் பயிர்கள் இனத்தின்கீழ் மிளகாய் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு எக்டருக்கு 40% மானியத்தில் ரூ.12,000/– வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 4 எக்டர் வரை மிளகாய் குழித்தட்டு நாற்றுகள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.*

மேலும், தேசிய தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (NADP) *உயர் விளைச்சல் தரும் மிளகாய் இரகங்களின் சாகுபடியை ஊக்குவிக்க எக்டருக்கு ரூ.20,000/– மதிப்பில் விதைகளாகவோ அல்லது குழித்தட்டு நாற்றுகளாகவோ மானியமாக வழங்கப்படுகிறது மற்றும் மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ்* (SHDS) *சுவை தாளிதப் பயிர்கள் பரப்பு விரிவாக்க இனத்தில் மிளகாய் சாகுபடிப் பரப்பினை அதிகரிக்க எக்டருக்கு 12,000 எண்கள் குழித்தட்டு நாற்றுகள் 40% மானியத்தில் நடப்பாண்டில் வழங்கப்பட்டு வருகிறது.*

30—

காய்கறி சந்தை

வினா எண் 17618—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

ஊட்டி காய்கறி சந்தையைத் திறந்து விவசாயிகளின் காய்கறிகளை விற்பனை செய்ய உரிய வழிகாட்டுதல்களை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

ஊட்டி நகராட்சிக்குச் சொந்தமான தினசரி சந்தையில் காய்கறிகள் விற்பனை செய்ய தனியாக கடைகள் உள்ள நிலையில், காய்கறி சந்தை என்று தனியாக ஏதும் அமைக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை. மேலும், ஊட்டி நகராட்சியில் காய்கறி சந்தை அமைக்க நகராட்சியில் போதிய இடவசதி இல்லை.

31—

சொட்டு நீர் பாசனம் அமைக்க மானியம்

வினா எண் 18084—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பட்டு வளர்ப்பில் மல்பரி செடி வளர்க்க சொட்டு நீர் பாசனம் அமைக்க மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மல்பரி செடி சாகுபடி செய்வதற்காக பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசனத் திட்டத்தின்கீழ் (PMKSY) சொட்டு நீர்ப் பாசன அமைப்பானது 1.2 மீ X 0.6 மீ இடைவெளியில் அமைப்பதற்கு அதிகபட்சமாக எக்டருக்கு ரூ.1,35,855/– வரை மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

[2023 ஜனவரி 11

32—

வேளாண் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவதைத் தடுத்தல்

வினா எண் 18263—திரு. இரா. அருள்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தின் வேளாண் பொருட்களின் ஏற்றுமதி அதிகரித்தாலும் வேளாண் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவதைத் தடுக்க உரிய வழிவகைகளைச் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

விவசாயக் கூலித் தொழிலாளர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களால் 2022–2023 ஆம் ஆண்டுக்கான வேளாண் நிதிநிலை அறிக்கையில் விவசாயக் கூலித் தொழிலாளர்கள் தங்களது விவரங்களை நேரடியாகவோ, முகவர் மூலமாகவோ, மாவட்டம், வட்டம், கிராமம் வாரியாக திறன் ரீதியாக புதிய செயலியில் பதிவு செய்துகொள்ள வழிவகை செய்யப்படும். இதன்மூலம் விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு வேளாண் சேவை நிறுவனங்கள்மூலம் போதிய வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதோடு, விவசாயப் பணிகளை உரிய பருவத்தில் மேற்கொள்ளவும் இச்செயலி பயன்படும் என்று அறிவித்துள்ளதை செயல்படுத்திடும் விதமாக, அரசாணை (டி) எண் 142, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, நாள் 31–5–2022–ல் வெளியிடப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கான தனிச்செயலி உருவாக்கப்பட்டு வருகிறது.

33—

நெல் விதைகளை முழு மானியத்தில் வழங்குதல்

வினா எண் 18284—திரு. இரா. அருள்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2023 ஜனவரி 11]

நெல் உற்பத்தியை அதிகரிக்க, தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தில் புதுரக நெல் விதைகள் ஒரு கிலோ மானியத்தில் 20 ரூபாய் விதை கிராம திட்டத்தில் 17 ரூபாய்க்கு விற்பதை நிறுத்தி, முழு மானியத்தில் நெல் விதைகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் மற்றும் விதை கிராம திட்டம் ஆகியவை ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி பங்களிப்புடன் (60:40) செயல்படுத்தப்படும் திட்டங்கள் ஆகும்.

விவசாயிகள் தரமான சான்று விதைகளை பயன்படுத்தி நெல் உற்பத்தியினை அதிகரித்திடும்பொருட்டு ஒன்றிய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின் (Operational Guidelines)*படி தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் புதுரக நெல் விதைகளுக்கு கிலோ ஒன்றிற்கு ரூ.20/– மானியமும், விதை கிராம திட்டத்தில் கிலோ ஒன்றிற்கு ரூ.17.50 மானியமாகவும் வழங்கப்படுகிறது.*

34—

நச்சுத்தன்மை இல்லாத காய்கறிகள் பயிரிடுதல்

வினா எண் 20995—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழக விவசாயிகள் நச்சுத்தன்மை இல்லாத காய்கறிகள் பயிரிடுவதற்கும் இவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் சிறப்பு திட்டங்களை வகுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக நச்சுத்தன்மை இல்லாத காய்கறிகள் பயிரிடுவதற்கு மானியமாக எக்டருக்கு ரூ.5,000/– வீதம் ஒவ்வோர் ஆண்டும்

மூன்று ஆண்டுகளுக்கு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. மேலும், அவ்விவசாயிகள் APEDA (Agricultural and Processed Food Products Export Development Authority)-ன் மூலமாக ஏற்றுமதி செய்ய ஊக்குவிக்கப்படுகிறது.

35—

விதை வழங்குதல்

வினா எண் 21442—திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விதை கிராம திட்டத்தின்கீழ் ஒரு ஏக்கருக்கு ஒரு விவசாயிக்கு நெல் 20 கிலோ என்பதனை மாற்றி ஒரு ஹெக்டேருக்கு ஒரு விவசாயிக்கு 50 கிலோ கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் விதை கிராம திட்டமானது ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி பங்களிப்புடன் (60 சதவீதம் ஒன்றிய அரசு, 40 சதவீதம் மாநில அரசு) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறையின்படி ஒரு ஏக்கருக்கு தேவையான விதைகள் மட்டும் மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இதன் அடிப்படையில், நெல் சாகுபடி செய்யும் ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கருக்கு தேவையான விதையான 20 கிலோ விதை மானிய விலையில் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் விவசாயியின் நிலத்தின் அளவிற்கேற்ப விதை மானியம் வழங்கப்படுகிறது.

36—

மக்காச்சோள விலை வீழ்ச்சி

வினா எண் 21694—திரு. இரா. அருள்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2023 ஜனவரி 11]

தமிழகத்தில் கோழி தீவனத்திற்காக உற்பத்தி செய்யப்படும் மக்காச்சோளத்தின் விலை வீழ்ச்சியை தடுத்து இலாபகரமான வேளாண்மைக்கு வழிவகை செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் 27 விற்பனைக் குழுக்களின்கீழ், 284 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் இயங்கி வருகின்றன. மக்காச்சோள விலை வீழ்ச்சி காலங்களில் விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விளைப்பொருட்களை இருப்பு வைத்து, நல்ல விலை கிடைக்கும் காலங்களில் விளைப்பொருட்களை விற்று பயன்பெறலாம். மேலும், விளைப்பொருட்களை கிடங்குகளில் இருப்பு வைத்து பொருளீட்டுக் கடன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

37—

மானியம்

வினா எண் 22869—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, வட்டுவன ஊராட்சி பகுதிகளில் பருத்தி பயிர் செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 2021–2022 ஆம் ஆண்டில் பருத்தி உற்பத்தியை உயர்த்த ரூ.11 கோடி மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் என்ற புதிய திட்டமும், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப்பயிர்கள்

திட்டத்தின்கீழ் ரூ.2.83 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் ஆக மொத்தம் ரூ.13.83 கோடி நிதி ஒதுக்கீட்டில் பருத்திக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

பெண்ணாகரம் தொகுதி தர்மபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. 2021–2022 ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் மற்றும் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்– வணிகப் பயிர்கள்–திட்டங்களின்கீழ் ரூ.40.26 இலட்சம் நிதி செலவில், பருத்தி சாகுபடிக்கு தேவையான நுண்ணூட்ட உரங்கள், திரவ உயிர் உரங்கள், மெக்னீசியம் சல்பேட் உரங்கள், மானாவாரி பருத்தியில் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்க பார் சால் நடவு மற்றும் அங்கக உரங்கள், தண்டு கூண் வண்டை கட்டுப்படுத்த வேப்பம் புண்ணாக்கு, இயந்திர களையெடுப்பிற்கு விசை களை எடுக்கும் கருவிகள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புக்கான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 2,733 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். பெண்ணாகரம் தொகுதிக்கு நீடித்த நிலையான பருத்தி இயக்கத்தின்கீழ் ரூ.5.18 இலட்சம் நிதி செலவில் பருத்தி சாகுபடிக்கு தேவையான முக்கிய இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு 402 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும், பெண்ணாகரம் தொகுதியில் 2020–2021 ஆம் ஆண்டில் 107 எக்டர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. மேற்கண்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தியதால் 2021–2022 ஆம் ஆண்டில் பெண்ணாகரம் தொகுதியில் பருத்தி சாகுபடி பரப்பு 510 எக்டராக உயர்ந்தது. 2020–2021 ஆம் ஆண்டில் 231 பொதிகளாக இருந்த உற்பத்தி 2021–2022 ஆம் ஆண்டில் 1,030 பொதிகளாக சுமார் 345% உயர்ந்துள்ளது.

எனவே, பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் பருத்தியை சாகுபடி பயிர் செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்கான வினா எழவில்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

38—

மானியம்

வினா எண் 22884—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 ஜனவரி 11]

(அ) பெண்ணாகரம் தொகுதி, செங்கனூர் ஊராட்சி பகுதியில் பயிர் செய்யப்படும் பருத்தி பயிருக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 2021–2022 ஆம் ஆண்டில் பருத்தி உற்பத்தியை உயர்த்த ரூ.11 கோடி மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் என்ற புதிய திட்டமும், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப் பயிர்கள் திட்டத்தின்கீழ் ரூ.2.83 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் ஆக மொத்தம் ரூ.13.83 கோடி நிதி ஒதுக்கீட்டில் பருத்திக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

பெண்ணாகரம் தொகுதி தர்மபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. 2021–2022 ஆம் ஆண்டில், இம்மாவட்டத்தில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் மற்றும் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்– வணிகப் பயிர்கள்–திட்டங்களின்கீழ் ரூ.40.26 இலட்சம் நிதி செலவில், பருத்தி சாகுபடிக்கு தேவையான நுண்ணூட்ட உரங்கள், திரவ உயிர் உரங்கள், மெக்னீசியம் சல்பேட் உரங்கள், மானாவாரி பருத்தியில் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்க பார் சால் நடவு மற்றும் அங்கக உரங்கள், தண்டு கூண் வண்டை கட்டுப்படுத்த வேப்பம் புண்ணாக்கு, இயந்திர களையெடுப்பிற்கு விசை களை எடுக்கும் கருவிகள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புக்கான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 2,733 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். பெண்ணாகரம் தொகுதிக்கு நீடித்த நிலையான பருத்தி இயக்கத்தின்கீழ் ரூ.5.18 இலட்சம் நிதி செலவில் பருத்தி சாகுபடிக்கு தேவையான முக்கிய இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 402 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும் பெண்ணாகரம் தொகுதியில் 2020–2021 ஆம் ஆண்டில் 107 எக்டர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. மேற்கண்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தியதால் 2021–2022

[2023 ஜனவரி 11

ஆம் ஆண்டில் பெண்ணாகரம் தொகுதியில் பருத்தி சாகுபடி பரப்பு 510 எக்டராக உயர்ந்தது. 2020–2021 ஆம் ஆண்டில் 231 பொதிகளாக இருந்த உற்பத்தி 2021–2022 ஆம் ஆண்டில் 1,030 பொதிகளாக சுமார் 345% உயர்ந்துள்ளது.

எனவே, பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் பருத்தியை சாகுபடி பயிர் செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்கான வினா எழவில்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

39—

மானியம்

வினா எண் 22894—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, காளப்பனஅள்ளி ஊராட்சி, கீரியூர் பகுதியில் பருத்தி பயிர் செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 2021–2022 ஆம் ஆண்டில் பருத்தி உற்பத்தியை உயர்த்த ரூ.11 கோடி மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் என்ற புதிய திட்டமும், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப் பயிர்கள் திட்டத்தின்கீழ் ரூ.2.83 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் ஆக மொத்தம் ரூ.13.83 கோடி நிதி ஒதுக்கீட்டில் பருத்திக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

பெண்ணாகரம் தொகுதி தர்மபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. 2021–2022 ஆம் ஆண்டில், இம்மாவட்டத்தில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் மற்றும் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப் பயிர்கள்–திட்டங்களின்கீழ்

2023 ஜனவரி 11]

ரூ.40.26 இலட்சம் நிதி செலவில், பருத்தி சாகுபடிக்கு தேவையான நுண்ணூட்ட உரங்கள், திரவ உயிர் உரங்கள், மெக்னீசியம் சல்பேட் உரங்கள், மானாவாரி பருத்தியில் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்க பார் சால் நடவு மற்றும் அங்கக உரங்கள், தண்டு கூண் வண்டை கட்டுப்படுத்த வேப்பம் புண்ணாக்கு, இயந்திர களையெடுப்பிற்கு விசை களை எடுக்கும் கருவிகள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புக்கான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 2,733 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். பெண்ணாகரம் தொகுதிக்கு நீடித்த நிலையான பருத்தி இயக்கத்தின்கீழ் ரூ.5.18 இலட்சம் நிதி செலவில் பருத்தி சாகுபடிக்கு தேவையான முக்கிய இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 402 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும், பெண்ணாகரம் தொகுதியில் 2020–2021 ஆம் ஆண்டில் 107 எக்டர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. மேற்கண்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தியதால் 2021–2022 ஆம் ஆண்டில் பெண்ணாகரம் தொகுதியில் பருத்தி சாகுபடி பரப்பு 510 எக்டராக உயர்ந்தது. 2020–2021 ஆம் ஆண்டில் 231 பொதிகளாக இருந்த உற்பத்தி 2021–2022 ஆம் ஆண்டில் 1,030 பொதிகளாக 345% உயர்ந்துள்ளது.

எனவே, பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் பருத்தியை சாகுபடி பயிர் செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்கான வினா எழவில்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

40—

மானியம்

வினா எண் 22895—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பூகானஅள்ளி ஊராட்சியில் மாஞ்செடி பயிர் செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, பூகானஅள்ளி ஊராட்சியில் தோட்டக்கலைத் துறையால் செயல்படுத்தப்படும் திட்டமான தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் (NHM) கீழ் பரப்பு விரிவாக்க இனத்தின் வாயிலாக கத்தரி குழித்தட்டு நாற்றுகள் 5 பயனாளிகளுக்கும், தக்காளி குழித்தட்டு நாற்றுகள் 3 பயனாளிகளுக்கும் மற்றும் செண்டுமல்லி நாற்றுகள் 1 விவசாயிக்கும் 2021–2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

2. மேலும் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் (IHDS) மற்றும் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் (NADP) கீழ் இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் விதமாக இயற்கை முறையில் சாகுபடி செய்த 15 விவசாயிகளுக்கு 2021–2022 ஆம் ஆண்டில் ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டிலும் (2022–2023) மேற்காணும் திட்டங்களின் மூலமாக மானியம் வழங்கப்படும்.

3. பூகான அள்ளி ஊராட்சியில் மாஞ்செடி பயிர் செய்யும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பதிவு செய்யும்பட்சத்தில் முன்னுரிமை அடிப்படையில் மானியம் வழங்கப்படும்.

41—

மானியம்

வினா எண் 22906—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஅள்ளி ஊராட்சி, ஜெல்மாரம்பட்டி கிராமத்தில் பருத்தி பயிர் செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 2021–2022 ஆம் ஆண்டில் பருத்தி உற்பத்தியை உயர்த்த ரூ.11 கோடி மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் என்ற புதிய திட்டமும், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப்பயிர்கள் திட்டத்தின்கீழ் ரூ.2.83 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் ஆக மொத்தம் ரூ.13.83 கோடி நிதி ஒதுக்கீட்டில் பருத்திக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

பெண்ணாகரம் தொகுதி தர்மபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. 2021–2022 ஆம் ஆண்டில், இம்மாவட்டத்தில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் மற்றும் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்– வணிகப் பயிர்கள்–திட்டங்களின்கீழ் ரூ.40.26 இலட்சம் நிதி செலவில், பருத்தி சாகுபடிக்கு தேவையான நுண்ணூட்ட உரங்கள், திரவ உயிர் உரங்கள், மெக்னீசியம் சல்பேட் உரங்கள், மானாவாரி பருத்தியில் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்க பார் சால் நடவு மற்றும் அங்கக உரங்கள், தண்டு கூண் வண்டை கட்டுப்படுத்த வேப்பம் புண்ணாக்கு, இயந்திர களையெடுப்பிற்கு விசை களை எடுக்கும் கருவிகள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புக்கான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 2,733 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். பெண்ணாகரம் தொகுதிக்கு நீடித்த நிலையான பருத்தி இயக்கத்தின்கீழ் ரூ.5.18 இலட்சம் நிதி செலவில் பருத்தி சாகுபடிக்கு தேவையான முக்கிய இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 402 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும், பெண்ணாகரம் தொகுதியில் 2020–2021 ஆம் ஆண்டில் 107 எக்டர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. மேற்கண்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தியதால் 2021–2022 ஆம் ஆண்டில் பெண்ணாகரம் தொகுதியில் பருத்தி சாகுபடி பரப்பு 510 எக்டராக உயர்ந்தது. 2020–2021 ஆம் ஆண்டில் 231 பொதிகளாக இருந்த உற்பத்தி 2021–2022 ஆம் ஆண்டில் 1,030 பொதிகளாக 345% உயர்ந்துள்ளது.

எனவே, பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் பருத்தியை சாகுபடி பயிர் செய்யும் விவசாயிகளுக்கு

ஊக்கத்தொகை வழங்குவதற்கான வினா எழவில்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

42—

பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவித்தல்

வினா எண் 22941—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, பொன்னேரியை விவசாயம் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளைநிலங்களைப் பாழாக்கவிடாமல் பாதுகாக்கும் நடவடிக்கையாக சில குறிப்பிட்ட வேளாண் சார்பற்ற தொழில்களைத் தடை செய்து, மண்வளம் காத்து சீரிய முறையில் விளை பூமியாக பாதுகாக்கவும் உழவர்கள் மற்றும் உழவு சார்ந்த தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்து, மேன்மையடையச் செய்யும்பொருட்டு தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்பாடு சட்டம், 2020 ஆம் ஆண்டு இயற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவிரி டெல்டா பகுதியில் வேளாண் அல்லாத தொழில்களால் விவசாயம் மற்றும் வேளாண் சார்ந்த தொழில்கள் பாதிக்கப்படாத வகையில் அத்தகைய தொழில்களுக்கு தடை விதிக்கும்பொருட்டு இச்சட்டம் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்கள் முழுவதும் மற்றும் புதுக்கோட்டை, கடலூர் ஆகிய மாவட்டங்களின் டெல்டா வட்டாரங்களிலும் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

2023 ஜனவரி 11]

மேலும், பொன்னேரியை விவசாயம் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிப்பது என்பது அரசின் கொள்கை முடிவுக்கு உட்பட்டதாகும் என்ற விவரமும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

43—

மானியம்

வினா எண் 22946—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(*அ*) *பெண்ணாகரம் தொகுதி, மஞ்சநாயக்கன அள்ளி ஊராட்சிக்குட்பட்ட புதுப்பட்டி கிராமத்தில் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

(*ஆ*) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(*அ*) *மற்றும்* (*ஆ*) *தமிழ்நாட்டில் 2021–2022 ஆம் ஆண்டில் பருத்தி உற்பத்தியை உயர்த்த ரூ.11 கோடி மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் என்ற புதிய திட்டமும், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப்பயிர்கள் திட்டத்தின்கீழ் ரூ.2.83 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் ஆக மொத்தம் ரூ.13.83 கோடி நிதி ஒதுக்கீட்டில் பருத்திக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.*

பெண்ணாகரம் தொகுதி தர்மபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. 2021–2022 ஆம் ஆண்டில், இம்மாவட்டத்தில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் மற்றும் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்– வணிகப் பயிர்கள்–திட்டங்களின்கீழ் ரூ.40.26 இலட்சம் நிதி செலவில், பருத்தி சாகுபடிக்கு தேவையான நுண்ணூட்ட உரங்கள், திரவ உயிர் உரங்கள், மெக்னீசியம் சல்பேட் உரங்கள், மானாவாரி பருத்தியில் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்க பார் சால் நடவு மற்றும் அங்கக உரங்கள், தண்டு

[2023 ஜனவரி 11

கூண் வண்டை கட்டுப்படுத்த வேப்பம் புண்ணாக்கு, இயந்திர களையெடுப்பிற்கு விசை களை எடுக்கும் கருவிகள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புக்கான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 2,733 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். பெண்ணாகரம் தொகுதிக்கு நீடித்த நிலையான பருத்தி இயக்கத்தின்கீழ் ரூ.5.18 இலட்சம் நிதி செலவில் பருத்தி சாகுபடிக்கு தேவையான முக்கிய இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 402 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும், பெண்ணாகரம் தொகுதியில் 2020–2021 ஆம் ஆண்டில் 107 எக்டர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. மேற்கண்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தியதால் 2021–2022 ஆம் ஆண்டில் பெண்ணாகரம் தொகுதியில் பருத்தி சாகுபடி பரப்பு 510 எக்டராக உயர்ந்தது. 2020–2021 ஆம் ஆண்டில் 231 பொதிகளாக இருந்த உற்பத்தி 2021–2022 ஆம் ஆண்டில் 1,030 பொதிகளாக 345% உயர்ந்துள்ளது.

எனவே, பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் பருத்தியை சாகுபடி பயிர் செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்கான வினா எழவில்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

44—

பழ சாகுபடிக்கு வழிகாட்டுதல்கள்

வினா எண் 23076—திரு. இரா. அருள்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் பகுதிகளில் குறைந்த நீர் செலவில் உற்பத்தியாகும் பப்பாளி பழ சாகுபடிக்கு உரிய வழிகாட்டுதல்களை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் பப்பாளி, அடர்நடவு என்ற உயர் தொழில்நுட்ப முறையில் 192.85 எக்டர் அளவில்

பெத்தநாயக்கன்பாளையம், வாழப்பாடி மற்றும் மேச்சேரி வட்டாரங்களில் பயிரிடப்பட்டு வருகின்றன. தேவைக்கேற்ப நீரை பயன்படுத்தும் வகையில் தோட்டக்கலைத் துறையின்மூலம் நுண்ணீர்பாசன அமைப்பு உரிய வழிகாட்டுதலுடன் பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசனத் திட்டத்தின் (PMKSY) கீழ் நிறுவப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போது வரை நுண்ணீர் பாசன அமைப்பானது 17.92 எக்டர் பரப்பிலான பப்பாளி பயிருக்கு ரூ.13.19 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. பப்பாளி உற்பத்தி மற்றும் பரப்பினை அதிகரிக்கும்பொருட்டு தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் (NHM) கீழ் பப்பாளி அடர்நடவு முறையில் பயிரிடுவதற்காக "பப்பாளி ரெட் லேடி (Red lady) வீரிய ரக நாற்றுகள்" அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின்மூலம் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு எக்டர் ஒன்றுக்கு 1,286 எண்கள் வீதம் 40 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், பப்பாளி சாகுபடியில் களை மேலாண்மைக்காக நிலப்போர்வை அமைப்பதற்கு, தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் (NHM) கீழ் எக்டருக்கு ரூ.16,000/– வழங்கப்பட்டு வருகிறது.

45—

தொழில்நுட்பப் பூங்கா

வினா எண் 23320—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் மரவள்ளி கிழங்கு மற்றும் பாக்கு தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மரவள்ளி கிழங்கு மற்றும் பாக்கு தொழில்நுட்ப பூங்கா அமைப்பதற்கான செயல் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2023 ஜனவரி 11

46—

அரிய வகை பழ மரங்களை நடவு செய்தல்

வினா எண் 23339—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கப்பியறை பேரூராட்சி பழத்தோட்ட மலையில் அரிய வகை பழ மரங்களை நடவு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கப்பியறை பேரூராட்சியில் உள்ள பண்டார மலைப்பகுதியானது 27.5 ஏக்கர் பரப்பு கொண்டது. இப்பகுதி கப்பியறை பேரூராட்சிக்குச் சொந்தமான இடமாகும். மாவட்ட நிர்வாகமானது, தோட்டக்கலைத் துறைக்கு நிதி ஒதுக்கீடு வழங்கும்பட்சத்தில் தோட்டக்கலைத் துறை சார்பில் அப்பகுதி தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ற அரிய வகை பழ மரங்களை நடவு செய்ய ஆவன செய்யப்படும்.

47—

சலுகைகளை தெரிவித்தல்

வினா எண் 23366—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளாண் துறையில் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் குறித்து, விவசாயிகளுக்கு முறையாக தெரியப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உழவர் அலுவலர் தொடர்பு திட்டத்தின்மூலம் வேளாண்மை அலுவலர்கள் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் (களப் பணியாளர்கள்) வேளாண்மை துறையில் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள், வேளாண் விரிவாக்க செயல்பாடுகள் குறித்த விவரத்தை விவசாயிகளின் விளைநிலங்களுக்கே நேரடியாக சென்று விவசாயிகளை சந்தித்து ஆலோசனைகள் வழங்கி வருகின்றனர்.

மேலும், விவசாயிகளுக்கு வேளாண் துறையின் பல்வேறு திட்டங்கள்மூலம் வழங்கப்படும் சலுகைகள், மானிய விவரங்கள் மேற்கண்ட உழவர்-அலுவலர் தொடர்பு திட்ட ஆலோசனைகள் மூலமும் உழவன் கை பேசி செயலி வேளாண் ரதம், வயல்விழா, கண்காட்சி போன்ற நிகழ்ச்சிகளில் துண்டு பிரசுரங்கள் மூலமும் அளிக்கப்பட்டு வருகின்றன.

48—

ஊடுபயிர்கள் பயிரிடுதல்

வினா எண் 23374—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத்தில் இலாபம் பெற ஊடுபயிர்கள் பயிரிடப்பட வேண்டியதன் அவசியத்தை விவசாயிகளுக்கு உணர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்கள் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சியில் பயறு

வகைகள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களை ஊடுபயிராக பயிரிடும்படி விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். ஆனால், இதற்கான சிறப்பு திட்டங்கள் ஏதும் பயறு மற்றும் எண்ணெய்வித்துத் திட்டங்கள்கீழ் தற்போது செயல்படுத்தப்படவில்லை என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பருத்தி

தமிழ்நாட்டில் 2021–2022 ஆம் ஆண்டில் பருத்தி உற்பத்தியை உயர்த்த ரூ.11 கோடி மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் என்ற புதிய திட்டமும், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்-வணிகப் பயிர்கள் திட்டத்தின்கீழ் ரூ.2.83 கோடி நிதி ஒதுக்கீட்டிலும், ஆக மொத்தம் ரூ.13.83 கோடி நிதி ஒதுக்கீட்டில் பருத்திக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

தமிழ்நாட்டில் 2021–2022 ஆம் ஆண்டு நீடித்த நிலையான பருத்தி இயக்கம் திட்டத்தின்கீழ் பருத்தியில் பயறு பயிர்களை ஊடுபயிர் செய்திட 128.063 மெட்ரிக் டன் பயறு விதைகள் ரூ.49.81 இலட்சம் நிதி செலவில் 50 சதவீத மானியத்தில் பருத்தி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. மேலும் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப் பயிர்கள் திட்டத்தின்கீழ் பருத்தி பயிரில் பயறு பயிர்களை ஊடுபயிர் செய்திட ஒரு எக்டருக்கு ரூ.8,000/– வீதம் 587.5 எக்டருக்கு ரூ.46.440 இலட்சம் நிதி செலவில் இடுபொருட்கள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கரும்பு

தமிழ்நாட்டில் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப் பயிர்கள் திட்டத்தின்கீழ் கரும்பு பயிரில் ஊடுபயிர் செய்திட ஒரு எக்டருக்கு ரூ.9,000/– வீதம் 410 எக்டருக்கு ரூ.35.684 இலட்சம் நிதி செலவில் இடுபொருட்கள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தென்னை

நடப்பாண்டில் தென்னையில் புதிதாக நடவு செய்யப்பட்ட பரப்பில் பயறுவகை மற்றும் கடலை போன்ற ஊடுபயிர்கள் சாகுபடி செய்வதற்கு செயல் விளக்கத்திடலாக ஒரு ஏக்கர் பரப்பளவில்

2023 ஜனவரி 11]

செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்மூலம் கூடுதல் உற்பத்தி மற்றும் வருவாய் கிடைப்பதுடன் களைகளும் கட்டுப்படுத்த இயலும்.

அதில் கடலை செயல்விளக்க திடலுக்கு ரூ.10,000/– மானியமும் பயறு செயல்விளக்க திடலுக்கு ரூ.5,000/– மானியமும் வழங்கப்பட உள்ளது.

எனவே, விவசாயத்தில் இலாபம் பெற ஊடுபயிர்கள் பயிரிடப்பட வேண்டியதன் அவசியத்தை விவசாயிகளுக்கு சிறப்புத் திட்டங்கள் மூலமாக அரசு உணர்த்த வேண்டிய வினா எழவில்லை என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

49—

உழவர்களை ஊக்குவித்தல்

வினா எண் 23497—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காலநிலைக்கு ஏற்ப புதிய வகை பயிர்களை அதிகபடியாக சாகுபடி செய்ய உழவர்களை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நெல்லில், வெள்ளம் பாதிக்கும் பகுதிகளுக்கு சி.ஆர் 1009 சப் 1, வறட்சி பாதிக்கும் பகுதிகளுக்கு அண்ணா ஆர் 4, டீகேஎம் 15, கோ 53, களர் உவர் பாதிப்பு உள்ள பகுதிகளுக்கு டிஆர்ஒய் 1, டிஆர்ஒய் 2, டிஆர்ஒய் 3, டிஆர்ஒய் 4, டிஆர்ஒய் 5 உகந்த இரகங்களாக பரிந்துரை செய்து வெளியிடப்பட்டுள்ளன.

இவை மட்டும் இன்றி தற்போதைய கால சூழலுக்கு ஏற்றாற்போல் கோ 51, கோ 52, கோ 53, கோ 54, கோ 55, எடிடீ 51, எடிடீ 52, எடிடீ 53, எடிடீ 54, எடிடீ 55, எடிடீ 56, எடிடீ 57, டிகேஎம் 13, டிகேஎம் 15, டீபிஎஸ் 5, டிஆர்ஒய் 4, டிஆர்ஒய் 5

போன்ற புதிய நெல் இரகங்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

இந்த இரகங்களை பிரபலப்படுத்துவதில் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பல்கலைக்கழகத்துடன் இணைந்து முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது.

சிறுதானிய பயிர்களில் மாறிவரும் பருவகால சூழ்நிலைக்கு ஏற்ற உயர் விளைச்சல் இரகங்கள் சோளம் (கோ 32), கம்பு (கோ 10) மற்றும் குறு தானியப் பயிர்களான கேழ்வரகு (கோ 15, ஏடிஎல் 1), குதிரைவாலி (எம் டியு 1) வரகு (ஏடிஎல் 1), பனிவரகு (ஏடிஎல் 1), சாமை (ஏடிஎல் 1) மற்றும் திணை (ஏடிஎல் 1) ஆகிய பயிர்கள் பரிந்துரை செய்யப்படுகின்றன.

மேலும் மேற்கூறிய இரகங்களின் விதை பெருக்க அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைக்க வழி செய்வதுடன், இப்பயிர்களின் சாகுபடி முறைகளை விளக்க முன்னிலை திடல்கள் அமைத்து நவீன சாகுபடி தொழில்நுட்பங்களுடன் விளக்கப்படுகின்றது. மேலும் விவசாயிகளை ஊக்குவிக்க விஞ்ஞானிகளின் வயல் ஆய்வு மற்றும் தானியப் பொருட்களின் மதிப்புக்கூட்டு தொழில்நுட்பங்களில் பயிற்சிகள் கொடுத்து விவசாயிகளின் அதிக இலாபத்திற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பயறுவகை பயிர்களில் வம்பன் (ஆர்ஜி 13), கோ 8, கோ 9 போன்ற மேம்படுத்தப்பட்ட துவரை இரகங்களும், வம்பன் 8, வம்பன் 10, ஆடுதுறை 3, ஆடுதுறை 6 போன்ற உயர் விளைச்சல் உளுந்து இரகங்களும், வம்பன் 4, கோ (ஜிஜி) 8, ஆடுதுறை 3 போன்ற சிறந்த பாசிப்பயறு இரகங்களும் வம்பன் 3 மற்றும் கோசிபி 7 ஆகிய உயர் விளைச்சல் தரக்கூடிய தட்டைப்பயறு இரகங்களும் மானாவாரிக்கு ஏற்ற பையூர் 2 என்ற உயர் விளைச்சல் கொள்ளு இரகமும் பரிந்துரை செய்யப்படுகிறது.

எண்ணெய் வித்துப் பயிர்களில் மேம்படுத்தப்பட்ட நிலக்கடலை கொத்து இரகங்கள் (கோ 7, பி.எஸ்.ஆர் 2, வி.ஆர்ஐ 9), அடர் கொத்து இரகங்கள் (கோ 6, விஆர் ஐ 7), சூரியகாந்தி வீரிய ஒட்டு கோ (எச் 3), ஆமணக்கு உயர் விளைச்சல் இரகம் ஒய்.டி.பி 1, நெல் தரிசலும் பயிரிடக்கூடிய எள் இரகங்கள் டிஎம்வி 7 மற்றும் வி.ஆர்.ஐ ஆகியவை பரிந்துரை செய்யப்படுகிறது.

2023 ஜனவரி 11]

ஒவ்வொரு வருடமும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் அகில இந்திய பயிர் மேம்பாட்டுத் திட்டம் இரண்டும் இணைந்து 150 முதல் 200 எண்ணிக்கையிலான முதல் நிலை செயல் விளக்கத் திடல்கள் (நிலக்கடலை, எள், சூரியகாந்தி மற்றும் ஆமணக்கு பயிர்கள் உள்ளடக்கிய) விவசாயிகளின் வயல்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் மூலமாக, மேற்கூறிய பயிர்களின் புதிய இரகங்களின் பயன்பாடுகள் மற்றும் அதன் சிறப்பியல்புகள் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

பருத்தியில் மானாவாரிக்கு ஏற்ற வறட்சியை தாங்கும் பருத்தி இரகங்கள் (கேசி 2, கேசி 3, கோ 12) அடர் நடவுக்கு ஏற்ற மற்றும் குறைந்த வயதுடைய பருத்தி இரகம் (கோ 17), நெல் தரிசுக்கு ஏற்ற பருத்தி இரகங்கள் (எம்சியு 7, எஸ்விபிஆர் 3 மற்றும் கோ 17), கோடை இறவைக்கு ஏற்ற பருத்தி இரகங்கள் (எஸ்விபிஆர் 2, எஸ்விபிஆர் 4, எஸ்விபிஆர் 5 மற்றும் எஸ்விபிஆர் 6), குறைந்த வயதுடைய பருத்தி இரகங்கள் (எம்சியு 7 மற்றும் கோ 17) அதி நீண்ட இழை பருத்தி இரகங்கள் (கோ 14 மற்றும் எம்சியு 7) போன்றவை பரிந்துரை செய்து வெளியிடப்பட்டுள்ளன.

இவை மட்டுமின்றி தீவனப் பயிர்களின் வறட்சியை தாங்கி வளரும் உயர் விளைச்சல் இரகங்களான தீவன சோளம் கோ 31, வேலி மசால் கோ 2 மற்றும் கருப்பு கொல்லுக்கட்டை புல் கோ 2 ஆகியவை உழவர்கள் பயன்பெற வெளியிடப்பட்டுள்ளன.

மேற்கூறிய இரகங்களின் வல்லுநர் விதைகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தினால் போதிய அளவில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. உழவர்கள் வேளாண் துறையையோ தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தையோ அணுகி கால சூழலுக்கு ஏற்ற புதிய இரக விதைகளை பெற்று பயன் பெறுமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நெல், சிறுதானியங்கள் பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருத்தியில் மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில்நுட்பங்கள் விவசாயிகள் மத்தியில் பிரபலப்படுத்தும் நோக்குடன் பல்வேறு மாவட்டங்களில் வேளாண் துறை

ஒத்துழைப்புடன் செயல் விளக்கத்திடல்கள் அமைத்து பயிற்சிகளும் கொடுக்கப்பட்டு வருகிறது.

50—

பயிர் மானியத்தை அதிகரித்தல்

வினா எண் 23502—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு பயிர் மானியத்தை அதிகரித்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 380, வருவாய் (பேமே III (2) துறை, நாள் 27–10–2015–ன்படி, இயற்கை சீற்றங்களான மழை, வெள்ளம், புயல், வறட்சி போன்றவற்றால் 33%–க்குமேல் பாதிக்கப்படும் பயிர்களுக்கு வருவாய்த் துறை மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர்களால் இணைந்து பயிர் சேத கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் இடுபொருள் மானியமாக

1) நெற்பயிர் இல்லாத இதர மானாவாரி பயிர்களுக்கு எக்டர் ஒன்றுக்கு ரூ.7,410/– இழப்பீடாகவும்,

2) நீர்ப்பாசன பயிர்களுக்கு எக்டர் ஒன்றுக்கு ரூ.13,500/– இழப்பீடாகவும்,

3) பல்லாண்டு கால பயிர்களுக்கு எக்டர் ஒன்றுக்கு ரூ.18,000/– இழப்பீடாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு பயிர் மானியத்தை/இழப்பீட்டுத் தொகையினை உயர்த்தி வழங்குவது என்பது மத்திய அரசின் கொள்கை முடிவுக்கு உட்பட்டது என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2023 ஜனவரி 11]

51—

ஊக்கத் தொகை

வினா எண் 23518—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் கைத்தறி, துணிநூலுக்கு ஆதாரமான பருத்தியை சாகுபடி பயிர் செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா ?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *தமிழ்நாட்டில் 2021–22 ஆம் ஆண்டில் பருத்தி உற்பத்தியை உயர்த்த ரூ.11 கோடி மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் என்ற புதிய திட்டமும், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப்பயிர்கள் திட்டத்தின்கீழ் ரூ.2.83 கோடி நிதி ஒதுக்கீட்டிலும், ஆக மொத்தம் ரூ.13.83 கோடி நிதி ஒதுக்கீட்டில் பருத்திக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.*

பெண்ணாகரம் தொகுதி தர்மபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. 2021–22 ஆம் ஆண்டில், இம்மாவட்டத்திற்கு நீடித்த நிலையான பருத்தி இயக்கம் மற்றும் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப்பயிர்கள் திட்டங்களின்கீழ் ரூ.40.26 இலட்சம் நிதி செலவில், பருத்தி சாகுபடிக்கு தேவையான நுண்ணூட்ட உரங்கள், திரவ உயிர் உரங்கள், மெக்னீசியம் சல்பேட் உரங்கள், மானாவாரி பருத்தியில் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்க பார் சால் நடவு மற்றும் அங்கக உரங்கள், தண்டு கூண் வண்டை கட்டுப்படுத்த வேப்பம் புண்ணாக்கு, இயந்திர களையெடுப்பிற்கு விசை களை எடுக்கும் கருவிகள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புக்கான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 2,733 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

பெண்ணாகரம் தொகுதிக்கு நீடித்த நிலையான பருத்தி இயக்கத்தின்கீழ் ரூ.5.18 இலட்சம் நிதி செலவில் பருத்தி சாகுபடிக்கு தேவையான முக்கிய இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 402 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும், பெண்ணாகரம் தொகுதியில் 2020–2021 ஆம் ஆண்டில் 107 எக்டர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. மேற்கண்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தியதால் 2021–22 ஆம் ஆண்டில் பெண்ணாகரம் தொகுதியில் பருத்தி சாகுபடி பரப்பு 510 எக்டராக உயர்ந்தது. 2020–21 ஆம் ஆண்டில் 231 பொதிகளாக இருந்த உற்பத்தி, 2021–22 ஆம் ஆண்டில் 1,030 பொதிகளாக உயர்ந்துள்ளது.

எனவே, பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்கான வினா எழவில்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

52—

பழவகை மரங்களை நடவு செய்தல்

வினா எண் 23365—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கப்பியறை பேரூராட்சி பழத்தோட்ட மலையில் அரிய பழவகை மரங்களை நடவு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கப்பியறை பேரூராட்சியில் உள்ள பண்டார மலைப் பகுதியானது 27.5 ஏக்கர் பரப்பு கொண்டது. இப்பகுதி, கப்பியறை பேரூராட்சிக்குச் சொந்தமான இடமாகும். மாவட்ட நிர்வாகமானது, தோட்டக்கலைத்

2023 ஜனவரி 11]

துறைக்கு நிதி ஒதுக்கீடு வழங்கும்பட்சத்தில் தோட்டக்கலைத் துறை சார்பில் அப்பகுதி தட்பவெப்ப நிலைக்கு ஏற்ற அரிய வகை பழ மரங்களை நடவு செய்ய ஆவன செய்யப்படும்.

53—

கூட்டுறவு சர்க்கரை ஆலையை மேம்படுத்துதல்

வினா எண் 25961—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையை மேம்படுத்த அரசாணை (நிலை) எண் 237, தொழில் (எம்ஐசி–1) துறை, நாள் 30–9–2015–ன்படி ரூ.25.80 கோடி மதிப்பீட்டில் 2015 ஆம் வருடம் அரசால் அறிவிப்பு வெளியிடப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவதாலும், போதிய கரும்பின்மை காரணமாக ஆலையின் முழு அரவைத் திறனை எய்த இயலாததாலும், எந்த நிதி நிறுவனமும் தேவையான நிதியை வழங்குவதற்கு முன்வரவில்லை என்பதாலும், நிதி நெருக்கடி காரணமாக மேற்படி அறிவிப்பு ஒத்தி வைக்கப்பட்டது. ஆலையின் மொத்த திறனுக்கு ஏற்ப 100% கரும்பு உற்பத்தி செய்த பிறகே ஆலையை மேம்படுத்துதல் மற்றும் நவீனப்படுத்துதல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும்.

54—

வேளாண் தொழில்நுட்ப தரவுகளை ஊக்குவித்தல்

வினா எண் 26243—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

(அ) தகவல் தொழில்நுட்பவியல் துறையின்மூலம் தமிழகத்தில் வேளாண் தொழில்நுட்ப தரவுகளை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளாண்மை தொழில்நுட்பங்களான பயிர் சாகுபடி, பயிர் பாதுகாப்பு, பயிர் பெருக்கம், உயரிய தொழில்நுட்பங்கள், ஊட்டச்சத்து மேலாண்மை, அறுவடை பின்சார் தொழில்நுட்பம் போன்ற தரவுகளும், சிறப்புத் தொழில்நுட்பங்களான விதை உரக் கட்டு தொழில்நுட்பங்கள், களத்தில் பாத்தி அமைப்பு, துல்லிய பண்ணையம் போன்ற தரவுகளும், மொத்தத்தில் விதைப்பு முதல் விற்பனை வரை அனைத்து விவரங்களும், வேளாண் பல்கலைக்கழகத்தின் இணையதளமான www.agritech.tnau.ac.in மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், வேளாண்மைத் துறையின் உழவன் செயலிமூலம், பண்ணை வழிகாட்டி, மானிய விவரங்கள், இடுபொருள் இருப்பு விவரம், காப்பீடு விவரங்கள், அடுத்த 6 நாட்களுக்கான வானிலை நிலவரம், பூச்சி (ம) நோய் கண்காணிப்பு மற்றும் பரிந்துரை, பயிற்சி மற்றும் செயல்விளக்கம், வேளாண் விளைபொருட்கள் விற்பனை மற்றும் வாங்குதலுக்கான இ–சந்தை, முக்கிய வேளாண் செய்திகள் உள்ளிட்ட சேவைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

55—

மிளகுச் செடிகள் வளர்த்தல்

வினா எண் 26534—திரு. இரா. அருள்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சின்னகல்ராயன் மலைப்பகுதிகளில் மிளகுச் செடிகள் வளர்க்க அரசு வழிகாட்டுதல் வழங்க முன்வருமா?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் உள்ள சின்னகல்ராயன் மலைப்பகுதிகளில் மிளகுச் செடிகள் 59 எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.

தேசிய தோட்டக்கலை இயக்கம் திட்டத்தின் பரப்பு விரிவாக்கம் இனத்தின்கீழ் மிளகு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு எக்டர் ஒன்றுக்கு 40% மானியமாக ரூ.20,000/– வழங்கப்படுகிறது. விவசாயிகளுக்கு மிளகு சாகுபடி குறித்த வழிகாட்டுதல்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் வட்டார தோட்டக்கலை அலுவலர்களால் வழங்கப்படுகிறது.

56—

தென்னைமர வெள்ளை ஈக்களை நீக்குதல்

வினா எண் 50749—திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதிக்குட்பட்ட தென்னை மரங்களில் உள்ள வெள்ளை ஈக்களை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்னை, தமிழகத்தில் 4 இலட்சத்து 38 ஆயிரம் எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் 87 ஆயிரத்து 700 எக்டர் பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சமீப காலமாக தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ என்ற பூச்சி தாக்குதல் தென்பட்டதை தொடர்ந்து இப்பூச்சியினை கட்டுப்படுத்த

விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் இணைந்து வேளாண் துறையின் வாயிலாக தொடர்ந்து, கடந்த இரண்டு வருடங்களாக விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. நமது மாநிலத்தில் 2016 ஆம் ஆண்டில் பொள்ளாச்சி பகுதியில் முதன் முதலில் தென்னையில் ரூகோஸ் வெள்ளை ஈ கண்டறியப்பட்டது. இப்பூச்சி மழையின்றி வறண்ட கால நிலையில் அதிகம் பரவும் தன்மை கொண்டது. 2021–22 ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை பயன்படுத்தி தென்னையில் சுருள் வெள்ளை ஈ தாக்குதலை கட்டுப்படுத்தும் பொருட்டு எக்டருக்கு 20 எண்கள் மஞ்சள் வண்ண ஒட்டுப்பொறி அமைத்தல் மற்றும் சுருள் வெள்ளை ஈ பூச்சிகளை தாக்கி அழிக்கும் எதிர் உயிரி பூச்சியான கிரைசோபெர்லா என்னும் கண்ணாடி இறக்கை பூச்சிகளை எக்டருக்கு 1,000 எண்கள் வீதம் வெளியிடுதல் போன்ற இனங்கள் கோவை மாவட்டத்தில் 6,900 எக்டர் பரப்பில் ரூ.69 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. மேலும், வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் நடப்பாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

57—

மருந்து தெளிக்க Drone கருவி

வினா எண் 50752—திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதிக்குட்பட்ட சுல்தான்பேட்டை மற்றும் சூலூர் ஒன்றியங்களில் உள்ள விவசாயப் பயிர்களுக்கு நவீன முறையில் மருந்து தெளிக்க Drone கருவி விவசாயத் துறையின்மூலம் வாடகைக்கு விடுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் ட்ரோன்கள் வாங்கிட மானியம் வழங்கப்படுகிறது.

2023 ஜனவரி 11]

வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ் கிராமப்புற தொழில்முனைவோர், பதிவு செய்யப்பட்ட விவசாய சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள்மூலம் வட்டார அளவில் ட்ரோன்கள் உட்பட வேளாண் இயந்திர வாடகை மையங்கள் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு 40 சதவீத மானியம் அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. இம்மையங்கள்மூலம் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் தேவைப்படும் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்படுகின்றன. இவ்வாடகை மையங்களில், தேவைப்படும் விவசாயிகள் ட்ரோன்களை பெற்று பயன்பெறலாம்.

58—

பண்ணைக் குட்டை

வினா எண் 50883—திரு. செ. முருகேசன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பரமக்குடி தொகுதிக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் விவசாயிகளுக்கு பண்ணைக் குட்டை அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் 2018–19 ஆம் ஆண்டு முதல் நடப்பு ஆண்டு (2022–23) வரை 100% மானியத்தில் 2,908 பண்ணைக் குட்டைகள் பல்வேறு திட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இதில் பரமக்குடி தொகுதிக்கு உட்பட்ட போகலூர், பரமக்குடி மற்றும் நைனார்கோவில் பகுதிகளில் நபார்டு நிதி உதவியில் 2018–19 ஆம் ஆண்டு முதல் 2020–21 ஆம் ஆண்டு வரை 663 பண்ணைக் குட்டைகள் ரூ.595.296 இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கத் திட்டத்தின்கீழ் 2021–22 ஆம் ஆண்டில் 14 பண்ணைக் குட்டைகள் ரூ.13.842 இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதி ஆண்டில் (2022–23) கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 2021–22–ன்கீழ் 19 பண்ணைக் குட்டைகள் ரூ.17.79 இலட்சத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 2022–23 ஆம் ஆண்டிலும் பண்ணைக் குட்டைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, பரமக்குடி தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் மட்டும் 100% மானியத்தில் இதுவரை மொத்தம் 696 பண்ணைக் குட்டைகள், ரூ.626.93 இலட்சத்தில் அமைக்கப்பட்டு, விவசாயிகள் வறட்சி காலங்களில் பயிர்களுக்கு உயிர் பாசனம் வழங்கியும், பண்ணை குட்டைகளில் மீன்கள் வளர்த்தும், பண்ணைக் குட்டைகளின் கரைகளில் கீரைகள் மற்றும் காய்கறிகள் பயிரிட்டும் இலாபம் பெற்று வருகின்றனர்.

59—

நிவாரணத் தொகை வழங்குதல்

வினா எண் 18498—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக உப்பளத் தொழிலாளர்களுக்கு மழை, வெள்ளக் காலங்களில் நிவாரணத் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மழைக்காலங்களில் உப்பு உற்பத்திப் பணிகள் பாதிக்கப்படும் நேரத்தில் உப்பளத் தொழிலாளர்கள் மாற்றுப் பணி ஏதுமின்றி வருவாய் இல்லாமல் சிரமத்தை சந்திக்கிறார்கள். எனவே, அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் உதவி செய்யும்பொருட்டு தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்

2023 ஜனவரி 11]

சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ரூ.5,000/– நிவாரண நிதியாக வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 12–8–2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 2021–22 ஆம் ஆண்டிற்கு, தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 6,472 உப்பளத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு இதுவரை ரூ.3,23,60,000 நிவாரண நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

60—

கார் உற்பத்தி தொழிற்சாலை துவக்குதல்

வினா எண் 28259—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கோயம்புத்தூரில் கார் உற்பத்தி தொழிற்சாலை துவக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *தமிழ்நாடு அரசு, மாநிலத்திற்கு தொழிற்சாலைகளை ஈர்க்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. மேலும், பல்வேறு மாவட்டங்களில் அமைந்துள்ள தொழிற்பூங்காக்களிலுள்ள உள்கட்டமைப்பு வசதி, துறைமுக வசதி, பன்னாட்டு விமான நிலைய வசதி, தொழிலாளர் திறன், கல்வி மற்றும் தொழிற்கல்வி வசதி, மருத்துவம், அரசின் தொழிற்கொள்கைகள், சலுகைகள், ஒற்றைச் சாளர அடிப்படையில் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் அனுமதி வழங்குதல் போன்றவற்றை தொழில் தொடங்க முன்வரும் முதலீட்டாளர்களுக்கு எடுத்துக்கூறி வருகிறது.*

பெரும்பாலான முதலீட்டாளர்கள், தொழில் தொடங்குவதற்கு சுற்றுப்புறச் சூழல் அமைப்பு, உதிரி பாகங்கள் வழங்குவோர் மற்றும் நுகர்வோர் அமைப்பு, பன்னாட்டு விமான நிலைய

வசதி, பன்னாட்டுக் கல்வி நிலையங்கள் ஆகியவற்றினை இன்றியமையாததாக கருதுகின்றனர்.

அரசு, முதலீட்டாளர்களை அவர்கள் விரும்பும் இடத்தில் தொழில் துவங்க ஆவன செய்து வருகிறது. தாராளமயமாக்கப்பட்ட பொருளாதார சூழ்நிலையில் கோயம்புத்தூரில் கார் உற்பத்தித் தொழிற்சாலையை துவங்கிட முதலீட்டாளர்கள் முன்வருவார்களேயானால் அவர்களுக்கு உரிய அனுமதிகள் பெற்றிட உதவிகள் செய்து, அவற்றை உருவாக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

61—

மோட்டார் உதிரி பாகங்கள் தொழிற்சாலை

வினா எண் 28260—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, பொன்னேரியில் மோட்டார் உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு மாநிலத்திற்கு தொழிற்சாலைகளை ஈர்க்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. மேலும், பல்வேறு மாவட்டங்களில் அமைந்துள்ள தொழிற்பூங்காக்களிலுள்ள உள்கட்டமைப்பு வசதி, துறைமுக வசதி, பன்னாட்டு விமான நிலைய வசதி, தொழிலாளர் திறன், கல்வி மற்றும் தொழிற்கல்வி வசதி, மருத்துவம், அரசின் தொழிற்கொள்கைகள், சலுகைகள், ஒற்றைச் சாளர அடிப்படையில் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் அனுமதிகள் வழங்குதல் போன்றவற்றை தொழில் தொடங்க முன்வரும் முதலீட்டாளர்களுக்கு எடுத்துக்கூறி வருகிறது.

2023 ஜனவரி 11]

பெரும்பாலான முதலீட்டாளர்கள், தொழில் தொடங்குவதற்கு சுற்றுப்புறச் சூழல் அமைப்பு, உதிரி பாகங்கள் வழங்குவோர் மற்றும் நுகர்வோர் அமைப்பு, பன்னாட்டு விமான நிலைய வசதி, பன்னாட்டுக் கல்வி நிலையங்கள் ஆகியவற்றினை இன்றியமையாததாக கருதுகின்றனர்.

அரசு, முதலீட்டாளர்களை அவர்கள் விரும்பும் இடத்தில் தொழில் துவங்க ஆவன செய்து வருகிறது. தாராளமயமாக்கப்பட்ட பொருளாதார சூழ்நிலையில் பொன்னேரியில் மோட்டார் உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைத்திட முதலீட்டாளர்கள் முன்வருவார்களேயானால் அவர்களுக்கு உரிய அனுமதிகள் பெற்றிட உதவிகள் செய்து, அவற்றை உருவாக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

62—

சிமெண்ட் தொழிற்சாலை

வினா எண் 28261—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம், மீஞ்சூர் ஒன்றியங்களில் சிமெண்ட் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, சோழவரம் மற்றும் மீஞ்சூர் ஒன்றியங்களில் சிமெண்ட் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

63—

மோட்டார் நிறுவனம் மூடப்படுவதைத் தடுத்தல்

வினா எண் 46556—திரு. இரா. அருள்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

[*2023 ஜனவரி 11*

சென்னை மறைமலைநகரில் ஃபோர்டு மோட்டார் நிறுவனம் மூடப்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

ஃபோர்டு நிறுவனம், இந்தியச் சந்தைகளில் தனது பங்கினை விரிவுபடுத்த இயலாததன் காரணமாகவும், விற்பனை மற்றும் ஏற்றுமதி மிகப் பெருமளவில் சரிந்ததன் காரணமாகவும் தமிழ்நாட்டில் தனது உற்பத்தித் திட்டங்களை நிறுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள உற்பத்தித் திட்டங்கள் மட்டுமல்லாமல் குஜராத் மாநிலத்திலுள்ள உற்பத்தித் திட்டங்களையும் நிறுத்தியுள்ளது.

அதேசமயத்தில், மறுசீரமைப்பின் இன்னுமொரு பகுதியாக, சென்னையில் 11 ஆயிரம் பணியாளர்களுடன் மிகச் சிறப்பாக நடைபெற்று வரும் தனது உலகளாவிய வணிகம் மற்றும் ஆராய்ச்சி மையத்தை பெரிய அளவில் மறுசீரமைக்க திட்டமிட்டுள்ளதையும் இந்நிறுவனம் அறிவித்துள்ளது. மேலும், 2022 ஆம் வருடத்திற்குள், பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி ஆகிய துறைகளில் இருந்து மேலும் 5,000 பணியாளர்களை இந்த ஆராய்ச்சி மையத்தில் சேர்க்கும் வகையில் மிகப்பெரும் மறுசீரமைப்பை மேற்கொள்ள உள்ளதாக இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஃபோர்டு நிறுவனம், தனது உற்பத்தித் திட்டத்தினை ஏற்கெனவே நிறுத்திவிட்ட நிலையில், இந்த சூழ்நிலையை, அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. ஃபோர்டு நிறுவனத்தின் உற்பத்தித் திட்டத்தினை மீட்டுருவாக்கம் செய்திட அனைத்து உதவிகளையும் புரிந்திட அரசு தயாராக உள்ளது. வேலைவாய்ப்பு இழப்பினை ஈடு செய்திடும் வகையிலும் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ள தொழிற்சாலையைத் தொடர்ந்து நடத்திடும் வகையிலும் பிற கார் உற்பத்தி நிறுவனங்கள் முன்வருவார்களேயானால் அனைத்து உதவிகளையும் செய்திட அரசு தயாராக உள்ளது.

64—

விற்பனைப் பத்திரம்

வினா எண் 21577—திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

(அ) கோயம்புத்தூர் வடக்கு தொகுதி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் புறநகர் திட்டத்தின்கீழ் கணபதி நகர் பகுதியில் முழுத்தொகையும் செலுத்தியவர்களுக்கு விற்பனைப் பத்திரத்தை விரைந்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் வடக்கு தொகுதி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் புறநகர் திட்டத்தின்கீழ் கணபதி நகர் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய விதிமுறைகளின்படி, முழுத் தொகையும் செலுத்தும் ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டப் பகுதியில் இதுவரை, மொத்தம் 993–ல் 823 ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது என்ற தகவல் கனிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

65—

பணியை விரைவுபடுத்தல்

வினா எண் 28062—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி நகரத்தில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்மூலம் வீடு கட்டும் பணியை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி நகரத்தில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்மூலம் வீடு கட்டும்

பணியை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், பொள்ளாச்சி தொகுதி, பணிக்கம்பட்டி கிராமத்தில் வீடற்ற ஆதி திராவிட ஏழை மக்களுக்கு பிரதம மந்திரியின் "அனைவருக்கும் வீட்டு வசதி" திட்டத்தின்கீழ் 512 குடியிருப்புகள் ரூ.36.14 கோடி திட்ட மதிப்பீட்டில் 5–8–2020 அன்று தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது வரை 63 சதவீத பணிகள் நிறைவு பெற்றுள்ளன. கொரோனா நோய் தொற்று மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் பற்றாக்குறையால் பணிகள் 4–10–2021–க்குள் முடிக்க இயலவில்லை. ஒப்பந்ததாரருக்கு ரூ.2.50 இலட்சம் அபராதமுடன்கூடிய கால அவகாசம் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், பணிகளை முடிப்பதன் அவசியம் கருதி ஒப்பந்ததாரருக்கு நிர்வாகப் பொறியாளர், கோயம்புத்தூர் கோட்டம்மூலம் எச்சரிக்கை அறிவிப்பு விடுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனைத்து பணிகளையும் 30–3–2023–க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

66—

பட்டுப் புழு வளர்ப்போர் நலன்

வினா எண் 29282—திரு. இரா. அருள்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் மல்பெரி செடி சாகுபடிக்கு வீரிய இரக விதைக் குச்சிகள் வழங்கி மல்பெரி சாகுபடியை ஊக்குவித்து பட்டுப் புழு வளர்ப்போர் நலனை மேம்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி மற்றும் பெண்ணாகரம் உதவி இயக்குநர்கள் கட்டுப்பாட்டில் செயல்படும் அரசு பட்டுப் பண்ணைகளில் வி1 இரக மல்பெரி நாற்றுகள் தேவைக்கேற்ப உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. பட்டு விவசாயிகளுக்கு தேவையின் அடிப்படையில் மல்பெரி நாற்றுகள் வழங்கப்பட்டு மல்பெரி சாகுபடியை ஊக்குவித்து பட்டுப்புழு வளர்ப்போர் நலன் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

2023 ஜனவரி 11]

67—

வார்ப்பக தொழில்நுட்பப் பயிற்சி

வினா எண் 29380—திரு. இரா. அருள்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, முத்துநாயக்கன்பட்டியில் பித்தளை சிலைகள் தயாரிப்பு தொழில்நுட்பத்தை மேம்படுத்தவும் வார்ப்பக தொழில்நுட்பப் பயிற்சி (Moulding Technology) *அளிக்கவும் அரசு முன்வருமா?*

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

உலோக சிலைகள், பித்தளை விளக்குகள், பித்தளை கலைப்பொருட்கள் மற்றும் தஞ்சாவூர் கலைத் தட்டுகள் தயாரிக்கும் கைவினைஞர்கள் அதிக எண்ணிக்கையில் சுவாமிமலை, தஞ்சாவூர் மற்றும் நாச்சியார்கோவில் போன்ற பகுதிகளில் அதிகமாக தொழில்புரிவதால் பூம்புகார் நிறுவனம் உலோக சிலைகள் தயாரிக்கும் உற்பத்தி நிலையங்களை மேற்கூறப்பட்ட இடங்களில் அமைத்துள்ளது. சேலம் மாவட்டத்தில் பெரும்பான்மையாக மரச்சிற்ப கைத்திறத் தொழில்புரியும் கைவினைஞர்களே அதிக எண்ணிக்கையில் உள்ளார்கள். எனவே, சேலம் மேற்குத் தொகுதியில் உலோகச் சிலைகள் தயாரிக்கும் கைவினைஞர்களின் எண்ணிக்கை மிக குறைவாக இருப்பதால், பித்தளை சிலைகள் தயாரிப்பு தொழில்நுட்பத்தை மேம்படுத்தவும், வார்ப்பக தொழில்நுட்பப் பயிற்சி (Moulding Technology) *அளிக்கவும் அவசியம் எழவில்லை.*

68—

சுயதொழில் பயிற்சி

வினா எண் 30532—திரு. இரா. அருள்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[*2023 ஜனவரி 11*

தமிழகத்தில் படித்த இளைஞர்களுக்கு ஊராட்சி ஒன்றிய அளவில் சுயதொழில் பயிற்சி வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் இதுவரை படித்த மாணவர்கள், தொழிலில் ஈடுபட்டுள்ள மற்றும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர் மற்றும் புத்தொழில் முனைவோர் ஆகியோரை உள்ளடக்கி 4.30 இலட்சம் தொழில்முனைவோர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது.

இந்நிறுவனம், பல்வேறு திட்டங்களின்கீழ் பயிற்சி அளித்தல், மாவட்ட, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் சங்கங்களின் கூட்டாண்மை, உயர் தொழில் நிறுவனங்களுடன் இணைப்பு, புத்தாக்க மேம்பாடு மற்றும் தொழில் வழிகாட்டு சேவை போன்ற முக்கிய செயல்களில் ஈடுபடுகிறது. தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கருத்துரு நிலை, தொழில் திட்டமிடல் நிலை, தொழில் தொடங்கும் நிலை மற்றும் ஏற்கெனவே தொழில் புரிவோருக்கானது ஆகிய 4 கட்டங்களாக பயிற்சி வழங்கப்படுகிறது.

ஆகையால், தமிழகத்தில் படித்த இளைஞர்களுக்கு ஊராட்சி ஒன்றிய அளவில் சுயதொழில் பயிற்சி வழங்கும் திட்டம் தற்சமயம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

69—

குடியிருப்புகளை மேம்படுத்துதல்

வினா எண் 51691—டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆயிரம் விளக்கு தொகுதி, வடக்கு கிரியப்பா சாலை திட்டப் பகுதியில் விடுபட்ட தொகுதிகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக மறுகட்டுமானமும்,

2023 ஜனவரி 11]

புதிய குடியிருப்பில் மின்தூக்கி வசதியும், டிரஸ்ட்புரம் திட்டப் பகுதி மறுகட்டுமானமும் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, வடக்கு கிரியப்பா சாலை புதிய குடியிருப்பு திட்டத்தில் மின்தூக்கி அமைக்க பொறியாளர்களால் பரிசீலிக்கப்பட்டது. அவர்களின் கருத்தின்படி போதிய இடவசதி இல்லாத காரணத்தினாலும், அவ்வழியில் Inspection Chamber *அமைந்துள்ளதாலும் மின்தூக்கி அமைக்க இயலவில்லை மற்றும் சென்னை, டிரஸ்ட்புரம் திட்டப் பகுதியில் உள்ள குடியிருப்புகளை ஆய்வு செய்ய வாரியம்* CUBE/IIT*-ன் தொழில்நுட்ப வல்லுநர் குழு நியமித்து கட்டடத்தின் உறுதித்தன்மையை ஆராய கேட்டுக்கொண்டதற்கு இணங்க, கடந்த 1–4–2022 முதல் 19–5–2022 வரை குடியிருப்பு கட்டடங்களை ஆராய்ந்து முடிவை தெரிவித்தது. அதன் முடிவில் இக்கட்டடங்கள் பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொண்ட பின்னரும் (குடியிருப்புதாரர்கள் வாழ தகுதியற்ற) உபயோகத்திற்கு ஏற்றதாக அமையாது எனவும், பழைய கட்டடங்களை இடித்துவிட்டு மறுகட்டுமானம் செய்வதே சிறந்தது என்ற முடிவினை தொழில்நுட்ப குழு தெரிவித்துள்ளது.*

எனவே, இக்குடியிருப்புகள் மறுகட்டுமானம் செய்ய தீர்மானிக்கப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. திட்ட அறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டதும், அதனை பரிசீலித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

70—

குடியிருப்புகள் மறுகட்டுமானம்

வினா எண் 51704—டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆயிரம் விளக்கு தொகுதி, நக்கீரன் நகர், இராமகிருஷ்ணபுரம், இராமகாமத்துபுரம், எம்.கே. ராதா நகர்,

[2023 ஜனவரி 11

பெரியபாளையத்தம்மன் ஆகிய திட்டப் பகுதிகளை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக மறுகட்டுமானம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆயிரம் விளக்கு தொகுதி, நக்கீரன் நகர், இராமகிருஷ்ணபுரம், இராமகாமத்துபுரம், எம்.கே. ராதா நகர், பெரியபாளையத்தம்மன் ஆகிய திட்டப் பகுதிகளில் 1,496 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.220.85 கோடி செலவில் மறுகட்டுமானம் செய்ய ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளை தொடங்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளின் விவரம் பின்வருமாறு:

நக்கீரன் நகர் மற்றும் எம்.கே. ராதா நகர்:

நக்கீரன் நகர் மற்றும் எம்.கே. ராதா நகர் திட்டப் பகுதிகளில் புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட வரைபடம் இறுதி செய்யப்பட்டுள்ளது. சிதிலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளின் பயனாளிகளிடம் இத்திட்டப் பணிகள் குறித்து விளக்கி கூறப்பட்டு மறுகட்டுமானப் பணிகளுக்கு அவர்களது சம்மத கடிதம் பெறப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டப் பகுதிகளில் கட்டுமானப் பணிகளுக்கான மண் பரிசோதனை அண்ணா பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்கான (Structural Design) கட்டமைப்பு வடிவம் பெற CUBE நிறுவனத்திடம் கேட்கப்பட்டுள்ளது.

இராமகிருஷ்ணபுரம்:

இராமகிருஷ்ணபுரம் திட்டப் பகுதியில் புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட வரைபடம் இறுதி செய்யப்பட்டுள்ளது. சிதிலமடைந்த அடுக்குமாடிக் குடிருப்புகளின் பயனாளிகளிடம் இத்திட்டப் பணிகள் குறித்து விளக்கி கூறப்பட்டு குடியிருப்புகளில் A, B & C Blocks மறுகட்டுமானப் பணிகளுக்கு அவர்களது சம்மத கடிதம் பெறப்பட்டு வருகிறது. இத்திட்டப் பகுதியில் கட்டுமானப்

2023 ஜனவரி 11]

பணிகளுக்கான மண் பரிசோதனை அண்ணா பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டப்பணிகளுக்கான (Structural Design) கட்டமைப்பு வடிவம் பெற CUBE நிறுவனத்திடம் கேட்கப்பட்டுள்ளது.

இராமகாமத்துபுரம்:

இராமகாமத்துபுரம் திட்டப் பகுதியில் புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட வரைபடம் இறுதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டப் பகுதியில் கட்டுமானப் பணிகளுக்கான மண் பரிசோதனை அண்ணா பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்கான (Structural Design) கட்டமைப்பு வடிவம் பெற CUBE நிறுவனத்திடம் கேட்கப்பட்டுள்ளது.

பெரியபாளையத்தம்மன்:

பெரியபாளையத்தம்மன் திட்டப் பகுதியில் புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் (மறுகட்டுமான திட்டத்திற்கு) கட்ட வரைபடம் இறுதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டப் பகுதியில் கட்டுமானப் பணிகளுக்கான மண் பரிசோதனை அண்ணா பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கூறப்பட்டுள்ள முதற்கட்ட பணிகள் முடிவுற்றதும் சிதிலமடைந்த அடுக்குமாடி குடியிருப்புகளை மறுகட்டுமானம் செய்யும் பணிகள் விரைவில் தொடங்கப்படும்; உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

71—

பத்திரிகையாளர் நல்வாழ்வுக் குழு அமைத்தல்

வினா எண் 62337—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரிகையாளர் நல்வாழ்வுக் குழு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்பட்டு பல்வேறு நல உதவித் திட்டங்கள் வழங்க ஆணை வெளியிடப்பட்டு நடைமுறையில் உள்ள நிலையில், பத்திரிகையாளர் நல்வாழ்வுக் குழு அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

72—

மானியம்

வினா எண் 18625—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பிளஸ் 2 படித்த கிராமப்புற மகளிரைக் கொண்ட கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்தி, வண்ண மீன் வளர்ப்பு பணியில் ஈடுபட மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின்கீழ் (PMMSY) வண்ண மீன் வளர்ப்பு பண்ணைகள் அமைத்திட பொதுப் பிரிவினருக்கு 40% மானியமும், ஆதி திராவிடர்/ பழங்குடியினர்/மகளிருக்கு 60% மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை உதவி இயக்குநர் அலுவலகங்களை அணுகி பயன்பெறலாம்.

73—

பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தல்

வினா எண் 24393—டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

மீனவர் சமூக மக்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

ஆம். மீன்பிடி தொழில் மிக ஆபத்து நிறைந்த தொழில்களில் ஒன்றாகும். மீனவர் சமுதாயம் மட்டுமே தனது வாழ்வாதாரத்திற்காக இயற்கையோடு போராடி கடல் அலைகளை எதிர்த்து சென்று மீன்பிடி தொழில் புரிந்து வருகின்றனர். புயல், பெருமழை, வெள்ளம், சுனாமி போன்ற இயற்கை சீற்றங்களில் மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடி உடைமைகள் அதிகளவில் பாதிக்கப்படுவதால், மீனவர் சமுதாயம் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் காண இயலாமல் உள்ளனர். மண்டல் கமிஷன் தனது பரிந்துரையில் மீனவர் சமுதாயத்தினை பழங்குடியினத்தவர் பட்டியலில் சேர்த்திட பரிந்துரை செய்துள்ளது. எனவே, மீனவர் சமுதாயத்தை பழங்குடி இனத்தவர் பட்டியலில் சேர்த்திட ஒன்றிய அரசை தமிழக அரசு வலியுறுத்தி வருகிறது. மீனவர் சமுதாயத்தை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கும் விடயம் ஒன்றிய அரசின் பரிசீலனையில் உள்ளது.

74—

மீன்பிடிப்பு முறையை ஒழுங்குபடுத்துதல்

வினா எண் 28645—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் தொகுதி, மேட்டூர் அணையின் நீர்த்தேக்கப் பகுதியில் ஆண்டுதோறும் ஒரு கோடி மீன்குஞ்சுகள் வளர்க்கவும், மீன்பிடிப்பதை ஒழுங்குபடுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[*2023 ஜனவரி 11*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதிக்குட்பட்ட மேட்டூர் அணையின் மீன்வளத்தைப் பாதுகாத்திடவும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும்பொருட்டு உரிய வழிகாட்டுதல்களின்படி மேட்டூர் நீர்த்தேக்கத்தில் ஆண்டுதோறும் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின்மூலம் 46.20 இலட்சம் மீன்விரலிகள் இருப்பு செய்யப்பட்டு வந்தது. மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவு விற்பனை சங்க உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட ஏதுவாக மேட்டூர் அணையில் 2022–23 ஆம் ஆண்டு 76.73 இலட்சம் மீன்விரலிகள் இருப்பு செய்திட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, மேட்டூர் நீர்த்தேக்கத்தில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின்மூலம் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், மேட்டூர் அணையின் மீன்வளத்தை பாதுகாத்திடும்பொருட்டு மேட்டூர் அணை மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டிலுள்ள மீன் துறை அலுவலர்கள்மூலம் தீவிர ரோந்து பணிகள் மேற்கொண்டு மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தப்பட்டு வருகிறது.

75—

சவுக்கு மரக்கன்றுகள் நடுதல்

வினா எண் 28650—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கீழ்வேளூர் தொகுதியில் உள்ள கடற்கரை பகுதிகளில் சவுக்கு மரக்கன்றுகள் நட்டு மாசுபடாத பகுதிகளாகப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 15–11–2018 அன்று வீசிய கஜா புயலினால் நாகப்பட்டினம் மாவட்டத்தில் 2015 ஆம் ஆண்டு எழுப்பப்பட்ட கடலோர காற்று தடுப்பு சவுக்கு தோட்டங்கள் புயலின் வேகத்தை எதிர் நின்று பலத்த சேதமடைந்தன. அத்தோட்டங்களை நாகப்பட்டினம் மாவட்ட கடற்கரை பகுதிகளில் மீண்டும் எழுப்ப பசுமை தமிழகம் திட்டத்தின்கீழ் 20,000 சவுக்கு மரக்கன்றுகள் வனத் துறையால் எழுப்பப்பட்டு தயார் நிலையில் உள்ளன. அக்டோபர் மற்றும் நவம்பர் 2022 மாதங்களில் கீழ்வேளூர் தொகுதிக்குட்பட்ட கடற்கரை பகுதிகளில் நடவு செய்யப்படும் என்று வனத் துறையால் தெரிவித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

76—

வீடுகள் கட்டுதல்

வினா எண் 28651—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதியில் மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு மீன்வளத் துறை சார்பில் வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மீனவர் வீட்டு வசதி திட்டத்திற்காக 5,000 எண்ணம் கொண்ட வீடுகளை ரூ.85.00 கோடியில் கட்டி வழங்கிட அரசால் நிருவாக ஒப்புதல் ஆணை வழங்கப்பட்டு இத்திட்டமானது தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது.

(ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதியைச் சார்ந்த மீனவக் கூட்டுறவு சங்க உறுப்பினர்களிடமிருந்து வீடுகள் வேண்டி விண்ணப்பங்கள் பெறப்படும்பட்சத்தில் தகுதியான

[2023 ஜனவரி 11

பயனாளிகளுக்கு மேற்காணும் திட்டத்தில் வீடுகள் கட்டி வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

77—

கூடுதல் உதவிகள்

வினா எண் 28674—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இயற்கை பேரிடர் காலத்தில் மீனவர்களுக்கு கூடுதல் உதவிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இயற்கை பேரிடர் காலத்தில் பாதிக்கப்படும் மீனவர்களுக்கு பேரிடர் நிவாரண நிதியிலிருந்து, சேதமடையும் படகுகள் மற்றும் மீன்பிடி சாதனங்களுக்கு அதிகபட்சமாக முறையே, முழு சேதமடையும் மீன்பிடி விசைப்படகு ஒன்றிற்கு ரூ.5.00 இலட்சமும், பகுதி சேதமடையும் மீன்பிடி விசைப்படகு ஒன்றிற்கு ரூ.3.00 இலட்சமும், முழு சேதமடையும் நாட்டுப் படகுகளுக்கு ரூ.75,000/–, பகுதி சேதமடையும் நாட்டுப் படகு ஒன்றிற்கு ரூ.20,000/–, முழு சேதமடையும் மீன்பிடி கட்டுமரம் ஒன்றிற்கு ரூ.32,000/–, பகுதி சேதமடையும் கட்டுமரம் ஒன்றிற்கு ரூ.10,000/–, சேதமடையும் வலைகளுக்கு ரூ.10,000/– மற்றும் சேதமடையும் இயந்திரங்களுக்கு தலா ரூ.5,000/–மும் நிவாரணமாக மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

78—

உயிரிழப்பைத் தடுத்தல்

வினா எண் 28691—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

(அ) இயற்கை சீற்றங்களால் மீனவர்கள் உயிரிழப்பைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட ஆபத்து காலங்களில் வானிலை ஆராய்ச்சி மையத்திலிருந்து தினமும் நான்கு முறை பெறப்படும் வானிலை அறிவிப்புகளை மீனவர்களுக்கு தெரிவித்திட மீன்வளத் துறை தலைமை அலுவலகத்தில் இயங்கும் கட்டுப்பாட்டு அறையிலிருந்து சார் அலுவலர்கள் மூலமாக மீனவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்படுகிறது. மேலும், மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடவும், ஆபத்து காலங்களில் அவசர தகவல்களை பரிமாறும்பொருட்டு, ஆழ்கடல் மீன்பிடி படகுகளை கொண்ட தனி நபர் மற்றும் குழுக்களுக்கு, 660 செயற்கைகோள் தொலைபேசி, 200 நேவிக் மற்றும் 80 நேவ்டெக்ஸ் சாதனங்கள் 17795 5W VHF கருவிகள் நாட்டுப்படகு மீனவர்களுக்கும், 3135 25W VHF விசைப்படகு மீனவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களைக் கண்காணித்திடவும் மீன்பிடிப்பில் இருக்கும் படகுகளுக்கு தகவல் தெரிவித்திடவும், ஆபத்து காலங்களில் உதவிகள் புரிந்திடும்பொருட்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின்மூலம் டிரான்ஸ்பாண்டர் கருவிகளை உருவாக்கியுள்ளது. சென்னை, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த 15 விசைப்படகுகளில் டிரான்ஸ்பாண்டர்கள் பொருத்தப்பட்டுள்ளன. மீன்பிடிப்பிற்காக கடலுக்குச் செல்லும் மீனவர்கள் மற்றும் மீன்பிடி கலன்களை கண்காணிப்பதன்மூலம் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடவும், மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களின் விவரங்களை பதிவு செய்திடவும், டிரான்ஸ்பாண்டர் கருவிகள் உதவியாக இருக்கும்.

[2023 ஜனவரி 11

79—

குறைந்த விலையில் நாட்டுக் கோழி

வினா எண் 29355—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் உள்ள உழவர் சந்தைக்கு அருகில் கோழிப் பண்ணையாளர்களின் நேரடி விற்பனையில் குறைந்த விலையில் ஊட்டச் சத்துள்ள முட்டைகள், நாட்டுக் கோழி, வளர்ப்பு நாட்டுக் கோழி கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் உள்ள உழவர் சந்தைக்கு அருகில் கோழிப் பண்ணையாளர்களின் நேரடி விற்பனையில் குறைந்த விலையில் ஊட்டச்சத்துள்ள முட்டைகள், நாட்டுக் கோழி, வளர்ப்பு நாட்டுக் கோழி கிடைக்க செய்வது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

80—

மண்ணெண்ணெய் மானியம்

வினா எண் 39062—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, கீழமூவர்க்கரை மீனவர்கள் பயன்படுத்தும் படகுகளுக்கு மண்ணெண்ணெய் மானியம் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மூன்று மாவட்டங்களில் மண்ணெண்ணெயினால் இயங்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு

2023 ஜனவரி 11]

மானிய விலையிலான தொழிலக மண்ணெண்ணெய், லிட்டர் ஒன்றிற்கு ரூ.25 என்ற மானிய விலையில் ஓர் ஆண்டில், கலன் ஒன்றிற்கு 3,400 லிட்டர் அரசால் வழங்கப்படுகிறது. தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மூன்று மாவட்டங்களில் இயங்கும் மீன்பிடி படகுகளுக்கு பிரத்யேகமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, இத்திட்டத்தை நாகப்பட்டினம் மாவட்டம் உட்பட பிற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்திடும் திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

81—

படகுகளில் தகவல் தொடர்பு கருவிகள்

வினா எண் 55127—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *அனைத்து இயந்திரப் படகுகளிலும் தகவல் தொடர்பு கருவிகளை பொருத்த அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *ஆம். கடல் மீன்பிடிப்பு மேற்கொள்ளும் மீனவர்களின் பாதுகாப்பினை தொடர்ந்து உறுதிப்படுத்தவும், மோசமான வானிலை மற்றும் இயற்கை பேரிடர் காலங்களில் வானிலை அறிக்கை மற்றும் எச்சரிக்கைகளை மீனவர்கள் 24 மணி நேரமும் தெரிந்துகொள்ளும்பொருட்டு கீழ்க்கண்ட தொலைத்தொடர்பு கருவிகள் மானிய விலையில் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன:*

வ. எண்	வழங்கப்பட்ட தொலைத்தொடர்பு கருவிகள்	எண்ணிக்கை
1.	ஆபத்து காலங்களில் எச்சரிக்கை தகவல் சமிக்ஞை பரப்பும் கருவிகள்	1,600 எண்ணம்
2.	நாட்டுப்படகு மீனவர்களுக்கு 5W VHF கருவிகள்	17,795 எண்ணம்
3.	விசைப்படகு மீனவர்களுக்கு 25 W VHF கருவிகள்	3,135 எண்ணம்
4.	செயற்கைகோள் தொலைபேசிகள்	660 எண்ணம்
5.	NAVIC தொலைத்தொடர்பு கருவிகள்	200 எண்ணம்
6.	NAVTEX தொலைத்தொடர்பு கருவிகள்	80 எண்ணம்

கடலில் மீன்பிடி கலன்களிலிருந்து கரைப்பகுதியில் தொடர்புகொள்ளும்பொருட்டு தமிழகத்தின் கடலோர பகுதியில் உயர்மட்ட தொலைத்தொடர்பு கோபுரங்கள் மற்றும் அனைத்து கடலோர மாவட்டங்களிலும் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், மீன்பிடிப்பிற்காக கடலுக்குச் செல்லும் மீனவர்கள் தங்களின் இருப்பிடம், கடற்பயண பதிவுகள், பாதுகாப்பாக செல்ல வழிகாட்டி, மீன் அதிகம் கிடைக்கும் பகுதிகளை கைபேசியில் பதிவு செய்தல், மீன் அதிகம் கிடைக்கும் இட விவரங்களை பெறுதல், மாறி வரும் வானிலை, புயல், அதிக மழை, கடல் அலை, கடல் நீர் உயர்வு போன்ற விவரங்களை உடனடியாக தெரிந்து, அதன்மூலம் மீனவர்கள் தங்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும்பொருட்டு 'தூண்டில்' எனும் கைபேசி செயலி உருவாக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

ஒன்றிய அரசானது, 200 கடல் மைல்களுக்கு அப்பால் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களை கண்காணித்திடவும், மீன்பிடிப்பில் இருக்கும் படகுகளுக்கு

2023 ஜனவரி 11]

தகவல் தெரிவித்திடவும், ஆபத்து காலங்களில் உதவிகள் புரிந்திடும்பொருட்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (Indian Space Research Organization–ISRO) *மூலம் டிரான்ஸ்பாண்டர்* (Transponder) *எனும் கருவியை உருவாக்கியுள்ளது. சென்னை, கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை சேர்ந்த 507 விசைப்படகுகளில் சோதனை அடிப்படையில் டிரான்ஸ்பாண்டர்கள் பொருத்தப்பட்டுள்ளன. வரும் ஆண்டுகளில் ரூ.18.01 கோடி திட்ட மதிப்பீட்டில் தமிழகத்தில் உள்ள 4,997 மீன்பிடி விசைப்படகுகளிலும் இக்கருவிகள் பொருத்தும் பணி மேற்கொள்ளப்படும்.*

82—

கச்சத் தீவு ஆலயத் திருவிழா

வினா எண் 55128—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கச்சத் தீவில் நடைபெறும் புனித அந்தோணியார் ஆலயத் திருவிழாவில் தமிழக மீனவர்கள் நிரந்தரமாக ஒவ்வோர் ஆண்டும் கலந்துகொள்ள ஒன்றிய அரசுக்கு வலியுறுத்த மாநில அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011 ஆம் ஆண்டு முதல் இதுவரை கச்சத் தீவில் நடைபெறும் புனித அந்தோணியார் ஆலயத் திருவிழாவில் தமிழக பக்தர்கள் ஒவ்வோர் ஆண்டும் தவறாமல் கலந்துகொண்டு வருகின்றனர். கொரோனா நோய் தொற்று பரவல் காரணமாக 2021 ஆம் ஆண்டு மட்டும் கலந்து கொள்ளவில்லை. 2022 ஆம் ஆண்டு 76 தமிழக பக்தர்கள் கச்சத் தீவில் நடைபெற்ற புனித அந்தோணியார் ஆலயத் திருவிழாவில் கலந்து கொண்டனர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2023 ஜனவரி 11

83—

சிறப்பு சலுகைகள்

வினா எண் 29344—திரு. இரா. அருள்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம், தும்பல் அடுத்த சின்னதண்டா, பெரியதண்டா பகுதிகளில் உள்ள லம்பாடி இன மக்களுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கவும், கல்வி, பொருளாதார வசதிகள் மேம்படவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

லம்பாடி வகுப்பினர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக வகைப்படுத்தப்பட்டு, பிற்படுத்தப்பட்டோர் பெயர்ப் பட்டியலில் வ.எண் 64–ல் இடம் பெற்றுள்ளது. பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மக்களுக்கு அரசால் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை, கல்வி விடுதிகள், இலவச வீட்டுமனைப் பட்டா, 11 ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கான மிதிவண்டி வழங்குதல், தேய்ப்புப் பெட்டி, தையல் இயந்திரம் வழங்குதல் போன்ற அனைத்து திட்டங்களின்கீழ் சலுகைகள் பெற்று பயனடைந்து வருகின்றனர்.

84—

கிடங்குகள் அமைத்தல்

வினா எண் 26038—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தொகுதிக்குட்பட்ட வாணியங்குடி, பெரிய கண்ணணூர், வேம்பத்தூர், சாத்தரசன்கோட்டை, வேப்பங்குளம் ஆகிய ஊர்களில் அமைந்துள்ள DPC நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு இடம் ஒதுக்கி கிடங்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வாணியங்குடி, பெரிய கண்ணனூர், வேம்பத்தூர் மற்றும் சாத்தரசன்கோட்டை ஆகிய கிராமங்களில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகள் சுமார் 30 கி.மீ. தொலைவில் உள்ள திருப்புவனம் கிடங்கில் அமைந்துள்ள 10,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புமையத்தில் சேமிக்கப்பட்டு வருகிறது. (தற்போது Semi covered shed *மற்றும்* Plinth *அமைக்கப்பட்டு வருகிறது.) எனவே, சிவகங்கை தொகுதிக்குட்பட்ட வாணியங்குடி, பெரிய கண்ணனூர், வேம்பத்தூர், சாத்தரசன்கோட்டை, வேப்பங்குளம் ஆகிய ஊர்களில் அமைந்துள்ள நெல் கொள்முதல் நிலையங்களுக்கென தனித்தனியாக சேமிப்புக் கிடங்கு அமைப்பதற்கு தற்போது அவசியம் எழவில்லை.*

85—

பொருட்கள் வழங்குதல்

வினா எண் 38677—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குடும்ப அட்டைதாரர்களுக்கு மீண்டும் கோதுமை மாவு, ரவை, உளுத்தம் பருப்பு, மசாலா பொருட்கள் நியாயமான விலையில் நியாய விலைக் கடைகள்மூலம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் அனைத்து மக்களுக்கும் உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து கிடைப்பதை உறுதி செய்யும்பொருட்டு அனைவருக்குமான பொது

[*2023 ஜனவரி 11*

விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி, கோதுமை, சர்க்கரை ஆகிய இன்றியமையா பொருள்கள் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், குடும்ப அட்டைதாரர்களுக்கு மீண்டும் கோதுமை மாவு, ரவை, உளுத்தம் பருப்பு, மசாலா பொருட்கள் போன்றவற்றை நியாயமான விலையில் நியாயவிலைக் கடைகள்மூலம் வழங்கும் திட்டம் தற்போது இல்லை.

86—

கிராம அதிகாரிகளிடம் வாங்கும் சான்றினை இரத்து செய்தல்

வினா எண் 38680—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்க கொடுக்கப்படும் சான்றிதழ்களில் கிராம அதிகாரிகளிடம் வாங்கும் சான்றுகளை இரத்து செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டமானது கணினிமயமாக்கப்பட்டு 1–4–2017 முதல் பழைய காகிதக் குடும்ப அட்டைக்கு பதிலாக, ஆதார் எண் மற்றும் கைபேசி எண் பதிவு அடிப்படையில் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. புதிய மின்னணு குடும்ப அட்டை மற்றும் குடும்ப அட்டை தொடர்பான இதர சேவைகளுக்கு இத்துறையின் www.tnpds.gov.in *என்ற இணையதளம் வாயிலாக உரிய ஆவணங்களை பதிவேற்றம் செய்து விண்ணப்பிக்க வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

2023 ஜனவரி 11]

இருப்பிட முகவரிக்கு ஆதாரமாக ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, எரிவாயு நுகர்வோர் அட்டை, வங்கி கணக்கு புத்தகம் உள்ளிட்ட 14 ஆவணங்களில் ஏதேனும் ஒன்றினை பதிவேற்றம் செய்துகொள்ளலாம். பெயரினை சேர்க்க ஆதார் அட்டை/பிறப்பு சான்று பதிவேற்றம் செய்யப்படவேண்டும். மேற்குறிப்பிட்டுள்ள ஆவணங்களில் கிராம அதிகாரிகளின் கையொப்பம், தனியாக சான்றிதழை பெற வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு, குடும்ப அட்டைகள் வழங்க கொடுக்கப்படும் சான்றிதழ்களில் கிராம அதிகாரிகளிடம் வாங்கும் சான்றினை இரத்து செய்வது தொடர்பான கேள்வி எழவில்லை.

87—

நுகர்வோர் நலன்

வினா எண் 48864—திரு. இரா. அருள்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் செக்கு எண்ணெய் என்ற பெயரில் பல பகுதிகளில் விற்கப்படும் சமையல் எண்ணெயினை ஆய்வு செய்து நுகர்வோர் நலனை பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

இந்தியாவில் உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம், 2006 நாடு முழுவதும் 5–8–2011 முதல் அமல்படுத்தப்பட்டது. தமிழகத்தில் 22–12–2011 முதல் உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம், 2006 மற்றும் விதிகளையும் நடைமுறைப்படுத்தும் வகையில் தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் செக்கு எண்ணெய் என்ற பெயரில் விற்பனை செய்யப்படும் போலி எண்ணெய் வகைகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க மாவட்ட நியமன அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதன்படி மாவட்ட நியமன அலுவலர்கள்

தலைமையில் உணவுப் பாதுகாப்பு அலுவலர்கள் தொடர் ஆய்வு மற்றும் திடீர் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான ஆய்வுகளின்போது தரமற்றவை மற்றும் தப்புக்குறியீடு உடையவை என்று பெறப்பட்ட ஆய்வறிக்கை முடிவுகளின் அடிப்படையில் மேற்கண்ட எண்ணெய் வகைகளை விற்பனை செய்ததற்காக அவர்கள்மீது உரிமையியல் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்படுகின்றன. தீர்ப்புகளின் அடிப்படையில் அபராதம் வசூலித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்படி எண்ணெய் வகைகளை விற்பனை செய்யும் உணவு வணிகர்கள்மீது புகார் தெரிவிக்கும்பொருட்டு உணவு பாதுகாப்புத் துறை ஆணையரகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள புலனம் புகார் (Whatsapp Complaint) எண் 9444042322 என்ற எண்ணிற்கு புகார் தெரிவித்தால், புகாரினை சம்பந்தப்பட்ட மாவட்ட நியமன அலுவலருக்கு அனுப்பி புகார் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுத்து அதன் விவரங்கள் மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்படும்.

88—

வணிகர்களுக்கு அடிப்படை வசதிகள்

வினா எண் 25400—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிக வரி அலுவலகங்களுக்கு வரும் வணிகர்களுக்கு தேவையான வரிகள் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் அடிப்படை வசதிகளை செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வணிகர்களுக்கு தேவையான வரிகள் தொடர்பான தகவல்கள்/செய்திகள் வணிக வரித் துறை வலைத்தளத்தில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்பட்டு,

2023 ஜனவரி 11]

வழங்கப்பட்டு வருகிறது. இவ்வகையில் வணிகர்கள் விழிப்புணர்வுடன் இருக்கத் தேவையான நடவடிக்கைகள் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வணிக வரித் துறையில் 2011–12 ஆம் ஆண்டு முதல் கட்டடப்பட்டுள்ள அனைத்து புதிய அரசுக் கட்டடங்களிலும் போதுமான அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் பழைய வணிக வரிக் கட்டடங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

89—

புதிய கட்டடம்

வினா எண் 25403—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி நகரத்தில் உள்ள வணிக வரிகள் துணை அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி நகரத்தில் உள்ள வணிக வரிகள் துணை அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட உரிய அரசு புறம்போக்கு நிலம் தேர்வு செய்து தருமாறு திருத்துறைப்பூண்டி வட்டாட்சியரிடம் கோரப்பட்டுள்ளது. நிலம் தேர்வு செய்யப்பட்டவுடன் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும்.

90—

உதிரி பாகங்கள் வரியை குறைத்தல்

வினா எண் 49474—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

சிறு தொழில் நிறுவனங்களை பாதிக்கும் வாகன உதிரி பாகங்களுக்கான வரியை 28%–லிருந்து 15% ஆக குறைக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்த முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

வாகன உதிரி பாகங்களின்மீது விதிக்கப்படும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை 28%–லிருந்து குறைப்பது தொடர்பான கருத்துரு பொருத்துகைக் குழுவினால் (Fitment Committee) *ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இப்பொருள் தொடர்பாக 37–வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, வாகன உதிரி பாகங்களின்மீது விதிக்கப்படும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரியில் மாற்றம் செய்யத் தேவையில்லை என்ற பொருத்துகைக் குழுவின்* (Fitment Committee) *பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே, வரி குறைப்பு குறித்து சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தில் அனைத்து மாநிலங்களும் விவாதித்த பிறகுதான் முடிவெடுக்க இயலும்.*

91—

தமிழில் பயின்றவர்களுக்கு முன்னுரிமை

வினா எண் 36045—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் ஆரம்ப கல்வி முதல் கல்லூரி கல்வி வரை தமிழில் பயின்றவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளித்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் பணி நியமனங்களில், தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசு பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டம் இயற்றப்பட்டது. நேரடி நியமனத்திற்கான காலிப் பணியிடங்களில், நூற்றுக்கு இருபது விழுக்காடு பணியிடங்களை தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்வதற்கு அச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டது.

அதன்பின்னர், குறிப்பிட்ட பதவிக்கென ஏற்படுத்தப்பட்டுள்ள பணி விதிகளில், நேரடி நியமன முறைக்காக வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதி வரை தமிழ் வழியில் பயின்றவர்கள் மட்டுமே மேற்குறிப்பிட்ட 20 விழுக்காடு முன்னுரிமை ஒதுக்கீட்டிற்கு தகுதியுடையவர்கள் என்ற வகையில் திருத்தச் சட்டத்தின் மூலமாக உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை W.P.(MD) No.8025/2020–ல் 22–3–2021 அன்று வழங்கிய தீர்ப்பிற்குட்பட்டு மேற்படி சட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரசாணை (நிலை) எண் 82, மனிதவள மேலாண்மை (எஸ்) துறை, நாள் 16–8–2021–ல் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

எனவே, தமிழகத்தில் ஆரம்ப கல்வி முதல் கல்லூரிக் கல்வி வரை தமிழில் பயின்றவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளித்து அரசு ஏற்கெனவே ஆணைகள் பிறப்பித்து, அவை தற்போது நடைமுறையிலும் பின்பற்றப்பட்டு வருகின்றன.

92—

கல்வி மேம்பாட்டுத் திட்டம்

வினா எண் 21399—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

(அ) சிறுபான்மை இன மகளிர் பயனடையும் வகையில் சிறப்பு சலுகைகளுடன் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பள்ளி முதல் தொழிற்கல்வி, ஆராய்ச்சிப் படிப்பு வரை அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் கிறித்துவர், இஸ்லாமியர், சீக்கியர், புத்த மதத்தினர், பார்சி மற்றும் சமண மதங்களைச் சார்ந்த சிறுபான்மையின மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ஒன்றிய அரசின் கீழ்க்காணும் கல்வி உதவித்தொகை திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

i. பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகைத் திட்டம்

ii. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகைத் திட்டம் (மற்றும்)

iii. தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை திட்டம்

2. மேற்படி கல்வி உதவித் தொகைத் திட்டங்கள் 100 சதவீதம் ஒன்றிய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகின்றன. மொத்த கல்வி உதவித்தொகையில், ஒவ்வொரு சிறுபான்மையின உட்பிரிவில் குறைந்தபட்சம் 30 சதவீதம் மாணவிகளுக்கு ஒதுக்கப்படுகின்றது.

3. மேலும், சிறுபான்மையின சமூகத்தைச் சார்ந்த கல்வியில் சிறந்து விளங்கும் மாணவிகளை அங்கீகரித்து அவர்கள் பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பினைத் தொடர்ந்து பயில ஊக்கம் அளிக்கும் வகையில் “பேகம் ஹஸ்ரத் மஹால் தேசிய கல்வி உதவித்தொகைத் திட்டம்” ஒன்றிய அரசின் 100 சதவீத நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 9 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை ஆண்டுக்கு ரூ.5,000/–மும், 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு வரை ஆண்டுக்கு ரூ.6,000/–மும் மாணவிகளின் வங்கிக்கணக்கில் நேரடி பயன்மாற்று முறையில்

(Direct Benefit Transfer–DBT) *வழங்கப்பட்டு வருகிறது. இக்கல்வி உதவித் தொகையில் சேர்க்கை, கற்பிக்கும் கட்டணம், புத்தகங்கள், எழுது பொருள் மற்றும் உண்டி, உறைவிடம் ஆகிய செலவினங்கள் அடங்கும்.*

4. மேலும், "புதிய வெளிச்சம்" (Nai Roshini) *என்ற இத்திட்டத்தின்கீழ் சிறுபான்மையின பெண்களுக்கு தன்னம்பிக்கை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல் அப்பகுதியில் வசிக்கும் பிற சமூக மக்களிடையே கருத்துப் பரிமாற்றத்தை ஊக்கப்படுத்தும் விதமாகவும் அரசு, பொது அலுவலகங்கள், வங்கிகளில் தன்னம்பிக்கையுடனும், பொது அறிவுடனும் அணுகுவதற்கு ஏற்ற பயிற்சியினை ஒன்றிய அரசால் தேர்வு செய்யப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்மூலம் அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தலைமைத்துவம், சுகாதாரம், தூய்மை பாரதம், நிதி அமைப்பு, வாழ்க்கைத் திறன், டிஜிட்டல் முறை கல்வியறிவு, ஆலோசனை போன்ற பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.*

93—

சிறுபான்மை இனத்தவர்கள் மேம்பாடு

வினா எண் 21402—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கல்வி, வேலைவாய்ப்புகளில் சிறுபான்மை இனத்தவர் உரிய பங்கினைப் பெற மத்திய அரசை வலியுறுத்த அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *சச்சார் கமிட்டி பரிந்துரைகளில் ஒன்றான சிறுபான்மையின மக்கள் கல்வி மற்றும் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைந்திட ஏதுவாக ஏற்கெனவே சிறுபான்மையினர்*

அதிகமாக வாழும் பகுதிகள் என சிறுபான்மையினர் நல அமைச்சகத்தால் கண்டறியப்பட்டுள்ள 4 ஊராட்சிகள் மற்றும் 18 நகர்ப்புறங்களில் மத்திய மற்றும் மாநில அரசின் நிதி பங்களிப்புடன் (60:40) பிரதம மந்திரியின் சிறுபான்மையினருக்கான மக்கள் மேம்பாட்டுத் திட்டம் (Pradhan Mantri Jan Vikas Karyakram–PMJVK) எனும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

2. இத்திட்டத்தின்கீழ் சமுதாயக் கூடம் அமைத்தல், உண்டி–உறைவிடப் பள்ளி, திறன்மிகு வகுப்பறை (Smart Class), அரசு தொழிற்பயிற்சி நிலையம்/தொழில்நுட்பக் கூடங்களில் கூடுதல் வகுப்பறைகள் அமைத்தல், சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல், அரசு பள்ளிகளுக்கு கட்டடங்கள், பல்வகை தொழில்நுட்ப கல்லூரிகள், வேலைக்கு செல்லும் பெண்களுக்கு விடுதிகள் அமைத்தல், மத்திய மாநில அரசின் பல்கலைக்கழகங்களில் மாணவர் விடுதிகள் மற்றும் சிறப்பு வகுப்புகள் உருவாக்குதல், அரசு அங்கீகரித்துள்ள மதரசா பள்ளிகளுக்கு இணைய வசதியுடன்கூடிய கணினிகள் வழங்குதல் மற்றும் மத்திய அரசின் சிறுபான்மையினர் நல அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரப்படுகின்றன.

3. மேலும், சிறுபான்மையின மக்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும்பொருட்டு மத்திய அரசின் மூலம் "கற்போம் பொருள் ஈட்டுவோம்" (Seekho Aur Kamao) என்ற திட்டத்தின்கீழ் சிறுபான்மையின இளைஞர்களின் திறன் அறிவை மேம்படுத்தும் வகையில் அவர்களின் கல்வித்தகுதியை அடிப்படையாகக் கொண்டு சுய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில் மத்திய அரசால் தெரிவுசெய்யப்பட்ட கல்வி நிறுவனங்கள்மூலம் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

4. மேலும், "புதிய வெளிச்சம்" (Nai Roshini) என்ற திட்டத்தின்கீழ் சிறுபான்மையின பெண்களுக்கு தன்னம்பிக்கை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், அப்பகுதியில் வசிக்கும் பிற சமூக மக்களிடையே கருத்துப் பரிமாற்றத்தை ஊக்கப்படுத்தும் விதமாகவும் அரசு, பொது அலுவலகங்கள், வங்கிகளில் தன்னம்பிக்கையுடனும், பொது அறிவுடனும் அணுகுவதற்கு ஏற்ற பயிற்சியினை மைய அரசால் தேர்வு செய்யப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்மூலம் அளிக்கப்பட்டு வருகிறது.

2023 ஜனவரி 11]

இத்திட்டத்தின்கீழ் தலைமைத்துவம், சுகாதாரம், தூய்மை பாரதம், நிதி அமைப்பு, வாழ்க்கைத் திறன், டிஜிட்டல் முறை கல்வியறிவு, ஆலோசனை போன்ற பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

94—

புனித ஹஜ் பயணம்

வினா எண் 49467—திரு. இரா. அருள்: மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புனித ஹஜ் பயணம் செல்லும் இஸ்லாமியர்களுக்கு சென்னை விமான நிலையத்திலிருந்து பயணிக்க அரசு வழிவகை செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்:

1987 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான்–நிக்கோபார் தீவுகள் ஆகியவற்றைச் சேர்ந்த ஹஜ் பயணிகள் சென்னை விமான நிலையத்திலிருந்து புனித ஹஜ் பயணம் மேற்கொண்டார்கள். கொரோனா பெருந்தொற்று காரணமாக, ஒன்றிய சிறுபான்மையினர் விவகாரத் துறை அமைச்சகம் இந்தியாவிலுள்ள ஹஜ் புறப்பாட்டுத் தளங்களை 21–லிருந்து 10 ஆக குறைத்துள்ளது. இதன் விளைவாக, ஹஜ் 2022–க்காக தமிழ்நாட்டைச் சார்ந்த புனித பயணிகளுக்கு சென்னைக்குப் பதிலாக கொச்சி விமான நிலையம் புறப்பாட்டுத்தளமாக அறிவிக்கப்பட்டது. தமிழ்நாடு ஹஜ் பயணிகளின் சிரமத்தை கவனத்தில்கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், மாண்புமிகு ஒன்றிய சிறுபான்மையினர் விவகாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தனது கடிதத்தின் வாயிலாக சென்னையை மீண்டும் புறப்பாட்டுத்தளமாக மாற்றித் தருமாறு கேட்டுக் கொண்டார்கள். இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு ஒன்றிய சிறுபான்மையினர் விவகாரத் துறை அமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில், 2023 ஆம் ஆண்டு முதல் ஹஜ் பயணம்

[2023 ஜனவரி 11

மேற்கொள்ளும் தமிழ்நாடு ஹஜ் பயணிகளுக்கு சென்னை விமான நிலையத்தை புறப்பாட்டுத்தளமாக அறிவிப்பது குறித்த நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்கள்.

95—

ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 26644—திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் மேல்நிலைப் பள்ளியில் காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளி கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் தொகுதியில் உள்ள கொளத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் (பெண்கள்) அனுமதிக்கப்பட்டுள்ள ஆசிரியர் பணியிடங்களில் முதுகலை ஆசிரியர் பொருளியல் பணியிடம் மட்டும் 29–4–2022 முதல் காலியாக உள்ளது. இப்பணியிடம் தவிர வேறு எந்த ஆசிரியர் பணியிடங்களும் காலியாக இல்லை. மேலும், எதிர்வரும் ஆசிரியர் தேர்வு வாரிய நியமனம் அல்லது பொது மாறுதல் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வுமூலம் இப்பணியிடத்தை நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

96—

உடல் உழைப்பு தொழிலாளியாக மடை மாற்றம்

வினா எண் 30531—திரு. இரா. அருள்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

தமிழகத்தில் வேலையில்லா இளைஞர்களை உடல் உழைப்பு தொழிலாளியாக மடை மாற்றம் செய்து வேலைவாய்ப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

உடலுழைப்பு தொழிலாளராக பணிபுரிய வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் விருப்பம் தெரிவித்தால் மட்டுமே அவர்களுக்கு அப்பணிகளை வழங்க இயலும். வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் விருப்பம் தெரிவிக்கும் நேர்வில் அவர்கள் விரும்பும் தொழில்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வாயிலாக உரிய திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அதன் அடிப்படையில் தனியார் துறைகளில் பணி நியமனம் பெற வழிவகை செய்யப்படும். மேலும், இவ்வாறு உடலுழைப்பு அடிப்படையிலான பணிகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவிக்கும் இளைஞர்களுக்கு சுயமாக அத்தொழிலினை சுயவேலைவாய்ப்பு அடிப்படையில் மேற்கொள்ளவும், அவ்வாறான தொழில்முனைவோர்களுக்கு அரசால் வழங்கப்படும் கடனுதவிகள் தொடர்பிலும் விழிப்புணர்வு அளிக்கப்படும். மேலும், தமிழ்நாடு அரசால் மாவட்ட தொழில் மையம்மூலம் வழங்கப்படும் சுயவேலைவாய்ப்பு விருப்பம் தெரிவிப்போரின் தொழில் விவரங்கள் பெறப்பட்டு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையங்களால் பரிந்துரைக்கப்படுகிறது.

97—

புதுமுகத் தொழில்முனைவோர் அமைப்புகள்

வினா எண் 30650—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் புதுமுகத் தொழில்முனைவோர் அமைப்புகள் உருவாக்கி, செயற்கை அறிவு உள்ளிட்ட துறைகளில் வேலைவாய்ப்பளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுமுகத் தொழில் முனைவோர் அமைப்புகள் உருவாக்குதல் வேலைவாய்ப்பு பிரிவின்கீழ் உள்ள பணிகளில் அமையாது. மேலும், செயற்கை அறிவு உள்ளிட்ட துறைகளில் ஏற்படும் காலிப் பணியிடங்கள் குறித்து வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு கேட்பு செய்யப்படாத நேர்வுகளில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள்மூலம் இத்தகைய காலிப் பணியிடங்களுக்கு பரிந்துரை செய்ய இயலாத நிலை உள்ளது.

98—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 35937—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, தீவனூர் பகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிறுவனம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி அமைந்துள்ள விழுப்புரம் மாவட்டத்தில் செயல்பட்டுவரும் ஓர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் 20 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஒப்பளிக்கப்பட்ட 1,622 இருக்கைகளுடன் (2021–ன்படி) செயல்பட்டு வருகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட இருக்கைகளில், 42% இருக்கைகள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது செயல்பட்டுவரும் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே

2023 ஜனவரி 11]

போதுமானதாக உள்ளதால், விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதிக்குட்பட்ட தீவனூரில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

99—

தொழிற்பயிற்சி மையம்

வினா எண் 36034—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, குளச்சலில் மாற்றுத் திறனாளிகளுக்கான தொழிற்பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள குளச்சல் தொகுதியில் செயல்பட்டு வரும் இரண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 644 மொத்த இருக்கைகளில், மாற்றுத் திறனாளிகளுக்கென ஒதுக்கப்பட்ட 5% இட ஒதுக்கீட்டில் அதாவது 32 இருக்கைகளில், 31 இருக்கைகள் காலியாக உள்ளன. மேலும், நாகர்கோவில் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பிரத்தியேகமாக காது கேளாதோர் மற்றும் வாய்ப் பேச இயலாதோருக்கென துவங்கப்பட்ட பிட்டர் தொழிற்பிரிவில் 2022 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட 20 இருக்கையில், 12 இருக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு, 8 இருக்கைகள் காலியாக உள்ளன. எனவே, குளச்சல் தொகுதி, குளச்சலில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், அப்பகுதியில் மாற்றுத் திறனாளிகளுக்கென அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

[2023 ஜனவரி 11

100—

சாதிச் சான்றிதழ்

வினா எண் 25355—திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டியலினத்தில் உள்ள ஏழு உட்பிரிவு கொண்டவர்களுக்கு "தேவேந்திரகுல வேளாளர்" என சாதிச் சான்றிதழ் விரைந்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 50, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சா.மெ. 1) துறை, நாள் 1–6–2021–ல் தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் என பட்டியலிடப்பட்டுள்ள தேவேந்திர குலத்தான், கடையன் (திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள கடற்கரையோர பகுதிகளைத் தவிர) காலாடி, குடும்பன், பள்ளன், பண்ணாடி, வாதிரியான் ஆகிய இனங்களை ஒன்றாக இணைத்து ஒரே பெயரில் "தேவேந்திரகுல வேளாளர்" என அழைப்பது தொடர்பாகவும் திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் உள்ள கடையன் இனத்தவரை கடையன் என அழைக்கவும் இந்திய அரசால் வெளியிடப்பட்ட அறிவிக்கையை அனைவரும் அறியும் வண்ணம் அரசு ஆணையாக வெளியிடப்பட்டுள்ளது. மேலும், ஆதி திராவிடர் இன மக்கள் சாதிச்சான்று கோரும்போது அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படி சாதிச்சான்று வழங்கவும், இணையம் (online) மூலமாகவும் வழங்க அரசு நேர்முக கடித எண் 8968/சா.மெ.1/2021–1, நாள் 10–6–2021–ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அரசாணையின்படி ஆதி திராவிடர் இன மக்கள் சாதிச்சான்று கோரும்போது மேற்படி அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படி அரசமைப்பு

2023 ஜனவரி 11]

(ஆதி திராவிடர்) ஆணை (திருத்தப்பட்ட) சட்டம், 2021 என்று குறிப்பிட்டு மின்னணு சான்றிதழில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளுமாறும், இது தொடர்பான புகார்கள் எழாதவாறு சாதிச்சான்றுகள் வழங்கிட வருவாய் அலுவலர்களுக்கு உரிய அறிவுரை வழங்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் தக்க தெளிவுரை வழங்குமாறு அரசு நேர்முக கடித எண் 9743/ சா.மெ.1/2021–1, நாள் 26–6–2021–ல் கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை–5–க்கு மீண்டும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பட்டியல்-3

1—

காவிரி உப வடிநில புனரமைப்பு

வினா எண் 11306—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காவிரி உப வடிநில புனரமைப்பின் தற்போதைய நிலையை தெரிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவிரி உப வடிநிலப் பகுதியில் பாசன கட்டுமானங்களை விரிவுபடுத்துதல், புனரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல் திட்டத்தின்கீழ் 33 சிப்பங்கள் ரூ.3,384.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்து பணிகளையும் 2024–2025–க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன.

2—

குடிமராமத்துப் பணி

வினா எண் 14436—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் கன்னங்குறிச்சி மூக்கனேரி முதல் அணைமேடு வரை ஆற்றின் இருபுறமும், குடிமராமத்துப் பணி செய்து நீர் தங்குதடையின்றி செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

சேலம் கன்னங்குறிச்சி மூக்கனேரி முதல் அணைமேடு வரை ஆற்றின் இருபுறமும், குடிமராமத்து திட்டத்தின்கீழ் ரூ.25.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, சீரமைக்கும் பணி நிறைவேற்றப்பட்டுள்ளது.

3—

ஆகாயத் தாமரை செடிகளை அகற்றுதல்

வினா எண் 17568—திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஸ்ரீவைகுண்டம் அணையில் படர்ந்துள்ள ஆகாயத் தாமரை செடிகளை நிரந்தரமாக அகற்ற விஞ்ஞானரீதியாக அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

ஸ்ரீவைகுண்டம் அணையில் படர்ந்துள்ள ஆகாயத் தாமரை செடிகள் அவ்வப்போது அகற்றப்பட்டு வருகின்றன. மேலும், வாய்க்கால்களில் தண்ணீர் செல்வதற்கான இடையூறு ஏதும் ஏற்படாவண்ணம் ஆகாயத் தாமரை செடிகளை அகற்றி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

4—

சீமைக் கருவேல மரங்களை அகற்றுதல்

வினா எண் 17574—திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

தாமிரபரணி ஆற்றில் படர்ந்துள்ள சீமைக் கருவேல மரங்களை அகற்றி, கரையில் பனை உள்ளிட்ட பாரம்பரியமிக்க மரங்களை நட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தாமிரபரணி ஆற்றில் படர்ந்துள்ள சீமைக் கருவேல மரங்களை அகற்றுவதற்கு நீர்வளத் துறைமூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், பனைப் பொருள் நல வாரியத்தின்மூலம் பனை விதைகள் பெற்று, பனை மரங்கள் நடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

5—

தெற்காறு–குண்டாறு இணைப்புத் திட்டம்

வினா எண் 18201—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருதுநகர் மாவட்டம், தெற்காறு–குண்டாறு இணைப்புத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், குண்டாறு–தெற்காறு இணைப்பு நீர்த்தேக்கத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் கவுண்ட நதி மற்றும் தெற்காறு இணைப்பிற்கு அருகே அமைந்துள்ள புதுப்பட்டி கிராமம் நீர்ப்பிடிப்பு பகுதியில் மூழ்கும் நிலை உருவாகும். காவிரி–வைகை–குண்டாறு நதிநீர் இணைப்புக் கால்வாயானது கவுண்ட நதி மற்றும் தெற்காறு இணைப்பிற்கு சற்றே கீழ்ப்புறம் குண்டாற்றில் கலக்கிறது. எனவே, குண்டாறு–தெற்காறு இணைப்பு நீர்த்தேக்கத் திட்டம் தொழில்நுட்பரீதியாக சாத்தியமில்லை.

TRUTH ALONE TRIUMPHS

[2023 ஜனவரி 11

6—

நீரேற்றுத் திட்டம்

வினா எண் 18207—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி வறட்சிப் பகுதிக்கு நீரேற்றுத் திட்டம்மூலம், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் அணையின் வெள்ள உபரிநீரை சேலம் மாவட்டத்திலுள்ள வறண்ட ஏரிகளுக்கு நீரேற்றுமூலம் நீர் வழங்கும் திட்டம் தற்போது முடிவடையும் நிலையிலுள்ளது. மேச்சேரி வறட்சிப் பகுதியை இத்திட்டத்தில் சேர்ப்பது குறித்து ஆராய்ந்து சாத்தியக்கூறுகள் இருப்பின் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

7—

கால்வாயில் நீர் திறத்தல்

வினா எண் 18348—திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதியில் 58 கிராம கால்வாயில் நீர் திறக்க நிரந்தர ஆணை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் 58 கிராம கால்வாயில் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ள

2023 ஜனவரி 11]

அரசாணையின்படி வைகை அணையும், இராமநாதபுரம் பெரிய கண்மாயும் முழு கொள்ளளவு எட்டி மறுகால் பாயும்பொழுது மட்டுமே நீர் திறக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

8—

சிமென்ட் வாய்க்கால்

வினா எண் 18349—திரு. பி. அய்யப்பன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *உசிலம்பட்டி தொகுதி, 58 கிராம கால்வாயில் சிமென்ட் வாய்க்கால் அமைத்து 35 கிராம கண்மாய்களுக்கு நீர் திறந்துவிட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் 58 கிராம கால்வாயில் சிமென்ட் வாய்க்கால் அமைத்து 35 கண்மாய்களுக்கு நீர் திறந்துவிட அரசிடம் தற்பொழுது திட்டம் ஏதுமில்லை.*

9—

தடுப்புச் சுவர்

வினா எண் 23087—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூர் வட்டம், நல்லகுட்டியார் குளம், கிருஷ்ணாபுரம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள நல்லகுட்டியார் குளம் மடையின் அருகே தடுப்புச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், கடையநல்லூர் தொகுதி, கிருஷ்ணாபுரம் கிராமத்தில் உள்ள நல்லகுட்டியார் குளத்தின் மடையின் அருகே தடுப்புச் சுவர் 2021–2022 ஆம் ஆண்டு நீர்வளத் துறையின் பராமரிப்பு நிதியினைக் கொண்டு கட்டப்பட்டு, தற்போது நல்லமுறையில் உள்ளது.

10—

படகு சவாரி

வினா எண் 23430—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட தாமிரபரணியாற்றில் படகு சவாரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட தாமிரபரணி ஆற்றின் இரு கரைகளையும் இணைக்கும் வகையில் பாலங்கள் அமைந்துள்ளன. மேலும், ஆற்றில் அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்படுவதால் படகு சவாரி ஏற்படுத்துவதற்கான வழிவகை இல்லை.

11—

சீரமைப்புப் பணிகள்

வினா எண் 23448—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் அடப்பாறு மற்றும் அரிச்சந்திரா ஆறுகளில் நடைபெற்று வரும் சீரமைப்புப் பணிகள் முழுவதையும் விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் அடப்பாறு மற்றும் அரிச்சந்திரா ஆறுகள் ஆசிய வளர்ச்சி வங்கித் திட்டத்தின்மூலம் ரூ.168.35 கோடி திட்ட மதிப்பீட்டில் அடப்பாறு புனரமைக்கும் பணி மற்றும் ரூ.257.74 கோடி திட்ட மதிப்பீட்டில் அரிச்சந்திரா நதி புனரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதில் அடப்பாறு மற்றும் அரிச்சந்திரா ஆறுகள் தூர்வாரப்பட்டு இரண்டு கரைகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன. இதில் பாசன மதகுகள், வடிகால் மதகுகள், கடைமடை ரெகுலேட்டர்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

12—

தடுப்பணை

வினா எண் 23460—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மழைக் காலங்களில் வீணாக கடலுக்குச் செல்லும் உபரிநீரை தேக்கி பயன்படுத்திட நிலத்தடி நீர் மேம்பட காவிரி ஆற்றின் குறுக்கே மேட்டூர் அணைக்குக்கீழ் 5 கி.மீ.–க்கு ஒரு தடுப்பணை வீதம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் அணையின் கீழ் பகுதியில் சோழசிராமணி வரை (Downstream) *9 கி.மீ.–க்கு 1 கதவணை என்ற விகிதத்தில் 7 கதவணைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், முதலில் உள்ள தடுப்பணை மின் நிலையத்தின்* Tailrace*–ம் அடுத்தடுத்துள்ள தடுப்பணையின்* FRL*–ம் ஒரே மட்ட அளவில் உள்ளன. எனவே, 5 கி.மீ.–க்கு ஒரு தடுப்பணை கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.*

[*2023 ஜனவரி 11*

13—

சாலை விரிவாக்கம்

வினா எண் 23491—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல் பூக்கடை சாலையில் உள்ள இரண்டு குளங்களின் இருபுறமும் தடுப்புச் சுவர் அமைத்து சாலையை விரிவாக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல் பூக்கடை சாலையில் அமைந்துள்ள பெருவள்ளி குளத்தின் கரைகளுக்கு பாதிப்புகள் ஏற்படாவண்ணம் தடுப்புச் சுவர் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது. மேலும், சாலையை அகலப்படுத்தும் பணிகள் நீர்வளத் துறை வாயிலாக மேற்கொள்ள வழிவகை இல்லை.

14—

குழாய்கள்மூலம் தண்ணீர்

வினா எண் 26143—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கண்மாய்கள் மற்றும் குளங்களுக்கு பெரியாறு அணையிலிருந்து மேலூர் பகுதிக்கு வரும் கால்வாயை புலிப்பட்டி கிராமத்திலிருந்து சூரப்பட்டி ஊராட்சி வரை குழாய்கள்மூலம் தண்ணீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கண்மாய்கள் மற்றும் குளங்களுக்கு பெரியாறு அணையிலிருந்து மேலூர் பகுதிக்கு வரும் கால்வாயை புலிப்பட்டி கிராமத்திலிருந்து சூரப்பட்டி ஊராட்சி வரை குழாய்கள்மூலம் நீர் வழங்க வழிவகை இல்லை.

15—

கிரானைட் குவாரிகள்

வினா எண் 28827—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேலூர் தொகுதி, மேலூரில் கிரானைட் குவாரிகளை திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1. மதுரை மாவட்டத்தில் கிரானைட் குவாரிகளில் முறைகேடுகள் நடைபெற்றதாக வரப்பெற்ற புகார்களின் அடிப்படையில் மூன்று சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அம்மூன்று குழுக்களின் அறிக்கைகளுக்கிடையே அதிகப்படியான மீட்டு சதவிகித வித்தியாசம் உள்ளதால் ஓய்வுபெற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் உயர்மட்ட சிறப்புக் குழு அமைப்பது தொடர்பான நடவடிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

2. மேலும், மதுரை மாவட்டத்தில் வழக்குகளுக்கு உட்படாத அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள கிரானைட் குவாரிகளில் குத்தகை வழங்க தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள், 1959–ன்படி பொது ஏல முறையிலும், நீதிமன்ற வழக்குகளுக்கு

[2023 ஜனவரி 11

உட்படாத பட்டா நிலங்களில் வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் சமண படுகைகள் ஆகியவற்றிற்கு பாதுகாப்பு அளித்து, மேற்படி பட்டா நிலங்களில் கிரானைட் உரிமம் வழங்க தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள், 1959–ன்படி குத்தகை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

16—

சேமிப்புக் கிடங்கு

வினா எண் 25992—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி ஊராட்சி ஒன்றியம், ஆதனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய சேமிப்புக் கிடங்கு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படும் ஆதனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 100 டன் கொள்ளளவு கொண்ட இரண்டு தானியக் கிடங்குகள் உள்ளன. அதில் தற்போது விவசாயிகள் 3.00 டன் அளவிற்கு நெல்மீது தானிய ஈட்டுக் கடன் பெற்று, கிடங்கு பயன்பாட்டில் உள்ளது. புதிய கிடங்கு கட்ட தேவை எழவில்லை. மேலும், போதுமான காலியிடம் இல்லை என்பதாலும், புதிய சேமிப்புக் கிடங்கு கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

17—

உரத் தட்டுப்பாட்டைப் போக்குதல்

வினா எண் 38039—திரு. க. செல்வராஜ்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 ஜனவரி 11]

(அ) அவினாசி கூட்டுறவுச் சங்கங்களின் உரத் தட்டுப்பாட்டைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டாரத்தில் உள்ள 20 கூட்டுறவு நிறுவனங்களில் 22–9–2022 அன்று யூரியா 66.890 மெ.டன், டி.ஏ.பி. 37.050 மெ.டன், பொட்டாஷ் 46.200 மெ.டன் மற்றும் காம்ப்ளக்ஸ் 55.710 மெ.டன் என மொத்தம் 205.850 மெ.டன் அளவில் உரங்கள் இருப்பில் உள்ளன.

அவினாசி பகுதியில் விவசாயிகள் பருவ கால தேவைகளுக்கேற்ப உரங்கள் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திலிருந்து குறைவின்றி கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதால் உரத் தட்டுப்பாடு இல்லை.

18—

கூடுதல் பாடப் பிரிவுகள்

வினா எண் 27765—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, குற்றால பராசக்தி மகளிர் கல்லூரியில் கூடுதல் பாடப் பிரிவுகள் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு உதவிபெறும் கல்லூரிகளில் கூடுதல் பாடப் பிரிவுகள் தொடங்கப்படின், பணிப் பளுவின் அடிப்படையில் கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் அரசால்

[*2023 ஜனவரி 11*

ஒப்பளிக்கப்பட வேண்டும். அவ்வாறு கூடுதல் பணியிடங்களை ஒப்பளிப்பது அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டதாகும். சுயநிதிப் பாடப் பிரிவுகள் தொடங்குவது அந்தந்த கல்லூரி முகமை தேவைகளின் அடிப்படையில், சார்ந்த பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்று தொடங்கிக்கொள்ளலாம்.

19—

விதைநெல்

வினா எண் 7260—திரு. இரா. அருள்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எதிர்வரும் காலங்களில் விவசாயிகளுக்கு தரமான விதை நெல்மணிகளை வழங்கிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமைமூலம் (TANSEDA) விதைச் சட்டம், 1966-ன்படி மாநில விதைப் பண்ணைகளிலும், விவசாயிகளின் வயல்களிலும், விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்றளிப்புத் துறையின் மேற்பார்வையில் தரமான விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு கொள்முதல் செய்யப்படுகின்றன.

கொள்முதல் செய்யப்பட்ட வயல்மட்ட விதைகள் சுத்திகரிக்கப்பட்டு, விதைமணிகள் ஆய்விற்கு அனுப்பப்பட்டு முளைப்புத் திறன், இனத் தூய்மை ஆகியவை பரிசோதனை செய்யப்பட்டு, தரமானது என உறுதி செய்த பின்னர் சான்றட்டை பொறுத்தப்பட்டு விதைகள் மாநிலம் முழுவதும் உள்ள 880 வேளாண்மை விரிவாக்க மையங்கள் வாயிலாக விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் முளைப்புத் திறன் பரிசோதனை செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்ட பின்னரே விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

2023 ஜனவரி 11]

2022–2023 ஆம் ஆண்டில் தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமைமூலம் (டான்சிடா) 15,000 மெட்ரிக் டன் நெல் விதைகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

20—

மானிய விலையில் வைக்கோல்

வினா எண் 11544—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் சிப்பிக் காளான் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மானிய விலையில் வைக்கோல் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் காளான் உற்பத்தியை ஊக்குவிக்க மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (SHDS) *காளான் வளர்ப்புக் கூடம் அமைப்பதற்கான ஆரம்பகட்ட முதலீடு மற்றும் இடுபொருட்களுக்கு (வைக்கோல், நெகிழிப் பைகள், காளான் விதை, பயிர் பாதுகாப்பு மருந்துகள்) மானியம் வழங்கப்படுகிறது. மேலும், 2022–23 ஆம் ஆண்டு மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ்* (SHDS) *600 சதுர அடி அளவுள்ள காளான் வளர்ப்புக் கூடம் அமைப்பதற்கு 50 சதவீத மானியமாக ரூ.50,000/– வழங்கப்படுகிறது.*

21—

காளான் உற்பத்தி

வினா எண் 11566—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் வெப்பம் மிகுந்த மாவட்டங்களில் பால் காளான் ஏ.பி.கே. 2 (அருப்புக்கோட்டை 2) உற்பத்தியை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் பால் காளான் உற்பத்தியை ஊக்குவிக்க தோட்டக்கலைத் துறைமூலம் செயல்படுத்தப்படும் தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) மற்றும் மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டங்களின்கீழ் (SHDS) காளான் வளர்ப்புக் கூடம் அமைக்க மானியம் வழங்கப்பட்டு வருகிறது. ஆர்வமுள்ள விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்று விருப்பமுள்ள காளான் வித்துகளை உற்பத்தி செய்யலாம்.

2022–2023 ஆம் ஆண்டு தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் (NHM) காளான் உற்பத்தி செய்வதற்கான கூடம் அமைப்பதற்கு ஆகும் மொத்த செலவினமாக ரூ.20,00,000/–ல் 40 சதவீதம் மானியமாக ரூ.8,00,000/– வழங்கப்படும் மற்றும் மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (SHDS) 600 சதுர அடி காளான் வளர்ப்புக் கூடம் அமைப்பதற்கான மொத்த செலவில் 50 சதவீதம் மானியமாக ரூ.50,000/– வழங்கப்படும்.

22—

சிறுதானிய உற்பத்தி

வினா எண் 11578—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதியில் அதிகம் பயிரிடப்படும் சிறுதானிய உற்பத்தியைப் பெருக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம்– சிறுதானியங்கள் என்ற திட்டம் தருமபுரி மாவட்டம் உட்பட 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறுதானிய உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தில் சிறுதானிய இயக்கம் 2022-2023 ஆனது செயல்படுத்தப்பட நடப்பாண்டில் தருமபுரி மாவட்டத்தை தலைமையாகக் கொண்டு 8 மாவட்டங்களைக் கொண்ட ஒரு சிறுதானிய மண்டலம் மற்றும் விருதுநகர் மாவட்டத்தைத் தலைமையாகக் கொண்டு 12 மாவட்டங்களைக் கொண்ட ஒரு சிறுதானிய மண்டலம் என 2 சிறுதானிய சிறப்பு மண்டலங்கள் உருவாக்கப்படவுள்ளன என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

23—

நோய்த் தாக்குதலைக் கட்டுப்படுத்துதல்

வினா எண் 12354—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம், நாமக்கல் மாவட்டங்களில் பயிரிடப்படும் மரவள்ளிக் கிழங்கு செடிகளில் மாவுப் பூச்சி நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மரவள்ளிக் கிழங்கு செடிகளில் மாவுப் பூச்சி நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்த அந்தந்த மாவட்ட தோட்டக்கலைத் துறை அலுவலர்களால் கட்டுப்பாட்டு நடவடிக்கை குறித்த தொழில்நுட்ப அறிவுரைகள் செயல்

விளக்கங்களாகவும், துண்டு பிரசுரங்களாகவும் வழங்கப்பட்டு வருகின்றன.

2020–2021 ஆம் ஆண்டில் நாமக்கல், சேலம், ஈரோடு, கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் 3,112 எக்டர் பரப்பிலான மரவள்ளி பயிர் மாவுப் பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்தும் மருந்து தெளிப்பிற்காக ரூ.54,549 இலட்சம் தொகையும், 2021–2022 ஆம் ஆண்டில் நாமக்கல், கள்ளக்குறிச்சி, தருமபுரி, சேலம், கடலூர், ஈரோடு, திருவண்ணாமலை, கரூர், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் 8,945.25 எக்டர் பரப்பிற்கு ரூ.178.905 இலட்சம் தொகையும் வழங்கப்பட்டுள்ளது.

24—

கீரை

வினா எண் 12443—திரு. இரா. அருள்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குக்கிராமங்களிலும், ஆற்றுப்படுகைகளிலும் பலவகை கீரை பயிரிடுவதை ஊக்கப்படுத்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

2021–2022 ஆம் ஆண்டு தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கீரைகள் பயிரிடுவதை ஊக்குவிக்க, ரூ.100 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, 1,000 எக்டர் பரப்பளவில் கீரை சாகுபடி செய்ய மானியம் வழங்கப்பட்டது. மேலும், 2022–2023 ஆம் ஆண்டு மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (SHDS) *கீரைகள் பயிரிடுவதை ஊக்குவிக்க 40% மானியமாக ஏக்கருக்கு ரூ.4,000/–மும், தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்மூலம்* (NHM) *40% மானியத்தில் எக்டருக்கு ரூ.20,000/–மும் தமிழ்நாடு பாசன வேளாண் நவீனமயமாக்கல் திட்டத்தில்* (TNIAMP) *2022–2023 ஆம் ஆண்டில் உப வடிநீர் பகுதிகளில் கீரை சாகுபடியை ஊக்குவிக்க முருங்கைக் கீரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு எக்டருக்கு ரூ.20,000/–ம்வீதம் மானியம் வழங்கப்படுகிறது.*

2023 ஜனவரி 11]

25—

நவீன தொழில்நுட்பங்கள்

வினா எண் 12445—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூரில் நெல் தொழில்நுட்பப் பூங்கா அமைத்து நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு பயிற்றுவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டத்தில், நெல் பயிருக்கான நவீன சாகுபடி, பயிர் மேலாண்மை, விளைபொருள் மதிப்புக் கூட்டுதல் தொடர்பான தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சிகள், கண்டுணர்வு பயணம், செயல்விளக்கங்கள் மற்றும் பண்ணை பள்ளிகள் வாயிலாக அனைத்து மாவட்ட விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

எனவே, தஞ்சாவூரில் தனியாக நெல் தொழில்நுட்பப் பூங்கா அமைத்து நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு பயிற்றுவிப்பது தொடர்பாக அவசியம் எழவில்லை.

26—

உழவன் செயலி

வினா எண் 12465—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரிய நகரங்களில் உள்ள சந்தைகளில் விற்கப்படும் காய்கறி, பழங்களின் விலை நிலவரத்தை விவசாயிகள் அறிந்துகொள்ள வசதியாக கைபேசியில் அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

உழவர் சந்தைகளில் விற்கப்படும் காய்கறி, பழங்களின் தினசரி விலை நிலவரத்தை உழவன் செயலிமூலம் விவசாயிகள் அறிந்துகொள்ளலாம்.

27—

இலவச விதைகள்

வினா எண் 21477—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் காய்கறி விவசாயத்தை ஊக்குவிக்க நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிகள் வாயிலாக விவசாயம் செய்பவர்களுக்கு இலவசமாக விதைகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் காய்கறி விவசாயத்தை ஊக்குவிக்கும்விதமாக காய்கறி விதைகள் விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (NADP), மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் (SHDS), தமிழ்நாடு பாசன நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP), தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) ஆகிய திட்டங்களின் வாயிலாக 40% மானியத்திலும், மாண்புமிகு முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறி தோட்டத் திட்டத்தில் 50% மானியத்திலும் வழங்கப்பட்டு வருகிறது.

2023 ஜனவரி 11]
28—

மானியம்

வினா எண் 22867—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, தித்தியோப்பனஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பருத்தி பயிர் செய்யப்படும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 2021–2022 ஆம் ஆண்டில் பருத்தி உற்பத்தியை உயர்த்த ரூ.11 கோடி மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் என்ற புதிய திட்டமும், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப் பயிர்கள் திட்டத்தின்கீழ் ரூ.2.83 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் ஆக மொத்தம் ரூ.13.83 கோடி நிதி ஒதுக்கீட்டில் பருத்திக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

பெண்ணாகரம் தொகுதி, தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. 2021–2022 ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் மற்றும் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப் பயிர்கள் திட்டங்களின்கீழ் ரூ.40.26 இலட்சம் நிதி செலவில், பருத்தி சாகுபடிக்கு தேவையான நுண்ணூட்ட உரங்கள், திரவ உயிர் உரங்கள், மெக்னீசியம் சல்பேட் உரங்கள், மானாவாரி பருத்தியில் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்க பார் சால் நடவு மற்றும் அங்கக உரங்கள், தண்டு கூண் வண்டை கட்டுப்படுத்த வேப்பம் புண்ணாக்கு, இயந்திர களையெடுப்பிற்கு விசை களை எடுக்கும் கருவிகள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புக்கான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 2,733 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். பெண்ணாகரம் தொகுதிக்கு நீடித்த நிலையான பருத்தி இயக்கத்தின்கீழ் ரூ.5.18 இலட்சம்

நிதி செலவில் பருத்தி சாகுபடிக்குத் தேவையான முக்கிய இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 402 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும், பெண்ணாகரம் தொகுதியில் 2020–2021 ஆம் ஆண்டில் 107 எக்டர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. மேற்கண்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தியதால் 2021–2022 ஆம் ஆண்டில் பெண்ணாகரம் தொகுதியில் பருத்தி சாகுபடி பரப்பு 510 எக்டராக உயர்ந்தது. 2020–2021 ஆம் ஆண்டில் 231 பொதிகளாக இருந்த உற்பத்தி, 2021–2022 ஆம் ஆண்டில் 1,030 பொதிகளாக சுமார் 345% உயர்ந்துள்ளது.

எனவே, பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்கான வினா எழவில்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

29—

மானியம்

வினா எண் 22868—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, கரியப்பனஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட பள்ளிப்பட்டி கிராமத்தில் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 2021–2022 ஆம் ஆண்டில் பருத்தி உற்பத்தியை உயர்த்த ரூ.11 கோடி மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் என்ற புதிய திட்டமும், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப் பயிர்கள் திட்டத்தின்கீழ் ரூ.2.83 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் ஆக மொத்தம்

2023 ஜனவரி 11]

ரூ.13.83 கோடி நிதி ஒதுக்கீட்டில் பருத்திக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

பெண்ணாகரம் தொகுதி, தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. 2021–2022 ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் மற்றும் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப் பயிர்கள் திட்டங்களின்கீழ் ரூ.40.26 இலட்சம் நிதி செலவில், பருத்தி சாகுபடிக்குத் தேவையான நுண்ணூட்ட உரங்கள், திரவ உயிர் உரங்கள், மெக்னீசியம் சல்பேட் உரங்கள், மானாவாரி பருத்தியில் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்க பார் சால் நடவு மற்றும் அங்கக உரங்கள், தண்டு கூண் வண்டை கட்டுப்படுத்த வேப்பம் புண்ணாக்கு, இயந்திர களையெடுப்பிற்கு விசை களை எடுக்கும் கருவிகள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புக்கான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 2,733 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். பெண்ணாகரம் தொகுதிக்கு நீடித்த நிலையான பருத்தி இயக்கத்தின்கீழ் ரூ.5.18 இலட்சம் நிதி செலவில் பருத்தி சாகுபடிக்குத் தேவையான முக்கிய இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 402 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும், பெண்ணாகரம் தொகுதியில் 2020–2021 ஆம் ஆண்டில் 107 எக்டர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. மேற்கண்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தியதால் 2021–2022 ஆம் ஆண்டில் பெண்ணாகரம் தொகுதியில் பருத்தி சாகுபடி பரப்பு 510 எக்டராக உயர்ந்தது. 2020–2021 ஆம் ஆண்டில் 231 பொதிகளாக இருந்த உற்பத்தி, 2021–2022 ஆம் ஆண்டில் 1,030 பொதிகளாக 345% உயர்ந்துள்ளது.

எனவே, பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் பருத்தியை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்கான வினா எழவில்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

30—

மானியம்

வினா எண் 22875—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

(அ) பெண்ணாகரம் தொகுதி, பூகானஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட ஏர்ரப்பட்டி கிராமத்தில் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 2021–2022 ஆம் ஆண்டில் பருத்தி உற்பத்தியை உயர்த்த ரூ.11 கோடி மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் என்ற புதிய திட்டமும், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப் பயிர்கள் திட்டத்தின்கீழ் ரூ.2.83 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் ஆக மொத்தம் ரூ.13.83 கோடி நிதி ஒதுக்கீட்டில் பருத்திக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

பெண்ணாகரம் தொகுதி, தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. 2021–2022 ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் மற்றும் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப் பயிர்கள் திட்டங்களின்கீழ் ரூ.40.26 இலட்சம் நிதி செலவில், பருத்தி சாகுபடிக்கு தேவையான நுண்ணூட்ட உரங்கள், திரவ உயிர் உரங்கள், மெக்னீசியம் சல்பேட் உரங்கள், மானாவாரி பருத்தியில் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்க பார் சால் நடவு மற்றும் அங்கக உரங்கள், தண்டு கூண் வண்டை கட்டுப்படுத்த வேப்பம் புண்ணாக்கு, இயந்திர களையெடுப்பிற்கு விசை களை எடுக்கும் கருவிகள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புக்கான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 2,733 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். பெண்ணாகரம் தொகுதிக்கு நீடித்த நிலையான பருத்தி இயக்கத்தின்கீழ் ரூ.5.18 இலட்சம் நிதி செலவில் பருத்தி சாகுபடிக்குத் தேவையான முக்கிய இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 402 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும், பெண்ணாகரம் தொகுதியில் 2020–2021 ஆம் ஆண்டில் 107 எக்டர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது.

2023 ஜனவரி 11]

மேற்கண்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தியதால் 2021–2022 ஆம் ஆண்டில் பெண்ணாகரம் தொகுதியில் பருத்தி சாகுபடி பரப்பு 510 எக்டராக உயர்ந்தது. 2020–2021 ஆம் ஆண்டில் 231 பொதிகளாக இருந்த உற்பத்தி, 2021–2022 ஆம் ஆண்டில் 1,030 பொதிகளாக சுமார் 345% உயர்ந்துள்ளது.

எனவே, பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் பருத்தியை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்கான வினா எழவில்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

31—

மானியம்

வினா எண் 22887—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பெண்ணாகரம் தொகுதி, அரகாசனஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட பருத்தி விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 2021–2022 ஆம் ஆண்டில் பருத்தி உற்பத்தியை உயர்த்த ரூ.11 கோடி மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் என்ற புதிய திட்டமும், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப் பயிர்கள் திட்டத்தின்கீழ் ரூ.2.83 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் ஆக மொத்தம் ரூ.13.83 கோடி நிதி ஒதுக்கீட்டில் பருத்திக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

பெண்ணாகரம் தொகுதி, தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. 2021–2022 ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் மற்றும் தேசிய உணவு பாதுகாப்புத்

திட்டம்–வணிகப் பயிர்கள் திட்டங்களின்கீழ் ரூ.40.26 இலட்சம் நிதி செலவில், பருத்தி சாகுபடிக்குத் தேவையான நுண்ணூட்ட உரங்கள், திரவ உயிர் உரங்கள், மெக்னீசியம் சல்பேட் உரங்கள், மானாவாரி பருத்தியில் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்க பார் சால் நடவு மற்றும் அங்கக உரங்கள், தண்டு கூண் வண்டை கட்டுப்படுத்த வேப்பம் புண்ணாக்கு, இயந்திர களையெடுப்பிற்கு விசை களை எடுக்கும் கருவிகள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புக்கான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 2,733 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். பெண்ணாகரம் தொகுதிக்கு நீடித்த நிலையான பருத்தி இயக்கத்தின்கீழ் ரூ.5.18 இலட்சம் நிதி செலவில் பருத்தி சாகுபடிக்குத் தேவையான முக்கிய இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 402 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும், பெண்ணாகரம் தொகுதியில் 2020–2021 ஆம் ஆண்டில் 107 எக்டர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. மேற்கண்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தியதால் 2021–2022 ஆம் ஆண்டில் பெண்ணாகரம் தொகுதியில் பருத்தி சாகுபடி பரப்பு 510 எக்டராக உயர்ந்தது. 2020–2021 ஆம் ஆண்டில் 231 பொதிகளாக இருந்த உற்பத்தி, 2021–2022 ஆம் ஆண்டில் 1,030 பொதிகளாக சுமார் 345% உயர்ந்துள்ளது.

எனவே, பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் பருத்தியை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்கான வினா எழவில்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

32—

தரிசு நிலங்கள்

வினா எண் 22891—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதியிலுள்ள தரிசு நிலங்களைக் கண்டறிந்து தோட்டக்கலைத் துறைமூலம் மேம்படுத்தி மரங்கள் நட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பொன்னேரி தொகுதிக்குட்பட்ட சோழவரம், மீஞ்சூர் வட்டாரங்களில் உள்ள கிராமங்களில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் (KAVIADP) *2021–2022 மூலம் தரிசு நிலங்கள் கண்டறியப்பட்டு அவற்றை மேம்படுத்தும்பொருட்டு தோட்டக்கலைத் துறைமூலம் வரப்பு ஓரங்களில் நடவு செய்வதற்கான வரப்பு பயிர்கள்* (Bund crops) *வழங்கப்படவுள்ளது என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.*

நடப்பாண்டில் மீஞ்சூர் வட்டாரத்தில் உள்ள வாயலூர் கிராமம் மற்றும் சோழவரம் வட்டாரத்தில் உள்ள அழிஞ்சிவாக்கம் கிராமத்தில் கண்டறியப்பட்ட தரிசு நிலத் தொகுப்பில் தலா 50 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயனடையவுள்ளனர்.

வரப்புப் பயிர்கள் இனத் தொகுப்பில் தோட்டக்கலை சார்ந்த மரக் கன்றுகளான புளி, கறிவேப்பிலை, நாவல், பப்பாளி, முருங்கை, நெல்லி, எலுமிச்சை மற்றும் கொடுக்காபுளி ஆகிய 8 மரக் கன்றுகள் அடங்கிய ஒரு தொகுப்பு வழங்கப்படுகின்றன.

33—

மானியம்

வினா எண் 22897—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, தித்தியோப்பனஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பருத்தி பயிர் செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 2021–2022 ஆம் ஆண்டில் பருத்தி உற்பத்தியை உயர்த்த ரூ.11 கோடி மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் என்ற புதிய திட்டமும், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப் பயிர்கள் திட்டத்தின்கீழ் ரூ.2.83 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் ஆக மொத்தம் ரூ.13.83 கோடி நிதி ஒதுக்கீட்டில் பருத்திக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

பெண்ணாகரம் தொகுதி, தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. 2021–2022 ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் மற்றும் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப் பயிர்கள் திட்டங்களின்கீழ் ரூ.40.26 இலட்சம் நிதி செலவில், பருத்தி சாகுபடிக்குத் தேவையான நுண்ணூட்ட உரங்கள், திரவ உயிர் உரங்கள், மெக்னீசியம் சல்பேட் உரங்கள், மானாவாரி பருத்தியில் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்க பார் சால் நடவு மற்றும் அங்கக உரங்கள், தண்டு கூண் வண்டை கட்டுப்படுத்த வேப்பம் புண்ணாக்கு, இயந்திர களையெடுப்பிற்கு விசை களை எடுக்கும் கருவிகள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புக்கான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 2,733 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். பெண்ணாகரம் தொகுதிக்கு நீடித்த நிலையான பருத்தி இயக்கத்தின்கீழ் ரூ.5.18 இலட்சம் நிதி செலவில் பருத்தி சாகுபடிக்குத் தேவையான முக்கிய இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 402 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும், பெண்ணாகரம் தொகுதியில் 2020–2021 ஆம் ஆண்டில் 107 எக்டர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. மேற்கண்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தியதால் 2021–2022 ஆம் ஆண்டில் பெண்ணாகரம் தொகுதியில் பருத்தி சாகுபடி பரப்பு 510 எக்டராக உயர்ந்தது. 2020–2021 ஆம் ஆண்டில் 231 பொதிகளாக இருந்த உற்பத்தி, 2021–2022 ஆம் ஆண்டில் 1,030 பொதிகளாக சுமார் 345% உயர்ந்துள்ளது.

2023 ஜனவரி 11]

எனவே, பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் பருத்தியை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்கான வினா எழவில்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

34—

மானியம்

வினா எண் 22901—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பூகானஅள்ளி ஊராட்சியில் பருத்தி பயிர் செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 2021–2022 ஆம் ஆண்டில் பருத்தி உற்பத்தியை உயர்த்த ரூ.11 கோடி மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் என்ற புதிய திட்டமும், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப் பயிர்கள் திட்டத்தின்கீழ் ரூ.2.83 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் ஆக மொத்தம் ரூ.13.83 கோடி நிதி ஒதுக்கீட்டில் பருத்திக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

பெண்ணாகரம் தொகுதி, தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. 2021–2022 ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் மற்றும் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப் பயிர்கள் திட்டங்களின்கீழ் ரூ.40.26 இலட்சம் நிதி செலவில், பருத்தி சாகுபடிக்குத் தேவையான நுண்ணூட்ட உரங்கள், திரவ உயிர் உரங்கள், மெக்னீசியம் சல்பேட் உரங்கள், மானாவாரி பருத்தியில் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்க பார் சால் நடவு மற்றும் அங்கக உரங்கள், தண்டு

[2023 ஜனவரி 11

கூண் வண்டை கட்டுப்படுத்த வேப்பம் புண்ணாக்கு, இயந்திர களையெடுப்பிற்கு விசை களை எடுக்கும் கருவிகள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புக்கான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 2,733 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். பெண்ணாகரம் தொகுதிக்கு நீடித்த நிலையான பருத்தி இயக்கத்தின்கீழ் ரூ.5.18 இலட்சம் நிதி செலவில் பருத்தி சாகுபடிக்குத் தேவையான முக்கிய இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 402 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும், பெண்ணாகரம் தொகுதியில் 2020–2021 ஆம் ஆண்டில் 107 எக்டர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. மேற்கண்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தியதால் 2021–2022 ஆம் ஆண்டில் பெண்ணாகரம் தொகுதியில் பருத்தி சாகுபடி பரப்பு 510 எக்டராக உயர்ந்தது. 2020–2021 ஆம் ஆண்டில் 231 பொதிகளாக இருந்த உற்பத்தி, 2021–2022 ஆம் ஆண்டில் 1,030 பொதிகளாக சுமார் 345% உயர்ந்துள்ளது.

எனவே, பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் பருத்தியை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்கான வினா எழவில்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

35—

மானியம்

வினா எண் 22950—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, அஞ்சேஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட தருமந்தோப்புப் பகுதியில் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 2021–2022 ஆம் ஆண்டில் பருத்தி உற்பத்தியை உயர்த்த ரூ.11 கோடி மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் என்ற புதிய திட்டமும், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப் பயிர்கள் திட்டத்தின்கீழ் ரூ.2.83 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் ஆக மொத்தம் ரூ.13.83 கோடி நிதி ஒதுக்கீட்டில் பருத்திக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

பெண்ணாகரம் தொகுதி, தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. 2021–2022 ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் நீடித்த நிலையான பருத்தி இயக்கம் மற்றும் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்–வணிகப் பயிர்கள் திட்டங்களின்கீழ் ரூ.40.26 இலட்சம் நிதி செலவில், பருத்தி சாகுபடிக்குத் தேவையான நுண்ணூட்ட உரங்கள், திரவ உயிர் உரங்கள், மெக்னீசியம் சல்பேட் உரங்கள், மானாவாரி பருத்தியில் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்க பார் சால் நடவு மற்றும் அங்கக உரங்கள், தண்டு கூண் வண்டை கட்டுப்படுத்த வேப்பம் புண்ணாக்கு, இயந்திர களையெடுப்பிற்கு விசை களை எடுக்கும் கருவிகள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புக்கான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 2,733 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். பெண்ணாகரம் தொகுதிக்கு நீடித்த நிலையான பருத்தி இயக்கத்தின்கீழ் ரூ.5.18 இலட்சம் நிதி செலவில் பருத்தி சாகுபடிக்குத் தேவையான முக்கிய இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 402 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும், பெண்ணாகரம் தொகுதியில் 2020–2021 ஆம் ஆண்டில் 107 எக்டர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. மேற்கண்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தியதால் 2021–2022 ஆம் ஆண்டில் பெண்ணாகரம் தொகுதியில் பருத்தி சாகுபடி பரப்பு 510 எக்டராக உயர்ந்தது. 2020–2021 ஆம் ஆண்டில் 231 பொதிகளாக இருந்த உற்பத்தி, 2021–2022 ஆம் ஆண்டில் 1,030 பொதிகளாக 345% உயர்ந்துள்ளது.

எனவே, பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் பருத்தியை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு

[2023 ஜனவரி 11

ஊக்கத்தொகை வழங்குவதற்கான வினா எழவில்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

36—

கட்டடம்

வினா எண் 23298—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வேளாண்மை விரிவாக்க அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டத்தில் 17 வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் 24 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் விதைகள், உயிர் உரங்கள் உள்ளிட்ட இடுபொருட்கள், பயிர் சாகுபடி காலத்திற்கேற்ப இருப்பு வைக்கப்பட்டு, விவசாய பெருமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இதில் திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டாரத்தில் புதிய ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையமானது தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்ட நிதியின்கீழ் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

37—

கட்டடம்

வினா எண் 23299—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, சேத்துப்பட்டு வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டத்தில் 17 வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் 24 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் விதைகள், உயிர் உரங்கள் உள்ளிட்ட இடுபொருட்கள், பயிர் சாகுபடி காலத்திற்கேற்ப இருப்பு வைக்கப்பட்டு, விவசாய பெருமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இதில் திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதியில் உள்ள சேத்துப்பட்டில் புதிய ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையமானது தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

38—

மானியம்

வினா எண் 26027—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பூமாண்டஅள்ளி ஊராட்சியில் மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, பூமாண்டஅள்ளி ஊராட்சியில் தோட்டக்கலைத் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்களான தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் (NHM) பரப்பு விரிவாக்க இனத்தின் வாயிலாக விவசாயிகளுக்கு

வெங்காயம் மற்றும் தக்காளி குழித்தட்டு நாற்றுகள் 2021–2022 ஆம் ஆண்டில் 1.60 எக்டர் பரப்பிற்கு ரூ.2,87,500/– மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (NADP) இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும்விதமாக இயற்கை முறையில் 24.70 எக்டர் பரப்பிற்கு சாகுபடி செய்த 45 விவசாயிகளுக்கு 2021–2022 ஆம் ஆண்டில் ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டிலும் (2022–2023) மேற்காணும் திட்டங்களின் மூலமாக மானியம் வழங்கப்படும். பூமாண்டஅள்ளி ஊராட்சியில் மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்யும் விவசாயிகள், சம்பந்தப்பட்ட வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பதிவு செய்யும்பட்சத்தில் முன்னுரிமை அடிப்படையில் மானியம் வழங்கப்படும்.

39—

வேளாண் உதவி மையம்

வினா எண் 26283—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பென்னாகரம் தொகுதி, சின்னம்பள்ளி, அரக்காசனஅள்ளி, கலப்பம்பாடி, கொண்டையனஅள்ளி, பத்தரஅள்ளி, மஞ்சாரஅள்ளி, இராமகொண்டஅள்ளி மற்றும் நாகமரை ஆகிய ஊராட்சிகளில் வேளாண் உதவி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகம் முழுவதும் வேளாண்மைத் துறையின்கீழ் 383 வேளாண்மை விரிவாக்க மையங்களும், 497 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களும் செயல்பட்டு

2023 ஜனவரி 11]

வருகின்றன. தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் பெண்ணாகரத்தில் ஒரு வேளாண்மை விரிவாக்க மையமும், பாப்பாரப்பட்டியில் ஒரு துணை வேளாண்மை விரிவாக்க மையமும் செயல்பட்டு வருகிறது. இவ்வேளாண்மை விரிவாக்க மையங்களில் வேளாண்மை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் 2 வேளாண்மை அலுவலர்கள் மற்றும் 5–6 உதவி வேளாண்மை அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவ்விரிவாக்க மையங்களில், பெண்ணாகரம் தொகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் அத்தியாவசியமான இடுபொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன. இவ்விரிவாக்க மையங்கள், பெண்ணாகரம் தொகுதியிலுள்ள அனைத்து ஊராட்சிகளைச் சேர்ந்த விவசாயிகளும் எளிதில் வந்து இடுபொருட்களை பெறும்வகையில் 10–15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளன. ஆகவே, பெண்ணாகரம் தொகுதி, சின்னம்பள்ளி, அரக்காசனஅள்ளி, கலப்பம்பாடி, கொண்டையனஅள்ளி, பத்தரஅள்ளி, மஞ்சாரஅள்ளி, இராமகொண்டஅள்ளி மற்றும் நாகமரை ஆகிய ஊராட்சிகளுக்கு தனியாக வேளாண்மை உதவி மையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

40—

வேளாண் உதவி மையம்

வினா எண் 26417—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பெண்ணாகரம் தொகுதி, புலிக்கரை, மோதுகுலஅள்ளி மற்றும் காட்டான்பட்டி ஆகிய ஊராட்சிகளில் வேளாண் உதவி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *தமிழகம் முழுவதும் வேளாண்மைத் துறையின்கீழ் 383 வேளாண்மை விரிவாக்க மையங்களும்,*

[2023 ஜனவரி 11

497 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களும் செயல்பட்டு வருகின்றன. தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் பாலக்கோடு வட்டாரத்தில் பாலக்கோட்டை தலைமையிடமாகக் கொண்டு ஒரு வேளாண்மை விரிவாக்க மையமும், மாரண்டஅள்ளி மற்றும் புலிக்கரையில் தலா ஒரு துணை வேளாண்மை விரிவாக்க மையமும் செயல்பட்டு வருகின்றன. இவ்வேளாண்மை விரிவாக்க மையங்களில் வேளாண்மை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் 2 வேளாண்மை அலுவலர்கள் மற்றும் 5–6 உதவி வேளாண்மை அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவ்விரிவாக்க மையங்களில், பெண்ணாகரம் தொகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் அத்தியாவசியமான இடுபொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு,வழங்கப்பட்டுவருகின்றன.இவ்விரிவாக்கமையங்கள், பெண்ணாகரம் தொகுதியிலுள்ள புலிக்கரை, மோதுகுலஅள்ளி, காட்டான்பட்டி உட்பட அனைத்து ஊராட்சிகளை சேர்ந்த விவசாயிகளும் எளிதில் வந்து இடுபொருட்களை பெறும் வகையில் 10–15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளன. ஆகவே, பெண்ணாகரம் தொகுதி, மோதுகுலஅள்ளி, காட்டான்பட்டி ஆகிய ஊராட்சிகளுக்கு தனியாக வேளாண்மை உதவி மையம் அமைக்க வேண்டிய தேவை தற்போது எழவில்லை.

41—

வேளாண் உதவி மையம்

வினா எண் 26431—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, கூக்குட்டமருதஹள்ளி ஊராட்சியில் வேளாண் உதவி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகம் முழுவதும் வேளாண்மைத் துறையின்கீழ் 383 வேளாண்மை விரிவாக்க மையங்களும், 497 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களும் செயல்பட்டு

2023 ஜனவரி 11]

வருகின்றன. தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில், பெண்ணாகரத்தில் ஒரு வேளாண்மை விரிவாக்க மையமும், பாப்பாரப்பட்டியில் ஒரு துணை வேளாண்மை விரிவாக்க மையமும் செயல்பட்டு வருகின்றன. இவ்வேளாண்மை விரிவாக்க மையங்களில் வேளாண்மை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் 2 வேளாண்மை அலுவலர்கள் மற்றும் 5–6 உதவி வேளாண்மை அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவ்விரிவாக்க மையங்களில் பெண்ணாகரம் தொகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் அத்தியாவசியமான இடுபொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன. இவ்விரிவாக்க மையங்கள், பெண்ணாகரம் தொகுதியிலுள்ள கூக்குட்டமருதஹள்ளி ஊராட்சி உட்பட அனைத்து ஊராட்சிகளை சேர்ந்த விவசாயிகளும் எளிதில் வந்து இடுபொருட்களை பெறும்வகையில் 10–15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளன. ஆகவே, பெண்ணாகரம் தொகுதி, கூக்குட்டமருதஹள்ளி ஊராட்சியில் வேளாண்மை உதவி மையம் அமைக்க வேண்டிய தேவை தற்போது எழவில்லை.

42—

தரிசு நிலங்கள்

வினா எண் 50634—திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதியிலுள்ள விவசாயிகள் மற்ற பகுதிகளிலிருந்து கரிசல் மண்ணைக் கொண்டுவந்து அவர்களது தரிசு நிலங்களை மேம்படுத்த அனுமதி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஏரி வண்டல் மண்ணை விவசாயத்திற்காகப் பயன்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஏரிகளிலிருந்து வண்டல் மண் எடுப்பதற்கு உரிய ஆவணங்களை (விவசாயத்திற்கு பயன்படுத்துவதற்கு) சம்பந்தப்பட்ட துறையின் (ஏரி பராமரிப்பில்

[2023 ஜனவரி 11

இருக்கும் துறை) அனுமதி பெற்று விவசாயிகள் பயன்படுத்தலாம். தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமைமூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

43—

புதிய தாலுகா உருவாக்குதல்

வினா எண் 35911—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை தாலுகாவை இரண்டாகப் பிரித்து மணல்மேடு என்கிற புதிய தாலுகா உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை வருவாய் வட்டத்தைப் பிரித்து மணல்மேடுவைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்குவது தொடர்பாக அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களில் பரப்பளவு மற்றும் மக்கள்தொகை ஆகிய காரணிகளை நிறைவு செய்யாததால் மணல்மேடுவைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

44—

புதிய தாலுகா உருவாக்குதல்

வினா எண் 35913—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

(அ) *மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகாவை இரண்டாகப் பிரித்து செம்பனார்கோவில் என்ற புதிய தாலுகா உருவாக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வருவாய் வட்டத்தை இரண்டாகப் பிரித்து செம்பனார்கோவிலை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்குவது தொடர்பாக அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களில் பரப்பளவு மற்றும் மக்கள்தொகை ஆகிய காரணிகளை நிறைவு செய்யாததால் செம்பனார்கோவிலை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

45—

அகரமுதலி வெளியிடுதல்

வினா எண் 28912—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *தமிழ் வளர்ச்சிக்கு சொல்லாய்வு அறிஞர் திரு. அருள் அவர்கள் தொகுத்து வழங்கிய அகரமுதலியை முழுமையாக வெளியிட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில் தனியரின் அகரமுதலிகளை வெளியிடும் திட்டங்கள் ஏதும் தற்போது செயற்பாட்டில் இல்லை.*

[*2023 ஜனவரி 11*

46—

நில உபயோக மாற்றம்

வினா எண் 52517—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *தாம்பரம் தொகுதி, தாம்பரம் மாநகராட்சியில் 63–வது வார்டு, இரும்புலியூர் கிராமம், சர்வே எண் 194–ல் உள்ள பத்து தெருக்களையும் கல்வி நிறுவனப் பகுதி என்பதை* MR Zone GM *என்று பழையபடி மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) *மற்றும் (ஆ) இரும்புலியூர் கிராமம், சர்வே எண் 194, சென்னை பெருநகரப் பகுதிக்கான முதலாம் முழுமைத் திட்டம் மற்றும் இரண்டாம் முழுமைத் திட்டம் ஆகிய இரண்டிலுமே நிறுவன உபயோகப் பகுதியாக குறிப்பிடப்பட்டுள்ளது.*

நில உபயோக மாற்றம் மேற்கொள்ள விரும்பும் நில உரிமையாளர்கள் அதற்கான விண்ணப்பத்தினை சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு சமர்ப்பிக்கலாம். அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, தகுதியின் அடிப்படையில் முடிவு மேற்கொள்ளப்படும்.

47—

தொழிற்சாலையை மீண்டும் துவக்குதல்

வினா எண் 10094—திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு அருகில் பனையக்கோட்டையில் மூடப்பட்டுள்ள இரப்பர் பால் கலந்த*

2023 ஜனவரி 11]

கயிறு பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை மீண்டும் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு இரப்பர் பால் கலந்த கயிறு பொருள்கள் சங்கம் லிமிடெட் இண்ட் எண் 1724 சங்கம் (இன்கோஃபோம்), தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பனையக்கோட்டை என்ற கிராமத்தில் 16–10–1986–ல் பதிவு செய்யப்பட்டு, 27–5–1990 முதல் இயங்கி வருகிறது. இச்சங்கத்தில் இரப்பர் பால் கலந்த கயிறு பொருள்களான மெத்தைகள், தலையணைகள் மற்றும் காயர் சீட்குஷன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. கடந்த 2003 ஆம் ஆண்டு சங்க தொழிற்சாலையில் ஏற்பட்ட பெரும் தீ விபத்தினால் சுமார் ரூ.39.00 இலட்சம் மதிப்பிற்கு பெருத்த நட்டம் ஏற்பட்டது.

தற்பொழுது, இரப்பர் பால் கலந்த கயிறு மெத்தைகள் உற்பத்தி செய்வதற்குரிய நடைமுறை மூலதனம் அதிகம் தேவைப்படுவதாலும், சங்க தொழிற்சாலையின் கட்டடம் மற்றும் இயந்திரங்கள் மிகவும் பழுதடைந்து இருப்பதாலும், சங்கம் தற்பொழுது ரூ.510 இலட்சம் அளவிற்கு ஒட்டுமொத்த நட்டத்தில் இருப்பதாலும் மற்றும் ரூ.156 இலட்சம் தாய்கோ வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை நிலுவையில் இருப்பதாலும் தற்போதைய நிலையில் இரப்பர் பால் கலந்த கயிறு மெத்தைகள் உற்பத்தியை தொடங்க இயலாது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

48—

வெண்பட்டு தொழில்

வினா எண் 29379—திரு. இரா. அருள்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம், வெண்பட்டு தொழிலை மேம்படுத்தவும், வெளிநாட்டு ஏற்றுமதிக்கு வழிகாட்டவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் சுமார் 2,292 பட்டு விவசாயிகளால் 3,692 ஏக்கர் பரப்பில் மல்பெரி சாகுபடி செய்யப்பட்டு பட்டுப் புழு வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பட்டுக் கூடுகள் 100% வெண்பட்டுக் கூடுகள் ஆகும். சேலம் மாவட்டத்தில் வெண்பட்டு உற்பத்தியினை மேலும் பெருக்கிட, மல்பெரி சாகுபடி பரப்பினை அதிகரிக்க, புது நடவு செய்திட விவசாயிகள் ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

சேலம் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பட்டுக் கூடுகளை இம்மாவட்டத்திலேயே நுகர்வு செய்து பட்டு நூலாக மாற்றி ஏற்றுமதியினை ஊக்கப்படுத்திடவும், புதிதாக பட்டு நூற்பு அலகுகள் அமைக்க மத்திய பகுதி திட்டம்–சில்க் சமக்ராவின்கீழ் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் மானியத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு தொழில்முனைவோர்கள் ஊக்கப்படுத்தப்படுகிறார்கள்.

49—

கைவினைப் பொருட்கள் தயாரித்தல்

வினா எண் 62612—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பூம்புகார் நிறுவனம்மூலம், யானைத் தந்தம் மற்றும் எலும்புகள் மற்றும் சந்தன மரத்தில் கைவினைப் பொருட்கள் தயாரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) யானைத் தந்தங்கள் மற்றும் எலும்புகளைப் பயன்படுத்தி கைவினைப் பொருட்கள் தயார் செய்து விற்பனை

செய்ய அரசால் தடை விதிக்கப்பட்டுள்ளதால், பூம்புகார் நிறுவனம் யானைத் தந்தங்கள் மற்றும் எலும்புகளைப் பயன்படுத்தி கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்வதில்லை.

சந்தன மரத்திலான கைவினைப் பொருட்கள், கள்ளக்குறிச்சியில் உள்ள பூம்புகார் சந்தன மரச் சிற்பங்கள் உற்பத்தி நிலையத்தின்மூலம் உற்பத்தி செய்து அனைத்து பூம்புகார் விற்பனை நிலையங்களின் வாயிலாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

50—

நினைவிடம் திறத்தல்

வினா எண் 4420—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மகாகவி பாரதியாரின் நினைவிடத்தை மீண்டும் திறக்கவும், அங்கு காவலர்களை நியமிக்கவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

திருவல்லிக்கேணியில் உள்ள மகாகவி பாரதியார் நினைவு இல்லம், தூத்துக்குடி, எட்டயபுரத்தில் உள்ள மகாகவி பாரதியார் நினைவு மண்டபம் மற்றும் மகாகவி பாரதியார் நினைவு இல்லம் ஆகியவை செய்தி, மக்கள் தொடர்புத் துறையால் முறையாக பராமரிக்கப்பட்டு வருவதுடன், பொதுமக்களின் பார்வைக்கு நாள்தோறும் திறந்து வைக்கப்படுகிறது. மேலும், அவ்விடங்களில் காவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

51—

சிலை அமைத்தல்

வினா எண் 10036—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் 5 ரோடு ரவுண்டானா அருகில் ராஜரிஷி அர்த்தநாரீச வர்மாவிற்கு சிலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

சேலம் 5 ரோடு ரவுண்டானா அருகில் ராஜரிஷி அர்த்தநாரீச வர்மாவிற்கு சிலை அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

52—

நினைவிடம்

வினா எண் 13105—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தூத்துக்குடி மாவட்டம், நாதஸ்வர வித்வான் காருகுறிச்சி அருணாச்சலம் நினைவிடத்தை புனரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

தூத்துக்குடி மாவட்டம், நாதஸ்வர வித்வான் காருகுறிச்சி அருணாச்சலம் நினைவிடத்தை புனரமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

53—

சிலை அமைத்தல்

வினா எண் 21700—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

முகையூர் திரு. கோவிந்தசாமி அவர்களுக்கு சிலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

முகையூர் திரு. கோவிந்தசாமி அவர்களுக்கு சிலை அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

54—

அச்சகம் அமைத்தல்

வினா எண் 28795—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, வேளச்சேரி இரயில் நிலையத்திற்கு அருகில் அரசு அச்சகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, வள்ளலார் நகரில் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் பிரதான அச்சகமான அரசு மைய அச்சகம் இயங்கிவரும் நிலையில், சென்னையிலேயே வேளச்சேரி தொகுதியில், வேளச்சேரி இரயில் நிலையத்திற்கு அருகில் அரசு அச்சகம் அமைக்க வேண்டியதன் அவசியம் எழவில்லை.

55—

கிளை அச்சகம் தொடங்குதல்

வினா எண் 28796—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டையில் கிளை அச்சகம் துவங்கவும், திருச்சிராப்பள்ளி, துவாக்குடியில் உள்ள கிளை அச்சகத்தை மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டுவரவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1883 ஆம் ஆண்டு முதல் புதுக்கோட்டை சமஸ்தானத்தின்கீழ் இயங்கிவந்த புதுக்கோட்டை கிளை அச்சகம் தற்போதும் செயல்பட்டு வருகிறது. மேலும், 1965 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி, அரியமங்கலம் தொழிற்பேட்டையில் துவங்கப்பட்ட கிளை அச்சகம், 1990 ஆம் ஆண்டு முதல் துவாக்குடியில் செயல்பட்டு கொண்டிருக்கிறது.

56—

பிரச்சினைகளைத் தீர்த்தல்

வினா எண் 28801—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பத்திரிகையாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பத்திரிகையாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையே அரசு சார்ந்த பிரச்சினைகள் ஏதேனும் ஏற்படுமாயின், அரசு தலையிட்டு பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரும். அவ்வாறின்றி, வேறு பிற நிகழ்வுகளோ, தனிநபர் சார்ந்த பிரச்சினைகளோ ஏற்படின், அதனை நீதிமன்றத்தின் மூலமோ அல்லது காவல் துறை மூலமோ தீர்த்துக்கொள்ள வேண்டும்.

57—

நவீன இயந்திரங்கள் நிறுவுதல்

வினா எண் 28916—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

(அ) எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் சார்பில் மாவட்டந்தோறும் நவீனப்படுத்தப்பட்ட இயந்திரங்களை நிறுவ அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின்கீழ், சென்னை அரசு மைய அச்சகம், சென்னை உயர் நீதிமன்ற வளாக மதுரை கிளை அச்சகம், சேலம், மதுரை, புதுக்கோட்டை, விருத்தாசலம் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் அரசு கிளை அச்சகங்கள் செயல்பட்டு வருகின்றன என்பதாலும், மாவட்டந்தோறும் அரசு கிளை அச்சகங்கள் இல்லாத நிலையிலும், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை சார்பில் மாவட்டந்தோறும் நவீனப்படுத்தப்பட்ட இயந்திரங்கள் நிறுவிட வேண்டிய அவசியம் எழவில்லை.

58—

எழுதுபொருட்கள் வழங்குதல்

வினா எண் 28968—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு நிறுவனங்களுக்கு எழுதுபொருட்களை தடையின்றி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னையிலுள்ள அரசு எழுதுபொருள் அலுவலகம் வாயிலாக, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசுத் துறைகளுக்கும் தேவையான காகிதங்கள், நகல் எடுக்கும் காகிதங்கள் மற்றும் எழுதுபொருட்கள் ஆகியன கொள்முதல்

[*2023 ஜனவரி 11*

செய்யப்பட்டு, இருப்பில் வைத்து கட்டணம் ஏதுமின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு ஆளுநர் அலுவலகம், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், மாண்புமிகு அமைச்சர்களது அலுவலகங்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, தலைமைச் செயலகம், நீதிமன்றங்கள், தமிழ்நாடு லோக் ஆயுக்தா போன்ற நீதித் துறை அலுவலகங்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் உட்பட தமிழகத்திலுள்ள 3,954 அரசு அலுவலகங்களுக்குத் தேவையான காகிதங்கள் மற்றும் எழுதுபொருட்கள் அரசு அலுவலகங்களின் ஆண்டு தேவைப்பட்டியலின் அடிப்படையில் கட்டணம் ஏதுமின்றி வழங்கப்பட்டு வருகின்றன.

59—

பாராட்டும், பரிசும்

வினா எண் 64811—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழில் திரைப்படப் பெயர் வைக்கும் கலைத் துறையினருக்கு பாராட்டும், பரிசும் (ஊக்கத் தொகை) வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

சிறந்த திரைப்படங்கள், சிறந்த நடிகர்கள், சிறந்த நடிகையர், சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களைத் தேர்வு செய்து விருதுகளை வழங்குவதற்கு தமிழ்நாடு அரசால் தேர்வுக் குழு அமைக்கப்பட்டு, இத்தேர்வுக் குழு தேர்ந்தெடுத்துப் பரிந்துரைக்கும் சிறந்த திரைப்படங்களுக்கு முதல் பரிசாக ரூபாய் இரண்டு இலட்சம், இரண்டாம் பரிசாக ரூபாய் ஒரு இலட்சம், மூன்றாம் பரிசாக ரூபாய் எழுபத்தைந்தாயிரம், சிறப்புப் பரிசாக ரூபாய் எழுபத்தைந்தாயிரம் ரொக்கமாக வழங்கப்படுவதோடு, நினைவுப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், "தமிழில் திரைப்படப் பெயர் வைக்கும் கலைத்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஜனவரி 11]

துறையினருக்கு பாராட்டும், பரிசும் (ஊக்கத் தொகை)" வழங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

60—

முள்வேலி அமைத்தல்

வினா எண் 10587—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், பண்டிகாவனூர் ஊராட்சி, பண்டிகாவனூர் கிராமத்திலுள்ள மேய்க்கால் நிலத்தை சுற்றிலும் முள்வேலி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், பண்டிகாவனூர் கிராமத்தில் மேய்க்கால் புறம்போக்கு நிலம் ச.எண் 323 மற்றும் 325-ல் அடங்கியது 20.91 ஹெக்டேர் ஆகும். இந்நிலத்தின் மொத்த சுற்றளவு 2,200 மீட்டர் என்பதால் முள்வேலி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

61—

பால் உற்பத்தி

வினா எண் 14495—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்திலுள்ள நாட்டின மாட்டினங்களில் பால் உற்பத்தியை அதிகரிக்க ஆய்வுகள் மேற்கொள்ள அரசு முன்வருமா?

[*2023 ஜனவரி 11*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தமிழக அரசின் நிதியுதவியுடன் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் பர்கூர், காங்கேயம், புலிக்குளம் மற்றும் ஆலம்பாடி மாட்டினங்களை அவற்றின் வாழ்விடங்களில் பாதுகாத்து, அவற்றின் பால் உற்பத்தித் திறனை அதிகரிக்க முறையே பர்கூர், சத்தியமங்கலம், மானாமதுரை மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் மாட்டின ஆராய்ச்சி மையங்களை நிறுவி செயல்படுத்தி வருகின்றது. மேலும், நாட்டுக்குட்டை மற்றும் உம்பளாச்சேரி மாட்டினங்களைப் பாதுகாத்து, அவற்றின் பால் உற்பத்தித் திறனை பெருக்கிட 2022–2023 ஆம் ஆண்டில் தமிழக அரசு இரண்டு திட்டங்களை செயல்படுத்திட அரசாணை வழங்கியுள்ளது. இத்திட்டங்களுக்கென உம்பளாச்சேரி மற்றும் நாட்டுக்குட்டை மாடுகளின் எண்ணிக்கை குறித்த கள நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

62—

மீன்பிடித் துறைமுகங்கள் விரிவுபடுத்துதல்

வினா எண் 18621—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *இராமநாதபுரம் மாவட்டம், தொண்டி மற்றும் இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகங்களை நவீன வசதிகளுடன் விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *இராமநாதபுரம் மாவட்டம், தொண்டி மீனவக் கிராமத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்கள் சிறிய இரக நாரிழை படகுகளை அதிகமாகவும்,*

2023 ஜனவரி 11]

குறைவான எண்ணிக்கையில் இயந்திரப் படகுகளையும் பயன்படுத்தி வருவதால், இங்கு புதிதாக மீன்பிடித் துறைமுகம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை. மேலும், இராமேஸ்வரம் பகுதியில் நவீன வசதிகளுடன் மீன்பிடித் துறைமுகம் அமைக்க ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் மாநில நிதித் திட்டத்தின்கீழ் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

63—

மீன்பிடித் துறைமுகம் விரிவுபடுத்துதல்

வினா எண் 18624—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை, காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தை நவீன வசதிகளுடன் விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தை நவீன வசதிகளுடன் விரிவுபடுத்த ஒன்றிய அரசின் ஒப்புதலோடு ரூ.97.95 கோடிக்கு சென்னை துறைமுக பொறுப்புக் கழகம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

64—

கால்நடை கிளை நிலையம் இயக்குதல்

வினா எண் 21593—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், மரூர் கிராமத்திலுள்ள கால்நடை கிளை நிலையத்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், மரூர் கிராமத்தில் மீண்டும் கால்நடை கிளை நிலையம் இயக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

(ஆ) அரசின் செயல்திட்டம் இடம்பெறும்பொழுது பரிசீலிக்கப்படும்.

65—

தூண்டில் வளைவு அமைத்தல்

வினா எண் 21800—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி அருகில் மணப்பாடு கடல் பகுதியில் தூண்டில் வளைவு மற்றும் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி அருகில் மணப்பாடு மீனவக் கிராமத்தில் ரூ.45.00 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு XXVII திட்டத்தின்கீழ், தூண்டில் வளைவு பாலம் அமைத்திட அரசாணை எண் 318, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் (மீன்–1) துறை, நாள் 13–12–2021 வாயிலாக நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்ததாரர் இறுதி செய்யப்பட்டுள்ளார். அலை தடுப்புச் சுவர் அமைப்பதற்கு டெட்ராபாடுகள் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஜனவரி 11]

66—

தூண்டில் வளைவு

வினா எண் 28660—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *திருப்போரூர் தொகுதி, கரிக்காட்டுக்குப்பம் பகுதியில் தூண்டில் வளைவு, மீன் உலர்த்தும் கூடம், மீன் வலை பின்னும் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *திருப்போரூர் தொகுதி, கரிகாட்டுக்குப்பம் மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு, மீன் உலர்த்தும் கூடம் மற்றும் மீன் வலை பின்னும் கூடம் அமைக்க அரசாணை எண் 318, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை, நாள் 13–12–2021 வாயிலாக நபார்டு வங்கி திட்டத்தின்கீழ், நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட்டதும், பணிகள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

67—

மீன்பிடிக் கருவிகள்

வினா எண் 28676—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *மீனவர்கள் பயன்பாட்டிற்கு நவீன வலை இழுப்பான் கண்டுபிடிக்கவும், சுருக்குமடி வலைகள் பயன்படுத்துவதைத் தடுக்கவும் அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். மீனவர்கள் பயன்பாட்டிற்கு நவீன வலை இழுப்பான் இயந்திரங்கள் வெளிச்சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும், மீன்பிடி படகின் வகை மற்றும் வலைகளின் தேவை மற்றும் அளவுகளுக்கு ஏற்ப மீன்பிடி வலைகளை இழுப்பதற்கு இழுவை இயந்திரங்கள் செய்து கொடுப்பதற்கான நிறுவனங்கள் அனைத்து கடலோர மாவட்டங்களிலும் செயல்பாட்டில் உள்ளன. மீனவர்கள் அவர்களது தேவைக்கேற்ப வலை இழுப்பான் இயந்திரங்களைப் பெற்று மீன்பிடி விசைப் படகுகளில் பொருத்தி, மீன்பிடிப்பில் ஈடுபட்டு வருவதால் புதிதாக நவீன வலை இழுப்பான் கருவி கண்டுபிடிக்க வேண்டிய நிலை எழாது.

தமிழக கடற்பகுதியில் கடல் மீன்வளத்தை பாதுகாக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு கடற்பகுதி முழுவதிலும் நாட்டுப் படகு அல்லது விசைப் படகு ஆகியவற்றின் நீளம் மற்றும் இயந்திரத் திறனை கருதாது, சுருக்குமடி வலையினைப் பயன்படுத்தி மீன்பிடித்தல் மற்றும் இரு படகு கொண்டு இழுவை வலை மீன்பிடித்தல் ஆகியவற்றை அரசாணை எண் 40, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள் 25–3–2000–ல் தடை செய்து தமிழக அரசு ஆணை வழங்கியுள்ளது.

மேலும், தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டம், 1983–ன் பிரிவு 6, உட்பிரிவு–2–ன்படி தடை செய்யப்பட்ட வலைகளைக் கொண்டு மீன்பிடித்தல், தடை செய்யப்பட்ட வலைகளை படகில் வைத்திருத்தல் கூடாது. மேலும், தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குமுறை விதிகள், 2020–ன் விதி 17, உள்விதி 7 மற்றும் 9–ல் சுருக்குமடி வலை பயன்பாடு மற்றும் அவற்றை மீன்பிடிக் கலனில் வைத்திருப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

68—

கடலரிப்பைத் தடுத்தல்

வினா எண் 29079—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் முதல் கோடியக்கரை வரை உள்ள கடற்கரைகளில் பாறைக் கற்களை கொட்டி கடலரிப்பைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் முதல் கோடியக்கரை வரை உள்ள கடற்கரைகளில் பாறைக் கற்களை கொட்டி கடலரிப்பைத் தடுக்கும் வகையில் நாகப்பட்டினம் தொகுதி, நாகூர் முதல் கோடியக்கரை வரை கடல் அரிமானத்தைத் தடுப்பதற்கு தல ஆய்வு செய்ததில், நாகூர், நம்பியார் நகர், அக்கரைப்பேட்டை, வெள்ளப்பள்ளம், ஆற்காட்டுத் துறை ஆகிய மீனவ கிராமங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள மீனவ கிராமங்களில் துறை அளவில் உரிய ஆய்வுகள் மேற்கொண்டு, தேவையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

69—

கால்நடை மருத்துவ முகாம் நடத்துதல்

வினா எண் 38909—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகம் முழுவதும் உள்ள பேரூராட்சிகளில் கால்நடை மருத்துவ முகாம் நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சரின் 2022–2023 ஆம் ஆண்டிற்கான அறிவிப்பின்படி, தொலைதூர கிராமங்களில் விவசாயிகளால் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் கோழிகள் பயன்பெறும் வகையில், 7,760 சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இருப்பினும், பேரூராட்சிகளில் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம் (TNIAMP) மற்றும் பிற நலத் திட்டங்களின் மூலமாக கால்நடைகளுக்கு சிசிக்சை பணி, தடுப்பூசிப் பணி, மலடு நீக்க சிகிச்சைப் பணி போன்றவை முகாம்கள் மூலமாக அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன.

70—

உயிரியல் பூங்கா மேம்படுத்துதல்

வினா எண் 13075—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம், குரும்பப்பட்டி உயிரியல் பூங்காவில் கூடுதல் பேட்டரி கார்கள் இயக்கவும், கூடுதல் கழிவறைகள் கட்டவும் மற்றும் விளையாட்டு வசதிகளை மேம்படுத்தவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

சேலம், குரும்பப்பட்டி உயிரியல் பூங்கா 1976 ஆம் ஆண்டு பொழுதுபோக்கு மையமாக 11.06 எக்டர் பரப்பளவில் ஆரம்பிக்கப்பட்டு, 2001 ஆம் ஆண்டு 11.06 எக்டர் பூங்காவாகத் தரமுயர்த்தப்பட்டது. பின்னர், 2011 ஆம் ஆண்டு இப்பூங்கா 31.73 எக்டர் பரப்பளவில் சிறு உயிரியல் பூங்காவாகத் தரமுயர்த்தப்பட்டு செயல்பட்டு வந்த நிலையில், 2020 ஆம் ஆண்டு நடுத்தரப் பூங்காவாகத் தரமுயர்த்த ரூ.8.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டு,

2023 ஜனவரி 11]

தற்போது தரமுயர்த்துவதற்கான செயல் திட்டமும் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், சேலம், குரும்பப்பட்டி உயிரியல் பூங்காவில் கூடுதல் பேட்டரி கார்கள் இயக்குதல், கூடுதல் கழிவறைகள் கட்டுதல் மற்றும் விளையாட்டு வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய இனங்களையும் சேர்த்து உயிரியல் பூங்கா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

71—

சிறுதானியம் உள்ளிட்டவை விற்பனை

வினா எண் 21190—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *சிறுதானியம், செக்கு எண்ணெய், நாட்டுச் சர்க்கரை, வெல்லம் போன்றவற்றை நியாய விலைக் கடைகள்மூலம் விற்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *பொதுமக்களின் அன்றாட அத்தியாவசியப் பொருட்களின் தேவையினை நிறைவு செய்வதே பொது விநியோகத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அதனடிப்படையில், தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ், மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய பொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ், துவரம் பருப்பு மற்றும் பாமாலின் எண்ணெய் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. சிறுதானியங்களை சென்னை, கோயம்புத்தூர் மாவட்டங்களிலுள்ள கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்மூலம் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், கூட்டுறவுத் துறையால் நடத்தப்படும்*

தேர்ந்தெடுக்கப்பட்ட நியாய விலைக் கடைகளிலும் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினால் நடத்தப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட அமுதம் நியாய விலைக் கடைகளிலும் பனைவெல்லம் விற்பனை செய்ய அரசு ஆணையிட்டுள்ளது.

இந்நிலையில், செக்கு எண்ணெய், நாட்டுச் சர்க்கரை, வெல்லம் போன்றவற்றை நியாய விலைக் கடைகள்மூலம் விற்பனை செய்யும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

72—

ஊட்டி உருளைக் கிழங்கு விற்பனை

வினா எண் 7633—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஊட்டியில் விளையும் உருளைக் கிழங்கை அரசே விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்து, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

பொது விநியோகத் திட்டத்தின்கீழ், அரிசி, கோதுமை, சர்க்கரை, துவரம் பருப்பு, பாமாயில் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் நியாய விலை அங்காடிகளின்மூலம் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. வேறு பொருள்கள் ஏதும் கொள்முதல் செய்யப்படுவதில்லை. கம்பு, சோளம், கேழ்வரகு, உளுந்து மற்றும் பாசிப் பயறு போன்ற பொருள்கள் விவசாயிகளிடமிருந்து நேரடியாக வேளாண் துறையினரால் கொள்முதல் செய்யப்படுகின்றன.

கிடங்குகளில் இருப்பு வைக்கப்படும் பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்ட பொருட்களின் ஆயுட்காலம் நீண்டநாள் (சில மாதங்கள்) இருக்கும். ஆனால்,

2023 ஜனவரி 11]

உருளைக் கிழங்கு போன்ற காய்கறி வகைகள் குறைந்த அளவு ஆயுட்காலம் (சில நாட்கள்) கொண்டிருப்பதால், கெட்டுப் போவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

குளிர் சேமிப்பு வசதி கொண்ட கிடங்குகள் ஏதும் தற்சமயம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நிர்வகிக்கப்படவில்லை. இந்நிலையில், உருளைக் கிழங்கு போன்ற காய்கறி வகைகளின் ஈரப்பதம் அதிகம் என்பதால், ஈரப்பதம் குறைவாகப் பராமரிக்க வேண்டியுள்ள பொது விநியோகத் திட்ட பொருள்களுடன் சேர்த்து பாதுகாத்திடவோ, சேர்த்து அங்காடிகளுக்கு நகர்வு செய்யவோ இயலாத சூழ்நிலை தற்போது உள்ளது.

இந்நிலையில், ஊட்டியில் விளையும் உருளைக் கிழங்கை அரசே விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்து பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகம் செய்யும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

73—

பனை ஓலைப் பொருட்கள்

வினா எண் 28520—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பனை ஓலைப் பொருட்களை மக்கள் பயன்படுத்திட ஊக்குவிக்கும் வகையில் அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பனை ஓலைப் பொருட்களை மக்கள் பயன்படுத்திட ஊக்குவிக்கும் வகையில், 2020–2021 ஆம் நிதியாண்டின் மானியக் கோரிக்கை அறிவிக்கையின்படி, தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின்கீழ் செயல்படும் திருநெல்வேலி–தூத்துக்குடி மாவட்ட பனைப் பொருள் விற்பனை

[2023 ஜனவரி 11

கூட்டுறவு சம்மேளனத்தின்மூலம், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள 100 பெண் பனைத் தொழிலாளர்களுக்கு ரூ.6.00 இலட்சம் செலவில் நவம்பர் 2020–ல் பனை ஓலைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி பெற்ற பனைத் தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பனை ஓலைப் பொருட்கள் மாநில/மாவட்ட சம்மேளனங்களின் பனைப் பொருள் அங்காடிகள்மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அழகிய பனை ஓலைப் பொருட்களை மக்கள் அதிக அளவில் பயன்படுத்தி வருகின்றனர். நடப்பாண்டில் (2022–2023 ஆம் நிதியாண்டில்) வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை நிதிநிலை அறிக்கையில், "பனை மேம்பாட்டு இயக்கம்" என்ற திட்டத்தின்மூலம் ரூ.11.01 இலட்சம் செலவில் 100 பெண்களுக்கு பனை ஓலைப் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி அளித்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

74—

ஏற்றுமதி

வினா எண் 28825—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டு பட்டுப் புடவை ஏற்றுமதியை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கைத்தறியால் நெய்யப்படும் பட்டுப் புடவை உள்ளிட்ட அனைத்து கைத்தறி இரகங்களையும் உள்நாடு மட்டுமின்றி, வெளிநாடுகளிலும் விற்பனை செய்யும்பொருட்டு, கோ–ஆப்டெக்ஸ் மற்றும் லூம்வேர்ல்டு நிறுவனங்களால் இணையதள வழியில் மின் வணிகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2023 ஜனவரி 11]

2. மேலும், சர்வதேச அளவில் நடத்தப்படும் கைத்தறி கண்காட்சிகளில் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்), பங்கேற்று கைத்தறி இரகங்களை விற்பனை செய்து வருகிறது.

3. இதுதவிர, இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்பு (India Trade Promotion and Organisation) *புதுதில்லி, கைத்தறி ஏற்றுமதி ஊக்குவிப்பு நிறுவனம்* (Handloom Export Promotion Council), *சென்னை ஆகிய நிறுவனங்கள்மூலம் ஜெர்மனி, மலேசியா, ஜப்பான் போன்ற வெளிநாடுகளில் நடைபெறும் கைத்தறி கண்காட்சிகளில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நேரடியாக பங்கேற்று விற்பனை மேற்கொண்டு வருகின்றன.*

4. சர்வதேச அளவில் நடத்தப்படும் கைத்தறி கண்காட்சிகள் மற்றும் மின் வணிகம் ஆகியவற்றின் மூலமாக பட்டுச் சேலைகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

75—

பனை பொருட்கள்

வினா எண் 46640—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பனை மரம் சார்ந்த உற்பத்திப் பொருட்களை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களாகவும், பனை ஏறும் தொழிலாளர்களுக்கு பனை ஏறும் இயந்திரம் வழங்கவும், பனை வெல்லம் கலப்படத்தைத் தடுக்கவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தின் கீழுள்ள 720 ஆரம்ப பனை வெல்லம் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள பனைத் தொழிலாளர்கள் பனை மரத்திலிருந்து இறக்கும் பதநீரை மாநில/மாவட்ட

சம்மேளனங்கள் கொள்முதல் செய்து, அவற்றிலிருந்து மதிப்புக் கூட்டுப் பொருட்களான பனை வெல்லம், பனங்கற்கண்டு, பனை வெல்லம் கலந்த சுக்குக் காபி தூள், பனை சாக்லேட், புட்டு வெல்லம் மற்றும் உண்ணா பொருட்களான அழகிய பனை ஓலைப் பொருட்கள், பனந்தும்பு தூரிகைகள் உள்ளிட்ட பொருட்களை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களாக உற்பத்தி செய்து மாநில/ மாவட்ட சம்மேளனங்களின் பனைப் பொருள் அங்காடிகள்மூலம் விற்பனை செய்து வருகின்றன.

நடப்பு நிதியாண்டில் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையின் மானியக் கோரிக்கையில் பனை மரம் ஏறும் இயந்திரம் கண்டுபிடிக்கும் நபருக்கு ரூ.1.00 இலட்சம் பரிசுத் தொகை வழங்க அறிவிப்பு வெளியிடப்பட்டது. பனையேறும் பனைத் தொழிலாளர்களுக்கு பனை மரம் ஏறும் இயந்திரம் வழங்கிட வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2021–2022 ஆம் நிதியாண்டில் 250 பனை விவசாயிகளுக்கு ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் தரமான பனை வெல்லம் தயாரிப்பதற்கான பயிற்சியும், அதற்கான உபகரணங்களும் அளிக்கப்பட்டுள்ளன. அரசின் இந்நடவடிக்கையின்மூலம் பனை வெல்லத்தில் கலப்படம் தடுக்கப்பட்டுள்ளது.

76—

பனை வெல்லம் கொள்முதல்

வினா எண் 51071—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பனை வெல்லத்தை நேரடியாகக் கொள்முதல் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தின்கீழ், 720 ஆரம்ப பனைப் பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச்

2023 ஜனவரி 11]

சங்கங்கள், 8 மாவட்ட பனைப் பொருள் விற்பனை கூட்டுறவு சம்மேளனங்கள் மற்றும் மாநில அளவில் தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் ஆகியவை உள்ளன.

இச்சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள பனைத் தொழிலாளர்கள் உற்பத்தி செய்த பனை வெல்லத்தினை மாநில/மாவட்ட சம்மேளனங்களின்மூலம் அரசு நேரடியாகக் கொள்முதல் செய்து பாக்கெட்டில் அடைத்து, "கற்பகம்" என்ற பெயரில் நியாய விலைக் கடைகள், அமுதம் நியாய விலைக் கடைகள், மாவட்ட கூட்டுறவு பண்டகசாலை ஆகியவற்றிற்கு விநியோகிக்கிறது. பனை வெல்லமானது ஆகஸ்ட் 2022 முடிய 82.57 டன் கொள்முதல் செய்து ரூ.330.30 இலட்சம் மதிப்பிற்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று, பெரிய வணிக நிறுவனங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகளுக்கு தரமான பனை வெல்லம் 'கரும்பனை' என்ற பெயரில், 52.50 டன் அளவிற்கு ரூ.28.35 இலட்சத்திற்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையின்மூலம் அரசு நேரடியாக பனை வெல்லத்தினை கொள்முதல் செய்து பனைத் தொழிலாளர்கள் நலனை பாதுகாத்து வருகிறது.

77—

பாக்குமட்டை தொழில்

வினா எண் 62373—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டத்தில் பாக்குமட்டையிலிருந்து பொருட்கள் தயாரிக்கும் தொழிலை ஊக்குவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிராமத் தொழில்களை ஊக்குவிக்கும் பொருட்டு, பாரதப் பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் மாவட்டத் தொழில் மையம்,

மத்திய கதர் கிராமத் தொழில் ஆணையம் மற்றும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஆகிய மூன்று நிறுவனங்கள்மூலம் 25 முதல் 35 சதவிகிதம் வரையிலான மானியத்துடன்கூடிய வங்கிக் கடன் ரூ.50.00 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தருமபுரி மாவட்டத்தில் பாக்குமட்டை தொழில் மேம்பட பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் பயன்பெறலாம்.

78—

பனைப் பொருட்கள் தயாரிப்பை ஊக்குவித்தல்

வினா எண் 62374—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பனை ஓலை மற்றும் பனை நாரிலிருந்து பொருட்கள் தயாரிக்கும் தொழிலை ஊக்குவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தின்கீழ், 720 ஆரம்ப பனைப் பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், 8 மாவட்ட பனைப் பொருள் விற்பனை கூட்டுறவு சம்மேளனங்கள் மற்றும் மாநில அளவில் தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

பனை ஓலை மற்றும் பனை நாரிலிருந்து பொருட்கள் தயாரிக்கும் தொழிலை அரசு ஊக்குவிக்கும் வகையில், 2020–2021 ஆம் நிதியாண்டின் கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் துறையின் மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி, தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தின்கீழ் செயல்படும் திருநெல்வேலி–தூத்துக்குடி மாவட்ட பனைப் பொருள் விற்பனை கூட்டுறவு சம்மேளனத்தின்மூலம், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி

2023 ஜனவரி 11]

மாவட்டங்களில் உள்ள 100 பெண் பனைத் தொழிலாளர்களுக்கு ரூ.6.00 இலட்சம் செலவில் பனை ஓலை மற்றும் பனை நார் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி பெற்ற பனைத் தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பனை ஓலை மற்றும் பனை நார் பொருட்களை மாநில/மாவட்ட சம்மேளனங்களின் பனைப் பொருள் அங்காடிகள் மற்றும் கதர் அங்காடிகள்மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அழகிய பனை ஓலைப் பொருட்களை மக்கள் அதிக அளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

பனை ஓலை மற்றும் பனை நாரிலிருந்து பொருட்கள் தயாரிக்கும் தொழிலை தொடர்ந்து ஊக்குவிக்கும் வகையில், நடப்பாண்டில் (2022–2023 ஆம் நிதியாண்டில்) வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை நிதிநிலை அறிக்கையில், "பனை மேம்பாட்டு இயக்கம்" என்ற திட்டத்தின்மூலம் ரூ.11.01 இலட்சம் செலவில் 100 பெண்களுக்கு பனை ஓலை மற்றும் பனை நார் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி அளித்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

79—

கூடுதல் பணியாளர்கள் நியமனம்

வினா எண் 609—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம், சானடோரியம் அரசு நெஞ்சக மருத்துவமனைக்கு மருந்தாளுநர், பரிசோதனை உதவியாளர், பாதுகாவலர் போன்ற பதவிகளுக்கு கூடுதலாகப் பணியாளர் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம், சானடோரியம் அரசு நெஞ்சக மருத்துவமனையில் மருந்தாளுநர், பரிசோதனை உதவியாளர்

மற்றும் பாதுகாவலர் போன்ற பதவிகளுக்கு தேவையான பணியாளர்கள் தற்போது பணியில் உள்ளனர்.

80—

ஆயுர்வேத மருந்துகள்

வினா எண் 11458—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றையும் சமப்படுத்தும் ''திரிபலா'' என்ற ஆயுர்வேத தூயகல்ப மாத்திரைகளை தமிழக மக்களுக்கு மானிய விலையில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் அனைத்து அரசு ஆயுர்வேத மருத்துவ நிலையங்களுக்கு வரும் நோயாளிகளின் நோயின் தன்மைக்கு ஏற்றவாறு மருத்துவர்களால் "திரிபலா சூரணம்" என்ற ஆயுர்வேத மருந்து பரிந்துரைக்கப்பட்டு, இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

81—

உடலுறுப்பு தான விழிப்புணர்வு

வினா எண் 23007—திரு. இரா. அருள்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் விபத்துகளால் மூளைச்சாவு அடைந்தோரின் உடலுறுப்பை தானமாக வழங்க அரசு விழிப்புணர்வுகளை ஏற்படுத்த முன்வருமா?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழக மக்களிடையே உடலுறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு புரிதல் பரவலாக உள்ளது. தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையம், உறுப்பு தான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மாநிலம் முழுவதும் உள்ள கல்லூரி மாணவர்களுக்கும், சுய உதவி குழுக்களுக்கும், மருத்துவப் பணியாளர்களுக்கும், அரசு சாரா அமைப்பு பணியாளர்களுக்கும் நேரடியாகவும், வானொலி வாயிலாகவும் மற்றும் காணொலி வாயிலாகவும் சிறப்பாக நடத்தி வருகிறது. கோவிட்–19 பெருந்தொற்று காலத்திலும் உறுப்பு தான விழிப்புணர்வு பற்றிய நிகழ்ச்சிகள் பல சமூக வலைதளங்கள் வாயிலாகவும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், தமிழக அரசு உடலுறுப்பு தானத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி உடலுறுப்பு தான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மாநிலம் முழுவதும் நடத்தி வருகிறது. உடலுறுப்பு தானத்தை அதிகரிப்பதன் மூலமாக மாற்று உறுப்புகளுக்காக காத்திருப்போர் பட்டியலை குறைக்க இயலும்.

உடலுறுப்பு தானம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மட்டுமின்றி, உறுப்பு செயலிழப்பை தடுப்பதற்கான வழிமுறைகளை வலியுறுத்தியும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அனைத்துத் தரப்பு மக்கள் மத்தியிலும் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலமாக உறுப்பு செயலிழப்பைக் குறைக்க இயலும்.

82—

தரமுயர்த்துதல்

வினா எண் 25793—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், வேப்பூரில் இயங்கிவரும் அரசு மருத்துவமனையைத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், வேப்பூர் அரசு மருத்துவமனை 30 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 520 வெளி நோயாளிகளும், 22 உள் நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். இங்கு மாதமொன்றுக்கு சராசரியாக 5 பிரசவங்களும் 103 சிறிய வகை அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 11,726 ஆய்வக பரிசோதனைகள், 117 இ.சி.ஜி. ஆகியவை எடுக்கப்பட்டு வருகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் போன்ற பிரிவுகள் கொண்ட கட்டடம் தற்சமயம் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையிலிருந்து 25 கி.மீ. தொலைவில் 204 படுக்கைகள் மற்றும் பல்வேறு பிரிவுகளைக் கொண்ட விருத்தாசலம் அரசு வட்ட மருத்துவமனை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மேலும், இம்மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையிலேயே உள் நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலேயே வெளி நோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால், இம்மருத்துவமனையை மேலும் தரமுயர்த்த அவசியம் எழவில்லை.

83—

வடிகால் சீரமைத்தல்

வினா எண் 12035—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சி, சேலையூர் அருள்மிகு ஸ்ரீபிடாரி பொன்னி அம்மன் திருக்கோயில் நிலத்தில் மழைநீர் தேங்காமல் செல்ல வடிகாலை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலையூர் ஸ்ரீபிடாரி பொன்னி அம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள நிதி வசதியற்ற திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் மற்றும் இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலம், பழைய சர்வே எண் 37 மற்றும் புதிய சர்வே எண் 2–ல் Title deed Number *839–ன்படி 2 ஏக்கர் 38 சென்ட் ஆகும். இந்நிலம் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. திருக்கோயில் நிலத்தில் மழைநீர் தேங்காமல் செல்ல வடிகால் வசதியை ஏற்படுத்துவது தொடர்பாக இந்து சமய அறநிலையத் துறையின் பொறியாளரைக் கொண்டும், நகராட்சி நிருவாகத்தை தொடர்பு கொண்டும் ஆலோசனை பெற்று, சாத்தியக்கூறுகள் இருப்பின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

84—

மலைப் பாதை அமைத்தல்

வினா எண் 18425—திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லாவரம் தொகுதி, குமரன்குன்றம் மலைக் கோயிலுக்கு வழிப்பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை–44, குரோம்பேட்டை, அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சுமார் 150 அடி உயரமுள்ள மலைக் கோயிலாகும். மேற்படி மலையானது அரசு புறம்போக்கு என்ற வகைப்பாட்டிலுள்ள நிலத்தில் அமைந்துள்ளதால், இந்து சமய அறநிலையத் துறையின்மூலம் மலைப் பாதை அமைக்க சாத்தியக்கூறு இல்லாத நிலை உள்ளது.

[*2023 ஜனவரி 11*

85—

தேரினை புதுப்பித்து, குடமுழுக்கு நடத்துதல்

வினா எண் 27981—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுராந்தகத்திலுள்ள அருள்மிகு ஏரிகாத்த இராமர் திருக்கோயில் தேரினை புதுப்பிக்கவும், அங்குள்ள திருக்கோயில்களுக்கு சீரான இடைவெளியில் குடமுழுக்கு நடத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு ஏரிகாத்த இராமர் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருத்தேரினை உபயதாரர்கள்மூலம் புதுப்பிக்க ரூ.74.40 இலட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகாரம் பெறப்பட்டு, திருத்தேர் திருப்பணி நடைபெற்று வருகிறது. இத்திருக்கோயிலினை திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்திடும்பொருட்டு, தொல்லியல் வல்லுநர் கருத்துரு பெற்று, மண்டல மற்றும் மாநில அளவிலான திருப்பணி வல்லுநர் குழுவில் 7–12–2021 அன்று பரிசீலிக்கப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதில், அனுமதிக்கப்பட்ட பணிகளின்படி ரூ.70.50 இலட்சத்தில் உபயதாரர்மூலம் திருக்கோயில் திருப்பணி மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. விரைவில் மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டு, திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்படும்.

86—

கருவூலக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 36070—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

(அ) பெண்ணாகரத்தில் செயல்பட்டுவரும் கருவூலக் கட்டடத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் சார்நிலைக் கருவூலம் நல்ல நிலையில் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேலும், சிறு, சிறு பழுதுகள் மட்டும் சரி செய்வதற்காக முன்னுரிமைப் பட்டியலில் 2021–2022 ஆம் நிதியாண்டில் ரூ.3,00,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது எவ்வித பழுதுகளுமின்றி பெண்ணாகரம் சார்நிலைக் கருவூலம் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. எனவே, பெண்ணாகரம் சார்நிலைக் கருவூலத்திற்கு புதிய கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

87—

வேலைவாய்ப்பு உதவித்தொகை

வினா எண் 6630—திரு. இரா. அருள்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளவர்களின் குடும்ப ஆண்டு வருமான வரம்பை ரூ.2 இலட்சமாக உயர்த்தி, உதவித் தொகை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தங்கள் கல்வித் தகுதியினை பதிவு செய்து 5 வருடம் நிறைவு செய்த பிறகும், எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் காத்திருக்கும்

இளைஞர்களின் துயர் துடைக்கும்வகையில், மாநிலத்திலுள்ள எஸ்.எஸ்.எல்.சி., மேல்நிலைக் கல்வி, இளநிலை மற்றும் முதுநிலைக் கல்வித் தகுதியுடைய பதிவுதாரர்களுக்கு உதவும்வகையில், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகைத் திட்டம் 2006 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்குமேல் காத்திருக்கும் இளைஞர்களில், பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம் ரூ.100/– வீதமும், பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.150/– வீதமும், மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.200/– வீதமும், பட்டதாரிகள் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.300/– வீதமும் வழங்கப்பட்டு வந்தது, அரசாணை (நிலை) எண் 19, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்.2) துறை, நாள் 20–2–2017–ன் வாயிலாக இரு மடங்காக உயர்த்தப்பட்டு, தற்போது, பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம் ரூ.200/– வீதமும், பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.300/– வீதமும், மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.400/– வீதமும், பட்டதாரிகள் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.600/– வீதமும் தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு உதவித் தொகையாக வழங்க இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளின் வங்கி சேமிப்புக் கணக்கில் ஒவ்வொரு காலாண்டிலும் வரவு வைக்கப்படுகிறது.

அரசாணை (நிலை) எண் 172, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்.2) துறை, நாள் 16–11–2009–ன்படி வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை திட்டத்தின்கீழ் பல இளைஞர்கள் பயன்பெறும் வகையில் குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.24,000/–லிருந்து ரூ.50,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், அரசாணை (நிலை) எண் 127, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்.2) துறை, நாள் 25–7–2019–ன்படி, வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் அதிக அளவில் பயன்பெறும் வகையில் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.50,000/–லிருந்து ரூ.72,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, தற்போது, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளவர்களில், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை கோரும் மனுதாரர்களின் குடும்ப ஆண்டு

2023 ஜனவரி 11]

வருமான வரம்பை ரூபாய் இரண்டு இலட்சமாக உயர்த்தி உதவித்தொகை வழங்க வேண்டிய நேர்வு தற்போது எழவில்லை.

88—

ஊக்கத்தொகை வழங்குதல்

வினா எண் 35820—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் பத்தாம் வகுப்பு முதல் பட்டப் படிப்பு வரை படித்த, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள இளைஞர்களுக்கு மாதாந்திர ஊக்கத்தொகையை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 5 வருடம் நிறைவு செய்த பிறகும், எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் காத்திருக்கும் இளைஞர்களின் துயர் துடைக்கும்வகையில், மாநிலத்திலுள்ள உயர்நிலைக் கல்வி, மேல்நிலைக் கல்வி, இளநிலை மற்றும் முதுநிலை பட்டப் படிப்பு கல்வித் தகுதியுடைய பதிவுதாரர்களுக்கு உதவும்வகையில், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகைத் திட்டம், 2006 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்றும், இத்திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்குமேல் காத்திருக்கும் இளைஞர்களுக்கு, பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம் ரூ.100/– வீதமும், பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.150/– வீதமும், மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.200/– வீதமும், இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.300/– வீதமும் வழங்கப்பட்டு வந்த நிலையில், 20–2–2017 நாளிட்ட அரசாணை (நிலை)

எண் 19, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் வாயிலாக அவை இரு மடங்காக உயர்த்தப்பட்டு, தற்போது, பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம் ரூ.200/– வீதமும், பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.300/– வீதமும், மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.400/– வீதமும், இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.600/– வீதமும் தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு உதவித் தொகையாக வழங்க இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளின் வங்கி சேமிப்பு கணக்கில் ஒவ்வொரு காலாண்டிலும் (மார்ச் 31, ஜூன் 30, செப்டம்பர் 30, டிசம்பர் 31) வரவு வைக்கப்படுகிறது.

மேலும், அரசாணை (நிலை) எண் 147, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 31–8–2017–ன்படி, வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெறும் பயனாளிகளுக்கு திறன் பயிற்சி வழங்குவதற்கு சிறப்பு முகாம் மூலமாக திறன் பயிற்சி அளித்து, அவர்களின் வேலைவாய்ப்பு திறனை அதிகரிக்க வேண்டுமென்ற ஆணைக்கேற்ப, அப்பயனாளிகளுக்கு மாவட்ட வாரியாக திறன் பயிற்சி முகாம் மற்றும் திறன் பயிலரங்கங்கள் நடத்தப்பட்டு, வேலைவாய்ப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

எனவே, தமிழ்நாட்டில் பத்தாம் வகுப்பு முதல் பட்டப் படிப்பு வரை படித்து முடித்து, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள இளைஞர்களுக்கு மாதாந்திர ஊக்கத்தொகையை வழங்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

89—

தகவல் தொழில்நுட்ப இணைப்பு மற்றும் பயிற்சி

வினா எண் 30735—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கிராமங்களில் வாழும் ஏழை எளிய மக்கள் பயன்படுத்தும் வகையில் தகவல் தொழில்நுட்ப இணைப்பு மற்றும் பயிற்சி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒன்றிய அரசின் திட்டமான பாரத்நெட் திட்டத்தை சிறப்பு நோக்கு நிறுவனமான தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம்மூலம் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்மூலம் தமிழ்நாட்டிலுள்ள 12,525 கிராம பஞ்சாயத்துகளையும் கண்ணாடி இழை வடம்மூலம் இணைத்து, 1 Gbps *அளவிலான அதிவேக அலைக்கற்றை இணைப்பை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டமானது, மாவட்டங்கள் அடிப்படையில்* A, B, C *&* D *என நான்கு தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பாரத்நெட் திட்டத்தை செயல்படுத்துவதற்காக தொகுப்பு* A, B, C *&* D*-க்கான ஒப்பந்ததாரர்களுடன் முதன்மை சேவை ஒப்பந்தங்கள்* (Master Service Agreements) *மேற்கொள்ளப்பட்டு களப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. பாரத்நெட் திட்டத்தின்மூலம் தமிழகத்திலுள்ள அனைத்து கிராம பஞ்சாயத்துகளிலும் இணைய இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தகவல் தொழில்நுட்ப இணைப்பு மற்றும் பயிற்சி வழங்க திட்டம் ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை.*

90—

இ-சேவை மையம்

வினா எண் 50701—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிராமங்கள்தோறும் இ-சேவை மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகம் முழுவதும் சுமார் 13,976 இ—சேவை மையங்களில் 14,351 செயலிட முகப்புகள் (Counters) *அமைக்கப்பட்டுள்ளன. இதில், தமிழகத்திலுள்ள கிராமப் பஞ்சாயத்து பகுதிகளில் 8,625 இ—சேவை மையங்கள் இயங்கிவருகின்றன.*

கடந்த 6 மாதங்களில் கிராமப்புற பகுதிகளில் மட்டும் இ—சேவை மையங்கள் அமைக்க தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தொழில்முனைவோர் வாயிலாக 1,896 இ—சேவை பயனர் குறியீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், சேவை மைய முகவர்களான தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், கிராமப்புற தொழில்முனைவோர் (VLE) *வாயிலாக இ—சேவை மையம் இல்லாத கிராமப் பஞ்சாயத்துகளுக்கு இ—சேவை மையம் அமைக்க கோரிக்கை வரும் தருவாயில், இ—சேவை மையம் அமைக்க தமிழ்நாடு மின் ஆளுமை முகமைமூலம் பயனர் குறியீடுகள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.*

91—

கடல் அடித்தள கேபிள் இணைப்புகள்

வினா எண் 61769—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாட்டில் கடல் அடித்தள கேபிள் இணைப்புகள் அமைத்து அதிக அலைவரிசைகள் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

ஒன்றிய அரசின் திட்டமான பாரத்நெட் திட்டத்தை சிறப்பு நோக்கு நிறுவனமான தமிழ்நாடு கண்ணாடி இழை

2023 ஜனவரி 11]

வலையமைப்பு நிறுவனம்மூலம் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்மூலம் தமிழ்நாட்டிலுள்ள 12,525 கிராம பஞ்சாயத்துகளையும் கண்ணாடி இழை வடம்மூலம் இணைத்து, 1 Gbps *அளவிலான அதிவேக அலைக்கற்றை இணைப்பை அனைத்து கிராம பஞ்சாயத்துகளுக்கும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டமானது, மாவட்டங்கள் அடிப்படையில்* A, B, C *&* D *என நான்கு தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பாரத்நெட் திட்டத்தை செயல்படுத்துவதற்காக தொகுப்பு* A, B, C *&* D*–க்கான ஒப்பந்ததாரர்களுடன் முதன்மை சேவை ஒப்பந்தங்கள்* (Master Service Agreements) *மேற்கொள்ளப்பட்டு களப்பணிகள் நடைபெற்று வருகின்றன. பாரத்நெட் திட்டத்தின்மூலம் தமிழகத்திலுள்ள அனைத்துக் கிராம பஞ்சாயத்துகளிலும் இணைய இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் கடல் அடித்தள கேபிள் இணைப்புகள் அமைத்து அதிக அலைவரிசைகள் வழங்கும் திட்டம் ஏதும் இத்துறையின் பரிசீலனையில் தற்போது இல்லை.*

92—

திருக்குறள் அறிவிப்புப் பலகை

வினா எண் 11474—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் அருவி பகுதியில்

'புறம்தூய்மை நீரான் அமையும்; அகம்தூய்மை
வாய்மையால் காணப் படும்'

எனும் திருக்குறள் அறிவிப்புப் பலகை ஆங்காங்கே வைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் அருவிக்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு வசதிகள்

ஏற்படுத்துவதற்கு ஏதுவாக, 2021–2022 ஆம் ஆண்டில் சட்டமன்றக் கூட்டத்தொடரில் சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையின்போது, "ஒகேனக்கல் சுற்றுலாத் தலம் சர்வதேச அளவில் தரமுயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்ற அறிவிப்பு மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டு, அதனை செயல்படுத்த ரூ.1,757.65 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

ஒகேனக்கல் அருவி பகுதியில்,

'புறம்தூய்மை நீரான் அமையும்; அகம்தூய்மை
வாய்மையால் காணப் படும்'

எனும் திருக்குறள் அறிவிப்புப் பலகை ஆங்காங்கே வைப்பதற்கு அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி, உரிய துறையிடமிருந்து கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையுடன் பெறப்படுமாயின், அக்கருத்துரு சுற்றுலாத் துறையின் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

93—

படகு சவாரி வசதி

வினா எண் 14420—திரு. இரா. அருள்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், மூக்கனேரியில், ஏரியின் இயற்கை அழகை கண்டுகளிக்க, படகு சவாரி செய்யும் வசதியினை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

சேலம், அஸ்தம்பட்டி பிரிவு சாலையிலிருந்து 3 கி.மீ. தொலைவில் கண்ணங்குறிச்சியில் மூக்கனேரி 453.49 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்த ஏரிக்கு நீர்வரத்து மழைக்காலங்களில் ஏற்காடு மலைப் பகுதியிலிருந்து பெறப்படுகிறது. மேலும், இந்த ஏரி பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பின்கீழ் பராமரிக்கப்பட்டு வருகிறது.

2023 ஜனவரி 11]

இந்த ஏரியில் சிறிய தீவு போன்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதால் பூநாரை, மீன்கொத்தி, நீலச்சிறகி, ஊசிவால் வாத்து, சாதா உள்ளான், சூறைக்குருவி, மஞ்சள் குருகு மற்றும் பல்வேறு பறவை இனங்கள் பருவக் காலங்களில் வந்து செல்கின்றன.

மூக்கனேரியில் படகு சவாரி வசதி ஏற்படுத்துவது தொடர்பாக, தொடர்புடைய துறைகளின்மூலம் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, "சுற்றுலாத் தலங்கள் வளர்ச்சித் திட்டத்தின்"கீழ் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடு மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் பெறப்படுமாயின், சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

94—

சுற்றுலாப் பேருந்து இயக்குதல்

வினா எண் 23481—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாடு சுற்றுலா கழகம் சார்பில் கன்னியாகுமரி மாவட்ட சுற்றுலா இடங்களைப் பார்வையிட சுற்றுலாப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தலைமை அலுவலகம்மூலம் சென்னையிலிருந்து தமிழ்நாட்டில் அனைத்து முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கும் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரியிலிருந்து நாகர்கோவில் சுமார் 19 கி.மீ. தொலைவில் உள்ளது. நாகர்கோவிலிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து சுற்றுலாத் தலங்களுக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகம்மூலம் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

[*2023 ஜனவரி 11*

95—

மரபு சின்னங்கள் பாதுகாத்தல்

வினா எண் 23525—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டிலுள்ள மரபுச் சின்னங்கள் மற்றும் பழமைவாய்ந்த சுற்றுலாத் தலங்களைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள மரபுச் சின்னங்கள் மற்றும் பழமைவாய்ந்த சுற்றுலாத் தலங்களை தொடர்புடைய துறைகள் பராமரித்து, பாதுகாத்து வருகின்றன. உதாரணமாக, உலகப் புராதன சின்னமாக விளங்கும் மாமல்லபுரத்தினை இந்தியத் தொல்லியல் துறையும், மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையை மாநில தொல்லியல் துறையும் பராமரித்து வருகின்றன.

இருப்பினும், அதிகப்படியான சுற்றுலாப் பயணிகள் வருகைபுரியும் தொன்மை சிறப்புவாய்ந்த சுற்றுலாத் தலங்களில் சாத்தியக்கூறுகள் இருப்பின், தமிழ்நாட்டின் சுற்றுலா இடங்களை மேம்படுத்த, "சுற்றுலாத் தலங்கள் வளர்ச்சித் திட்டத்தின்" மூலம் அரசின் வழிகாட்டுதல்கள், நெறிமுறைகளின்படி தொடர்புடைய துறைகளிடமிருந்து கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையுடன் பெறப்படுமாயின் அரசின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

96—

அகழ்வாராய்ச்சி இடங்களை சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 25373—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

(அ) தமிழகத்தில் அகழ்வாராய்ச்சி இடங்களை சுற்றுலாத் தலமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள அகழ்வாராய்ச்சி இடங்கள் தொல்லியல் துறையின் கட்டிப்பாட்டில் உள்ளன. இருப்பினும், தமிழ்நாட்டிலுள்ள அகழ்வாராய்ச்சி இடங்களுக்கு சுற்றுலாப் பயணிகள் அதிகப்படியாக வருகைபுரியும்பட்சத்தில், அங்கு சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள, தமிழ்நாட்டின் சுற்றுலா இடங்களை மேம்படுத்தும், "சுற்றுலாத் தலங்கள் வளர்ச்சித் திட்டத்தின்"கீழ், (Tourism Destination Development Schemes) அரசின் வழிகாட்டுதல்கள் நெறிமுறைகளின்படி, தொல்லியல் துறையின் தடையின்மைச் சான்றுகளுடன், கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள், மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் பெறப்படுமாயின், சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

97—

கலை பண்பாட்டினை மேம்படுத்துதல்

வினா எண் 25375—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள சுற்றுலாத் தலங்களில் உள்ள கலை பண்பாட்டினை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களில் தமிழ்நாட்டின் சிறப்பையும், பெருமையையும்

காட்சிப்படுத்தும் வகையில் சுற்றுலாத் துறைமூலம் பரத நாட்டியம், கிராமிய கலைநிகழ்ச்சிகள் மற்றும் வீர விளையாட்டுகள் போன்ற பல்வேறு வகையான விழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

- மாமல்லபுரம்—இந்திய நாட்டிய விழாவில் பல்வேறு மாநிலங்களின் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.
- மதுரை—சித்திரை விழா
- பொங்கல் பண்டிகை விழா—கலைநிகழ்ச்சிகள் மற்றும் வீர விளையாட்டுகள் நடத்தப்பட்டு வருகின்றன.
- ஜல்லிக்கட்டு
- கோடை விழா—மலை வாசஸ்தலங்களான ஊட்டி, கொடைக்கானல், ஏலகிரி, ஏற்காடு, ஜவ்வாது மலை போன்ற இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.
- சுற்றுலாத் தலங்களில் நடத்தப்படும் இத்தகைய கலை மற்றும் பண்பாட்டுச் சிறப்புகளை காட்சிப்படுத்தும் நிகழ்ச்சிகளை ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்கின்றனர்.
- இவற்றின்மூலம் தமிழ்நாட்டின் பாரம்பரிய கலைஞர்களுக்கு உரிய வாய்ப்பும், வாழ்வாதாரமும் அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும், மாவட்ட அளவில் புகழ்பெற்ற பல்வேறு வகையான கலை, பண்பாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் வீர விளையாட்டு நிகழ்வுகளை நடத்த சுற்றுலாத் துறையின்மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

98—

மாங்குரோவ் காடுகள்

வினா எண் 25376—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மாங்குரோவ் காடுகளைப் பாதுகாத்து சுற்றுலாத் தலமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள மாங்குரோவ் காடுகள் (சதுப்பு நில வனப் பகுதிகள்) வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. 2021–2022 ஆம் ஆண்டு மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களால், "பிச்சாவரம் சுற்றுலாத் தலம் கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்தப்படும்" என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மேலும், 2022–2023 ஆம் ஆண்டில் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களால், "முத்துப்பேட்டை அலையாத்திக் காடுகள் (மாங்குரோவ் காடுகள்) பகுதியில் படகு சவாரி, நடைபாதைகள், பறவைகளைக் காண பார்வையாளர் மாடம் மற்றும் பிற வசதிகளுடன்கூடிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்படும்" என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மேற்காணும் திட்டங்களுக்கான கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளன.

99—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 26495—திரு. இரா. அருள்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், சின்னகல்ராயன் மலை, கருமந்துறை பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

சேலத்திலிருந்து சுமார் 70 கி.மீ. தொலைவில் சின்னகல்ராயன் மலை அமைந்துள்ளது. இப்பகுதி முழுவதும் வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது இல்லை; அவ்விடத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அவ்விடத்தில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் செய்யப்பட்டு வருகிறது.

[2023 ஜனவரி 11

தமிழ்நாடு சுற்றுலாத் தலங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் வழிகாட்டுதலின்கீழ், உரிய துறையிடமிருந்து விரிவான திட்ட அறிக்கை மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் பெறப்படுமாயின், அத்திட்ட அறிக்கை சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

100—

நெரிசலைக் கட்டுப்படுத்துதல்

வினா எண் 48767—திரு. இரா. அருள்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக கோடை வாசஸ்தலங்களில் கூடும் மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

தமிழகத்திலுள்ள முக்கியமான கோடை வாசஸ்தலங்களான ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி போன்ற இடங்களுக்கு கோடைக்காலத்தில் மிக அதிகளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகைபுரிகின்றனர். இவ்வாறு அதிகளவு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளால் மேற்குறிப்பிட்ட மலை வாசஸ்தலங்களில் அதிகளவில் வாகனப் போக்குவரத்து நெரிசலும், மக்கள் நெருக்கடியும் நிறைந்து காணப்படுவதால், நீண்ட நேரக் காத்திருப்பும், அவ்விடத்தில் அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்ய இயலாத நிலையும் ஏற்படுகிறது.

மேற்காண் நிலையினை சுற்றுலாத் துறை ஆராய்ந்து, இதற்கொரு தீர்வாக மாற்று மலை வாசஸ்தலங்களை, உதாரணமாக, கொல்லி மலை, வால்பாறை, டாப்ஸ்லிப், கல்வராயன் மலை போன்ற சுற்றுலா இடங்களை கண்டறிந்து, அவ்விடங்களில் தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இவை தவிர, மாவட்டங்களிலுள்ள சுற்றுலா அலுவலர்கள்மூலம் மேலும் பல புதிய மலைவாழிட சுற்றுலா ஈர்ப்பிடங்கள் கண்டறியப்பட்டு வருகின்றன. அவ்விடங்களிலும் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை

2023 ஜனவரி 11]

மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, அவை புதிய மலைவாழிட சுற்றுலாத் தலங்களாக மேம்படுத்தப்படும். இதன் பயனாக, தமிழகத்தின் முக்கிய கோடை வாசஸ்தலங்களில் கூடும் மக்கள் கூட்டத்தை குறைத்திட இயலும்.

பட்டியல்-4

1—

கூட்டுக் குடிநீர் திட்டம்

வினா எண் 7702—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, சிங்கிகுளம், காடுவெட்டி, மூன்றடைப்பு, செங்குளம், பேரின்பபுரம், பொன்னாக்குடி, கொங்குந்தான்பாறை, ஆயன்குளம், புதுக்குளம், இட்டேரி, ரெட்டியார்பட்டி ஆகிய பகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில் பச்சையாற்றுத் தண்ணீரை கூட்டுக் குடிநீர் திட்டம்மூலம் மணிமுத்தாறு தண்ணீருடன் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதியிலுள்ள சிங்கிகுளம், காடுவெட்டி, மூன்றடைப்பு, செங்குளம், பேரின்பபுரம், பொன்னாக்குடி, கொங்குந்தான்பாறை, ஆயன்குளம், புதுக்குளம், இட்டேரி, ரெட்டியார்பட்டி ஆகிய பகுதிகள் மணிமுத்தாறு கால்வாய்மூலம் பாசன வசதி பெற்று வருகின்றன. பச்சையாறானது திருநெல்வேலி மாவட்டம், களக்காடு அருகே மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி தருவை கிராமம் அருகே தாமிரபரணியில் கலக்கிறது. பச்சையாற்றிலிருந்து கிடைக்கும் நீரானது அதிலுள்ள அணைக்கட்டுகளின் ஆயக்கட்டுகளுக்கே பற்றாக்குறையாக உள்ளது. எனவே, பச்சையாற்றிலிருந்து மணிமுத்தாற்றிற்கு தண்ணீர் வழங்குவது சாத்தியமில்லை.

[*2023 ஜனவரி 11*

2—

காவிரி தண்ணீர் வழங்குதல்

வினா எண் 7932—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேதாரண்யம் பகுதி, காவிரி கடைகோடிக்கு காவிரி தண்ணீர் செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

வேதாரண்யம் பாசன கடைமடை பகுதிக்கு காவிரி நீர் அரிச்சந்திரா நதிமூலம் 4,342.30 ஹெக்டேர், முள்ளியார்மூலம் 1,925.20 ஹெக்டேர், அடப்பார்மூலம் 3,325.70 ஹெக்டேர் என, ஆக மொத்தம் 9,593.50 ஹெக்டேர் நிலங்களுக்கு தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது.

3—

சரபங்கா நீரேற்றுத் திட்டம்

வினா எண் 11295—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காவிரி ஆற்றின் உபரி நீரை சரபங்கா ஆறு, திருமணிமுத்தாறு மற்றும் வசிஷ்ட நதியில் இணைக்கும் சரபங்கா நீரேற்றுத் திட்டத்தின் தற்போதைய நிலையை தெரிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவிரி ஆற்றின் உபரி நீரை சரபங்கா ஆறு, திருமணிமுத்தாறு மற்றும் வசிஷ்ட நதியில் இணைக்கும் சரபங்கா நீரேற்றுத் திட்டம் தற்போது ஆய்வில் இல்லை.

2023 ஜனவரி 11]

4—

தூர்வாருதல்

வினா எண் 12430—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேளாண்மை உயிர்த்தெழ பாசனம்தான் முதன்மை ஆதாரம் என்று அனைத்து கால்வாய்களையும் தூர்வாரி தங்குதடையின்றி நீர் செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

வேளாண்மை உயிர்த்தெழ காவிரி டெல்டா பாசன நீர்வழித் தடங்களில் முன்னுரிமை அடிப்படையில் ஒவ்வோராண்டும் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

5—

சீமைக் கருவேல மரங்களை அகற்றுதல்

வினா எண் 12551—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளம், குட்டை மற்றும் நீர்வழித் தடங்களில் பல்கி பெருகிவரும் சீமைக் கருவேல மரங்களை (விவசாய வேலி முள்மரம்) போர்க்கால அடிப்படையில் அழித்தொழிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

குளம், குட்டை மற்றும் நீர்வழித் தடங்களில் உள்ள சீமைக் கருவேல மரங்களை அகற்ற தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2023 ஜனவரி 11

6—

நீர் ஆவியாவதைத் தடுத்தல்

வினா எண் 14439—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் பஞ்சாயத்து மற்றும் பொதுப் பணித் துறை ஏரிகளில் கருவேல மரங்களை பயிரிட்டு நீர் ஆவியாவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் பஞ்சாயத்து மற்றும் பொதுப் பணித் துறை ஏரிகளில் கருவேல மரங்களை பயிரிட வனத் துறைக்கு பரிந்துரை செய்து, நீர் ஆவியாவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

7—

குழந்தைகள் இறப்பைத் தடுத்தல்

வினா எண் 14441—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் ஏரி, குளங்களில் மூழ்கி குழந்தைகள் இறப்பு தொடர்வதைத் தடுக்க பெற்றோர்களுக்கு உரிய அறிவுரை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் ஏரி, குளங்களில் மூழ்கி குழந்தைகள் இறப்பு தொடர்வதைத் தடுக்க தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, எச்சரிக்கைப் பலகைகள் வாய்க்கால்கள், கால்வாய்கள் மற்றும் ஏரிகளில் தேவைப்படும் இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

8—

தடுப்பணைகள் கட்டுதல்

வினா எண் 18220—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் பாமினி, கோரையாறு, வெண்ணாறு, காவிரி, கொள்ளிடம் மற்றும் குடமுருட்டி ஆகிய ஆறுகளில் தடுப்பணைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வீணாகக் கடலில் கலக்கும் மழைநீரை பாசனதாரர்கள் பாதிக்காத வகையில் தேக்கி, நிலத்தடி நீரினை செறிவூட்டுதலே தடுப்பணைகள் அமைப்பதன் பிரதான நோக்கமாகும். காவிரி வடிநிலப் பகுதிகளில் அமைந்துள்ள ஆறுகள் ஏற்கெனவே பாசன மற்றும் வடிகால் வசதிகளைக் கொண்டதாகவே அமைந்துள்ளது. எனவே, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் பாமினி, கோரையாறு, வெண்ணாறு, காவிரி, கொள்ளிடம் மற்றும் குடமுருட்டி ஆகிய ஆறுகளில் நிலத்தடி நீரை சேமிப்பதற்காக புதியதாக தடுப்பணைகள் அமைக்க தொழில்நுட்பரீதியாக அவசியம் எழவில்லை.

9—

மண் அரிப்பு, நீர் மாசுபடுவதைத் தடுத்தல்

வினா எண் 18279—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம் மற்றும் தமிழகம் முழுவதிலும் நீர்நிலைகள், ஏரிகள், குட்டைகளில் வெட்டிவேர் நடவு செய்து

மண் அரிப்பையும், நீர் மாசுபடுவதைத் தடுக்கவும் அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம் மற்றும் தமிழகம் முழுவதிலும் நீர்நிலைகள், ஏரிகள், குட்டைகளில் வெட்டிவேர் நடுவது குறித்த திட்டங்கள் ஏதும் நீர்வளத் துறையின் செயல்பாட்டில் இல்லை.

10—

நீர் மேலாண்மையை உணர்த்துதல்

வினா எண் 18303—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தின் நிலத்தடி நீர் பயன்பாடு அபாய அளவைக் கடந்திருப்பதை உணர்ந்து நீர் மேலாண்மையை மக்களுக்கு உணர்த்தவும், நீரினை சேமிக்கவும் அரசு வழிவகை செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

நீர்வளத் துறையின்மூலம் வெள்ளக் காலங்கள், மழைக் காலங்களில் ஏரிகள் மற்றும் தடுப்பணைகளில் மழைநீர் சேகரிக்கப்படுகிறது. நீர்நிலைகளில் உள்ள பாசனக் கட்டுமானங்களை நல்லமுறையில் பராமரிக்க உரிய நடவடிக்கை மேற்கொண்டு, பாசனத்திற்கு நீர் சேமிக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், நீர் மேலாண்மையை மக்களுக்கு உணர்த்தவும், நீரினை சேமிக்கவும் இரண்டு விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

11—

அணை கட்டுதல்

வினா எண் 18389—திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி வட்டத்திற்குட்பட்ட குடியலூர் கண்மாயில் பாசனத்திற்கும், குடிநீர் பயன்பாட்டிற்கும் முழுவதுமாக மழைநீரை பயன்படுத்திட குடியலூர் கண்மாயில் புதிய அணை ஒன்றினை கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி வட்டத்தில் குடியலூர் கண்மாய் என்ற கண்மாய் இல்லை. கள்ளிக்குடி வட்டத்தில் உள்ள குராயூர் கண்மாய் மழைக் காலங்களில் மட்டுமே கவுண்டா நதியிலிருந்து தண்ணீர் வழங்க வாய்ப்புள்ள முறைசாரா கண்மாய் ஆகும். இக்கண்மாயின்கீழ் சங்கிலித் தொடர் அமைப்பில் 12 கண்மாய்கள் நீர் பெற்று வருகின்றன. இக்கண்மாயினை அணையாக மாற்றும்பட்சத்தில் கீழே அமைந்துள்ள பாசன அமைப்புகளுக்கு நீர்வரத்து தடைப்படும். எனவே, இக்கண்மாயினை அணைக்கட்டாக மாற்றுவது என்பது நீரியல்ரீதியாகவும், தொழில்நுட்பரீதியாகவும் சாத்தியமில்லை.

12—

நீர் பற்றாக்குறையை நீக்குதல்

வினா எண் 18390—திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி வட்டம், கூடக்கோயில், மேலஉப்பிலிக்குண்டு உள்ளிட்ட கள்ளிக்குடி பகுதி மக்களின் குடிநீர் பற்றாக்குறையைப் போக்கிட நிலையூர் கண்மாய் வாய்க்காலை மேலஉப்பிலிக்குண்டு கண்மாய் வரை நிரப்ப அரசு வலியுறுத்துமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி வட்டம், நிலையூர் நீட்டிப்புக் கால்வாய்மூலம் மதுரை, சிவகங்கை, விருதுநகர் மாவட்டங்களைச் சேர்ந்த 94 கண்மாய்கள் பயன்பெறுகின்றன. இதில், கள்ளிக்குடி வட்டத்திலுள்ள

மேலஉப்பிலிக்குண்டு கண்மாய் நிலையூர் நீட்டிப்புக் கால்வாய் திட்டத்தில் சேரவில்லை. எனவே, இக்கால்வாய்மூலம் தண்ணீர் வழங்க இயலாது.

13—

நீர்நிலைகளைத் தூய்மைப்படுத்துதல்

வினா எண் 23082—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காவிரியாற்றில் வீசப்படும் துணிகளையும், பிற மாசுபடுத்தும் பொருட்களையும் உடனுக்குடன் அப்புறப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

காவிரியாற்றில் வீசப்படும் துணிகளையும், பிற மாசுபடுத்தும் பொருட்களையும் அகற்றும் பணி தூர்வாரும் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

14—

நதி நீர் தேக்கம் விரிவுபடுத்துதல்

வினா எண் 23156—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், அசுவமா நதி நீர் தேக்கத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், அசுவமா நதி கண்மாயில் 2020–2021 ஆம் ஆண்டு

2023 ஜனவரி 11]

புனரமைப்புப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. இதன் கட்டமைப்புப் பணிகள் தொழில்நுட்பத்துடன் சரியாக உள்ளது. எனவே, விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

15—

நிலத்தடி நீர்மட்டம்

வினா எண் 23417—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காவிரி டெல்டா பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவிரி ஆற்றுப்படுகை பாசன அமைப்புகள் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல் திட்டத்தின்கீழ் (ERM) நீரொழுங்கிகள், கதவணைகள் புதுப்பித்தலுடன் தளமட்டச் சுவர்கள், படுக்கை அணைகள் மற்றும் தலைப்பு மதகுகள் கட்டும் பணிகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பணிகள் நிறைவு பெறும்போது நிலத்தடி நீர்மட்டம் உயரும்.

16—

தூர்வாருதல்

வினா எண் 23432—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், அமராவதி குளத்தை தூர்வாரி சீர்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், மருங்கூர் கிராமம், புல எண் 430–ல் அமைந்துள்ள அமராவதி குளத்தில் வண்டல் மண் எடுக்க மாவட்ட அரசிதழ் எண் 107, நாள் 28–4–2022–ல் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. வண்டல் மண் எடுக்கப்படுவதால் அமராவதி குளம் தூர்வாரி சீர்படுத்தப்படும்.

17—

தூர்வாருதல்

வினா எண் 23434—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குமாரகோவில், இரணியல் வழியாகச் செல்லும் வள்ளியாற்றை தூர்வாரி பக்கச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குமாரகோவில், இரணியல் வழியாகச் செல்லும் வள்ளியாறு Natural River Course *ஆகும். ஆற்றில் தண்ணீர் எவ்விதத் தடையுமின்றி செல்வதால் தூர்வாரப்பட வேண்டிய தேவை இல்லை. மேலும், வள்ளியாற்றில் சேதமடைந்த பக்கச்சுவர்களை சீரமைக்க நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணி மேற்கொள்ள வெள்ள நிதி கோரப்பட்டுள்ளது. விரைவில் நிதி பெறப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படும்.*

2023 ஜனவரி 11]

18—

தண்ணீர் வழங்குதல்

வினா எண் 26104—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் பகுதியில் காவிரி பாசனம் கடைமடை வரை நீர் செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் பகுதியில் காவிரி டெல்டா பாசனத்திற்காக 27–5–2022 முதல் கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டு, கடைமடை வரை தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

19—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 49334—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தாமிரபரணி ஆறு கடலில் கலப்பதற்கு முன்பு குரங்கணி என்ற இடத்தில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் வட்டம், குரங்கணி கிராமத்தில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே 450 மீட்டர் நீளத்திற்கு 1.20 மீட்டர் உயரத்திற்கு ஏற்கெனவே ஒரு தடுப்பணை கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

[2023 ஜனவரி 11

20—

தண்ணீர் வழங்குதல்

வினா எண் 50760—திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை உபரிநீர் திட்டத்தில் மேட்டூர் தொகுதியில் உள்ள அனைத்து ஏரிகளுக்கும் டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கும்போதும், மேட்டூரில் உள்ள அனைத்து ஏரிகளுக்கும் தண்ணீர் திறந்து விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

சரபங்கா நீரேற்றுத் திட்டத்தின்மூலம் மேட்டூர் அணையின் வெள்ள உபரி நீரை மட்டுமே சேலம் மாவட்டம் சரபங்கா வடிநிலத்திலுள்ள வறண்ட ஏரிகளுக்கு நீரேற்றுமூலம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கும்போது சரபங்கா நீரேற்றுத் திட்டத்தின்மூலம் பயன்பெறும் ஏரிகளுக்கு தண்ணீர் வழங்க வழிவகையில்லை.

21—

மானிய விலையில் உரம் வழங்குதல்

வினா எண் 7752—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தென்னை விவசாயிகளை ஊக்குவிக்கும் விதத்தில் மானிய விலையில் உரம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தென்னை விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக, தென்னை வளர்ச்சி வாரிய திட்டத்தின்கீழ் தென்னையில் மறுநடவு மற்றும் புத்தாக்கத் திட்டம் (Replanting and Rejuvenation) *முதலாம் ஆண்டு இனத்தில் ஓர் எக்டருக்கு ரூ.8,750/–க்கும் மற்றும் இரண்டாம் ஆண்டு இனத்தில் ஓர் எக்டருக்கு ரூ.8,750/–க்கும் உரங்கள், உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்டக் கலவை போன்ற இடுபொருட்கள் சுழற்சி முறையில் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.*

கடந்த 2021–2022 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், திருப்பூர், கன்னியாகுமரி, திண்டுக்கல், ஈரோடு, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, கடலூர், தருமபுரி மற்றும் சேலம் ஆகிய பத்து மாவட்டங்களிலுள்ள தென்னை விவசாயிகளுக்கு மறுநடவு மற்றும் புத்தாக்கம் (Replanting and Rejuvenation) *திட்டத்தில் ரூ.299.33 இலட்சம் நிதி அளவில் இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன.*

22—

சர்க்கரை தொழில்நுட்பப் படிப்பு துவக்குதல்

வினா எண் 12488—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கரும்பு உற்பத்தி மற்றும் சர்க்கரை அதிகம் பெறும் தொழில்நுட்பத்தை மேம்படுத்த இளநிலை சர்க்கரை தொழில்நுட்பம் (Bachelor of Sugar Technology) *என்ற தனிப்படிப்பை ஆரம்பிக்க அரசு முன்வருமா?*

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

கரும்பு உற்பத்தியை பெருக்கும் தொழில்நுட்ப உத்திகள் இளமறிவியல் வேளாண்மை (மேதகு) பாடப் பிரிவிலேயே

[2023 ஜனவரி 11

மாணாக்கர்களுக்கு கற்பிக்கப்படுகின்றது. இதன் தொடர்ச்சியாக, மாணாக்கர்கள் கரும்பு சார்ந்த தொழில்நுட்பங்களை மேலும் பயில விரும்பினால், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் பயிற்றுவிக்கப்படும் தொலைதூரக் கல்வியின்மூலம் பயிலலாம். எனவே, கரும்பு உற்பத்தி மற்றும் சர்க்கரை அதிகம் பெறும் தொழில்நுட்பத்தை மேம்படுத்த இளநிலை சர்க்கரை தொழில்நுட்பம் (Bachelor of Sugar Technology) என்ற தனிப்படிப்பை ஆரம்பிக்க கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

23—

மஞ்சள் ஆராய்ச்சி நிலையம் அமைத்தல்

வினா எண் 18095—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மஞ்சள் அதிகம் விளையும் ஈரோட்டில் நவீன மஞ்சள் ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் உள்ள 40 ஆராய்ச்சி நிலையங்கள் அந்தந்த பகுதிகளுக்கேற்றவாறு, பல்வேறு பயிர்களில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன. மேலும், 14 வேளாண் அறிவியல் நிலையங்களும் சென்னையில் ஒரு நகர தகவல் மற்றும் பயிற்சி மையமும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இவை உழவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன.

பவானிசாகரில் பல்பயிர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருகின்றது. மேலும், இவ்வாண்டு (2021–2022) ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் மஞ்சள் ஆராய்ச்சி

2023 ஜனவரி 11]

மையம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, மஞ்சளுக்கான ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்பட்டு, ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

24—

வேளாண் பல்கலைக்கழகம் அமைத்தல்

வினா எண் 18138—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் வேளாண் பல்கலைக்கழகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் மதுரையில் அரசு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், சமுதாய அறிவியல் கல்லூரியும் மற்றும் உசிலம்பட்டியில் தனியார் கல்லூரியான கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன. மேலும், மதுரையில் வேளாண்மை அறிவியல் நிலையமும் அமைந்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், செம்பட்டியில் ஆர்.வி.எஸ். பத்மாவதி தோட்டக்கலைக் கல்லூரி செயல்பட்டு வருகின்றது. வாகரையில் மக்காச்சோள ஆராய்ச்சி நிலையமும், தடியன்குடிசையில் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையமும் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் தேனி மாவட்டம், பெரியகுளம் தொகுதியில் அரசு தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் மற்றும் குள்ளபுரத்தில் தனியார் கல்லூரியான வேளாண்மைத் தொழில்நுட்பக் கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன. மேலும், வைகை அணையில்

வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் மற்றும் மலிங்காபுரத்தில் திராட்சை ஆராய்ச்சி நிலையமும் செயல்பட்டு வருகின்றன.

புதிதாக ஒரு பல்கலைக்கழகம் அமைக்க ரூபாய் 1,000 கோடிக்குமேல் நிதி தேவைப்படும். இதனால், தமிழகத்தின் நிதிச்சுமை அதிகரிக்கும் வாய்ப்பு அதிகம். ஏற்கெனவே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சிறந்து செயல்பட்டு வரும்பட்சத்தில் புதிதாக ஒரு பல்கலைக்கழகம் தேவையில்லை. மதுரை மாவட்ட மாணவர்கள் மற்றும் விவசாயிகள் வேளாண்மை சார்ந்த சந்தேகங்களுக்கு மேற்கூறிய கல்லூரிகள் மற்றும் வேளாண் ஆராய்ச்சி நிலையங்களை தொடர்பு கொள்ளலாம். எனவே, மதுரையில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

25—

தோட்டக்கலை ஆய்வு மையம் துவங்குதல்

வினா எண் 18174—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் மன்னவனூரில் மண்டல தோட்டக்கலை ஆய்வு மையம் தொடங்கப்படவுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களிலுள்ள 40 ஆராய்ச்சி நிலையங்கள் அந்தந்த பகுதிகளுக்கேற்றவாறு பல்வேறு பயிர்களில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன. மேலும், 14 வேளாண் அறிவியல் நிலையங்களும், சென்னையில் ஒரு நகர தகவல் மற்றும் பயிற்சி மையமும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இவை உழவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன.

2023 ஜனவரி 11]

புதிதாக வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் தொடங்குவதற்கு குறைந்தபட்சம் 50 ஏக்கர் நிலம் தேவைப்படும். அதில், 50 விழுக்காடு பரப்பிற்கு பாசன வசதியும், நீர்வள ஆதாரமும் தேவை. இதுவே, பல்பயிர் ஆராய்ச்சி நிலையமானால் கூடுதலாக 50 ஏக்கர் நிலம் தேவைப்படும். மேலும், ஆராய்ச்சி மற்றும் நிர்வாகப் பணிகள் மேற்கொள்ள கூடுதலான மனிதவளம் தேவைப்படும்.

குளிர்பிரதேச தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், பழனி மலைப் பகுதி உழவர்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தவும் 1961 ஆம் ஆண்டு கொடைக்கானல் மலைப் பகுதியில் ஆப்பிள் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்டு, பின் 1971 ஆம் ஆண்டு தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையமாக உயர்த்தப்பட்டு, விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் பலதரப்பட்ட ஆராய்ச்சிப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, கொடைக்கானல் மன்னவனூரில் மண்டல தோட்டக்கலை ஆய்வு மையம் தொடங்குவதற்கு கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

26—

இயற்கை வேளாண்மை ஆய்வு மையம் தொடங்குதல்

வினா எண் 18180—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இயற்கை வேளாண் அறிவியல் அறிஞர் கோ. நம்மாழ்வார் பெயரில் இயற்கை வேளாண்மை ஆய்வு மையம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2021–2022 ஆம் ஆண்டிற்கான வேளாண்மைத் துறை நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பயிர் மேலாண்மை இயக்குநரகத்தின்கீழ்

[2023 ஜனவரி 11

அங்கக வேளாண்மைத் துறையில் நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையமானது அரசாணை (நிலை) எண் 32, வேளாண்மை–உழவர் நலத் (பக) துறை, நாள் 18–2–2022–ன்படி தொடங்கப்பட்டு, சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

27—

வேளாண் கல்லூரி துவங்குதல்

வினா எண் 21129—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *தருமபுரி மாவட்டத்தில் புதிய வேளாண் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் 18 உறுப்புக் கல்லூரிகளும், 28 இணைப்புக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. புதிதாக வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் துவங்குவதற்கு குறைந்தபட்சம் 110 ஏக்கர் நிலம் தேவைப்படும். மேலும், புதிதாக வேளாண்மைக் கல்லூரி துவங்க குறைந்தது 40 பல்வேறு துறைகளைச் சார்ந்த ஆசிரியர்களும், அமைச்சுப் பணி மற்றும் இதர பணியாளர்கள் குறைந்தது 30 பேரும் தேவைப்படுவர். புதிதாக கல்லூரி நிறுவ முதற்கட்டமாக ரூபாய் 50 கோடி தேவைப்படும். இது, வேளாண்மைக் கல்லூரி நிறுவ உத்தேசித்துள்ள இடத்தின் மதிப்பினைப் பொறுத்து மாறுபடும். ஆராய்ச்சி, தொழில்நுட்பம் மற்றும் அமைச்சுப் பணிகளுக்குத் தேவையான மனித ஆற்றல் கல்லூரி மற்றும் பண்ணையின் அளவினைப் பொறுத்தும் மாறுபடும்.*

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் தனியார் கல்லூரியான அதியமான் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி

2023 ஜனவரி 11]

நிலையம் இயங்கி வருகின்றது. மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பின்பேரில், 2021–2022 ஆம் ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்டம், ஜீனூரில் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, புதிய கல்லூரி தொடங்கப்பட்டு, நடப்பு கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை முடிவுற்று, வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. எனவே, தருமபுரி மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

28—

வேளாண் கல்லூரி

வினா எண் 23294—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு வேளாண் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் 18 உறுப்புக் கல்லூரிகளும், 28 இணைப்புக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. புதிதாக வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் துவங்குவதற்கு குறைந்தபட்சம் 110 ஏக்கர் நிலம் தேவைப்படும். மேலும், புதிதாக வேளாண்மைக் கல்லூரி துவங்க குறைந்தது பல்வேறு துறைகளைச் சார்ந்த 40 பேராசிரியர்களும், 30 அமைச்சுப் பணி மற்றும் இதர பணியாளர்களும் தேவைப்படுவர். புதிதாக கல்லூரி நிறுவ முதற்கட்டமாக ரூபாய் 50 கோடி தேவைப்படும். இது, வேளாண்மைக் கல்லூரி நிறுவ உத்தேசித்துள்ள இடத்தின் மதிப்பினைப் பொறுத்து மாறுபடும். ஆராய்ச்சி, தொழில்நுட்பம் மற்றும் அமைச்சுப் பணிகளுக்குத் தேவையான மனித ஆற்றல் கல்லூரி மற்றும் பண்ணையின் அளவினைப் பொறுத்தும் மாறுபடும்.

[2023 ஜனவரி 11

திருவண்ணாமலை மாவட்டம், வாழவச்சனூரில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கி வரும் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் மற்றும் தனியார் இணைப்புக் கல்லூரிகளான அரவிந்தர் வேளாண்மை தொழில்நுட்பக் கல்லூரி கலசப்பாக்கத்திலும், வேலூர் மாவட்டம், கலவையில் ஆதிபராசக்தி வேளாண்மை மற்றும் தோட்டக்கலைக் கல்லூரியும், ராணிப்பேட்டை மாவட்டத்தில் டான்பாஸ்கோ வேளாண்மைக் கல்லூரியும், ஜெயா வேளாண்மைக் கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன. ஆகவே, ஆரணி மாணவர்கள் மேற்கண்ட கல்லூரிகளை அணுகி பயனடையலாம். எனவே, ஆரணியைத் தலைமையிடமாகக் கொண்டு வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

29—

வேளாண் கல்லூரி

வினா எண் 23349—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் தொகுதிக்குட்பட்ட வேளாண் துறைக்குச் சொந்தமான இடத்தில் வேளாண் கல்லூரி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் 18 உறுப்புக் கல்லூரிகளும், 28 இணைப்புக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. புதிதாக வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் துவங்குவதற்கு குறைந்தபட்சம் 110 ஏக்கர் நிலம் தேவைப்படும். மேலும், புதிதாக வேளாண்மைக் கல்லூரி துவங்க குறைந்தது 40 பல்வேறு துறைகளைச் சார்ந்த ஆசிரியர்களும், அமைச்சுப் பணி மற்றும் இதர பணியாளர்கள் குறைந்தது 30 பேரும் தேவைப்படுவர். புதிதாக கல்லூரி

2023 ஜனவரி 11]

நிறுவ முதற்கட்டமாக ரூபாய் 50 கோடி தேவைப்படும். இது, வேளாண்மைக் கல்லூரி நிறுவ உத்தேசித்துள்ள இடத்தின் மதிப்பினைப் பொறுத்து மாறுபடும். ஆராய்ச்சி, தொழில்நுட்பம் மற்றும் அமைச்சுப் பணிகளுக்குத் தேவையான மனித ஆற்றல், கல்லூரி மற்றும் பண்ணையின் அளவினைப் பொறுத்தும் மாறுபடும்.

மேட்டூர் தொகுதிக்கு அருகில் ஈரோடு மாவட்டத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் தனியார் கல்லூரிகளான குமரகுரு வேளாண்மை நிலையம் மற்றும் ஜே.கே.கே. முனிராஜா வேளாண்மைக் கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன. மேலும், கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் தனியார் கல்லூரியான அதியமான் வேளாண்மைக் கல்லூரி இயங்கி வருகின்றது. எனவே, மேட்டூர் சட்டமன்றத் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

30—

தோட்டக்கலைக் கல்லூரி அமைத்தல்

வினா எண் 23369—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உதகமண்டலத்தில் தோட்டக்கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் 18 உறுப்புக் கல்லூரிகளும், 28 இணைப்புக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. புதிதாக வேளாண்மை, தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் துவங்குவதற்கு குறைந்தபட்சம் 110 ஏக்கர் நிலம் தேவைப்படும்.

மேலும், புதிதாக வேளாண்மை, தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் துவங்க குறைந்தது 40 பல்வேறு துறைகளைச் சார்ந்த ஆசிரியர்களும், அமைச்சுப் பணி மற்றும் இதர பணியாளர்கள் குறைந்தது 30 பேரும் தேவைப்படுவர். புதிதாக கல்லூரி நிறுவ முதற்கட்டமாக ரூபாய் 50 கோடி தேவைப்படும். இது, வேளாண்மைக் கல்லூரி நிறுவ உத்தேசித்துள்ள இடத்தின் மதிப்பினைப் பொறுத்து மாறுபடும். ஆராய்ச்சி, தொழில்நுட்பம் மற்றும் அமைச்சுப் பணிகளுக்குத் தேவையான மனித ஆற்றல், கல்லூரி மற்றும் பண்ணையின் அளவினைப் பொறுத்தும் மாறுபடும்.

குளிர்பிரதேச தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், மலைப் பகுதி உழவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தவும், நீலகிரி மாவட்டத்தில் 1988 ஆம் ஆண்டு முதல் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் இயங்கி வருகின்றது. இங்கு விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் பலதரப்பட்ட ஆராய்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், குளிர்பிரதேச தோட்டக்கலைப் பயிர்களுக்கான ஆராய்ச்சி முழுமுனைப்புடன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்மூலம் நடைபெற்று வருவதோடு, மத்திய அரசின் நிதியுதவியுடன் வேளாண் அறிவியல் நிலையம் (KVK) 50 எக்டர் நிலப்பரப்பில் தொடங்குவதற்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, உதகமண்டலத்தில் தோட்டக்கலைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

31—

விவசாயப் பல்கலைக்கழகம்

வினா எண் 23373—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், பையூரிலுள்ள மண்டல ஆராய்ச்சிப் பண்ணையில் விவசாயப் பல்கலைக்கழகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் தனியார் கல்லூரியான அதியமான் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இயங்கி வருகின்றது. மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் பையூரில் மண்டல ஆராய்ச்சி நிலையமும், பாப்பாரப்பட்டியில் வேளாண்மை அறிவியல் நிலையமும் செயல்பட்டு வருகின்றன.

திருவண்ணாமலை மாவட்டம், வாழவச்சனூரில் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், அத்தியேந்தலில் சிறுதானிய மகத்துவ மையமும் செயல்பட்டு வருகின்றன. தனியார் கல்லூரியான அரவிந்தர் வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி கலசப்பாக்கத்திலும் செயல்பட்டு வருகின்றது. மேலும், 2021–2022 ஆம் ஆண்டு வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, கிருஷ்ணகிரி மாவட்டம், ஜீனூரில் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, புதிய கல்லூரி தொடங்கப்பட்டு, மாணவர் சேர்க்கை முடிவுற்று, வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

புதிதாக ஒரு பல்கலைக்கழகம் அமைக்க ரூபாய் 1,000 கோடிக்கு மேல் நிதி தேவைப்படும். இதனால், தமிழகத்தின் நிதிச்சுமை அதிகரிக்கும் வாய்ப்பு அதிகம். மேலும், புதிதாக பல்கலைக்கழகம் நிறுவ போதிய இடம், நிதி வசதி கணிசமான அளவு தேவைப்படும். எனவே, கிருஷ்ணகிரி மாவட்டம், பையூரிலுள்ள மண்டல ஆராய்ச்சிப் பண்ணையில் விவசாயப் பல்கலைக்கழகம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

32—

மானிய விலையில் இடுபொருட்கள் வழங்குதல்

வினா எண் 23496—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 ஜனவரி 11*

(அ) விவசாயிகளுக்கு மானிய விலையில் உரங்கள், விதைகள் மற்றும் மருந்துகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ)

உரங்கள்:

விவசாய பெருமக்கள் சாகுபடி செய்யும் பயிர்களின் மகசூலினை உறுதி செய்யும் முக்கிய வேளாண் இடுபொருளாக இரசாயன உரங்கள் கருதப்படுகின்றன. மாநிலத்தில் ஆண்டொன்றிற்கு சராசரியாக 10 இலட்சம் மெட்ரிக் டன் யூரியா, 3 இலட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி., 2.5 இலட்சம் மெட்ரிக் டன் பொட்டாஷ் மற்றும் 5.0 இலட்சம் மெட்ரிக் டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஒன்றிய அரசு 4.5 கிலோ எடையுள்ள ஒரு மூட்டை யூரியா உரத்தின் விலை ரூ.266.50 என நிர்ணயம் செய்துள்ளது. சர்வதேச சந்தையில் 1 மெட்ரிக் டன் யூரியா இந்திய ரூபாய் மதிப்பில் தோராயமாக ரூ.81,850 ஆக இருந்தபோதிலும், கட்டுப்பாட்டு விலை கொள்கையின்படி ரூ.3,683/– மதிப்பிலான 45 கிலோ யூரியா உர மூட்டையின் விற்பனை விலையில் மாற்றம் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

ஒன்றிய அரசால் சத்துக்கள் அடிப்படையிலான விலைக் கொள்கையின்படி, மணி மற்றும் சாம்பல் சத்து தரக்கூடிய உரங்களுக்கு மானிய விலையினை நிர்ணயம் செய்துள்ளது. அதன்படி, ஒரு கிலோ தழைச் சத்திற்கு ரூ.18.79 மானியமும், ஒரு கிலோ மணிச் சத்திற்கு ரூ.45.32 மானியமும் மற்றும் ஒரு கிலோ சாம்பல் சத்திற்கு ரூ.10.12 மானியமும் வழங்கப்படுகிறது. இதன்படி, ஒரு மூட்டை டி.ஏ.பி. உரத்திற்கு மானியமாக ரூ.1,211.55–ம், ஒரு மூட்டை பொட்டாஷ் உரத்திற்கு ரூ.303.50–ம் மானியமாக மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்களுக்கு சத்துக்களின் அளவிற்கேற்ப மூட்டை ஒன்றிற்கு மானியமாக ரூ.556.70 முதல் ரூ.769.35 வரையும் மானியம் வழங்கப்படுகின்றது.

2023 ஜனவரி 11]

மானிய உரங்கள் அனைத்தும் நேரடி பயன் பரிமாற்ற முறைப்படி (Direct Benefit Transfer) அனைத்து சில்லறை உர விற்பனை நிலையங்களில் விற்பனை முனையக் கருவியில் (Point of Sales (POS)) பட்டியலிட்டு விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

விதைகள்:

தமிழ்நாட்டில் பயிரிடப்படும் வேளாண் பயிர்களான நெல், பயறு வகைகள், சிறு தானியங்கள் மற்றும் எண்ணெய்வித்துக்கள் முதலான அதிக வருவாயினை ஈட்டித் தரக்கூடிய பயிர்களுக்கான விதை மாற்று விகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (டான்சிடா) மூலமாக, அரசு விதைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட தரமான சுமார் 43,000 மெட்ரிக் டன் சான்று விதைகள் விவசாயிகளுக்கு பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசின் திட்டங்களான தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த பண்ணையம், முதலமைச்சரின் மானாவாரி வளர்ச்சி இயக்கம் வாயிலாக வேளாண்மைத் துறைமூலம் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

விதை கிராம திட்டத்தின்கீழ் பின்வரும் பயிர்களுக்கு மானிய விலையில் விதைகள் வழங்கப்படுகின்றன.

வ. எண்	பயிர்	மானியம் (ஏக்கர்/விவசாயி)
1.	நெல்	50% விதையின் மதிப்பு அல்லது ரூ.1,750/– இரண்டில் எது குறைவோ
2.	சிறுதானியங்கள்	
a.	கம்பு	50% விதையின் மதிப்பு அல்லது ரூ.2,395/– இரண்டில் எது குறைவோ
b.	சோளம்	50% விதையின் மதிப்பு அல்லது ரூ.3,025/– இரண்டில் எது குறைவோ

[2023 ஜனவரி 11

வ. எண்	பயிர்	மானியம் (ஏக்கர்/விவசாயி)
c.	கேழ்வரகு	50% விதையின் மதிப்பு அல்லது ரூ.2,000/– இரண்டில் எது குறைவோ
d.	திணை	
e.	சாமை	
f.	குதிரைவாலி	
g.	வரகு	
3.	பயறு வகைகள்	
a.	துவரை பயறு	60% விதையின் மதிப்பு அல்லது ரூ.4,632/– இரண்டில் எது குறைவோ
b.	உளுந்து பயறு	60% விதையின் மதிப்பு அல்லது ரூ.4,800/– இரண்டில் எது குறைவோ
c.	பச்சைப் பயறு	
d.	தட்டைப் பயறு	
e.	கொள்ளு	60% விதையின் மதிப்பு அல்லது ரூ.4,452/– இரண்டில் எது குறைவோ
f.	கொண்டைக்கடலை	60% விதையின் மதிப்பு அல்லது ரூ.4,800/– இரண்டில் எது குறைவோ
3.	எண்ணெய் வித்துகள்	
a.	நிலக்கடலை	60% விதையின் மதிப்பு அல்லது ரூ.3,600/– இரண்டில் எது குறைவோ
b.	எள்	60% விதையின் மதிப்பு அல்லது ரூ.7,800/– இரண்டில் எது குறைவோ

2023 ஜனவரி 11]

வ. எண்	பயிர்	மானியம் (ஏக்கர்/விவசாயி)
4.	மருந்துகள்	
	மாநில மற்றும் மத்திய அரசுத் திட்டங்களின்கீழ் மானிய விலையில் பயிர் பாதுகாப்பு மருந்துகள் விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் அரசின் வழிகாட்டுதல் நெறிமுறைகளுக்குட்பட்டு வேளாண்மைத் துறையின் வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றன.	

33—

தோட்டக்கலை பட்டயக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 23516—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பாலக்கோட்டில் அறிவிக்கப்பட்ட தோட்டக்கலை பட்டயக் கல்லூரியைத் துவக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 41, வேளாண்மை–உழவர் நலத் (பக) துறை, நாள் 17–2–2021–ன்படி, தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், கும்மனூர் கிராமம், சிக்கதோரண பெட்டா என்னும் இடத்தில் புதிய வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டயப்படிப்பு கல்லூரி அமைத்திட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

மேற்காணும் விவரப்படி தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், கும்மனூர் கிராமம், சிக்கதோரண பெட்டா பட்டயக் கல்லூரி அமைத்திட அரசாணை எண் 5, வருவாய் மற்றும்

பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 4.1.2022–ன்படி, நில மாற்றம் செய்திட முன்மொழிவுகள் வழங்கப்பட்டன.

இந்நிலையில், வேளாண் துறை ஆய்வு செய்தபோது, இந்நிலப்பரப்பு வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டயப் படிப்பு கல்லூரி அமைத்திட ஏதுவாக இல்லாமல் பாறைப் பாங்காக உள்ளதாலும், நகர்ப்புறத்திலிருந்து வெகு தொலைவில் உள்ளதாலும், இங்கு பட்டயக் கல்லூரி அமைத்திட ஏதுவான சூழ்நிலை இல்லை. எனவே, தருமபுரி தலைமையிடத்திற்கு மிக அருகாமையில் வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் மாநில அரசு விதைப் பண்ணை அமைந்துள்ள பாப்பாரப்பட்டி பகுதியில் மாதேஹல்லி மற்றும் கொள்ளுப்பட்டி கிராமங்களில் தருமபுரி நகராட்சியிலிருந்து சுமார் 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மந்தைவெளி புறம்போக்கிற்காக உள்ள நல்ல மண் அமைப்பு கொண்ட சுமார் 98.11 ஏக்கர் நிலம் தற்பொழுது ஆய்வு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சியரின் பரிசீலனையில் உள்ளது.

34—

தேங்காய் விலை நிர்ணயம் செய்தல்

வினா எண் 26440—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னை விவசாயத்தை ஊக்குவிக்க தேங்காய்க்கு நியாயமான விலையை நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளாண் செலவு மற்றும் விலை நிர்ணய ஆணையத்தின் பரிந்துரையின்படி, மத்திய அரசால் குறைந்தபட்ச விலை ஆதரவுத் திட்டத்தின்கீழ் கொப்பரை தேங்காயின் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

2023 ஜனவரி 11]

35—

சிப்காட் தொழில் நிறுவனங்கள் அமைத்தல்

வினா எண் 28818—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, வெண்மாத்தூர் பகுதியிலுள்ள சிப்காட்டில் அதிக தொழில் நிறுவனங்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வெண்மாத்தூர் பகுதியில் அமைந்துள்ள சிப்காட் தொழிற்பூங்கா மொத்தம் 694.42 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இங்கு பெரும் தொழில் நிறுவனமான தி/ள். செய்யாறு செச் டெவலப்பர் நிறுவனம் (167.41 ஏக்கர்), தி/ள். எச்பிசிஎல் (0.60 ஏக்கர்) மற்றும் ஹிட்வின் (3.30 ஏக்கர்) போன்ற நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 511.40 கோடி ரூபாய் முதலீடும், சுமார் 6,150 நபர்களுக்கு நேர்முக/மறைமுக வேலைவாய்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது. பல்வேறு தொழில் நிறுவனங்கள் இங்கு தங்கள் தொழிற்சாலைகளை அமைக்க விண்ணப்பம் கோரியுள்ளன. எனவே, மீதமுள்ள நிலத்தில் விரைவில் பல்வேறு தொழிற்சாலைகள் அமையும்.

36—

மாற்றுத் திறனாளிகளுக்கு வீடுகள் வழங்குதல்

வினா எண் 28877—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதியில் தகுதி வாய்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கு அடுக்குமாடிக் குடியிருப்பில் வீடு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய திட்டத்தில் வீடு/மனை/அடுக்குமாடிக் குடியிருப்பு ஆகியவை குலுக்கலில் ஒதுக்கீடு செய்யப்படும்போது மாற்றுத்திறனாளிகளுக்கு அரசாணை (நிலை) எண் 2, நாள் 2.1.2013–ன்படி, 3 சதவிகித இட ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது. தற்போது, பெண்ணாகரம் வட்டாரப் பகுதிகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏதுமில்லை. தற்போது, வீட்டு வசதி வாரியத்தால் இப்பகுதியில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

37—

மனைகள் வழங்குதல்

வினா எண் 38108—திரு. A.P. நந்தகுமார்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அணைக்கட்டு தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதித் துறை சார்பில் மனைப் பிரிவுகள் ஏற்படுத்தி பொதுமக்களுக்கு வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

தற்சமயம் அணைக்கட்டு தொகுதியில் வீட்டு வசதித் துறையின் சார்பில் நிலங்கள் ஏதுமில்லை. இருப்பினும், போதிய கேட்பும் மற்றும் தகுந்த நிலமும் இருக்கும்பட்சத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் திட்டத்தினை செயல்படுத்த மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

2023 ஜனவரி 11]

38—

பயனாளிகளுக்கு வீடுகள் வழங்குதல்

வினா எண் 28054—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் (மேற்கு) தொகுதி, சேலத்தாம்பட்டியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட புதிய குடியிருப்பை பயனாளிகளுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் சேலம், சேலத்தாம்பட்டி திட்டப் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் 496 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இக்குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகளை விரைவில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பகுதிக்கான 803 பயனாளிகளின் பட்டியல் மாவட்ட நிர்வாகத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு, வருவாய்த் துறையின் பரிசீலனையில் உள்ளது. இப்பயனாளிகளின் பட்டியலுக்கு மேலாண்மை இயக்குநரின் ஒப்புதல் பெறப்பட்டு, பயனாளிகளின் பங்களிப்புத் தொகை பெறப்பட்டு, குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

39—

தொழிலாளர்களுக்கு வீடுகள்

வினா எண் 46543—திரு. இரா. அருள்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

வீடற்ற தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய வீடுகளில் முன்னுரிமை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் தற்போது அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. மேலும், இக்குடும்பங்கள் சொந்தமாக மனை உரிமம் பெற்றிருந்தால், அவர்கள் அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் தாமாக வீடுகள் கட்டிக்கொள்ள ரூ.2.10 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது.

அரசாணை எண் 7, தொழிலாளர் நலம் மற்றும் திறன் மேம்பாட்டு (I2) துறை, நாள் 10–1–2022–ல் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற, சொந்தமாக வீடு இல்லாத கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அவர்கள் சொந்தமாக வீட்டுமனை வைத்திருந்தால், அவர்களாகவே வீடு கட்டிக்கொள்ள நிதியுதவி வழங்குவது அல்லது தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் ஒதுக்கீடு பெற நிதியுதவி அளிக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, அதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்கும் குறைவாகவுள்ள கட்டுமானத் தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.4.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும். மேற்கூறிய அரசாணையின்படி தகுதியான கட்டுமானத் தொழிலாளர்கள் அரசால் தேர்வு செய்யப்பட்டு, அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படும் மற்றும் சொந்தமாக வீட்டுமனை உள்ள தகுதியான கட்டுமானத் தொழிலாளர்களுக்கு தாங்களாகவே வீடு கட்டிக்கொள்ள அரசால் மானியம் வழங்கப்படும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

2023 ஜனவரி 11]

40—

வீடு வழங்குதல்

வினா எண் 49951—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, வடக்கு ராஜ வீதியில் வசிக்கும் மக்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் வீடு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை, நரிமேடு திட்டப் பகுதியில் முடிவுற்ற அடுக்குமாடிக் குடியிருப்புகளில் இக்குடும்பங்களுக்கு ஒதுக்கீடு பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் நரிமேடு திட்டப் பகுதியில் 1,920 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பகுதியில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளை புதுக்கோட்டை நகராட்சியில் வசிக்கும் (வடக்கு ராஜ வீதி உட்பட) வீடற்ற, பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பங்களுக்கு அரசு நிபந்தனைகளுக்குட்பட்டு தகுதியின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெற்று வீடுகள் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியிலுள்ள போஸ் நகர் திட்டப் பகுதியில் 384 குடியிருப்புகள், சந்தைப்பேட்டை திட்டப் பகுதியில் 640 குடியிருப்புகள், ரெங்கம்மாள் சத்திரம் திட்டப் பகுதியில் 528 குடியிருப்புகள், பாலன் நகர் பகுதி–II–ல் 256 குடியிருப்புகள் என ஆக மொத்தம் 1,808 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.162.55 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டும் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இக்குடியிருப்புகளுக்கான பயனாளிகள் தேர்வு செய்யும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

41—

வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 51694—டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆயிரம் விளக்குத் தொகுதியிலுள்ள புஷ்பா நகர், வள்ளுவர் குடியிருப்பு, சுதந்திரா நகர், தோமையப்பன் தெரு ஆகிய திட்டப் பகுதிகளை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆயிரம் விளக்குத் தொகுதியிலுள்ள புஷ்பா நகர், வள்ளுவர் குடியிருப்பு, சுதந்திரா நகர், தோமையப்பன் தெரு ஆகிய திட்டப் பகுதிகளில் திட்டப் பணிகள் தொடங்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளின் விவரம் பின்வருமாறு:—

புஷ்பா நகர்

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–9, கோட்டம்–110–க்குட்பட்ட புஷ்பா நகர் திட்டப் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் 1964 ஆம் ஆண்டு A, B, C, D *என நான்கு கட்டடத் தொகுப்புகளாகவும், 1976 ஆம் ஆண்டில் 1 முதல் 11 கட்டடத் தொகுப்புகளாகவும், 1980 ஆம் ஆண்டில்* E, F, G, H, I, J, K, L *என 8 கட்டடத் தொகுப்புகளாகவும், 1985 ஆம் ஆண்டில்* M, N *மற்றும் 1990 ஆம் ஆண்டில்* O, P, Q, R, S *என 7 கட்டடத் தொகுப்புகளாகவும் குடியிருப்புகள் கட்டப்பட்டன. இத்திட்டப் பகுதியில் 1 முதல் 11 குடியிருப்பு கட்டடத் தொகுப்பிலுள்ள 336 குடியிருப்புகளுக்கு ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைப்புப் பணிகள் துவங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.*

2023 ஜனவரி 11]

CUBE (Centre for Urbanization Building & Environment) *தொழில்நுட்ப வல்லுநர்கள்மூலம் மீதமுள்ள குடியிருப்புகளின் உறுதித்தன்மை மறு ஆய்வு செய்யப்பட்டதில், மறுகட்டுமானப் பணிகள் மேற்கொள்ள பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, சிதிலமடைந்த 1,024 குடியிருப்புகளை இடித்து, 8 கட்டடத் தொகுப்புகளில் 1,612 புதிய குடியிருப்புகள் கட்ட திட்டமிடப்பட்டு, உரிய வரைபடம் தயாரிக்கப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

வள்ளுவர் குடியிருப்பு

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–9, கோட்டம்–110–க்குட்பட்ட வள்ளுவர் குடியிருப்புத் திட்டப் பகுதியில் 112 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. CUBE (Centre for Urbanization Building & Environment) *தொழில்நுட்ப வல்லுநர்கள்மூலம் ஆய்வு செய்யப்பட்டதில், வள்ளுவர் குடியிருப்புத் திட்டப் பகுதியில் மறுசீரமைப்பு மேற்கொள்வது சாத்தியமற்றது என்றும், மறுகட்டுமானப் பணிகள் மேற்கொள்வதே சிறந்த தீர்வு என்றும் மறு பரிந்துரை செய்யப்பட்டது. அதற்கிணங்க, இத்திட்டப் பகுதியில் முன்னர் கட்டப்பட்ட 112 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறு கட்டுமானம் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

சுதந்திரா நகர்

பெருநகர சென்னை மாநகராட்சி வார்டு எண் 111, மண்டலம்–9, ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள சுதந்திரா நகர் திட்டப் பகுதியில் 576 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 9 கட்டடத் தொகுதிகளாக தரை+3 தளங்கள் அடுக்கு மேம்பாட்டில் 2003 ஆம் ஆண்டில் கட்டப்பட்டு, பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டப் பகுதியிலுள்ள குடியிருப்புகளுக்கு பழுதுபார்ப்புப் பணிகள் ரூ.3.24 இலட்சங்கள் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு விரைவில் முடியும் நிலையில் உள்ளது.

சுதந்திரா நகர் திட்டப் பகுதி குடியிருப்புகளுக்கு குடியிருப்புகளைப் புதுப்பிக்கும் (Refurbishment) *பணிகள் ரூ.2.30 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு,*

[2023 ஜனவரி 11

ஒப்பந்ததாரர் நியமனம் இறுதி செய்யப்பட்டு பிறகு பணிகள் துவங்கப்படும். மேலும், சுதந்திரா நகர் குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் ஒவ்வொரு குடியிருப்பிற்கும் குடிநீர் விநியோகம் செய்ய ரூ.2.72 கோடி செலவில் பணிகள் விரைவில் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தோமையப்பன் தெரு

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–9, கோட்டம் எண் 118–க்குட்பட்ட தோமையப்பன் தெரு திட்டப் பகுதியில் அமைந்துள்ள 60 குடியிருப்புகளுக்கு (2 பிளாக்) புதுப்பித்தல் (Refurbishment) பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் தொடங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

42—

அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானம் செய்தல்

வினா எண் 51709—டாக்டர் நா. எழிலன்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயிரம் விளக்குத் தொகுதியிலுள்ள டாக்டர் தாமஸ் சாலை தொகுதி 2, 3 மற்றும் 4 ஆகிய திட்டப் பகுதிகளை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக மறுகட்டுமானம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, ஆயிரம் விளக்குத் தொகுதியிலுள்ள டாக்டர் தாமஸ் சாலை அடுக்குமாடிக் குடியிருப்புகள் திட்டப் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் மொத்தம் 908 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இக்குடியிருப்புகளின் உறுதித்தன்மை குறித்து ஆய்வு மேற்கொண்ட தொழில்நுட்பக் குழு இத்திட்டப் பகுதியில் கட்டப்பட்டுள்ள

2023 ஜனவரி 11]

அடுக்குமாடிக் குடியிருப்புகளை மறுசீரமைப்பு செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், அனைத்து குடியிருப்புகளுக்கும் பழுதுபார்ப்புப் பணிகள் மட்டுமே மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன. இப்பழுதுபார்ப்புப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

எனவே, ஆயிரம் விளக்குத் தொகுதியிலுள்ள டாக்டர் தாமஸ் சாலை தொகுதி 2, 3 மற்றும் 4 ஆகிய திட்டப் பகுதிகளை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக மறுகட்டுமானம் செய்வது குறித்த திட்டம் ஏதும் அரசிடம் தற்போதைக்கு இல்லை.

43—

கூட்ட அரங்கை பயன்படுத்துதல்

வினா எண் 26249—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அதியமான் கோட்டத்திலுள்ள கூட்ட அரங்கை அரசு விழாக்கள் மற்றும் இலக்கிய விழாவிற்குப் பயன்படுத்திக்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அதியமான் கோட்டத்திலுள்ள கூட்ட அரங்கை அரசு விழாக்கள் நடைபெறுவதற்கு பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

44—

தரமுயர்த்துதல்

வினா எண் 28969—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையை தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் சென்னை, அரசு மைய அச்சகம் மற்றும் அரசு கிளை அச்சகங்களில் நவீன ரக இயந்திரங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. மேலும், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையிலுள்ள அரசு அச்சகங்களில் செயலாக்கப்படும் அச்சுப் பணிகளின் தரத்தை உறுதி செய்யும் வகையில், காகித மற்றும் அச்சுப் பொருட்களை தர பரிசோதனை செய்ய கருவிகள் கொள்முதல் செய்யவும், டி65 ஒளியூட்டு வசதி மற்றும் பிற சிறப்பு அம்சங்களுடன்கூடிய முழுமையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் ஓர் ஆய்வுக்கூடம் ஏற்படுத்தவும், அரசு மைய அச்சகத்திற்கு நான்கு வண்ண எண்ணிம உற்பத்தி அச்சுப்பொறி (Four Colour Toner Based Digital Production Printer), அரசு மைய அச்சகம் மற்றும் 5 கிளை அச்சகங்களுக்கு கருப்பு வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப் பொறி (Black and White Inkjet Digital Production Printer) மற்றும் அரசு மைய அச்சகத்திற்கு நான்கு வண்ண எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப்பொறி இயந்திரங்கள் (Four Colour Digital Inkjet Production Printer) நிறுவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

45—

குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 58908—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, காமராஜ் நகர், அரசு அச்சகக் குடியிருப்பில் பழுதடைந்துள்ள குடியிருப்புகளை அகற்றி, புதிய குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு அச்சகப் பணியாளர்களுக்காக 1962 ஆம் ஆண்டு கட்டப்பட்ட 300 குடியிருப்புகள் 60 ஆண்டுகள் கடந்த நிலையில் மிகவும் சேதமடைந்து குடியிருக்கத் தகுதியற்ற நிலையில் உள்ளன. எனவே, 2022–2023 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களது அறிவிப்பின்படி, முதற்கட்டமாக ரூ.34,54,00,000/– (ரூபாய் முப்பத்து நான்கு கோடியே ஐம்பத்து நான்கு இலட்சம் மட்டும்) செலவில் நவீன வசதிகளுடன்கூடிய 96 புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

46—

சிலை, மணிமண்டபம் அமைத்தல்

வினா எண் 70359—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறையில் மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்களின் திருவுருவச் சிலையும், மணிமண்டபமும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2022–2023 ஆம் ஆண்டிற்கான செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை மானியக் கோரிக்கையின்போது, “தமிழில் முதல் நாவல் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் அவர்களுக்கு மயிலாடுதுறையில் ரூபாய் மூன்று கோடி மதிப்பீட்டில் அரங்கம் மற்றும் சிலை அமைக்கப்படும்” என்ற அறிவிப்பு மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. மேற்படி அறிவிப்பினை செயல்படுத்திட ஏதுவாக, மயிலாடுதுறையில் உரிய இடத்தினை தேர்வு செய்து, அவ்விடத்திற்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவரால்

[2023 ஜனவரி 11

முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையிடமிருந்து திட்ட மதிப்பீடு பெறப்பட்டு, மயிலாடுதுறையில் மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்களுக்கு சிலையுடன்கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும்.

47—

சிலை அமைத்தல்

வினா எண் 70360—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொல்காப்பியருக்கு அவர் பெயரில் பூங்கா உருவாக்கி, சிலை வைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை சார்பாக தொல்காப்பிய பூங்கா சென்னையில் உள்ளதாலும், மேலும், அன்னாருக்கு சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் சிலை நிறுவப்பட்டுள்ளதாலும், தொல்காப்பியருக்கு அவர் பெயரில் பூங்கா உருவாக்கி, சிலை அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

48—

நினைவு மண்டபம் அமைத்தல்

வினா எண் 70361—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பருக்கு நினைவு மண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கம்பருக்கு நினைவு மண்டபம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

49—

பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடுதல்

வினா எண் 75530—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புதுக்கோட்டை மன்னர் இராஜா கோபால தொண்டைமான் அவர்களின் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மன்னர் இராஜா கோபால தொண்டைமான் அவர்களின் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடுவது தொடர்பான செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

50—

உணவு மானியம் வழங்குதல்

வினா எண் 54998—திரு. கோ. செந்தில்குமார்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடி, டேவிட், நிர்வாகி, சரணாலயம் டிரஸ்ட் இல்லம், பெருமாள்பேட்டை, வாணியம்பாடி, தான் நடத்தி வரும் சரணாலயம் டிரஸ்ட் கருணை

[2023 ஜனவரி 11

இல்லத்திற்கு சுற்றுச்சுவர் கட்டவும், உணவு மானியம் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் சமூக நல இயக்குநரகத்தின்கீழ், மாநில அரசின் மானியம் பெறும் முதியோர்கள் மற்றும் குழந்தைகள் உள்ளடங்கிய 44 ஒருங்கிணைந்த வளாகங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்காக மாநில அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முறையே 75:25 என்ற விகிதத்தில் மானியம் வழங்கி வருகிறது.

1. திருப்பத்தூர் மாவட்டம், சரணாலயம் டிரஸ்ட் இல்லம், 124K, ஆலங்காயம் கிராஸ் ரோடு, பெருமாள்பேட்டை, வாணியம்பாடி என்ற முகவரியில் ஒருங்கிணைந்த வளாகமாக இயங்கி வருகிறது.

2. சரணாலயம் டிரஸ்ட் இல்லம், மாநில அரசின்கீழ் பதிவு செய்யப்பட்டு, மாநில அரசின் மானியம் பெற்று வழங்கப்பட்டு வருகிறது.

3. சரணாலயம் டிரஸ்ட் இல்லம் 25 முதியோர்கள் மற்றும் 25 குழந்தைகளை கொண்டு இயங்கி வருகிறது.

இவ்வொருங்கிணைந்த வளாகத்தில் பயன்பெறும் முதியோர்களுக்கு அடிப்படை வசதிகளான உணவு, உடை, தங்குமிடம், பணியாளர் ஊதியம், மருத்துவ வசதி, சுகாதாரப் பராமரிப்பு, பொழுதுபோக்கு போன்றவற்றிற்கு மட்டுமே அரசு மானியம் வழங்கி வருகிறது. அரசாணை எண் 83, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 23–11–2016–ல் உள்ளுரைவோருக்கு பாதுகாப்பாக தங்குமிடம் ஏற்படுத்தித் தருவது அந்தந்த தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் பொறுப்பே ஆகும். எனவே, இவ்வில்லத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுவது

2023 ஜனவரி 11]

தொடர்பாக தன்னார்வத் தொண்டு நிறுவனமே நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

51—

முதியோர் நலத் திட்டம்

வினா எண் 59112—திரு. இரா. அருள்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் பெருகிவரும் முதியோர்கள் எண்ணிக்கைக்கு தக்கவாறு நலத் திட்ட உதவிகளை கூடுதலாக வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் சமூக நல இயக்குநரகத்தின்கீழ் மாநில அரசின் மானியம் பெறும் 21 முதியோர் இல்லங்கள், முதியோர்கள் மற்றும் குழந்தைகளை உள்ளடக்கிய 42 ஒருங்கிணைந்த வளாகங்கள் மற்றும் ஒன்றிய அரசின் மானியம் பெறும் 72 மூத்த குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த திட்டம் (IPSrC) போன்ற திட்டங்கள் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின்கீழ் சமூக பாதுகாப்பு திட்டங்கள்மூலம் முதியோர் நலத்திற்கென இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம்மூலம் 60 வயதிற்கு மேற்பட்ட எவ்வித ஆதரவும் இல்லாத முதியோர்களுக்கு ரூ.1,000/– ஓய்வூதியமாக 14,63,750 பேருக்கு வழங்கப்படுகிறது. மேலும், மூத்த குடிமக்களுக்கான தேசிய திட்டம்மூலம் மூத்த குடிமக்கள் ஆரோக்கியமாக மகிழ்ச்சியாக தன்னம்பிக்கையுடன் வாழ வழிவகை செய்து வருகிறது. மக்களைத் தேடி மருத்துவத்தின்மூலம் முதியோர்களுக்கு விழிப்புணர்வு, வீடு தேடி மருத்துவம், நடமாடும் மருத்துவக் குழு போன்ற பல்வேறு அரசு நலத் திட்டங்கள் முதியோர் நலனுக்கென செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

[2023 ஜனவரி 11

52—

கால்நடை மருத்துவமனையை சீரமைத்தல்

வினா எண் 7992—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், அருமந்தை ஊராட்சி, மேடங்களம் கால்நடை மருத்துவமனையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், அருமந்தையில் கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. தற்போது அருமந்தை கால்நடை கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அவ்வாறு அருமந்தை கால்நடை கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும்போது புதிய கட்டடம் கட்ட பரிசீலிக்கப்படும்.

53—

நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 12073—திருமதி கு. மரகதம் குமரவேல்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுராந்தகம் தொகுதி, அச்சரபாக்கம், மதுராந்தகம் ஒன்றியங்களில் நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் தொகுதி, அச்சரபாக்கம் மற்றும் மதுராந்தகம் ஒன்றியங்களில் 16 கால்நடை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒரு நடமாடும் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருவதால், ஒன்றிய அளவில் நடமாடும் கால்நடை மருத்துவமனையின் தேவை எழவில்லை.

54—

கால்நடை கிளை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 14228—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், நாகர்கூடல் ஊராட்சி, நாகர்கூடல் கிராமத்தில், பண்டஅள்ளி கால்நடை மருத்துவமனையை பிரித்து, கிளை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், நாகர்கூடல் ஊராட்சி, நாகர்கூடல் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

55—

மீன்கள் விற்பனையைத் தடுத்தல்

வினா எண் 17860—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

சேலம் ஜங்ஷன் மீன் மார்க்கெட்டில் வேதிப்பொருள் தடவிய மீன்கள் விற்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம் ஜங்ஷன் மீன் மார்க்கெட்டில் வேதிப்பொருள் தடவிய மீன்கள் விற்பதைத் தடுக்க உணவு பாதுகாப்பு அதிகாரிகளால் (Food Safety Officer) *அவ்வப்பொழுது ஆய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீன்களில் வேதிப்பொருள் இருப்பது உறுதி செய்யப்பட்டால் அனைத்து மீன்களும் பறிமுதல் செய்யப்பட்டு அப்புறப்படுத்தப்படும்.*

56—

கால்நடை கிளை நிலையம் அமைத்தல்

வினா எண் 17944—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, ஒட்டனூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, ஒட்டனூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

2023 ஜனவரி 11]

57—

கால்நடை கிளை நிலையம் அமைத்தல்

வினா எண் 17946—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி பகுதி, O.G. அள்ளி கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி பகுதி, O.G. அள்ளி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

58—

ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்

வினா எண் 21785—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஏரியூர் ஒன்றியம், நெருப்பூர், பெண்ணாகரம், ஏரியூர், பிக்கிலி ஆகிய பகுதிகளில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பெண்ணாகரம் பகுதி பொதுமக்களிடமிருந்து ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்க கோரிக்கைகள் இதுவரை எதுவும் பெறப்படவில்லை. அவ்வாறு பெறப்படும்பட்சத்தில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க ஆவன செய்யப்படும்.

(ஆ) பெண்ணாகரம் தொகுதி, ஏரியூர் ஒன்றியம், நெருப்பூர், பெண்ணாகரம், ஏரியூர், பிக்கிலி ஆகிய பகுதிகளில் உள்ள மக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டவுடன், ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

59—

உம்பளாச்சேரி இனங்கள் பாதுகாத்தல்

வினா எண் 28194—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உம்பளாச்சேரி பசு—காளை இனங்களை பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், கொருக்கை கால்நடை பண்ணையில் சிறந்த மரபுத்தன்மை கொண்ட உம்பளாச்சேரி வகை கால்நடைகள் பராமரிக்கப்பட்டு அதன்மூலம் பெறப்படும் கன்றுகள் இனவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும், தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டை

2023 ஜனவரி 11]

உயரின கால்நடை பெருக்குப் பண்ணையில் உம்பளாச்சேரி இன சிறந்த மரபுத்தன்மை வாய்ந்த பொலிகாளைகள் பராமரிக்கப்பட்டு, அதன்மூலம் பெறப்படும் உறைவிந்து குச்சிகள்மூலம் செயற்கை முறை கருவூட்டல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்மூலம் உம்பளாச்சேரி இன கால்நடைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும், ஓசூர், மாவட்ட கால்நடைப் பண்ணையில் கருமாற்று தொழில்நுட்பத்தின்மூலம் உயர் மரபணு கொண்ட உம்பளாச்சேரி காளைக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

60—

மீன் பதனிடும் நிலையம், விற்பனைக் கூடம் அமைத்தல்

வினா எண் 28655—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *மயிலம் தொகுதி, வெள்ளிமேடுபேட்டை ஊராட்சியில் மீன் பதனிடும் நிலையம், விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதி, வெள்ளிமேடுபேட்டை ஊராட்சிக்கு அருகிலுள்ள 19 சிறு கிராமங்களில் சுமார் 17,037 நபர்களே உள்ளனர். மேற்படி கிராமங்களை சார்ந்த பொதுமக்கள் அருகிலுள்ள ஏரிகளில் உயிருடன் பிடிக்கப்படும் மீன்களை வாங்க நேரடியாக செல்வதால் மீன் விற்பனைக் கூடம் அமைத்திட அவசியம் எழவில்லை. மேலும், வெள்ளிமேடுபேட்டை ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களிலுள்ள ஏரிகளில் பிடிக்கப்படும் மீன்களானது அப்பகுதி மக்களுக்கு தினசரி தேவைக்கு போதுமானதாக உள்ள நிலையில் இப்பகுதியில் மீன் பதனிடும் நிலையம் அமைத்திட அவசியம் எழாது.*

[2023 ஜனவரி 11

61—

ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்

வினா எண் 64579—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, மல்லிக்குட்டை ஊராட்சி, இராமியம்பட்டி கிராமம், தித்தியோப்பனஅள்ளி ஊராட்சி, திகிலோடு கிராமம் ஆகிய கிராமங்களிலும், பிக்கிலி ஊராட்சி, சக்கில் நத்தம் பகுதியிலும் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் பகுதி, மல்லிக்குட்டை ஊராட்சி, இராமியம்பட்டி கிராமம், தித்தியோப்பனஅள்ளி ஊராட்சி, திகிலோடு கிராமம், பிக்கிலி ஊராட்சி, சக்கில் நத்தம் ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்களிடமிருந்து ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்க கோரிக்கைகள் இதுவரை எதுவும் பெறப்படவில்லை. அவ்வாறு பெறப்படும்பட்சத்தில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் துவங்க பொதுமக்கள் முன்வரும்பட்சத்தில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் துவங்கலாம் என அரசு கொள்கை முடிவு எடுத்த பின்பு, ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

62—

பனங்கற்கண்டு உற்பத்தியை அதிகப்படுத்துதல்

வினா எண் 21837—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

(அ) *தமிழ்நாட்டில் பனங்கற்கண்டு உற்பத்தியை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *தமிழ்நாட்டில் பனங்கற்கண்டு உற்பத்தியை மேலும் அதிகப்படுத்தும் நோக்கில் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையின் 2021–2022 ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையின் நிதியுதவியுடன் ரூ.50.00 இலட்சம் செலவில் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின்மூலம் கடலூர் மாவட்டம்–கடலூர், தூத்துக்குடி மாவட்டம்–வீரபாண்டிபட்டினம், இராமநாதபுரம் மாவட்டம்–சாயல்குடி, திண்டுக்கல் மாவட்டம்–கோவிலூர், ஈரோடு மாவட்டம்–சிறுவலூர் ஆகிய இடங்களில் 250 பனைத் தொழிலாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குத் தரமான பனங்கற்கண்டு மற்றும் பனைவெல்லம் தயாரிப்பதற்கான பயிற்சியும், அதற்கான உபகரணங்களும் ஏப்ரல், 2022–ல் வழங்கப்பட்டுள்ளன. இந்நடவடிக்கையின்மூலம் தமிழகத்தில் பனங்கற்கண்டு உற்பத்தி ஏற்கெனவே அதிகப்படுத்தப்பட்டுள்ளது.*

கடந்த நிதியாண்டில் பனைத் தொழிலாளர்களிடமிருந்து சுமார் 21,000 கிலோ பனங்கற்கண்டு மாநில இணையம் மற்றும் மாவட்ட சம்மேளனங்கள்மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, ரூ.126.00 இலட்சத்திற்கு பனை பொருள் அங்காடிகள் மற்றும் கதர் அங்காடிகளில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

63—

பனை பொருட்கள்

வினா எண் 28528—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

(அ) பொன்னேரி தொகுதி, பொன்னேரியில் பனை ஓலை பொருட்கள் கண்காட்சி நடத்தவும், சோழவரம் ஒன்றியத்தில் உருவாக்கப்படும் பனை ஓலை பொருட்களுக்கு தகுதிச் சான்று அளித்து சந்தைப்படுத்தவும், பழவேற்காட்டில் பனை பொருட்கள் தயாரிக்க பயிற்சி அளிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின்கீழ் திருவள்ளூர் மாவட்டத்தில் 7 ஆரம்ப பனை வெல்லம் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், பழவேற்காட்டில் புலிகாட் பெண்கள் பனை ஓலை பொருட்கள் உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவுச் சங்கமும் உள்ளது. இச்சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள பனைத் தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் பனை ஓலை பொருட்களுக்கு சான்றளித்து, மாநில/ மாவட்ட சம்மேளனங்கள்மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, சென்னை பிரதான கதர் அங்காடி—கொலு கண்காட்சி, இரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், ஆன்மிகத் தலங்கள் ஆகிய இடங்களில் சந்தைப்படுத்தி, கண்காட்சிமூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் (2022–2023 ஆம் நிதியாண்டில்) வேளாண் மற்றும் உழவர் நிதிநிலை அறிக்கையில் “பனை மேம்பாட்டு இயக்கம்” என்ற திட்டத்தின்மூலம் ரூ.11.01 இலட்சம் செலவில் பழவேற்காடு மற்றும் பல்வேறு மாவட்டங்களில் 100 பெண்களுக்கு பனை ஓலை பொருட்கள் தயாரிப்பு பயிற்சி அளித்திடவும், அவர்களால் உற்பத்தி செய்யப்படும் பனை ஓலை பொருட்களுக்கு தகுதிச் சான்று அளித்து சந்தைப்படுத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2023 ஜனவரி 11]

64—

தொழிற்சாலை

வினா எண் 28548—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, போளூர் பகுதியில் கதர் மற்றும் கிராமத் தொழில் துறை சார்பில் புதிய தொழிற்சாலை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் 14 கதர் உற்பத்தி மையங்களும், 6 பட்டு உற்பத்தி கிளைகளும் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது. இந்த மையங்களில் உற்பத்தி செய்யப்படும் இரகங்கள் இவ்வாரியத்தின் விற்பனை தேவைக்கு போதுமானதாக இருக்கிறது. இதுதவிர சோப்பு மற்றும் கைமுறை காகித அலகுமூலம் உற்பத்தி செய்து தமிழகம் முழுவதும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இவ்வுற்பத்தி அலகுகள்மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் விற்பனைக்கு போதுமானதாக இருப்பதால், போளூர் தொகுதியில் தற்சமயம் தொழிற்சாலை அமைக்க வழிவகை ஏதுமில்லை.

65—

கதர், கைவினைப் பொருட்கள் விற்பனை

வினா எண் 28563—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கதர் மற்றும் கைவினைப் பொருட்கள் விற்பனை மையங்களில் விற்பனை அதிகரிக்கவும் கிராமப்புற கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கதர் மற்றும் கிராமப் பொருட்கள், 2021–2022 ஆம் ஆண்டில் ரூ.47.09 கோடி தொகை அளவில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மேலும், தமிழகம் முழுவதும் 48 கதரங்காடிகள் தற்காலிக கதரங்காடிகள் மற்றும் www.tnkvib.org, www.tnkhadi.com *எனும் இணையதளங்கள், "*tnkhadi*" எனும் கைபேசி செயலி வழியாகவும், அமேசான், ப்ளிப்கார்ட், சுவிக்கி மூலமும் கதர் ரகங்கள் கைவினைப் பொருட்கள் சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம் அனைத்து கிராமப்புறங்களிலும் கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை அதிகமாக நடைபெற்று வருகிறது.*

விற்பனையை அதிகரிக்கும்பொருட்டு தனி உரிமைக் கிளைகளுக்கான உரிமங்களும் மொத்த விற்பனை முகவர்களையும் நியமித்து விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதேபோல், பண்டிகை காலங்களில் நகரின் முக்கிய இடங்கள் அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் கண்காட்சி நடத்தி விற்பனை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

66—

காதி கிராப்ட் சீருடைகள்

வினா எண் 28567—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் காதி கிராப்ட் மூலமாக பள்ளி மாணவ, மாணவிகளுக்கு சீருடைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் அரசு பள்ளி மாணவ, மாணவியருக்கான சீருடைகள் கைத்தறி ஆடைகளாக கைத்தறித் துறைமூலம் வழங்கப்பட்டு வருகின்றன. ஆதலால் காதி கிராப்ட் மூலமாக சீருடைகள் வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

67—

காதி கிராப்ட்

வினா எண் 28570—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் காதி கிராப்ட்மூலம் தயாரிக்கப்படும் பஞ்சு மெத்தைகள், தலையணைகள் சந்தைப்படுத்தவும் நகரின் முக்கிய பகுதிகளில் கடைகள் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் தமிழகம் முழுவதும் 48 கதரங்காடிகள் நகரின் முக்கிய பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. இக்கதரங்காடிகளின்மூலம் பஞ்சு மெத்தைகள் மற்றும் தலையணைகள் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நகராட்சி, பேரூராட்சி, அரசு மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் தற்காலிக கதர் விற்பனை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[*2023 ஜனவரி 11*

நிலையங்கள் அமைக்கப்பட்டு பஞ்சு மெத்தைகள் மற்றும் தலையணைகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

மேலும் www.tnkvib.org, www.tnkhadi.com *எனும் இணையதளங்கள் மூலமும்,* "tnkhadi" *எனும் கைபேசி செயலி வழியாகவும், அமேசான், ப்ளிப்கார்ட் போன்றவற்றின் மூலமும் கதர் கிராமப் பொருட்கள் அவர்களது வசிப்பிடத்திலேயே பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி பஞ்சு மெத்தை, தலையணைகள் முக்கிய பகுதிகளில் விற்பனை நடைபெற்று வருகிறது என்பதால் தனியே கடைகள் திறக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

68—

கதர் நெசவு தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 28590—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சலில் கதர் நெசவு தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 14 கதர் உற்பத்தி கிளைகள் உள்ளன. அவ்வுற்பத்தி கிளைகள் மூலமாக கதர் துணி உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அதன்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சலுக்கு 30 கி.மீ. தொலைவுக்குட்பட்டுள்ள மார்த்தாண்டத்தில் கதர் உற்பத்தி நிலையம் செயல்பட்டு வருகிறது. அக்கதர் உற்பத்தி நிலையத்தின் மூலமாக இப்பகுதியை சுற்றியுள்ள நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு கதர் துணி உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஜனவரி 11]

குளச்சல் பகுதியில் கதர் தொழிலை மேம்படுத்த தனியாக கதர் நெசவுத் தொழிற்சாலை துவங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

69—

கதர் அங்காடியை விரிவுபடுத்துதல்

வினா எண் 28593—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உதகமண்டலம் தொகுதி, உதகமண்டலத்தில் உள்ள கதர் அங்காடியை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் உள்ள கதரங்காடி கட்டடம் சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.47.00 இலட்சம் நிதியுதவி பெற்று புதுப்பிக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

70—

நரிக்குறவர் நலன்

வினா எண் 49777—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நரிக்குறவர் இன மக்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்த உரிய வழிகாட்டுதல் மற்றும் நிரந்தர வீடுகள் வழங்க அரசு முன்வருமா?

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை மாநில மற்றும் தேசிய அளவில் நடத்தப்படும் பொருட்காட்சிகளில் பங்குகொண்டு, அப்பொருட்களை சந்தைப்படுத்த ஏதுவாக அரங்கு அமைத்தமைக்கான செலவினம் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்மூலம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின்மூலம் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த அனைத்து பிரிவினருக்கும் (நரிக்குறவர்கள் உள்பட) வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் இத்துறையின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நரிக்குறவர்களும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற இயலும்.

71—

சிறுதானியங்கள் விற்பனை

வினா எண் 7886—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கம்பு, கேழ்வரகு போன்ற சிறுதானியங்களின் பயன்பாட்டை அதிகரிக்க அவற்றை ரேஷன் கடைகள்மூலம் விற்பனை செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

பொதுமக்களின் அன்றாட இன்றியமையா பொருட்களின் தேவையினை நிறைவு செய்வதே பொது விநியோகத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அதன் அடிப்படையில், தமிழ்நாட்டில்

2023 ஜனவரி 11]

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மக்களுக்கு தேவையான அரிசி, கோதுமை, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய பொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் துவரம் பருப்பு மற்றும் பாமாலின் எண்ணெய் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. சிறுதானியங்களை சென்னை, கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்மூலம் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்ய அரசால் ஆணையிடப்பட்டு நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. நீலகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் அரிசி/கோதுமைக்கு பதில் இரண்டு கிலோ கேழ்வரகு விலையில்லாமல் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

72—

சிறுதானியங்கள் விற்பனை

வினா எண் 12858—திரு. இரா. அருள்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சிறுதானிய விவசாயிகளின் நலன் மேம்படவும், விவசாயிகளிடம் இருந்து சிறுதானியங்களை கொள்முதல் செய்து, நியாய விலைக் கடைகளில் நியாயமான விலையில் விற்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

பொதுமக்களின் அன்றாட இன்றியமையா பொருட்களின் தேவையினை நிறைவு செய்வதே பொது விநியோகத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அதன் அடிப்படையில், தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மக்களுக்கு தேவையான இன்றியமையா பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய பொருட்கள் மானிய விலையில்

வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் துவரம் பருப்பு மற்றும் பாமாலின் எண்ணெய் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. சிறுதானியங்களை சென்னை, கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்மூலம் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்ய அரசால் ஆணையிடப்பட்டு நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து நீலகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் அரிசி/கோதுமைக்கு பதில் இரண்டு கிலோ கேழ்வரகு விலையில்லாமல் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

73—

நியாய விலைக் கடைகளில் விலைப்பட்டியல்

வினா எண் 38614—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அனைத்து கடைகளிலும் விலைப்பட்டியல் வைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் செயல்படும் நியாய விலை அங்காடிகளில் கீழ்க்காணும் தகவல்கள், தகவல் பலகையில் வைக்கப்படவேண்டும் என ஆணையாளர் அலுவலகக் கடிதம் மூலமாக அனைத்து மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் மற்றும் துணை ஆணையாளர் (நகரம்) வடக்கு/தெற்கு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது:

1) பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பொருட்களின் அளவு மற்றும் இருப்பு விவரம்.

2) இன்றியமையாப் பொருள்களின் விலைப் பட்டியல்.

2023 ஜனவரி 11]

3) நியாய விலை அங்காடி செயல்படும் நேரம் (உணவு இடைவேளை உட்பட)

4) இன்றியமையாப் பொருள்கள் தரம் குறித்த குறைகளை தெரிவிக்கும் அலுவலரின் பெயர், பதவி மற்றும் தொலைபேசி எண் விவரம்.

5) இலவச உதவி மைய எண்.

மேற்காணும் விவரங்கள் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் பொது மக்களுக்குத் தெரியும்வண்ணம் காட்சிப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன.

74—

ரேசன் பொருட்கள்

வினா எண் 38676—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ரேசன் பொருட்களை வீடு தேடி சென்று வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசினால், அரிசி விருப்ப குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் விலையில்லா அரிசி, கோதுமை மற்றும் மானிய விலையில் சர்க்கரை, துவரம் பருப்பு பாமாயில் போன்ற இன்றியமையாப் பொருள்கள் நியாய விலைக்கடைகள்மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. அரசால் அறிவிக்கப்படும் வாராந்திர விடுமுறை நாள் மற்றும் அரசு, நியாய விலைக் கடைகளுக்கு அறிவிக்கும் விடுமுறை நாட்கள் தவிர இதர பணி நாட்களில் நியாய விலைக் கடைகள் செயல்படுகின்றன. குடும்ப அட்டைதாரர்களின் நலன் கருதி மாதத்தின் முதல் மற்றும் இரண்டாம் வெள்ளிக்கிழமை விடுமுறை

நாளாகவும், முதல் மற்றும் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமை வேலை நாட்களாகவும் இருப்பதால், குடும்ப அட்டைதாரர்கள் அவர்களின் தேவைக்கேற்ப நியாய விலைக் கடையின் வேலை நாட்களில் எந்த நாளில் வேண்டுமானாலும் அவர்களின் குடும்ப அட்டைக்குத் தகுதியான இன்றியமையாப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம். அரிசியைக் குடும்ப அட்டைதாரர்கள் விரும்பும் வகையில், ஒன்று அல்லது இரண்டு தவணைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

குடும்ப அட்டைதாரர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே நியாய விலைக் கடைகளை அமைக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. குடும்ப அட்டைதாரர்கள் எவரும் 1.5 கிலோ மீட்டருக்கு மேல் சென்று பொருள்கள் வாங்கும் சூழ்நிலை இல்லாத வகையில் புதிய முழுநேர மற்றும் பகுதிநேர நியாய விலைக் கடைகளைத் திறக்க அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

மேலும், ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடைகளில் விரல்ரேகை படிப்பிமூலம் இன்றியமையாப் பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டு வருவதால் குடும்ப அட்டைதாரர்கள் அவர்களுக்குரிய நியாய விலைக் கடையில் மட்டுமல்லாமல் தாங்கள் விரும்பும் எந்த நியாய விலைக் கடையிலும் குடும்ப அட்டையில் முகவரி மாற்றமின்றி இன்றியமையாப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம். குடும்ப அட்டைதாரர்களுக்கு அவரவர் இருப்பிடத்தின் அருகிலேயே இன்றியமையாப் பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டு வரும் நிலையில் ரேசன் பொருள்களை வீடு தேடி சென்று வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

75—

குடும்ப அட்டை

வினா எண் 50837—திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, அச்சரபாக்கம் ஒன்றியம், மதூர் ஊராட்சியில் வசிக்கும் இருளர் இன மக்களுக்கு குடும்ப அட்டை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், மதூர் ஊராட்சிக்குட்பட்ட இருளர் இனத்தைச் சேர்ந்த 29 குடும்பங்களுக்கு குடும்ப அட்டை வழங்கப்பட்டு, அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

76—

மது பாட்டில்கள் அகற்றுதல்

வினா எண் 48819—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஏற்காடு மலைப் பகுதிகளின் பல்வேறு பகுதிகளில் வீசப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான லோடுகள் மது பாட்டில்களை போர்க்கால அடிப்படையில் சேகரித்து விலங்குகள், சுற்றுலாப் பயணிகளின் நலனை பாதுகாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

டாஸ்மாக் லிமிடெட், சேலம் மாவட்டம், ஏற்காடு மலைப் பகுதியில் இயங்கி வரும் 7215, 7213 மற்றும் 7476 ஆகிய எண்கள் கொண்ட மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் வாடிக்கையாளர்களுக்கு விற்கப்படும் மதுபான பாட்டில்களுக்கு கூடுதலாக ரூ.10/– பெற்ற பின்னர் அவர்கள் காலி மதுபான பாட்டில்களை திரும்ப ஒப்படைக்கும்போது ரூ.10/–ஐத் திரும்பத் தரும் திட்டமானது 15–6–2022 முதல் அமல்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

மேற்கண்ட திட்டம் செயல்படுத்த தொடங்கப்பட்ட நாளான 15–6–2022 முதல் 26–9–2022 வரையில் 4,52,509 மதுபான பாட்டில்கள் வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு, 4,09,946 காலி மதுபான பாட்டில்கள் திரும்பப் பெறப்பட்டுள்ளன.

[2023 ஜனவரி 11

ஏற்காடு மலைப் பகுதியில் உள்ள வனவிலங்குகளை பாதுகாக்கும் பொருட்டும், சுற்றுச்சூழல் மாசுபடுதல் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டும், தமிழக அரசின் உத்தரவிற்கிணங்க மேற்கண்ட திட்டமானது தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

77—

ஆம்புலன்ஸ் வழங்குதல்

வினா எண் 37905—திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வேளூர் தொகுதி, கீழையூருக்கு 108 ஆம்புலன்ஸ் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஏற்கெனவே நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, கீழையூருக்கு அண்மையில் 6.5 கி.மீ. தொலைவில் உள்ள திருக்குவளை அரசு மருத்துவமனை, 7 கி.மீ. தொலைவில் உள்ள திருப்பூண்டி ஆரம்ப சுகாதார நிலையம், 7 கி.மீ. தொலைவில் உள்ள நீர்முலை ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் 10 கி.மீ. தொலைவில் உள்ள தலைஞாயிறு ஆகிய இடங்களில் 108 அவசரகால ஊர்திகள் நிலைநிறுத்தப்பட்டு தேவைக்கேற்ப, சிறப்பாக சேவையாற்றி வருகின்றன.

78—

அமரர் ஊர்தி வழங்குதல்

வினா எண் 39155—திரு. A.G. வெங்கடாசலம்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மற்றும் அரசு மருத்துவமனைகளிலும் பொதுமக்களுக்கு உதவிடும்

2023 ஜனவரி 11]

வகையில் அமரர் ஊர்தி இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இலவச அமரர் ஊர்தி சேவையானது பொதுமக்களின் தேவைக்கேற்ப அரசு பொது மருத்துவமனைகளில் நிலைநிறுத்தப்பட்டு விபத்து மற்றும் உடல்நலக் குறைவால் இயற்கையாக உயிர் இழந்தவர்களை உடனடியாக எடுத்துச் செல்லும் வகையில் 195 இலவச அமரர் ஊர்திகள் முக்கிய இடங்களில் நிலைநிறுத்தப்பட்டு தேவைக்கேற்ப, சிறப்பாக சேவையாற்றி வருகின்றன.

79—

அவசர ஊர்தி திட்டம்

வினா எண் 50153—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வாகனங்கள்மூலம் அவசர ஊர்தி திட்டத்தை செயல்படுத்தி கொரோனா தொற்றால் பாதிப்படைந்தோர்க்கு சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கொரோனா நோய்த்தொற்று தமிழகத்தில் தொடங்கிய நாள் முதலே கொரோனா நோயினால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான நோயாளிகளை இரவு, பகல் பாராமல் அவசர சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலமாக

அரசு மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டும் அவர்களுக்குரிய சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டும் செவ்வனே செயலாற்றப்பட்டது.

இந்த வகையில் 108 ஆம்புலன்ஸ்மூலம் அழைத்து செல்லப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை ஏப்ரல் 2020 முதல் மார்ச் 2021 வரை 2,87,806 நபர்களாகவும், ஏப்ரல் 2021 முதல் மார்ச் 2022 வரை 2,92,959 நபர்களாகவும் மற்றும் ஏப்ரல் 2022 முதல் ஆகஸ்டு 2022 வரை 2,680 நபர்களாகவும் உள்ளது.

80—

வணிக வரி அலுவலகம் கட்ட இடம் ஒதுக்குதல்

வினா எண் 25397—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெருந்துறை தொகுதியில் வணிக வரி அலுவலகம் கட்ட புதிய இடம் ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருந்துறை தொகுதியில் வணிக வரி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட உரிய நிலம் அடையாளம் காணப்பட்டு ஈரோடு மாவட்ட ஆட்சியருக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிலம் தேர்வு செய்யப்பட்டவுடன் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

81—

நம்பர் பிளேட்டுகள், எழுத்துக்கள் மாற்றம்

வினா எண் 49479—திரு. இரா. அருள்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

தமிழக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் வாகனங்களில் பல வகையான நம்பர் பிளேட்டுகள், எழுத்துக்கள் மாற்றப்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் வாகனங்களில் பல வகையான நம்பர் பிளேட்டுகள், எழுத்துக்கள் மாற்றப்படுவதைத் தடுக்க அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இவ்வாண்டில் இதுவரை 4,657 இனங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

82—

குறிப்பிட்ட வாகனப் பதிவு எண்கள் இடம்பெறுதல்

வினா எண் 52457—திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வாகனப் பதிவு எண்களில் TN *01,* TN *02 என வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை அறிந்துகொள்ள இடம்பெறும் எண்களில்* TN *08,* TN *17,* TN *26,* TN *35,* TN *44,* TN *53,* TN *62,* TN *71,* TN *80,* TN *98 போன்ற கூட்டுத்தொகை 8 என வரும் எண்கள் தமிழ்நாட்டில் ராசியில்லா எண்கள் என்று தவிர்க்கப்படுகின்றன. இத்தகைய மூடநம்பிக்கையை முறியடிக்கும் வகையில் இனி புதியதாக ஏற்படுத்தப்படும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு அத்தகைய பதிவு எண்கள் இடம்பெற அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இதுதொடர்பாக அரசாணை (பல்) எண் 89, உள் (போ.வ. 6) துறை, நாள் 7–2–2019–ன்படி பதிவு கூட்டுத்தொகை 8 வரும் எண்

TN 08, TN 17, TN 26, TN 35, TN 44, TN 53, TN 62, TN 71, TN 80, TN 98 ஆகியவற்றை புதிதாக தோற்றுவிக்கப்படும் அலுவலகங்களுக்கு ஒதுக்கீடு செய்ய ஆணை நடப்பில் இருந்து வருகிறது. எனவே, இதன்படி இனிவரும் காலங்களில் கூட்டுத்தொகை 8 கொண்ட பதிவு எண்கள் புதிதாக தோற்றுவிக்கப்படும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

83—

திருக்கோயிலில் திருமண மண்டபம் கட்டுதல்

வினா எண் 11951—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் திருமண மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தேவஸ்தான நிர்வாகத்தில் உள்ள 225 உப திருக்கோயில்களில் விராலிமலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலும் ஒன்றாகும். தேவஸ்தானம் நிலை–1 செயல் அலுவலராலும் பரம்பரை முறைவழி சாராத அறங்காவலர்களாலும் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், விராலிமலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு திருமண மண்டபம் கட்ட நடப்பு நிதியாண்டில் புதுக்கோட்டை தேவஸ்தானத்தில் போதிய நிதி ஆதாரம் இல்லை என்பதால் தற்போது கட்ட இயலாத நிலை உள்ளது.

2023 ஜனவரி 11]

84—

கோயில் குளத்தை மறுசீராய்வு செய்தல்

வினா எண் 12037—திரு. க. கணபதி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரவாயல் தொகுதி, வார்டு எண் 147, மேட்டுக்குப்பம், கங்கா நகர், அருள்மிகு கெங்கையம்மன் கோயில் குளத்தை மறுசீராய்வு செய்து ஆழப்படுத்தி, சுற்றுச்சுவர் மற்றும் நடைபாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரவாயல் தொகுதி, கங்கா நகர், வார்டு எண் 147, மேட்டுக்குப்பம், அருள்மிகு கெங்கையம்மன் கோயில் குளம் வருவாய்த் துறை ஆவணங்களில், அரசு புறம்போக்கு குளம் என்ற வகைப்பாட்டின்கீழ் வரப்பெறுவதால் இந்து சமய அறநிலையத் துறையின்மூலம் குளத்தை மறுசீராய்வு செய்து, ஆழப்படுத்தி, சுற்றுச்சுவர் மற்றும் நடைபாதை அமைக்க இயலாத நிலையில் உள்ளது.

85—

தனி அலுவலகம்

வினா எண் 12268—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கந்தர்வகோட்டையில் இந்து சமய மற்றும் அறநிலையத் துறைக்கு தனி அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

இந்து சமய அறநிலையத் துறையில் ஒரு மாவட்டத்திற்கு ஓர் உதவி ஆணையர் அலுவலகமும், இரண்டு மாவட்டங்களுக்கு ஓர் இணை ஆணையர் அலுவலகமும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி புதுக்கோட்டையில் உதவி ஆணையர் அலுவலகமும் தஞ்சாவூரில் இணை ஆணையர் அலுவலகமும் உள்ளன. புதியதாக கந்தர்வகோட்டையில் தனி அலுவலகம் அமைக்க நடவடிக்கை ஏதும் இல்லை.

86—

நிதியுதவி

வினா எண் 13162—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, பழனி வட்டம், காவலப்பட்டி ஊராட்சியில் உள்ள அருள்மிகு ஸ்ரீமாயவர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை மூலமாக நிதியுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

பழனி தொகுதி, பழனி வட்டம், காவலப்பட்டி ஊராட்சியில் உள்ள அருள்மிகு ஸ்ரீமாயவர் திருக்கோயில் 2022–2023 ஆம் நிதியாண்டிற்கான ஆதி திராவிடர் வசிக்கும் பகுதியில் உள்ள திருக்கோயில் திருப்பணிக்கு தேர்வு செய்யப்பட்டு, ரூ.2,00,000/– நிதி வழங்கப்பட்டு துறை நிதிமூலம் திருப்பணி செய்யப்படும்.

2023 ஜனவரி 11]

87—

சுற்றுச்சுவர்

வினா எண் 14071—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், பொற்பலாம்பட்டு ஊராட்சி, ஊர் மாரியம்மன் கோயில் சுற்றுச்சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், பொற்பாலம்பட்டு, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாததால், மேற்படி திருக்கோயில் இடத்திற்கு இந்து சமய அறநிலையத் துறைமூலம் சுற்றுச்சுவர் அமைக்க வழிவகை இல்லை. இத்திருக்கோயிலை இந்து சமய அறநிலையத் துறையின் சீரிய ஆளுகையின்கீழ் கொண்டுவர அப்பகுதி மக்களிடையே எதிர்ப்புகள் ஏதும் இல்லாதபட்சத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் கொண்டு வந்து திருப்பணி மேற்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

88—

குடமுழுக்கு

வினா எண் 14532—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், வீரபாண்டி ஒன்றியம், கஞ்சமலையில் உள்ள அருள்மிகு சித்தேஸ்வரர் சுவாமி திருக்கோயில் மற்றும் அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் மேற்கு வட்டம், கஞ்சமலை கிராமத்தில் உள்ள அருள்மிகு சித்தேஸ்வரர் சுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகைக்குட்பட்ட சட்டப்பிரிவு 46(iii)—ன்கீழ் உள்ள பட்டியலைச் சேர்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிலை–2 செயல் அலுவலராலும், சேலம், உதவி ஆணையரால் தக்கார் நிலையிலும் நிருவகிக்கப்பட்டு வருகிறது.

இத்திருக்கோயிலில் குடமுழுக்கு நடைபெற்று 15 ஆண்டுகளுக்கு மேலானதால் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்திட உத்தேசிக்கப்பட்டு தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று அதன் அடிப்படையில் மண்டல, மாநில மற்றும் உயர் நீதிமன்ற வல்லுநர் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

சித்தர் சன்னதியில் கருங்கல் தரைதளம் அமைத்தல், சோபன மண்டபத்தில் சாலகோபுரம் அமைத்தல், வர்ணப்பூச்சு செய்தல் ஆகிய பணிகளுக்கு உபய திருப்பணியாக மேற்கொள்வதற்கான மதிப்பீடுகள் பரிசீலனையில் உள்ளன. அருள்மிகு ஞானசத்குரு பாலமுருகன் மற்றும் காளியம்மன் சன்னதிகளில் திருப்பணிகள் மேற்கொள்ள மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. திருப்பணி வேலைகள் விரைவில் துவங்கி முடிவு பெற்றவுடன் குடமுழுக்கு நடத்தப்படும்.

89—

திருக்கோயிலை புனரமைத்து, குடமுழுக்கு நடத்துதல்

வினா எண் 15194—திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, சோழம்பேட்டையில் உள்ள அருள்மிகு தான்தோன்றிநாதர் திருக்கோயிலை புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை மாவட்டம், சோழம்பேட்டை, அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் திருக்கோயில் சட்டபிரிவு 46(ii)*–ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட பட்டியல் சார்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிருவாகம் நிலை–2 செயல் அலுவலரால் நிருவாகம் செய்யப்பட்டு வருகிறது.*

இத்திருக்கோயிலின் குடமுழுக்கு கடந்த 11–4–2001 அன்று நடைபெற்று, தற்சமயம் குடமுழுக்கு நடைபெற்று 21 ஆண்டுகள் முடிந்த நிலையில் திருப்பணி மேற்கொண்டு குடமுழுக்கு நடத்திட ஏதுவாக தொல்லியல் ஆலோசகர் கருத்துரு பெற்று மண்டல அளவிலான Heritage Screening Committee*–ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. கடந்த 11–1–2022 அன்று நடைபெற்ற மாநில அளவிலான வல்லுநர் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மதிப்பீடுகள் தயார் செய்து உரிய அனுமதி வழங்கி விரைவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு திருப்பணி வேலைகள் முடித்து குடமுழுக்கு செய்யப்படும்.*

90—

குடமுழுக்கு

வினா எண் 15195—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறையைச் சுற்றியுள்ள பழமையான புராதனமான திருக்கோயில்களைப் புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறையைச் சுற்றியுள்ள பழமையான புராதனமான திருக்கோயில்களைப் புனரமைத்து, குடமுழுக்கு நடத்த தற்போதுள்ள நடைமுறைப்படி தொல்லியல் துறை ஆலோசகர் கருத்துரு பெற்று அதனடிப்படையில் மண்டல மற்றும் மாநில அளவிலான வல்லுநர் குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டு திருப்பணி வேலைகள் தொடர்பான கருத்துரு பெற்று, அதன் அடிப்படையில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு உரிய அனுமதி பெற்று மயிலாடுதுறையைச் சுற்றியுள்ள பழமையான புராதனமான திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்படும்.

91—

மண்டபம்

வினா எண் 21327—திரு. ஜெ. கருணாநிதி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வடபழனி, அருள்மிகு பழனி ஆண்டவர் திருக்கோயிலில் பழுதடைந்துள்ள வள்ளி மண்டபத்திற்கு மாற்றாக புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வடபழனி, அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் ரூ.16 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த திருமணக்கூடங்கள் கட்டப்படும் என்ற இந்து சமய அறநிலையத் துறையின் 2021–2022 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பினை செயல்படுத்தும்பொருட்டு

2023 ஜனவரி 11]

இத்திருக்கோயிலின் பழுதடைந்துள்ள வள்ளி திருமண மண்டபத்தினை இடித்து, புதிதாக 44 சிறிய மண்டபங்கள் கட்டுமானம் செய்திட ரூ.19.50 கோடிக்கு நிருவாக அனுமதி அளிக்கப்பட்டு அரசாணை (நிலை) எண் 88, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி.3.2) துறை, நாள் 5–4–2022–ல் ஆணை பிறப்பிக்கப்பட்டு ஆணையரால் தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்படவுள்ளது.

92—

ஆக்கிரமிப்பு நிலங்கள் மீட்டல்

வினா எண் 27993—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தேவசம் போர்டுக்கு சொந்தமான ஆக்கிரமிப்பு நிலங்களை மீட்டு கோயில் வசம் ஒப்படைத்து நிருவகிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருக்கோயிலுக்கு சொந்தமான இடங்களில் தனி நபர் ஆக்கிரமிப்பு கண்டறியும் பணி மேற்கொள்ளப்பட்டதில் இதுவரை 44 இனங்களில் ரூ.48,32,52,000/– மதிப்பு கொண்ட 38 ஏக்கர் 89 சென்ட் இடம் ஆக்கிரமிப்பிலிருந்து திருக்கோயில் சுவாதீனத்தில் எடுக்கப்பட்டுள்ளது. தற்போது தனி நில அளவையர்மூலம் ரோவர் மிஷினில் நிலங்கள் அளவீடு செய்யப்பட்டு எல்லைக் கற்கள் நடும் பணி செய்யப்பட்டு வருகிறது. அதில் ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு சுவாதீனத்தில் எடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

93—

கோயில் கிணறுகள் பராமரித்தல்

வினா எண் 28030—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இளம்பிள்ளை சித்தர் கோயில் கிணறுகளை சுத்தமாக பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், கஞ்சமலை, அருள்மிகு சித்தேஸ்வரசுவாமி மற்றும் பாலமுருகன் திருக்கோயில் சட்டப்பிரிவு 46(iii)—ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் நிலை—2 செயல் அலுவலராலும், சேலம் மண்டல உதவி ஆணையரால் தக்கார் நிலையிலும் நிருவகிக்கப்பட்டு வருகிறது. திருக்கோயிலின் உதவித்தொகை நிர்ணய வருவாய் பசலி 1429—க்கு ரூ.61,02,153/— ஆகும்.

இத்திருக்கோயில் சேலம் இளம்பிள்ளை நெடுஞ்சாலையையொட்டி கஞ்சமலை அடிவாரத்தில் சுமார் 46 ஏக்கர் பரப்பளவில் அமையப்பெற்றுள்ள 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மை வாய்ந்த திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயிலில் அருள்மிகு சித்தர் சன்னதி, அருள்மிகு ஞானசற்குரு பாலமுருகன் சன்னதி, அருள்மிகு காளியம்மன் சன்னதி மற்றும் அருள்மிகு விநாயகர் சன்னதி ஆகிய சன்னதிகள் தனித்தனியே உள்ளன. கஞ்சமலையின் மேற்கு பகுதியிலிருந்து திருக்கோயில் வளாகத்தின் வழியாக அமையப்பெற்றுள்ள பொன்னி நீரோடையை ஒட்டி பக்தர்கள் நீராடுவதற்கு 9 நாழிக்கிணறுகளும், சித்தர் சன்னதி வளாகத்தில் சுவாமியின் அபிஷேகத்திற்கு தண்ணீர் எடுப்பதற்காக ஒரு தீர்த்தக்கிணறும் அமையப்பெற்றுள்ளது. மேலும், நாழிக்கிணறுகளில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாமலிருக்க கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டு தூர்வாரப்பட்டுள்ளன. கோடை காலங்களில் போதுமான தண்ணீர் வசதி ஏற்படுத்திட ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு நாழிக்கிணறுகளுக்கு தடையின்றி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் பரிகாரம் வேண்டி குளித்தவுடன் அங்கேயே விட்டுச்செல்லும் பழைய துணிமணிகள், பேப்பர்கள் ஆகியவை சுகாதாரப் பணியாளர்கள்மூலம்

2023 ஜனவரி 11]

அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன. பக்தர்கள் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டு உரிய அறிவிப்புகள் செய்யப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. இத்திருக்கோயில் சுற்றுச்சுவர் ஏதுமின்றி திறந்தவெளியில் அமைந்துள்ளதால் அருகில் உள்ள கிராமத்திலிருந்து பரிகாரம் செய்த பூக்கள், மாலைகள் மற்றும் துணிகள் ஆகியவற்றை இரவு நேரங்களில் நாழிக்கிணறுகளில் பக்தர்கள் விட்டுச்செல்வதால் அதனை தடுக்கும் வகையில் நாழிக்கிணறுகளைச் சுற்றி இரும்பு கம்பிகளால் ஆன தடுப்பு ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

94—

ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

வினா எண் 49012—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகரம், சின்னதிருப்பதி அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோயில் நிலத்தை அளவீடு செய்து ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், சேலம் நகர், சின்னதிருப்பதி அருள்மிகு பிரசன்ன வெங்கடேசபெருமாள் திருக்கோயிலுக்கு சொந்தமான கீழ்க்கண்ட சர்வே எண்களில் மட்டுமே நிலங்கள் உள்ளன. அதில் வரிசை எண் 1-ல் உள்ள நிலம் முறையாக பொது ஏலம்மூலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேலும், வரிசை எண் 2-ல் உள்ள நிலத்தில் முடி காணிக்கை மண்டபம் உள்ளது. அம்மண்டபம் முற்றிலும் திருக்கோயில் பயன்பாட்டில் உள்ளது:

வரிசை எண்	பட்டா எண் மற்றும் பட்டாதாரர் பெயர்	சர்வே எண்	நன்செய் ஹெக்டேர்/ ஏர்ஸ்
1.	19, அருள்மிகு சின்னதிருப்பதி ஸ்ரீவெங்கடேச பெருமாள் திருக்கோயில்	வார்டு G பிளாக் 0031, நகர்புல எண். 6	0.88.0
2.	19, அருள்மிகு சின்னதிருப்பதி ஸ்ரீவெங்கடேச பெருமாள் திருக்கோயில்	வார்டு G பிளாக் 0034, நகர்புல எண். 6	0.13.5

மேற்படி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் அனைத்தும் திருக்கோயிலின் முழு சுவாதீனத்தில் உள்ளன. இந்நிலங்களில் ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை.

95—

பால் பண்ணை

வினா எண் 28738—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் தொகுதியில் புதிய ஆவின் பால் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மேலூர் தாலுகாவில் 95 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நாள் ஒன்றிற்கு சராசரியாக 31,000 லிட்டர் பால் வீதம், மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மூலமாக அப்பகுதியில் உள்ள சங்க உறுப்பினர்களிடமிருந்து பால்

2023 ஜனவரி 11]

கொள்முதல் செய்து வருகிறது. மேலும், தற்போது, மேலூர் தாலுகாவில் ஒரு பால் சேகர வழித்தட வாகனத்தின் மூலமாக சராசரியாக நாள் ஒன்றுக்கு 3,300 லிட்டர் பால் சேகரம் செய்யப்பட்டு வருகிறது. மேலூர் பகுதியில் உள்ள சாணிப்பட்டி, கொட்டக்குடி கோட்டநத்தம்பட்டி, தும்பைப்பட்டி, தனியாமங்கலம் ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள தொகுப்பு பால் குளிர்விப்பான் நிலையங்கள்மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 27,700 லிட்டர் பால் சேகரம் செய்யப்பட்டு குளிரூட்டப்பட்டு வருகிறது. எனவே, மேலூர் தொகுதிக்குட்பட்ட பல்வேறு கிராமங்களை மையமாகக் கொண்டு தொகுப்பு பால் குளிர்விப்பான் நிலையங்கள் அமைத்து பால் சேகரம் செய்யப்படுவதாலும், மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து 25 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளதால் மேலூர் தொகுதியில் புதியதாக ஆவின் பால் பண்ணை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

96—

மதிப்பெண்கள்

வினா எண் 46483—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பள்ளிகளில் செயல்முறைத் தேர்வு, அக்த்தேர்வு மதிப்பெண்கள் வழங்குவதில் வெளிப்படைத்தன்மையுடன் ஆசிரியர்கள் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

செய்முறைத் தேர்வு

அரசாணை (2டி) எண் 50, பள்ளிக் கல்வித் (ஜி.இ.–1) துறை, நாள் 9–8–2017–ன்படி மேல்நிலை முதலாமாண்டு/ இரண்டாமாண்டு பயிலும் பள்ளி மாணவர்களுக்கான செய்முறைத் தேர்வுகள் முதன்மைக் கண்காணிப்பாளர் மற்றும்

புறத்தேர்வாளர்களாக (External Examiner) வேறு பள்ளி ஆசிரியர்களையும், அகத்தேர்வாளர்களாக (Internal Examiner) அதே பள்ளி ஆசிரியர்களையும் கொண்டு ஒவ்வொரு பள்ளியிலும் நடத்தப்பட்டு மதிப்பெண்கள் வழங்கப்பட்டு வருகிறது.

அகத்தேர்வு

அரசாணை (2டி) எண் 13, பள்ளிக் கல்வித் (ஜி.இ.–1) துறை, நாள் 20–2–2018–ன்படி பள்ளி மாணவர்களுக்கு அகமதிப்பீட்டு மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன. பள்ளிகளில் மாணவர்களுக்கு செய்முறைத் தேர்விற்கான மதிப்பெண்கள் மற்றும் அகமதிப்பீட்டு மதிப்பெண்கள் வெளிப்படைத்தன்மையுடன் வழங்கப்பட்டு வருகின்றன.

97—

சுற்றுச்சுவர்

வினா எண் 51633—திரு. வி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், வயலூர், எறையாமங்கலம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள தொடக்கப் பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், வயலூர் மற்றும் எறையாமங்கலம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள தொடக்கப் பள்ளிகளுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

2023 ஜனவரி 11]

98—

மேலாண்மைக் குழு

வினா எண் 40764—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களின் நிலைய மேலாண்மைக் குழுவில் (Institute Management Committee) *சட்டமன்ற உறுப்பினர்களை சேர்த்திட அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) (i) புதுடில்லியில் இயங்கிவரும் இந்திய அரசின் பயிற்சி இயக்குனரகம் (Directorate General of Training, Delhi) *வழங்கியுள்ள பொது மற்றும் தனியார் கூட்டமைப்புத் திட்டத்தின் வழிகாட்டுதல்களில், தொழிற்பயிற்சி நிலையங்களில் அமைக்கப்படும் நிலைய மேலாண்மைக் குழுவானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டு அமைக்க வேண்டும்:*

(அ) நிலைய மேலாண்மைக் குழுவின் தலைவர் அவர்கள் உள்ளூர் தொழில் துறையிலிருந்து 4 உறுப்பினர்களை பரிந்துரை செய்ய வேண்டும்.

(ஆ) மாநில அரசின் சார்பில் பிரதிநிதியாக, மண்டல பயிற்சி இணை இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு அதிகாரி, மாவட்ட தொழில் மையத்தின் அலுவலர், தொழிற்பயிற்சி நிலையத்தின் மூத்த பயிற்சி அலுவலர் மற்றும் பயிற்சியாளர்களின் பிரதிநிதி என 5 உறுப்பினர்களை பரிந்துரை செய்ய வேண்டும்.

(இ) தொழிற்பயிற்சி நிலையத்தின் முதல்வர் நிலைய மேலாண்மைக் குழுவின் செயலாளராக செயல்படுவார்.

(ii) எனவே, இந்திய அரசின் பயிற்சி இயக்குனரகம் வழங்கிய வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டில் உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களின் நிலைய மேலாண்மைக் குழுவின் (Institute Management Committee) சட்டமன்ற உறுப்பினர்களை சேர்க்க வழிவகை இல்லை.

99—

இ–சேவை மையம்

வினா எண் 21478—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தின் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் இலவச பொது இ–சேவை மையம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

தமிழகம் முழுவதும் சுமார் 13,976 இ–சேவை மையங்களில் 14,351 செயலிட முகப்புகள் (Counters) அமைக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றன. இவற்றுள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வாயிலாக 593 மையங்கள், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் உரிமம் பெற்ற முகவர்கள் வாயிலாக 2,033 மையங்கள் நகர்ப்புற பகுதிகளிலும், தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் கிராமத் தொழில்முனைவோர்களின் வாயிலாக முறையே 4,342, 4,664 மற்றும் 2,192 மையங்கள் கிராமப்புறங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

மீன்வளம் மற்றும் மீனவர் நலன் வாயிலாக 149 மையங்கள் கடலோரப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. படையினர் நகரம் (கண்டோன்மெண்ட் போர்டு) வாயிலாக 3 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 8,625 இ–சேவை மையங்கள் கிராம பஞ்சாயத்து பகுதிகளில் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு

2023 ஜனவரி 11]

மின்னாளுமை முகமையானது சேவை முகவர்கள் வாயிலாக இ–சேவை மையம் அமைப்பதற்காக பயனாளர் குறியீடுகளை மட்டும் வழங்கி வருகின்றன. மேலும், இ–சேவை மையம் அமைக்க அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் சேவை முகவர்கள் தாமே செய்து வருகின்றனர்.

தற்போது, இ–சேவை மைய முகவர்களான தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், கிராமப்புற தொழில்முனைவோர்கள் வாயிலாக இ–சேவை மையம் இல்லாத கிராம ஊராட்சி பகுதிகளில் இ–சேவை அமைக்க கோரிக்கை வரும் தருவாயில், இ–சேவை மையம் அமைக்க பயனர் குறியீடுகள் வழங்கப்படும்.

தற்போது உள்ள சேவை மைய முகவர்களான தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மற்றும் இதர சேவை மைய முகவர்களுக்கு வருமான பகிர்வு 70:30 மற்றும் 80:20 முறையில் செயல்பட்டு வருகிறது. மேலும், இலவச பொது இ–சேவை மையம் ஏற்படுத்தும் தருவாயில் ஏற்கெனவே இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் வேலை மிகவும் பாதிப்புக்குள்ளாகும். எனவே, அனைத்து கிராம ஊராட்சிகளிலும் இலவச பொது இ–சேவை மையம் ஏற்படுத்துவது தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

100—

இ–சேவை மையம்

வினா எண் 54774—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் ஆதரவற்ற விதவைகளுக்கு இ–சேவை மையம் அமைப்பதற்கு முன்னுரிமை வழங்கி, இலவசமாக கணினி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகம் முழுவதும் சுமார் 13,976 இ–சேவை மையங்களில் 14,351 செயலிட முகப்புகள் (Counters) அமைக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றன. இவற்றுள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வாயிலாக 593 மையங்கள், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் உரிமம் பெற்ற முகவர்கள் வாயிலாக 2,033 மையங்கள் நகர்ப்புற பகுதிகளிலும், தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் கிராமத் தொழில்முனைவோர்களின் வாயிலாக 4,342, 4,664 மற்றும் 2,192 மையங்கள் கிராமப்புறங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

மீன்வளம் மற்றும் மீனவர் நலன் வாயிலாக 149 மையங்கள் கடலோரப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. படையினர் நகரம் (கண்டோன்மெண்ட் போர்டு) வாயிலாக 3 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மின்னாளுமை முகமையானது சேவை முகவர்கள் வாயிலாக இ–சேவை மையம் அமைப்பதற்காக பயனாளர் குறியீடுகளை மட்டும் வழங்கி வருகிறது. இ–சேவை மையம் அமைக்க அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் சேவை முகவர்கள் தாமே செய்து வருகின்றனர்.

தற்போது, இ–சேவை மைய முகவர்களான தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், கிராமப்புற தொழில்முனைவோர்கள் வாயிலாக இ–சேவை மையம் இல்லாத கிராம ஊராட்சி பகுதிகளில் இ–சேவை மையம் அமைக்க கோரிக்கை வரும் தருவாயில், இ–சேவை மையம் அமைக்க பயனர் குறியீடுகள் வழங்கப்படும்.

தற்போது உள்ள சேவை மைய முகவர்களான தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மற்றும் இதர சேவை மைய முகவர்களுக்கு வருமான பகிர்வு 70:30 மற்றும் 80:20 முறையில் செயல்பட்டு

2023 ஜனவரி 11]

வருகிறது. மேலும், இலவச பொது இ–சேவை மையம் ஏற்படுத்தும் தருவாயில் ஏற்கெனவே இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் வேலை மிகவும் பாதிப்புக்குள்ளாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலும், “அனைத்து குடிமக்களும் இ–சேவை மையம் தொடங்குவதற்கு வழிவகை செய்யும் திட்டம்” பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாக கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் ஆதரவற்ற விதவைகளுக்கு இ–சேவை மையம் அமைப்பதற்கு முன்னுரிமை வழங்கும் வகையில் அமைய இருக்கிறது. மேலும், இலவசமாக கணினி வழங்குவது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II

(71 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

(இ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள்

(பட்டியல்கள் 5 முதல் 7 வரை)@

பட்டியல்-5

1—

கண்காணிப்பு கேமரா

வினா எண் 66—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் பெருநகராட்சிக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் புரபசர் காலனி பகுதியில் CCTV கேமரா பொருத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் பெருநகராட்சிக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் புரபசர் காலனி பகுதியில் CCTV கேமரா பொருத்துவதற்கு, தாம்பரம் பெருநகராட்சி நிதி மற்றும் சாலை பாதுகாப்பு நிதியில் இருந்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, நிதி கிடைக்கப்பெற்றவுடன் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

@ *இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்*

2023 ஜனவரி 11]

2—

மகளிர் காவல் நிலையம்

வினா எண் 153—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பாபநாசம் தொகுதி, பாபநாசத்தில் மகளிர் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதியில், பாபநாசம் அனைத்து மகளிர் காவல் நிலையம் அரசாணை (நிலை) எண் 625, உள் (காவல்–14) துறை, நாள் 18–7–2002–ன்படி 18–9–2002 முதல் செயல்பட்டு வருகிறது.

3—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 1299—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தியாகதுருகம் ஒன்றியம், ஈயனூர் ஊராட்சியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ஈயனூர் பகுதியைச் சுற்றி, புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க, வரையறுக்கப்பட்ட அளவுகோல்களின்படி 25 கிலோ மீட்டர் தொலைவிற்குள் ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் (வடக்கே 22 கிலோ மீட்டர் தொலைவில் தியாகதுருகம்) உள்ளதால், இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கூறிய நிலையங்களைச் சார்ந்த

பணியாளர்கள் மற்றும் ஊர்திகளை கொண்டு மேற்கொள்ள இயலும் என்பதால் ஈயனூர் பகுதியில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கும் நிலை எழவில்லை.

4—

மெட்ரோ இரயில் திட்டம்

வினா எண் 3585—திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மெட்ரோ இரயில் திட்டத்தை விரைந்து செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

கோயம்புத்தூர் மாநகரில் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வுகாணும் வகையில், ஒரு துரித இரயில் போக்குவரத்து அமைப்பினை ஏற்படுத்துவதற்கு ஜூலை 2017–ல் அரசு முடிவு செய்தது. அதன் பின்னர் இத்திட்டத்திற்கான விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கையை தயாரிக்கும் பணி, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணியை திருவாளர்கள் சிஸ்ட்ரா மற்றும் ரைட்ஸ் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. இந்த திட்ட அறிக்கைகள் தயாரிப்பதற்கான நிதியுதவியை ஜெர்மன் நிதி நிறுவனமான கே.எப்.டபுள்யூ வழங்குகிறது.

திருவாளர்கள் சிஸ்ட்ரா மற்றும் ரைட்ஸ் நிறுவனம் தயாரித்து அளித்த விரிவான சாத்தியக்கூறு அறிக்கையை அரசு பரிசீலனை செய்து, இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிப்பதற்கான அரசாணையை 16–07–2021–ல் வழங்கியுள்ளது. அரசாணையின்படி, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியை ஆலோசகர் நிறுவனம் துவக்கியுள்ளது. இவ்வறிக்கை டிசம்பர் 2021–ல் பெறப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

2023 ஜனவரி 11]

5—

மெட்ரோ இரயில் திட்டம்

வினா எண் 13128—முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருச்சிராப்பள்ளியில் மெட்ரோ இரயில் திட்டத்தை விரைந்து செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்பு (MRTS) ஏற்படுத்துவதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணி, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் அரசாணை (நிலை) எண் 156, தி.வ. (ம) சி.மு. துறை, நாள் 9–8–2021–ன்படி ஒப்படைக்கப்பட்டுள்ளது. விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணி இந்த ஆண்டு இறுதியில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

6—

வெள்ள நீர் தடுத்தல்

வினா எண் 27—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் பெருநகராட்சி, CTO காலனி மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் மழைக் காலங்களில் செம்பரம்பாக்கம் ஏரி நீர் மற்றும் அடையாறு நீர், குடியிருப்புப் பகுதிகளில் புகுவதை தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் கிழக்கு மற்றும் தென்கிழக்கு பகுதிகளில் அமைந்துள்ள பீர்க்கன்காரணை ஏரி, இரும்புலியூர் ஏரி, தாம்பரம் பெரிய ஏரி மற்றும் தாம்பரம் புதுதாங்கல் ஆகிய

TRUTH ALONE TRIUMPHS

[*2023 ஜனவரி 11*

ஏரிகளுக்கு உபரிநீர் கால்வாய்களாக மூடிய பெரு வடிகால் (Cut Cover) அமைத்து CTO காலனிக்குட்பட்ட மேற்கு தாம்பரம் பகுதிகளுக்குள் வெள்ள நீர் புகாமல் அடையாற்றிற்கு திருப்பும் பணியை பேரிடர் மேலாண்மை நிதியின்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7—

கால்வாய் அமைத்தல்

வினா எண் 196—திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, இரட்டைகுளம் கால்வாய் திட்டத்திற்கு நிதி ஒதுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, இரட்டை குளத்திலிருந்து உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய கால்வாய் வழித்தடத்தில் நெடுகை 3,000 மீட்டரில் ஒரு தலை மதகுடன் ரெகுலேட்டர் வைத்து பிரித்தெடுத்து புதிய கால்வாய் அமைக்க ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8—

படகு குழாம் அமைத்தல்

வினா எண் 231—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்போரூர் தொகுதி, திருக்கழுக்குன்றம் ஏரியில் படகு குழாம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் தொகுதியில் உள்ள திருக்கழுக்குன்றம் ஏரியில் படகு குழாம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

9—

கால்வாய் தூர்வாருதல்

வினா எண் 306—திரு. சு. ரவி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், தணிகைபோளூர் ஊராட்சி, பொதுப் பணித் துறைக்கு சொந்தமான சித்தேரி நீர்வரத்துக் கால்வாய் மற்றும் பாசனக் கால்வாய்களை தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், தணிகை போளூர் ஊராட்சியிலுள்ள தணிகை போளூர் சித்தேரியில் 2021–2022 ஆம் நிதியாண்டில் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படும். பாசன வாய்க்கால் தூர்வாரும் பணியை பொறுத்தவரை அந்தந்த ஏரி நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம் மூலமாகவோ அல்லது ஏரியின் ஆயக்கட்டுதாரர் மூலமாகவோ தூர்வாரி பராமரித்துக்கொள்ள வேண்டும்.

10—

கால்வாய்களைச் சீரமைத்தல்

வினா எண் 474—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, வேட்டவலம் பேரூராட்சியில் உள்ள பெரிய ஏரியின் நீர்ப்பாசன கால்வாய்களைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, வேட்டவலம் பேரூராட்சியில் உள்ள பெரிய ஏரியின் நீர்ப்பாசன கால்வாய்களைச் சீரமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

11—

ஏரி தூர்வாருதல்

வினா எண் 551—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், எடகீழையூர் ஊராட்சி, கழுமங்கலம் ஏரியைத் தூர்வாரி சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், எடகீழையூர் ஊராட்சி, கழுமங்கலம் ஏரியைத் தூர்வாரும் கருத்துரு ஏதும் தற்போது அரசால் பெறப்படவில்லை.

12—

ஆக்கிரமிப்பு அகற்றுதல்

வினா எண் 1023—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி நகரத்தில் சட்டுருட்டி வாய்க்கால் ஆக்கிரமிப்பை அகற்றி தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி நகரம் சட்டுருட்டி வாய்க்கால் புனரமைக்கும் பணியை ஆய்வு செய்து கருத்துரு அனுப்பப்பட்டு, நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 1260—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதியில் மயூரா ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதியில் மயூரா ஆற்றின் குறுக்கே புதிய தடுப்பணை கட்டும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

14—

அணை பராமரித்தல்

வினா எண் 1271—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதியில் மணிமுக்தா ஆற்றில் உள்ள அணைக்கட்டை பராமரிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதியில் மணிமுக்தா ஆற்றில் 4 அணைக்கட்டுகள் உள்ளன. கொங்கராயபாளையம் அணைக்கட்டு குடிமராமத்து திட்டத்தின்கீழ் 2019–2020–ல் புனரமைக்கப்பட்டது. பல்லகச்சேரி, பாளையங்கால் மற்றும் கூத்தக்குடி (ரூ.51.19 இலட்சம்) ஆகிய அணைக்கட்டுகளை தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் பகுதி III*–ன்கீழ் செயல்படுத்த அரசின் ஒப்புதல் பெற்று புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.*

15—

படகு குழாம்

வினா எண் 1354—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, பெருங்குடி இரயில் நிலையம் அருகே உள்ள ஏரியை ஆழப்படுத்தி, படகு குழாம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, பெருங்குடி இரயில் நிலையம் அருகே உள்ள ஏரியின் நீரியல் மற்றும் நீர்நிலையியல் விவரங்களின் அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சாத்தியக்கூறுகள் இருப்பின் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்மூலம் படகு குழாம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

16—

ஏரியை ஆழப்படுத்துதல்

வினா எண் 2380—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

(அ) திருப்போரூர் தொகுதி, தையூர் ஏரியினை ஆழப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், திருப்போரூர் தொகுதிக்குட்பட்ட தையூர் ஏரியினைத் தூர்வாரி, ஆழப்படுத்தி கரையினை பலப்படுத்தி, மதகு மற்றும் கலிங்கலை புதுப்பித்து, கொள்ளளவினை உயர்த்தி, ஏரியினை நீர்த்தேக்கமாக மாற்றிடும் திட்ட அறிக்கை ரூ.8.15 கோடியில் தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடுகளுக்குட்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

17—

கதவணை கட்டுதல்

வினா எண் 2430—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, குடிதாங்கியில் கதவணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதி, குடிதாங்கி அருகே, கொள்ளிடத்தின் இடது கரையில் காப்புக் காடுகள் உள்ளன. இவ்விடத்தில் கதவணை அமைத்து நீர் பங்கீடு செய்யும் வகையில் வாய்க்கால்கள் ஏதுமில்லை. மேலும், இப்பகுதியில் நிலநீர்மட்டங்கள் மற்றும் நில நீரின் தன்மை குறித்து தொழில்நுட்ப சாத்தியக்கூறின் அடிப்படையில் நிலத்தடி நீர் மட்டத்தினை

உயர்த்திட காப்புக் காடுகளுக்கு இடர்பாடில்லாமல், தரைகீழ் அணை (Sub surface dyke) அமைக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

18—

கால்வாய் அமைத்தல்

வினா எண் 2430—திரு. A. நல்லதம்பி: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஒன்றியம், காக்கங்கரை ஏரிக்கு கிருஷ்ணகிரி அணை நீரை கொண்டு வர மாவட்ட எல்லை முதல் கால்வாய் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய நீர் மேம்பாட்டு முகமைமூலம் ஆய்வு செய்யப்பட்ட பெண்ணையாறு (நெடுங்கல்) – பாலாறு இணைப்புத் திட்டத்தின் விரிவான வரைவு திட்ட அறிக்கையில், பெண்ணையாற்றில் ஏற்படும் வெள்ள உபரி நீரை பாசனத்திற்காக பயன்படுத்த பர்கூர் ஆற்றுக்கு திருப்ப ஒரு மதகு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது, பெண்ணையாறு (நெடுங்கல்) – பாலாறு இணைப்பு திட்டமானது மறு ஆய்வில் உள்ளது. மேலும், பர்கூர் ஆற்றிலிருந்து காக்கங்கரை ஏரிக்கு புதிய வழங்கு வாய்க்கால் அமைக்கும் பணிக்கு, அரசாணை (நிலை) எண் 273, பொதுப் பணி (ட்டி1) துறை, நாள் 15–10–2013–ல் ரூ.2.71 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள் நிறைவு பெற்றுள்ளன. பெண்ணையாறு (நெடுங்கல்) – பாலாறு இணைப்பு திட்டத்தினை மறு ஆய்வு செய்து, இறுதி செய்யப்பட்டு செயல்படுத்தும்போது, கிருஷ்ணகிரி அணையிலிருந்து காக்கங்கரை ஏரிக்கு நீர்வரத்து கிடைக்கும்.

19—

வாய்க்கால் ரெகுலேட்டர் அமைத்தல்

வினா எண் 2997—திரு. மு. பன்னீர்செல்வம்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2023 ஜனவரி 11]

சீர்காழி தொகுதி, புதுமண்ணியாற்றிலிருந்து பிரியும் மணலகரம் இரட்டை வாய்க்கால் அருகில் A1 வாய்க்கால் தலைப்பில் புதிய ரெகுலேட்டர் (REGULATOR) அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதி, மணலகரம் கிராமம் அருகே புதுமண்ணியாற்றிலிருந்து பிரியும் இரட்டை வாய்க்கால் அருகில் A1 வாய்க்கால் தலைப்பில் புதிய ரெகுலேட்டர் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

20—

நீர்நிலைகளைத் தூர்வாருதல்

வினா எண் 3038—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதிக்குட்பட்ட கண்மாய்கள், நீர்நிலைகளைத் தூர்வாரி சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ)

1. சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதிக்குட்பட்ட 237 கண்மாய்களில் நீர்வள நிலவளத் திட்டம் பகுதி 1-ன்கீழ் 6 கண்மாய்கள் புனரமைக்கப்பட்டன.

2. நபார்டு திட்டத்தின்கீழ் மாங்குடி கண்மாய் மற்றும் அதன் அடைப்பான்களை சீரமைக்கும் பணி முடிக்கப்பட்டது.

3. நீர்வள நிலவளத் திட்டம் பகுதி 2-ன்கீழ் 20 கண்மாய்கள் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஜனவரி 11

4. குடிமராமத்து திட்டத்தின்கீழ் 44 கண்மாய்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

5. வருடாந்திர பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் 104 கண்மாய்களில் சிறப்பு மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

6. பழுதுபார்த்தல், புனரமைத்தல் மற்றும் சீரமைத்தல் திட்டத்தின்கீழ் 6 கண்மாய்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

21—

உபரிநீர் கொணர்தல்

வினா எண் 3623—திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளித்தலை தொகுதி, நல்லூர் ஊராட்சியில் உள்ள நல்லூர் ஏரிக்கு காவிரியில் இருந்து உபரிநீரை கொண்டு வந்து நிரப்பும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

குளித்தலை தொகுதி, நல்லூர் ஊராட்சியில் உள்ள நல்லூர் ஏரிக்கு காவிரியில் இருந்து உபரிநீரை கொண்டு செல்வது பொருளாதாரரீதியாக சாத்தியமற்றது.

22—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 3624—திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளித்தலை தொகுதி, மருதூர் அருகே காவிரி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், மருதூர் வடக்கு கிராமம் மற்றும் திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், உமையாள்புரம் கிராமங்களுக்கு இடையே காவிரி ஆற்றின் குறுக்கே கதவணை அமைக்கும் திட்ட மதிப்பீடு ரூ.789.00 கோடி அரசால் ஆய்வு செய்யப்பட்டு, அரசு கடித எண் 19533/எஸ்2/2021-3, நாள் 2-3-2022-ல் கைவிடப்பட்டது.

23—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 3644—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, நன்னிலம் வட்டம், மேனாங்குடி மற்றும் சுற்றியுள்ள கிராமங்கள் பயன்பெறும் வகையில் நூலாற்றில் தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவிரி ஆற்றுப்படுகையில் பாசன அமைப்புகளை விரிவுபடுத்துதல், புனரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல் திட்டத்தின்கீழ் சிப்பம் 22-ல் ரூ.84.12 கோடி மதிப்பில் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதில் திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தொகுதி, நன்னிலம் வட்டம், மேனாங்குடி கிராமம், நூலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணிக்கு ரூ.2.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டவுடன் பணிகள் துவங்கப்படும்.

24—

தடுப்பணை

வினா எண் 3645—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, நன்னிலம் வட்டம், பாவட்டக்குடி, பண்டாரவடை, குருஸ்தலம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்கள் பயன்பெறும் வகையில் நாட்டாற்றில் தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், பண்டாரவடை கிராமம் நாட்டாற்றின் குறுக்கே மைல் 81/5–ல் அகர பாவட்டக்குடி வாய்க்கால், கதிராமங்கலம் வாய்க்கால், பண்டாரவடை வாய்க்கால் மற்றும் குருஸ்தலம் வாய்க்கால்களுக்கு நீர் வழங்க தளமட்ட சுவர் அமைக்கும் பணிக்கு ரூ.156.00 இலட்சத்திற்கு அரசாணை (4D) எண் 33, பொதுப் பணித் (Q2) துறை, நாள் 22–2–2021–ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது.

25—

தடுப்புச் சுவர் கட்டுதல்

வினா எண் 3854—திரு. எம்.ஆர். காந்தி: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் தொகுதிக்குட்பட்ட, அனந்தன் கால்வாயிலிருந்து பிரிந்து செல்லும் பெருவிளை சானலில் இருபுறமும் தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆசாரிபள்ளம் கால்வாய் நெடுகை 0/00 முதல் 7/00 கி.மீ. வரை இந்த ஆண்டு (2021–2022) பராமரிப்பு நிதியின்கீழ் தூர்வாரப்பட்டு, பாசனத்திற்காக நீர் விநியோகம்

செய்யப்பட்டு வருகிறது. மேற்படி கால்வாயில் எந்தத் தடையுமின்றி பாசனத்திற்கு நீர் செல்வதால் அதன் இருகரைகளிலும் கால்வாய்க்காக தடுப்புச் சுவர் கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

26—

தூர்வாருதல்

வினா எண் 3919—திரு. R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விருத்தாசலம் தொகுதி, பாலக்கொல்லை கிராமத்தில் உள்ள பாலக்கொல்லை பாசன ஏரியினைத் தூர்வாரி ஆழப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தொகுதி, பாலக்கொல்லை கிராமத்திலுள்ள பாலக்கொல்லை பாசன ஏரியில் தற்போது தண்ணீர் நிரம்பியுள்ளது. தற்போதைய நீர் இருப்பைக் கணக்கிடுகையில் ஏரியின் கொள்ளளவிற்கு சமமாக உள்ளதால், இந்த ஏரியை தூர்வாரி ஆழப்படுத்த வேண்டிய அவசியம் தற்போது தேவையில்லை.

27—

சீமைக் கருவேல மரங்கள் அகற்றுதல்

வினா எண் 4173—திரு. G.V. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழக ஆற்றங்கரைகள் மற்றும் ஆறுகளின் உட்பக்கம் இருக்கும் சீமைக்கருவேல மரங்களை அகற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

நீர்வளத் துறையின் நீர்நிலைகளில் அகற்றப்பட வேண்டிய சீமைக் கருவேல மரங்களின் மொத்தப் பரப்பு 1,93,130,63 ஹெக்டேர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. நீர்வளத் துறையின் நீர்நிலைகளில் இதுவரை 67,216 ஹெக்டேர் பரப்பில் சீமைக் கருவேல மரங்கள் அகற்றப்பட்டுள்ளன. மேலும், சீமைக் கருவேல மரங்களை அகற்றும் பணி தொடர்ந்து முன்னேற்றத்திலுள்ளது.

28—

பாசனம்

வினா எண் 4232—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, வடக்கு பச்சையாறு–நாங்குநேரியன் கால்வாய்மூலம் பாசனம் பெறும் 46 குளங்களுக்கு தண்ணீர் கொண்டுவரும் திட்டப் பணிகளை விரைந்து செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், நாங்குநேரி கால்வாயிலிருந்து நாங்குநேரி பெரியகுளத்தின் கீழுள்ள 46 குளங்களுக்கு புறவழிக் கால்வாய் அமைத்தல் மற்றும் நாங்குநேரி கால்வாயினை அகலப்படுத்துதல் பணிக்கான திட்ட மதிப்பீடு 2021–2022 ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.230.00 கோடிக்கு தயாரிக்கப்பட்டு, குறிப்புரைகள் நிவர்த்தி செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இது தொடர்பான கருத்துரு பெறும் நிகழ்வில், நிதிநிலைக்கேற்ப தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2023 ஜனவரி 11]

29—

தடுப்பணை

வினா எண் 5218—திரு. ப. கார்த்திகேயன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதியில் ஏற்பட்டுள்ள நிலத்தடி நீர் பற்றாக்குறையைப் போக்க பெருமுகை பகுதியில் உள்ள பாலாற்றில் தரைதள தடுப்பணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், வேலூர் மாநகராட்சியின் கழிவுநீர் பாலாற்றில் கலக்கும் பகுதிக்குக்கீழ் திட்ட தளம் வருவதால் பெருமுகை பகுதியில் தரைகீழ் தடுப்பணை அமைத்தால் நிலத்தடி நீர் மாசுபட வாய்ப்புள்ளதால், தற்போதைய சூழ்நிலையில் இவ்விடத்தில் தரைகீழ் தடுப்பணை அமைக்க சாத்தியமில்லை.

30—

பாசனம்

வினா எண் 5248—திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே சௌாக்கல் தடுப்பணை ஏற்படுத்தி, ஊராட்சிகளில் விவசாய நிலங்களுக்கு தண்ணீர் கொண்டு செல்ல அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், தொட்டம்பட்டி கிராமத்தின் அருகே தென்பெண்ணையாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்து, சௌாக்கல் கால்வாய்மூலம்

அருகிலுள்ள குளங்களுக்குத் தண்ணீர் வசதி அளிக்கும் திட்டம் 1991–1992 ஆம் ஆண்டு விலை விகிதப்படி ரூ.475.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டது.

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு 18.36 ஏக்கர் பட்டா நிலங்களும், 46.89 ஏக்கர் வன நிலங்களும் கையகப்படுத்த வேண்டியிருந்ததாலும், இத்திட்டத்தின் பயன் செலவு விகிதம் 0.12:1 என மிக மிகக் குறைவாக இருந்ததாலும் இத்திட்டம் கைவிடப்பட்டது. எனவே, இத்திட்டம் பொருளாதார ரீதியாக மிகவும் சாத்தியமற்றதாக உள்ளது.

31—

பாசனம்

வினா எண் 5250—திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரூர் பெரிய ஏரியை வாணியாறு அணைக்கட்டின் முதன்மை ஆயக்கட்டில் சேர்க்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

அரூர் தொகுதி, அரூர் பெரிய ஏரியை வாணியாறு அணைக்கட்டின் முதன்மை ஆயக்கட்டில் சேர்க்க வரையறுக்கப்பட்ட விதிகளின்படி சாத்தியக்கூறு இல்லை.

32—

பாசனம்

வினா எண் 5251—திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நரிப்பள்ளி, நாகமரத்துப்பள்ளம் அணைக்கட்டிலிருந்து விவசாயிகளின் பயன்பாட்டிற்கு புதிய வலதுபுற கால்வாயை பெரியப்பட்டி ஊராட்சி வரை நீட்டிப்பு செய்ய அரசு முன்வருமா?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதியில் உள்ள நரிப்பள்ளி, நாகமரத்துப்பள்ளம் அணைக்கட்டிலிருந்து புதிய வலதுபுற கால்வாயை பெரியப்பட்டி ஊராட்சி வரை நீட்டிப்பு செய்ய சுமார் 9 கி.மீ. நீளத்திற்கு புதிய கால்வாய் அமைக்கப்பட வேண்டும். இதில், 2.50 கி.மீ. நீளத்திற்கு கால்வாய் கோட்டப்பட்டியில் உள்ள பாதுகாக்கப்பட்ட வன நிலங்களில் அமைக்கப்பட வேண்டும். மீதமுள்ள 6.50 கி.மீ. நீளத்திற்கு கால்வாய் பட்டா நிலங்களில் அமைக்கப்பட வேண்டும். மேலும், பெரியப்பட்டி ஊராட்சியில் ஏரி மற்றும் குளங்கள் ஏதும் இல்லாத காரணத்தினால் நேரடி பாசனம் மட்டுமே வழங்க இயலும். மேலும், இத்திட்டத்திற்கு பாதுகாக்கப்பட்ட வன நிலங்கள் மற்றும் பட்டா நிலங்களைக் கையகப்படுத்த வேண்டியுள்ளதால், இக்கோரிக்கை பொருளாதார ரீதியாக சாத்தியமற்றது.

33—

பாசனம்

வினா எண் 5596—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி வட்டம், நரசிங்க காவேரி ஆற்றின் குறுக்கே 16 பெட் டேம் (நீர்வளத் துறையினால் கட்டப்பட்டது) மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனை புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், அறந்தாங்கி தொகுதிக்குட்பட்ட நரசிங்க காவேரி ஆற்றின் குறுக்கே நீர்வளத் துறையால் கட்டப்பட்ட 16 படுகை அணைகளைப் புனரமைக்க தோராயமாக ரூ.2.00 கோடி

தேவைப்படும் என தள ஆய்வுக்குப்பின் மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெறுகிறது.

34—

அணை தூர்வாருதல்

வினா எண் 6920—திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *செங்கம் தொகுதி, குப்பநத்தம் அணையைத் தூர்வார அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *குப்பநத்தம் அணை கட்டும் பணி 2005 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 2008 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு நீர்வளத் துறையின் பராமரிப்பில் உள்ளது. குப்பநத்தம் அணையை வண்டல் பகுப்பு ஆய்வு* (Sedimentation Analysis) *செய்து, வண்டல் அதிகமாகப் படிந்திருக்கும்பட்சத்தில் வருவாய் ஈட்டு இனம்* (Revenue Generation Model) *மூலமாக தூர்வாரப்படும்.*

35—

பாசனம்

வினா எண் 7698—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *நாங்குநேரி தொகுதி, மன்னார்புரம் வடக்கு விஜயநாராயணபுரம், பெரிய குளத்தின் அருகே பாசன வசதிக்காக சிறப்பு அணைக்கட்டு கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, மன்னார்புரம் வடக்கு விஜயநாராயணபுரம், பெரிய குளத்தின் அருகே பாசன வசதிக்காக சிறப்பு அணைக்கட்டு அமைப்பதற்கு தொழில்நுட்பரீதியாக சாத்தியமில்லை.*

36—

தடுப்பணையை உயர்த்துதல்

வினா எண் 7699—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *நாங்குநேரி தொகுதி, களக்காடு ஊராட்சி, நாங்குநேரியன் கால்வாயிலிருந்து பறையன் குளம் தன்கால் பாசனப் பகுதியில் உள்ள தடுப்பணையை ஒரு அடி உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், களக்காடு கிராமத்தில் நாங்குநேரியன் கால்வாயின் குறுக்கே அமைந்துள்ள பறையன் குளம் தன்கால் பாசனப் பகுதியில் உள்ள தடுப்பணையை ஒரு அடி உயர்த்துவது சாத்தியமில்லை.*

37—

கால்வாய் தூர்வாருதல்

வினா எண் 7701—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி வன்னியம் குடியிருப்பு, திருக்குறுங்குடி, பெரியகுளத்திலிருந்து கிழக்கே கடைமடை வரை கால்வாயை தூர்வாரிட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

[*2023 ஜனவரி 11*

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், திருக்குறுங்குடி கிராமம், திருக்குறுங்குடி பெரியகுளத்திலிருந்து கால்வாயில் தண்ணீர் கடைமடை வரை சென்று கொண்டிருக்கிறது. வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

38—

படகுப் போக்குவரத்து

வினா எண் 7748—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஏ.வி.எம். கால்வாயில் படகுப் போக்குவரத்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஏ.வி.எம். கால்வாயில் தற்போதைய சூழ்நிலையில் படகுப் போக்குவரத்து மேற்கொள்ள இயலாது.

TRUTH ALONE TRIUMPHS

39—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 7848—திரு. சீ. கதிரவன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மண்ணச்சநல்லூர் தொகுதி, வாளவந்தி ஊராட்சி, உத்திராட்சகொம்பை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், மண்ணச்சநல்லூர் தொகுதி, வாளவந்தி ஊராட்சியில் உத்திராட்சகொம்பை ஆற்றின் குறுக்கே ஏற்கெனவே ஒரு தடுப்பணை மற்றும் அணைக்கட்டு கட்டப்பட்டுள்ளது. ஆகையால், புதியதாக தடுப்பணை கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

40—

பாசனம்

வினா எண் 11319—திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

M. வௌாம்பட்டி ஊராட்சி, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே செனாக்கல் கால்வாய் திட்டத்தினை செயல்படுத்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

M. வௌாம்பட்டி ஊராட்சி, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே செனாக்கல் கால்வாய் திட்டத்தினை செயல்படுத்துவது *4–10–1993* அன்று கைவிடப்பட்டது.

41—

தடுப்பணை

வினா எண் 11349—திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியம், B. பள்ளிபட்டி ஊராட்சி, வேப்பாடி ஆற்றின் குறுக்கே மிகப் பெரிய தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியம், B. பள்ளிபட்டி ஊராட்சி, வேப்பாடி ஆற்றின் நீர் வரத்து நம்பகத்தன்மை மிகவும் குறைவாக உள்ளதால், வேப்பாடி ஆற்றின் குறுக்கே மிகப் பெரிய தடுப்பணை கட்டும் திட்டம் நீரியல் ரீதியாக சாத்தியமில்லை.

42—

பாசனம்

வினா எண் 11428—திரு. N. அசோக்குமார்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் கடைமடைப் பகுதிகளுக்கு முறை வைக்காமல் தொடர்ச்சியாக ஆறுகளில் முழுக் கொள்ளளவு தண்ணீர் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2021–2022 ஆம் ஆண்டு சேதுபாவாசத்திரத்தில் உள்ள வாய்க்கால்கள் மூலமாக 52 ஏரிகளுக்கு பாசனத்திற்குத் தேவைக்கேற்ப நீர் முழுமையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், கல்லணைக் கால்வாய் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் (ERM) திட்டத்தின்கீழ் சிப்பம் எண் 14–ல் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.141.00 கோடியில் சேதுபாவாசத்திரம் வாய்க்கால் மற்றும் கிளை வாய்க்கால் புனரமைக்கும் பணிக்கு ரூ.29.83 கோடி உள்ளடக்கம் செய்யப்பட்டு புனரமைக்கப்பட உள்ளது. ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் ஒப்புதல் மற்றும் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் இப்பணி மேற்கொள்ளப்படும். சேதுபாவாசத்திரத்தில் உள்ள வாய்க்கால்கள் புனரமைக்கப்பட்டபின், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திர கடைமடைப் பகுதிகளுக்கு முறை வைக்காமல் தொடர்ச்சியாக ஆறுகளில் முழுக் கொள்ளளவு தண்ணீர் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2023 ஜனவரி 11]

43—

குளம் தூர்வாருதல்

வினா எண் 11429—திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேராவூரணி தொகுதி, பேராவூரணி வட்டம், அம்மையாண்டி ஊராட்சியில் உள்ள 900 ஏக்கர் பரப்பளவு கொண்ட கண்டியர் குளத்தினை தூர்வாரி செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேராவூரணி தொகுதி, பேராவூரணி வட்டம், அம்மையாண்டி ஊராட்சியில் உள்ள கண்டியர் குளத்தில் உள்ள கட்டுமானங்கள் புனரமைக்கும் பணி மற்றும் கரையைப் பலப்படுத்தி, ஏரியைத் தூர்வாரும் பணிகள் ரூ.90.00 இலட்சத்திற்கு கல்லணைக் கால்வாய் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டத்தின் (ERM) சிப்பம் எண் 11–ல் ரூ.213.00 கோடி மதிப்பீட்டில் உள்ளடக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டபின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படும்.

44—

தடுப்பணை அமைத்தல்

வினா எண் 11734—திருமதி க. சிவகாமசுந்தரி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியம், செம்பியநத்தம் ஊராட்சி, அரசக்கவுண்டனூர் மலைப் பகுதியில் தடுப்பணை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், செம்பியநத்தம் ஊராட்சி, அரசக்கவுண்டனூர் மலைப் பகுதியில் உள்ள வாரியில் புதியதாக தடுப்பணை கட்ட தொழில்நுட்ப சாத்தியக்கூறு இல்லை.

45—

தடுப்பணை

வினா எண் 12734—திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் தொகுதிக்குட்பட்ட கீழக்கரை வட்டம், காஞ்சிரங்குடி கிராமத்தில் உள்ள கொட்டகுடி ஆற்றில் தடுப்பணை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம், காஞ்சிரங்குடி கிராமத்தில் கொட்டகுடி ஆறு கடலில் கலக்கிறது. இந்த ஆறானது மழைநீர் வடிகாலாகவும், கடல் நீர் சூழ்ந்த உப்பங்கழி ஆறாகவும் உள்ளது. எனவே, கொட்டகுடி ஆற்றில் தடுப்பணை கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

46—

தடுப்பணை

வினா எண் 11745—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், தாளவாளப்பட்டு கிராமம் மற்றும் தென்புத்தூர் கிராமங்களுக்கிடையே செல்லும் சங்கராபரணி ஆற்றில் புதியதாக தடுப்பணை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், தாளவாளப்பட்டு மற்றும் தென்புத்தூர் கிராமங்களுக்கிடையே செல்லும் சங்கராபரணி ஆற்றில் புதியதாக தடுப்பணை அமைக்கும் திட்டம் ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்டு, சாத்தியமில்லை என்பதால், 21–10–2019 அன்று கைவிடப்பட்டது.

47—

தூர்வாருதல்

வினா எண் 12589—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, பழனியில் உள்ள வையாபுரி குளத்தை தூர்வாரி சீரமைத்து, கரைகளை உயர்த்தி, நடைபாதை மற்றும் படகு சவாரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

அரசாணை 2(டி) எண் 87, பொதுப் பணித் (S2) துறை, நாள் 31–12–2020–ல் திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ஸ்ரீதண்டாயுதபாணி கோயிலைச் சுற்றியுள்ள வையாபுரி குளம் மற்றும் சிறுநாயக்கன் குளங்களை ரூ.471.83 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைத்து, குளத்தின் ஆக்கிரமிப்புகளை அகற்றி, பாதுகாப்பு வேலி அமைத்து, கரைகள் பலப்படுத்தும் பணி இதுவரை 60 சதவீதம் முடிவடைந்து, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், வையாபுரி குளத்தில் படகு சவாரி மற்றும் நடைபாதை அமைக்கும் கருத்துரு ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

48—

பாசனம்

வினா எண் 15106—திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரம்பலூரில் உள்ள அனைத்து வாய்க்கால்களும், ஏரி, குளங்கள் உள்ளிட்ட நீர்நிலைகள் மற்றும் நீர் வரத்துக் கால்வாய்களைத் தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வாய்க்கால்களையும் தூர்வார, சிறப்பு தூர்வாரும் பணிகள் 2022–ல் 40 பணிகள் மேற்கொள்ள ரூ.248.50 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி, ஆணை வெளியிடப்பட்டு, தற்போது சிறப்பு தூர்வாரும் திட்டத்தின்கீழ் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

49—

தடுப்பணைகள் கட்டுதல்

வினா எண் 15108—திரு. ம. பிரபாகரன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதி, கல்லாற்றின் குறுக்கே பத்து இடங்களில் தடுப்பணைகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் தொகுதி மற்றும் மாவட்டம், கல்லாற்றின் குறுக்கே ஏற்கெனவே இரண்டு தடுப்பணைகளும், ஓர் அணைக்கட்டும் கட்டப்பட்டுள்ளன. கல்லாற்றில் கூடுதலாக தடுப்பணைகள் கட்ட தொழில்நுட்ப மற்றும் நிதிச் சாத்தியக்கூறுகளுக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

50—

பாசனம்

வினா எண் 15112—திரு. ம. பிரபாகரன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 ஜனவரி 11]

(அ) பெரம்பலூர் தொகுதி, அயன்பேரையூர் கிராமம், ஏரியை தூர்வாரி கரைகளை பலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், நீர்வளத் துறைக்குச் சொந்தமான அயன்பேரையூர் ஏரியில் 2017–2018 ஆம் ஆண்டில் நீர்வள நிலவளத் திட்டம், பகுதி 1–ன்கீழ் கரைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவ மழையால் ஏரி முழுக் கொள்ளளவை எட்டியுள்ளது. ஆகவே, தற்பொழுது தூர்வாரப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.

51—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 17567—திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஸ்ரீவைகுண்டம் வட்டம், புளியங்குளம் தாமிரபரணி ஆற்றில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில், தாமிரபரணி ஆற்றில் தடுப்பணை கோரப்பட்டுள்ள புளியங்குளம் கிராமம், ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டின் மேல்புறம் 4.25 கி.மீ. தூரத்திலேயே அமைந்துள்ளதால், புளியங்குளம் கிராமத்தில் தடுப்பணை அமைக்க தொழில்நுட்பரீதியான சாத்தியக்கூறு இல்லை.

[*2023 ஜனவரி 11*

52—

தடுப்பணை

வினா எண் 18952—திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

துறையூர் ஒன்றியம், ஆதனூர் நல்லியம்பட்டியில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், நல்லியம்பட்டி கிராமத்தில் குண்டாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கக் கோரியுள்ள இடத்திற்கு கீழ்புறம் 475 மீ. தொலைவில், தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைமூலம் தடுப்பணை கட்டப்பட்டுள்ளது. எனவே, தற்போது இந்த இடத்தில் தொழில்நுட்பரீதியாக தடுப்பணை கட்டுவதற்கான அவசியம் எழவில்லை.

53—

ஏரியைத் தூர்வாரி, மதகுகள் அமைத்தல்

வினா எண் 21538—திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி ஒன்றியம், வெலகலஹள்ளி ஊராட்சியில் நீர்வளத் துறைக்கு சொந்தமான ஏரியைத் தூர்வாரி, மதகுகள் புதிதாக அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி ஒன்றியம், வெலகலஹள்ளி ஊராட்சியில் நீர்வளத் துறைக்கு சொந்தமான வெலகலஹள்ளி ஏரி குடிமராமத்து திட்டத்தின்கீழ் ரூ.7.30 இலட்சத்தில் தூர்வாரி, அதன் வரத்துக் கால்வாய்களும் தூர்வாரப்பட்டு, மதகுகள் சீரமைக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.

2023 ஜனவரி 11]

54—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 110—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, பீர்க்கன்காரணை பேரூராட்சி, காமராசர் நகர் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், பீர்க்கன்காரணை தேர்வுநிலை பேரூராட்சி 1.786 ச.கி.மீட்டர் பரப்பளவு கொண்டது. பேரூராட்சியில் 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 25,871–ம், தற்போதைய நிலவரப்படி தோராயமாக 33,000–ம் மக்கள் வசிக்கின்றனர். இப்பேரூராட்சி பகுதியில் 8,000–க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் மற்றும் சிறு வணிக நிறுவனங்கள் அமையப்பெற்றுள்ளன. இப்பேரூராட்சியில் 40.881 கி.மீ. நீளமுள்ள சாலைகளும், 26.600 கி.மீ. நீளமுள்ள மழைநீர் வடிகால்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மேலும், காமராசர் நகர் பகுதியில் மட்டும் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த வழிவகை இல்லை என்பதால், பேரூராட்சி பகுதி முழுவதற்கும் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து நிதிநிலையின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

55—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 149—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 ஜனவரி 11*

(அ) திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் மற்றும் மாமல்லபுரம் பேரூராட்சிகளில் விடுபட்ட சில வார்டுகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்தி செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்போரூர் பேரூராட்சியில் முதற்கட்டமாக ரூ.42.00 கோடி மதிப்பீட்டிலும், மாமல்லபுரம் பேரூராட்சியில் ரூ.8.72 கோடி மதிப்பீட்டிலும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்படி பேரூராட்சிகளில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை விரிவுபடுத்தி, செயல்படுத்த நிதிநிலையின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

56—

காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 269—திரு. சு. ரவி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட 61 ஊராட்சிகளுக்கு காவிரி கூட்டுக் குடிநீர் கொண்டுவர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை, வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களுக்கு காவிரி ஆற்றினை ஆதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான விரிவான

2023 ஜனவரி 11]

திட்ட அறிக்கை (DPR) தயாரிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட திட்டத்தை செயல்படுத்துவதன்மூலம் அரக்கோணம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள 61 ஊராட்சிகள் பயனடையும்.

57—

கலையரங்கம் கட்டுதல்

வினா எண் 385—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, 1–வது வார்டில் மாநகராட்சி கலையரங்கம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் புதிதாக கலையரங்கம் கட்டும் திட்டம் இல்லை.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–1, பகுதி–1, கோட்டம்–1–ல் ஏற்கெனவே கலையரங்கம் வ.உ.சி. நகரில் அமைந்துள்ளது. அதன் பராமரிப்புப் பணிகளுக்கு விரைவில் ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகள் தொடங்கி, விரைவில் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

58—

பூங்காவைச் சீரமைத்தல்

வினா எண் 394—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, 2–வது வார்டு, நேரு நகரில் உள்ள உலகநாதபுரம் பூங்காவைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–1, பகுதி–2, கோட்டம்–2–ல் உள்ள நேரு நகரில் உள்ள உலகநாதபுரம் பூங்காவிற்கு பழுது மற்றும் பராமரிப்புப் பணிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. விரைவில் பூங்கா சீரமைத்துத் தரப்படும்.

59—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 398—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, மாநகராட்சி 2–வது வட்டம், R.S. ரோடு, பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நகர் ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் தொகுதியில் உள்ள மாநகராட்சி 2–வது வட்டம், R.S. ரோடு, பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நகர் ஆகியவை விடுபட்ட தெருக்களின் பட்டியலில் உள்ளன. இத்தெருவில் பாதாள சாக்கடை அமைக்க கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

60—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 400—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

(அ) திருவொற்றியூர் தொகுதி, 5–வது வட்டம், காசி விஸ்வநாதர் கோயில் குப்பம் பகுதியில் பாதாள சாக்கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் தொகுதி, மாநகராட்சி 5–வது வட்டம், காசி விஸ்வநாதர் கோயில் குப்பம் பகுதி, விடுபட்ட தெருக்களின் பட்டியலில் உள்ளது. இத்தெருவில் பாதாள சாக்கடை அமைக்க கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

61—

நிழற்குடை வசதி செய்தல்

வினா எண் 912—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூரில் மாநகராட்சி பகுதிகளில் குளிரூட்டப்பட்ட வசதிகளுடன்கூடிய பயணிகள் நிழற்குடை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாநகராட்சியில் குளிரூட்டப்பட்ட வசதிகளுடன்கூடிய பயணிகள் நிழற்குடை அமைக்க ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (Comprehensive Mobility Plan) *நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

[2023 ஜனவரி 11

62—

குடிநீர் கட்டணம்

வினா எண் 916—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாநகராட்சியில் குடிநீர் கட்டணத்தை ஒரே சீரான முறையில் நிர்ணயிக்கும் திட்டத்திற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாநகராட்சியில் குடிநீர் கட்டண விகிதங்கள் கட்டட பரப்பளவு மற்றும் பயன்பாட்டு முறை அடிப்படையில் மாநகராட்சியின் அனைத்துப் பகுதிகளிலும் ஒரே சீராக நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

63—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 918—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாநகராட்சி, 13–வது வார்டு, கிருஷ்ணா நகர் முதல் வீதி மற்றும் கிழக்கு பகுதிகளில் பாதாள சாக்கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை இரண்டாம் கட்டம் உத்தேச திட்டத்தில் 13–வது வார்டு, கிருஷ்ணா நகர் முதல் வீதி மற்றும் கிழக்கு பகுதிகளில் பாதாள சாக்கடை கட்டமைப்பு ஏற்படுத்த கள ஆய்வு மற்றும் கணக்கெடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தினரால் தயார் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம் அரசின் ஒப்புதலுக்குப் பின்பு, உரிய நடைமுறை விதிகளின்படி 13–வது வார்டு, கிருஷ்ணா நகர் முதல் வீதி மற்றும் கிழக்கு பகுதிகளில் பாதாள சாக்கடை கட்டமைப்பு வசதி விரைவில் ஏற்படுத்தப்படும்.

64—

பாதாள சாக்கடை வசதி ஏற்படுத்துதல்

வினா எண் 919—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாநகராட்சி, 44–வது வார்டு, கோம்பைத் தோட்டம் சொர்ணபுரி லே அவுட் பகுதிகளில் பாதாள சாக்கடை வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாநகராட்சி பாதாள சாக்கடை இரண்டாம் கட்டம் உத்தேச திட்டத்தில் 44–வது வார்டு, கோம்பைத் தோட்டம், சொர்ணபுரி லே அவுட் பகுதிகளில் பாதாள சாக்கடை கட்டமைப்பு ஏற்படுத்த கள ஆய்வு மற்றும் கணக்கெடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தினரால்

தயார் செய்யப்பட்டு வருகின்றது. எனவே, ஒப்புதல் அளித்த பின் உரிய நடைமுறை விதிகளின்படி சொர்ணபுரி லே அவுட், கோம்பைத் தோட்டப் பகுதிகளில் பாதாள சாக்கடை வசதி விரைவில் ஏற்படுத்தப்படும்.

65—

பொது சுகாதார வளாகம் சீரமைத்தல்

வினா எண் 920—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாநகராட்சி, 46-வது வார்டு, ராயபுரம், அனைமேடு பகுதிகளில் முறையாக கழிவுநீர் கால்வாய்கள் மற்றும் சிதிலமடைந்துள்ள பொது சுகாதார வளாகத்தை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாநகராட்சியில் இராயபுரம் வார்டு எண் 46, அனைமேடு பகுதியில் உள்ள கழிவுநீர் கால்வாயைப் புனரமைத்து மற்றும் சிதிலமடைந்துள்ள பொது சுகாதார வளாகத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து தலா ரூ.3.00 இலட்சம் வீதம் 2 மதிப்பீடுகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சீரமைக்கப்படும்.

66—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 1562—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, மாடம்பாக்கம் பேரூராட்சி, மல்லீஸ்வரி நகரில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மல்லீஸ்வரி நகர் பகுதியில் உள்ள சுமார் 150 குடியிருப்புகளுக்கு, பாலாஜி நகர் பகுதியில் கட்டப்பட்டுள்ள 3.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து தினசரி நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் சீரான முறையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், எதிர்வரும் காலங்களில் மக்கள்தொகைக்கேற்ப மற்றும் நிதிநிலைக்கேற்ப இப்பகுதிக்கு கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும்.

67—

அடிப்படை வசதிகள்

வினா எண் 2038—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, சேலம் மாநகராட்சி, 5–வது கோட்டம், அழகாபுரம் பெரியபுதூர் அர்த்தனாரி கவுண்டர் பகுதியில் தார்ச் சாலை, கழிவுநீர் கால்வாய் வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம், கோட்டம் 5–ல், அழகாபுரம் பெரியபுதூர் அர்த்தனாரி கவுண்டர் பகுதியில் தார்ச் சாலை மற்றும் கழிவுநீர் வாய்க்கால் அமைக்கும் பணி ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் நிதியாண்டில் பணியினை மேற்கொள்ள ஆவன செய்யப்படும்.

[2023 ஜனவரி 11

68—

சமுதாயக் கூடம்

வினா எண் 2070—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, கோட்டம் எண் 25, பள்ளப்பட்டியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண் 25-க்குட்பட்ட பள்ளப்பட்டியில் சமுதாயக் கூடம் அமைக்க உரிய இடம் தெரிவு செய்யப்பட்டு, உத்தேச மதிப்பீடு ரூ.200 இலட்சம் செலவில் பணி மேற்கொள்ள நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

69—

தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் 2108—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம், 24–வது கோட்டம், கந்தம்பட்டி மேற்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் முழுவதும் தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண் 24–க்குட்பட்ட கந்தம்பட்டி மேற்கு தமிழ்நாடு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2023 ஜனவரி 11]

வீட்டு வசதி வாரியம் முழுவதும் உள்ள சாலைகள் மாநகராட்சிவசம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் மேற்குறிப்பிட்ட சாலைப் பணிகள் பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

70—

குளம் தூர்வாருதல்

வினா எண் 2325—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, ஆடுதுறை பேரூராட்சியில் உள்ள அம்மன் குளத்தினை தூர்வாரி செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, ஆடுதுறை பேரூராட்சியில் அம்மன் குளத்தின் சர்வே எண் 432/1–ல் 0.63 ஏர்ஸ் பரப்பளவு உள்ளது. இந்தக் குளம் அம்மன் கோயில் தெருவில் உள்ள மாமரத்து மாரியம்மன் கோயிலுக்கு சொந்தமானதாகும். பேரூராட்சிகள் துறைக்கு சொந்தமானதல்ல. குளத்தின் கரைகள் நல்ல முறையில் உள்ளன. மேலும், கடந்த மூன்று ஆண்டுகளாக அம்மன் குளத்தில் வற்றாமல் நீர் நிறைந்துள்ளது. தற்போது, சுமார் 6 அடி அளவிற்கு தண்ணீர் உள்ளது. எனவே, தேவைப்படின் கோயில் நிர்வாகத்தின்மூலம் நடவடிக்கை தொடரப்படும்.

71—

நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு குடிநீர் வழங்குதல்

வினா எண் 2572—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

சோழிங்கநல்லூர் தொகுதி, 15–வது மண்டலம், 200–வது வார்டு, செம்மஞ்சேரி சுனாமி நகர், பெரும்பாக்கம் பகுதிகளுக்கு கூடுதலாக குடிநீர் குழாய்கள் அமைத்து விரைவாக நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

மண்டலம் 15, வார்டு 200–க்குட்பட்ட செம்மஞ்சேரி சுனாமி நகர் மற்றும் அருகிலுள்ள பெரும்பாக்கம் பகுதியில் மொத்தம் 27,140 குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் அமைந்துள்ளன. இப்பகுதிக்கு நாளொன்றுக்கு 6 மில்லியன் லிட்டர் வீதம் நெம்மேலி கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்திலிருந்து பிரதான குழாய் அமைக்கப்பட்டு, இக்குடியிருப்புப் பகுதிகளில் அமைந்துள்ள கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு குடிநீர் போதுமான அளவு வழங்கப்பட்டு வருகிறது.

இக்குடிநீர், செம்மஞ்சேரி குடிசை மாற்று வாரியப் பகுதிகளுக்கு பொதுக் குழாய்கள் மூலமும், பெரும்பாக்கம் குடிசை மாற்று வாரியப் பகுதிகளுக்கு குடியிருப்புப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கும் குடிசை மாற்று வாரியத்தால் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

மேலும், தேவையேற்படின் ஏற்கெனவே உள்ள குடிநீர்க் குழாய்கள்மூலம் கூடுதலாக குடிநீர் வழங்க ஆவன செய்யப்படும்.

72—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 2595—திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இளையான்குடி பேரூராட்சியின் மக்கள்தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 24,676 ஆகும். பேரூராட்சியின் பரப்பளவு 16.86 சதுர கிலோ மீட்டர் மற்றும் 18 வார்டுகள் உள்ளன. தற்போதைய மக்கள்தொகை உத்தேசமாக 28,157 ஆகும். இப்பேரூராட்சியில் 32.72 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மற்றும் 28.50 கிலோ மீட்டர் நீளமுள்ள வடிகால்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், பேரூராட்சியின் எல்லைக்குள் 7,460 குடியிருப்புகள் அமைந்துள்ளன.

பாதாள சாக்கடைத் திட்டம் அல்லது கசடு கழிவுநீர் மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, இப்பேரூராட்சியின் நிதிநிலைமைக்கேற்ப உரிய திட்டம் செயல்படுத்த ஆய்வு மேற்கொள்ளப்படும்.

73—

பேருந்து நிலையத்திற்கு பெயர் சூட்டுதல்

வினா எண் 2605—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் அமையவுள்ள புதிய பேருந்து நிலையத்திற்கு டாக்டர் கலைஞர் அவர்கள் பெயர் சூட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் திருப்புவனம், தேர்வுநிலை பேரூராட்சியாகும். இப்பேரூராட்சியில் புதிய பேருந்து

[2023 ஜனவரி 11

நிலையம் அமைக்கும் பணி, நகர் ஊரமைப்புத் துறையின் கட்டட அனுமதி பெறும் நடவடிக்கையில் உள்ளது. எனவே, இக்கோரிக்கை குறித்து பேருந்து நிலைய கட்டுமானப் பணிகள் முடிவுற்ற பின்னர் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

74—

சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் அமைத்தல்

வினா எண் 2608—திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம், இளையான்குடியில் சுத்திகரிக்கப்பட்ட (RO Plant) குடிநீர்த் திட்டம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இளையான்குடி தேர்வுநிலை பேரூராட்சி பகுதியில் 2014–2015 ஆம் ஆண்டு பொது நிதியில் வார்டு எண் 13, கீழாயூர் காலனி மற்றும் வார்டு எண் 5, மல்லிபட்டினம் ஆகிய இரண்டு இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் (RO Plant) ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்கெனவே அமைக்கப்பட்டு நல்ல நிலையில் பயன்பாட்டில் உள்ளது.

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் தேர்வுநிலை பேரூராட்சியின் தற்போதைய மக்கள்தொகை 25,271 ஆகும். உள்ளூர் நீர் ஆதாரங்கள்மூலம் தினசரி 70 LPCD வீதம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. திருப்புவனம் பேரூராட்சியில் மன்னர் குடியிருப்பு மற்றும் அக்ரஹாரம் தெரு ஆகிய இரண்டு இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைத்திட (R.O. Plant) உரிய ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2023 ஜனவரி 11]

75—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 2853—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், முடிவைத்தானேந்தல் ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) *கிடைக்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முடிவைத்தானேந்தல் ஊராட்சிக்கு தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டுவரும் 27 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், மேலத்தட்டப்பாறை மற்றும் 17 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் 1.49 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், சோதனை ஓட்டத்தில் உள்ள 90 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் 40,000 லிட்டர் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இக்குடியிருப்புகளுக்கு உள்ளூர் நீராதாரம் மூலமும் 1.37 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஜல் ஜீவன் மிஷன் 2020–2021–ன்மூலம் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் ஊராட்சி நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

76—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 2858—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், அய்யனடைப்பு ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் கூட்டுக் குடிநீர் கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், அய்யனடைப்பு ஊராட்சிக்கு, நாளொன்றிற்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் என மொத்த குடிநீர்த் தேவை 3.71 இலட்சம் லிட்டர் ஆகும். அய்யனடைப்பு ஊராட்சியில் உள்ள 11 குடியிருப்புகளில் 7 குடியிருப்புகளுக்கு தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டுவரும் 27 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், சாயர்புரம், பெருங்குளம் மற்றும் 115 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், சிப்காட் தொழிற்பேட்டையைச் சுற்றியுள்ள 8 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் வரையறுக்கப்பட்ட அளவான 3.40 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 4 குடியிருப்புகளுக்கு உள்ளூர் நீராதாரம்மூலம் 0.31 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

77—

குடிநீர்

வினா எண் 2864—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், பாஞ்சாலங்குறிச்சி ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியத்திலுள்ள பாஞ்சாலங்குறிச்சி ஊராட்சிக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் மொத்த குடிநீர் தேவை 1,01,860 லிட்டர் ஆகும். பாஞ்சாலங்குறிச்சி ஊராட்சிக்கு தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் 239 கடலோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் வடிவமைக்கப்பட்ட அளவான 34,460 லிட்டர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இக்குடியிருப்புகளுக்கு உள்ளூர் நீராதாரம் மூலமும் 67,400 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

78—

குடிநீர் இணைப்பு

வினா எண் 3431—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் வட்டம், பூவடியேந்தல் வரை கூட்டுக் குடிநீர்த் திட்ட குடிநீர் இணைப்பு வருகிறது. இத்திட்டத்தில் திருப்புனவாசல் கிராமம் வரை குடிநீர் இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி, திருப்புனவாசல் கிராமத்தில் உள்ள குடியிருப்புகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் திருப்புனவாசல் மற்றும் 30 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் அறந்தாங்கி, அரிமளம், ஆவுடையார்கோவில் மற்றும்

[2023 ஜனவரி 11

மணமேல்குடி ஒன்றியங்களைச் சார்ந்த 706 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

79—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 3947—திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 3, வார்டு 22, காந்தி மெயின் ரோடு, ஆர்.சி. ஹவுஸ்டன் குடியிருப்பில் வசிக்கும் மக்களுக்கு மெட்ரோ வாட்டர் குடிநீர் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாதவரம் தொகுதி, மண்டலம்–3, வார்டு–22 ஒருங்கிணைந்த பகுதிகளுக்கான குடிநீர் வசதி வழங்கும் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. காந்தி மெயின் ரோட்டில் அமைந்துள்ள ஆர்.சி. ஹவுஸ்டன் குடியிருப்புப் பகுதிகள், திட்டப் பணிகளில் விடுபட்ட பகுதிகளாகும். மேலும், விடுபட்ட பகுதிகள் கணக்கிடப்பட்டு, அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

80—

குடிநீர்

வினா எண் 4508—திரு. ஈ. ராஜா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவில் மற்றும் சுற்று வட்டார கிராமங்களுக்கு தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் மாதம் ஒரு முறைதான் தண்ணீர் கிடைக்கிறது.

2023 ஜனவரி 11]

அதை வாரம் ஒரு முறை தண்ணீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவில் நகராட்சி மற்றும் சுற்று வட்டாரத்தில் உள்ள களப்பாகுளம், தெற்கு சங்கரன்கோவில் மற்றும் இராமநாதபுரம் ஆகிய ஊராட்சிகளை உள்ளடக்கியது.

சங்கரன்கோவில் நகராட்சிக்கு மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் வடிவமைக்கப்பட்ட 3.67 எம்.எல்.டி.–க்கு பதிலாக 3.85 எம்.எல்.டி.–யும், சங்கரன்கோவில்–ஆலங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் வடிவமைக்கப்பட்ட அளவான 0.50 எம்.எல்.டி.–யும், சங்கரன்கோவில்–புளியங்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் வடிவமைக்கப்பட்ட 1.80 எம்.எல்.டி.–க்கு பதிலாக 1.44 எம்.எல்.டி. என மொத்தம் 5.79 எம்.எல்.டி. குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. உள்ளாட்சி அமைப்புகளால் தினமும் 0.30 எம்.எல்.டி. வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தற்போது நாளொன்றிற்கு நபர் ஒருவருக்கு 102 லிட்டர் வழங்கப்பட்டு வருகிறது.

சங்கரன்கோவில் தொகுதிக்குட்பட்ட 20 ஊரகக் குடியிருப்புகளில், மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் 13 குடியிருப்புகளுக்கு வடிவமைக்கப்பட்ட அளவான 0.42 எம்.எல்.டி. குடிநீரும், சேந்தமங்கலம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் 4 குடியிருப்புகளுக்கு வடிவமைக்கப்பட்ட அளவான 0.16 எம்.எல்.டி. குடிநீரும், சங்கரன்கோவில்–ஆலங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் 2 குடியிருப்புகளுக்கு வடிவமைக்கப்பட்ட அளவான 0.11 எம்.எல்.டி. என மொத்தம் 0.69 எம்.எல்.டி. குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. உள்ளாட்சி அமைப்புகளால் 0.42 எம்.எல்.டி. குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும், 1 குடியிருப்பிற்கு, 1 இலட்சம் லிட்டர் குடிநீர் உள்ளாட்சி அமைப்பின்மூலம் வழங்கப்படுகிறது. இதனால் மேற்குறிப்பிட்ட

20 குடியிருப்புகளுக்கும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

81—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 4522—திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை பேரூராட்சியில் சமுதாயக்கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேன்கனிக்கோட்டை பேரூராட்சி எல்லைக்குள் தற்பொழுது கீழ்க்கண்ட இடங்களில் மூன்று சமுதாயக் கூடங்கள் உள்ளன:

1. வார்டு எண் 2, சந்தைப்பேட்டை மாரியம்மன் கோயில் அருகில்

2. வார்டு எண் 10, நேதாஜி சாலை சேலத்து மாரியம்மன் கோயில் அருகில்

3. வார்டு எண் 16, கவிநரசிம்ம சுவாமி கோயில் அருகில்

மேற்கண்ட 3 சமுதாயக் கூடங்கள் நல்ல நிலையில் மக்கள் பயன்பாட்டில் உள்ளதாலும், மேலும் ஒரு புதிய சமுதாயக் கூடம் கட்ட இட வசதி இல்லாத காரணத்தினாலும் தற்பொழுது சமுதாயக் கூடம் அமைக்க தேவை எழவில்லை.

82—

குடிநீர்

வினா எண் 6581—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 ஜனவரி 11]

(அ) *ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், கொத்தாளி ஊராட்சியில் கூட்டுக் குடிநீர்* (TWAD) *வழங்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள கொத்தாளி ஊராட்சிக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் மொத்த குடிநீர் தேவை 0.47 இலட்சம் லிட்டர் ஆகும். இவ்வூராட்சிக்கு தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டுவரும் கடம்பூர், புதூர், விளாத்திகுளம் பேரூராட்சிகள் மற்றும் 180 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் வடிவமைக்கப்பட்ட குடிநீரின் அளவான 0.30 இலட்சம் லிட்டர் குடிநீரும் மற்றும் உள்ளூர் நீராதாரம்மூலம் 0.17 இலட்சம் லிட்டர் குடிநீரும் தினசரி வழங்கப்பட்டு வருகிறது.*

83—

நிலம் கையகப்படுத்துதல்

வினா எண் 15059—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி நகரில் உள்ள நகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு போதுமான இடம் இல்லாததால் சீர்காழி நகரில் உள்ள தருமை ஆதீன கட்டுப்பாட்டில் உள்ள இடத்தை கையகப்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சீர்காழி நகராட்சியில் ஒரே ஒரு அரசுப் பள்ளி இயங்கிவருவதால் வரும் கல்வியாண்டில் மாணவர்கள் சேர்க்கை அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளது. இப்பள்ளியில் பயிலும்

[2023 ஜனவரி 11

சுற்றுப்புற கிராமங்களைச் சார்ந்த ஏழையெளிய மாணவ மாணவிகளின் நலன் கருதி, போதுமான உட்கட்டமைப்புடன்கூடிய புதிய பள்ளி கட்டிட, தருமை ஆதீனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நகர அளவை வார்டு A, பிளாக் 8, நகர அளவு எண் 22, நகராட்சியின் வார்டு எண் 3, திருமுல்லைவாசல் மெயின் ரோடு என்ற இடத்தில் சுமார் 13,700 ச.மீ. (3.38 ஏக்கர்) அளவு இடம் தானமாக இந்நகராட்சிக்கு வழங்கக் கோரி ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதானம், தருமபுரம் ஆதீனம், மயிலாடுதுறை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

84—

குழாய்கள் மாற்றியமைத்தல்

வினா எண் 31078—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு தொகுதியில் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் பழுதடைந்த குழாய்களை மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பேராவூரணி, அதிராம்பட்டினம், பெருமகளூர் ஆகிய 3 பேரூராட்சிகள் மற்றும் 9 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 1,153 ஊரகக் குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ், ஒரத்தநாடு தொகுதிக்குட்பட்ட 16 ஊராட்சிகளில் உள்ள 94 குடியிருப்புகளுக்கு வரையறுக்கப்பட்ட 2.02 MLD பாதுகாக்கப்பட்ட குடிநீர் 25–10–2017 முதல் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மேற்கண்ட குடியிருப்புகளில் அவ்வப்போது நெடுஞ்சாலைத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித்

2023 ஜனவரி 11]

துறைமூலம் செயல்படுத்தப்படும் சாலை விரிவாக்கம் மற்றும் இதர பணிகள்மூலம் ஏற்படும் குடிநீர் குழாய் உடைப்புகள் உடனுக்குடன் சரி செய்யப்பட்டு, அனைத்து குடியிருப்புகளுக்கும் சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி கூட்டுக் குடிநீர் திட்டத்தில பழுதடைந்த குடிநீர் குழாய்கள் தற்போது ஏதுமில்லை.

85—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 284—திரு. சு. ரவி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி அமைந்துள்ள ராணிப்பேட்டை மாவட்டத்தில் தற்பொழுது 7 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் இத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், அரக்கோணம் தொகுதியில் புதியதாக பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

86—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 685—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தியாகதுருகம் பேரூராட்சியில் புதிய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

தியாகதுருகம் பேரூராட்சி அமைந்துள்ள கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தற்பொழுது 1 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியும், 3 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் இத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், தியாகதுருகம் பேரூராட்சியில் புதியதாக பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

87—

தொழில்நுட்பப் பயிற்சி கல்லூரி அமைத்தல்

வினா எண் 1454—டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரி பேரூராட்சி, வாரச் சந்தை பகுதியில், கட்டி முடிக்கப்பட்ட 5 வகுப்பறைகளைக் கொண்ட கட்டடத்தில் (பயன்பாடு இல்லாமல் இருக்கும்) புதிய தொழில்நுட்பப் பயிற்சி கல்லூரி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மொடக்குறிச்சி தொகுதி அமைந்துள்ள ஈரோடு மாவட்டத்தில் 1 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, 2 அரசு உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 11 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் இத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரி பேரூராட்சி, வாரச் சந்தை பகுதியில், கட்டி முடிக்கப்பட்ட கட்டடத்தில் புதிய

2023 ஜனவரி 11]

அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

88—

கலைக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 1897—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *மானாமதுரை தொகுதியில் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *மானாமதுரை தொகுதி அமைந்துள்ள சிவகங்கை மாவட்டத்தில் தற்பொழுது 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 5 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 15 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதிக்குட்பட்ட பகுதியில் புதியதாக ஒரு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

89—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 1898—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *மானாமதுரை தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி அமைந்துள்ள சிவகங்கை மாவட்டத்தில் தற்பொழுது ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, ஓர் அரசு நிதியுதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் 10 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் இத்தொகுதி மாணாக்கர்களின் பட்டயப் படிப்பான உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், மானாமதுரை தொகுதியில் புதியதாக பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

90—

விடுதி

வினா எண் 1931—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, கொருக்கை பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் விடுதி கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, கொருக்கை அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 2010–2011 ஆம் கல்வியாண்டில், அக்கல்லூரிக்குத் தேவையான கல்லூரிக் கட்டடங்கள், நிர்வாகக் கட்டடங்கள் மற்றும் மகளிர் விடுதி கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மகளிர் விடுதியில் ஒருவரும் தங்கி பயின்று வரவில்லை. அக்கல்லூரியில் பயிலும் அனைத்து மாணாக்கர்களும் அருகிலுள்ள இடங்களிலிருந்து வந்து பட்டயப் படிப்பு பயின்று வருகின்றனர். எனவே, திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, கொருக்கையில் உள்ள

2023 ஜனவரி 11]

அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியில் மேலும் ஒரு விடுதி கட்டுவதற்கான அவசியம் எழவில்லை.

91—

கலைக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 3133—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கிள்ளியூர் தொகுதியில் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *கிள்ளியூர் தொகுதி, கிள்ளியூர் அமைந்துள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்பொழுது இரண்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 12 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 16 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், இதைத் தவிர 33 பொறியியல் கல்லூரிகளும் மற்றும் 21 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், கிள்ளியூர் தொகுதியில் கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

92—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 3171—திரு. G.V. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விளாத்திகுளத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

விளாத்திகுளம் தொகுதி அமைந்துள்ள தூத்துக்குடி மாவட்டத்தில் தற்பொழுது மூன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஒன்பது அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 14 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், இதைத் தவிர 12 பொறியியல் கல்லூரிகளும் மற்றும் 10 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/ மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், விளாத்திகுளத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

93—

உறுப்புக் கல்லூரி

வினா எண் 3276—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காட்டில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியான மனோ கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசின் உயர் கல்வித் துறைக்குட்பட்ட பல்வேறு பல்கலைக்கழகங்களின்கீழ் செயல்பட்டு வந்த 41 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளும் அரசுக் கல்லூரிகளாக மாற்றப்பட்டுள்ளன. மேலும், நாங்குநேரி தொகுதியில் அமைந்துள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் தற்பொழுது ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், 11 அரசு உதவிபெறும் கலை மற்றும்

2023 ஜனவரி 11]

அறிவியல் கல்லூரிகளும், 10 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், இதைத் தவிர 16 பொறியியல் கல்லூரிகளும் மற்றும் 14 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், நாங்குநேரி தொகுதி, களக்காட்டில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியான மனோ கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

94—

கலைக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 4100—திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரன்கோவில் தொகுதி, திருவேங்கடம் வட்டத்தில் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரன்கோவில் தொகுதி அமைந்துள்ள தென்காசி மாவட்டத்தில் தற்பொழுது மூன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 10 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், இதைத் தவிர ஐந்து பொறியியல் கல்லூரிகளும் மற்றும் 12 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், சங்கரன்கோவில் தொகுதி, திருவேங்கடம் வட்டத்தில் கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

95—

மகளிர் கலைக் கல்லூரி

வினா எண் 5313—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

(அ) திருப்போரூர் தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்போரூர் தொகுதி அமைந்துள்ள செங்கல்பட்டு மாவட்டத்தில் தற்பொழுது மூன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், நான்கு அரசு உதவிபெறும் கல்லூரிகளும் மற்றும் 21 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், இதைத் தவிர 44 பொறியியல் கல்லூரிகளும் மற்றும் 11 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/ மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் தொகுதியில் கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

96—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 9756—திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருகம்பாக்கம் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

விருகம்பாக்கம் தொகுதி அமைந்துள்ள சென்னை மாவட்டத்தில் தற்பொழுது ஏழு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 14 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 22 சுயநிதி கலை மற்றும் அறிவியல்

2023 ஜனவரி 11]

கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர மூன்று பல்கலைக்கழக பொறியியல் கல்லூரிகளும், ஏழு சுயநிதி பொறியியல் கல்லூரிகளும் மற்றும் 11 அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளும், இரண்டு அரசு உதவிபெறும் தொழில்நுட்பக் கல்லூரிகளும் மற்றும் மூன்று சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், விருகம்பாக்கம் தொகுதியில் புதியதாக ஒரு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

97—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 9771—திரு. சி. மகேந்திரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதியில் புதியதாக பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதி அமைந்துள்ள திருப்பூர் மாவட்டத்தில் தற்பொழுது 13 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் இத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், மடத்துக்குளம் தொகுதியில் புதியதாக பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

98—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 11949—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலையில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி அமைந்துள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில், தற்பொழுது நான்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஓர் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், 14 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர, 10 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், மூன்று அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளும் மற்றும் 21 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதி, விராலிமலையில் புதியதாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

99—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 15580—திரு. மு. சக்ரபாணி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதி, கண்டமங்கலம் ஒன்றியத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

வானூர் தொகுதி அமைந்திருக்கும் விழுப்புரம் மாவட்டத்தில் 2 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 6 சுயநிதி

2023 ஜனவரி 11]

பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், வானூர் தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

100—

உறுப்புக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 17877—திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியை, சாத்தான்குளம் வட்டம், ஸ்ரீவெங்கடேசபுரம் பேய்குளத்தில் துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

பல்கலைக்கழகங்கள் கடும் நிதி நெருக்கடியை சந்தித்து வருவதாலும், பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கான தொடர் சம்பள செலவினத்தை பெற்று வழங்க இயலாத நிலையிலும், பல்வேறு பல்கலைக்கழகங்களின்கீழ் செயல்பட்டு வந்த 41 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் அரசு கல்லூரிகளாக மாற்றம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மேற்கண்ட சூழ்நிலையில் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியை சாத்தான்குளம் வட்டம், ஸ்ரீவெங்கடேசபுரம் பேய்குளத்தில் துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

101—

உறுப்புக் கல்லூரி

வினா எண் 17878—திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியை ஏரல் பகுதியில் துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

பல்கலைக்கழகங்கள் கடும் நிதி நெருக்கடியை சந்தித்து வருவதாலும், பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கான தொடர் சம்பள செலவினத்தை பெற்று வழங்க இயலாத நிலையிலும், பல்வேறு பல்கலைக்கழகங்களின்கீழ் செயல்பட்டு வந்த 41 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் அரசு கல்லூரிகளாக மாற்றம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மேற்கண்ட சூழ்நிலையில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியை ஏரல் பகுதியில் துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

102—

பலவகை தொழில்நுட்பக்கல்லூரி

வினா எண் 21597—திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளித்தலை தொகுதி, தோகைமலையில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

குளித்தலை தொகுதி அமைந்துள்ள கரூர் மாவட்டத்தில் ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் 5 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் இத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், குளித்தலை தொகுதி

2023 ஜனவரி 11]

தோகைமலையில் புதியதாக பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

103—

பலவகை தொழில்நுட்பக்கல்லூரி

வினா எண் 22059—முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொள்ளாச்சி தொகுதி, நெகமம் பேரூராட்சியில் புதிய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி தொகுதி அமைந்திருக்கும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 6 அரசு உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 20 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், பொள்ளாச்சி தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

104—

பலவகை தொழில்நுட்பக்கல்லூரி

வினா எண் 22060—முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொள்ளாச்சி தொகுதி, வடசித்தூர் பகுதியில் புதிய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி தொகுதி அமைந்திருக்கும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 6 அரசு உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 20 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், பொள்ளாச்சி தொகுதியில் வடசித்தூர் பகுதியில் புதிய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

105—

பயிற்சி வகுப்புகள்

வினா எண் 27741—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தனிமனித மேம்பாட்டுத் திறன் மற்றும் ஆங்கில மொழித் திறன் பயிற்சி வகுப்புகள் நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், குறிப்பாக, அரசுக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களின் தனி மனித மேம்பாட்டுத் திறனை உயர்த்தும் வகையில் பல்வேறு பிரிவுகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்கான கூடுதல் பாடப்பிரிவு (Add–on Courses) மாணாக்கர்களுக்கு அவர்கள் பயிலும் பாடத்தினை ஒட்டி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட உள்ளது.

2023 ஜனவரி 11]

ஆங்கில மொழித் திறனை வளர்த்துக்கொள்ள பல அரசுக் கல்லூரிகளில் மொழி ஆய்வகங்கள் நிறுவப்பட்டு அதன்வழி பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மேலும், இணைப்புப் பயிற்சிகளும் (Bridge Courses) நடத்தப்பட்டுள்ளன.

106—

கலைக்கல்லூரி

வினா எண் 38059—திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரம்பலூர் தொகுதி, நக்கசேலம் பகுதியில் புதியதாக கலைக் கல்லூரி துவங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

பெரம்பலூர் தொகுதி அமைந்துள்ள பெரம்பலூர் மாவட்டத்தில் தற்பொழுது மூன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஒன்பது சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இவற்றைத் தவிர, ஐந்து சுயநிதி பொறியியல் கல்லூரிகளும் மற்றும் ஓர் அரசு தொழில்நுட்பக் கல்லூரியும், ஒன்பது சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், பெரம்பலூர் தொகுதி, நக்கசேலம் பகுதியில் புதியதாக கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

107—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 39017—திரு. சி. மகேந்திரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலை ஒன்றியம், எரிசனம்பட்டியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலை ஒன்றியம் அமைந்துள்ள திருப்பூர் மாவட்டத்தில், தற்பொழுது ஆறு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஓர் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் மற்றும் 14 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. மேலும், திருப்பூர் மாவட்டம், தாராபுரம் பகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க அனுமதி வழங்கப்பட்டு, 2022–2023 ஆம் கல்வியாண்டிலிருந்து செயல்பட உள்ளது. இதைத் தவிர ஆறு சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், 12 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், மடத்துக்குளம் தொகுதி, உடுமலை ஒன்றியம், எரிசனம்பட்டியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

108—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 39056—திரு. மு. பன்னீர்செல்வம்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதி அமைந்துள்ள மயிலாடுதுறை மாவட்டத்தில், தற்பொழுது நான்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், மூன்று அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் மூன்று சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர இரண்டு அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளும் மற்றும் நான்கு சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், சீர்காழி தொகுதியில் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

109—

மேம்பாலங்கள்

வினா எண் 440—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர்–அவிநாசி சாலை, பெருமாநல்லூர் சாலை, தாராபுரம் சாலை மற்றும் பல்லடம் சாலைகளின் அகலத்தை விரிவாக்கம் செய்து குறுக்கே உயர்மட்ட நடைபாதை மேம்பாலங்கள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர்–அவிநாசி சாலை, பெருமாநல்லூர் சாலை, தாராபுரம் சாலை மற்றும் பல்லடம் சாலைகளின் அகலத்தை விரிவாக்கம் செய்து குறுக்கே உயர்மட்ட நடைபாதை மேம்பாலங்கள் அமைப்பது தொடர்பான சாத்தியக்கூறுகள் இல்லை.

[*2023 ஜனவரி 11*

110—

தடுப்புச்சுவர் மற்றும் சிறுபாலங்கள் கட்டுதல்

வினா எண் 578—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, ஆலக்குடி–சித்திரக்குடி சாலையை அகலப்படுத்திடவும் தடுப்புச்சுவர் மற்றும் சிறுபாலங்கள் கட்டவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, ஆலக்குடி–சித்திரக்குடி சாலை கி.மீ.0/0–5/2–ல் கி.மீ.1/0–2/8 வரையுள்ள சாலைப்பகுதி ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2020–2021–ல் ரூ.152.95 இலட்சம் மதிப்பில் ஒருவழித் தடத்திலிருந்து இடைவழித்தடமாக அகலப்படுத்தியும் மற்றும் (i) கி.மீ.1/4, 2/4 (ii) 1/10 & 2/8–ல் குறுகிய பழைய பழுதடைந்த பாலத்திற்கு பதிலாக புதிதாக சிறுபாலங்கள் திரும்பக் கட்டும் பணியும் முடிவடைந்துள்ளது. எஞ்சியுள்ள 0/0–1/0 மற்றும் 2/8–5/2 வரையுள்ள சாலைப் பகுதியினை (3.40 கி.மீ.) இனிவரும் காலங்களில் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் அகலப்படுத்தவும், தடுப்புச்சுவர் மற்றும் சிறுபாலங்களை கட்டவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

111—

செயற்பொறியாளர் அலுவலகம் அமைத்தல்

வினா எண் 1309—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு பொதுப் பணி (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) துறையின் புதிய செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சியில் மருத்துவப் பணிகள் மேற்கொள்ளும் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்ட அலுவலகங்கள் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 193, பொதுப் பணி (ஒய்2)த் துறை, நாள் 14–12–2021–ல் ரூ.2,73,30,895/–க்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பணி விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

112—

இரயில்வே பாலம் கட்டுதல்

வினா எண் 2423—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் மாதுளம்பேட்டை இரயில்வே கேட் எண் 269–ன்கீழ் இரயில்வே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் மாதுளம்பேட்டை இரயில்வே கேட் எண் 269–ன் ஒருபுறம் நகராட்சி சாலை 5.5 மீ. அகலமும், மற்றொருபுறம் பஞ்சாயத்து சாலை 3.5 மீ. அகலமும் கொண்டது. இச்சாலை நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்தது இல்லை என்பதால் இத்துறையின்மூலம் இரயில்வே பாலம் அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

113—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 4136—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி–பழைய உட்டக்கடை (NH–47) சாலையில் ஏற்பட்டுள்ள ராட்சதக் குழாய் உடைப்புகளை சரிசெய்து, சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி–பழைய உட்டக்கடை சாலையில் (கி.மீ.0/0 முதல் கி.மீ.71/552 வரை) ஏற்பட்ட ராட்சதக் குழாய் உடைப்புகள் சரிசெய்யப்பட்டு, இச்சாலை போக்குவரத்திற்கு உகந்த நல்ல நிலையில் உள்ளது.

114—

சுரங்க நடைபாதை அமைத்தல்

வினா எண் 5222—திரு. ப. கார்த்திகேயன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாநகரின் மையப் பகுதி அண்ணா சாலையில் வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி அருகில் சுரங்க நடைபாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

வேலூர் மாநகரின் மையப் பகுதி அண்ணா சாலையில் வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி அருகில் சுரங்க நடைபாதை அமைக்க போதுமான அகல இடம் இல்லாத காரணத்தால் பொதுமக்கள் பாதுகாப்புடன் சாலையைக் கடப்பதற்கு ஏதுவாக நடைமேம்பாலம் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணி நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

2023 ஜனவரி 11]

115—

சாலை அமைக்கும் பணி விரைவுபடுத்துதல்

வினா எண் 5262—திரு. சு. ரவி: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, கன்னியாகுமரி–திருப்பதி தொழில் பெருவழிச் சாலை திட்டத்தில் காஞ்சிபுரம்–அரக்கோணம் (வழி) திருத்தணி வரை சாலை அமைக்க நில எடுப்புப் பணிகளை விரைவுபடுத்தி, உடனடியாக சாலை அமைக்கும் பணியை துவங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் சட்டமன்றத் தொகுதியில் காஞ்சிபுரம்–அரக்கோணம்–திருத்தணி சாலைப் பணிக்கான நிலம் கையகப்படுத்தும் பணி முடிக்கப்பட்டு, இழப்பீடு வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கட்டுமானப் பணிகள் 12–3–2021 அன்று துவங்கப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

116—

வேளாண்மைக் கல்லூரி அமைத்தல்

வினா எண் 656—திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, தென்காசி ஊராட்சி ஒன்றியம், ஆயிரப்பேரி ஊராட்சி, ஆயிரப்பேரியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, ஆயிரப்பேரியில் புதிய வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

117—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 1301—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதியில் புதியதாக வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

118—

விற்பனை நிலையம்

வினா எண் 1364—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, இந்திரா நகர் பகுதியில் தோட்டக்கலைத் துறை மூலமாக மரக்கன்று, பயிர்வகைச் செடிகள் விற்பனை விதை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரியில் வசிக்கும் மக்கள் அருகாமையில் உள்ள திருவான்மியூர் தோட்டக்கலை கிடங்கில் காய்கறி விதைகள், வீட்டுத் தோட்டம் மற்றும் மாடித்தோட்டம் அமைக்க தேவையான இடுபொருட்களை மானியத்தில் வாங்கி பயன்பெறலாம்.

119—

முந்திரி சிறப்பு மையம்

வினா எண் 1859—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, காட்டுக்கூடலூர் ஊராட்சி, முடப்பள்ளி கிராமத்தில் முந்திரி சிறப்பு மையத்தை விரைவாக தொடங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதியிலுள்ள காட்டுக்கூடலூர் ஊராட்சியில், முடப்பள்ளி கிராமத்தில் முந்திரி சிறப்பு மையம் அமைப்பதற்கான நிலத்திற்கு மாவட்ட ஆட்சியர், கூடலூர் அவர்களிடமிருந்து முன்நுழைவு அனுமதி பெறப்பட்டுள்ளது. நிலத்தடி நீர் ஆய்வு இரண்டு இடங்களில் மேற்கொள்ளப்பட்டு, ஆழ்குழாய்க் கிணறு அமைத்திட வேளாண் பொறியியல் துறையிடமிருந்து மதிப்பீடு கோரப்பட்டுள்ளது. மேலும், கீழக்குப்பம் கிராம புல எண் 462/1–ல் 3.99 எக்டர் பரப்பிற்கு மாவட்ட நிர்வாக முன்நுழைவு அனுமதி வழங்கியுள்ளது. இந்நிலத்தில் சிறப்பு மையம் அமைப்பதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2023 ஜனவரி 11

120—

தொழில் பயிற்சி மற்றும் உபகரணம் வழங்குதல்

வினா எண் 2185—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிராமப்புற விவசாயிகள் வாழ்வாதாரம் மேம்பட தேனீ வளர்ப்பு, தேன்மெழுகு சேகரித்தல் போன்ற தொழில்கள் பயிற்சி மற்றும் தேனீ பெட்டிகள் இலவசமாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

மகரந்த சேர்க்கைமூலம் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்கவும், விவசாயிகள் கூடுதல் வருமானம் பெற்று, கிராமப்புற விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட தேனீ வளர்க்க ஊக்குவிக்கப்படுகிறது.

தேனீ வளர்ப்பு, தேனீ இனப்பெருக்கம், தேன் உற்பத்தி அதிகரித்தல், தேன்மெழுகு சேகரித்தல் ஆகியவற்றைப் பற்றிய பயிற்சிகள் 525 விவசாயிகளுக்கு தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ் பயிற்சிகள் வழங்கப்பட்டு உள்ளன.

மேலும், தோட்டக்கலை பயிரிடும் விவசாயிகளுக்கு தேனீக் குடும்பங்களுடன்கூடிய தேனீப் பெட்டிகள் மற்றும் தேன் பிழிந்தெடுக்கும் கருவிகள் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்மூலம் வழங்கப்படும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் வட்டார தோட்டக்கலை அலுவலர்களைத் தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

121—

கரும்பிற்கு தொகை நிர்ணயம் செய்தல்

வினா எண் 2356—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

(அ) தமிழகத்தில் கரும்பிற்கு உரிய தொகையை நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் கரும்பு விவசாயிகள், கடந்த 2016–2017 பருவம் முதல் 2019–2020 பருவம் வரையிலான நான்கு பருவங்களுக்கும் மத்திய அரசின் நியாயமான மற்றும் ஆதாய விலையோடு கரும்பு உற்பத்திக்கான ஊக்கத்தொகையும் சேர்த்து கரும்பிற்கு டன் ஒன்றிற்கு ரூ.2,750/– பெற்று வந்தனர்.

கரும்பு விவசாயிகள் மற்றும் விவசாயச் சங்கங்கள் கரும்பு விலையை உயர்த்தி வழங்கக்கோரி வந்தபோதிலும், கடந்த நான்கு ஆண்டுகளாக கரும்பு விலை உயர்த்தி வழங்கப்படவில்லை. தற்பொழுது புதிய அரசு பொறுப்பேற்றபின், நடப்பு 2020–2021 பருவத்திற்கு சிறப்பு ஊக்கத்தொகையாக டன் ஒன்றிற்கு ரூ.150/– சேர்த்து மொத்தமாக டன் ஒன்றிற்கு ரூ.2,900/– கரும்பு விலையாக கரும்பு விவசாயிகள் பெறும்வகையில் 2021–2022 நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

122—

பொறியியல் கல்லூரி

வினா எண் 2476—திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறையில் வேளாண்மைப் பொறியியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறையில் வேளாண்மைப் பொறியியல் கல்லூரி துவக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

[2023 ஜனவரி 11

123—

நெல் விதை

வினா எண் 2982—திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டியில் பாரம்பரிய நெல் விதை சேமிப்பு மற்றும் விநியோக மையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதியில், திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் செயல்படும் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள சேமிப்புக் கிடங்குகளில், அரசாணை (நிலை) எண் 157, வேளாண்மை–உழவர் நலத் (வேஉ3) துறை, நாள் 25–10–2021–ன்படி, திருவாரூர் மாவட்டத்தில் உள்ள நெடும்பலம், தீவாம்பாள்பட்டினம், காஞ்சிக்குடிகாடு, கீராந்தி, மூங்கில்குடி ஆகிய அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் பாரம்பரிய நெல் இரகங்களை சேமித்து, 50 சதவிகித மானிய விலையில் விவசாயிகளுக்கு விதைகள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருத்துறைப்பூண்டி தொகுதியில் இயங்கும் முத்துப்பேட்டை மற்றும் திருத்துறைப்பூண்டி ஆகிய இடங்களில் உள்ள முதன்மை வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமாகவும், மேலும், ஆலத்தம்பாடி, கட்டிமேடு, விளாங்குடி, உதயமார்த்தாண்டபுரம், இடையூர் மற்றும் மருதவனம் ஆகிய இடங்களில் உள்ள துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமாகவும் பாரம்பரிய நெல் விதை சேமிப்பு மற்றும் விநியோக மையங்கள் வாயிலாக விநியோகம் செய்யப்பட உள்ளது.

2023 ஜனவரி 11]

124—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 3027—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி துவக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

125—

அணை பராமரிப்பு

வினா எண் 4233— திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு–சிதம்பராபுரம் தெற்கில், மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள கரடி ஓடை அணையை பராமரிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம் சீவலப்பேரி கிராமம், சிதம்பராபுரம் (குக்கிராமம்) தெற்கில் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில்

உள்ள கரடி ஓடை எண் 725–ல் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018–2019–ன்கீழ் கசிவு நீர் குட்டை வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் ரூ.23,86,096/– மதிப்பீட்டில் 23–3–2020 அன்று முடிக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது. தற்போது கசிவு நீர் குட்டையில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வதற்கான தேவைகள் ஏதும் ஏற்படவில்லை.

126—

பண்ணை செயல்படுத்துதல்

வினா எண் 6919—திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, மேல்செங்கம் கிராமத்தில் உள்ள (12,000–த்திற்கு உட்பட்ட ஏக்கர் நிலம்) விவசாயப் பண்ணையை மீண்டும் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்திய அரசின் மாநில விதைப் பண்ணைக் கழகம் மேல்செங்கம், செங்கம் வட்டாரம், திருவண்ணாமலை மாவட்டத்தில் இயங்கி வந்தது. செங்கம் தொகுதி, மேல்செங்கம் கிராமத்தில் வனத் துறையிடம் இருந்த காப்புக் காடு (Reserve Forest) 3,924 எக்டர் ஆகும். இதில் 1971–ல் 1,200 எக்டர் நிலம் இந்திய அரசு மாநில விதைப் பண்ணைக் கழகத்தில் (State Seed Corporation of India) 30 ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் செயல்பட்டு வந்த நிலையில், இந்த பண்ணை 2004 ஆம் ஆண்டு மீண்டும் வனத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. வனத் துறை 2006 ஆம் ஆண்டில் TAFCORN திருச்சி என்ற அரசு சார்ந்த (Quasi Government) நிறுவனத்திற்கு 30 வருட ஒப்பந்தத்தில் வனத் துறை ஒப்படைத்தது. தற்போது இப்பண்ணையில் 1,798.74 எக்டர் TAFCORN மூலம் யூகலிப்டஸ் மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. 45.65 எக்டர் நிலம் வனத் துறையின் ஆராய்ச்சிக்காக

2023 ஜனவரி 11]

பயன்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள நிலமும் காப்புக் காடாக (Reserve Forest) *வனத் துறைவசம் உள்ளதால், செங்கம் தொகுதி, மேல்செங்கம் கிராமத்தில் விவசாயப் பண்ணையை மீண்டும் செயல்படுத்த இயலாது.*

127—

பயிற்சி

வினா எண் 7159—திரு. கா. அண்ணாதுரை: *மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பட்டுக்கோட்டை வட்டம், வேப்பங்குளத்தில் உள்ள தென்னை ஆராய்ச்சி மையத்தில் விவசாயிகளுக்கான முழுநேர பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை வட்டம், வேப்பங்குளத்தில் உள்ள தென்னை ஆராய்ச்சி மையத்தில் விவசாயிகளுக்கான முழுநேர பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

128—

வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைத்தல்

வினா எண் 7338—திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரன்கோவில் தொகுதி, குருவிக்குளத்தில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரன்கோவில் தொகுதி, குருவிக்குளத்தில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

129—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 7755—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிள்ளியூர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிள்ளியூர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி துவங்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

130—

தோட்டக்கலைக் கல்லூரி

வினா எண் 11351—திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டத்தில் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் வேளாண்மை பட்டயக் கல்லூரி மற்றும் தோட்டக்கலைக்

2023 ஜனவரி 11]

கல்லூரி அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளதால் மாணவர்கள் சேர்க்கையினை விரைவாகத் தொடங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், கும்மனூர் கிராமம், சிக்கதோரணபெட்டா என்னும் இடத்தில் புதிய வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டயப் படிப்பு கல்லூரி அமைத்திட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்ட நிலையில், அந்நிலமானது பாறைப் பாங்காக உள்ளதாலும், நகர்ப்புறத்திலிருந்து வெகுதொலைவில் உள்ளதாலும், இங்கு பட்டயக் கல்லூரி அமைத்திட ஏதுவான சூழ்நிலை இல்லை. எனவே, தருமபுரி தலைமையிடத்திற்கு மிக அருகாமையில் வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் மாநில அரசு விதைப் பண்ணை அமைந்துள்ள பாப்பாரப்பட்டி பகுதியில் மாதேஹள்ளி மற்றும் கொள்ளுப்பட்டி கிராமங்களில் அமைக்க பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

131—

பண்ணைக் குட்டைகள்

வினா எண் 11411—திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாகப்பட்டினம் மாவட்டத்தில் நீர் ஆதாரங்களை மேம்படுத்த நபார்டு திட்டத்தின்மூலம் பண்ணைக் குட்டைகளை அதிக அளவில் அமைத்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் 2021–2022–ல் நபார்டு திட்டம்மூலம் பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணி எதுவும் செயல்படுத்தப்படவில்லை.

[2023 ஜனவரி 11

132—

பணி துவக்குதல்

வினா எண் 11837—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை யூனிட்–*I Co–Generation *பணியை துவக்கி வைக்க அரசு முன்வருமா?*

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

*கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை யூனிட்–*I Co–Generation *பணியானது இந்த ஆண்டு பிப்ரவரி 2022 முதல் மீண்டும் துவங்கி நடந்து வருகிறது.*

133—

வெள்ளை ஈ நோய்

வினா எண் 12694—திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி தொகுதி, திருநெல்வேலியில் தென்னை மரங்களில் காணப்படும் வெள்ளை ஈ நோய்களை கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்ட வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமைமூலம் (ATMA) *320 விவசாயிகளுக்கு தென்னையில் ஒருங்கிணைந்த நோய் மற்றும்*

2023 ஜனவரி 11]

பூச்சி மேலாண்மை குறித்த பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 2021–2022 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்தி, தென்னையில் சுருள் வெள்ளை ஈ தாக்குதலைக் கட்டுப்படுத்தும்பொருட்டு, ஹெக்டேருக்கு 20 எண்கள் மஞ்சள் வண்ண ஒட்டுப்பொறி அமைத்தல் மற்றும் சுருள் வெள்ளை ஈ பூச்சிகளை தாக்கி அழிக்கும் எதிர் உயிர் பூச்சியான கிரைசோபெர்லா என்னும் கண்ணாடி இறக்கை பூச்சிகளை ஹெக்டேருக்கு 1,000 எண்கள் வீதம் வெளியிடுதல் போன்ற இனங்கள் 20,000 ஹெக்டேர் பரப்பில் ரூ.2 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது.

134—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 12736—திரு. S. சந்திரன்: மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

135—

சர்க்கரை ஆலை

வினா எண் 15335—திரு. இரா. அருள்: மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை தொடங்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

136—

வேளாண் பல்கலைக்கழகம் கிளை துவக்குதல்

வினா எண் 18318—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டத்தில் வேளாண் பல்கலைக்கழக கிளையைத் துவக்கி, அதன்மூலம் நெல், சிறுதானியங்கள், எண்ணெய் வித்துக்கள், அதிக மகசூல் தரும் ரகங்கள் ஆகியவை விவசாயிகளுக்கு நேரடியாகக் கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டத்தில் வேளாண் பல்கலைக்கழக கிளை அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

137—

சுற்றுச்சுவர் அமைத்தல்

வினா எண் 52721—திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேத்தியாத்தோப்பு MRK கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு மீதமுள்ள பகுதிகளில் சுற்றுச்சுவர் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

சேத்தியாத்தோப்பிலுள்ள MRK கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு மீதமுள்ள பகுதிகளில் சுற்றுச்சுவர் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

138—

இயந்திரங்களை நவீனப்படுத்துதல்

வினா எண் 52723—திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேத்தியாத்தோப்பு MRK கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இயந்திரங்களை நவீனப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்:

சேத்தியாத்தோப்பிலுள்ள MRK கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இயந்திரங்களை நவீனப்படுத்தும் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

139—

உதவித்தொகை

வினா எண் 91—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதியில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள விதவைப் பெண்களுக்கு உதவித்தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதியில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள விதவை பெண்களுக்கு உதவித்தொகை வழங்க ஆவன செய்யப்படும் மற்றும் விதவை உதவித்தொகை கோரி மனு செய்தவர்களுக்கு 30 தினங்களுக்குள் அரசு வழிகாட்டுதலின்படி தகுதியின் அடிப்படையில் விதவை உதவித்தொகை வழங்கப்படும்.

140—

பட்டா வழங்குதல்

வினா எண் 922—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாநகராட்சி, வஞ்சிப்பாளையம் சாலை, கொத்தனகிரி பகுதியில் 40 ஆண்டுகளாக வீடு கட்டி குடியிருக்கும் 169 குடும்பங்களுக்கு பட்டா கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட திருப்பூர் வடக்கு வட்ட வேலம்பாளையம் கிராம கொத்தனகிரி பகுதியில் சர்க்கார் புறம்போக்கு என்ற வகைப்பாடு கொண்ட நிலத்தில், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அருள்மிகு கந்தபெருமாள் கோயில் உள்ளது. மேற்கண்ட இடத்தில் குடியிருந்துவரும் 40 குடும்பங்களுக்கு நடைமுறையிலுள்ள சட்ட விதிகளுக்குட்பட்டு, அவர்களுக்கு பட்டா வழங்கிடவோ அல்லது தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்பு வசதி செய்து தரவோ அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

2023 ஜனவரி 11]

141—

பட்டா வழங்குதல்

வினா எண் 925—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் தெற்கு மற்றும் வடக்கு தொகுதிகளில் நத்தம் புறம்போக்கு நிலத்தில் பல ஆண்டுகளாக வசிக்கும் குடும்பங்களுக்கு பட்டா கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு மற்றும் வடக்கு வட்டங்களில் நத்தம் புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டி குடியிருந்துவரும் நபர்களுக்கு தகுதியின் அடிப்படையில், விதிமுறைகளுக்குட்பட்டு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

142—

பட்டா வழங்குதல்

வினா எண் 1398—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதிக்குட்பட்ட 180–வது வட்டம், தரமணி மகாத்மா காந்தி நகரில் வசிக்கும் மக்களுக்கு இலவச பட்டா தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதிக்குட்பட்ட 180–வது வட்டம், தரமணி மகாத்மா காந்தி நகர் பகுதியானது தொலைதூர கல்வி இயக்ககத்திற்கு சொந்தமான அரசு நிலமாகும். இந்நிலத்தில் குடியிருந்துவரும் தகுதியுள்ள குடும்பங்களுக்கு பட்டா வழங்குவது தொடர்பாக விதிமுறைகளுக்குட்பட்டு, அரசு கனிவுடன் தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

143—

பட்டா வழங்குதல்

வினா எண் 1401—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர் குப்பம், பீச் ரோடு மற்றும் கடற்கரை பகுதிகளில் வசிக்கும் மீனவ பெருமக்களுக்கு இலவச பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர் குப்பம் பகுதியில் மீனவ மக்கள் பெரும்பாலும் ஜெயராம் தெரு மற்றும் வேம்புலியம்மன் கோயில் தெரு ஆகியவற்றில் வசித்து வருகின்றனர். அப்பகுதியில் அரசு கிராம நத்தம் புறம்போக்கு நிலங்களில் வசிக்கும் மீனவ மக்களுக்கு தகுதியின் அடிப்படையில் விதிகளுக்குட்பட்டு பட்டா வழங்கிடவோ அல்லது தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தரவோ இவ்வரசு கனிவுடன் நடவடிக்கை மேற்கொள்ளும்.

144—

பட்டா

வினா எண் 1421—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் பேரூராட்சி, உதயமாம்பட்டு ரோட்டில் தீப்பெட்டி தொழிற்சாலை அருகில் வசிக்கும் நரிக்குறவர்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் பேரூராட்சி, உதயமாம்பட்டு ரெட்டியார் தீப்பெட்டி தொழிற்சாலை அருகில் உள்ள தீர்வை ஏற்படாத தரிசு புறம்போக்கு (பாறை) என்ற வகைப்பாடு கொண்ட நிலத்தில் வசிக்கும் நரிக்குறவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு கனிவுடன் நடவடிக்கை மேற்கொள்ளும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

145—

வருவாய் அலுவலகம் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல்

வினா எண் 2594—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, எடையூரில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட வருவாய் அலுவலகத்தை பயன்பாட்டிற்குக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி வட்டம், எடையூர் சரக வருவாய் அலுவலகம் மற்றும் குடியிருப்புக் கட்டடம் கட்ட ரூ.16.29 இலட்சம் அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று, மேற்படி கட்டடம் பொதுப் பணித் துறையால் கட்டப்பட்டு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டடத்தை பயன்பாட்டிற்குக் கொண்டு வர விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

146—

கிராம நிர்வாக அலுவலகம்

வினா எண் 2714—திரு. சு. ரவி: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் வட்டம், கீழவனம் ஊராட்சி, கிராம நிர்வாக அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம், கீழவனம் ஊராட்சி, அம்மனூர் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் கட்டுவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை.

147—

நிழற்குடை

வினா எண் 3965—திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 ஜனவரி 11]

(அ) *மாதவரம் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–3, வார்டு 22–ல் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் வாகன நிறுத்துமிடத்தில் நிழற்குடை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும் (ஆ) சென்னை மாவட்டம், மாதவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாதவரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் வாகன நிறுத்துமிடத்தில் நிழற்குடை அமைப்பது தொடர்பாக கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. எனினும், மாவட்ட ஆட்சியரிடமிருந்து உரிய மதிப்பீட்டறிக்கை பெறப்பட்டு, உரிய முன்மொழிவுகள் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு பெறப்படும் நிலையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

148—

ஆக்ஸிஜன் உற்பத்தி

வினா எண் 1906—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *மானாமதுரை தொகுதி, மானாமதுரை சிப்காட்டில் பெரிய தொழில் நிறுவனங்கள், ஆக்ஸிஜன் தயாரிப்பு நிறுவனம் அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) *மற்றும் (ஆ) சிப்காட் நிறுவனம் தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தர தொழில்கள் தொடங்க ஏதுவாக தொழில்*

[2023 ஜனவரி 11

வாய்ப்புள்ள பகுதிகளில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய தொழிற் பூங்காக்களை ஏற்படுத்தி பராமரித்து வருகிறது. இந்நிறுவனம், இதுவரை, சிவகங்கை மாவட்டம் உட்பட 15 மாவட்டங்களில், ஆறு சிறப்பு பொருளாதார மண்டலங்கள் உட்பட 24 தொழிற்பூங்காக்களை, சுமார் 34,900 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தி பராமரித்து வருகின்றது. சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் சிப்காட் தொழிற்பூங்கா ஒன்று 492.07 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. இங்கு, 353.34 ஏக்கர் நிலத்தில், 75 தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திறந்தவெளி, தொழிலாளர் வீட்டுமனைகளுக்காக நில ஒதுக்கீடு மற்றும் வர்த்தக பயன்பாட்டிற்கும் நிலம் ஒதுக்கியபின், தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்க தற்போது 18.30 ஏக்கர் நிலமே மீதமுள்ளது. தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம் (Guidance bureau) மூலம் தயாரிப்பு நிறுவனங்களுக்கு கோரிக்கை வைக்கப்பட்டு, முதலீடுகள் ஈர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், தற்போது கொரோனா பெருந்தொற்று காலங்களில் ஆக்ஸிஜன் தேவையை பூர்த்தி செய்யும்விதமாக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக மருத்துவ ஆக்ஸிஜன் உற்பத்தியை மேம்படுத்தும்பொருட்டு, அரசால் அரசாணை (அரசாணை எண் 154, நாள் 12–5–2021) வெளியிடப்பட்டு, ஆக்ஸிஜன் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில், சிப்காட் நிறுவனத்தால், தொழில் நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஏற்கெனவே, சிப்காட் தொழிற்பூங்காக்களில் இயங்கிவரும் 13 மருத்துவ ஆக்ஸிஜன் உற்பத்தி தொழிற்சாலைகளுடன், தற்போது மிகக் குறுகிய காலத்தில் 5 நிறுவனங்களுக்கு 10 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆக்ஸிஜன் உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்கள் முன்வரும்பட்சத்தில், ஆக்ஸிஜன் தயாரிப்பு நிறுவனம் தொடங்க சிப்காட் நிறுவனத்தால் மானாமதுரை தொழிற்பூங்காவில் முன்னுரிமை அடிப்படையில் நிலம் ஒதுக்கீடு செய்துதரப்படும்.

2023 ஜனவரி 11]

149—

சிப்காட் தொழிற்பேட்டை

வினா எண் 3126—திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளித்தலை தொகுதி, குளித்தலை ஊராட்சி ஒன்றியம், சத்தியமங்கலம் ஊராட்சியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

சிப்காட் நிறுவனம் தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தர தொழில்கள் தொடங்க ஏதுவாக தொழில் வாய்ப்புள்ள பகுதிகளில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய தொழிற்பூங்காக்களை ஏற்படுத்தி பராமரித்து வருகிறது. இந்நிறுவனம், இதுவரை, 15 மாவட்டங்களில், ஆறு சிறப்பு பொருளாதார மண்டலங்கள் உட்பட 24 தொழிற்பூங்காக்களை, சுமார் 34,900 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தி, பராமரித்து வருகின்றது.

சிப்காட் நிறுவனம், புதிய தொழிற்பூங்காக்களை உருவாக்குகையில், ஒரு தொழிற்பூங்காவினை ஏற்படுத்தும் அளவிற்கு குறிப்பிட்ட அப்பகுதியில் ஒருங்கிணைந்த போதிய நிலம் இருப்பு, சாலை, இரயில் மற்றும் விமான போக்குவரத்து வசதி மற்றும் தண்ணீர், மின்சாரம் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கான வாய்ப்பு மற்றும் அப்பகுதியில் காணப்படும் தொழில்மனை தேவை போன்ற அனைத்து சாத்தியக்கூறுகளையும் ஆராய்ந்த பின்னரே புதிய தொழிற்பூங்கா அமைக்க முடிவு செய்கிறது.

குளித்தலை தொகுதி அடங்கிய கரூர் மாவட்டத்தையொட்டி அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டத்தில் 1,077 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் நிலம் ஒதுக்கீட்டிற்கு தயார் நிலையில் உள்ளது. இது திருச்சிராப்பள்ளி மாவட்டம் மட்டுமின்றி இம்மாவட்டத்தையொட்டி அமைந்துள்ள கரூர் மாவட்டத்தில்

[2023 ஜனவரி 11

உள்ள தொழில்முனைவோர்களின் தொழில்மனைத் தேவையையும் பூர்த்தி செய்யும்.

எனவே, குளித்தலை தொகுதி, குளித்தலை ஊராட்சி ஒன்றியம், சத்தியமங்கலம் ஊராட்சியில் சிப்காட் தொழிற் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

150—

தொழில் பூங்கா அமைத்தல்

வினா எண் 3215—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழில் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிப்காட் நிறுவனம் தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தர தொழில்கள் தொடங்க ஏதுவாக தொழில் வாய்ப்புள்ள பகுதிகளில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய தொழிற்பூங்காக்களை ஏற்படுத்தி பராமரித்து வருகிறது. இந்நிறுவனம், இதுவரை, 15 மாவட்டங்களில், ஆறு சிறப்பு பொருளாதார மண்டலங்கள் உட்பட 24 தொழிற் பூங்காக்களை, சுமார் 34,900 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தி பராமரித்து வருகின்றது.

ஏற்கெனவே, கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், செண்பகராமன்புதூர் கிராமத்தில் 235.04 ஏக்கர் நிலம் கையகப்படுத்த, அரசின் நிருவாக அனுமதி அரசாணை எண் 285, தொழில் துறை, நாள் 30–12–2015–ல் வழங்கப்பட்டு, நில எடுப்பு பணிகள் தொடங்கப்பட்ட நிலையில், அதிக நில மதிப்பினால் இத்திட்டம் பொருளாதாரரீதியாக நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறு இல்லை எனக் கண்டறியப்பட்டதால்,

2023 ஜனவரி 11]

அரசாணை எண் 76, தொழில் (சிப்காட்–நிஎ) துறை, நாள் 18–2–2021–ல் வாயிலாக இத்திட்டம் கைவிடப்பட்டது.

தொழில் பூங்கா அமைப்பதற்கு நீர்நிலைகள் குறுக்கிடாத சமநிலையான தொடர்ச்சியாக குறைந்தபட்சம் 100 ஏக்கர் நிலம் தேவைப்படும். ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்கூறிய அமைப்பில் நிலம் கிடைப்பது அரிதாகவுள்ளது. எனினும், தொழில்முனைவோரின் தேவையைக் கருத்தில்கொண்டு, தகுந்த மாற்று நிலம் கண்டறியப்படும் அல்லது சுட்டிக்காட்டப்படும்பட்சத்தில் தொழிற் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

பட்டியல்-6

1—

சிப்காட் தொழிற்பேட்டை அமைத்தல்

வினா எண் 3665—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், பழைய எருமைவெட்டிபாளையம் ஊராட்சியில் சிப்காட் தொழிற்பேட்டை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

சிப்காட் நிறுவனம் தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தர தொழில்கள் தொடங்க ஏதுவாக தொழில் வாய்ப்புள்ள பகுதிகளில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய தொழிற்பூங்காக்களை ஏற்படுத்தி பராமரித்து வருகிறது. இந்நிறுவனம், இதுவரை 15 மாவட்டங்களில் ஆறு சிறப்பு பொருளாதார மண்டலங்கள் உட்பட 24 தொழிற்பூங்காக்களை, சுமார் 34,900 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தி பராமரித்து வருகின்றது.

சிப்காட் நிறுவனம், புதிய தொழிற்பூங்காக்களை உருவாக்குகையில், ஒரு தொழிற்பூங்காவினை ஏற்படுத்தும் அளவிற்கு குறிப்பிட்ட அப்பகுதியில் ஒருங்கிணைந்த போதிய

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

நிலம் இருப்பு, சாலை, இரயில் மற்றும் விமானப் போக்குவரத்து வசதி மற்றும் தண்ணீர், மின்சாரம் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கான வாய்ப்பு மற்றும் அப்பகுதியில் காணப்படும் தொழில்மனை தேவை போன்ற அனைத்து சாத்தியக்கூறுகளையும் ஆராய்ந்த பின்னரே அங்கு புதிய தொழிற்பூங்கா அமைக்க முடிவு செய்யப்படுகிறது. ஒரு தொழிற்பூங்கா அமைக்க குறைந்தபட்சம் 100 ஏக்கர் பரப்பளவு நிலம் தேவைப்படும்.

சென்னைக்கு அருகாமையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருங்காட்டுக்கோட்டை, திருப்பெரும்புதூர், பிள்ளைப்பாக்கம், ஒரகடம், வல்லம்–வடகால் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டி, தேர்வாய்கண்டிகை மற்றும் மப்பேடு ஆகிய இடங்களில் ஏற்கெனவே சிப்காட் தொழிற்பூங்காக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இங்கு பல்வேறு முன்னணி தொழிற்சாலைகளுக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன.

மாதவரம் தொகுதி, சென்னை பெருநகரத்திற்குள் அமைந்துள்ளதாலும், பெருமளவு குடியிருப்பு பகுதிகளைக் கொண்டுள்ளதாலும், இத்தொகுதிக்குட்பட்ட சோழவரம் ஊராட்சி ஒன்றியம், பழைய எருமைவெட்டிபாளையம் ஊராட்சியில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க சாத்தியமில்லை.

2—

சிறப்பு பொருளாதார மண்டலம்

வினா எண் 9857—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறப்பு பொருளாதார மண்டலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறப்பு பொருளாதார மண்டலம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2023 ஜனவரி 11]

3—

தொழில் பூங்கா அமைத்தல்

வினா எண் 12238—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புதுக்கோட்டை மாவட்டத்தில் தொழில் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டத்தில் கந்தர்வகோட்டை வட்டத்தில் ஏற்கெனவே தெரிவு செய்யப்பட்ட நிலங்களின் தற்போதைய கள நிலவரம் மற்றும் நில எடுப்பிற்கான தற்போதைய சாத்தியக்கூறுகள் அனைத்தையும் ஆய்வு செய்து, அந்த ஆய்வறிக்கையின் அடிப்படையில் இப்பகுதியில் சிப்காட் நிறுவனம்மூலம் தொழிற்பூங்கா அமைப்பது குறித்து முடிவு செய்யப்படும்.

4—

இழப்பீட்டுத் தொகை

வினா எண் 15155—திரு. கே.ஆர். ஜெயராம்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிங்காநல்லூர் தொகுதி, கோயம்புத்தூர் விமான நிலைய விரிவாக்கப் பணிக்கு கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் உரிமையாளருக்கு உரிய இழப்பீட்டுத் தொகையை உடனே வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிங்காநல்லூர் தொகுதி, கோயம்புத்தூர் விமான நிலைய விரிவாக்கப் பணிக்கு கையகப்படுத்தப்பட்ட

நிலத்தின் உரிமையாளருக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்காக அரசால் ரூ.1,705.58 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 31–3–2022 வரை ரூ.1,254.58 கோடி நில உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகையினை நில உரிமையாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5—

அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 6745—திரு. S. சந்திரன்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, திருத்தணி வட்டம், V.K.R.புரம் ஊராட்சி, பள்ளிப்பட்டு வட்டம், கொடிவலசா ஊராட்சி, R.K. பேட்டை வட்டம், R.K. பேட்டை ஊராட்சி ஆகிய பகுதிகளில் புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, திருத்தணி வட்டம், V.K.R.புரம் ஊராட்சி, பள்ளிப்பட்டு வட்டம், கொடிவலசா ஊராட்சி, R.K. பேட்டை வட்டம், R.K. பேட்டை ஊராட்சி ஆகிய பகுதிகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏதும் இல்லை. ஆகவே, மேற்கண்ட பகுதிகளில் புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட இயலாத நிலை உள்ளது.

6—

அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 6746—திரு. S. சந்திரன்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 ஜனவரி 11]

(அ) *திருத்தணி தொகுதி, திருத்தணி நகராட்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) *மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, திருத்தணி நகராட்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏதும் இல்லை. ஆகவே, மேற்கண்ட பகுதிகளில் புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட இயலாத நிலை உள்ளது.*

7—

துணை நகரங்கள் அமைத்தல்

வினா எண் 9072—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *தமிழ்நாட்டில் முக்கிய நகரங்களுக்கு துணை நகரங்கள் அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) *மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள திருமழிசை, மதுரை மாவட்டத்திலுள்ள உச்சப்பட்டி–தோப்பூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள முள்ளூர் ஆகிய மூன்று வெவ்வேறு இடங்களில் துணைக்கோள் நகரங்கள் ஏற்படுத்தி, அனைத்து அடிப்படை வசதிகளுடன்கூடிய மேம்பாட்டுப் பணிகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் பல்வேறு பிரிவு பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மேற்கொள்ளப்பட்டு*

வருகின்றன. தற்பொழுது தமிழ்நாட்டின் பிற முக்கிய நகரங்களில் துணை நகரங்கள் அமைக்கத் தேவையான நிலங்கள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஏதுமில்லை.

8—

துணை நகரங்கள்

வினா எண் 9073—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) துணை நகரங்கள் அமைக்கப்படும்போது மாதிரி நகரங்கள்போல் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டத்தில் திருமழிசை, மதுரை மாவட்டத்தில் உச்சப்பட்டி-தோப்பூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் முள்ளூர் ஆகிய மூன்று இடங்களில் துணைக்கோள் நகரங்கள் அனைத்து அடிப்படை வசதிகளுடன்கூடிய மாதிரி நகரங்களாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் பல்வேறு பிரிவு பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்பொழுது தமிழ்நாட்டின் பிற முக்கிய நகரங்களில் துணை நகரங்களை மாதிரி (Model) *நகரங்களாக அமைக்கத் தேவையான நிலங்கள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஏதுமில்லை.*

9—

அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 22035—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

(அ) போளூர் பேரூராட்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் பேரூராட்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏதுமில்லை. ஆகவே, மேற்கண்ட பகுதிகளில் புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட இயலாத நிலை உள்ளது.

10—

குடியிருப்புகள்

வினா எண் 178—திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராயபுரம் தொகுதியில் பழுதடைந்துள்ள தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய குடியிருப்புகளை அகற்றவும், புதியதாக குடியிருப்புகள் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை இராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 10 திட்டப் பகுதிகளில் கட்டப்பட்டுள்ள 3,366 அடுக்குமாடி குடியிருப்புகளில் மேற்கு கல்லறைச் சாலையில் 672 குடியிருப்புகள், கிழக்கு கல்லறைச் சாலையில் 928 குடியிருப்புகள், மீனாட்சியம்மன்பேட்டையில் 56 குடியிருப்புகள்,

செட்டித் தோட்டத்தில் 240 குடியிருப்புகள் மற்றும் அனாதைக் குப்பத்தில் 64 குடியிருப்புகள் என மொத்தம் 1,960 குடியிருப்புகள் சிதிலமடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இக்குடியிருப்புகளின் உறுதித்தன்மை தொழில்நுட்பக் குழுவினரால் ஆய்வு செய்யப்படும். ஆய்வின்போது, இக்குடியிருப்பு பாதிப்புகளின் தன்மை (Vulnerability) அதிகமாக இருப்பதாகக் கண்டறியப்படின், சிதிலமடைந்த குடியிருப்புகளை மறுகட்டுமானம் செய்ய தொழில்நுட்பக் குழுவினரால் பரிந்துரை செய்யப்படும்பட்சத்தில், தொழில்நுட்பக் குழுவினரால் பரிந்துரைக்கப்பட்ட குடியிருப்புகள் மட்டும் மறுகட்டுமானம் செய்ய நிதிநிலைமை, பயனாளிகள் ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்புத் தொகை செலுத்துவதைப் பொறுத்து, மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11—

குடியிருப்புகள் சீரமைத்தல்

வினா எண் 418—திரு. க. செல்வராஜ்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தெற்கு தொகுதி, செல்லாண்டியம்மன்துறையில் சிதிலமடைந்துள்ள தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்புகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் தெற்கு தொகுதி, செல்லாண்டியம்மன்துறையில் சிதிலமடைந்துள்ள தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்புகளைச் சீரமைக்க ஆவன செய்யப்படும்.

2023 ஜனவரி 11]

12—

மாம்பழச்சாறு தொழிற்சாலை

வினா எண் 518—திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தென்காசி தொகுதி, குற்றாலம் பேரூராட்சி, குற்றாலத்தில் மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

தென்காசி தொகுதி, குற்றாலம் பேரூராட்சி, குற்றாலத்தில் மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

எனினும், இனிவருங்காலங்களில், தென்காசி பகுதிகளில் மாம்பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க தனியார் தொழில்முனைவோர் யாரேனும் முன்வந்தால், தமிழக அரசு அறிவித்துள்ள திட்டங்களின்கீழ் தகுதியின் அடிப்படையில் மானியத்துடன்கூடிய வங்கிக் கடனுக்கு ஆவன செய்யப்படும்.

13—

கொலுசு தயாரிப்பு

வினா எண் 1227—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வெள்ளிக் கொலுசு தயாரிப்பதற்கு அதிநவீன தொழில்முறைகளை உருவாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் அதிநவீன தொழில்முறைகள்மூலம் வெள்ளிக் கொலுசு தயாரிக்க ஏதுவாகவும், அங்குள்ள வெள்ளிக்

கொலுசு தயாரிக்கும் தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையிலும் ரூ.2,49,96,991/– மதிப்பீட்டில் தொகுப்பு குழுமத் திட்டத்தின்கீழ் பொது வசதி மையம் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்மூலம் (சிட்கோ) உருவாக்கப்பட்டு வருகிறது. இந்த பொது வசதி மையத்தில் வெள்ளிக் கொலுசு தயாரிப்பிற்கான அதிநவீன இயந்திரங்கள் அமைக்கப்பட்டு வருகிறது. இவ்வாய்வுக்கூடம் விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

14—

தொழிற்பேட்டை அமைத்தல்

வினா எண் 1933—திரு. A.J. மணிக்கண்ணன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

உளுந்தூர்பேட்டை தொகுதியில் ஆசனூர் தொழிற்பேட்டை 212.83 ஏக்கர் பரப்பில் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், உளுந்தூர்பேட்டை தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க போதிய அரசு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில், டான்சிட்கோமூலம் புதிய தொழிற்பேட்டை தொடங்கப்படும். எனினும், தொழில் தொடங்க ஆர்வமுள்ள குறைந்தபட்சம் 20 தொழில்முனைவோர் உள்ளடக்கிய கூட்டமைப்புகள் சுமார் 50 ஏக்கர் நிலத்துடன் தொழிற்பேட்டை அமைக்க முன்வரும்பட்சத்தில், ரூ.15 கோடி வரையிலான அரசின் மானியத்துடன் தொழிற்பேட்டை அமைப்பதற்கு தமிழ்நாடு சிட்கோமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

15—

தொழிற்சாலைகள் இயங்குதல்

வினா எண் 3265—திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2023 ஜனவரி 11]

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி நகராட்சி, சிட்கோ தொழில் வளாகத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் மட்டும் இயங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

தொழிற்பேட்டையானது பேருந்து நிலையம் அருகில் உள்ளதாலும், நகரின் மையப் பகுதியில் உள்ளதாலும், சாலை ஓரமாக உள்ள ஒருசில மனை ஒதுக்கீட்டாளர்களின் தொழிற்கூடங்களின் ஒரு பகுதி இடத்தில் தொழிற்சாலை அல்லாத பிற பயன்பாட்டுப் பணிகள் நடைபெறுவது குறித்து அறிந்து, கிளை மேலாளர், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (டான்சிட்கோ), கிருஷ்ணகிரி அவர்கள் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளார். தொழிற்சாலையை நடத்தாதவர்கள்மீது டான்சிட்கோமூலம் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, தொழிற்சாலைகள் இயங்க ஆவன செய்யப்படும்.

16—

முந்திரி தொழிற்சாலை

வினா எண் 5359—டாக்டர் வை. முத்துராஜா: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை மச்சுவாடி சிறுதொழில் வளர்ச்சிக் கழக (SIDCO) வளாகத்தில் முந்திரி தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் முந்திரியை உள்ளூரில் உள்ள சில சிறுதொழில்

நிறுவனங்களும், சாலையோர வியாபாரிகளுமே கொள்முதல் செய்து பயன்படுத்திக்கொள்கிறார்கள். மேலும், இவ்விளைச்சல் வருடம் முழுவதும் முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலை இயங்க போதுமானதாக இல்லை. இதனால், புதுக்கோட்டை மாவட்டத்தில் மச்சுவாடி சிறுதொழில் வளர்ச்சிக் கழக வளாகத்தில் முந்திரி தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், இது தொடர்பான அரசு திட்டம் எதுவும் தற்போது நடைமுறையில் இல்லை.

இருப்பினும், புதுக்கோட்டை மாவட்டம், மச்சுவாடி சிறுதொழில் வளர்ச்சிக் கழக வளாகத்தில் முந்திரி தொழிற்சாலை அமைக்க தொழில்முனைவோர் எவரேனும் முன்வரும் நிலையில், தமிழக அரசு அறிவித்துள்ள திட்டங்களின்கீழ் தகுதியின் அடிப்படையில் வங்கிக் கடனுக்கு பரிந்துரை செய்யப்படும்.

17—

அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 9762—திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருகம்பாக்கம் தொகுதி, சிவலிங்கபுரம், ராணி அண்ணாநகரில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய பழைய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு மாற்றாக புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

விருகம்பாக்கம் தொகுதி, சிவலிங்கபுரம், ராணி அண்ணாநகரில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய பழைய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு மாற்றாக புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் பரிசீலிக்கப்பட்டு, அதனடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2023 ஜனவரி 11]

18—

விற்பனைப் பத்திரம் வழங்குதல்

வினா எண் 15184—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, பள்ளிக்கரணை, வேளச்சேரி மெயின்ரோடு, மயிலை பாலாஜி நகரில் வசிக்கும் மக்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்மூலம் இலவசமாக வீட்டுமனை விற்பனைப் பத்திரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இலவசமாக வீட்டுமனை விற்பனைப் பத்திரம் வழங்குவது குறித்த நடைமுறை வாரியத்தில் இல்லை.

19—

சவ்வரிசி தொழிற்சாலை தொடங்குதல்

வினா எண் 21615—திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி ஒன்றியத்தில் சவ்வரிசி தொழிற்சாலை துவங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டி வட்டாரத்தில் கிடைக்கப்பெறும் 520 மெட்ரிக் டன் மரவள்ளிக்கிழங்கு,

திருவள்ளூர் மாவட்ட உள்ளூர் சந்தைகளுக்கும் மற்றும் சென்னை மாவட்டத்திற்கும் நேரடி உணவு பயன்பாட்டிற்காக விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. ஆகையால் சவ்வரிசி தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவு.

இருப்பினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் கும்மிடிப்பூண்டி வட்டாரத்தில் சவ்வரிசி (சேகோ) தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க முன்வரும்பட்சத்தில், தகுதியின் அடிப்படையில் மானியத்துடன்கூடிய கடன் உதவி பெற, வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP), பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) மற்றும் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (NEEDS) கடன் விண்ணப்பம் வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படும். இதைத் தவிர, சொந்த முதலீடு அல்லது வங்கிக் கடன் வசதியுடன் தொழில் துவங்கும் தொழில்முனைவோர்களுக்கு தகுதியின் அடிப்படையில் விதிகளுக்குட்பட்டு, பல்வேறு மானியங்கள் வழங்க பரிசீலனை செய்யப்படும்.

20—

பிளைவுட் தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 29193—திரு. இரா. அருள்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், ஏற்காடு அடிவாரம் பகுதியில் பிளைவுட் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் இந்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பதிவு இணையதளமான MSME உத்யோக் ஆதார் வலைதளத்தில் உள்ள தரவுகளின்படி, சேலம் மாவட்டத்தில் 314 மர இழைப்பு தொழில் மேற்கொள்ளும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

2023 ஜனவரி 11]

இவ்வாறு செயல்படும் மர இழைப்பு தொழில் மேற்கொள்ளும் நிறுவனங்களிடமிருந்து பிளைவுட் தொழிற்சாலை இயங்கத் தேவையான மூலப்பொருளான மரத்தூள் ஆண்டு முழுவதும் குறைந்த அளவே கிடைக்கின்றது. இந்நிலையில், சேலம், ஏற்காடு அடிவாரம் பகுதியில் புதிதாக அரசு சார்பில் பிளைவுட் தொழிற்சாலை தொடங்க சாத்தியக்கூறுகள் மிகக் குறைவு. மேலும், சேலம், ஏற்காடு அடிவாரம் பகுதியில் அரசு சார்பில் பிளைவுட் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பது தெரிவிக்கப்படுகிறது.

21—

அடுக்குமாடி குடியிருப்புகள்

வினா எண் 44981—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி நகரில் வசிக்கும் மக்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி நகரில் வசிக்கும் மக்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுகா, கண்டிதம்பேட்டை திட்டப் பகுதியில் கஜா புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 80 (தரை மற்றும் 3 அடுக்குகள்) அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.7.85 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஜனவரி 11

22—

குடியிருப்புகள்

வினா எண் 48997—திரு. இ. பரந்தாமன்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எழும்பூர் தொகுதி, மண்டலம் 6, வார்டு எண் 77, ராஜா தோட்டம் பகுதியில் வசிக்கும் வீடற்றோருக்கு எழும்பூர் தொகுதிக்குள்ளே புதிய குடியிருப்பினை கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

சென்னை, எழும்பூர் தொகுதி, மண்டலம் 6, வார்டு எண் 77, ராஜா தோட்டம் பகுதியில் வசிக்கும் வீடற்றோருக்கு எழும்பூர் தொகுதிக்குள்ளே அடுக்குமாடி குடியிருப்புகள் புதிதாக கட்டுவது குறித்த கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

23—

வீடுகள் ஒதுக்கீடு செய்தல்

வினா எண் 48999—திரு. இ. பரந்தாமன்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எழும்பூர் தொகுதி, சச்சிதானந்தன் தெரு, வீராசாமி தெரு பகுதிகளில் நடைபாதைகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு எழும்பூர் தொகுதிக்குள்ளாகவே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் காலியாகவுள்ள வீடுகளை ஒதுக்கவும் அல்லது புதிய வீடுகள் கட்டவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

எழும்பூர் தொகுதி, சச்சிதானந்தன் தெரு மற்றும் வீராசாமி தெரு பகுதிகளில் நடைபாதைகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு எழும்பூர் தொகுதிக்குள்ளாகவே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட

2023 ஜனவரி 11]

மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் காலியாகவுள்ள வீடுகளை ஒதுக்கவும் அல்லது புதிய வீடுகள் கட்டுவது தொடர்பாகவும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் உரிய நேரத்தில் பரிசீலனை செய்யப்படும்.

24—

வீடுகள் ஒதுக்கீடு செய்தல்

வினா எண் 49000—திரு. இ. பரந்தாமன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

எழும்பூர் தொகுதி, காத்தூர் நல்லமுத்து தெரு மற்றும் சூளை மார்க்கெட் பகுதிகளில் நடைபாதைகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு எழும்பூர் தொகுதிக்குள்ளாகவே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் காலியாகவுள்ள வீடுகளை ஒதுக்கவும் அல்லது புதியதாக வீடுகள் கட்டவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

எழும்பூர் தொகுதி, காத்தூர் நல்லமுத்து தெரு மற்றும் சூளை மார்க்கெட் பகுதிகளில் நடைபாதைகளில் வசிக்கும் பல குடும்பங்களுக்கு எழும்பூர் தொகுதிக்குள்ளாகவே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் காலியாகவுள்ள வீடுகளை ஒதுக்கவும் அல்லது புதிய வீடுகள் கட்டுவது தொடர்பாகவும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் உரிய நேரத்தில் பரிசீலனை செய்யப்படும்.

25—

வீடுகள் ஒதுக்கீடு செய்தல்

வினா எண் 49001—திரு. இ. பரந்தாமன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

எழும்பூர் தொகுதி, கனகராயத் தோட்டம், ராஜா தோட்டம் (ஆத்தூரம்) பகுதிகளில் நடைபாதைகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு எழும்பூர் தொகுதிக்குள்ளாகவே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் காலியாகவுள்ள வீடுகளை ஒதுக்கவும் அல்லது புதியதாக வீடுகள் கட்டவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

எழும்பூர் தொகுதி, கனகராயத் தோட்டம், ராஜா தோட்டம் (ஆத்தூரம்) பகுதிகளில் நடைபாதைகளில் வசிக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு எழும்பூர் தொகுதிக்குள்ளாகவே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் காலியாகவுள்ள வீடுகளை ஒதுக்கவும் அல்லது புதிய வீடுகள் கட்டுவது தொடர்பாகவும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் உரிய நேரத்தில் பரிசீலனை செய்யப்படும்.

26—

வீடுகள் ஒதுக்கீடு செய்தல்

வினா எண் 49002—திரு. இ. பரந்தாமன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

எழும்பூர் தொகுதி, பேக்கர் தெருவோர நடைபாதைகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு எழும்பூர் தொகுதிக்குள்ளாகவே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் காலியாகவுள்ள வீடுகளை ஒதுக்கவும் அல்லது புதியதாக வீடுகள் கட்டவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

எழும்பூர் தொகுதி, பேக்கர் தெருவோர நடைபாதைகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு எழும்பூர் தொகுதிக்குள்ளாகவே

2023 ஜனவரி 11]

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் காலியாகவுள்ள வீடுகளை ஒதுக்கவும் அல்லது புதிய வீடுகள் கட்டுவது தொடர்பாகவும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் உரிய நேரத்தில் பரிசீலனை செய்யப்படும்.

27—

வீடுகள் ஒதுக்கீடு செய்தல்

வினா எண் 49003—திரு. இ. பரந்தாமன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

எழும்பூர் தொகுதி, ஜெ.ஜெ. நகர் (கண்ணப்பர் திடல்) மற்றும் குருசாமி நகர்ப் பகுதிகளில் நடைபாதைகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு எழும்பூர் தொகுதிக்குள்ளாகவே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் காலியாகவுள்ள வீடுகளை ஒதுக்கவும் அல்லது புதிய வீடுகள் கட்டவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

எழும்பூர் தொகுதி, ஜெ.ஜெ. நகர் (கண்ணப்பர் திடல்) மற்றும் குருசாமி நகர்ப் பகுதிகளில் நடைபாதைகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு எழும்பூர் தொகுதிக்குள்ளாகவே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் காலியாகவுள்ள வீடுகளை ஒதுக்குவது அல்லது புதிய வீடுகள் கட்டுவது தொடர்பாக தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் உரிய நேரத்தில் பரிசீலனை செய்யப்படும்.

28—

வீடுகள் ஒதுக்கீடு செய்தல்

வினா எண் 49006—திரு. இ. பரந்தாமன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

எழும்பூர் தொகுதி, வீ.வீ. கோவில் குடிசைப் பகுதி பட்நூஸ் சந்துஜா தெரு நடைபாதைகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு எழும்பூர் தொகுதிக்குள்ளாகவே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் காலியாகவுள்ள வீடுகளை ஒதுக்கவும் அல்லது புதிய வீடுகள் கட்டவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

எழும்பூர் தொகுதி, வீ.வீ. கோவில் குடிசைப் பகுதி பட்நூஸ் சந்துஜா தெரு பகுதியில் நடைபாதைகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு எழும்பூர் தொகுதிக்குள்ளாகவே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் காலியாகவுள்ள வீடுகளை ஒதுக்குவது அல்லது புதிய வீடுகள் கட்டுவது தொடர்பாக தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் உரிய நேரத்தில் பரிசீலனை செய்யப்படும்.

29—

வீடுகள் ஒதுக்கீடு செய்தல்

வினா எண் 49008—திரு. இ. பரந்தாமன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

எழும்பூர் தொகுதி, ஸ்ட்ரிங்கர்ஸ் ரோடு, நேவல் ஆஸ்பிடல் சாலை, 2–வது தெரு குடிசைப் பகுதிகளில் நடைபாதைகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு எழும்பூர் தொகுதிக்குள்ளாகவே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் காலியாகவுள்ள வீடுகளை ஒதுக்கவும் அல்லது புதிய வீடுகள் கட்டவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

எழும்பூர் தொகுதி, ஸ்ட்ரிங்கர்ஸ் ரோடு, நேவல் ஆஸ்பிடல் சாலை, 2–வது தெரு பகுதியில் நடைபாதைகளில் வசிக்கும்

2023 ஜனவரி 11]

குடும்பங்களுக்கு எழும்பூர் தொகுதிக்குள்ளாகவே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் காலியாகவுள்ள வீடுகளை ஒதுக்கவும் அல்லது புதிய வீடுகள் கட்டுவது தொடர்பாகவும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் உரிய நேரத்தில் பரிசீலனை செய்யப்படும்.

30—

வீடுகள் ஒதுக்கீடு செய்தல்

வினா எண் 49009—திரு. இ. பரந்தாமன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

எழும்பூர் தொகுதி, சிவராஜபுரம் 3-வது தெரு மற்றும் கே.பி. பார்க் குடிசைப் பகுதியில் நடைபாதைகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு எழும்பூர் தொகுதிக்குள்ளாகவே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் காலியாகவுள்ள வீடுகளை ஒதுக்கவும் அல்லது புதியதாக வீடுகள் கட்டவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

எழும்பூர் தொகுதி, சிவராஜபுரம் 3-வது தெரு மற்றும் கே.பி. பார்க் குடிசைப் பகுதியில் நடைபாதைகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு எழும்பூர் தொகுதிக்குள்ளாகவே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் காலியாகவுள்ள வீடுகளை ஒதுக்கவும் அல்லது புதிய வீடுகள் கட்டுவது தொடர்பாகவும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் அரசால் உரிய நேரத்தில் பரிசீலனை செய்யப்படும்.

31—

குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 51689—டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

(அ) ஆயிரம் விளக்கு தொகுதி, கார்ப்பரேசன் குடியிருப்பு குடிசைப்பகுதி மக்களுக்கு அதே இடத்தில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆயிரம் விளக்கு தொகுதி, கார்ப்பரேசன் குடியிருப்பு குடிசைப்பகுதி அமைந்துள்ள நிலம் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டபின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

32—

குடியிருப்புகள் சீரமைத்தல்

வினா எண் 52522—திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, ஜி.எம். பேட்டை பகுதியில் பழுதடைந்துள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, இராயபுரம் தொகுதி, ஜி.எம். பேட்டை பகுதியில் பழுதடைந்துள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளைச் சீரமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

2023 ஜனவரி 11]

33—

பூங்காக்களுக்கான இடத்தை ஒப்படைத்தல்

வினா எண் 53163—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–15, வார்டு எண் 195, எழில் நகர் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் பூங்காக்களுக்கு என ஒதுக்கப்பட்ட இடத்தை சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–15, வார்டு எண் 195, எழில் நகர் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் பூங்காக்களுக்கு என ஒதுக்கப்பட்ட இடத்தை சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

34—

பூங்காக்களுக்கான இடத்தை ஒப்படைத்தல்

வினா எண் 53164—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–15, வார்டு எண் 200, செம்மஞ்சேரி தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் பூங்காக்களுக்கு என ஒதுக்கப்பட்ட இடத்தை சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–15, வார்டு எண் 200, செம்மஞ்சேரி தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் பூங்காக்களுக்கு என ஒதுக்கப்பட்ட இடத்தை சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வாரியத்தால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

35—

சமுதாயக் கூடம் ஒப்படைத்தல்

வினா எண் 53165—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–15, வார்டு எண் 195, எழில் நகர் மற்றும் வார்டு எண் 196, கண்ணகி நகரில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்கீழ் உள்ள சமுதாயக் கூடத்தை சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–15, வார்டு எண் 195, எழில் நகர் மற்றும் வார்டு எண் 196, கண்ணகி நகரில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்கீழ் உள்ள சமுதாயக் கூடம் தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனை சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைப்பது குறித்து வாரியம் உரிய நேரத்தில் பரிசீலனை செய்யும்.

36—

மணிமண்டபம்

வினா எண் 3739—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, நடுக்காவேரியில் தமிழறிஞர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களுக்கு மணிமண்டபம் மற்றும் நூலகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, நடுக்காவேரியில் தமிழறிஞர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களுக்கு மணிமண்டபம் மற்றும் நூலகக் கட்டடம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

37—

சிலை நிறுவுதல்

வினா எண் 12042—திருமதி க. சிவகாமசுந்தரி: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம், மாயனூர் கதவணையில் உள்ள பூங்காவை சீரமைத்து, கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் திருவுருவச் சிலையை நிறுவ அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

சென்னை, அண்ணா சாலை, அரசினர் தோட்டம், ஓமந்தூரார் மருத்துவ வளாக உள்பகுதியில் முத்தமிழறிஞர்

[*2023 ஜனவரி 11*

கலைஞர் அவர்களுக்கு திருவுருவச் சிலை நிறுவப்பட்டுள்ளதால், கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம், மாயனூர் கதவணையில் உள்ள பூங்காவை சீரமைத்து, கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் திருவுருவச் சிலையை நிறுவும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

38—

மணிமண்டபம்

வினா எண் 28793—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சிவகங்கையில் வீரமங்கை குயிலிக்கு மணிமண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

சிவகங்கை மாவட்டம், சூரக்குளத்தில் வீரத்தாய் குயிலிக்கு நினைவுச் சின்னம் உள்ளதால், சிவகங்கையில் வீரமங்கை குயிலிக்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

39—

மணிமண்டபம்

வினா எண் 38199—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பூர் மாநகரில் தியாகி திருப்பூர் குமரனுக்கு மணிமண்டபம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

திருப்பூர் மாவட்டத்தில் திருப்பூர் குமரன் நினைவகம் உள்ளதால், திருப்பூர் மாநகரில் தியாகி திருப்பூர் குமரனுக்கு

2023 ஜனவரி 11]

மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

40—

சிலை

வினா எண் 38979—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரியில் முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு சிலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

சென்னை, அண்ணா சாலை, அரசினர் தோட்டம், ஓமந்தூரார் மருத்துவ வளாக உள்பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு திருவுருவச் சிலை நிறுவப்பட்டுள்ளதால், கன்னியாகுமரியில் முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு சிலை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

41—

மணிமண்டபம்

வினா எண் 51116—திரு. பெ. ராமலிங்கம்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாமக்கல் தொகுதி, நாமக்கல்லில், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் நினைவு இல்லம் உள்ளதால், நாமக்கல்லில், நாமக்கல் கவிஞர்

[2023 ஜனவரி 11

இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

42—

நினைவு மண்டபம்

வினா எண் 54823—திரு. க. செல்வராஜ்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோருக்கு நினைவு மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் பேரறிஞர் அண்ணா அருங்காட்சியகம் சென்னை மெரினா கடற்கரையில் உள்ளதாலும், பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் காஞ்சிபுரத்தில் உள்ளதாலும், பெரியார்–அண்ணா நினைவகம் ஈரோடு மாவட்டத்தில் உள்ளதாலும், கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவகம் உள்ளதாலும், திருப்பூரில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோருக்கு நினைவு மண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

43—

கூட்ட அரங்கம்

வினா எண் 76567—திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளச்சேரி தொகுதியில் உள்ள தரமணி எம்.ஜி.ஆர். திரைப்படக் கல்லூரிக்கு கூட்ட அரங்கம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

செய்தி, மக்கள் தொடர்புத் துறையின்கீழ் இயங்கும் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் முன்காண் திரையரங்கம், மறுஒலிப்பதிவு திரையரங்கம் மற்றும் கூட்ட அரங்கம் ஆகியவை அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், புதிதாக கூட்ட அரங்கம் அமைத்திட திட்டம் ஏதுமில்லை.

44—

அங்கன்வாடி மையம்

வினா எண் 497—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நீடாமங்கலம் பேரூராட்சி, 3–வது வார்டு, காமராஜர் தெருவில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் ஊட்டச்சத்து மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் பேரூராட்சி, 3–வது வார்டு, காமராஜர் காலனியில் 2004 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அங்கன்வாடி மையம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இம்மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இடம் ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்/ சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்து, கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

45—

அங்கன்வாடி மையம்

வினா எண் 1621—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவையாறு தொகுதி, அம்மையகரத்தில் பழுதடைந்துள்ள அங்கன்வாடி மைய கட்டடத்திற்கு மாற்றாக புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, அம்மையகரத்தில் 1989 ஆம் ஆண்டு முதல் அரசு சொந்தக் கட்டடத்தில் அங்கன்வாடி மையம் செயல்பட்டு வந்தது. இம்மையக் கட்டடம் பழுதடைந்த காரணத்தினால் குழந்தைகள் நலன் கருதி, தற்போது மையம், ஊராட்சி மன்ற சமுதாயக் கூடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு 2021–2022 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்/சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து புதிய கட்டடம் கட்டுவதற்கு தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

46—

அங்கன்வாடி மையம்

வினா எண் 1628—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவையாறு தொகுதி, பூதராயநல்லூரில் பழுதடைந்துள்ள அங்கன்வாடி மையத்திற்கு மாற்றாக புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, பூதராயநல்லூரில் 1986 ஆம் ஆண்டு முதல் அரசு சொந்தக்

2023 ஜனவரி 11]

கட்டடத்தில் அங்கன்வாடி மையம் செயல்பட்டு வந்தது. இம்மையக் கட்டடம் பழுதடைந்த காரணத்தினால் குழந்தைகள் நலன் கருதி, தற்போது மையம், ஊராட்சி மன்ற சுய உதவிக் குழு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு 2021–2022 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்/ சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து புதிய கட்டடம் கட்டுவதற்கு தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

47—

சமையல் கூடம்

வினா எண் 1632—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவையாறு தொகுதி, நடுக்காவேரி அரசு நடுநிலைப் பள்ளியில் பழுதடைந்துள்ள சமையல் கூடத்திற்கு மாற்றாக புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, நடுக்காவேரி அரசு நடுநிலைப் பள்ளி சத்துணவு சமையல் கூடத்தின் பழுதடைந்த பகுதி பயன்பாடின்றி தடுக்கப்பட்டுள்ளது. நல்ல நிலையில் உள்ள மற்றொரு பகுதி சமைப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இப்பள்ளிக்கு 2021–2022 ஆம் ஆண்டுக்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் லேபர் பட்ஜெட்டில் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சமையல் கூடம் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

48—

அங்கன்வாடி மையம்

வினா எண் 1806—திரு. சு. ரவி: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், ஆத்தூர் ஊராட்சி, ஆத்தூர் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், ஆத்தூர் ஊராட்சி, ஆத்தூர் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையம் 1994 ஆம் ஆண்டு முதல் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. இம்மையக் கட்டடம் மிகவும் பழுதடைந்த காரணத்தினால் குழந்தைகள் பாதுகாப்பு கருதி, அருகிலுள்ள அரசு இலவச கட்டடத்தில் இம்மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, 2020–2021 ஆம் ஆண்டிற்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

49—

மூத்த குடிமக்கள் தீர்ப்பாயம் அமைத்தல்

வினா எண் 48706—திரு. இரா. அருள்: மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வயது முதிர்ந்தோர் பிரச்சினைகளை விசாரிப்பதற்கு மூத்த குடிமக்கள் தீர்ப்பாயம் (Tribunals for Senior Citizens) அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

அரசு, தமிழகத்தில் மூத்த குடிமக்களுக்கான பிரச்சினைகளை விசாரிப்பதற்கும், அவற்றைத் தீர்ப்பதற்கும் மூத்த குடிமக்கள் தீர்ப்பாயத்தினை 31–12–2009 முதல் செயல்படுத்தி வருகிறது. மேலும்,

2023 ஜனவரி 11]

தமிழகத்தில் 92 பராமரிப்பு தீர்ப்பாயங்களும் 38 மேல்முறையீட்டு தீர்ப்பாயங்களும் செயல்பட்டு வருகின்றன.

50—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 286—திரு. சு. ரவி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், பெருங்களத்தூர் ஊராட்சி, பெருங்களத்தூர் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், பெருங்களத்தூர் ஊராட்சி, பெருங்களத்தூர் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் துவக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

(ஆ) அரசு கொள்கை முடிவுகள் எடுக்கும்போது, கால்நடைக் கிளை நிலையம் அமைக்க பெருங்களத்தூர் கிராமம் பரிசீலிக்கப்படும்.

51—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 319—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, சின்னப்பேட்டை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, சின்னப்பேட்டை ஊராட்சியில் தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி கால்நடை மருத்துவமனை நேரடியாகத் துவக்க இயலாது. கால்நடை அலகுகளின் அடிப்படையில் கால்நடைக் கிளை நிலையம் முதற்கட்டமாக துவக்கப்படும். கால்நடைக் கிளை நிலையம் அமைக்க 3,000 அலகுகள் இருக்க வேண்டும். 5,000 கால்நடை அலகுகள் உள்ள இடங்களில் கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். பண்ருட்டி தொகுதி, சின்னப்பேட்டை ஊராட்சியில் 280 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால், அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, சின்னப்பேட்டை ஊராட்சியில் உள்ள கால்நடை விவசாயிகள் அருகில் உள்ள கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

52—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 320—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, நரிமேடு ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, நரிமேடு ஊராட்சியில் அரசு வரையறைகளின்படி கால்நடை மருத்துவமனை நேரடியாகத்

2023 ஜனவரி 11]

துவக்க இயலாது. கால்நடை அலகுகளின் அடிப்படையில், கால்நடைக் கிளை நிலையம் முதற்கட்டமாக துவக்கப்படும். கால்நடைக் கிளை நிலையம் அமைக்க 3,000 அலகுகள் இருக்க வேண்டும். 5,000 கால்நடை அலகுகள் உள்ள இடங்களில் கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். பண்ருட்டி தொகுதி, நரிமேடு ஊராட்சியில் 510 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால், அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, அந்த ஊராட்சியில் உள்ள கால்நடை விவசாயிகள் அருகில் உள்ள கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

53—

இலவச வீடு கட்டுதல்

வினா எண் 431—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, மாநகராட்சி வட்டம்–9, திருவொற்றியூர் குப்பத்தில் மீனவர்களுக்கு இலவச வீடு கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டத்தில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை வாயிலாக ஊரகப் பகுதிகளில் பிரதான் மந்திரி கிராமின் ஆவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் வீடுகட்டி வழங்கப்படுகிறது. திருவொற்றியூர் தொகுதி, மாநகராட்சி வட்டம், மண்டலம் 1–ன்கீழ் 9–வது வார்டு, சென்னை பெருநகர மாநகராட்சி கட்டுப்பாட்டின்கீழ் வருவதால், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் வாயிலாக தகுதியான மீனவ பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டி வழங்கப்படுகின்றன. சென்னை மாநகராட்சி வாயிலாக அல்லது வேறு ஏதேனும் அரசு துறைகள் வாயிலாக திருவொற்றியூர் தொகுதியில் போதிய இடவசதி

[2023 ஜனவரி 11

வழங்கிடும்பட்சத்தில், திட்ட அறிக்கை தயார் செய்து, அரசுக்கு கருத்துரு சமர்ப்பித்து இலவச வீடுகள் கட்டி வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

54—

மீன் விற்பனை அங்காடி அமைத்தல்

வினா எண் 432—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, மாநகராட்சி 5–வது வட்டம், ராமகிருஷ்ணன் நகரில் மீன் விற்பனை அங்காடி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சி, திருவொற்றியூர் தொகுதி, மாநகராட்சி 5–வது வட்டம், ராமகிருஷ்ணன் நகர்ப் பகுதியில் புதியதாக மீன் அங்காடி அமைத்திட மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்ந்த நிலமில்லாததால் பிற அரசுத் துறைகளின் வாயிலாக நிலம் பெறப்படும்பட்சத்தில், இப்பகுதியில் மீன் அங்காடி அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

55—

மீன் உலர்த்த தளம் அமைத்தல்

வினா எண் 434—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, மாநகராட்சி வட்டம் 14, திருச்சினாங்குப்பம் பகுதியில் மீன் உலர்த்த தளம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் தொகுதி, திருச்சினாங்குப்பத்தில் மீன் உலர்த்த தளம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. வினா எழவில்லை.

56—

மீன் விற்பனை அங்காடி அமைத்தல்

வினா எண் 435—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, மாநகராட்சி 14–வது வட்டம், திருச்சினாங்குப்பம் பகுதியில் மீன் விற்பனை அங்காடி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சி, திருவொற்றியூர் தொகுதி, மாநகராட்சி 14–வது வட்டம், திருச்சினாங்குப்பம் பகுதியில் மீனவ மக்கள் தங்களது மீன்பிடி படகுகளை நிறுத்த காசிமேடு மீன்பிடி துறைமுகத்தை பயன்படுத்தியும் மீன்களை காசிமேடு மீன் விற்பனை அங்காடியின் வாயிலாக விற்பனை செய்தும் வருகின்றனர். திருச்சினாங்குப்பம் பகுதியில் மீன் விற்பனை அங்காடி அமைக்கும்பட்சத்தில், இப்பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மீனவக் கிராமங்களிலுள்ள சுமார் 5,000 மீனவக் குடும்பங்கள் பயனடைவார்கள். மேற்படி இப்பகுதியில் புதிய மீன் அங்காடி அமைத்திட போதிய இடவசதி இல்லை என்பதால், சென்னை மாநகராட்சி அல்லது வேறு அரசுத் துறைகளின் வாயிலாக திருச்சினாங்குப்பம் பகுதியில் நிலம்

[2023 ஜனவரி 11

பெறப்படும்பட்சத்தில், இப்பகுதியில் மீன் அங்காடி அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

57—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 500—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோட்டூர் ஒன்றியம், தென்பரை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், தென்பரை ஊராட்சியில் அரசு வரையறைகளின்படி, கால்நடை மருத்துவமனை நேரடியாகத் துவக்க இயலாது. கால்நடை அலகுகளின் அடிப்படையில், 3,000 கால்நடைகள் உள்ள இடங்களில் கால்நடைக் கிளை நிலையம் முதற்கட்டமாக துவக்கப்படும். 5,000 கால்நடை அலகுகள் உள்ள இடங்களில் கால்நடைக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். தென்பரை ஊராட்சியில், 3,059 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, அரசின் செயற்குறிப்பில் திட்டம் இடம் பெறும்போது புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க இக்கிராமம் பரிசீலிக்கப்படும்.

58—

கால்நடைக் கிளை நிலையம் அமைத்தல்

வினா எண் 679—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சின்னசேலம் ஒன்றியம், மேல்நாரியப்பனூர் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி ஒன்றியம், மேல்நாரியப்பனூர் ஊராட்சியில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

59—

நடமாடும் கால்நடை மருத்துவ வாகனம் இயக்குதல்

வினா எண் 711—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *வேளச்சேரி தொகுதியில் நடமாடும் கால்நடை மருத்துவ வாகனம் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *வேளச்சேரி தொகுதியில் ஏற்கெனவே வேளச்சேரி அரசு கால்நடைக் கிளை நிலையம் தரமணி பேருந்து நிலையத்தில் ஓர் அறையில் இயங்கி வருகிறது. வேளச்சேரி தொகுதி சுற்று வட்டாரத்தில் சுமார் 5 முதல் 7 கி.மீ. தொலைவில் 2 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 4 கால்நடைக் கிளை நிலையங்கள் இயங்கி வருகின்றன. எனவே, வேளச்சேரி தொகுதியில் நடமாடும் கால்நடை மருத்துவ வாகனம் இயக்கும் சூழல் எழவில்லை.*

60—

வலைபின்னும் தளம் அமைத்தல்

வினா எண் 723—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்*

துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர் குப்பம் கடற்கரைப் பகுதியில் மீனவர்களுக்கு வலைபின்னும் தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர் குப்பத்தில் வலைபின்னும் தளம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. வினா எழவில்லை.

61—

மீன் விற்பனை கூடம்

வினா எண் 724—திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர் குப்பம் கடற்கரை சாலையில் உள்ள மீன் விற்பனை கூடத்தை புனரமைத்து புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர் குப்பம் கடற்கரை சாலையில் உள்ள மீன் விற்பனை கூடத்தை

2023 ஜனவரி 11]

புனரமைக்க உரிய திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசின் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

62—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 1349—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதியில் ஏற்கெனவே கால்நடைக் கிளை நிலையம் செயல்பாட்டில் உள்ளது. மேலும், வேளச்சேரி தொகுதி சுற்று வட்டாரத்தில் 5 கி.மீ. முதல் 7 கி.மீ. தொலைவில் கால்நடை நிலையங்கள் இயங்கி வருவதால், அங்கு கால்நடை மருத்துவமனை அமைக்கும் சூழல் எழாது.

63—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 1643—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதியில் உள்ள வடக்குபட்டு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதியில் உள்ள வடக்குபட்டு கிராமத்தில் தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி கால்நடை மருத்துவமனை நேரடியாகத் துவக்க இயலாது. கால்நடை அலகுகளின் அடிப்படையில், கால்நடைக் கிளை நிலையம் முதற்கட்டமாக துவக்கப்படும். கால்நடைக் கிளை நிலையம் அமைக்க 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். 5,000 கால்நடை அலகுகள் உள்ள இடங்களில் கால்நடைக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். பொன்னேரி தொகுதியில் உள்ள வடக்குபட்டு கிராமத்தில் 1,954 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால், அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, வடக்குபட்டு கிராமத்தில் உள்ள கால்நடை விவசாயிகள் அருகில் உள்ள கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

64—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 1714—திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதி, அப்பநாயக்கன்பட்டி ஊராட்சியில் புதியதாக கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சூலூர் தொகுதி, அப்பநாயக்கன்பட்டி ஊராட்சியில் அரசு வரையறைகளின்படி கால்நடை மருத்துவமனை

2023 ஜனவரி 11]

நேரடியாகத் துவக்க இயலாது. கால்நடை அலகுகளின் அடிப்படையில், கால்நடைக் கிளை நிலையம் முதற்கட்டமாக துவக்கப்படும். கால்நடைக் கிளை நிலையம் அமைக்க 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும், 5,000 கால்நடை அலகுகள் உள்ள இடங்களில் இருக்கும் கால்நடைக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். சூலூர் தொகுதி, அப்பநாயக்கன்பட்டி ஊராட்சியில் 8,952 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு முதற்கட்டமாக கால்நடைக் கிளை நிலையம் தற்சமயம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. அரசின் செயற்குறிப்பில் திட்டம் இடம்பெறும்போது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு இக்கிராமம் பரிசீலிக்கப்படும்.

65—

கால்நடை மருந்தகத்திற்கு சுற்றுச்சுவர்

வினா எண் 1759—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, எடமணலில் உள்ள கால்நடை மருந்தகத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கால்நடை நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் கட்ட தற்போது அரசிடம் செயல் திட்டம் ஏதும் இல்லை. எனவே, உள்ளாட்சி/தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெறும்பட்சத்தில், சீர்காழி தொகுதி, எடமணலில் உள்ள கால்நடை மருந்தகத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட பரிசீலிக்கப்படும்.

66—

கால்நடை மருந்தகத்திற்கு கட்டடம்

வினா எண் 1760—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, மாதானத்தில் பழுதடைந்துள்ள கால்நடை மருந்தகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

இந்நிதியாண்டில் (2021–2022) நபார்டு XXVII திட்டத்தின்கீழ், சீர்காழி தொகுதி, மாதானம் கால்நடை மருந்தகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு பரிசீலிக்கப்படும்.

67—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 1927—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, தில்லைவிளாகத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், தில்லைவிளாகத்தில் கால்நடை மருத்துவமனை அரசு வரையறைகளின்படி நேரடியாகத் துவக்க இயலாது. கால்நடை அலகுகளின் அடிப்படையில், கால்நடைக் கிளை நிலையம் முதற்கட்டமாக துவக்கப்படும். கால்நடைக் கிளை நிலையம் அமைக்க 3,000 அலகுகள் இருக்க வேண்டும். 5,000 கால்நடை அலகுகள் உள்ள இடங்களில் கால்நடைக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். தில்லைவிளாகத்தில் 3,270 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, அரசின் செயல் குறிப்பில் திட்டம் இடம்பெறும்போது புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க இக்கிராமம் பரிசீலிக்கப்படும்.

2023 ஜனவரி 11]

68—

நவீன மீன் விற்பனை அங்காடி

வினா எண் 1963—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கும்பகோணம் தொகுதி, தாராசுரம் மீன் மார்க்கெட்டில் நவீன முறையில் மீன் விற்பனை அங்காடி கட்ட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) *கும்பகோணம் தொகுதி, தாராசுரம் பேரூராட்சிப் பகுதியில் அமைந்துள்ள தாராசுரம் மீன் மார்க்கெட்டில் நல்ல முறையில் மீன் அங்காடிகள் (10 எண்ணம்) இயங்கி வருகின்றன. எனவே, இம்மீன் மார்க்கெட்டில் புதியதாக மீன் அங்காடிகள் அமைத்திட தற்போது அவசியம் எழவில்லை.*

(ஆ) *துணை வினா எழாது.*

69—

சிறப்பு மருத்துவ முகாம்

வினா எண் 1968—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியத்தில் ஆறு மாதத்திற்கு ஒரு முறை கால்நடை சிறப்பு மருத்துவ முகாம்களை நடத்த அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஒவ்வொரு மாதமும் கால்நடை பாதுகாப்பு திட்டத்தின்கீழ் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டிலும் (2021–2022) இம்முகாம்களை நடத்த பிரேரணை பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அரசாணை வெளியிட்டபின் கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியத்தில் சிறப்பு மருத்துவ முகாம்கள் 2021–2022–ம் நிதியாண்டில் நடத்தப்படும்.

70—

மருத்துவ பரிசோதனை அட்டை வழங்குதல்

வினா எண் 1970—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் வீடுகளில் வளர்க்கும் பிராணிகளுக்கான மருத்துவ பரிசோதனை அட்டைகள் (Health Card) *வழங்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தமிழகத்தில் சுமார் 103 இலட்சம் மாட்டினங்கள் (பசு மற்றும் எருமைகள்), 45 இலட்சம் செம்மறியாடுகள் மற்றும் 99 இலட்சம் வெள்ளாடுகள் உள்ளன. தேசிய கால்நடை நோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் (NADCP), *2020 ஆம் ஆண்டில் மாட்டினங்களுக்கு மட்டும் சுமார் 58 இலட்சம் எண்ணிக்கை உடல்நல அட்டைகள் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமைமூலம் அச்சிடப்பட்டு, மாவட்டங்களுக்கு பிரித்து*

2023 ஜனவரி 11]

வழங்கப்பட்டன. எனவே, மீதமுள்ள கூடுதலாக 189 இலட்சம் உடல்நல அட்டைகள் விநியோகிப்பதற்காக (பசு மற்றும் எருமைகளுக்கு 45 இலட்சம் மற்றும் செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகளுக்கு 144 இலட்சம்), ஓர் அட்டைக்கு ரூ.3.00 என்ற அளவில் நிதி தேவைப்படுகிறது. எனவே, மாநிலத்தில் மீதமுள்ள கால்நடைகளுக்கு உடல்நல அட்டைகளை வழங்குவதற்காக மொத்தமாக ரூ.567 இலட்சம் தேவைப்படுகிறது. இது தொடர்பாக அரசுக்கு பிரேரணை விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

(ஆ) கேள்வி எழாது.

71—

கால்நடை மருந்தகம்

வினா எண் 2741—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஆராஞ்சி கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஆராஞ்சி கிராமத்தில் அரசு வரையறைகளின்படி கால்நடை மருந்தகம் நேரடியாகத் துவக்க இயலாது. கால்நடை அலகுகளின் அடிப்படையில், கால்நடைக் கிளை நிலையம் முதற்கட்டமாக துவக்கப்படும். கால்நடைக் கிளை நிலையம் அமைக்க 3,000 அலகுகள் இருக்க வேண்டும். 5,000 கால்நடை அலகுகள் உள்ள இடங்களில் கால்நடைக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். ஆராஞ்சி கிராமத்தில் 3,009 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, அரசின் செயற்குறிப்பில் திட்டம் இடம்பெறும்பொழுது புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க இக்கிராமம் பரிசீலிக்கப்படும்.

72—

குளிர்சாதன கிடங்கு

வினா எண் 3249—திரு. மு. பாபு: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *செய்யூர் தொகுதியில் மீனவர்கள் வசிக்கும் பகுதியில் மீன்களை பதப்படுத்த குளிர்சாதன கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின்கீழ்* (FIDF) *ரூ.235.00 கோடியில் விழுப்புரம் மாவட்டம், மரக்காணம், செய்யூர் வட்டம் (செய்யூர் தொகுதி), ஆலம்பரைக்குப்பம் பகுதியில் அமைந்துள்ள கழுவேலி கழிமுகத்தில் மீன்பிடித் துறைமுகம் கட்ட ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீன்பிடித் துறைமுகம் அமைத்தபின் பிடிபடும் மீன்களின் வகைகள் ஆகியவற்றின் அடிப்படையில் மீன் பதப்படுத்தும் குளிர்சாதன கிடங்கு அமைக்க ஆவன செய்யப்படும்.*

73—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 3287—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *நாங்குநேரி தொகுதி, சிவந்தியாபுரத்தில் புதிய கால்நடை மருத்துவமனை கட்ட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 135, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (காப2) துறை, நாள் 15–10–2020–ன்படி நாங்குநேரி தொகுதி, சிவந்தியாபுரத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்பட்டு, 7–11–2021 முதல் செயல்பட்டு வருகிறது.

74—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 3288—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, காரியாண்டியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 167, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (காப2) துறை, நாள் 15–11–2019–ன்படி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், காரியாண்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்பட்டு, 3–1–2020 முதல் செயல்பட்டு வருகிறது.

75—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 4401—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, மல்லமூப்பம்பட்டி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அரசு வரையறைகளின்படி, கால்நடைக் கிளை நிலையம்தான் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர் தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. கால்நடைக் கிளை நிலையம் அமைக்க கோரும் கிராமத்தில்/பகுதியில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 3,000–க்கு அதிகமாகவும், அப்பகுதியைச் சுற்றி செயல்பட்டுவரும் கால்நடைக் கிளை நிலையங்களுக்கும் இடைப்பட்ட தொலைவு 3 கி.மீ.–க்கு அதிகமாகவும் இருக்குமானால், அங்கு ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்படும். பின்னர் அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000–க்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில், அப்பகுதியைச்சுற்றி செயல்பட்டுவரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.–க்கு மேல் இருந்தால், அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்தக் கால்நடை மருந்தகம் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40–க்கும் மேலாக இருக்க வேண்டும்.

சேலம் மேற்கு தொகுதி, மல்லமூப்பம்பட்டி கிராமத்தில் கால்நடை அலகுகள் 3,000–க்கும் குறைவாக (அதாவது 990) உள்ளதால், அங்கு கால்நடை மருத்துவமனை அமைக்க தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை.

76—

நன்னீர் மீன் இனங்கள்

வினா எண் 4461—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேற்கு தொடர்ச்சி மலை நீர்நிலைகளில் உள்ள நன்னீர் மீன் இனங்களைப் பாதுகாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மேற்கு தொடர்ச்சி மலை நீர்நிலைகளான பவானி, காவேரி மற்றும் தாமிரபரணி ஆறுகளில் நாட்டின கெண்டை மீன் இனங்களைப் பாதுகாத்திடும் வகையில், 2020–2021 ஆம் ஆண்டு கல்பாசு கெண்டை மற்றும் சேல் கெண்டை மீன் குஞ்சுகள் மேட்டூர் அரசு மீன் பண்ணை, பவானிசாகர் அரசு மீன் பண்ணை மற்றும் மணிமுத்தாறு அரசு மீன் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு, பவானி, காவேரி மற்றும் தாமிரபரணி ஆறுகளில் தலா 4 இலட்சம் வீதம் மொத்தம் 12 இலட்சம் கல்பாசு கெண்டை மற்றும் நாட்டின சேல் கெண்டை மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு, நன்னீர் மீன் இனங்களைப் பாதுகாத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

77—

தூண்டில் வளைவு

வினா எண் 5300—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் மீன்பிடித் துறைமுகம், மீன்பிடி இறங்குதளத்தில் அமைக்கப்பட்டுள்ள தூண்டில் வளைவை விரிவாக்கம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசலில் ரூ.18.00 கோடி மதிப்பீட்டில் சாலை வசதிகள், படகு அணையும் தளம், கடலரிப்பு தடுப்புச் சுவர் போன்ற கூடுதல் வசதிகளுடன் மீன்பிடி இறங்குதளத்தை மேம்படுத்த தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் 2021–2022 ஆம் ஆண்டிற்கான ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு

நிதி (NABARD–RIDF) XXVII-*ன்கீழ், அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது. எனவே, சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசலில் தூண்டில் வளைவை விரிவாக்கம் செய்யும் திட்டம் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.*

78—

தூண்டில் வளைவு

வினா எண் 5301—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகம், மீன்பிடி இறங்குதளத்தில் அமைக்கப்பட்டுள்ள தூண்டில் வளைவை விரிவாக்கம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தொகுதியில் பழையாறு மீன்பிடித் துறைமுகத்தை பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் நவீனப்படுத்தும் பணிக்கு ரூ.27.00 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒன்றிய அரசின் Pradhan Mantri Matsya Sampada Yojana (PMMSY) *திட்டத்தின்கீழ் நிதியுதவி கோரி அரசின் கருத்துரு ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அக்கருத்துரு தற்பொழுது ஒன்றிய அரசின் பரிசீலனையில் உள்ளது.*

79—

கால்நடைக் கிளை நிலையத்தை தரமுயர்த்துதல்

வினா எண் 6719—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, திருத்தணி வட்டம், நெமிலி ஊராட்சியில் உள்ள கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு வரையறைகளின்படி, 5,000 கால்நடை அலகுகள் உள்ள இடங்களில் இருக்கும் கால்நடைக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். திருத்தணி தொகுதி, திருத்தணி வட்டம், நெமிலி ஊராட்சியில் கால்நடை அலகுகள் 5,000–க்கும் அதிகமாக (அதாவது 5,300) உள்ளதாலும், அக்கிராமத்தைச் சுற்றியுள்ள கால்நடைக் கிளை நிலையங்களின் தூரம் 5 கி.மீ.–க்கும் அதிகமாக உள்ளதாலும், நெமிலி ஊராட்சியில் உள்ள கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு இது பரிசீலிக்கப்படும்.

80—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 6723—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, இரா.கி.பேட்டை வட்டம், அய்யனேரி மற்றும் திருநாதராஜபுரம் ஊராட்சிகளில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருத்தணி தொகுதி, இரா.கி.பேட்டை வட்டம், அய்யனேரி மற்றும் திருநாதராஜபுரம் ஊராட்சிகளில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

(ஆ) அரசு கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

[*2023 ஜனவரி 11*

81—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 6724—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, திருத்தணி வட்டம், என்.என். கண்டிகையில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருத்தணி தொகுதி, என்.என். கண்டிகை கிராமம் என்ற இடத்தில் நேரிடையாக கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

(ஆ) அரசு கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

82—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 6725—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், கிருஷ்ணசமுத்திரம், புச்சிரெட்டிபள்ளி, சிறுகுமி, சூரியநகரம், பெரியகடம்பூர், டி.சி. கண்டிகை, கன்னிகாபுரம் ஆகிய ஊராட்சிகளின் பகுதிகளில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், கிருஷ்ணசமுத்திரம், பெரியகடம்பூர் மற்றும் டி.சி. கண்டிகையில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. ஆனால், புச்சிரெட்டிபள்ளி, சிறுகுமி, சூரியநகரம், கன்னிகாபுரம் ஆகிய பகுதிகளில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) சாத்தியக்கூறு உள்ள இடங்களில் கால்நடைக் கிளை நிலையம் அமைப்பது அரசின் செயல் திட்டம் இடம்பெறும்பொழுது பரிசீலிக்கப்படும்.

83—

கால்நடை மருத்துவக் கல்லூரி

வினா எண் 7130—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, காடாம்புலியூரில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, காடாம்புலியூரில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அவசியம் ஏதும் தற்போது எழவில்லை.

84—

ஆழ்துளைக் கிணறு

வினா எண் 7625—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 ஜனவரி 11*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், கூடுவாஞ்சேரி ஊராட்சிக்குட்பட்ட 7.5 ஏக்கர் அரசு பண்ணைக்குட்டை நிலத்தில் ஆழ்துளைக் கிணறு அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், கூடுவாஞ்சேரி ஊராட்சிக்குட்பட்ட புல எண் 233, 235/2 மேய்க்கால் நிலத்தில் கால்நடை பராமரிப்புத் துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின்மூலம், மேய்க்கால் நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மொத்தமுள்ள 7.5 ஏக்கர் நிலத்தில், 4 ஏக்கர் நிலத்தில் மட்டும் தீவனப் பயிர்கள் வளர்க்க ஏதுவாக ஆழ்துளைக் கிணறு ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது.

85—

மீன் இறங்குதளத்தில் அலுவலகம்

வினா எண் 8006—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காடு மீன்பிடி இறங்குதளத்தில் அலுவலகக் கட்டடம் மற்றும் கூட்ட அரங்கம் கட்டவும், பேவர் பிளாக் தளம் மற்றும் படகு நிறுத்தும் இடம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காட்டில் புதிய மீன்பிடித்

துறைமுகம் அமைப்பது தொடர்பாக பல்வேறு ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு, அதற்கான விரிவான தொழில்நுட்ப–பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனைப் பணிகளுக்கு மாநில அரசின் நிதியின்கீழ், 2021–2022 ஆம் நிதியாண்டில் ரூ.1.00 கோடி நிருவாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிட்டுள்ளது. எனவே, பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காடு மீன் இறங்குதளத்தில் அலுவலகக் கட்டடம் மற்றும் கூட்ட அரங்கம் கட்டவும் பேவர் பிளாக் தளம் மற்றும் படகு நிறுத்தும் இடம் அமைப்பது குறித்த கருத்துரு தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

86—

கால்நடை மருத்துவமனைக்கு கட்டடம்

வினா எண் 9775—திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, கண்ணமநாயக்கனூர் ஊராட்சி, மலையாண்டிகவுண்டனூரில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, கண்ணமநாயக்கனூர் ஊராட்சி, மலையாண்டிகவுண்டனூரில் உள்ள கால்நடை மருந்தகம் 2013–2014 ஆம் நிதியாண்டில் நபார்டு ஆர்.ஐ.டி.எப்–19 திட்டத்தின்கீழ் கட்டடப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகிறது.

87—

கால்நடை ஆராய்ச்சி மையம் அமைத்தல்

வினா எண் 10151—திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டியில் கால்நடை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டியில் கால்நடை ஆராய்ச்சி மையம் அமைக்க அவசியம் ஏதும் தற்போது எழவில்லை.

88—

கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக ஆராய்ச்சி மையம்

வினா எண் 11958—திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, தா.பழூர் ஒன்றியத்தில் புதிய கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தா.பழூர் ஒன்றியம், ஜெயங்கொண்டம் தொகுதியில் புதிய கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் துவங்க அவசியம் ஏதும் தற்போது எழவில்லை.

89—

கால்நடைக் கிளை நிலையம் அமைத்தல்

வினா எண் 11963—திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்*

2023 ஜனவரி 11]

துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் ஒன்றியம், அய்யப்பநாயக்கன்பேட்டை கிராமத்தில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் ஒன்றியம், அய்யப்பநாயக்கன்பேட்டை கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

(ஆ) அரசு கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

90—

கால்நடைக் கிளை நிலையம் அமைத்தல்

வினா எண் 11964—திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஆண்டிமடம் ஒன்றியம், இலையூர் கிராமத்தில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஆண்டிமடம் ஒன்றியம், இலையூர் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியகூறுகள் உள்ளன.

(ஆ) அரசு கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

[2023 ஜனவரி 11

91—

கால்நடைக் கிளை நிலையம் அமைத்தல்

வினா எண் 11965—திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் ஒன்றியம், படநிலை கிராமத்தில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) *ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் ஒன்றியம், படநிலை கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.*

(ஆ) *அரசு கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.*

92—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 12150—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், கீழ்பாடி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, கீழ்பாடி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு

2023 ஜனவரி 11]

சாத்தியக்கூறுகள் இல்லை. ரிஷிவந்தியம் தொகுதி, கீழ்பாடி ஊராட்சியில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 2,433 மட்டுமே உள்ளதால், அங்கு புதிய கால்நடைக் கிளை நிலையம் துவக்கிடவும் சாத்தியக்கூறுகள் இல்லை.

93—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 12151—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், வடமாமாந்தூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, வடமாமாந்தூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. ரிஷிவந்தியம் தொகுதி, வடமாமாந்தூர் ஊராட்சியில் 2,622 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால், அங்கு கால்நடைக் கிளை நிலையம் துவக்கிடவும் சாத்தியக்கூறுகள் இல்லை.

94—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 12155—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், லா.கூடலூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, லா.கூடலூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. ரிஷிவந்தியம் தொகுதி, லா.கூடலூர் ஊராட்சியில் 5,346 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு முதற்கட்டமாக கால்நடைக் கிளை நிலையம் துவக்கிட சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, இது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

95—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 14468—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதிரவேலூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, மாதிரவேலூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதிரவேலூர் கிராமத்தில் 3,203 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால், அங்கு தற்போது செயல்பட்டுவரும் கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

96—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 17804—திரு. சீ. கதிரவன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

(அ) *மண்ணச்சநல்லூர் தொகுதி, முசிறி ஊராட்சி ஒன்றியம், அழூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, முசிறி ஊராட்சி ஒன்றியம், அழூர் கிராமம் பகுதியில் கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. மண்ணச்சநல்லூர் தொகுதி, அழூர் கிராமத்தில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000–க்கும் குறைவாக 1,959 அலகுகள் மட்டுமே உள்ளதால், அங்கு கால்நடைக் கிளை நிலையம் துவக்கிடவும் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, கால்நடை வளர்ப்போர் அருகிலுள்ள கால்நடை நிலையங்களின் சேவையை பயன்படுத்திக்கொள்ளலாம்.*

97—

குளிர்பதன சேமிப்புக் கிடங்கு

வினா எண் 17862—திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஸ்ரீவைகுண்டம் தொகுதி, பெரியதாழையில் மீன்களைப் பதப்படுத்த குளிர்பதன சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

பெரியதாழை மீனவக் கிராமத்தில் பாரம்பரிய நாட்டுப் படகுகளை மட்டுமே பயன்படுத்தி மீனவர்கள் மீன்பிடித்

தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். பெரியதாழை மீனவக் கிராமத்தில் 370 பதிவு செய்யப்பட்ட நாட்டுப் படகுகளைக் கொண்டு மீன்பிடித் தொழில் மேற்கொண்டு வருகின்றனர். பெரியதாழை மீனவர்கள் மீன்பிடிப்பு மேற்கொள்ளும் பகுதிகளில் அதிகமான அளவில் சாளை, அயிலை, பாறை போன்ற சிறிய வகை மீன்களே பிடிக்கப்பட்டு வருகின்றன. மேலும், மீனவர்கள் தினந்தோறும் மீன்பிடித் தொழிலுக்கு சென்று பிடிக்கப்படும் மீன்களை அன்றையதினமே விற்பனை செய்து வருகின்றனர். எனவே, பெரியதாழை மீனவக் கிராமத்தில் மீன்களைப் பதப்படுத்த குளிர்பதன சேமிப்புக் கிடங்கு அமைக்கும் நிலை எழாது.

98—

தரமுயர்த்துதல்

வினா எண் 17953—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, B. அக்ரஹாரம் பகுதியில் உள்ள கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, B. அக்ரஹாரம் பகுதியில் உள்ள கால்நடைக் கிளை நிலையம் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டு, 5–1–2012 முதல் செயல்பட்டு வருகிறது.

99—

முட்டை கிடங்கு

வினா எண் 18428—திரு. பெ. ராமலிங்கம்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்*

2023 ஜனவரி 11]

துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் தொகுதி, நாமக்கல்லில் குளிர்சாதன வசதிகளுடன் முட்டை கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது நாமக்கல் சட்டமன்றத் தொகுதியில் முட்டை சேமிப்பதற்கான குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கு வேளாண் வணிகத் துறையில் ODOP (One District One Product) *திட்டத்தின்கீழ் முட்டை சேமிப்பதற்கான குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கு மானியம்* (Backend Subsidy) *வழங்கப்பட்டு, நாமக்கல் மாவட்டம் முழுமையும் செயல்பட்டு வருகிறது.*

100—

கால்நடைக் கிளை நிலையம் அமைத்தல்

வினா எண் 28232—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பாலக்கோடு ஒன்றியம், மேக்னாம்பட்டி பகுதியில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பெண்ணாகரம் தொகுதி, பாலக்கோடு ஒன்றியம், மேக்னாம்பட்டி பகுதியில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியகூறுகள் உள்ளன.

(ஆ) அரசின் செயல் திட்டம் இடம்பெறும்பொழுது பரிசீலிக்கப்படும்.

101—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 52583—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *மன்னார்குடி வட்டம், கர்ணாவூர் கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில் எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) *மன்னார்குடி வட்டம், கர்ணாவூர் கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

(ஆ) *கேள்வி எழாது.*

102—

அரிசி குடும்ப அட்டை

வினா எண் 444—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *சர்க்கரை குடும்ப அட்டைகளை அரிசி குடும்ப அட்டையாக மாற்றித்தர அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *கடந்த 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் அரசால் சர்க்கரை குடும்ப அட்டையினை அரிசி குடும்ப*

2023 ஜனவரி 11]

அட்டையாக மாற்றிட ஆணை பிறப்பிக்கப்பட்டு, 2019 ஆம் ஆண்டில் 4,51,614 சர்க்கரை குடும்ப அட்டைகளும், 2020 ஆம் ஆண்டில் 1,96,532 சர்க்கரை குடும்ப அட்டைகளும், ஆக மொத்தம் 6,48,146 சர்க்கரை குடும்ப அட்டைகள் அரிசி குடும்ப அட்டைகளாக மாற்றப்பட்டன. சர்க்கரை குடும்ப அட்டையினை அரிசி குடும்ப அட்டையாக மாற்றுவது அரசின் கொள்கை முடிவாகும்.

103—

நெல் கொள்முதல் நிலையம்

வினா எண் 450—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், நரிக்குடி ஊராட்சி, நரிக்குடி கிராமத்தில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியத்தில், நரிக்குடி கிராமத்தில் நடப்பு காரீப் பருவம் KMS *2020–2021–ல் சம்பா பருவத்திற்கு தற்காலிக நேரடி நெல் கொள்முதல் நிலையம் 3–2–2021–ல் திறக்கப்பட்டு 22–3–2021 வரை செயல்பட்டது. மீண்டும், குறுவை பருவத்திற்கு 14–7–2021 அன்று நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு, 27–7–2021 வரை 825 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 245 விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள். கொள்முதல் செய்யப்பட்ட நெல்லுக்கான தொகை ரூ.1,59,21,900/– விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டது.*

104—

அமுதம் அங்காடிமூலம் பொருட்கள் வழங்குதல்

வினா எண் 1342—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதியில் நடமாடும் அமுதம் பல்பொருள் அங்காடிமூலம் பொருட்களை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அமுதம் பல்பொருள் அங்காடிகள்மூலம் சுமார் 700 வகையான மளிகை மற்றும் மளிகை அல்லாத பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. ஆதலால், அனைத்துப் பொருள்களையும் நடமாடும் வாகனங்களில் வைத்து விற்பனை செய்ய வழிவகை இல்லை.

105—

அத்தியாவசியப் பொருட்களை வீட்டிற்கே சென்று வழங்குதல்

வினா எண் 4131—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உணவுப் பொருட்களை பயனாளிகளின் வீட்டிற்கே சென்று வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குடும்ப அட்டைதாரர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே பெரும்பாலான நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் குடும்ப அட்டைதாரர்கள் வெகுதொலைவில் சென்று பொருட்கள் வாங்க வேண்டிய அவசியமில்லை. மேலும், குடும்ப அட்டைதாரர்கள் 1.5 கிலோ மீட்டருக்கு மேல் சென்று பொருட்கள் வாங்கும் சூழ்நிலை இல்லாத வகையில் புதிய நியாய விலைக் கடைகளைத் திறக்க அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. மேலும், 'ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை' திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் விரல்ரேகை படிப்பிமூலம் வழங்கப்பட்டு வருவதால் குடும்ப அட்டைதாரர்கள் அவர்களுக்குண்டான நியாய விலைக் கடை மட்டுமல்லாமல் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் எவ்வித முகவரி மாற்றமின்றி அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாவசியப் பொருட்கள் எவ்வித புகாருக்கும் இடமின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆகவே, உணவுப் பொருட்களைப் பயனாளிகளின் வீட்டிற்கே சென்று வழங்க அவசியம் எழவில்லை.

106—

அத்தியாவசியப் பொருட்களை வீட்டிற்கே சென்று வழங்குதல்

வினா எண் 5594—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் குடும்ப அட்டைதாரருக்கு அவர்களது வீட்டிற்கே சென்று மாதாந்திர பொருட்கள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குடும்ப அட்டைதாரர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே பெரும்பாலான நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் குடும்ப அட்டைதாரர்கள் வெகுதொலைவில் சென்று பொருட்கள் வாங்க வேண்டிய அவசியமில்லை. மேலும், குடும்ப அட்டைதாரர்கள் 1.5 கிலோ மீட்டருக்கு மேல் சென்று பொருட்கள் வாங்கும் சூழ்நிலை இல்லாத வகையில் புதிய நியாய விலைக் கடைகளைத் திறக்க அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. மேலும், 'ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை' திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் விரல்ரேகை படிப்பிமூலம் வழங்கப்பட்டு வருவதால் குடும்ப அட்டைதாரர்கள் அவர்களுக்குண்டான நியாய விலைக் கடை மட்டுமல்லாமல் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் எவ்வித முகவரி மாற்றமின்றி அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம். பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாவசியப் பொருட்கள் எவ்வித புகாருக்கும் இடமின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, தமிழகத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்களது வீட்டிற்கே சென்று மாதாந்திர பொருட்கள் வழங்கும் அவசியம் எழவில்லை.

107—

பயோமெட்ரிக் முறை நிறுத்துதல்

வினா எண் 12815—திரு. A.P. ஜெயசங்கரன்: மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நியாய விலைக் கடைகளில் உள்ள பயோமெட்ரிக் சிஸ்டத்தை கொரோனா முடியும் வரை நிறுத்தி வைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

கொரோனா நோய்த் தொற்று பரவுவதை தடுக்க, அரசின் நிலையான வழிகாட்டுதலின்படி, நியாய விலைக்

2023 ஜனவரி 11]

கடைகளில் சமூக இடைவெளி கடைபிடிக்கப்பட்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு கை சுத்திகரிப்பானைப் பயன்படுத்தி, கைவிரல்ரேகை பதிவின் மூலமாக இன்றியமையாப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் பயோமெட்ரிக் முறையை நிறுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

108—

பூங்காவைச் சீரமைத்தல்

வினா எண் 14327—முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகம் முழுவதும் நியாயவிலைக் கடைகளில் பொருட்கள் வாங்குவதற்கு கைரேகை வைத்து பதிவு செய்யும் நடைமுறைக்கு மாற்றாக வேறு ஏதேனும் சிறந்த முறைகளை பயன்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013–ன் வழிகாட்டுதலின்படி, தமிழகத்தில் பொது விநியோகத் திட்டம் முழுவதும் கணிணிமயமாக்கப்பட்டு மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. குடும்ப அட்டைதாரர்களின் ஆதார் எண் பதிவு செய்யப்பட்ட மின்னணு குடும்ப அட்டைமூலம் கைரேகை பதிவினைக் கொண்டு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. மேலும், கைரேகை பதிவு முறை சிறப்பாக செயல்படுத்தப்படுவதால், வேறு நடைமுறைகளை பயன்படுத்தி அத்தியாவசியப் பொருட்கள் வழங்குவது குறித்து தற்போது பரிசீலனை ஏதுமில்லை.

109—

உயர்மின் கோபுரங்கள்

வினா எண் 175—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

விவசாயிகளின் விளைநிலங்களில் உயர்மின் கோபுரங்களை அமைக்காமல் மாற்று வழியில் செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

பெரும்பாலும் எல்லா மின்பாதை அமைக்கும் பணிகளும் முடிந்தவரை அரசு புறம்போக்கு நிலங்களின் வழியாகவே எடுத்து செல்லப்பட்டு வருகிறது. தவிர்க்க முடியாத இடங்களில் மட்டும்தான் விவசாய நிலங்கள் வழியாக எடுத்து செல்ல வேண்டியுள்ளது.

மாற்று வழி இருக்கும்பட்சத்தில் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம்மூலம் கண்டிப்பாக மாற்று வழியில் மின்பாதையைக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும்.

110—

மின் உபகோட்டம்

வினா எண் 176—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பாபநாசம் தொகுதி, சாலியமங்கலத்தைத் தலைமையிடமாகக்கொண்ட மின்கோட்டத்தை ஏற்படுத்தி, அதன்கீழ் சாலியமங்கலம், பாபநாசம், சூரக்கோட்டை பகுதிகளில் மின் உபகோட்டத்தை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

பாபநாசம் தொகுதி, சாலியமங்கலத்தைத் தலைமையிடமாகக்கொண்ட மின்கோட்டத்தை ஏற்படுத்தி, அதன்கீழ் சாலியமங்கலம், பாபநாசம், சூரக்கோட்டை பகுதிகளில் மின் உபகோட்டத்தை ஏற்படுத்திட தற்போது திட்டம் ஏதும் இல்லை.

2023 ஜனவரி 11]

111—

துணை மின் நிலையம்

வினா எண் 380—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஆராஞ்சி கிராமத்தில் உள்ள துணை மின் நிலையத்தை 110 KV திறன்கொண்ட துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம் ஆராஞ்சி கிராமத்தில் உள்ள சோமாசிபாடி துணை மின் நிலையத்தை 110 கி.வோ. திறன்கொண்ட துணை மின் நிலையமாக தரம் உயர்த்த அவசியம் தற்பொழுது எழவில்லை.

112—

மின்மாற்றி

வினா எண் 416—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாநகராட்சி, 44–வது வார்டு, கோம்பை தோட்டம் பிரதான வீதியில் பழுதடைந்துள்ள மின்மாற்றிக்கு மாற்றாக அதிக திறன் கொண்ட புதிய மின்மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாநகராட்சி, 44–வது வார்டு, கோம்பை தோட்டம் பகுதிக்கு 1.3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள 33/11 கி.வோ. குமரன் சாலை துணை மின் நிலையத்திலிருந்து 11 கே.வி. கோம்பை தோட்டம் மின்னூட்டிமூலம் மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. இத்துணை மின் நிலையத்தின் மொத்த உச்ச மின்பளு 15.146 எம்.வி.ஏ. ஆகும்.

கோம்பை தோட்டம் பகுதிக்கு பிரதான சாலையில் அமைந்துள்ள கோம்பை தோட்டம் SS–II 250 கே.வி.ஏ. மின்மாற்றிமூலம் 471 மின் இணைப்புகளுக்கு (வீடுகள்–330, வணிகம்–61 மற்றும் தொழிற்சாலை–15 மற்றும் தற்காலிக மின் இணைப்புகள்–5) சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. இம்மின்மாற்றியில் இணைக்கப்பட்டிருக்கும் மின்பளு 164 கே.வி.ஏ. ஆகும்.

மேற்கண்ட மின்மாற்றிமூலம் கோம்பை தோட்டம் பகுதிக்கு சீரான மின்னழுத்தத்தில் மின் விநியோகம் வழங்கப்பட்டு வருவதாலும் அம்மின்மாற்றி நல்ல முறையில் இயங்கி வருவதாலும் அப்பகுதிக்கு அதிக திறன்கொண்ட புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

113—

துணை மின் நிலையம்

வினா எண் 682—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி நகராட்சியில் புதிய துணை மின்நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதி, பெருவங்கூர் கிராமத்தில் பெருவங்கூர் 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2023 ஜனவரி 11]

114—

புதிய கட்டடம்

வினா எண் 684—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சியில் உள்ள தமிழ்நாடு மின்சார கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்திற்குப் புதியதாகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சியில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்திற்குப் புதியதாகக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

115—

புதைவடம்

வினா எண் 1704—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நால்ரோடு முதல் தாராசுரம் அண்ணா மார்க்கெட் வரை மின்கம்பிகளைப் பூமிக்கு அடியில் புதைவடங்களாக மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நால்ரோடு முதல் தாராசுரம் அண்ணா மார்க்கெட் வரை உள்ள பகுதியில் மின் கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றிட தற்போது திட்டம் எதுவும் இல்லை.

[2023 ஜனவரி 11

116—

மின் பாதை அமைத்தல்

வினா எண் 1810—திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், ஜவ்வாதுமலை போளூர் துணை மின்நிலையத்திலிருந்து மின் விநியோகம் செய்வதற்கு வனத் துறை பகுதியில் மின் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், ஜவ்வாதுமலை போளூர் துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் செய்வதற்கு வனத் துறை பகுதியில் மின் பாதை அமைக்க அரசு ஆவன செய்யும்.

117—

மின்மாற்றி

வினா எண் 3679—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், நெற்குன்றம் ஊராட்சி, மேட்டு சூரப்பட்டு பகுதியில் பழுதடைந்துள்ள மின்மாற்றிக்கு மாற்றாக புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், நெற்குன்றம் ஊராட்சி, மேட்டு சூரப்பட்டு பகுதிக்கு அல்லிமேடு

2023 ஜனவரி 11]

SS–I *100* கே.வி.ஏ. மின்மாற்றிமூலம் மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. மேட்டு சூரப்பட்டு பகுதியை கள ஆய்வு செய்ததில் ஏற்கெனவே உள்ள மின்மாற்றியில் பழுது ஏதும் இல்லை. எனவே, பழுதடைந்துள்ள மின்மாற்றிக்கு மாற்றாக புதிய மின்மாற்றி அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

118—

மின்மாற்றி

வினா எண் 3680—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், நெற்குன்றம் ஊராட்சியில் உள்ள மின்மாற்றிக்கு மாற்றாக கூடுதல் திறன் கொண்ட மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், நெற்குன்றம் ஊராட்சியில் ஏரிக்கரைக்கு அருகில் நெற்குன்றம் SS–I *100 கே.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிமூலம் 73 மின்னிணைப்புகளுக்கு (வீடு–64, வணிகம்–5, விவசாயம்–3 மற்றும் தொழிற்சாலை–1) சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இம்மின்மாற்றியில் இணைக்கப்பட்டிருக்கும் மின்பளு 75 கே.வி.ஏ. ஆகும். எனவே, இந்த மின்மாற்றிக்கு மாற்றாக கூடுதல் திறன்கொண்ட மின்மாற்றி அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.*

119—

துணை மின் நிலையம்

வினா எண் 3743—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

(அ) திருவையாறு தொகுதி, பெரமூர் அல்லது வில்லியநல்லூரில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, பெரமூர் பகுதியில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு தேவையான நிலம் கண்டறியப்பட்டு, கையகப்படுத்தப்பட்டவுடன் புதிய துணை மின் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

120—

துணை மின் நிலையம்

வினா எண் 4282—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், கடங்கனேரி ஊராட்சி, வெங்கடேஸ்வரபுரம் கிராமத்தில் உப மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம் தொகுதியில் உள்ள வெங்கடேஸ்வரபுரம் கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டு, நிலம் கண்டறியப்பட்டு வருகிறது. நிலம் கண்டறியப்பட்டு கையகப்படுத்தப்பட்டபின், மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

2023 ஜனவரி 11]

121—

துணை மின் நிலையம்

வினா எண் 6735—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், புச்சிரெட்டிபள்ளியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், புச்சிரெட்டிபள்ளி பகுதிக்கு மின் தேவையைப் பூர்த்தி செய்ய கே.ஜி கண்டிகை 110/33/11 கி.வோ. துணை மின் நிலையமே போதுமானதாகும். எனவே, புச்சிரெட்டிபள்ளி பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

122—

துணை மின் நிலையம்

வினா எண் 6737—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டம், மேளப்பூடி ஊராட்சியில் உள்ள 33 KV துணை மின்நிலையத்தை 110 KV திறன்கொண்ட துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இப்பகுதியின் மின் தேவையைப் பூர்த்தி செய்ய மேளப்பூடி 33/11 கி.வோ. துணை மின் நிலையமே போதுமானதாக உள்ளதால், இத்துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்த தற்பொழுது அவசியம் ஏற்படவில்லை.

123—

விசைத்தறித் தொழிலைப் பாதுகாக்கத் திட்டம்

வினா எண் 424—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூரில் விசைத்தறியாளர்களின் ஊதியம் மற்றும் விசைத்தறித் தொழிலைப் பாதுகாக்கக் கொள்கை ரீதியான திட்டம் வகுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் சரகத்தில் செயல்பட்டுவரும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் அரசின் சீருடை வழங்கும் திட்டம் மற்றும் வேட்டி மற்றும் சேலை வழங்கும் திட்டங்களின்கீழ் துணி இரகங்களை உற்பத்தி செய்துவரும் நெசவாளர்களுக்கு அரசு நிர்ணயம் செய்துள்ள நெசவுக் கூலி முழுமையாக வழங்கப்பட்டு வருகின்றது.

திருப்பூர் மற்றும் சோமனூர் பகுதிகளில் கூலிக்கு நெசவு செய்யும் தனியார் நெசவாளர்களுக்கு 40 X 40S காடா துணி இரகத்திற்கு ஓர் ஊடை இழைக்கு 7 பைசா வீதமும், 40 X 30S,

2023 ஜனவரி 11]

30 x 30s மற்றும் 20 x 20s ஓர் ஊடை இழைக்கு 6.5 பைசா வீதமும் விசைத்தறி உரிமையாளர்களால் கூலியாக வழங்கப்பட்டு வருகின்றது.

விசைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திடும் பொருட்டு விசைத்தறி ஒன்றுக்கு 750 அலகுகள் (Units) வரை இரு மாதங்களுக்கு இலவச மின்சாரம் அரசால் வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் திருப்பூர் மாவட்டத்தில் 13,029 விசைத்தறியாளர்கள் பயனடைந்துள்ளனர். அரசு இலவச மின்சாரம் வழங்கி வருவதால் 750 அலகுகள் (Units) வரையிலான மின்சார உபயோகத்திற்கான கட்டணத் தொகை அவர்களின் வருமானமாக நிலைநிறுத்தப்பட்டு வருகிறது.

124—

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

வினா எண் 1645—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, ஆரணி பேரூராட்சியில் கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் சரகம், பொன்னேரி தொகுதி, ஆரணி பேரூராட்சியில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க பதிவு செய்வது தொடர்பாக உரிய படிவத்தில் தேவையான ஆவணங்கள் மற்றும் பதிவுக் கட்டணத்துடன் விண்ணப்பிக்கும்பட்சத்தில் விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு, 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின்படி தகுதியின் அடிப்படையில் புதிய கைத்தறி சங்கம் துவங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஜனவரி 11

125—

ஜவுளிப் பூங்கா

வினா எண் 1663—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் பகுதியில், ஜவுளிப் பூங்கா அமைத்திட இதுவரை தொழில் முதலீட்டாளர்களிடமிருந்து கோரிக்கை ஏதும் பெறப்படாததால், இப்பொருள் தொடர்பான முன்மொழிவு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

ஜவுளிப் பூங்கா அமைக்க அப்பகுதியிலுள்ள தொழில்முனைவோர்கள் முன்வருவார்களேயானால் அவர்களிடமிருந்து பிரேரணை பெறப்பட்டு உரிய பரிசீலனைக்குப் பின் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்ட வழிகாட்டுதலின்படி பரிசீலித்து ஜவுளிப் பூங்கா அல்லது சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

126—

ஜவுளிப் பூங்கா

வினா எண் 1899—திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் கைத்தறி ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை பகுதியில் கைத்தறி ஜவுளிப் பூங்கா அமைத்திட இதுவரை தொழில் முதலீட்டாளர்களிடமிருந்து கோரிக்கை ஏதும் பெறப்படாததால், இப்பொருள் தொடர்பான முன்மொழிவு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை. ஜவுளிப் பூங்கா அமைக்க அப்பகுதியிலுள்ள தொழில்முனைவோர்கள் முன்வருவார்களேயானால் அவர்களிடமிருந்து பிரேரணை பெறப்பட்டு, உரிய பரிசீலனைக்குப்பின் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்ட வழிகாட்டுதலின்படி பரிசீலித்து ஜவுளிப் பூங்கா அல்லது சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

127—

ஜவுளிப் பூங்கா

வினா எண் 39004—திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதியில் உள்ள பனப்பாக்கம், திருமால்பூர், சோளிங்கர் ஆகிய பகுதிகளில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பனப்பாக்கம், திருமால்பூர் மற்றும் சோளிங்கர் ஆகிய பகுதிகளில் தற்சமயம் ஜவுளிப் பூங்கா அமைத்திட இதுவரை தொழில் முதலீட்டாளர்களிடமிருந்து கோரிக்கை ஏதும் பெறப்படாததால், இப்பொருள் தொடர்பான முன்மொழிவு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2023 ஜனவரி 11

128—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 194—திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதியில் புதிய மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவது என்பது மாநில அரசின் கொள்கை முடிவாகும். தமிழக அரசால் மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் மத்திய அரசின் நிதியுதவித் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் மாவட்டங்களில் புதியதாக 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் மத்திய மாநில அரசுகளின் பங்கீட்டின்படி, இராமநாதபுரம், விருதுநகர், நீலகிரி, திண்டுக்கல், திருப்பூர், நாமக்கல், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், கள்ளக்குறிச்சி மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களில் 2021–2022 ஆம் கல்வியாண்டு முதல் மாணவர் சேர்க்கை துவங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வரசாணைகள்மூலம் தலா 150 எம்.பி.பி.எஸ். மாணவர் வீதம் 11 புதிய மருத்துவக் கல்லூரிகளில் மொத்தம் 1,650 இடங்கள் மாணவர்களின் சேர்க்கைக்கு வழிவகுக்கும்.

மேலும், இனிவரும் ஆண்டுகளில் மருத்துவக் கல்லூரி இல்லாத தென்காசி மாவட்டம் உட்பட எஞ்சிய மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு படிப்படியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

2023 ஜனவரி 11]

129—

புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம்

வினா எண் 205—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பாபநாசம் தொகுதி, வீரமாங்குடியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பழுதடைந்துள்ள புறநோயாளிகள் பிரிவுக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் ஊராட்சி ஒன்றியத்தில், வீரமாங்குடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. வீரமாங்குடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் பழுதடைந்துள்ளது. வீரமாங்குடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டட பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பட்டியல் கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பட்டியல் பெறப்பட்டவுடன் முன்னுரிமை அடிப்படையில் வீரமாங்குடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டட பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

130—

தொற்றா நோய்ச் சிகிச்சைப் பிரிவு

வினா எண் 234—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்போரூர் தொகுதியில் உள்ள திருப்போரூர், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம் அரசு மருத்துவமனைகளில் சர்க்கரை மற்றும் இரத்த அழுத்த நோய்களுக்கான சிகிச்சைக்குத் தனிப் பிரிவு ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 ஜனவரி 11*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்போரூர் தொகுதியில் உள்ள திருப்போரூர், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம் அரசு மருத்துவமனைகளுக்கு வரும் சர்க்கரை மற்றும் இரத்த அழுத்த நோயாளிகளின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகவே உள்ளது. தொற்றா நோயினால் பாதித்தவர்கள் பயன் பெற வேண்டும் என்பதைக் கருத்தில்கொண்டு மருத்துவமனைகளில் உள்ள மொத்தப் படுக்கைகளில் 4,812 படுக்கைகள் முறையே மாமல்லபுரம் (12), திருக்கழுக்குன்றம் (37), திருப்போரூர் (60) ஆகியவற்றில் தொற்றா நோய்ச் சிகிச்சைக்காகப் படுக்கைகள் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

131—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 297—திரு. சு. ரவி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், தணிகைபோளூர் கிராமத்தில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் துவக்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. தணிகைபோளூர்

2023 ஜனவரி 11]

கிராமத்தின் மக்கள்தொகை 7,840 ஆகும். இவ்வூராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. தணிகைபோளூர் கிராமத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் அரக்கோணம் அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. தணிகைபோளூர் கிராமம் அரக்கோணம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள் தொகை 1,47,500 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்களும், ஒரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகின்றன. எனவே, ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தணிகைபோளூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

132—

மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 298—திரு. சு. ரவி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், குருவராஜப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு முன் முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் ஊராட்சி ஒன்றியத்தில் குருவராஜப்பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அரசு ஆணை (நிலை) எண் 52, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 21–2–2014–ன்படி அரக்கோணம் ஊராட்சி ஒன்றியத்தில் மூதூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம்

[2023 ஜனவரி 11

உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குருவராஜப்பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகள்கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

133—

வட்டப் பொது மருத்துவமனை

வினா எண் 314—திரு. ம. சிந்தனை செல்வன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கடலூர் மாவட்டம், திருமுட்டம்* (Shrimushnam) *பேரூரில் செயல்படும் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்ட பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *கடலூர் மாவட்டம், திருமுட்டம்* (Shrimushnam) *2017–ல் வருவாய்த் துறையினரால் புதிய தாலுகாவாக அறிவிக்கப்பட்டது. இதற்கிணங்க திருமுட்டம்* (Shrimushnam) *பேரூரில் 30 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டுவரும் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 60 படுக்கை வசதிகள் கொண்ட வட்டப் பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும்பொருட்டு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.*

134—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 318—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

(அ) பண்ருட்டி தொகுதி, சேமக்கோட்டை ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. சேமக்கோட்டை கிராம மக்கள்தொகை 7,304 ஆகும். இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. சேமக்கோட்டை கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் மனம்தவிழ்ந்தபுதூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது. மேலும், இவ்வூராட்சி ஒன்றியத்தில் பண்ருட்டி நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள்தொகை 1,72,224 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. எனவே, கடலூர் மாவட்டம் பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சேமக்கோட்டை ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

135—

சுற்றுச்சுவர்

வினா எண் 455—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், பேரையூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பேரையூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் இல்லை. பேரையூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் அமைக்க பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பட்டியல் கோரப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு சுற்றுச்சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

136—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 534—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், தென்பரை ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. தென்பரை ஊராட்சியின் மக்கள்தொகை 4,364 ஆகும். இவ்வூராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஜனவரி 11]

வருகிறது. இத்துணை சுகாதார நிலையம் திருமக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்தது. தென்பரை ஊராட்சி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள்தொகை 1,16,084 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில், திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தென்பரை ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

137—

மருத்துவமனை நுழைவுப் பகுதி விரிவாக்கம்

வினா எண் 607—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தாம்பரம் சானடோரியம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையின் நுழைவுப் பகுதியை விரிவுபடுத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தாம்பரம் சானடோரியம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையின் நுழைவுப் பகுதி புதிய மாநில அளவிலான நோய்த் தொற்றுத் தடுப்பு மையத்தை அமைக்கும்போது விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

138—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 659—திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

(அ) தென்காசி தொகுதி, சுரண்டையில் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் சுரண்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. 30 படுக்கைகள்கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாத ஊராட்சி ஒன்றியத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினைத் தரம் உயர்த்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 320, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப (P2) நலத் துறை, நாள் 29–9–2003, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் பாவூர்சத்திரம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அரசாணை (நிலை) எண் 142, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 30–4–2007–ன்படி அரியப்பபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றன. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சுரண்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள்கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

139—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 1282—திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சின்னசேலம் ஒன்றியம், நல்லாத்தூர் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. நல்லாத்தூர் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. நல்லாத்தூர் ஊராட்சி, சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் 6 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், நல்லாத்தூர் கிராமத்திலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் கச்சிராயப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையமும், கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன. எனவே, கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், நல்லாத்தூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

140—

புதிய கட்டடம்

வினா எண் 1316—திரு. சு. ரவி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், பெருமாள்ராஜப்பேட்டை ஊராட்சி, பெருமாள்ராஜப்பேட்டை துணை சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 ஜனவரி 11*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் ஊராட்சி ஒன்றியத்தில் மின்னல் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் பெருமாள்ராஜப்பேட்டை துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

பெருமாள்ராஜப்பேட்டை துணை சுகாதார நிலைய சொந்தக் கட்டடம் சிறிய அளவிலான பழுது பார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. பெருமாள்ராஜப்பேட்டை துணை சுகாதார நிலையக் கட்டடம் பழுது பார்ப்புப் பணிகள் மேற்கொள்ள பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பட்டியல் கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பட்டியல் பெறப்பட்டவுடன் முன்னுரிமை அடிப்படையில் பெருமாள்ராஜப்பேட்டை துணை சுகாதார நிலையக் கட்டடப் பழுது பார்ப்புப் பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

141—

மருத்துவமனையை மேம்படுத்துதல்

வினா எண் 1319—திரு. சு. ரவி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் அரசு பொது மருத்துவமனையில் Digital X–ray, CT Scan, *வென்டிலேட்டர் வசதி செய்ய அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் அரசு பொது மருத்துவமனை

2023 ஜனவரி 11]

186 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 1,652 வெளிநோயாளிகளும், 139 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். தற்சமயம் இம்மருத்துவமனையில் 3 வென்டிலேட்டர் மற்றும் எக்ஸ்ரே கருவிகள் மக்களின் பயன்பாட்டில் உள்ளன. மாதமொன்றுக்கு சராசரியாக 351 எக்ஸ்ரே எடுக்கப்பட்டு வருகிறது. சிடி–ஸ்கேன் கருவி தேவைப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை தற்போது மிக மிக குறைவாகவே உள்ளதால் தேவைப்படும் நோயாளிகள் இம்மருத்துவமனைக்கு அருகில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் பரிந்துரைக்கப்படுகின்றனர். நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப புதிய சிடி–ஸ்கேன் கருவி அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

142—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 1323—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, சிட்லபாக்கம் பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. சிட்லபாக்கம் பேரூராட்சியில் சிட்லபாக்கம்–1 மற்றும் சிட்லபாக்கம்–2 ஆகிய

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஜனவரி 11

இரண்டு துணை சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்துணை சுகாதார நிலையங்கள் பீர்க்கன்கரணை ஆரம்ப சுகாதார நிலையத்தை சார்ந்தது. சிட்லபாக்கம் பேரூராட்சி புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் 8 ஆரம்ப சுகாதார நிலையங்களும் 2 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், சிட்லபாக்கம் பேரூராட்சியிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் மேடவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையமும், சிட்லபாக்கம்–1–ல் அம்மா மினி கிளினிக்கும் செயல்பட்டு வருகின்றன. எனவே, செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம், சிட்லபாக்கம் பேரூராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

143—

கட்டடம் கட்டுதல்

வினா எண் 2360—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, சோழபுரம் அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தில் சோழபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

அரசாணை (நிலை) எண் 98, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 8–3–2019–ன்படி சோழபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புறநோயாளிகள் பிரிவு கட்டடம், தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் ரூ.60.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் கட்டி முடிக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

2023 ஜனவரி 11]

144—

தனி வார்டு அமைத்தல்

வினா எண் 2949—திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் கண் அறுவை சிகிச்சை அரங்கத்துடன்கூடிய தனி வார்டு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனை 440 படுக்கை வசதிகள் மற்றும் பல்வேறு சிறப்பு பிரிவுகளுடன் செயல்பட்டு வருகின்றது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 1,503 வெளிநோயாளிகளும், 283 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனையில் உள்ள சீமாங் கட்டடத்தின் முதல் தளத்தில், கண் சிகிச்சை பிரிவிற்கென தனியே, கண் அறுவை சிகிச்சை அரங்கமும், 10 படுக்கைகளுடன்கூடிய கண் அறுவை சிகிச்சைக்கு பின் கவனிப்பு பகுதியும் ஏற்படுத்தப்பட்டு தற்போது சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் மாதமொன்றுக்கு சராசரியாக 130 கண் அறுவை சிகிச்சைகள் நடைபெற்று வருகின்றன. திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் கண் சிகிச்சை பிரிவு, கண் அறுவை சிகிச்சை அரங்கத்துடன்கூடிய கண் சிகிச்சைக்காக தனி வார்டாக செயல்பட்டு வருகின்றது.

145—

செவிலியர் பயிற்சிப் பள்ளி துவக்குதல்

வினா எண் 2951—திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் அரசு மருத்துவமனையினை மையமாகக் கொண்டு அரசு செவிலியர் பயிற்சி பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதியிலிருந்து 88 கி.மீ. தொலைவிலுள்ள வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு வேலூர் மருத்துவக் கல்லூரியில் 100 இருக்கைகளுடன் அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளி செயல்பட்டு வருகிறது. மேலும், அதன் அருகாமை மாவட்டமான காஞ்சிபுரத்தில் இணை இயக்குநர் வளாகத்தில் 50 இருக்கைகளுடன் செவிலியர் பயிற்சிப் பள்ளி செயல்பட்டு வருகிறது. எனவே, திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் அரசு மருத்துவமனையினை மையமாகக் கொண்டு அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளி துவங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

146—

மருத்துவமனையைத் தரமுயர்த்துதல்

வினா எண் 2952—திரு. A. நல்லதம்பி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் மாவட்டம், ஆண்டியப்பனூர் மருத்துவ வட்டாரம், கதிரம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தினை 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் கதிரம்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. 30 படுக்கைகள் கொண்ட,

2023 ஜனவரி 11]

ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாத ஊராட்சி ஒன்றியத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை தரம் உயர்த்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 142, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 30–4–2007–ன்படி திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆண்டியப்பனூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையமும், அரசாணை (நிலை) எண் 52, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 21–2–2014–ன்படி திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள புதூர்நாடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும் ஏற்கெனவே 30 படுக்கை வசதிகளுடன்கூடிய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. எனவே, கதிரம்பட்டி கூடுதல் சுகாதார நிலையத்தினை தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

147—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 2954—திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் பகுதியில் மருத்துவக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவது என்பது மாநில அரசின் கொள்கை முடிவாகும். தமிழக அரசால் மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் மத்திய அரசின் நிதியுதவி திட்டத்தின்கீழ் புதியதாக 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் மத்திய மாநில அரசின் பங்கீட்டின்படி இராமநாதபுரம், விருதுநகர், நீலகிரி, திண்டுக்கல், திருப்பூர், நாமக்கல், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி,

திருவள்ளூர், கள்ளக்குறிச்சி மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களில் 2021–2022 ஆம் கல்வியாண்டு முதல் மாணவர் சேர்க்கை தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், வரும் ஆண்டுகளில் மருத்துவக் கல்லூரி இல்லாத திருப்பத்தூர் மாவட்டம் உட்பட எஞ்சிய மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு படிப்படியாக விதிகளின்படி ஆய்வு மேற்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

148—

கட்டடம்

வினா எண் 2974—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி மருத்துவமனைக்கு விபத்து மற்றும் தீவிர சிகிச்சைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் 8 படுக்கை வசதிகளுடன்கூடிய தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் அவசர பிரிவு ஆகியவை செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 5 நபர்கள் மட்டுமே விபத்து சிகிச்சைக்காக வருகின்றனர். இவர்களுக்கு சிறப்பாக சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தற்போது திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் விபத்து மற்றும் தீவிர சிகிச்சைக்கு புதிய கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

149—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 2978—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. கோட்டூர் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. கோட்டூர் கிராமம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், கோட்டூர் கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் ஆதிச்சபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும், 7 கிலோ மீட்டர் தொலைவில் விளக்குடி ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகின்றன. எனவே, திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், கோட்டூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

150—

அவசரகால ஊர்தி வழங்குதல்

வினா எண் 2989—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, களப்பால் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அவசரகால ஊர்தி வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, களப்பால் ஊராட்சியை பொறுத்தவரை மொத்தம் 6 அவசரகால

[*2023 ஜனவரி 11*

108 ஆம்புலன்ஸ் ஊர்திகள் சேவை வழங்கி வருகின்றன. அழைப்பு பெறப்பட்டவுடன் 15 முதல் 20 நிமிடத்திற்குள் 108 அவசரகால ஊர்தியானது அழைப்பு பெறப்பட்ட இடத்திற்கு தற்போது சென்றடைகின்றன.

பட்டியல்-7

1—

மருத்துவ வளாகக் கட்டடம்

வினா எண் 2992—திரு. சு. ரவி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரில் உள்ள பொது மருத்துவமனைக்கு ஒருங்கிணைந்த மருத்துவ வளாகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் அரசு பொது மருத்துவமனை 186 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனை வெளிநோயாளிகள் பிரிவு, உள்நோயாளிகள் பிரிவு, மகப்பேறு பிரிவு, பச்சிளங்குழந்தைகள் பிரிவு, மருந்தகப் பிரிவு, சித்தா பிரிவு, ஹோமியோபதி பிரிவு, யோகா பிரிவு, பல்மருத்துவ பிரிவு, அறுவை அரங்கத்துடன்கூடிய கண் சிகிச்சைப் பிரிவு, தொழுநோய், அம்மா காப்பீடு வார்டு, காலரா வார்டு, இரத்த வங்கி, விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, நவீன சமையல் அறை போன்ற பல பிரிவுகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. காய்ச்சல், வெளிநோயாளிகள் பிரிவு மற்றும் கொரோனா பரிசோதனை பிரிவு ஆகியவை தனி கட்டடத்திலும், மகப்பேறு தொடர்பான பிரிவுகள் தனிக் கட்டடத்திலும், கண் சிகிச்சை தொடர்பான பிரிவுகள் தனிக் கட்டடத்திலும், அறுவை

2023 ஜனவரி 11]

அரங்கு ஒரு கட்டடத்திலும், இரத்த தானம் மற்றும் சேகரித்த இரத்தத்தினை சேமிப்பதற்கு வசதியாக இரத்த வங்கி தனிக் கட்டடத்திலும் என நோயாளிகளின் வசதி மற்றும் நலனைக் கருத்தில்கொண்டும் பல்வேறு பிரிவுகள் அதற்கேற்ற தனித்தனிக் கட்டடங்களில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. எனவே, அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரில் உள்ள பொது மருத்துவமனைக்கு ஒருங்கிணைந்த மருத்துவ வளாகக் கட்டடம் கட்ட தற்சமயம் அவசியம் எழவில்லை.

2—

மருத்துவக் கல்லூரி துவங்குதல்

வினா எண் 2999—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மயிலாடுதுறை மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவது என்பது மாநில அரசின் கொள்கை முடிவாகும். தமிழக அரசானது மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதனடிப்படையில் மத்திய அரசின் நிதியுதவி திட்டத்தின்கீழ் மத்திய மாநில அரசின் பங்கீட்டின்படி கீழ்க்காணும் மாவட்டங்களான இராமநாதபுரம், விருதுநகர், நீலகிரி, திண்டுக்கல், திருப்பூர், நாமக்கல், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், கள்ளக்குறிச்சி மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களில் புதியதாக 11 அரசு மருத்துவக் கல்லூரிகள் 2021–2022 ஆம் கல்வியாண்டு முதல் மாணவர் சேர்க்கை தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், இனிவரும் ஆண்டுகளில் மருத்துவக் கல்லூரி இல்லாத மயிலாடுதுறை மாவட்டம் உட்பட எஞ்சிய மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு

படிப்படியாக விதிகளின்படி ஆய்வு மேற்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

3—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 3630—திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளித்தலை தொகுதி, நங்கவரம் பேரூராட்சியில் மூடிய நிலையில் பயன்படாத வகையில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கரூர் மாவட்டம், குளித்தலை ஊராட்சி ஒன்றியத்தில் நங்கவரம் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

அரசாணை (நிலை) எண் 136, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 26–5–2014–ன்படி, நங்கவரம் துணை சுகாதார நிலையத்திற்கு சொந்த கட்டடம் கட்ட, ரூ.18.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, பொதுப் பணித் துறையின்மூலம் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

நங்கவரம் பேரூராட்சியில் மூடிய நிலையில் பயன்படாத வகையில் உள்ள மருந்தக கட்டடம் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை வசம் உள்ளது.

4—

மருத்துவமனையை தரமுயர்த்துதல்

வினா எண் 3918—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

(அ) கிள்ளியூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்ட தலைமை மருத்துவமனையாக தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிள்ளியூர் தொகுதி, விளவங்கோடு வட்டம், கிள்ளியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருகிறது. மேலும், இம்மருத்துவமனையிலிருந்து 8 கி.மீ. தூரத்தில் குழித்துறை அரசு மருத்துவமனை 131 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. மேலும், இங்கு ஆண்கள், பெண்கள், குழந்தைகள், விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, அறுவை சிகிச்சைக்கு பின் கவனிப்பு பகுதி, சீமாங் மற்றும் NICU, முதலமைச்சரின் காப்பீட்டு திட்ட பிரிவு உள்ளிட்ட சிறப்பு பிரிவுகள் உள்ளன. இம்மருத்துவமனையில் எக்ஸ்ரே, ஸ்கேன் போன்ற கருவிகள் உள்ளன. 108 அவசர சிகிச்சை ஊர்தி வசதி உள்ளது. எனவே, கிள்ளியூர் தொகுதி, விளவங்கோடு வட்டம், கிள்ளியூரில் செயல்பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை தலைமை மருத்துவமனையாக தரமுயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

5—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 4177—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிள்ளியூர் தொகுதி, மத்திகோடு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதில் (Norms) ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

மத்திகோடு ஊராட்சியிலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் ஒலவிளை ஆரம்ப சுகாதார நிலையமும், கருங்கல் அரசு மருத்துவமனையும், 5 கிலோ மீட்டர் தொலைவில் சேனம்விளை அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் சுகாதார மாவட்டம், கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மத்திகோடு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

6—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 4325—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், உடையந்தாங்கல் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார

2023 ஜனவரி 11]

நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் (Norms) *ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. உடையந்தாங்கல் கிராமம், வல்லம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள்தொகை 1,24,367 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், உடையந்தாங்கல் ஊராட்சியிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் வளத்தி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. எனவே, விழுப்புரம் மாவட்டம், வல்லம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள உடையந்தாங்கல் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.*

7—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 4350—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாதவரம் தொகுதி, புழல் ஒன்றியம், தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் (Norms) *ஆரம்ப சுகாதார நிலையங்கள்*

அமைக்கப்படுகின்றன. தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி புழல் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள்தொகை 59,541 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் பெருநகர சென்னை மாநகராட்சி புழல் ஆரம்ப சுகாதார மையம் செயல்பட்டு வருகிறது. எனவே, திருவள்ளூர் மாவட்டம் புழல் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

8—

அவசரகால ஊர்தி வழங்குதல்

வினா எண் 4393—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, குளச்சல் மருத்துவமனைக்கு அவசரகால ஊர்தி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, குளச்சல் அரசு மருத்துவமனை 50 படுக்கைகள் கொண்ட வட்டம் சாரா அரசு மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 353 வெளிநோயாளிகளும், 41 உள்நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். தற்போது குளச்சல் அரசு மருத்துவமனையில் ஓர் அவசரகால ஊர்தி வசதி உள்ளது. இதனைப் பயன்படுத்தி நோயாளிகளுக்கு சிறப்பான சிகிச்சை உரிய நேரத்தில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 24 மணி நேரமும் இயங்கும் அவசரகால ஊர்தி சேவையும் பயன்பாட்டில் உள்ளது. எனவே புதிய அவசரகால ஊர்தி குளச்சல் மருத்துவமனைக்கு வழங்க தற்பொழுது அவசியம் எழவில்லை.

2023 ஜனவரி 11]

9—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 5561—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், குறிஞ்சிப்பை கிராமத்தில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைப் புதுப்பிக்கவும், மேம்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *விழுப்புரம் மாவட்டம், வல்லம் ஊராட்சி ஒன்றியத்தில், மேல்சித்தாமூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த குறிஞ்சிப்பை கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. குறிஞ்சிப்பை கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையம் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இத்துணை சுகாதார நிலைய கட்டடத்தில் உள்ள சிறு பழுதுகளை சரிபார்க்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில்* (Norms) *ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. வல்லம் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,24,367 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, மக்கள் தொகை அடிப்படையில் இத்துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மேம்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.*

[2023 ஜனவரி 11

10—

நவீன கண்சிகிச்சை மருத்துவமனை

வினா எண் 7096—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, சீர்காழி அரசு மருத்துவமனையில் நவீன கண் சிகிச்சை மருத்துவமனை தனியாக கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சீர்காழி அரசு மருத்துவமனையில் 32 படுக்கை வசதிகள் கொண்ட கண் சிகிச்சை பிரிவு நவீன வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 150 கண் அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. எனவே சீர்காழி அரசு மருத்துவமனையில் நவீன கண் சிகிச்சை மருத்துவமனை தனியாக கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

11—

தரமுயர்த்துதல்

வினா எண் 7099—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் செயல்படும் ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்திட அரசு முன்வருமா?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தில் புதுப்பட்டினம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அரசாணை (நிலை) எண் 219, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 30–7–2009–ன்படி புதுப்பட்டினம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 3 செவிலியர்கள் நியமிக்கப்பட்டு சுழற்சி முறையில் 24 மணி நேர பிரசவ கவனிப்பு சேவை வழங்கப்பட்டு வருகிறது.

12—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 7133—திரு. அ.செ. வில்வநாதன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆம்பூர் தொகுதி, ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், வெலதிகமானிபெண்டா ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30.000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. வெலதிகமானிபெண்டா ஊராட்சி ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள்

TRUTH ALONE TRIUMPHS

தொகை 1,48,619 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருவதால், வெலதிகமானிபெண்டா ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

13—

தரமுயர்த்துதல்

வினா எண் 7199—திரு. S. சந்திரன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, திருத்தணி வட்டம், மத்தூர் ஊராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி ஊராட்சி ஒன்றியத்தில் மத்தூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

30 படுக்கை வசதிகள் இல்லாத ஊராட்சி ஒன்றியத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை தரமுயர்த்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 52, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 21–2–2014–ன்படி திருத்தணி ஊராட்சி ஒன்றியத்தில் பீரகுப்பம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் மத்தூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

2023 ஜனவரி 11]

14—

கூடுதல் கட்டடம்

வினா எண் 7201—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, திருத்தணி வட்டம், பூனிமாங்காடு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்தில் பூனிமாங்காடு பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. பூனிமாங்காடு பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பட்டியல் கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பட்டியல் பெறப்பட்டவுடன் முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டு பூனிமாங்காடு பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பூனிமாங்காடு பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் அறை, ஆய்வக அறை, மருந்தக அறை, பிரசவ அறை, தடுப்பூசி அறை மற்றும் பணியாளர் குடியிருப்புகள் ஆகியவற்றிற்கு போதுமான கட்டட வசதிகள் உள்ளன.

எனவே, பூனிமாங்காடு பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் கட்டடம் கட்ட தற்போது அவசியம் எழவில்லை.

15—

தரமுயர்த்துதல்

வினா எண் 7202—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

(அ) திருத்தணி தொகுதி, இரா.கி.பேட்டை வட்டம், அம்மையார்குப்பம் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், இரா.கி.பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அம்மையார்குப்பம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. 30 படுக்கை வசதிகள் இல்லாத ஊராட்சி ஒன்றியத்தில், ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை மேம்படுத்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 210, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 24—10—2002—ன்படி இரா.கி.பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் இரா.கி.பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அம்மையார்குப்பம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

16—

வட்ட மருத்துவமனைக்கு வசதிகள்

வினா எண் 7307—திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் வட்ட மருத்துவமனைக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், ஆலங்குளம் தொகுதியில் 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆலங்குளம், மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அரசாணை (நிலை) எண் 233, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 23–9–2016–ன்படி 60 படுக்கை வசதிகளுடன்கூடிய வட்ட அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டது. இம்மருத்துவமனையில், ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு, அறுவை சிகிச்சைக்கு பின் கவனிப்பு, ஆண்கள் மற்றும் பெண்கள், பிரிவு, குழந்தைகள் பிரிவு, கண் சிகிச்சை பிரிவு ஆகிய சிகிச்சை பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. தற்போது, நாளொன்றிற்கு சராசரியாக 470 வெளிநோயாளிகளும், 8 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மேலும், மாதமொன்றிற்கு சராசரியாக 6 பிரசவங்களும் மற்றும் 98 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 3,776 ஆய்வக பரிசோதனை, 36 எக்ஸ்ரே, 161 USG, *64* ECG *எடுக்கப்படுகின்றன. மேலும், இம்மருத்துவமனைக்கு முழுமையான ஆய்வக வசதி, எக்ஸ்ரே,* USG, ECG, *மின்னாக்கி, குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கு, போதுமான மருத்துவக் கருவிகள் மற்றும் குடிநீர் வசதி போன்ற வசதிகளைக் கொண்டு இங்கு வரும் நோயாளிகளுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சைகள் உரிய முறையில் சிறப்பாக அளிக்கப்பட்டு வருகின்றன.*

17—

தரமுயர்த்துதல்

வினா எண் 7692—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, நடுவக்குறிச்சி ஊராட்சி, பர்கிட்மா நகரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதியிலேயே 52 படுக்கை வசதிகள் கொண்ட நாங்குநேரி அரசு வட்ட மருத்துவமனை பல்வேறு வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. எனவே, நாங்குநேரி தொகுதி, நடுவக்குறிச்சி ஊராட்சி, பாளையங்கோட்டை ஒன்றியத்தில் உள்ள பர்கிட்மா நகர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

18—

மருத்துவமனையை தரமுயர்த்துதல்

வினா எண் 7736—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல் மருத்துவமனையை தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி, கருங்கல் அரசு மருத்துவமனை 18 படுக்கை வசதிகளுடன்கூடிய வட்ட மருத்துவமனையாக இயங்கி வருகிறது. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு, சித்தா பிரிவு போன்ற பிரிவுகள் உள்ளன. மேலும், குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம், மின்னாக்கி வசதி, சமையல் அறை போன்றவை உள்ளன. மேலும், எக்ஸ்-ரே, இ.சி.ஜி., ஸ்கேன் போன்ற உபகரணங்கள், குடிநீர் வசதி போன்றவை உள்ளன. மருத்துவர் மற்றும் பணியாளர்

2023 ஜனவரி 11]

குடியிருப்பு வசதி உள்ளது. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 285 வெளிநோயாளிகளும் 9 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மாதம் ஒன்றுக்கு சராசரியாக 2,924 ஆய்வக பரிசோதனை, 43 எக்ஸ்-ரே, 41 இ.சி.ஜி., எடுக்கப்படுகின்றன. மேலும், மாதம் ஒன்றுக்கு 31 சிறிய வகை அறுவை சிகிச்சைகளும் நடைபெற்று வருகின்றன. இம்மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையிலேயே உள்நோயாளிகளும் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலேயே வெளிநோயாளிகளும் சிகிச்சைக்கு வருகை புரிகின்றனர். மேலும், கருங்கல் அரசு மருத்துவமனையிலிருந்து 6 கி.மீ. தூரத்தில், 50 படுக்கை வசதிகள் கொண்ட குளச்சல் அரசு மருத்துவமனை மற்றும் 12 கி.மீ. தூரத்தில் 174 படுக்கை வசதிகள் கொண்ட பத்மநாபபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை ஆகியவை பல்வேறு வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. எனவே, கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல் மருத்துவமனையை தரம் உயர்த்த தற்போது அவசியம் எழவில்லை.

19—

பிரேத பரிசோதனைக் கூடம்

வினா எண் 7737—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிள்ளியூர் தொகுதி, கருங்கல் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக் கூடத்தை செயல்பாட்டிற்கு கொண்டுவர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி, கருங்கல் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக் கூடம் தற்சமயம் செயல்பாட்டில் உள்ளது.

20—

செவிலியர் குடியிருப்புகள்

வினா எண் 7857—திரு. சீ. கதிரவன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மண்ணச்சநல்லூர், மூவனூர் ஊராட்சி ஆரம்ப சுகாதார நிலைய செவிலியர்களுக்கு குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், முசிறி ஊராட்சி ஒன்றியத்தில் மூவனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மூவனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தேசிய ஊரக நல குழும நிதி உதவியின்கீழ் 2009–2010 ஆம் நிதியாண்டில் ரூ.6.60 இலட்சம் மதிப்பீட்டில் செவிலியர் குடியிருப்பு கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

21—

கூடுதல் கட்டடம்

வினா எண் 10206—திரு. ஆ. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியம், சோராஞ்சேரி ஊராட்சியில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதுமான படுக்கை வசதிகளுடன்கூடிய புதிய கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி சுகாதார மாவட்டம், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தில் சோராஞ்சேரி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. 2009–2010 ஆம் நிதியாண்டில் தேசிய ஊரக நல குழும நிதி உதவியின்கீழ் சோராஞ்சேரி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரசவ பின் கவனிப்பு அறை ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது.

சோராஞ்சேரி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 6 படுக்கை வசதிகள் உள்ளன. எனவே, சோராஞ்சேரி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்போது உள்ள படுக்கை வசதிகளுடன் கூடிய கட்டட வசதி போதுமானதாக உள்ளதால், படுக்கை வசதிகளுடன்கூடிய புதிய கூடுதல் கட்டடம் கட்ட தற்போது அவசியம் எழவில்லை.

22—

தரமுயர்த்துதல்

வினா எண் 11359—திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லாவரம் தொகுதி, குரோம்பேட்டையில் செயல்படும் பழுதடைந்த மருத்துவமனைக்கு நவீன வசதிகளுடன்கூடிய புதிய கட்டடம் கட்டி, பன்னோக்கு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் தொகுதி, குரோம்பேட்டையிலுள்ள தாம்பரம் அரசு

மருத்துவமனை 213 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 1,109 வெளிநோயாளிகளும், 134 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், மகப்பேறு, குடும்ப நலம், அறுவை சிகிச்சைக்குப்பின் கவனிப்பு, தலைக்காய சிகிச்சை, விபத்து மற்றும் அறுவை சிகிச்சை, முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டம், பச்சிளங்குழந்தை தீவிர சிகிச்சை (NICU), விரிவான அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தை பராமரிப்பு பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம், இரத்த வங்கி, டயாலிசிஸ், வெண்டிலேட்டர், சி.டி.–ஸ்கேன் மற்றும் போதுமான மருத்துவக் கருவிகள் ஆகிய வசதிகளுடன் இம்மருத்துவமனை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இம்மருத்துவமனையில் மாதமொன்றுக்கு சராசரியாக 143 பெரிய மற்றும் 810 சிறிய வகை அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 44,180 ஆய்வக பரிசோதனைகள், 922 எக்ஸ்-ரே, 324 யு.எ.ஸ்ஜி, 695 இ.சி.ஜி., 382 சி.டி. ஸ்கேன் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் இம்மருத்துவமனையினை தரம் உயர்த்தும்பொருட்டு, Programme Implementation Plan (PIP) 2021–2022 நிதியாண்டின்கீழ் ரூ.689.00 இலட்சத்தில் கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்சமயம் இம்மருத்துவமனையில் உள்ள வசதிகளைக் கொண்டு இப்பகுதி மக்களுக்கு சிறப்பான சேவை வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பல்லாவரம் தொகுதி, குரோம்பேட்டையில் உள்ள தாம்பரம் அரசு மருத்துவமனையை பன்னோக்கு மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்போது அவசியம் எழவில்லை.

23—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 11367—திரு. S. சந்திரன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 ஜனவரி 11]

(அ) *திருத்தணி தொகுதி, இரா.கி.பேட்டை ஒன்றியம், பெரிய நாகபூண்டி ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.*

பெரிய நாகபூண்டி ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. பெரிய நாகபூண்டி ஊராட்சியிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் பாலபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும், 7 கிலோ மீட்டர் தொலைவில் சோளிங்கர் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால், திருவள்ளூர் மாவட்டம், இரா.கி.பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பெரிய நாகபூண்டி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

24—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 11421—திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பேராவூரணி தொகுதி, ஒட்டங்காடு பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

ஒட்டங்காடு கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. ஒட்டங்காடு கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் காலகம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஒட்டங்காடு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

25—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 11425—திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம், ஊரணிபுரம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் (Norms) *ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.*

2023 ஜனவரி 11]

ஊரணிபுரம் கிராமத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் திருவோணம் ஆரம்ப சுகாதார நிலையமும், 6 கிலோ மீட்டர் தொலைவில் நம்பிவயல் ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோ மீட்டர் தொலைவில் வெங்கரை ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஊரணிபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

26—

அவசர கால ஊர்தி வழங்குதல்

வினா எண் 11437—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, இடும்பவனம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 108 அவசரகால ஊர்தி வசதி வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, இடும்பவனம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பதிவெண் TN20G3515 கொண்ட 108 அவசரகால ஊர்தி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இடும்பவனம் ஆரம்ப சுகாதார நிலையத்தின் அருகில் உள்ள வாய்மேடு ஆரம்ப சுகாதார நிலையம் (11.5 கி.மீ.), முத்துப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையம் (14.3 கி.மீ.), திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் (18 கி.மீ.) மற்றும் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை (18 கி.மீ.) ஆகிய இடங்களில் 108 ஆம்புலன்ஸ்கள் அவசர சேவைக்காக நிறுத்தப்பட்டுள்ளன.

27—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 11716—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 ஜனவரி 11*

(அ) விராலிமலை தொகுதி, வேலூர் ஊராட்சி, கொன்னைகட்டுப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

கொன்னைகட்டுப்பட்டி கிராமத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் இராசநாயக்கன்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும், 7 கிலோ மீட்டர் தொலைவில் விராலிமலை அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால், புதுக்கோட்டை மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கொன்னைகட்டுப்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

28—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 11801—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, சிட்லப்பாக்கம் பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும்

2023 ஜனவரி 11]

இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

சிட்லப்பாக்கம் பேரூராட்சியில் சிட்லப்பாக்கம்–1 மற்றும் சிட்லப்பாக்கம்–2 ஆகிய இரண்டு துணை சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. சிட்லப்பாக்கம் பேரூராட்சியிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் மேடவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சிட்லப்பாக்கம் பேரூராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

29—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 12783—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, விக்கிரபாண்டியத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் (Norms) *ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.*

விக்கிரபாண்டியம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. விக்கிரபாண்டியம் கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் திருத்தங்கூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோ மீட்டர் தொலைவில் ஆதிச்சபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், திருவாரூர்

[*2023 ஜனவரி 11*

மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், விக்கிரபாண்டியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

30—

அவசரகால ஊர்தி வழங்குதல்

வினா எண் 15437—திரு. சி. மகேந்திரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *மடத்துக்குளம் தொகுதி, உடுமலை ஒன்றியம், எரிசனம்பட்டி ஊராட்சி, எரிசனம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 108 அவசரகால ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *மடத்துக்குளம் தொகுதி, உடுமலை ஒன்றியம், எரிசனம்பட்டி ஊராட்சி, எரிசனம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் வாயிலாக சராசரியாக மாதத்திற்கு 7 பயனாளிகள் 108 அவசரகால சேவை திட்டத்தில் பயனடைந்துள்ளனர்.*

31—

அவசரகால ஊர்தி வழங்குதல்

வினா எண் 17636—திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டை வட்டம், புளியறை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தனி அவசரகால ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டை வட்டம், புளியறை ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு மாதத்திற்கு சராசரி 6 முதல் 7 பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர்.

புளியறை ஆரம்ப சுகாதார நிலையத்தின் அவசர தேவைக்காக அண்மையில் கீழ்க்கண்ட இடங்களில் 108 அவசரகால ஊர்திகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

- *10 கி.மீ. – செங்கோட்டை அரசு மருத்துவமனை*
- *14 கி.மீ. – இலத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம்*
- *16 கி.மீ. – மேலகரம் ஆரம்ப சுகாதார நிலையம்*
- *18 கி.மீ. – தென்காசி அரசு மருத்துவமனை*
- *18 கி.மீ. – தென்காசி தீயணைப்பு நிலையம்*

32—

பொது மருத்துவமனை துவக்குதல்

வினா எண் 61449—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழிங்கநல்லூர் தொகுதியில் புதியதாக பொது மருத்துவமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னையில் போதுமான அளவு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு புறநகர்

மருத்துவமனைகள், அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகங்கள், மருத்துவமனைகள் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. மேலும், பல்லாவரத்தில் தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகம் மற்றும் அனகாபுத்தூர், பொழிச்சலூர் ஆகிய இடங்களில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னையை சுற்றிலும் 108 அவசரகால ஊர்திகள் தேவையான அளவு இருக்கின்றன. சோழிங்கநல்லூர் அருகிலேயே திருப்போரூர் அரசு மருத்துவமனை மற்றும் 213 படுக்கை வசதிகளுடன்கூடிய தாம்பரம் அரசு மருத்துவமனை பல்வேறு சிறப்பு பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. மேலும், சோழிங்கநல்லூர் பகுதியிலேயே சோழிங்கநல்லூர் நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், தற்போது 29–4–2022 அன்று நடைபெற்ற மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் 2022–2023 அறிவிப்பில் (அறிவிப்பு எண் 22), இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும்–48 திட்டத்தின்கீழ், தென் சென்னையில் உள்ள சோழிங்கநல்லூரில் 100 படுக்கைகளுடன் நவீன கட்டமைப்பு வசதிகள் கொண்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சை மருத்துவமனை புதியதாக ரூ.60.05 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும் என்று அறிவித்துள்ளார்.

33—

ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்துதல்

வினா எண் 14358—திரு. இரா. அருள்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், கன்னங்குறிச்சி பேரூராட்சியில் செயல்படும் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரம் செயல்படுத்தவும், ஆம்புலன்ஸ் வசதி மற்றும் மகளிர் மகப்பேறு நிலையமாக மாற்றவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 378, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 12–11–2008–ன்படி, சேலம்

2023 ஜனவரி 11]

மாவட்டம், சேலம் ஊராட்சி ஒன்றியத்தில், கன்னங்குறிச்சி பிரதான கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

கன்னங்குறிச்சி பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் மகப்பேறு பிரிவு உள்ளது. அரசு ஆணை (நிலை) எண் 33, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 24–2–2006–ன்படி கன்னங்குறிச்சி பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் 3 செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டு 24 மணி நேர பிரசவ கவனிப்பு சேவை வழங்கப்பட்டு வருகிறது.

கன்னங்குறிச்சி பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைந்துள்ளது. கன்னங்குறிச்சி பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் அவசர சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் வசதி தேவைப்படுகையில் மேற்படி மருத்துவமனையிலிருந்து ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு மேல் சிகிச்சை வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

34—

கட்டடம்

வினா எண் 3882—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, பள்ளியாடி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2019–2020 ஆம் ஆண்டில் சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் பதிவுத் துறையில் 24 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டப்படும் என்று

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அறிவிக்கப்பட்டது. இதில் குளச்சல் தொகுதியில் உள்ள பள்ளியாடி சார் பதிவாளர் அலுவலகமும் ஒன்றாகும். பள்ளியாடி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் புதிய அரசு கட்டடம் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 179, வணிக வரி மற்றும் பதிவுத் (யு2) துறை, நாள் 21–11–2020–ல் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டு, தற்போது அதற்கான இடம் பொதுப் பணித் துறையின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் கட்டடம் கட்டுவதற்கென பொதுப் பணித் துறையினரால் ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யப்பட்டவுடன் கட்டடம் கட்டுவதற்கான பணிகள் துவங்கப்படும்.

35—

கட்டடம்

வினா எண் 17679—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் வணிக வரி அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் வணிக வரிக் கோட்டம், திருவண்ணாமலை மாவட்டம், போளூரில் புதிதாக வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்ட ரூ.1,48,73,397/–க்கு நிருவாக இசைவளித்து அரசாணை (நிலை) எண் 155, வணிக வரி மற்றும் பதிவுத் (டி2) துறை, நாள் 27–11–2021–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி தொகைக்கு நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை (நிலை) எண் 33, வணிக வரி மற்றும் பதிவுத் (டி2) துறை, நாள் 28–2–2022–ல் ஆணையிடப்பட்டுள்ளது. உரிய வழிமுறைகளைப் பின்பற்றி கட்டடம் கட்டப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஜனவரி 11]

36—

கேமராக்கள்

வினா எண் 198—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாடு முழுவதும் போக்குவரத்து காவலர்களுக்கு உடலில் அணிந்துகொள்ளும் கேமராக்கள் (Body worn Cameras) *வழங்க அரசு முன்வருமா?*

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு முழுவதும் போக்குவரத்து காவலர்களுக்கு உடலில் அணிந்துகொள்ளும் கேமராக்கள் (Body worn Cameras) *வழங்கப்படும் திட்டமானது ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது.*

37—

பேருந்துகள் நின்று செல்லுதல்

வினா எண் 447—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், சாத்தனூர் மேலப்பிள்ளையார் கோயில் தெருவில் பேருந்துகள் நின்று செல்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், சாத்தனூர் மேலப்பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் தமிழ்நாடு அரசு

போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் மண்டலம், கும்பகோணம் நகர்–1 கிளைமூலம் இயக்கப்படும் தடம் எண் A53 ஓட்டுநர், நடத்துநர்களுக்கு நின்று பயணிகளை ஏற்றி/இறக்கி செல்ல சுற்றறிக்கை எண் தஅபோக/கும்ப/வ4/555/2021, நாள் 18–8–2021 மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சாத்தனூர் மேலப்பிள்ளையார் கோயில் தெருவில் பேருந்துகள் நின்று செல்கின்றன.

38—

பேருந்து இயக்குதல்

வினா எண் 655—திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தென்காசியிலிருந்து மூணாருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) வரையறுக்கப்பட்டது வாயிலாக தென்காசியிலிருந்து குமுளிக்கு 4 பேருந்துகளும், தேனிக்கு 7 பேருந்துகளும், போடிக்கு 1 பேருந்தும் இயக்கப்பட்டு வருகின்றன. பயணிகள் இப்பேருந்துகளை பயன்படுத்தி குமுளி, தேனி மற்றும் போடிக்கு சென்று அங்கிருந்து மூணாறு செல்ல போதிய பேருந்து வசதிகள் உள்ளன.

39—

பேருந்து நிறுத்துமிடம் அமைத்தல்

வினா எண் 666—முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2023 ஜனவரி 11]

நீடாமங்கலம் நகரில் அரசுப் போக்குவரத்து, அரசு விரைவுப் போக்குவரத்து முன்பதிவு மையத்துடன்கூடிய பேருந்து நிறுத்துமிடம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

நீடாமங்கலம் நகரில் அரசுப் போக்குவரத்து, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக முன்பதிவு மையத்துடன்கூடிய பேருந்து நிறுத்துமிடம் அமைக்க சாத்தியமில்லை.

40—

குளிர்சாதன விரைவு பேருந்து இயக்குதல்

வினா எண் 1334—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, விஜயநகர் பேருந்து நிலையத்திலிருந்து திருப்பதிக்கு குளிர்சாதன விரைவு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, சென்னையிலிருந்து திருப்பதிக்கு, கோயம்பேடு மற்றும் மாதவரத்திலிருந்து 16 குளிர்சாதனப் பேருந்துகள் போதுமான கால இடைவெளியில் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்து வசதிகளே போதுமானதாக கருதப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஜனவரி 11

41—

குளிர்சாதனப் பேருந்து இயக்குதல்

வினா எண் 1338—திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, விஜயநகர் பேருந்து நிலையத்திலிருந்து கன்னியாகுமரிக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக கன்னியாகுமரியிலிருந்து சென்னைக்கு தடம் எண் 282 Ultra Deluxe–ல் 4 பேருந்துகள் வாயிலாக 4 நடைகள் வீதம் தினசரி இயக்கப்படுகிறது. இப்பேருந்து வசதிகளே போதுமானதாக கருதப்படுகிறது.

42—

கூடுதல் பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 2404—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு இரவு நேரங்களில் கூடுதலாக நான்கு பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு இரவு நேரங்களில் கும்பகோணம் போக்குவரத்துக் கழகம், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மற்றும் விழுப்புரம் போக்குவரத்துக் கழகம்மூலம் மாலை 6.00 மணி முதல் இரவு வரை 51 தடப்பேருந்துகள் சென்னைக்கு இயக்கப்பட்டு வருகின்றன. இதைத் தவிர, பண்டிகை, விழா மற்றும் சிறப்பு நாட்களில் கூடுதலாக 30 முதல் 100 பேருந்துகள் வரை தேவைக்கேற்ப சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

43—

பேருந்து இயக்குதல்

வினா எண் 2405—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்திலிருந்து திருச்செந்தூருக்கு இயக்கி நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்திலிருந்து திருச்செந்தூருக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் சார்பாக 20–8–2021 முதல் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

44—

பேருந்து இயக்குதல்

வினா எண் 2435—டாக்டர் வை. முத்துராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டையிலிருந்து திருப்பதிக்கு பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு வரையறுக்கப்பட்டது வாயிலாக தடம் எண் 969 Ultra Deluxe*-ல் காரைக்குடியிலிருந்து திருப்பதிக்கு புதுக்கோட்டை வழியாக இரு முனைகளிலிருந்தும் தினசரி பேருந்து இயக்கப்படுகிறது. இத்தடத்தில் பயணிகளின் அடர்வு 70% மட்டுமே உள்ளது. மேற்கூறிய பேருந்துகளில் புதுக்கோட்டை ஏறுமிடமாகவும், இறங்குமிடமாகவும் ஒரு நிலையாக அறிவிக்கப்பட்டு* (Pickup Point and Dropping Point) *இணையதள முன்பதிவிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. எனவே, புதுக்கோட்டை பயணிகள் மேற்கூறிய பேருந்து வசதியினை பயன்படுத்தி திருப்பதி செல்லலாம்.*

45—

தனி தலைமையகம்

வினா எண் 2478—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை போக்குவரத்துத் துறைக்கு தனி தலைமையகம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மண்டலம் 11 கிளைகளுடன், நாகப்பட்டினத்தை மண்டல தலைமையகமாக கொண்டும், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் திருவாரூர் ஆகிய மூன்று மாவட்டங்களை இயக்க பகுதியாக கொண்டும் செயல்பட்டு வருகிறது. இவற்றில் புதிதாக சமீபத்தில் தொடங்கி வைக்கப்பட்டு செயல்பட்டுவரும் மயிலாடுதுறை மாவட்டத்தில் மயிலாடுதுறை, சீர்காழி, பொறையார் என்ற மூன்று பணிமனைகளிலிருந்து 62 நகரப் பேருந்துகளும், 73 புறநகர் பேருந்துகளுமாக மொத்தம் 135 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மண்டல தலைமையகம் உள்ள நாகப்பட்டினத்திலிருந்து மயிலாடுதுறை 65 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. மேலும், மயிலாடுதுறை மாவட்டம், நாகப்பட்டினம் மண்டலம் உள்ளிட்ட ஆறு மண்டலங்களை உள்ளடக்கிய போக்குவரத்துக் கழகத்தின் தலைமையகமான கும்பகோணத்திலிருந்து மிகக் குறைந்த தூரத்தில் உள்ளது. எனவே, மயிலாடுதுறையில் புதியதாக தலைமையகம் அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

46—

பேருந்து நிலையம் இடம் மாற்றுதல்

வினா எண் 2769—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆர்.கே. நகர் தொகுதி, காசிபுரம் "பி" பிளாக் ஜீவரத்தினம் சாலையில் சிக்னல் அருகே உள்ள பேருந்து நிலையத்தை இடம் மாற்றி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மாநகரப் போக்குவரத்துக் கழகம் மணலியிலிருந்து பிராட்வே வரை தடம் எண் 56D–ல் 15 பேருந்துகளையும்,

மணலி புதுநகரிலிருந்து பிராட்வே வரை தடம் எண் 56J–ல் 2 பேருந்துகளையும் இயக்கி வருகிறது. எனினும், தண்டையார்பேட்டை மார்க்கத்தில் சுங்கச்சாவடி சாலையின் அருகில் உள்ள பகுதியில் மார்கெட் பகுதி அமைந்துள்ளதாலும், போக்குவரத்து நெரிசல் மற்றும் பொதுமக்கள் நெரிசல் அதிகம் உள்ளதாலும், அச்சாலை குறுகலாக உள்ளதாலும், சின்னலுக்கு அருகே உள்ள இப்பேருந்து நிறுத்தத்தை வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க சாத்தியமில்லை.

47—

பேருந்து இயக்குதல்

வினா எண் 2987—திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி நகரத்திலிருந்து கோயம்புத்தூருக்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டியிலிருந்து கோயம்புத்தூர் 343 கி.மீ. தொலைவில் உள்ளது. திருத்துறைப்பூண்டியிலிருந்து பிரதான வழித்தடத்தில் திருச்சிக்கு தினசரி காலை 01.15 மணி முதல் இரவு 21.15 மணி வரை 21 பேருந்துகள்மூலம் 29 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. திருச்சி பேருந்து நிலையத்திலிருந்து பிரதான வழித்தடத்தில் கோயம்புத்தூருக்கு தினசரி காலை 00.05 மணி முதல் இரவு 24.00 மணி வரை 65 பேருந்துகள்மூலம் 103 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

மேலும், திருத்துறைப்பூண்டியிலிருந்து மன்னார்குடி 29 கி.மீ. தொலைவில் உள்ளது. தினசரி மன்னார்குடியிலிருந்து இரவு 21.35 மணிக்கு கோயம்புத்தூருக்கு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. அதேபோன்று திருத்துறைப்பூண்டியிலிருந்து திருவாரூர் 30 கி.மீ. தொலைவில் உள்ளது. தினசரி

2023 ஜனவரி 11]

திருவாரூரிலிருந்து காலை 08.45 மணி மற்றும் இரவு 22.30 மணிக்கும் கோயம்புத்தூருக்கு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறாக கோரிக்கையில் கோரப்பட்டுள்ள வழித்தடத்தில் மேற்கண்டுள்ளவாறு பயணிகள் பயன்பாட்டிற்கேற்ப பகுதி பகுதியாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

48—

பணிமனை அமைத்தல்

வினா எண் 3020—திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேந்தமங்கலம் தொகுதியில் கொல்லிமலை அரசு போக்குவரத்து வாகனங்களை பராமரிக்க பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கொல்லிமலை ஒன்றியம், வாழவந்திநாடு கிராமம் ச.எண் 149/2A—ல் 1.70 ஏக்கர் பட்டா நிலம் வருவாய் துறை மூலமாக, சேலம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்து பணிமனை அமைப்பதற்காக சுவாதீனம் பெறப்பட்டது. தற்போது, இப்போக்குவரத்துக் கழகம் சார்பில் சேலம், நாமக்கல், ராசிபுரம், தம்மம்பட்டி மற்றும் ஆத்தூரிலிருந்து கொல்லிமலை மற்றும் இதனை சுற்றியுள்ள கிராமங்களுக்கு 12 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளின் இயக்கமே அப்பகுதி மக்களின் போக்குவரத்து தேவையை நிறைவு செய்கிறது. இப்பேருந்துகளுக்கான பராமரிப்புப் பணிகள் சேலம், நாமக்கல், ராசிபுரம், தம்மம்பட்டி மற்றும் ஆத்தூர் ஆகிய கிளைகளில் செய்யப்படுகிறது. எனவே, சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் அரசு போக்குவரத்துக் கழக பணிமனை அமைப்பதற்கான தேவை ஏதும் தற்போது எழவில்லை.

[2023 ஜனவரி 11

49—

பணிமனை விரிவுபடுத்துதல்

வினா எண் 3041—திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் உள்ள பணிமனையை விரிவுபடுத்தி, புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட் கடும் நிதி நெருக்கடியில் உள்ளதால், தற்போது மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் உள்ள பணிமனையை விரிவுபடுத்தி, புதுப்பிப்பதற்கான சாத்தியக்கூறு இல்லை.

50—

பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 3329—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு **போக்குவரத்துத் துறை** அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்திலிருந்து நவக்கிரக கோயிலுக்கு தினசரி காலை பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணத்திலிருந்து சனி ஸ்தலமான திருநள்ளாறு, இராகு ஸ்தலமான திருநாகேஸ்வரம்,

2023 ஜனவரி 11]

குரு ஸ்தலமான ஆலங்குடி, சந்திரன் ஸ்தலமான திங்களூர், செவ்வாய் ஸ்தலமான வைத்தீஸ்வரன் கோவில் செல்ல சராசரியாக 10–15 நிமிட இடைவெளியில் பேருந்து வசதி உள்ளது.

கும்பகோணத்திலிருந்து சூரியன் ஸ்தலமான சூரியனார்கோவில் செல்ல சராசரியாக 20 நிமிட இடைவெளியிலும், சுக்கிரன் ஸ்தலமான கஞ்சனூர் செல்ல சராசரியாக 30 நிமிட இடைவெளியிலும் பேருந்து வசதி உள்ளது.

கும்பகோணத்திலிருந்து புதன் ஸ்தலமான திருவெண்காடு செல்ல மயிலாடுதுறை / சீர்காழி – திருவெண்காடு வழித்தடத்தில் 30 நிமிட இடைவெளியில் பேருந்து வசதி உள்ளது.

கும்பகோணத்திலிருந்து கேது ஸ்தலமான கீழப்பெரும்பள்ளம் செல்ல மயிலாடுதுறை / சீர்காழி – கீழப்பெரும்பள்ளம் வழித்தடத்தில் 45 நிமிட இடைவெளியில் பேருந்து வசதி உள்ளது. மேற்குறிப்பிட்டவாறு கும்பகோணத்திலிருந்து நவக்கிரக கோயிலுக்கு போதியளவு பேருந்து வசதி உள்ளது.

51—

பேருந்து இயக்குதல்

வினா எண் 3331—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்திலிருந்து திருப்பதிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு வரையறுக்கப்பட்டது வாயிலாக தடம் எண் 853 Ultra Deluxe–ல் ஒரு பேருந்து பட்டுக்கோட்டையிலிருந்து திருப்பதிக்கும் மற்றும் தடம் எண் 851 Ultra Deluxe–ல் ஒரு

பேருந்து தஞ்சாவூரிலிருந்து திருப்பதிக்கும் கும்பகோணம் வழியாக இரு முனைகளிலிருந்தும் தினசரி இயக்கப்படுகிறது. மேற்கூறிய பேருந்துகளில் இணையதளம் வாயிலாக முன்பதிவு செய்து பயணம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, கும்பகோணத்திலிருந்து திருப்பதிக்கு செல்லும் பயணிகள் மேற்கூறிய பேருந்து வசதியினை பயன்படுத்திக்கொள்ளலாம்.

52—

பேருந்து இயக்குதல்

வினா எண் 3379—திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறையிலிருந்து மணல்மேடு மற்றும் ஆத்தூர் வழியாக கும்பகோணம் வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறையிலிருந்து மணல்மேடு மற்றும் ஆத்தூர் வழியாக கும்பகோணம் 59 கி.மீ. தொலைவில் உள்ளது. மயிலாடுதுறையிலிருந்து 21 கி.மீ. தொலைவில் உள்ள ஆத்தூருக்கு தினசரி தடம் எண் A17A மூலமாக காலை 7.00 மணி மற்றும் மாலை 6.30 மணி ஆகிய நேரங்களிலும், தடம் எண் A17 மூலமாக தினசரி மயிலாடுதுறையிலிருந்து திருமங்கலம், காளி மற்றும் ஆத்தூர் வழியாக மணல்மேட்டிற்கு 5.30, 8.30, 11.30, 14.30, 17.30, 21.15 ஆகிய நேரங்களிலும் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. மணல்மேட்டிலிருந்து கும்பகோணம் 38 கி.மீ. தொலைவில் உள்ளது. மணல்மேட்டிலிருந்து தடம் எண் 460, 460A, 460D, 460E மூலமாக 2 நடைகளும், 460B, 460C மூலமாக 3 நடைகளும் கும்பகோணத்திற்கு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறாக கோரிக்கையில் கோரப்பட்டுள்ள வழித்தடத்தில் மேற்கண்டுள்ளவாறு பயணிகள் பயன்பாட்டிற்கேற்ப பகுதி பகுதியாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

53—

மண்டல அலுவலகம் துவக்குதல்

வினா எண் 3381—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதி, புதிய மாவட்ட தலைநகரமாக உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு போக்குவரத்துத் துறையின் மண்டல அலுவலகம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் திருவாரூர் மாவட்டங்களை இயக்க பகுதியாக கொண்டு நாகப்பட்டினம் மண்டலம் 11 கிளைகளுடன் நாகப்பட்டினத்தை மண்டல தலைமையகமாக கொண்டு செயல்பட்டு வருகிறது. மண்டல தலைமையகம் உள்ள நாகப்பட்டினத்திலிருந்து மயிலாடுதுறை 65 கிலோ மீட்டர் தொலைவிலும், சீர்காழி 69 கிலோ மீட்டர் தொலைவிலும், பொறையார் 37 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது. மயிலாடுதுறை மாவட்டம், நாகப்பட்டினம் மண்டலம் உள்ளிட்ட ஆறு மண்டலங்களை உள்ளடக்கிய போக்குவரத்துக் கழகத்தின் தலைமையகமான கும்பகோணத்திலிருந்து மிக குறைந்த தூரத்தில் உள்ளது. இத்தகைய சூழ்நிலையில் மயிலாடுதுறையில் புதியதாக மண்டல அலுவலகம் துவங்கிட வேண்டிய அவசியம் எழவில்லை.

54—

நேரடி பேருந்து இயக்குதல்

வினா எண் 3590—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 ஜனவரி 11*

(அ) டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, காசிபுரத்திலிருந்து ஸ்டான்லி மருத்துவமனைக்கு நேரடி பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாநகர் போக்குவரத்துக் கழகம் தடம் எண் 8A cut–ல், சுங்கச்சாவடியிலிருந்து காசிமேடு (காசிபுரம்), இராயபுரம் காவல் நிலையம், இராயபுரம் மார்கெட், தம்புசெட்டி தெரு, பாரதி கலைக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவமனை வழியாக வள்ளலார் நகர் வரை 2 பேருந்துகளை பயணிகளின் பயன்பாட்டிற்கு ஏற்ப தற்போது இயக்கி வருகிறது.

55—

சிற்றுந்து இயக்குதல்

வினா எண் 3660—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாதவரம் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, 24–வது வார்டு, சூரப்பட்டு முருகாம்பேடு பகுதியிலிருந்து அம்பத்தூர் பேருந்து நிலையம் வரை சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அம்பத்தூர்–செங்குன்றம் சாலையில் அய்யப்பன் கோயில் பேருந்து நிறுத்தம் முன்பாக இடதுபக்கம் சுமார் 1 கி.மீ. தொலைவில் சூரப்பட்டு முருகம்பேடு அமைந்துள்ளது. சூரப்பட்டு முருகம்பேடு வாழ் பேருந்து

2023 ஜனவரி 11]

பயணிகள் அருகாமையில் அம்பத்தூர்–செங்குன்றம் சாலை வழியாக இயக்கப்படும் தடம் எண் 62 (பூந்தமல்லி–செங்குன்றம்)–ல் 39 பேருந்துகள், தடம் எண் 104 (தாம்பரம் – செங்குன்றம்)–ல் 13 பேருந்துகள் என மொத்தம் 52 பேருந்துகளை பயன்படுத்தி அம்பத்தூர் பேருந்து நிலையம் சென்றடையலாம். ஆகவே, பேருந்துகள் இயக்கப்படும் இப்பகுதி சாலையில் சிற்றுந்துகள் இயக்க அவசியம் எழவில்லை.

56—

போக்குவரத்து சிக்னல் அமைத்தல்

வினா எண் 3662—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாதவரம் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, 31–வது வார்டு, கணக்கன் சத்திரம் பகுதியில் உள்ள நெடுஞ்சாலையில் போக்குவரத்து சிக்னல் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாதவரம் போக்குவரத்து காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கணக்கன் சத்திரம் சாலையானது மூன்று சாலை சந்திப்பாக உள்ளது. கணக்கன் சத்திரம் சாலை மிக குறுகிய (16 அடி) சாலையாக தேசிய நெடுஞ்சாலையில் இணைகிறது. எனவே, இப்பகுதி குறுகிய சாலை சந்திப்பாக உள்ளதால் மேற்கண்ட இடத்தில் சிக்னல் அமைக்க இயலாது. அப்பகுதியில் உள்ள அனைத்து உள்வட்ட சாலைகளையும் இணைத்து விரிவுபடுத்தும்போது சிக்னல் அமைக்கலாம்.

57—

பேருந்து இயக்குதல்

வினா எண் 4228—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, ஏர்வாடி–திருக்குறுங்குடிக்கு புதிய நகரப் பேருந்து இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகர்கோவில்–தென்காசி–பாபநாசம் வழித்தடத்தில் உள்ள ஏர்வாடி– திருக்குறுங்குடியை தொடர்புபடுத்தி தடம் எண் 182–ல் 16 பேருந்துகள்மூலம் 58 சுற்றுக்களும், தடம் எண் 567–ல் 4 பேருந்துகள்மூலம் 14 சுற்றுக்களும், தடம் எண் 568–ல் 2 பேருந்துகள்மூலம் 8 சுற்றுக்களும், தடம் எண் 102–ல் 5 பேருந்துகள்மூலம் 19 சுற்றுக்களும், தடம் எண் 127B, 131O பேருந்துகள்மூலம் 5 சுற்றுக்களும் என மொத்தம் நாளொன்றுக்கு புறநகரப் பேருந்துகள்மூலம் 104 சுற்றுக்களும், நகரப் பேருந்துகள் தடம் எண் 17 மற்றும் 18–ல் 6 பேருந்துகள்மூலம் 16 சுற்றுக்களும் இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு பகுதி பகுதியாக, போதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போதைய பயன்பாட்டு விகிதாச்சாரப்படி இப்பேருந்து வசதிகளே போதுமானதாகும்.

58—

கூடுதல் பேருந்து இயக்குதல்

வினா எண் 4251—திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, மூலக்கரைப்பட்டியிலிருந்து முனைஞ்சிபட்டி, பதைக்கம், தெற்கு பாப்பான்குளம், பரப்பாடி, சித்தூர் வழியாக வள்ளியூருக்கு கூடுதல் பேருந்துகள் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை வழித்தடம் ஒரு சுற்று வழித்தடமாகும். நாங்குநேரியிலிருந்து பரப்பாடி, தெற்கு பாப்பான்குளம், கழுவூர், பதைக்கம் வழியாக பார்பரம்மாள்புரம் வரை தற்போது தடம் எண் 18B நகரப் பேருந்துமூலம் 4 சுற்றுக்களும், வடக்கு விஜயநாராயணம், பரப்பாடி, கழுவூர் வரை தடம் எண் 18C நகரப் பேருந்துமூலம் 2 சுற்றுக்களும், வள்ளியூர்–சித்தூரை தொடர்புபடுத்தி தடம் எண்18H நகரப் பேருந்துமூலம் 12 சுற்றுக்களும், தடம் எண் 18E நகரப் பேருந்துமூலம் நாங்குநேரியிலிருந்து மூலைக்கரைப்பட்டி, முனைஞ்சிபட்டி வரை 9 சுற்றுக்களும், தடம் எண் 102C புறநகரப் பேருந்துமூலம் நாங்குநேரியிலிருந்து மூலைக்கரைப்பட்டி வரை 12 சுற்றுக்களும், தடம் எண் 102A புறநகரப் பேருந்துமூலம் வள்ளியூரிலிருந்து சித்தூர் வரை 4 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு கோரிக்கை தடத்தில் பகுதி பகுதியாக போதிய பேருந்து வசதிகள் உள்ளன.

59—

கூடுதல் பேருந்து இயக்குதல்

வினா எண் 4252—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, கழுவூரிலிருந்து பதைக்கம், காரியாண்டி, விஜயஅச்சம்பாடு, இட்டமொழி, சுப்பிரமணியபுரம் வழியாக திசையன்விளைக்கு கூடுதல் பேருந்துகள் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை தடத்தில் அமைந்துள்ள திருநெல்வேலி முதல் காரியாண்டியை தொடர்புபடுத்தி

தடம் எண் 225 மூலம் சாத்தான்குளம் வரை 5 சுற்றுக்களும், தடம் எண் 106B மூலம் திசையன்விளை வரை 2 சுற்றுக்களும், தடம் எண் 165F மூலம் திசையன்விளை வரை 6 சுற்றுக்களும் இயக்கப்படுவதுடன், நகரப் பேருந்தான தடம் எண் 18B மூலம் நாங்குநேரி–பார்ப்பரம்மாள்புரம் (வழி) கழுவூர், பதைக்கம் என 5 சுற்றுக்களும் இயக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு பகுதி பகுதியாக போதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

60—

பேருந்து பணிமனை

வினா எண் 5282—திரு. தி. ராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி வட்டம், மணமேல்குடியில் பேருந்துகள் பணிமனை இல்லாமல் உள்ளதால், புதிய பணிமனை அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி கிராமமானது, பட்டுக்கோட்டையிலிருந்து கிழக்கு கடற்கரை சாலை செல்லும் (ECR) வழித்தடத்தில் 44 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. மணமேல்குடியில் சுமார் 86,000 மக்கள் தொகையே உள்ளனர். மணமேல்குடி ஒரு கடற்கரை கிராமமாகும். கிழக்கு பகுதி முழுவதும் கடற்பரப்பாகும். மேற்குதிசையில் 35 கிலோ மீட்டர் தொலைவில் அறந்தாங்கி மற்றும் 20 கிலோ மீட்டர் தொலைவில் ஆவுடையார்கோவிலை மையமாக வைத்து இயக்கப்படும் பேருந்துகள் போதுமானதாகும். வடக்கு திசையில் 44 கிலோ மீட்டர் தொலைவில் பட்டுக்கோட்டை கிளை, பேருந்துகளின் இயக்க பகுதியாகும். வடமேற்கு திசையில் 36 கிலோ மீட்டர் தொலைவில் பேராவூரணி கிளை பேருந்துகளின் இயக்க பகுதியாகும். தெற்கு திசையில் 40 கிலோ மீட்டர் தொலைவில் தேவகோட்டையிலிருந்தும் மற்றும் திருவாடனையை

மையமாக வைத்தும் 37 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதுவே போதுமானதாக உள்ளது. மேலும் அரசு போக்குவரத்துக் கழகம் கடும் நிதி நெருக்கடியில் உள்ளதால் மணமேல்குடியில் தற்போது பணிமனை அமைக்க முடியாத நிலை உள்ளது.

61—

பேருந்து இயக்குதல்

வினா எண் 5599—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி வட்டம், நாகுடியில் இருந்து சென்னைக்கு இயக்கி நிறுத்தப்பட்டுள்ள பேருந்தை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு வரையறுக்கப்பட்டது வாயிலாக, நாகுடியில் இருந்து சென்னைக்கு இயக்கப்பட்ட பேருந்தில் நேரடி பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு மிக குறைவாக இருந்ததாலும், அவற்றின்மூலம் பெறப்பட்ட வருவாய் அன்றாட பேருந்து இயக்க செலவீனத்திற்கு ஈடு செய்ய இயலாததாலும் ஏப்ரல் 2019—ல் நிறுத்தப்பட்டது. இத்தடத்தில் மீண்டும் பேருந்து இயக்க சாத்தியமில்லை.

62—

ஷேர் ஆட்டோ போக்குவரத்து திட்டம் துவக்குதல்

வினா எண் 6839—திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளித்தலை நகரப் பகுதிக்கு ஷேர் ஆட்டோ போக்குவரத்துத் திட்டம் துவங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஏற்கெனவே ஷேர் ஆட்டோக்கள் போக்குவரத்து திட்டம் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகின்ற நிலையில், கரூர் மாவட்டம், குளித்தலை நகரப் பகுதிக்கு ஷேர் ஆட்டோ போக்குவரத்து திட்டம் துவங்குவதற்கான அவசியம் எழவில்லை.

63—

பேருந்து நிலையத்திற்குள் விரைவு பேருந்து வருதல்

வினா எண் 7080—திரு. J.L. ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகரத்திற்குள் புறவழிச் சாலை வழியாக செல்லும் விரைவு பேருந்துகளை நகர பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு விரைவு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் தொலைதூரங்களுக்கு மட்டுமே இயக்கப்படுவதால், குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்கி செல்கின்றது. இதனால் ஆற்காடு நகரத்திற்குள் விரைவு பேருந்துகள் வந்து செல்லும்பட்சத்தில் பயணிகளுக்கு சிரமம் ஏற்படும். எனவே, ஆற்காடு நகரத்திற்குள் விரைவு பேருந்துகள் வந்து செல்ல இயலாது.

64—

பேருந்து பணிமனை

வினா எண் 7190—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு பேரூராட்சிக்கு புதிய பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (ப) எண் 61, போக்குவரத்துத் துறை, நாள் 9–9–1992–ன்படி ஒரு பணிமனைக்கும், மற்றொரு பணிமனைக்கும் இடையே குறைந்தபட்ச தூரம் 40 கிலோ மீட்டர் இருக்க வேண்டும். தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், திருவள்ளூர் மண்டலத்தின்கீழ் இயங்கும் திருத்தணி பணிமனையிலிருந்து பள்ளிப்பட்டு 40 கிலோ மீட்டருக்குள்ளாக அதாவது 36 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. எனவே, பள்ளிப்பட்டில் புதிய போக்குவரத்து பணிமனை அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

65—

பேருந்து பணிமனை அமைத்தல்

வினா எண் 7194—திரு. S. சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, இரா.கி.பேட்டை வட்டத்தில் புதிய பேருந்து பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (ப) எண் 61, போக்குவரத்துத் துறை, நாள் 9–9–1992–ன்படி ஒரு பணிமனைக்கும், மற்றொரு பணிமனைக்கும் இடையே குறைந்தபட்ச தூரம் 40 கிலோ

மீட்டர் இருக்க வேண்டும். தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், திருவள்ளூர் மண்டலத்தின்கீழ் இயங்கும் திருத்தணி பணிமனையிலிருந்து இரா.கி.பேட்டை 40 கிலோ மீட்டருக்குள்ளாக அதாவது 22 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. எனவே, இரா.கி.பேட்டையில் புதிய போக்குவரத்து பணிமனை அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

66—

பேருந்து இயக்குதல்

வினா எண் 7689—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, பற்பநாதபுரம்–பாளையங்கோட்டைக்கு புதிய பேருந்துகள் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, பற்பநாதபுரம்–பாளையங்கோட்டை வரை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், கட்டபொம்மன் நகர் கிளையைச் சார்ந்த நகரப் பேருந்து தடம் எண் 15D மூலம், நாளொன்றுக்கு 6 சுற்றுகள் காலை, பிற்பகல் மற்றும் மாலை என பள்ளி/கல்லூரி மாணவ மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில், 22–11–2021 முதல் இயக்கப்பட்டு வருகிறது.

67—

பேருந்து இயக்குதல்

வினா எண் 7802—திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், சாப்பர்த்தி ஊராட்சி, பந்தேரி கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக சாப்பர்த்தி கிராமத்திற்கு கிருஷ்ணகிரி கிளை தடம் எண் K13A & K42 பேருந்துகளின்மூலம் 15 நடைகள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக இயக்கப்பட்டு வருகிறது. மேலும், சாப்பர்த்தி கிராமத்திலிருந்து பந்தேரி கிராமத்தின் வழித்தடத்தின் நீளம் 3 கிலோ மீட்டர் ஆகும். மேற்கண்ட 3 கிலோ மீட்டருக்கு சாலை குறுகலாகவும், கனரக பேருந்து இயக்கிட இயலாத நிலையும் மற்றும் எதிரே வரும் வாகனங்கள் ஒன்றையொன்று கடந்து செல்ல முடியாத நிலையுள்ளது. எனவே, கோரியுள்ள வழித்தடத்தில் பேருந்து இயக்கிட இயலாத நிலையுள்ளது.

68—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11702—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விராலிமலை தொகுதியில் நிறுத்தப்பட்டுள்ள விராலிமலையிலிருந்து கீரனூர் வரை செல்லும் நகரப் பேருந்தை மீண்டும் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, விராலிமலையிலிருந்து பேராம்பூர், ஆவூர் நால் ரோடு, நீர்பழனி வழியாக கீரனூருக்கு கொரோனா ஊரடங்கு காரணமாக பொதுமக்கள் பயன்பாடு

இல்லாத காரணத்தினால் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட நகர பேருந்து, கொரோனா ஊரடங்கு தளர்வுகளுக்கு பிறகு 15–12–2021 முதல் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், புதுக்கோட்டை மண்டலத்தின் ஒரு நகர் பேருந்துமூலம் நாளொன்றுக்கு 2 நடைகளும் மற்றும் விராலிமலையிலிருந்து பேராம்பூர், மலம்பட்டி, வெம்மணி, துவரவயல் வழியாக கீரனூருக்கு நாளொன்றுக்கு 4 நடைகளும் என நாளொன்றுக்கு 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

69—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11703—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, ஆவூர் ஊராட்சி, ஓரண்டகுடியிலிருந்து திருச்சி மத்திய பேருந்து நிலையம் வரை நகரப் பேருந்து இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சி மத்திய பேருந்து நிலையத்திலிருந்து ஓரண்டக்குடி வரையிலான தூரம் 24.0 கி.மீ. ஆகும். இவ்வழித்தடத்தில் திருச்சி மத்திய பேருந்து நிலையம்–செங்கலாக்குடி வரையுள்ள 22.0 கி.மீ. தூரத்திற்கு திருச்சி மண்டலத்திலிருந்து ஒரு நகரப் பேருந்துமூலம் தினசரி 4 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், செங்கலாக்குடி–ஓரண்டக்குடி வரையுள்ள 2.0 கி.மீ. பேருந்து வசதி பெறாத பகுதியாகும். இப்பகுதியில் சுமார் 1.5 கி.மீ. தார்சாலையில் 0.75 கி.மீ. சாலை மேடு பள்ளங்களாக பழுதடைந்தும், இருபுறமும் முட்கள் வளர்ந்தும் உள்ளது. மீதமுள்ள 0.75 கி.மீ. சாலை ஓடைக்கரை சாலையாகவும், இதில் இருபுறமும் சாலைகள் அரிக்கப்பட்டு மிக குறுகலாக பேருந்து இயக்க தகுதியற்ற நிலையில் உள்ளது.

2023 ஜனவரி 11]

70—

பேருந்து இயக்குதல்

வினா எண் 12921—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டை பேருந்து நிலையத்திலிருந்து திருவோணம், கந்தர்வகோட்டை, செங்கிப்பட்டி, திருச்சி வழியாக பழனி வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கந்தர்வகோட்டை தொகுதி, பட்டுக்கோட்டையிலிருந்து திருவோணம், கந்தர்வக்கோட்டை, செங்கிப்பட்டி வழியாக திருச்சிக்கு 3 அரசு புறநகர் பேருந்துகள்மூலம் நாளொன்றுக்கு 12 நடைகள் இயக்கப்படுகின்றன. தஞ்சாவூரிலிருந்து செங்கிப்பட்டி வழியாக திருச்சிக்கு ஒவ்வொரு 5 நிமிட இடைவெளியிலும், திருச்சியிலிருந்து திண்டுக்கல் வழியாக பழனிக்கு ஒவ்வொரு 15 நிமிட இடைவெளியிலும் பகுதி பகுதியாக பேருந்துகள் போதுமான அளவிற்கு இயக்கப்பட்டு வருகிறது. கோரிக்கை வழித்தடம் ஒரு சுற்று வழித்தடமாகும். இவ்வழித்தடத்தில் நேரடி பயணிகளின் பயன்பாடு மிக மிக குறைவு என்பதால் மேற்கூறப்பட்ட பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

71—

பேருந்து இயக்குதல்

வினா எண் 12922—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டை முதல் புதுக்கோட்டை வரை (வழி திருவோணம், கந்தர்வகோட்டை, ஆதனக்கோட்டை, பெருங்களூர்) பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கந்தர்வகோட்டை தொகுதி, பட்டுக்கோட்டையிலிருந்து கந்தர்வகோட்டை, செங்கிப்பட்டி வழியாக திருச்சிக்கு 3 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள்மூலம் நாளொன்றுக்கு 13 நடைகளும் மற்றும் தனியார் பேருந்துகள் 4 நடைகளும், தஞ்சாவூரிலிருந்து கந்தர்வகோட்டை– பெருங்களூர் வழியாக புதுக்கோட்டைக்கு 10 நிமிடத்திற்கு ஒரு அரசு பேருந்தும் மற்றும் தனியார் பேருந்துகள்மூலம் நாளொன்றுக்கு 15 நடைகள் என பகுதி பகுதியாக போதுமான பேருந்து வசதி அளிக்கப்பட்டுள்ளது.

72—

பேருந்து இயக்குதல்

வினா எண் 12929—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், இராங்கியன்விடுதி கிராமத்திலிருந்து பட்டுக்கோட்டை வரை புதியதாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கறம்பக்குடியிலிருந்து இராங்கியன்விடுதி, ஊரணிபுரம் வழியாக கலியரான் விடுதிக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், புதுக்கோட்டை மண்டலத்தின் 1 புறநகர் பேருந்துமூலம் நாளொன்றுக்கு 4 நடைகளும், திருச்சியிலிருந்து கந்தர்வகோட்டை, ஊரணிபுரம் வழியாக பட்டுக்கோட்டைக்கு 3 அரசு புறநகர் பேருந்துகள்மூலம்

2023 ஜனவரி 11]

13 நடைகளும் இயக்கப்படுகின்றன. எனவே, கோரிக்கை வழித்தடத்தில் பகுதி பகுதியாக பேருந்து வசதி உள்ளது.

73—

பேருந்து இயக்குதல்

வினா எண் 12933—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டை தொகுதிக்குட்பட்ட தெம்மாவூரிலிருந்து மின்னாத்தூர், இராமுடையான்பட்டி வழியாக கந்தர்வகோட்டைக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கந்தர்வகோட்டை தொகுதி கீரனூரிலிருந்து ஒடுகம்பட்டி, குன்றாண்டார் கோவில் நால் ரோடு, தெம்மாவூர், வத்தனாகோட்டை, மின்னாத்தூர், இராமுடையான்பட்டி வழியாக கந்தர்வக்கோட்டைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், புதுக்கோட்டை மண்டலத்தின் ஒரு நகர் பேருந்துமூலம் நாளொன்றுக்கு 2 நடைகள் இயக்கப்பட்டன. தெம்மாவூரிலிருந்து வத்தனாக்கோட்டை வரை உள்ள 2 கி.மீ. தூரத்திற்கான சாலை பேருந்து இயக்க இயலாத அளவிற்கு மோசமாக உள்ளது. எனவே, இவ்வழித்தடத்தில் தற்போது பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

74—

வட்டார போக்குவரத்து அலுவலகம்

வினா எண் 12956—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கந்தர்வகோட்டை, கறம்பக்குடி, குன்றாண்டார்கோவில், ஆதனக்கோட்டை ஆகிய பகுதிகளை இணைத்து, கந்தர்வகோட்டையை தலைமையிடமாகக் கொண்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

போக்குவரத்துத் துறை கட்டுப்பாட்டில் 12 சரக அலுவலகங்களும், 2 செயலாக்க இணைப் போக்குவரத்து அலுவலகங்களும், 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களும், 54 மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களும் (பகுதி அலுவலகம்) மற்றும் 22 சோதனைச் சாவடிகளும் என மொத்தம் 181 அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

2. புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டையில் ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகமும், அறந்தாங்கி, இலுப்பூர் மற்றும் ஆலங்குடி ஆகிய பகுதிகளில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களும் (பகுதி அலுவலகம்) இயங்கி வருகின்றன. கந்தர்வகோட்டையிலிருந்து புதுக்கோட்டை 34 கி.மீ. தொலைவிலும், ஆலங்குடி 29 கி.மீ. தொலைவிலும், இலுப்பூர் 58 கி.மீ. தொலைவிலும் மற்றும் அறந்தாங்கி 56 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. கந்தர்வகோட்டைக்கு மிக அருகில் நான்கு வட்டாரப் போக்குவரத்துத் துறை அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

3. கந்தர்வகோட்டை பகுதியில் 1,800 போக்குவரத்து வாகனங்களும், 6,100 போக்குவரத்து அல்லாத வாகனங்களும் உள்ளன. மேலும் ஒரு புதிய பகுதி அலுவலகம் துவங்குவதற்கு குறைந்தபட்சம் 2,500 போக்குவரத்து வாகனங்களும், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் துவங்குவதற்கு 7,500 போக்குவரத்து வாகனங்களும் இருத்தல் வேண்டும். எனவே, தற்போதுள்ள சூழ்நிலையில் கந்தர்வகோட்டை பகுதியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், வருங்காலங்களில் இப்பகுதியில் போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில் புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பது குறித்து ஆராயப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

2023 ஜனவரி 11]

75—

பேருந்து இயக்குதல்

வினா எண் 14338—முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருச்சிராப்பள்ளி கிழக்கு தொகுதிக்குட்பட்ட சங்கிலியாண்டபுரம், செந்தண்ணீர்புரம் பகுதிகளிலிருந்து மத்திய பேருந்து நிலையம் வரை போதுமான பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மத்திய பேருந்து நிலையம்–செந்தண்ணீர்புரம் (வழி) மேலப்புதூர், வேர்ஹவுஸ், சங்கிலியாண்டபுரம் வழித்தடத்தின் மொத்த நீளம் 8.0 கி.மீ. ஆகும். இவ்வழித்தடத்தில் தற்பொழுது மத்திய பேருந்து நிலையம்–முத்துமணிடவுன் (வழி) மேலப்புதூர், வேர்ஹவுஸ், சங்கிலியாண்டபுரம், செந்தண்ணீர்புரம் வழியாக 4 நகரப் பேருந்துகள் (தடம் எண்கள் 052A, 052B, 052C, 052D) மூலம் தினசரி 22 நடைகளும், 2 தனியார் நகரப் பேருந்துகள்மூலம் தினசரி 26 நடைகளும் ஆக மொத்தம் தினசரி 48 நடைகள் இயக்கப்படுகின்றன.

இது தவிர சத்திரம் பேருந்து நிலையம்–முத்துமணிடவுன் (வழி) வேர்ஹவுஸ், சங்கிலியாண்டபுரம், செந்தண்ணீர்புரம் வழியாக 3 அரசு நகரப் பேருந்துகள்மூலம் தினசரி 72 நடைகளும், 2 தனியார் நகரப் பேருந்துகள்மூலம் தினசரி 26 நடைகளும், ஆக மொத்தம் தினசரி 98 நடைகள் இயக்கப்படுகின்றன. மேற்படி சங்கிலியாண்டபுரம், செந்தண்ணீர்புரம் பகுதி மக்கள் இப்பேருந்துகள்மூலம் 4.0 கி.மீ. தொலைவிலுள்ள வேர்ஹவுஸ் வந்து அங்கிருந்து 4.0 கி.மீ. தொலைவிலுள்ள மத்திய பேருந்து நிலையம் செல்வதற்கு ஒவ்வொரு 3 முதல் 5 நிமிட இடைவெளியில் சத்திரம் பேருந்து நிலையம்–மத்திய பேருந்து நிலையம் வழித்தடத்தில் நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

76—

பேருந்து இயக்குதல்

வினா எண் 14339—முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருச்சிராப்பள்ளி கிழக்கு தொகுதி, இந்திரா நகர் வழியாக பொன்மலைப்பட்டியில் இருந்து சத்திரம் பேருந்து நிலையம் வரை செல்லும் தடம் எண் 16ஏ என்ற பேருந்தை மீண்டும் இந்திரா நகர் வழியாக இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், திருச்சி மண்டலத்தின்மூலம் இயக்கப்படும் நகரப் பேருந்து தடம் எண் 016B–ல், காலை 8–55 மணிக்கு பொன்மலைப்பட்டியிலிருந்து சத்திரம் பேருந்து நிலையத்திற்கும், மாலை 4–35 மணிக்கு சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து பொன்மலைப்பட்டிக்கும் இந்திரா நகர் வழியாக தினசரி 2 நடைகள் இயக்க கால அட்டவணை உள்ளது. கொரோனா ஊரடங்கு காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த இப்பேருந்து, தற்போது கொரோனா ஊரடங்கு தளர்வுகள் மற்றும் பள்ளி, கல்லூரிகள் திறக்கப்பட்டதால் உரிய கால அட்டவணைப்படி இயக்கப்படுகிறது.

77—

பணிமனை

வினா எண் 15115—திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரம்பலூரில் உள்ள அரசு பேருந்து பணிமனையை இரண்டாகப் பிரித்து, கிருஷ்ணாபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய பணிமனை உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்ட தலைநகரிலிருந்து 20.0 கிலோ மீட்டர் தொலைவில் கிருஷ்ணாபுரம் அமைந்துள்ளது. தற்பொழுது தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், திருச்சி மண்டலத்தில் உள்ள பெரம்பலூர் பணிமனையில் 62 புறநகரப் பேருந்துகளும், 34 நகரப் பேருந்துகளும் ஆக மொத்தம் 96 பேருந்துகள் கிருஷ்ணாபுரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு இயக்கப்படுகின்றன. அதன்மூலம் அப்பகுதியைச் சுற்றிலும் உள்ள பொதுமக்கள் பயன்பெற்று வருகின்றனர். எனவே, பெரம்பலூர் அரசுப் பணிமனையை இரண்டாகப் பிரித்து புதிதாக கிருஷ்ணாபுரத்தில் பணிமனை அமைப்பதற்கான அவசியம் எழவில்லை.

78—

கூடுதல் பேருந்து இயக்குதல்

வினா எண் 51839—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஒன்றியம், வாணவரெட்டி கிராமத்திலிருந்து கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு கூடுதல் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக கள்ளக்குறிச்சி கிளை–2–னைச் சார்ந்த நகரப் பேருந்து தடம் எண் T15C மூலம் கள்ளக்குறிச்சி முதல் வாணவரெட்டி வழியாக கீழ்நாரியப்பனூர் வழித்தடத்தில் 2 நடைகளும் மற்றும் கள்ளக்குறிச்சி முதல்

[2023 ஜனவரி 11

வாணவரெட்டி வழியாக ஈரியூர் வழித்தடத்தில் 2 நடைகளும் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், 2 தனியார் மினி பேருந்துகள்மூலம் கள்ளக்குறிச்சி முதல் வாணவரெட்டி வரையுள்ள வழித்தடத்தில் தினசரி 16 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்து வசதிகளே போதுமானதாக கருதப்படுகிறது.

79—

கிரிவல சாலை

வினா எண் 1916—திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, எருமப்பட்டி ஒன்றியம், தலைமலை பெருமாள் கோயிலுக்கு கிரிவல சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி ஒன்றியம், தலைமலை அருள்மிகு வெங்கடாஜலபதி திருக்கோயில் மலைப்பகுதியில் அமைந்துள்ளது. மலையைச் சுற்றியுள்ள நிலம் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. எனவே, வருவாய்த் துறை மூலமாக தார்ச்சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

80—

குடமுழுக்கு

வினா எண் 7542—முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருபுவனம் அருள்மிகு கம்பஹரேஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் நகர் மற்றும் வட்டம், திருபுவனம் அருள்மிகு கம்பஹரேஸ்வரர் சுவாமி திருக்கோயில் கும்பாபிஷேகம் விழா 2008–ல் நடைபெற்றது. தற்போது 14 ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டதால் திருப்பணி செய்ய தொல்லியல் துறை வல்லுநர் குழுவின் கருத்துருவிற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. தொல்லியல் துறை வல்லுநர் குழுவின் கருத்துரு பெற்று, மண்டல அளவிலான Heritage Screening Committee, *மாநில அளவிலான* Heritage Screening Committee *மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றம் அமைத்த வல்லுநர் குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டு, அக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் ஓராண்டிற்குள் திருப்பணி வேலைகள் துவங்கப்படும்.*

81—

குடமுழுக்கு

வினா எண் 7543—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் பகுதியில் அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள அருள்மிகு மகாலிங்க சுவாமி திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் நகர் மற்றும் வட்டம், அருள்மிகு மகாலிங்க சுவாமி திருக்கோயில் கும்பாபிஷேகம் விழா 28–8–2006–ல் நடைபெற்றது. 15 ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டதால் திருப்பணி செய்ய

தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று, மண்டல அளவிலான Heritage Screening Committee, மாநில அளவிலான Heritage Screening Committee மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றம் அமைத்த வல்லுநர் குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டு, அக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் மேற்படி திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்திட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

82—

யாத்ரிநிவாஸ் கட்டுதல்

வினா எண் 11979—திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் வடக்கு தொகுதி, மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் வளாகத்தில் பக்தர்கள் தங்குமிடம், துயில்கூடங்கள், உணவகம் போன்ற வசதிகளுடன்கூடிய யாத்ரிநிவாஸ் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் வடக்கு தொகுதி, மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களின் பயன்பாட்டிற்காக கீழ்க்காணும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன:–

1. 12 அறைகள் கொண்ட மருதம் தங்கும் விடுதி

2. தற்போது பஞ்சாமிர்தம், கற்கண்டு பொங்கல், புளியோதரை, சம்பா சாதம் மற்றும் திணைமாவு உருண்டை போன்ற பிரசாதங்கள் திருக்கோயிலில் தயாரிக்கப்பட்டு, 23–4–2022 அன்று முதல் பக்தர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

3. இப்பகுதியில் வனத் துறையினரால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாலும், வனவிலங்குகள் நடமாடும் பகுதி என்பதாலும், 1–7–2018 அன்றிலிருந்து உணவகம் செயல்படவில்லை.

2023 ஜனவரி 11]

எனவே, இத்திருக்கோயிலுக்கு தற்போதைய நிலையில் யாத்ரிநிவாஸ் கட்ட தற்போது திட்டம் ஏதுமில்லை.

இத்திருக்கோயிலின் உபகோயிலான வடவள்ளி, அருள்மிகு கரிவரதராஜ பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமாக வடவள்ளி புல எண் 62, 66, 69 சுமார் 11.27 ஏக்கர் நிலம் உள்ளது. இதில், தற்போது 2.50 ஏக்கர் பரப்பில் நந்தவனம் பேணப்பட்டு வருகிறது. மீதமுள்ள சுமார் 8.75 ஏக்கர் நிலத்தில் யாத்ரிநிவாஸ் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

83—

கருவூலம்

வினா எண் 3260—டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மொடக்குறிச்சி வட்டத்தில் புதிய கருவூலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டத்தில் நாளது தேதியன்று சார் கருவூலம் ஏதும் செயல்படவில்லை. சார் கருவூலங்கள் இல்லாத வட்டத் தலைமையிடங்களில் புதிய சார் கருவூலங்கள் அமைப்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க அரசாணை (நிலை) எண் 324, நிதித் (க.க.3) துறை, நாள் 27–9–2018–ன்படி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன்படி அமைக்கப்பட்ட ஈரோடு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு, ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டத்தில் புதிய சார் கருவூலம் அமைக்க ஆய்வு செய்து அளித்துள்ள அறிக்கையில், பரிந்துரை செய்துள்ளது. அக்குழுவின் பரிந்துரையின்படி, ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டத்தில் புதிய சார் கருவூலம் அமைப்பதற்கான கருத்துருக்கள் கருவூல கணக்கு ஆணையரிடமிருந்து பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

[2023 ஜனவரி 11

எனவே, உரிய நடைமுறைகளைப் பின்பற்றிய பிறகு ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டத்தில் புதிய சார் கருவூலம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

84—

பயிற்சி மையம்

வினா எண் 3910—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிள்ளியூர் தொகுதியில் அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான முதல்நிலைத் தேர்வு பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிள்ளியூர் தொகுதியில் அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான முதல்நிலைத் தேர்வு பயிற்சி மையம் அமைப்பது அரசின் ஆய்வில் தற்போது இல்லை.

85—

ஆவின் பாலகம், பூங்காவை புனரமைத்தல்

வினா எண் 713—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, அடையாறு ஆவின் பாலகம் மற்றும் பூங்காவை புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, அடையாறு ஆவின் பாலகம் மற்றும் பூங்காவை புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

86—

ஆவின் பால் பண்ணை அமைத்தல்

வினா எண் 6742—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டத்தில் ஆவின் பால் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டத்தில் ஆவின் பால் பண்ணை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லையென தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

87—

ஆவின் பாலகம்

வினா எண் 11944—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலையில் உயர்தர நவீன ஆவின் பாலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதி, விராலிமலையில் உயர்தர நவீன பாலகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

88—

பால் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 11945—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, இலுப்பூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதி, இலுப்பூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

89—

மானியம்

வினா எண் 11318—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஹஜ் பயணம் செல்ல அரசால் வழங்கப்படும் மானியத்தை உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2018 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மாநில ஹஜ் குழுமூலம் முதன்முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்ளும் தமிழக ஹஜ் பயணிகளுக்கு ஹஜ் மானியமாக ரூ.6 கோடி அறிவிப்பு செய்து, அரசாணை (நிலை) எண் 37, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (எஸ்1) துறை, நாள் 24–7–2018 மூலம் ஆணைகள் வெளியிடப்பட்டன. மேலும், அரசாணை (நிலை) எண் 13, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (எஸ்1) துறை, நாள் 16–2–2021–ல், அம்மானியத் தொகை ரூ.6 கோடியிலிருந்து ரூ.10 கோடியாக உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டன. 2021 ஆம் ஆண்டு ஹஜ் மானியத் தொகை உயர்த்தப்பட்ட நிலையில், தற்போது மறுபடியும் உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை.

90—

அடக்கஸ்தலங்கள்

வினா எண் 62036—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னையில் வசிக்கும் கிறிஸ்தவர்களின் அடக்கஸ்தலங்களுக்கு போதிய இடம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிறிஸ்தவர்களுக்கு அரசு புறம்போக்கு இடங்களில் அடக்கஸ்தலங்கள் அமைக்க நிலம் மாற்றம் செய்து அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலம்

வழங்கப்பட்டு வருகிறது. போதிய அரசு நிலங்கள் இன்மையால் இச்சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு அடக்கஸ்தலங்களை செய்து தருவதில் உள்ள இடர்பாடுகளைக் களையும்பொருட்டு, தனியார் நிலங்களை நேரடி பேச்சுவார்த்தைமூலம் கையகப்படுத்தி வழங்கிட ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகக் கொண்ட குழுவின்மூலம் உச்சபட்சமாக 2 ஏக்கர் வரையில் நிலத்தினை கையகப்படுத்தி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. 2022–2023 ஆம் ஆண்டுக்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்களால் சென்னையில் உள்ள கிறிஸ்தவர்களுக்கான அடக்கஸ்தலங்கள் அமைக்க புதிய நிலம் கையகப்படுத்தவும், சென்னையில் ஏற்கெனவே உள்ள அடக்கஸ்தலங்களில் மீண்டும் அடக்கம் செய்வதற்கு உள்ள நிபந்தனைகளைத் தளர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், சென்னையில் வசிக்கும் கிறிஸ்தவர்களின் அடக்கஸ்தலங்களுக்கு போதிய இடம் வழங்குவதற்கான நடவடிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

91—

நூலகம்

வினா எண் 1822—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, அனைத்து வார்டுகளிலும் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொதுமக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின்

2023 ஜனவரி 11]

எண்ணிக்கை அடிப்படையில், பகுதிநேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம்/கிளை நூலகம்/நூலகமாகத் தரமுயர்த்தப்படும். எனவே, காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சியில் 19 வார்டுகள் அமைந்துள்ளன. அதில், 11 வார்டுகளில் ஏற்கெனவே நூலகங்கள் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 8 வார்டுகளில் பகுதிநேர நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் நேரடியாக நூலகம் அமைக்க வழிவகையில்லை.

92—

அறிவியல் ஆய்வுக் கூடம்

வினா எண் 1921—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டையில் உள்ள மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் மற்றும் அறிவியல் ஆய்வுக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டையில் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

கந்தர்வகோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் மற்றும் ஆய்வக வசதி அமைக்க போதுமான இடம் உள்ளது. தற்போது, நபார்டு கட்டம் 12–ன்படி, 11 வகுப்பறைகள், உயர்நிலைப் பள்ளி ஆய்வகம்–1, மேல்நிலைப் பள்ளி ஆய்வகம்–1, கழிவறை 4 யூனிட் மற்றும் சுற்றுச்சுவர் 400 மீட்டர் அமைப்பதற்கு நபார்டு திட்டத்தின்கீழ் பள்ளிக்கு சுற்றுச்சுவர் மற்றும் ஆய்வகம் கட்டித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கந்தர்வகோட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு 6 ஆய்வகங்கள் உள்ளன. எனவே, கூடுதலாக ஆய்வகங்கள்

TRUTH ALONE TRIUMPHS

[2023 ஜனவரி 11

அமைக்க அவசியம் எழவில்லை. சுற்றுச்சுவர் 200 மீட்டர் உள்ளது. கூடுதலாக 100 மீட்டர் கட்டுவதற்கு நிலமானது முதன்மைக் கல்வி அலுவலரது பதவியின் பெயருக்கு நிலவகை மாற்றம் செய்யப்படவில்லை என்பதால், இப்பள்ளிக்கு எவ்வித அரசு திட்டத்திலும் சுற்றுச்சுவர் கட்டித் தர வழிவகையில்லை.

93—

சுற்றுச்சுவர்

வினா எண் 1922—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியம், புனல்குளம் கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியம், புனல்குளம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கான நிலமானது முதன்மைக் கல்வி அலுவலரது பதவியின் பெயருக்கு நிலவகை மாற்றம் செய்யப்படவில்லை என்பதால், இப்பள்ளிக்கு எவ்வித அரசு திட்டத்திலும் சுற்றுச்சுவர் கட்டித் தர வழிவகையில்லை.

94—

நூலகத்திற்கு கட்டடம்

வினா எண் 1947—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை, மணல்மேட்டில் உள்ள கிளை நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை தொகுதி, மணல்மேடு கிளை நூலகம் 1–6–1996 முதல் வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட இதுவரை காலிமனை ஏதும் கிடைக்கப்பெறாத நிலையில், தற்போது சொந்தக் கட்டடம் கட்ட வழிவகையில்லை.

95—

நூலகம்

வினா எண் 2063—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, கோட்டம் எண் 18, காசகாரனூர் பகுதியில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொதுமக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் பகுதிநேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம்/கிளை நூலகம்/முழுநேர நூலகமாகத் தரமுயர்த்தப்படும். எனவே, சேலம் மாநகராட்சி, கோட்டம் எண் 18, காசகாரனூர் பகுதியில் பகுதிநேர நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் நேரடியாக நூலகம் அமைக்க வழிவகையில்லை.

[2023 ஜனவரி 11

96—

கணினி வசதியுடன் நூலகம்

வினா எண் 3161—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, திலகர் நகர் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியப் பகுதியில் கணினி வசதியுடன் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொதுமக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் பகுதிநேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம்/கிளை நூலகம்/முழுநேர நூலகமாகத் தரமுயர்த்தப்படும். எனவே, சென்னை மாவட்டம், டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, திலகர் நகர் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியப் பகுதியில் பகுதிநேர நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நேரடியாக கணினி வசதியுடன் நூலகம் அமைக்க வழிவகையில்லை.

97—

கூடுதல் வகுப்பறைகள்

வினா எண் 3266—திரு. கே.எஸ். சரவணக்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரியகுளம் தொகுதி, சில்வார்பட்டியில் உள்ள மாதிரி மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதலாக 24 வகுப்பறைகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *தேனி மாவட்டம், பெரியகுளம் தொகுதி, சில்வார்பட்டியில் உள்ள மாதிரி மேல்நிலைப் பள்ளிக்கு 24 வகுப்பறைகள் அமைக்க போதுமான இடம் உள்ளது. எனவே, நபார்டு திட்டத்தின்கீழ் கூடுதலாக 24 வகுப்பறைகள் கட்டித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

98—

ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

வினா எண் 3277—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *நாங்குநேரி தொகுதி, மூலக்கரைப்பட்டியில் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் துவக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *நாங்குநேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மூலக்கரைப்பட்டி பேரூராட்சி எல்லைக்குள் 3 கி.மீ. தூரத்திற்குள் செயல்பட்டுவரும் திருநெல்வேலி மாவட்டம், முனைஞ்சிப்பட்டி மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் தொடக்கக் கல்வி ஆசிரிய பட்டயப் படிப்பில் முதலாமாண்டில் 100 மாணவர்களும், இரண்டாமாண்டில் 100 மாணவர்களும் சேர்த்து மொத்தம் 200 மாணவர்கள் சேர்க்கை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது, முதலாமாண்டில் 41 மாணவர்களும், இரண்டாமாண்டில் 36 மாணவர்களும் என மொத்தம் 77 மாணவர்கள் மட்டுமே கல்வி பயின்று வருகின்றனர். எனவே, நாங்குநேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மூலக்கரைப்பட்டியில் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் துவங்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

[2023 ஜனவரி 11

99—

நூலகம்

வினா எண் 5381—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, மேற்கு ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொதுமக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் பகுதிநேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம்/கிளை நூலகம்/முழுநேர நூலகமாகத் தரமுயர்த்தப்படும். எனவே, கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, மேற்கு ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் பகுதிநேர நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நேரடியாக நூலகம் அமைக்க வழிவகையில்லை.

100—

பொது நூலகம்

வினா எண் 7397—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் பேரூராட்சி, அடைக்கலப்பட்டணம் கிராமத்தில் பொது நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொதுமக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் பகுதிநேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம்/கிளை நூலகம்/முழுநேர நூலகமாகத் தரமுயர்த்தப்படும். எனவே, திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் பேரூராட்சி, அடைக்கலப்பட்டணம் கிராமத்தில் பகுதிநேர நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நேரடியாக நூலகம் அமைக்க வழிவகையில்லை.

101—

தரம்உயர்த்துதல்

வினா எண் 7443—திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கம் தொகுதி, செங்கம் ஒன்றியம், பெரும்பாக்கம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை செங்கம் தொகுதி, செங்கம் ஒன்றியம், பெரும்பாக்கம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வழிவகை இல்லை.

102—

பணி நிரந்தரம்

வினா எண் 7494—திரு. பெரி. செந்தில்நாதன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு பள்ளிகளில் நியமிக்கப்பட்டுள்ள பகுதிநேர ஆசிரியர்களை நிரந்தரமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் செயல்படும் ஒரு திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் பகுதிநேர சிறப்பாசிரியர்கள் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட தொகுப்பூதிய பணியாளர்களாவர். இவர்களது பணி வாரத்திற்கு மூன்று அரை நாட்கள் மட்டுமே ஆகும். பகுதிநேர வகுப்புகள் நடத்தும் இவர்களுக்கு பணிநேரத்தினை அதற்கு மேல் உயர்த்திட வாய்ப்புகள் இல்லை. அவ்வாறு உயர்த்தினால், அது மற்ற பாடத்திட்டங்களை பாதிக்கும் என்பதாலும், இவர்களது பணியினை முழுநேரப் பணியாக மாற்ற முடியாது என்பதாலும், இவர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கவோ அல்லது இவர்களது பணியை பணி நிரந்தரம் செய்யவோ சாத்தியக்கூறுகள் இல்லை.

103—

நூலகம் அமைத்தல்

வினா எண் 7952—திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம் சீமாபுரம் ஊராட்சியில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொது மக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் பகுதிநேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம்/கிளை நூலகம்/முழுநேர கிளை நூலகமாக தரம் உயர்த்தப்படும். எனவே, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், சீமாபுரம் ஊராட்சியில் பகுதிநேர நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நேரடியாக நூலகம் அமைக்க வழிவகையில்லை.

104—

தரமுயர்த்துதல்

வினா எண் 9700—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஏரியூர் ஊராட்சி ஒன்றியம், மஞ்சரஅள்ளி கிராமத்தில் ஏர்கொல்பட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பெண்ணாகரம் தொகுதி, ஏரியூர் ஊராட்சி ஒன்றியம், மஞ்சரஅள்ளி கிராமத்தில் ஏர்கொல்பட்டி நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த சூழல் இல்லை.

[*2023 ஜனவரி 11*

105—

தரமுயர்த்துதல்

வினா எண் 12194—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், பாசார் ஊராட்சியில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், பாசார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த சூழல் இல்லை.

106—

கூடுதல் வகுப்பறைகள்

வினா எண் 13137—முனைவர். த. இனிகோ இருதயராஜ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருச்சிராப்பள்ளி கிழக்கு தொகுதி, டவுன் ஹால் பகுதியில் செயல்படும் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டவும், கூடுதல் இருக்கை மற்றும் மேஜைகள் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருச்சி மாவட்டம், டவுன் ஹால், திருச்சிராப்பள்ளி, அரசு மேல்நிலைப் பள்ளியின் மொத்த நிலப் பரப்பளவு 26,714 சதுர

2023 ஜனவரி 11]

மீட்டர் ஆகும். இந்நிலமானது தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ளது. இப்பள்ளியில் நிலம் முதன்மைக் கல்வி அலுவலரது பெயரில் இல்லை. பள்ளி அமைந்துள்ள நிலம் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதால் நபார்டு கடனுதவி திட்டம் மற்றும் வேறு எந்த திட்டத்தின் கீழும் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட வழிவகை இல்லை. எனவே, கூடுதல் இருக்கை மற்றும் மேஜைகள் வழங்கவும் அவசியம் எழவில்லை.

107—

தரமுயர்த்துதல்

வினா எண் 15224—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், நொமத்தம்பட்டியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், நொமத்தம்பட்டியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது.

108—

தொடக்கப் பள்ளி

வினா எண் 17982—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

(அ) பெண்ணாகரம் தொகுதி, தித்தியோப்பனஅள்ளி ஊராட்சி, மருவீட்டுப்பள்ளம் கிராமத்தில் புதிய தொடக்கப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, தித்தியோப்பனஅள்ளி ஊராட்சி, மருவீட்டுப்பள்ளம் கிராமத்திற்கு அருகில் ஆலமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி செயல்படுகிறது. இப்பள்ளிக்கு குழந்தைகள் சென்றுவர ஒருங்கிணைந்த பள்ளிக் கல்விமூலம் போக்குவரத்து வசதி கொடுக்கப்பட்டு வருவதால், பெண்ணாகரம் தொகுதி, தித்தியோப்பனஅள்ளி ஊராட்சி, மருவீட்டுப்பள்ளம் கிராமத்தில் புதிய தொடக்கப் பள்ளி தொடங்கவேண்டிய அவசியம் எழவில்லை.

109—

தரமுயர்த்துதல்

வினா எண் 21600—திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளித்தலை தொகுதி, தோகைமலை ஊராட்சி ஒன்றியம், ஆர்ச்சம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை குளித்தலை தொகுதி, தோகைமலை ஊராட்சி ஒன்றியம்,

2023 ஜனவரி 11]

ஆர்ச்சம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரமுயர்த்த சூழல் இல்லை.

110—

தரமுயர்த்துதல்

வினா எண் 38060—திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரம்பலூர் தொகுதி, நாரணமங்கலம், மருதடி, விஜயகோபாலபுரம் கிராமங்களிலுள்ள நடுநிலைப் பள்ளியை தரம் உயர்த்தி, நாரணமங்கலத்தில் ஒருங்கிணைந்த உயர்நிலைப் பள்ளியாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் நடுநிலைப் பள்ளிகளை இணைத்து மற்றும் தரம் உயர்த்தி வேறொரு இடத்தில் ஒருங்கிணைந்த உயர்நிலைப் பள்ளியாக மாற்றியமைக்க வழிவகை இல்லை.

111—

நூலகம்

வினா எண் 38995—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், புலியூர் ஊராட்சி, புலியூர் கிராமத்தில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், புலியூர் ஊராட்சி, புலியூர் கிராமத்தில் 6–3–1983 முதல் கிளை நூலகம் செயல்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதியில் நூலகம் அமைக்க அவசியம் எழவில்லை.

112—

தரமுயர்த்துதல்

வினா எண் 52999—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, பழனி வட்டம், பச்சளநாயக்கன்பட்டி ஊராட்சியில் உள்ள தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

பழனி தொகுதி, பழனி வட்டம், பச்சளநாயக்கன்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு 3 கி.மீ. சுற்றளவிற்குள் அரசு உயர்நிலைப் பள்ளி, கணக்கன்பட்டி மற்றும் அரசு உயர்நிலைப் பள்ளி ஆயக்குடி ஆகிய பள்ளிகள் செயல்படுகின்றன. இக்குடியிருப்பு தமிழ்நாடு இலவச கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011–ன்படி உயர் தொடக்கக் கல்வி வசதியுள்ள குடியிருப்பாக உள்ளதால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

113—

நூலகம்

வினா எண் 57894—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், வீரணாமூர் கிராமத்தில் புதிய நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், வீரணாமூர் கிராமத்தில் 10–2–1966 முதல் கிளை நூலகம் செயல்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதியில் நூலகம் அமைக்க அவசியம் எழவில்லை.

114—

தரமுயர்த்துதல்

வினா எண் 58911—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, சின்னபெரமனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பெண்ணாகரம் தொகுதி, சின்னபெரமனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த சூழல் இல்லை.

[2023 ஜனவரி 11

115—

தரமுயர்த்துதல்

வினா எண் 58912—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, புதுக்கரம்பு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பெண்ணாகரம் தொகுதி, புதுக்கரம்பு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த சூழல் இல்லை.

116—

தரமுயர்த்துதல்

வினா எண் 61700—திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் (வடக்கு) தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, வார்டு எண் 07, போயம்பாளையம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய/நகராட்சி/மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை திருப்பூர் (வடக்கு) தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, வார்டு எண் 07, போயம்பாளையம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வழிவகை இல்லை.

117—

தொடக்கப் பள்ளி துவக்குதல்

வினா எண் 62471—திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளி ஊராட்சி ஒன்றியம், பில்லனகுப்பம் ஊராட்சி, சாதனப்பள்ளி கிராமத்தில் புதிய தொடக்கப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளி ஊராட்சி ஒன்றியம், பில்லனகுப்பம் ஊராட்சி, சாதனப்பள்ளி குடியிருப்பிற்கு 1 கி.மீ. சுற்றளவில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, மாமிடிகானப்பள்ளி செயல்பட்டு வருவதால், அக்குடியிருப்பு பகுதியில் புதிய தொடக்கப் பள்ளி துவங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

[2023 ஜனவரி 11

118—

தரமுயர்த்துதல்

வினா எண் 66489—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி, நார்தம்பட்டி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை தருமபுரி, நார்தம்பட்டி உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது.

119—

ESI மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 905—திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், கல்லூரணி ஊராட்சி, பாவூர்சத்திரத்தில் ESI மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்தில், புதுதில்லி தொழிலாளர் காப்புறுதி கழகத்தின் நேரடி கட்டுப்பாட்டில் 100 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. மேலும் 50 படுக்கை வசதிகள் கொண்ட ஒரு தொ.அ.ஈ. மருத்துவமனை அமைப்பதற்கு குறைந்தபட்சம் 50,000 காப்பீட்டு நபர்கள் இருக்கவேண்டும். தென்காசி மாவட்டத்தில் ஏற்கெனவே 3 தொ.அ.ஈ. மருந்தகங்கள், தென்காசியில் 5,483 காப்பீட்டு நபர்களும், சங்கரன்கோவிலில் 3,326 காப்பீட்டு நபர்களும் மற்றும் செங்கோட்டையில் 2,423 காப்பீட்டு நபர்களுடன் செயல்பட்டு வருகின்றன. தென்காசி மாவட்டத்தில் மொத்தம் 11,232 காப்பீட்டு நபர்கள் மட்டுமே உள்ளனர்.

எனவே, தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், கல்லூரணி ஊராட்சி பாவூர்சத்திரத்தில் தொ.அ.ஈ. கழகத்தின் கொள்கைப்படி தொ.அ.ஈ. மருத்துவமனை தற்சமயம் அமைக்க இயலாது.

120—

நல வாரியம்

வினா எண் 909—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் பனியன் தொழிலாளர்களுக்கு தனி நல வாரியம் அமைத்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணிநிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம்,

1982–ன்படி ESI, PF பிடித்தல் செய்யப்படாத அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு மட்டுமே தொழிலாளர் நல வாரியம் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், ESI, PF பிடித்தம் செய்யப்படாத தையல் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு 1–9–2006 முதல் தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நல வாரியம் என்ற பெயரில் தனி நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தில் 4,54,289 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளதுடன் 9,71,567 பயனாளிகளுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, கண் கண்ணாடி, ஓய்வூதியம் ஆகிய உதவித்தொகைகளுடன் இயற்கை மரணம், விபத்து மரணம், விபத்து ஊனம் ஆகிய நிகழ்வுகளின்போதும் நலத் திட்ட உதவியாக ரூ.2,62,68,32,746 வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இதர அமைப்புசாரா தொழிலாளர்கள் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு நல வாரியத்தில் பதிவு செய்து நலத் திட்ட உதவிகள் பெற்று வருகின்றனர்.

121—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 1429—திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சியில் புதிய தொழிற்பயிற்சி நிலையம் (ITI) அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கள்ளக்குறிச்சி தொகுதி அமைந்துள்ள கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 7 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 2,120 இருக்கைகளில்,

2023 ஜனவரி 11]

தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50% இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்ட கலந்தாய்வுமூலம் நிரப்பி, பயிற்சி கட்டணத்தை அரசே ஏற்கும் என்ற திட்டத்தின்கீழ், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் செயல்படும் 5 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கான 208 இருக்கைகளில் 154 இருக்கைகள் நிரப்பப்பட்டு, காலியாக உள்ள 54 இருக்கைகள் உட்பட, மொத்தம் 681 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

122—

ESI மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 2568—திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகராட்சி, கோட்டை தெருவில் தொழிலாளர்களுக்கான ஆரம்ப சுகாதார நிலையம் (ESI *மருத்துவமனை) அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) திருப்பத்தூர் மாவட்டத்தில் ஏற்கெனவே வாணியம்பாடி மற்றும் ஆம்பூரில் தொ.அ.ஈ. மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. திருப்பத்தூரில் புதிய தொ.அ.ஈ. மருந்தகத்தை துவங்க அரசு ஆணைப் பிறப்பித்துள்ளது.

திருப்பத்தூர் புதிய தொ.அ.ஈ. மருந்தகத்தை திறப்பதற்கு சென்னை தொ.அ.ஈ. கழகம் ஒப்பந்த முறையில் வாடகை கட்டடத்தை தேர்வு செய்து மருத்துவ ஏற்பாடு சான்றிதழுடன்

வரைவு அறிக்கைக்காக புதுதில்லி தொ.அ.ஈ. கழகத்திற்கு சமர்ப்பிக்கும். மேலும், தொ.அ.ஈ. கழகத்தின் 2.0 திட்டத்தின்படி திருப்பத்தூர் மாவட்டத்திற்கான வரைவு அறிக்கையை எதிர்நோக்கி உள்ளது. வரைவு அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் திருப்பத்தூர் அரசு தொ.அ.ஈ. மருந்தகம் செயல்பட தொடங்கும்.

(ஆ) மாநில அரசு, காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களை சார்ந்தோர்களுக்கு மருத்துவ சேவையை மட்டுமே வழங்கி வருகிறது. கட்டடம் கட்டுதல், விரிவாக்கம், பராமரித்தல் மற்றும் அனைத்து முக்கிய கொள்கை முடிவுகளும் தொ.அ.ஈ. கழகத்தைச் சார்ந்ததாகும்.

தொ.அ.ஈ. கழகத்தின் கொள்கையின்படி 50 படுக்கைகள் கொண்ட புதிய தொ.அ.ஈ. மருத்துவமனையை அமைப்பதற்கு குறைந்தபட்சம் 50,000 காப்பீட்டு நபர்கள் இருக்கவேண்டும்.

வாணியம்பாடியில் 100 படுக்கைகள் கொண்ட புதிய தொ.அ.ஈ. மருத்துவமனை அமைக்க தொ.அ.ஈ. கழகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. எனவே, திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகராட்சி, கோட்டை தெருவில் தொ.அ.ஈ. மருத்துவமனை அமைக்க தற்பொழுது இயலாது.

123—

திறன் மேம்பாட்டு பயிற்சி நிறுவனம் அமைத்தல்

வினா எண் 2609—திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திறன் மேம்பாட்டு பயிற்சி நிறுவனம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சட்டமன்ற தொகுதி அமைந்துள்ள சிவகங்கை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 2 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 10 தனியார்

2023 ஜனவரி 11]

தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 2,102 இருக்கைகளில் மொத்தம் 1,177 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50% இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்ட கலந்தாய்வுமூலம் நிரப்பி பயிற்சி கட்டணத்தை அரசே ஏற்கும் என்ற திட்டத்தின்கீழ், 2020 ஆம் ஆண்டு சிவகங்கை மாவட்டத்தில் செயல்படும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

124—

பணி நிரந்தரம் செய்தல்

வினா எண் 2812—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பொன்னேரி தொகுதியில், காட்டுப்பள்ளி கிராமத்தில் கப்பல்கட்டும் தளம் மற்றும் துறைமுகத்தில் பணிபுரிந்து வருவோர்களை பணி நிரந்தரம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

பொன்னேரி தொகுதி, காட்டுப்பள்ளி கிராமத்தில் அமைந்துள்ள L&T Limited *என்ற தொழிற்சாலையில் புதிய கப்பல்கள் கட்டுதல் மற்றும் கப்பல்கள் பழுது நீக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த கப்பல் கட்டும் நிறுவனம் தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையில் மொத்தம் 360 நிரந்தர பணியாளர்கள் பணிபுரிகின்றனர். மேலும், 180 ஒப்பந்ததாரர்கள்மூலம் தொழிற்சாலை உற்பத்தி பணி அல்லாத பிற நிரந்தரமற்ற பணிகளில் மொத்தம் 1,650 ஒப்பந்த பணியாளர்கள் பணிபுரிகின்றனர். ஒப்பந்ததாரர்கள் மேற்படி தொழிற்சாலையில்*

நிரந்தரமற்ற பணிகளில் ஒப்பந்த பணியாளர்களை ஈடுபடுத்த முறையான ஒப்பந்த உரிமை பெற்றுள்ளனர். பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த உரிமை பெற்றுள்ள ஒப்பந்ததாரர்கள் உரிமத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள பணியாள் எண்ணிக்கைக்கு உட்பட்டு பணியின் தேவை மற்றும் கால அளவீட்டுக்கு ஏற்ப தங்களது பணியாளர்களை கொண்டு ஒப்பந்த பணிகள் முடிக்கப்படுகிறது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

125—

அயல்நாட்டு வேலைவாய்ப்பு பயிற்சி மையம் அமைத்தல்

வினா எண் 2814—திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அயல்நாட்டு வேலைவாய்ப்பு பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 1978 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு வெளிநாட்டு வேலைநாடுநர்களை வெளிநாடுகளில் பணியமர்த்தும் நோக்கத்துடன் சென்னையை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வருகிறது என்றும், இந்நிறுவனத்திற்கு மாவட்ட அளவில் கிளை அலுவலகங்கள் ஏதுமில்லை. வெளிநாட்டு வேலைநாடுநர்கள் தங்கள் பெயரை பதிவு செய்து கொள்வதற்கு ஏற்றவாறு இந்நிறுவனம் www.omcmanpower.com என்ற வலைதளத்தினை உருவாக்கியுள்ளது. இவ்வலைதளம்மூலம் வெளிநாட்டு வேலைநாடுநர்கள் தங்கள் பெயரை பதிவு செய்கிறார்கள். மேலும், அரசாணை (நிலை) எண் 192, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஆர்–1) துறை, நாள் 7–10–2016 மூலம் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டி மையங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு உதவி மையங்கள் நிறுவப்பட்டு

செயல்பட்டு வருகின்றன. எனவே கன்னியாகுமரி மாவட்டத்திற்கென தனியாக அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் கிளை அலுவலகம் அமைக்கும் நிலை எழவில்லை.

126—

நல வாரியம்

வினா எண் 3273—திரு. A.K. செல்வராஜ்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கைத்தறி மற்றும் விசைத்தறி தொழிலாளர்களுக்கென நல வாரியம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ESI, PF பிடித்தம் செய்யப்படாத கைத்தறி மற்றும் கைத்தறிப் பட்டு நெய்யும் தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கென 14–3–2001 அன்று முதல் தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப் பட்டு நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியம் என்ற பெயரில் தனி நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தில் 1,07,809 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளதுடன், 3,33,367 பயனாளிகளுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, கண் கண்ணாடி, இயற்கை மரணம், விபத்து மரணம், விபத்து ஊனம் மற்றும் மாதாந்திர ஓய்வூதியம் ஆகியவற்றின்கீழ் நலத் திட்ட உதவியாக ரூ.124.26 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், விசைத்தறி நெசவு செய்யும் தொழிலாளர்களுக்கென 13–7–2009 அன்று முதல் தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர்கள் நல வாரியம் என்ற பெயரில் தனி நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தில் 76,956 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளதுடன், 1,74,118 பயனாளிகளுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, கண்

கண்ணாடி, இயற்கை மரணம், விபத்து மரணம், விபத்து ஊனம் மற்றும் மாதாந்திர ஓய்வூதியம் ஆகியவற்றின்கீழ் நலத் திட்ட உதவியாக ரூ.59.65 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பதிவு புதுப்பித்தல், நலத் திட்ட உதவித் தொகைகள் ஒப்பளித்தல் மற்றும் வழங்குதல் போன்ற அமைப்புசாரா தொழிலாளர்களின் நல வாரியப் பணிகள் மாவட்ட அளவில் கோயம்புத்தூர் தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

127—

தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்

வினா எண் 4029—திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, ஏர்வாடி, இட்டாமொழியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி சட்டமன்ற தொகுதி அமைந்துள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 16 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 3,838 இருக்கைகளில், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50% இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்ட கலந்தாய்வுமூலம் நிரப்பி பயிற்சி கட்டணத்தை அரசே ஏற்கும் என்ற திட்டத்தின்கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்படும் 9 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கான 266 இருக்கைகளில் 153 இருக்கைகள் நிரப்பப்பட்டு, காலியாக உள்ள 113 இருக்கைகள் உட்பட மொத்தம் 1,791 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக

2023 ஜனவரி 11]

உள்ளதால், திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, ஏர்வாடி, இட்டாமொழியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

128—

நல வாரியம்

வினா எண் 4405—திரு. இரா. அருள்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பனைமரம் ஏறும் தொழிலாளர்களுக்கு நல வாரியம் அமைக்கவும் அதன் உறுப்பினர்களை நியமிக்கவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

ESI, PF *பிடித்தம் செய்யப்படாத பனைமரத் தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களுக்கென 18–10–2000 முதல் தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம் என்ற பெயரில் தனி நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நல வாரியம் துவங்கப்பட்ட நாள் முதல் 31–7–2021 வரை 9,759 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளதுடன், 28,050 பயனாளிகளுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, கண் கண்ணாடி, இயற்கை மரணம், விபத்து மரணம், விபத்து ஊனம் மற்றும் மாதாந்திர ஓய்வூதியம் ஆகியவற்றின்கீழ் நலத் திட்ட உதவியாக ரூ.12.16 கோடி வழங்கப்பட்டுள்ளது.*

மேலும், பதிவு, புதுப்பித்தல், நலத் திட்ட உதவித் தொகைகள் ஒப்பளித்தல் மற்றும் வழங்குதல் போன்ற அமைப்புசாரா தொழிலாளர்களின் நல வாரியப் பணிகள், மாவட்ட அளவில், தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. பனைமரத் தொழிலாளர்களுக்கென தனியே நல வாரியம் அமைக்கப்பட்டுள்ள நிலையில், பனை ஏறும் தொழிலாளர்களுக்கென புதிய நல வாரியம் அமைக்கும் நிலை எழாது.

[*2023 ஜனவரி 11*

129—

இ.எஸ்.ஐ. தலைமை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 4701—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி மாவட்டத்தில் மாவட்ட இ.எஸ்.ஐ. (ESI) *தலைமை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்தில், புது தில்லி தொழிலாளர் காப்புறுதி கழகத்தின் நேரடி கட்டுப்பாட்டில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. மேலும், 50 படுக்கைகள் கொண்ட ஒரு தொ.அ.ஈ. மருத்துவமனை அமைப்பதற்கு குறைந்தபட்சம் 50,000 காப்பீட்டு நபர்கள் இருக்க வேண்டும்.

தென்காசி மாவட்டத்தில் ஏற்கெனவே 3 தொ.அ.ஈ. மருந்தகங்கள், தென்காசியில் 5,483 காப்பீட்டு நபர்களும், சங்கரன்கோவிலில் 3,326 காப்பீட்டு நபர்களும் மற்றும் செங்கோட்டையில் 2,423 காப்பீட்டு நபர்களுடன் செயல்பட்டு வருகின்றன. தென்காசி மாவட்டத்தில் மொத்தம் 11,232 காப்பீட்டு நபர்கள் மட்டுமே உள்ளனர்.

எனவே, தென்காசி மாவட்டத்தில் தொ.அ.ஈ. கழகத்தின் கொள்கைப்படி தொ.அ.ஈ. மருத்துவமனை தற்சமயம் அமைக்க இயலாது.

130—

தரமுயர்த்துதல்

வினா எண் 4702—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஜனவரி 11]

(அ) ஆலங்குளம் தொகுதி, முக்கூடல் பேரூராட்சி பகுதியில் அமைந்துள்ள பீடி தொழிலாளர்கள் நல மருத்துவமனையை தரம் உயர்த்தி செயல்பாட்டிற்கு கொண்டு வர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டமானது ஒரு விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டமாகும். இதன் முக்கிய நோக்கம் ஒழுங்கமைக்கப்பட்ட துறைகளில் காப்பீடு செய்யப்பட்ட நபர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவ வசதிகள் வழங்குவதேயாகும்.

இவ்வியக்ககம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தினால் அடையாளம் காணப்பட்ட காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவ சேவையை மட்டுமே வழங்குகிறது. அனைத்து முக்கிய கொள்கை முடிவுகளும் புது தில்லி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தின்மூலம் எடுக்கப்படுகின்றன.

மேலும், தற்போது திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் பேரூராட்சிக்கு அருகிலுள்ள முக்கூடலில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சக (MoLE) கட்டுப்பாட்டின்கீழ் பீடித் தொழிலாளர்களுக்கான 30 படுக்கைகள் கொண்ட மத்திய மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

131—

தரமுயர்த்துதல்

வினா எண் 4717—திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் பேரூராட்சியில் அமைந்துள்ள பீடி தொழிலாளர்கள் நல மருத்துவமனையை தரம் உயர்த்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டமானது ஒரு விரிவான சமூகப் பாதுகாப்பு திட்டமாகும். இதன் முக்கிய நோக்கம் ஒழுங்கமைக்கப்பட்ட துறைகளில் காப்பீடு செய்யப்பட்ட நபர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் மருத்துவ வசதிகள் வழங்குவதேயாகும்.

இவ்வியக்ககம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தினால் அடையாளம் காணப்பட்ட காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவ சேவையை மட்டுமே வழங்குகிறது. அனைத்து முக்கிய கொள்கை முடிவுகளும் புது தில்லி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தின்மூலம் எடுக்கப்படுகின்றன.

மேலும், தற்போது திருநெல்வேலி மாவட்டம், முக்கூடலில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சக (MoLE) *கட்டுப்பாட்டின்கீழ் பீடித் தொழிலாளர்களுக்கான 30 படுக்கைகள் கொண்ட மத்திய மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.*

132—

அரசு தொழிற்பயிற்சி மையம் அமைத்தல்

வினா எண் 9512—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் தலா ஒரு அரசு தொழிற்பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி அமைந்துள்ள செங்கல்பட்டு மாவட்டத்தில் செயல்பட்டு

2023 ஜனவரி 11]

வரும் 2 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 7 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 2,584 இருக்கைகளில், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50% இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்ட கலந்தாய்வுமூலம் நிரப்பி பயிற்சி கட்டணத்தை அரசே ஏற்கும் என்ற திட்டத்தின்கீழ் செங்கல்பட்டு மாவட்டத்தில் செயல்படும் 4 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கான 100 இருக்கைகளில் 58 இருக்கைகள் நிரப்பப்பட்டு, காலியாக உள்ள 42 இருக்கைகள் உட்பட மொத்தம் 983 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் தொகுதியில் திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் தலா ஓர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

133—

தினக்கூலியை உயர்த்துதல்

வினா எண் 11232—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாடு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் தினக்கூலியை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் அரசு மற்றும் தனியார் தோட்டங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின்படி அரசால் ஊதியம் நிர்ணயம் செய்யப்படுகிறது.

[2023 ஜனவரி 11

தமிழ்நாட்டில் அரசு மற்றும் தனியார் தோட்டங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு அரசாணை (2டி) எண் 59, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 20–9–2017–ன்மூலம் தோட்டத் தொழிலுக்கு குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின்கீழ் குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்து அரசு உத்தரவிட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு சென்னை நுகர்வோர் விலைவாசி குறியீட்டு (அடிப்படை ஆண்டு 2001=100) எண் சராசரி (average) 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் 110 பைசா வீதம் 141.08 புள்ளிகளுக்கு 155.19 அகவிலைப்படியாக வழங்கப்படுகிறது. அதனடிப்படையில் 1–4–2021 முதல் அடிப்படை ஊதியமாக ரூ.183.50–ம், அகவிலைப்படியாக ரூ.155.19–ம் ஆக மொத்தம் ரூ.338.69 வழங்கப்பட்டு வருகிறது.

இத்தோட்டத் தொழிலில் பணிபுரியம் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின்படி 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதியம் மறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

அரசாணை (டி) எண் 330, தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை, நாள் 30–7–2021–ன்மூலம் தற்போது அரசால் இத்தொழிலுக்கு குறைந்தபட்ச ஊதியம் கீழ்க்கண்டவாறு மறுநிர்ணயம் செய்து முதனிலை அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள்	கன்னியாகுமரி மாவட்டத்தை தவிர்த்து பிற பகுதிகளில் உள்ள தேயிலை மற்றும் சின்கோனா தோட்ட நிறுவனங்கள்	காபி மற்றும் ஏலக்காய் தோட்ட நிறுவனங்கள்	கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேயிலை மற்றும் ரப்பர் தோட்ட நிறுவனங்கள்
(1)	(2)	(3)	(4)
	அடிப்படை ஊதியம் + அகவிலைப்படி	அடிப்படை ஊதியம் + அகவிலைப்படி	அடிப்படை ஊதியம் + அகவிலைப்படி

2023 ஜனவரி 11]

தொழிலாளர்கள்	கன்னியாகுமரி மாவட்டத்தை தவிர்த்து பிற பகுதிகளில் உள்ள தேயிலை மற்றும் சின்கோனா தோட்ட நிறுவனங்கள்	காபி மற்றும் ஏலக்காய் தோட்ட நிறுவனங்கள்	கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேயிலை மற்றும் ரப்பர் தோட்ட நிறுவனங்கள்
பெரியவர்கள்	*424.59 (228.00 + 196.59)*	*422.59 (226.00 + 196.59)*	*430.59 (234.00 + 196.59)*
வளரிளம் பருவத்தினர்	*287.40 (154.00 + 133.40)*	*286.40 (153.00 + 133.40)*	*291.40 (158.00 + 133.40)*

தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட முதனிலை அறிவிக்கைமீது பெறப்பட்ட கருத்துகள் மற்றும் மறுப்புகள் எதிர்வரும் குறைந்தபட்ச ஊதிய (மாநில) ஆலோசனை வாரிய கூட்டத்தில் வைத்து விவாதிக்கப்பட்டு, அதனடிப்படையில் இறுதி அறிவிக்கை வெளியிடப்படும்.

134—

அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்

வினா எண் 11245—திரு. N. அசோக்குமார்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதி, பேராவூரணி பகுதியில் மாணாக்கர் தேவை கருதி ITI (கெமிக்கல் பயிற்சி நிலையம்) அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேராவூரணி சட்டமன்றத் தொகுதி அமைந்துள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும்

[*2023 ஜனவரி 11*

3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 20 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 5,412 இருக்கைகளில், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50% இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்ட கலந்தாய்வுமூலம் நிரப்பி பயிற்சி கட்டணத்தை அரசே ஏற்கும் என்ற திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்ட 866 இருக்கைகளில் காலியாக உள்ள 740 இருக்கைகள் உட்பட மொத்தம் 3,198 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

135—

உயர் சிறப்பு மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 24001—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பீடி தொழிலாளர் அதிகம் வாழும் பகுதிகளில் 50 படுக்கை வசதிகளுடன் உயர் சிறப்பு மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டமானது ஒரு விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டமாகும். இதன் முக்கிய நோக்கம் ஒழுங்கமைக்கப்பட்ட துறைகளில் காப்பீடு செய்யப்பட்ட நபர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவ வசதிகள் வழங்குவதேயாகும்.*

இவ்வியக்ககம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தினால் அடையாளம் காணப்பட்ட காப்பீட்டாளர்கள் மற்றும்

2023 ஜனவரி 11]

அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவ சேவையை மட்டுமே வழங்குகிறது. அனைத்து முக்கிய கொள்கை முடிவுகளும் புது தில்லி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தின்மூலம் எடுக்கப்படுகின்றன.

மேலும், ஒரு புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை திறப்பதற்கு ஆரம்பத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகம், முன்மொழியப்பட்ட பகுதியை ஆய்வு செய்து கணக்கெடுப்பு அறிக்கையை வழங்கும். தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தின் கொள்கைப்படி 50 படுக்கைகள் கொண்ட ஒரு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைப்பதற்கு குறைந்தபட்சம் 50,000 காப்பீட்டு நபர்கள் இருக்க வேண்டும்.

136—

அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்

வினா எண் 25285—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) களம்பூரில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் (ITI) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் சட்டமன்ற தொகுதி அமைந்துள்ள திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 2 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 22 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 3,904 இருக்கைகளில், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50% இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்ட கலந்தாய்வுமூலம் நிரப்பி பயிற்சி கட்டணத்தை அரசே ஏற்கும் என்ற திட்டத்தின்கீழ்

ஒப்பளிக்கப்பட்ட 276 இருக்கைகளில் காலியாக உள்ள 226 இருக்கைகள் உட்பட 1,665 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், போளூர் சட்டமன்ற தொகுதி, திருவண்ணாமலை மாவட்டம், களம்பூர் பகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

137—

அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்

வினா எண் 25286—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேத்துப்பட்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் (ITI) *அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் சட்டமன்ற தொகுதி அமைந்துள்ள திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 2 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 22 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 3,904 இருக்கைகளில், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50% இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்ட கலந்தாய்வுமூலம் நிரப்பி பயிற்சி கட்டணத்தை அரசே ஏற்கும் என்ற திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்ட 276 இருக்கைகளில் காலியாக உள்ள 226 இருக்கைகள் உட்பட மொத்தம் 1,665 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் சட்டமன்றத் தொகுதியில் சேத்துப்பட்டில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

2023 ஜனவரி 11]

138—

அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்

வினா எண் 25287—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரிய கொழப்பலூரில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் (ITI) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் சட்டமன்ற தொகுதி, பெரிய கொழப்பலூர் அமைந்துள்ள திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 2 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 22 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 3,904 இருக்கைகளில், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50% இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்ட கலந்தாய்வுமூலம் நிரப்பி பயிற்சி கட்டணத்தை அரசே ஏற்கும் என்ற திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்ட 276 இருக்கைகளில் காலியாக உள்ள 226 இருக்கைகள் உட்பட 1,665 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் சட்டமன்ற தொகுதி, பெரிய கொழப்பலூர் பகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

139—

தொழிற்பயிற்சிக் கூடங்கள் அமைத்தல்

வினா எண் 28492—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஜனவரி 11

(அ) பெண்ணாகரம் தொகுதியில் தொழிற்பயிற்சி கூடங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதி அமைந்துள்ள தருமபுரி மாவட்டத்தில் 1 அரசு தொழிற்பயிற்சி நிலையம் ஒப்பளிக்கப்பட்ட 396 இருக்கைகளுடனும் மற்றும் 5 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஒப்பளிக்கப்பட்ட 384 இருக்கைகளுடனும் ஆக மொத்தம் 780 ஒப்பளிக்கப்பட்ட இருக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றன. இந்த ஒப்பளிக்கப்பட்ட 780 இருக்கைகளில், 388 இருக்கைகள் நிரப்பப்பட்டு 392 இருக்கைகள் பூர்த்தியாகாமல் காலியாக உள்ளன இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டிய சூழல் தற்போது எழவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

140—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

வினா எண் 1866—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ளதால், கடலூர் மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா

2023 ஜனவரி 11]

அமைப்பது தொடர்பாக கடந்த 2019 ஆம் ஆண்டு மேற்கொண்ட ஆய்வின்படி கடலூரில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பது குறித்த அறிவிப்பு கைவிடப்பட்டதாக அரசாணை (நிலை) எண் 11, தகவல் தொழில்நுட்பவியல் (ஆ.3) துறை, நாள் 20–9–2019–ல் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, நெய்வேலி தொகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க சத்தியக்கூறுகள் இல்லை.

141—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

வினா எண் 2216—திரு. இரா. அருள்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம்–பெங்களூரு நெடுஞ்சாலையில் வெள்ளக்கல்பட்டி, அம்மாபாளையம் ஊராட்சி பகுதியில் சுமார் 160 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்பட்ட எல்காட் டைடல் பார்க் வளாகத்தை முழுமையாக செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:

சேலத்தில் ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா 164.26 ஏக்கரில் அமைக்க 14, செப்டம்பர் 2007–ல் அடிக்கல் நிறுவப்பட்டது. இந்தப் பூங்காவிற்கு சிறப்பு பொருளாதார மண்டல அந்தஸ்து இந்திய அரசால் ஏப்ல் 30, 2008 அன்று வழங்கப்பட்டது. 110.93 ஏக்கர் நிலம் அரசாணைப்படி 2018 ஆம் ஆண்டு அரசிடமே ஒப்படைக்கப்பட்டது. எல்காட் நிறுவனம், சேலம் ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்தில் 53.33 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.44 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கி அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் 62,174 சதுர அடி பரப்பளவு கொண்ட நிருவாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தையும் கட்டி முடித்துள்ளது. இந்த எல்கோசெஸ்ஸில் 7 தகவல் தொழில்நுட்ப மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சேவை சார்ந்த நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எல்காட் தகவல் தொழில்நுட்ப

கட்டடத்தில் 9 தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு இடவசதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ் 614 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுடன் இயங்கி வருகின்றது. மேற்கூறிய தகவலின்படி, சேலத்தில் உள்ள எல்கோசெஸ் முழுமையாக செயல்படுகிறது.

142—

கூடுதல் கட்டணம் வசூலித்தல், செட்டாப் பெட்டிகள் வழங்க மறுத்தல்

வினா எண் 6855—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தடவழித் தொலைக்காட்சி இயக்குபவர்கள் கூடுதல் கட்டணம் வசூலிப்பதையும், செட்டாப் பெட்டிகள் வழங்க மறுப்பதையும் தடுப்பதற்கு அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் பொதுமக்களுக்கு நாட்டிலேயே குறைந்த கட்டணமாக ரூ.140 + GST–க்கு 216 சேனல்களை வழங்கி வருகிறது. மேலும், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் நிர்ணயித்த கட்டணத்தைவிடக் கூடுதலாக வசூல் செய்யும் ஆப்பரேட்டர்கள்மீது புகார் தெரிவிக்க 1800–425–2911 என்ற இலவச எண் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு புகார் பெறப்படும்பட்சத்தில், உடனடியாக அந்த ஆப்பரேட்டர்கள்மீது அந்தந்த மாவட்ட துணை மேலாளர்/ தனி தாசில்தார் மூலமாக அரசு நிர்ணயம் செய்த கட்டணத்தை மட்டும் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

143—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 417—திரு. க. செல்வராஜ்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 ஜனவரி 11]

(அ) *திருப்பூர் தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, 45–வது வார்டு, ஜம்பனை ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் 54 வீடுகளுக்கு வழங்கப்படாமல் உள்ள வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம் மற்றும் தெற்கு வட்டம், திருப்பூர் டவுன் கிராமம், 45–வது வார்டு,* M *பிளாக்–1 நகரளவை எண் 9–ல் 54 நபர்கள் வீடு கட்டி குடியிருந்து வருகின்றனர். மேற்படி புலமானது கிராம ஆவணங்களில் ஓடைப் புறம்போக்கு எனத் தாக்கலாகியுள்ளது. எனவே, நீர்நிலை புறம்போக்குகளில் அரசின் உத்தரவின்படி பட்டா வழங்க இயலாது.*

144—

சிமெண்ட் சாலை அமைத்தல்

வினா எண் 698—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, மாவேரிபேட்டை அருந்ததியர் குடியிருப்புப் பகுதியிலுள்ள தெருக்களுக்கு சிமெண்ட் சாலை அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, மாவேரிபேட்டை*

[2023 ஜனவரி 11

அருந்ததியர் குடியிருப்புப் பகுதியிலுள்ள தெருக்களுக்கு சிமெண்ட் சாலை அமைக்க கோரியது தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டது. தற்போது மேற்படி பகுதியில் செல்ல மாவேரிபேட்டை ஏரியின் ஒரு பகுதியில் வழி ஏற்படுத்தி பொதுமக்கள் தற்போது பயன்படுத்தி வருகிறார்கள். இந்த வழி நீர்நிலையின்மீது அமைந்துள்ளதால் நிலையான சிமெண்ட் சாலை ஏற்படுத்த வழிவகை இல்லை.

145—

தரமுயர்த்துதல்

வினா எண் 1739—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, கல்விராயன்பேட்டை தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, கல்விராயன்பேட்டை ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம், மாணாக்கர் எண்ணிக்கை, தேவை, நிதி ஒதுக்கீடு மற்றும் முன்னுரிமை ஆகியவற்றின் அடிப்படையில் அப்பள்ளியை தரம் உயர்த்துவது குறித்து பரிசீலிக்கப்படும்.

146—

தரமுயர்த்துதல்

வினா எண் 1741—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 ஜனவரி 11]

(அ) திருவையாறு தொகுதி, மாரனேரி தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, மாரனேரி ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம், மாணாக்கர் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அரசின் நிதி நிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் எதிர்காலத்தில் அப்பள்ளியை தரம் உயர்த்துவது குறித்து பரிசீலிக்கப்படும்.

147—

தரமுயர்த்துதல்

வினா எண் 1744—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, இராமபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், இராமபுரம் ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

148—

தரமுயர்த்துதல்

வினா எண் 1750—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, வெங்கடசமுத்திரம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, வெங்கடசமுத்திரம் ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் தேவை, மாணாக்கர் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அரசின் நிதி நிலைமையின் அடிப்படையில் அப்பள்ளியை அதன் அடுத்த நிலைக்கு தரம் உயர்த்த பரிசீலிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

149—

தரமுயர்த்துதல்

வினா எண் 1757—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, முத்துவீரகண்டியன்பட்டி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, முத்துவீரகண்டியன்பட்டி ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தற்போது வழிவகை இல்லை.

150—

மயானப் பாதை

வினா எண் 1792—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, சிலம்பிநாதன்பேட்டை ஆதி திராவிடர்களின் மயானப் பாதையை சிமெண்ட் சாலையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி வட்டம், சிலம்பிநாதன்பேட்டை ஆதி திராவிடர் குடியிருப்பில் உள்ள மயானப் பாதையை சிமெண்ட் சாலையாக தரம் உயர்த்த கள ஆய்வு மேற்கொண்டு, நிதிநிலைக்கேற்ப இப்பணிகளை மேற்கொள்வது குறித்து அரசு பரிசீலிக்கும்.

———

இணைப்பு III

(115 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

9-1-2023 ஆம் நாளைய பேரவை நடவடிக்கைக் குறிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு வரைவு உரையானது, தமிழ்நாடு அரசாங்கத்தால் ஏற்கெனவே அனுப்பப்பட்டு,*

(திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையை விட்டு வெளியேறினர்.)

அவரால் ஏற்பளிக்கப்பட்டு, அதன்பின்னர் அச்சடிக்கப்பட்டு இன்றைக்கு அனைத்து உறுப்பினர்களுக்கும் கணினியிலும், தேவைப்படும் உறுப்பினர்களுக்கு அச்சிட்ட பிரதிகளாகவும் வழங்கப்பட்டுள்ளன.

(திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. ஆர். வைத்திலிங்கம், திரு. பால் மனோஜ் பாண்டியன் மற்றும் திரு. பி. அய்யப்பன் ஆகியோர் அவையை விட்டு வெளியேறினர்.)

நம்முடைய திராவிட மாடல் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறாக செயல்பட்டுவரும் மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய செயல்பாடுகள், முற்றிலும் ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில், சட்டமன்றப் பேரவை விதிகளைப் பின்பற்றி, ஆளுநர் உரையைத் தொடங்குவதற்கு முன்னர் எங்களது எதிர்ப்பு எதனையும் அரசின் சார்பாக நாங்கள் பதிவு செய்யவில்லை.

(பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் திருமதி வானதி சீனிவாசன், டாக்டர் சி. சரஸ்வதி, திரு. எம்.ஆர். காந்தி ஆகியோர் 'வந்தே மாதரம்' என கோஷமிட்டுக் கொண்டு அவையை விட்டு வெளியேறினர்.)

2023 ஜனவரி 11]

பேரவையிலே மிகவும் கண்ணியத்தோடு, அரசமைப்புச் சட்டத்தின்கீழ் உரையாற்ற வந்துள்ள மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு முழு மரியாதை அளிக்கும் வகையில் நாங்கள் நடந்து கொண்டோம். ஆனாலும், எங்களது கொள்கைகளுக்கு மாறாக மட்டுமல்ல; அரசின் கொள்கைகளுக்கேகூட இன்றைக்கு அவர் மாறாக நடந்து கொண்டு, தமிழ்நாடு அரசு தயாரித்து, மாண்புமிகு ஆளுநர் அவர்களால் இசைவளிக்கப்பட்டு, அச்சிடப்பட்ட உரையை முறையாக, முழுமையாகப் படிக்காதது மிகவும் வருந்தத்தக்கது மட்டுமல்ல, சட்டமன்ற மரபுகளுக்கு ஒவ்வாத ஒரு செயலாகும்.

(மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அவையிலிருந்து வெளியேறினார்.)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் முனைவர் T.R.B. *ராஜா உள்ளிட்ட சிலர் "வாழ்க தமிழ்நாடு", "வெல்க தமிழ்நாடு" என முழக்கமிட்டனர்.)*

ஆகவே, "சட்டமன்றப் பேரவை விதி 17—ஐத் தளர்த்தி, இன்றைக்கு அச்சிடப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆங்கில உரை மற்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் படிக்கப்பட்ட தமிழ் உரை ஆகியனவும், நான் முன்மொழிகின்ற இத்தீர்மானமும் மட்டும், அவைக் குறிப்பில் ஏற வேண்டும்"

எனும் தீர்மானத்தையும்,

"அதேபோல், இங்கே அச்சிட்ட பகுதிகளுக்கு மாறாக மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இணைத்து படித்த பகுதிகள் இடம்பெறாது; விடுத்த பகுதிகள் இடம் பெறலாம்" என்னும் தீர்மானத்தையும் நான் முன்மொழிகிறேன். இத்தீர்மானத்தை இப்பேரவை ஒருமனதாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட இத்தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேற்படி தீர்மானத்தின்படி ஆளுநர் உரையில் இடம் பெற்றுள்ள அச்சிட்ட பகுதிகள் தவிர்த்து வேறு எதையும் பத்திரிகைகள் வெளியிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு IV

(115 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

Honourable Members of the Legislative Assembly,

Vanakkam.

It is my immense pleasure to address the first session of the Legislative Assembly for the calendar year 2023 in this August House. I extend my warm greetings for the New Year and Tamil festival of Pongal to the people of Tamil Nadu and to all members of this House. I wholeheartedly wish that this year brings greater happiness, prosperity and growth to our State.

2. In the last 50 years, Tamil Nadu has grown significantly in multiple sectors to become a pioneering State in the country. During the 1960s, Tamil Nadu was lagging behind in social, economic, educational and health indicators when compared to other big States. However, today, it stands tall as a leader among all States. This is primarily due to the model of good governance built on the pillars of social justice, equality, self-respect and rational thinking. As a result of the development model aimed at inclusive growth, Tamil Nadu has scored 63.3 marks and ranks first among the large States in the 'Social Progress Index' recently released by the Prime Minister's Economic Advisory Council based on the study of development status of States. This Government will continue to march with vigour on the path of this Dravidian model of development which has ensured the welfare and empowerment of suppressed, marginalized and backward sections of the society.

3. In the last year and a half, our Hon'ble Chief Minister has led the Government on this development path through his untiring efforts and diligence. As a result, Tamil Nadu has been adjudged the best performing big State in India Today's recent 'State of the States' survey. This award is a testimony to the dynamic leadership of our Hon'ble Chief Minister and the

Dravidian model of development, which is founded on the tenets of social justice and inclusive growth.

4. For people of Tamil Nadu to celebrate Pongal in a festive manner, the Hon'ble Chief Minister has ordered the distribution of Rs.1,000 as cash assistance, 1 kg raw rice, 1 kg sugar and 1 sugarcane to each of the 2.19 crore rice card holders in the State at a total cost of Rs.2,429 crore. The distribution has been inaugurated by the Hon'ble Chief Minister today. I am confident that this will help the people of the State to celebrate Pongal, which is an integral part of Tamil society, with joy and gaiety.

5. This Government's deft management of Mandous cyclone and north-east monsoon minimized damages in Chennai city to a great extent. In particular, construction of stormwater drains for a length of 261 km and other flood mitigation projects worth Rs.1,335 crore in Chennai city and peri-urban areas were sanctioned by this Government, and of these, 209 km of drain works were completed well before the onset of monsoon. Further, construction of 360 km of high-priority drains in Kosasthalaiyar basin was completed on a war footing. As a result, major areas of the core city which were severely flooded last year witnessed minimal stagnation during this monsoon. The traffic disruption caused by heavy rains was largely controlled and the city was quickly restored to normalcy. I convey my appreciation to this Government for its exemplary and effective management of the Mandous cyclone and north-east monsoon rains.

6. This Government, which functions on Muthamizh Arignar Kalaignar's philosophy of "Though we may fall, Tamil should flourish", is taking all steps to protect the rightful place of Tamil language.

7. Regarding the use of official language, this House has already passed a resolution against steps that are detrimental to the interests of all State languages including Tamil. This Government

will continue to urge that all State languages should be accorded the official language status.

8. Several States including Tamil Nadu had joined the GST regime, foregoing their fiscal autonomy on the assurance that their revenues will be protected. However, the anticipated revenues were not realized due to the drastic fall in revenues during the Covid pandemic. In such a scenario, the GST compensation regime has come to an end on 30.06.2022. Since the revenues of States are yet to fully recover from the impact of pandemic, this Government urges the Union Government to further extend the GST compensation period by at least two more years.

9. This Government gives utmost importance to the prompt redressal of public grievances, in line with its commitment to providing good governance. In the current year, under the 'Mudhalvarin Mugavari' scheme, out of 17.70 lakh petitions received so far, more than 16.28 lakh petitions have been disposed. In order to ensure satisfactory resolution of these petitions, a monitoring unit has been established.

10. In order to provide opportunities to the global Tamil diaspora to learn Tamil language and preserve Tamil culture, the Government has established 'Tamil Parappurai Kazhagam'. The Non-Resident Tamils Welfare Board has been set up to act as a bridge between Non-Resident Tamils and their motherland, and to protect their interests. As a part of these initiatives, this Government has declared January 12 as 'Non-Resident Tamils Day', which is being celebrated every year.

11. Due to the economic crisis and resultant food shortage in Sri Lanka, the Government of Tamil Nadu extended humanitarian assistance to Sri Lankans and sent rice, milk powder and life-saving medicines worth Rs.174 crore. The aid extended by Government of Tamil Nadu in these trying times has been widely appreciated. Due to the economic crisis, 216 Sri Lankan Tamils have

come to Tamil Nadu and have been accommodated in camps, where they are being provided with food, clothing and basic amenities.

12. This Government accords highest priority to maintenance of law and order in the State and is taking all necessary measures to ensure that the State continues to be a haven of peace and tranquility, free from any form of violence. With utmost concern for the future of our youth, the Hon'ble Chief Minister is determined to crack down on the distribution and consumption of drugs and narcotic substances with an iron hand. This Government is continuously taking measures to prevent drug smuggling including stringent enforcement of law and awareness creation among people.

13. To provide people with qualitative and consistent service delivery, this Government has embarked on an initiative 'Namma Pagudhi Namma Nyaya Vilai Kadai' to modernize Public Distribution shops. So far, 4,455 shops have been given a facelift.

14. As a result of this Government's proactive planning and efforts in desilting waterways and canals, coupled with afavourable monsoon, Mettur dam was opened 19 days ahead of the scheduled time for Kuruvai cultivation. Further, this Government has provided Kuruvai package worth Rs.61.12 crore to farmers. As a result, a record 5.28 lakh acres was brought under Kuruvai paddy cultivation in the Cauvery delta region, and so far, 36.20 lakh acres have been brought under Samba cultivation throughout the State.

15. This Government has announced an increase in procurement price of cow and buffalo milk by Rs.3 per litre without affecting the interests of the consumers. This has benefitted 4.20 lakh milk producers in the State.

16. This Government accords highest priority for the welfare of fishermen and is proactively undertaking several development schemes. Construction of 5 new fishing harbours

and improvement works in existing 3 fishing harbours at a total cost of Rs.982.30 crore are in progress. This Government is committed to protect the fishing rights of Tamil Nadu fishermen in its traditional waters. In this year alone, 232 Tamil Nadu fishermen apprehended by the Sri Lankan Navy were released after unstinting efforts of this Government. Till date, 10 fishermen have not been released and 106 fishing boats continue to be under the custody of the Sri Lankan Government. This Government will continue to urge that necessary steps be taken to restrain Sri Lankan Navy from apprehending our fishermen and to ensure early release of fishing boats and to find a permanent solution to these issues.

17. Tamil Nadu has emerged as the forerunner in climate change mitigation in the Country. In order to provide suitable policy directives on issues related to climate change, the Tamil Nadu Governing Council on Climate Change has been constituted with international experts, under the chairmanship of the Hon'ble Chief Minister. Further, to strengthen the State's efforts in climate change adaptation and mitigation, a Climate Summit was conducted by this Government in Chennai on 8th and 9th December, 2022. In a pioneering effort, this Government set up a 'Green Climate Fund' with a fund size of Rs.1,000 crore to support large projects to tackle climate change.

18. Not limiting itself to only welfare of human beings, this Government upholds the age old Tamil culture of caring and living in harmony with nature and all living beings. In this regard, this Government has notified two bird sanctuaries at Kazhuveli and Nanjarayankulam and an elephant reserve at Agathiyarmalai. In an exemplary initiative, the Government has notified India's first ever Slender Loris Sanctuary in Dindigul and Karur districts and Dugong Conservation Reserve in Palk Bay. The Government is taking steps to protect the critically endangered State animal Nilgiri Tahr and has sanctioned 'Project Nilgiri Tahr', at a cost of Rs.25.14 crore. Under the Wetland Mission,

Tamil Nadu has successfully obtained accreditation for 13 new Ramsar sites, the highest in the country.

19. This Government is committed to strongly asserting its rights on inter-State river disputes, while maintaining friendly relations with neighbouring States. This Government will not permit any act that would be detrimental to the farmers of Tamil Nadu. The Government is taking all necessary steps to prevent the construction of Mekadatu dam. The reservoir level in Mullai Periyar dam is presently at 142 feet and the Government is taking all efforts to further increase it. This Government urges that a Water Disputes Tribunal may be constituted at the earliest as per the orders of the Hon'ble Supreme Court, on the issue of unauthorized diversion of water from Pennaiyar river by Karnataka.

20. With the objective of ensuring water security in the State, this Government has been expeditiously implementing 6 large schemes at a total cost of Rs.1,334.10 crore. As a result, 2.59 Tmcft of storage capacity will be added and 6.92 Tmcft of storage will be reclaimed. Due to constant monitoring by this Government, the long pending projects, Thamirabarani–Karumeniyar–Nambiyar and Athikadavu–Avinashi, are nearing completion.

21. Tamil Nadu continues to be a top performer in various health indicators in the country. It has substantially reduced the Infant Mortality Rate and Maternal Mortality Ratio, and has already achieved the Sustainable Development Goals for the year 2030 in this respect.

22. To address the increasing burden of non-communicable diseases, 'Makkalai Thedi Maruthuvam' scheme was launched by this Government to provide free home-based health care services at people's doorsteps. So far, 1.01 crore people have availed services in the comfort of their homes, under this programme.

23. This Government had launched a noble scheme 'Innuyir Kaapom Nammai Kaakum 48', a first-of-its-kind initiative in the country, to provide free emergency medical care to all during the first 48 hours of an accident occurring in Tamil Nadu. Under this scheme, so far, 1.35 lakh accident victims have availed free-of-cost treatment worth Rs.120.58 crore in 679 hospitals across the State. As a result, countless precious lives have been saved.

24. Recently, few countries have witnessed a spurt in Covid cases due to a new variant of Omicron virus. This Government which successfully handled the second and third waves of COVID pandemic, has set up adequate health infrastructure in the State and has taken all precautionary measures to tackle future challenges.

25. Considering that the NEET exam system is highly disadvantageous to poor rural students and infringes on the rights of State Governments, a committee headed by Justice A.K. Rajan was constituted to study the issue. Based on the recommendations of the committee, a draft Bill to exempt medical students in Tamil Nadu from NEET exam was passed in the Assembly and sent for presidential assent. Since all clarifications requested regarding the Bill have been provided, this Government seeks expeditious approval of the same.

26. To bridge learning losses that occurred due to COVID, this Government is implementing one of the largest learning outreach programmes 'Illam Thedi Kalvi', a path breaking initiative in the country. With the help of 2 lakh volunteers, this programme has benefitted over 34 lakh students of classes 1 to 8. A study conducted by the world renowned research organization J-PAL has observed that Illam Thedi Kalvi has significantly contributed towards recovery of learning losses of up to 25 per cent in a span of 6 months. I am happy to inform that these results were presented at the 'Transforming Education Summit' held alongside the United Nations General Assembly meetings and were widely appreciated. To ensure that all primary school children are able to read with comprehension and perform basic arithmetic operations by 2025, this Government is implementing the 'Ennum Ezhuthum' programme.

27. It is the avowed objective of this Government to ensure holistic development of every student through quality education.

To achieve this objective, 'Perasiriyar Anbazhagan School Development Scheme' has been launched to modernize Government schools and upgrade infrastructure over the next five years with an allocation of Rs.1,430 crore in the current year. In addition, the Hon'ble Chief Minister has announced that 7,200 new classrooms will be constructed with an outlay of Rs.1,050 crore.

28. This Government has planned to upgrade the 45-year old Chennai Book fair to global standards, and will organize the Chennai International Book Fair for the first time from 16th to 18th January 2023 with participation from more than 25 countries. The objective of the book fair is to facilitate knowledge and copyright exchange between Tamil publishers and the global publishing industry. To realize Paavendhar's dream "When shall we herald the day, when the people of thousand languages will see the beauty of our mother Tamil, and the poems of my Tamil people", the Government of Tamil Nadu will provide a special grant to translate acclaimed Tamil literary works into international and other Indian languages.

29. This Government is taking steps to provide quality higher education and create a highly qualified and skilled human resource that would fulfill the needs of a fast-growing nation. To encourage girl students to pursue higher education, this Government has launched a landmark scheme, 'Moovalur Ramamirtham Ammaiyar Ninaivu Pudhumai Pen Thittam'. Under this scheme, Rs.1,000 is provided every month as cash assistance to all girl students pursuing higher education, who have studied in Government schools from 6th to 12th standard. In the current academic year, 1,28,780 girl students have benefitted through this scheme and this number is expected to cross 2 lakh before the end of this financial year. As a result of this scheme, the enrolment of girl students from Government schools in colleges has increased considerably during the current academic year as compared to the previous academic year.

30. To meet the needs of industry, new courses have been introduced in polytechnic colleges. Further, this Government has begun women-friendly diploma courses to increase their employment opportunities. Civil and Mechanical engineering diploma courses are being imparted in Tamil medium from the current academic year.

31. For the first time in the country, this Government has successfully conducted the International Chess Olympiad in Chennai, which was attended by around 1,800 sportspersons and delegates from over 180 nations. The event was inaugurated by the Hon'ble Prime Minister. The meticulous and efficient organization of the event by the Government was lauded by one and all. I appreciate the Government of Tamil Nadu for having spectacularly conducted this international event in such a short span of time, much to the acclaim and admiration of the world.

32. The 'Chief Minister's Cup' has been announced by the Government to promote sporting events across the State. In these competitions, school and college students, differently-abled persons, Government servants and public in 5 categories, comprising both men and women, will take part in various sports competitions including Athletics, Football, Kabaddi and Silambam. These competitions will be held throughout the State.

33. A global technology and innovation summit, 'UMAGINE' will be held for the first time in Chennai in March 2023. It will bring together tech companies, investors, academia and policy makers on a single platform, and will provide new vigour and fillip to the technology industry.

34. The Noon Meal Scheme which was introduced by the Justice Party in 1920 in Chennai Corporation has been expanded over a period of time and has today become a model for the entire country. It has been instrumental in ensuring enrolment and retention of large number of students in schools. Despite having

aspirations to learn, many students are unable to concentrate in studies as they come hungry to schools in the morning without eating breakfast. To address this problem, the 'Chief Minister's Breakfast Scheme' has been launched, which adds a new dimension to the Noon Meal Scheme. In the first phase, this scheme is being implemented in 1,545 Government primary schools benefitting 1.14 lakh students daily. I firmly believe that this scheme will also be a model for the entire nation, similar to the Noon Meal Scheme.

35. The Hon'ble Chief Minister has set the goal of a 1 trillion dollar economy by the year 2030 with the objective of bringing living standards of people on par with developed countries and making Tamil Nadu the best State across sectors. As a result of several investment conclaves and global outreach activities undertaken by this Government since July 2021, 207 MoUs have been signed with a cumulative investment commitment of Rs.2,23,210 crore and employment opportunities to 3,44,150 persons. It is notable that Tamil Nadu has attracted Foreign Direct Investment worth Rs.28,232 crore during this period.

36. This Government has released several sectoral policies such as the Tamil Nadu Life Sciences Promotion Policy, Tamil Nadu Research and Development Policy, Tamil Nadu Footwear and Leather Policy and Tamil Nadu Aerospace and Defence Industrial Policy in 2022. Further, policies to promote Ethanol blending, Green Hydrogen and E-vehicles will be released shortly.

37. For creating an enabling ecosystem for IT companies to set up in towns other than Chennai, mini TIDEL parks are being established in 7 locations. Further, the State's third TIDEL park will be constructed in Madurai at an estimated cost of Rs.600 crore.

38. The State Government has begun preparatory works for setting up a greenfield international airport at Parandur in Kancheepuram District. This will help cater to the growing demand of air traffic, improve livelihood of the locals and further economic development of the State.

39. The MSME Sector, which had been severely affected during Covid has seen a remarkable recovery owing to the multipronged interventions of the Government. There has been an increase in bank credit to MSMEs by 20per cent and in the number of loan accounts by over 19 per cent in the first half of this financial year. After this Government assumed office, over 16,000 self-employment projects worth Rs.2,344 crore have been provided assistance. In addition, the Government has opened 5 new industrial estates for MSMEs in the current year.

40. The Tamil Nadu Startup and Innovation Mission (StartupTN) has created a conducive ecosystem for startups in the State. The number of registered startups in the State has doubled since May 2021. Further, as a first in the country, a special fund of Rs.30 crore has been sanctioned to support SC/ST startups and this has ensured inclusivity in the State's startup ecosystem.

41. With a view to upgrade skills and qualifications of our youth to international standards, this Government has launched the 'Naan Mudhalvan' initiative. To bridge the gap in academia-industry linkage, students are being offered industry relevant employability-oriented courses and internship programs. As part of this unique initiative, so far 3 lakh students from engineering colleges have undergone these courses and another 4.5 lakh students from Arts & Science colleges will also be benefitted. The Scheme aims to ensure that students secure employment commensurate with their educational qualifications and are industry ready by the time they complete their studies.

42. This Government is fully committed to deliver all basic amenities, improve infrastructure and alleviate poverty through livelihood promotion schemes in rural areas. The 'Anaithu Grama Anna Marumalarchi Thittam' (AGAMT) has been re-launched by this Government to ensure equitable and holistic development of all rural habitations. In 2022-23, works are being undertaken in 2,544 panchayats at a total cost of Rs.1,155 crore.

43. This Government has undertaken works to renovate Periyar Ninaivu Samathuvapurams, which were established by Muthamizh Arignar Kalaignar with a lofty vision of fostering communities to live together in unity and brotherhood. In the first phase, 149 Samathuvapurams have been taken up for renovation at a cost of Rs.190 crore and the works will be completed shortly.

44. Similarly, to upgrade infrastructural amenities in urban areas, the Hon'ble Chief Minister had announced in the previous assembly session that a length of 20,990 km of urban roads will be developed at a cost of Rs.9,588 crore in the next four years. These works are in progress and will be completed at the earliest. The Government has sanctioned Rs.122 crore to dispose legacy waste through bio-mining, in an environment-friendly manner, and steps are being taken to reclaim waste land in 53 sites. So far, 369 acres of land have been reclaimed and are being transformed into green spaces. In order to fulfil the drinking water needs of citizens, this Government has sanctioned 103 combined water supply schemes at an estimated cost of Rs.15,734 crore under the Jal Jeevan Mission. Further, works to ensure drinking water supply in urban areas have been sanctioned at a cost of Rs.3,166 crore under AMRUT scheme. As a result, 1.64 crore people across the State will be benefitted.

45. With a view to ensure planned urbanization in cities, 6 new Urban Development Authorities have been established. As Chennai and its surrounding areas are developing at a fast pace, it is essential to facilitate economic growth by ensuring provision of

basic amenities in such urban agglomerations. Towards this end, this Government has announced a five-fold expansion of the Chennai metropolitan area to 5,904 sq.km.

46. The Chennai Unified Metropolitan Transport Authority (CUMTA) was constituted in 2010 for preparation of transportation plans and institutional coordination across agencies and departments involved in urban mobility in the Chennai metropolitan area. This Government has revived this body which had been defunct for several years. The first meeting of this Authority was conducted under the chairmanship of Hon'ble Chief Minister last November. Initiatives such as integrated ticketing facility, comprehensive mobility plans and safe commutes to women and students will be undertaken.

47. This Government recognises the importance of planned growth in surrounding areas of Chennai to ensure sustainability of the city's fast-paced growth. In this regard, Chennai Metropolitan Development Agency (CMDA) is embarking on a pioneering effort to create a new growth cluster through land pooling in Madampakkam, spanning 600 acres. Land will be pooled with the consent of land owners and classified based on their usage to promote planned development, while ensuring that the benefits of development are shared with the land owners. Majority of the land owners have given their willingness to participate in this project and the works will be completed shortly. In the next phase, a satellite town is proposed to be created near Mamallapuram along East Coast Road (ECR) following the same model. The upgradation of ECR as a fourlane road coupled with development of this satellite town will anchor future growth of the Chennai metropolitan area.

48. The Government is taking several steps to ensure quality and safe road networks across the State, which are imperative for economic growth. This Government has

sanctioned 2,263 new works under the Comprehensive Road Infrastructure Development Programme at a cost of Rs.5,582 crore. New works for converting 131 causeways to Highlevel bridges at a cost of Rs.560 crore, construction of bye-passes at a cost of Rs.142 crore and 8 railway over bridges at a cost of Rs.327 crore have been taken up in the current year.

49. Self-help groups (SHG) have been instrumental in enhancing the status of women through livelihood improvement, skill development and self-reliance. In the current year, 42,845 new SHGs have been formed with 3.97 lakh women. So far, bank credit has been given to 3.07 lakh SHGs to the tune of Rs.16,949 crore in the current financial year. In order to improve the quality of SHG products and to provide an opportunity for marketing through e-commerce, brand 'MaThi' is being promoted by the Government.

50. The revolutionary scheme of providing free travel to all women in ordinary town buses has led to not only economic upliftment but also social empowerment of women in the State. On a daily basis, 36 lakh trips are being undertaken by women. A study commissioned by the State Planning Commission has revealed that a woman passenger saves approximately Rs.888 per month as a result of this scheme.

51. This Government is committed to replace the existing aged fleet with environment-friendly new green buses. Steps are being taken to procure 2,213 BS-VI buses and 500 electric buses with KfW funding and 1,000 BS-VI buses with State funding, and they will come into operation this year.

52. The first phase of Chennai Metro Rail, covering 54 km in two corridors, is providing world-class metro rail services. The ridership has seen a steady increase after the Covid pandemic from an average of 1.76 lakh per day in June 2022 to 2.07 lakh per day in December 2022. The implementation

of Phase II of this project for a length of 118.9 km at a total project cost of Rs.63,246 crore is progressing at a fast pace.

53. This Government is harnessing the immense tourism potential of the State and has adopted an integrated strategy to propel tourism-based economy. Adventure and eco-camping sites are being set up in lesser known places to provide unique experiences to tourists and also create livelihood opportunities for the local populace.

54. To commemorate the legacy of the inimitable great Tamil emperor, Rajaraja Cholan, the Government has announced that his birth anniversary, 'Sadaya Vizha', will henceforth be celebrated as a Government function. Further, the Rajaraja Cholan Manimandapam will be renovated and embellished to showcase the glory of the Chola empire. The Hon'ble Chief Minister has also announced that the birth anniversary 'Aadi Thiruvaadhirai' of the mighty Tamil emperor Rajendra Cholan who reigned over vast swathes of the world, will henceforth be celebrated as a Government function.

55. This Government has been taking proactive steps to preserve the rich heritage of archaeological and historical monuments in the State. Construction of a new world-class museum to showcase the artefacts found in Keezhadi excavations is nearing completion. Similarly, works are underway to set up the 'Porunai Museum' where excavated artefacts from Adichanallur, Korkai and Sivakalai will be displayed.

56. This Government has been taking all necessary measures to safeguard temple lands and properties since it assumed office. So far, land and properties worth Rs.3,657 crore have been retrieved by the Government. I would like to express my heartfelt appreciation to the Government of Tamil Nadu for this remarkable feat. During this year, the Government has commenced new works in 34 temples at a total cost of Rs.158 crore. Further,

the Hon'ble Chief Minister laid the foundation for works, as part of the Master Plan of Tiruchendur Temple, at an estimated cost of Rs.300 crore.

57. This Government, true to its philosophy of furthering inclusive growth, is implementing various special schemes towards socio-economic and educational development of the marginalized and weaker sections of the society. Several works including construction of new hostels, smart classrooms and upgradation of residential schools for Adi Dravidar and Tribal students are being undertaken at a cost of Rs.425.40 crore.

58. Works are in progress for the construction of 1,537 houses for particularly vulnerable homeless tribals throughout the State. To protect the rights of forest dwelling tribes, 2,293 tribal families have been given forest rights under the Forest Rights Act, 2006 during the last one and a half years.

59. Tamil Nadu has adopted a unique reservation system to further social justice in the State and ensure advancement of socially backward classes. This Government is firm on continuing the present reservation policy in the State, as the 10 per cent quota for Economically Weaker Sections (EWS) is against the ideals of social justice.

60. To ensure economic development of socially backward sections in the society, steps are being taken to provide loans worth Rs.210 crore through the Tamil Nadu Backward Classes Economic Development Corporation and Tamil Nadu Minorities Economic Development Corporation.

61. The Government is firmly committed to safeguard the rights and interests of minorities in the State. The scheme of providing subsidy to pilgrims undertaking Haj and Jerusalem pilgrimage will be continued.

62. The upliftment of weaker and marginalized sections of the society is an important objective of this Government. The Hon'ble Chief Minister has ordered that pension for differently abled persons will be enhanced from Rs.1,000 to Rs.1,500 per month and maintenance allowance from Rs.1,500 to Rs.2,000 for severely affected persons with disabilities. The enhanced amounts are being provided at an annual additional cost of Rs.388 crore, benefitting 6.45 lakh differently abled persons across the State.

63. This Government has announced an increase in dearness allowance from 34 percent to 38 per cent, effective from 01.01.2023, keeping in mind the welfare of Government employees. This will benefit around 16 lakh Government employees, teachers, pensioners and family pensioners. This will result in an additional expenditure of Rs.2,359 crore per annum. The process of receiving life certificate for pensioners has been digitized and made easier, allowing the pensioners to avail this service from the comfort of their homes.

64. Since this Government took office . . .

- In *2021,* the State was severely affected by heavy flooding and rains, and normal life was disrupted. Based on the learnings of that disaster, this Government has effectively managed the recent cyclone and rains.

- The State's economy was in doldrums due to several reasons including Covid. Within the last year and a half, due to the economic reforms, welfare schemes and development works carried out by this Government, the economy has been revived and the State has been marching ahead in the path of development.

- Because of stellar management of law and order, Tamil Nadu continues to be a haven of peace. As a result, the State is attracting numerous foreign investments and is becoming a forerunner in all sectors.

65. This Government is founded on the ideals of social justice, self-respect, inclusive growth, equality, women empowerment, secularism and compassion towards all. Following the principles and ideals of stalwarts like Thanthai Periyar, Annal Ambedkar, Perunthalaivar Kamarajar, Perarignar Anna and Muthamizh Arignar Kalaignar, this Government has been delivering the much-acclaimed Dravidian model of governance to its people.

66. This Government is tirelessly striving to achieve the twin objectives of welfare of Tamils and prosperity of Tamil Nadu. This Government will overcome any challenges in achieving this goal and successfully take Tamil Nadu on a high growth trajectory. This year, I hope that all of you will constructively participate in legislative debates, enact required legislations for the welfare of people and socio-economic growth of the State and extend co-operation to the Government's endeavor in achieving these objectives.

67. I once again wish everyone a very happy New Year and Pongal and conclude my address with the immortal words of Mahakavi Bharathiyar.

Vazhiya Senthamizh!

Vazhga Natramizhar!

Vazhiya Bharatha Mani Thiru Nadu!

2023 ஜனவரி 11]

மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களே!

வணக்கம்.

இம்மாமன்றத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தில் என் உரையை ஆற்றுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாட்டு மக்களுக்கும் இம்மாமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாளான பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் புத்தாண்டில் நம் மாநிலத்தில் மகிழ்ச்சியும், வளமும், வளர்ச்சியும் மென்மேலும் பெருக என் உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. கடந்த 50 ஆண்டுகளாக, பல்வேறு துறைகளில் தமிழ்நாடு நமது நாட்டில் உள்ள மாநிலங்களில் முன்னோடி மாநிலமாக பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. 1960-களில், இந்தியாவின் மற்ற பெரிய மாநிலங்களோடு ஒப்பிடும்போது, சமூக, பொருளாதார, கல்வி, மருத்துவக் குறியீடுகளில் பின்தங்கி இருந்த தமிழ்நாடு, இன்று அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக உயர்ந்து நிற்பதற்கு முழு முதற்காரணம், இக்காலகட்டத்தில் சமூகநீதி, சமத்துவம், சுயமரியாதை, பகுத்தறிவு ஆகிய கொள்கைகளை அடித்தளமாகக் கொண்டு இங்கு கட்டமைக்கப்பட்ட மிகச்சிறந்த ஆட்சிமுறையே. அனைவரையும் உள்ளடக்கிய இந்த வளர்ச்சிக் கோட்பாட்டின் விளைவாகவே, பிரதமரின் பொருளாதார ஆலோசனை குழு அண்மையில் மாநிலங்களின் வளர்ச்சி நிலை குறித்து ஆய்வு செய்து வெளியிட்டுள்ள சமூக வளர்ச்சிக் குறியீட்டு அறிக்கையில் (Social Progress Index) *63.3 புள்ளிகளைப் பெற்று, இந்தியாவின் பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது. சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டோர், விளிம்பு நிலையில் உள்ளோர், பிற்படுத்தப்பட்டோர் போன்றோருக்கு அதிகாரமளித்து, அவர்களின் நலன் காத்துள்ள இந்த திராவிட வளர்ச்சிப் பாதையில் இந்த அரசு மேலும் உத்வேகத்தோடு தொடர்ந்து பீடுநடை போடும்.*

3. இந்த வளர்ச்சிப் பயணத்தில் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அயராத உழைப்போடும், அக்கறையோடும் இந்த அரசை

வழிநடத்தி வந்துள்ளார்கள். இந்த வகையில், அண்மையில் 'இந்தியா டுடே' பத்திரிக்கை நடத்திய 'மாநிலங்களின் நிலை' என்ற ஆய்வு, சிறப்பாகச் செயல்படும் பெரிய மாநிலங்களில் முதன்மை மாநிலம் தமிழ்நாடு என்று முடிவு செய்துள்ளது. இந்தச் சாதனை, நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிக்க தலைமைக்கும், சமூகநீதியையும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்ட 'திராவிட மாடல்' ஆட்சிக்கும் அளிக்கப்பட்டுள்ள நற்சான்றிதழாகும்.

4. தமிழ்நாட்டில் பொங்கல் பண்டிகையை மக்கள் சிறப்பாகக் கொண்டாடும் விதமாக 2,429 கோடி ரூபாய் செலவில் 2.19 கோடி அரிசி அட்டைதாரர்கள் பயனடையும் வகையில், ஒவ்வோர் அரிசி அட்டைதாரருக்கும் ஆயிரம் ரூபாயும், ஒரு கிலோ பச்சரிசியும், ஒரு கிலோ சர்க்கரையும், ஒரு முழு செங்கரும்பும் வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு, இன்று அதனை தொடங்கி வைத்துள்ளார்கள். தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் உவகையுடன் தமிழர் திருநாளைக் கொண்டாடிட இது பெரிதும் உதவும் என நான் நம்புகிறேன்.

5. மாண்டஸ் புயல், வடகிழக்குப் பருவமழையை அரசு சிறந்த முறையில் கையாண்டதால், சென்னை மாநகரில் அதன் தாக்கம் மிகக் குறைந்த அளவிலேயே இருந்தது. குறிப்பாக, சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் மழைக்காலம் தொடங்குவதற்கு முன்னரே, 261 கி.மீ. நீளமுள்ள மழைநீர் கால்வாய்கள் மற்றும் இதர வெள்ளத் தடுப்புத் திட்டங்களுக்காக 1,335 கோடி ரூபாய் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 209 கி.மீ. நீளமுள்ள கால்வாய்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. மேலும், கொசஸ்தலையாற்றில் 360 கி.மீ. நீளத்திற்கு மிக முக்கிய மழைநீர் கால்வாய்கள் போர்க்கால அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, கடந்த காலங்களில் அதிகளவில் மழை வெள்ள பாதிப்பிற்கு உள்ளான சென்னை மாநகரின் முக்கியமான பகுதிகள், இந்தப் பருவ மழைக்காலத்தில் மிகக் குறைந்த அளவிலேயே பாதிப்படைந்தன. மழை வெள்ளத்தின் காரணமாக ஏற்படக்கூடிய போக்குவரத்து நெரிசலும் பெருமளவு குறைக்கப்பட்டு, மாநகரம் உடனடியாக இயல்பு நிலைக்குத் திரும்பியது. மாண்டஸ் புயலையும்

2023 ஜனவரி 11]

வடகிழக்குப் பருவ மழையையும் மிகச் சிறப்பாகக் கையாண்ட இந்த அரசிற்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. "வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்" என்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கொள்கை நிலைப்பாட்டுடன் செயல்படும் இந்த அரசு, தமிழ்மொழியின் உரிமையைக் காக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

7. அலுவல்மொழிப் பயன்பாடு தொடர்பாக, தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளின் நலனுக்கு குந்தகம் விளைவிக்கும் முயற்சிகளுக்கு எதிராக ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அனைத்து மாநில மொழிகளையும் அலுவல் மொழியாக அறிவிக்க வேண்டும் என்று இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

8. மாநிலங்களின் வருவாய் பாதுகாக்கப்படும் என்று அளிக்கப்பட்ட வாக்குறுதியின் அடிப்படையில், தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்கள் தங்களது வரிவிதிக்கும் அதிகாரத்தை விட்டுக் கொடுத்து சரக்கு மற்றும் சேவை வரி முறையில் இணைந்தன. ஆனால், கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் வரிவளர்ச்சி வீழ்ச்சி அடைந்ததால், மாநிலங்களின் வருவாய் எதிர்பார்த்த அளவில் இல்லை. இந்நிலையில், *30.06.2022* ஆம் நாளுடன் சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடு வழங்கும் காலம் முடிவடைந்துள்ளது. கோவிட் பெருந்தொற்றின் தாக்கத்திலிருந்து மாநிலங்களின் வருவாய் இன்னும் முழுமையாக மீளாத நிலையில், இழப்பீடு வழங்கும் காலத்தினை குறைந்தபட்சம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்காவது நீட்டிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசை இந்த அரசு வலியுறுத்துகின்றது.

9. பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் தீர்த்து நல்லாட்சியை வழங்கிட இந்த அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகின்றது. நடப்பாண்டில், 'முதல்வரின் முகவரி' திட்டத்தின்கீழ், இதுவரை பெறப்பட்டுள்ள *17.70* இலட்சம் மனுக்களில், *16.28* இலட்சத்திற்கும் மேலான மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. இந்த மனுக்கள் மீது திருப்திகரமான முறையில் தீர்வுகள் காணப்படுவதை உறுதி செய்திட, கண்காணிப்புப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

[2023 ஜனவரி 11

10. உலகெங்கும் விரவியுள்ள தமிழர்களுக்குத் தமிழ்மொழியைக் கற்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தவும், தமிழ்ப் பண்பாட்டினைப் பேணிக்காக்கவும், 'தமிழ்ப் பரப்புரைக் கழகம்' உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், அயலகத் தமிழர்களுக்கும் தாய்த் தமிழ்நாட்டிற்கும் ஒரு பாலமாக இயங்குவதற்கும், அவர்களின் நலனைக் காப்பதற்கும் அயலகத் தமிழர் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இம்முயற்சிகளின் ஒரு பகுதியாக, ஆண்டுதோறும் ஜனவரி 12 ஆம் நாள் 'அயலகத் தமிழர் தினமாக' இந்த அரசால் அறிவிக்கப்பட்டு, கொண்டாடப்பட்டு வருகிறது.

11. இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினாலும் உணவுப் பற்றாக்குறையினாலும் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் 174 கோடி ரூபாய் மதிப்புள்ள அரிசி, பால் பவுடர், உயிர்காக்கும் மருந்துகள் ஆகியவற்றை இந்த அரசு வழங்கியது. இக்கட்டான சூழலில் உதவிக்கரம் நீட்டிய தமிழ்நாடு அரசின் இந்த நடவடிக்கையை அனைவரும் பாராட்டியுள்ளனர். இக்காலகட்டத்தில், பொருளாதார நெருக்கடி காரணமாக 216 இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். அவர்களை முகாம்களில் தங்க வைத்து, தேவையான உணவு, உடை, அடிப்படை வசதிகள் போன்றவை வழங்கப்படுகின்றன.

12. மாநிலத்தில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டிட இந்த அரசு உயர் முன்னுரிமை அளிக்கின்றது. வன்முறையில்லா ஒரு அமைதிப் பூங்காவாக தமிழ்நாடு தொடர்ந்து திகழ்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. நம் இளைய தலைமுறையின் எதிர்காலத்தின் மீது அக்கறை கொண்டு, போதைப் பொருட்களின் விநியோகத்தையும் பயன்பாட்டையும் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியாக உள்ளார். போதைப் பொருட்களின் கடத்தல் தடுப்புச் சட்டங்களைத் தீவிரமாக அமல்படுத்துதல், மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

13. மக்களுக்கு சீராகவும் சிறப்பாகவும் சேவைகளை வழங்கும் எழில் கூடங்களாக பொது விநியோகக் கடைகளை மாற்றியமைத்திட, இந்த அரசு, 'நம்ம பகுதி நம்ம நியாய விலைக் கடை' என்ற புதிய முயற்சியைத் தொடங்கியுள்ளது.

2023 ஜனவரி 11]

இத்திட்டத்தின்கீழ், இதுவரை 4,455 பொது விநியோகக் கடைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

14. நீர்நிலைகளையும் கால்வாய்களையும் முன்கூட்டியே திட்டமிட்டுத் தூர்வாருவதில் முனைப்பான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டதாலும், நல்ல பருவமழை பெய்ததாலும், குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணை, உரிய காலத்திற்கு 19 நாட்கள் முன்னதாகவே திறக்கப்பட்டது. மேலும், உழவர்களுக்கு 61.12 கோடி ரூபாய் மதிப்பிலான குறுவைத் தொகுப்பை இந்த அரசு வழங்கியுள்ளது. இவை காரணமாக, காவிரி டெல்டா பகுதியில் 5.28 இலட்சம் ஏக்கர் பரப்பில் குறுவை நெல் சாகுபடி செய்து வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டதோடு, மாநிலத்தில் சம்பா சாகுபடி இதுவரை 36.20 இலட்சம் ஏக்கர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

15. நுகர்வோர் பாதிக்கப்படாத வகையில், பசும்பால், எருமைப் பால் ஆகியவற்றின் கொள்முதல் விலையை லிட்டருக்கு மூன்று ரூபாய் உயர்த்தி அரசு அறிவித்துள்ளது. இதன்மூலம் மாநிலத்தில் உள்ள 4.20 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறுகிறார்கள்.

16. மீனவர் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட இந்த அரசு, அவர்களின் நலனுக்காக பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் 5 புதிய மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கும் பணிகளும், 3 மீன்பிடித் துறைமுக மேம்பாட்டுப் பணிகளும் மொத்தம் 982.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாரம்பரிய கடற்பகுதியில் தமிழ்நாட்டு மீனவர்களின் மீன்பிடி உரிமைகளைப் பாதுகாப்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. இந்த ஆண்டில் மட்டும் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 232 தமிழ்நாட்டு மீனவர்கள், இந்த அரசின் தீவிர முயற்சியால் மீட்கப்பட்டுள்ளனர். இன்று வரை, பத்து மீனவர்கள் இலங்கை அரசால் திருப்பி அனுப்பப்படவில்லை. 106 மீன்பிடிப் படகுகள் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் இன்னும் உள்ளன. இலங்கைக் கடற்படையினர் நமது மீனவர்களை கைது செய்வதைத் தடுக்கவும், மீனவர்களின் உடைமைகளை விடுவிக்கவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், இப்பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணவும் இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

[2023 ஜனவரி 11

17. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கத்தைத் தணிப்பதில் நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. காலநிலை மாற்றம் குறித்து தகுந்த ஆலோசனைகளை வழங்கிட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் பன்னாட்டு வல்லுநர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான முயற்சிகளை வலுப்படுத்த காலநிலை உச்சி மாநாட்டையும் சென்னையில் இந்த அரசு, 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 8, 9 ஆம் தேதிகளில் வெற்றிகரமாக நடத்தியுள்ளது. ஒரு முன்னோடி முயற்சியாக, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பெருந்திட்டங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில், 1,000 கோடி ரூபாய் மதிப்பில் 'பசுமை காலநிலை நிதியத்தை' (Green Climate Fund) அரசு அமைத்துள்ளது.

18. மானிட நலன் மட்டுமன்றி, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் தமிழர் பண்பாட்டைப் பேணிக்காக்கும் இவ்வரசு, கழுவேலி, நஞ்சராயன் குளம் ஆகிய இடங்களில் பறவைகள் சரணாலயங்களையும், அகத்தியர் மலையில் யானைகள் காப்பகத்தையும் அமைக்க ஆணையிட்டுள்ளது. அதேபோல், இந்தியாவிலேயே முதல் முயற்சியாக, திண்டுக்கல், கரூர் மாவட்டங்களில் தேவாங்கு காப்பகத்தையும், பாக் விரிகுடாவில் கடற்பசு பாதுகாப்பகத்தையும் இந்த அரசு அமைத்துள்ளது. அழிவின் விளிம்பிலுள்ள மாநில விலங்கான நீலகிரி வரையாட்டைப் பாதுகாத்திட 'நீலகிரி வரையாடுத் திட்டத்தை' 25.14 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்திட இந்த அரசு ஆணையிட்டுள்ளது. ஈரநில இயக்கத்தின் (Wetland Mission) கீழ், 13 புதிய ராம்சர் தளங்களுக்கான அங்கீகாரத்தைப் பெற்று நாட்டிலேயே முதல்நிலையை தமிழ்நாடு எட்டியுள்ளது.

19. அண்டை மாநிலங்களுடன் நட்புறவைப் பேணும் அதேவேளையில், மாநிலங்களுக்கு இடையே பாயும் நதிகளின் நீர்ப் பிரச்சினைகளில் நம் உரிமைகளைப் பாதுகாத்திட இந்த அரசு உறுதியாக உள்ளது. தமிழ்நாட்டின் உழவர் பெருமக்களைப் பாதிக்கும் எந்த நடவடிக்கையையும் இந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது. மேகதாது அணை கட்டுவதைத் தடுக்க தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி உயரத்திற்கு நீர் தேக்கப்பட்டுள்ளதோடு, அணையின் உயரத்தை மேலும்

2023 ஜனவரி 11]

உயர்த்த அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. பெண்ணையாற்றில் இருந்து கர்நாடக மாநிலம் அனுமதியின்றி தண்ணீரை திசை திருப்பும் பிரச்சினையில், மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுப்படி நதிநீர் தீர்ப்பாயத்தை விரைந்து அமைத்திட இந்த அரசு வலியுறுத்துகிறது.

20. மாநிலம் முழுவதும் நீர்ப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், 1,334.10 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான ஆறு பெருந்திட்டங்களை இந்த அரசு விரைந்து செயல்படுத்தி வருகிறது. இதன் பயனாக, 2.59 டி.எம்.சி அளவிற்கு கூடுதல் நீரைச் சேமிக்கவும் 6.92 டி.எம்.சி நீரை திரும்ப மீட்டெடுக்கவும் இயலும். அரசின் தொடர் கண்காணிப்பின் விளைவாக, நீண்டகாலமாக நிலுவையில் உள்ள தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு திட்டம் மற்றும் அத்திக்கடவு–அவிநாசி திட்டப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

21. நாட்டிலேயே பல்வேறு சுகாதாரக் குறியீடுகளில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகித்து வருகின்றது. குழந்தை இறப்பு விகிதம், தாய்மார்களின் இறப்பு விகிதத்தைப் பெருமளவில் குறைத்து, 2030 ஆம் ஆண்டில் எட்டப்பட வேண்டிய நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை தமிழ்நாடு ஏற்கெனவே எட்டியுள்ளது.

22. அதிகரித்து வரும் தொற்று அல்லாத நோய்களின் பாதிப்பை போக்கும் வகையில், மக்களின் வீட்டிற்கே சென்று கட்டணமின்றி மருத்துவச் சேவைகளை வழங்குவதற்காக 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற முன்னோடித் திட்டத்தை இந்த அரசு தொடங்கியது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 1.01 கோடி மக்கள் தங்கள் வீட்டிலேயே சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

23. தமிழ்நாட்டில் விபத்து நேர்ந்த முதல் 48 மணி நேரத்தில் அவசர மருத்துவச் சேவையை அனைவருக்கும் கட்டணமின்றி வழங்குவதற்காக, நாட்டிலேயே முதன்முறையாக 'இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48' என்ற உன்னதத் திட்டத்தை இந்த அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. மாநிலமெங்கும் உள்ள 679 மருத்துவமனைகளில் இதுவரை 1.35 இலட்சம் விபத்துக்குள்ளானவர்களுக்கு 120.58 கோடி ரூபாய் மதிப்பிலான சிகிச்சைகள் எவ்விதக் கட்டணமுமின்றி வழங்கப்பட்டுள்ளன.

[*2023 ஜனவரி 11*

இத்திட்டத்தின்மூலம், எண்ணற்ற விலைமதிப்பில்லா உயிர்கள் காக்கப்பட்டுள்ளன.

24. அண்மையில், சில நாடுகளில் ஒமிக்ரானின் உருமாறிய ஒரு புதிய வகை வைரஸ் காரணமாக கோவிட் தொற்று வேகமாக பரவி வருகிறது. கோவிட் பெருந்தொற்றின் இரண்டாவது, மூன்றாவது அலைகளை வெற்றிகரமாக எதிர்கொண்ட இந்த அரசு, மாநிலத்தில் போதிய மருத்துவக் கட்டமைப்புகளைத் தயார் நிலையில் வைத்து, எதிர்வரக்கூடிய சவால்களை எதிர்கொள்ளத் தேவையான அனைத்துத் தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

25. நீட் தேர்வு முறையானது, கிராமப்புர ஏழை மாணவர்களை மிகவும் பாதிப்பதாகவும், மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிப்பதாகவும் அமைந்துள்ளது என்பதை கருத்தில் கொண்டு, இது குறித்து ஆய்வு செய்வதற்காக, நீதியரசர் ஏ.கே. ராஜன் அவர்களின் தலைமையில் ஒரு குழுவை அமைத்து, அந்த குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டில் மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு விலக்கு அளிப்பதற்கான சட்ட முன்வடிவை இந்த சட்டமன்றத்தில் நிறைவேற்றி குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்துள்ளோம். இச்சட்டம் குறித்து கோரப்பட்ட விளக்கங்கள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ள நிலையில், இந்த சட்டமுன்வடிவிற்கான ஒப்புதலை விரைந்து வழங்க இந்த அரசு வலியுறுத்துகிறது.

26. கோவிட் பெருந்தொற்றினால் ஏற்பட்ட கற்றல் இழப்பை ஈடுசெய்ய, நாட்டிற்கே முன்னோடியாக, மாபெரும் கற்றல் திட்டமான 'இல்லம் தேடிக் கல்வி' திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இரண்டு இலட்சம் தன்னார்வலர்களின் உதவியுடன், ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் 34 இலட்சம் மாணவர்கள் இத்திட்டத்தினால் பயன் பெறுகின்றனர். சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஆராய்ச்சி நிறுவனமான JPAL மேற்கொண்ட ஆய்வின்படி, ஆறு மாதங்களில் ஒட்டுமொத்த கற்றல் இழப்பில் 25 சதவீதம் வரை ஈடுசெய்யப்பட்டுள்ளதில், 'இல்லம் தேடி கல்வி' திட்டம் பெரும் பங்கை ஆற்றியுள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை கூட்டங்களுடன் நடத்தப்பட்ட 'கல்வி மாற்றம் உச்சி மாநாட்டில்', இந்த ஆய்வின் முடிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு,

2023 ஜனவரி 11]

அனைவராலும் பாராட்டப்பட்டதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். 2025 ஆம் ஆண்டுக்குள், தொடக்கப் பள்ளியில் பயிலும் அனைத்துக் குழந்தைகளும் புரிதலுடன் படிக்கவும், எண்கணிதத்தில் திறன் பெறுவதற்கும் 'எண்ணும் எழுத்தும்' திட்டமும் செயல்படுத்தப்படுகிறது.

27. அனைவருக்கும் தரமான கல்வி வழங்குவதன் மூலம் ஒவ்வொரு மாணவரையும் முழுமையான வளர்ச்சி அடையச் செய்வதே இந்த அரசின் முக்கியக் குறிக்கோளாகும். இந்த நோக்கத்தை எய்திட, அடுத்த ஐந்தாண்டுகளில் அரசுப் பள்ளிகளை நவீனப்படுத்தி கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக 'பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்' தொடங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இத்திட்டத்திற்கு 1,430 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 7,200 புதிய வகுப்பறைகள் 1,050 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

28. 45 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வரும் சென்னை புத்தகக் கண்காட்சியை உலகத்தரத்திற்கு இவ்வாண்டு உயர்த்தும் வகையில், முதன்முறையாக சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சியை 16.01.2023 முதல் 18.01.2023 வரை நடத்த தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. இதில் 25-க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்க உள்ளன. தமிழ் பதிப்பாளர்களுக்கும், உலகளாவிய பதிப்பகத் துறைக்கும் இடையே, அறிவுப் பரிமாற்றம், பதிப்புரிமை பரிமாற்றம் ஆகியவற்றை ஊக்குவிப்பதே இந்த புத்தகக் கண்காட்சியின் நோக்கமாகும். "தாயெழில் தமிழை, எந்தன் தமிழரின் கவிதை தன்னை, ஆயிரம் மொழியிற் காணும் நாள் எந்நாளோ" என்ற பாவேந்தரின் கனவை நனவாக்கும் வகையில், தமிழ் இலக்கியத்திலுள்ள சிறந்த படைப்புகளை உலக மொழிகளிலும் பிற இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்க ஒரு சிறப்பு நல்கையை (special grant) தமிழ்நாடு அரசு வழங்கும்.

29. தரமான உயர் கல்வியை வழங்கி, நாட்டின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான ஆற்றல்மிக்க மனிதவளத்தை உருவாக்க இந்த அரசு முனைந்துள்ளது. அந்தவகையில், பெண்களின் உயர் கல்விக்கு வித்திடவே 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு புதுமைப் பெண் திட்டம்' என்ற முன்னோடித் திட்டத்தை இந்த அரசு தொடங்கியுள்ளது. நடப்புக் கல்வி

ஆண்டில், இத்திட்டத்தின்மூலம், அரசுப் பள்ளிகளில் ஆறு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயின்று, உயர்கல்வி பயிலும் 1,28,780 மாணவிகள் மாதம் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை பெற்று பயனடைந்து வருகின்றனர். இந்நிதியாண்டின் இறுதிக்குள், பயன்பெறும் மாணவியரின் எண்ணிக்கை 2 இலட்சத்திற்கும் மேல் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக, கடந்த ஆண்டைக் காட்டிலும், நடப்புக் கல்வியாண்டில், கல்லூரிகளில் அரசுப் பள்ளி மாணவியரின் சேர்க்கை கணிசமாக அதிகரித்துள்ளது.

30. தொழில் துறையின் தேவைகளை நிறைவு செய்வதற்காக, பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் புதிய பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும்வகையில் பெண்களுக்கு ஏற்ற பட்டயப் படிப்புகளையும் அரசு தொடங்கியுள்ளது. கட்டடம், இயந்திரப் பொறியியல் போன்றவற்றில் பட்டயப் படிப்புகள் நடப்புக் கல்வியாண்டில் தமிழ்வழியில் கற்பிக்கப்படுகின்றன.

31. நாட்டிலேயே முதன்முறையாக, பன்னாட்டு செஸ் ஒலிம்பியாட் போட்டியை இந்த அரசு வெற்றிகரமாக சென்னையில் நடத்தியது. 180-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த, ஏறத்தாழ 1,800 விளையாட்டு வீரர்களும் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இப்போட்டியை மாண்புமிகு பிரதமர் அவர்கள் தொடங்கிவைத்தார்கள். இப்போட்டிக்காக, தமிழ்நாடு அரசு மேற்கொண்ட சீரிய ஏற்பாடுகளை அனைவரும் வெகுவாகப் போற்றினர். உலகே வியக்கும்வகையில், மிகக் குறுகிய காலத்தில், இந்த பன்னாட்டுப் போட்டியைச் சிறப்பாக நடத்திக் காட்டிய தமிழ்நாடு அரசை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

32. மாநிலம் முழுவதும் விளையாட்டுத் திறனை ஊக்குவித்திட 'முதலமைச்சர் கோப்பைக்கான' போட்டிகளை அரசு அறிவித்துள்ளது. இப்போட்டிகளில், பள்ளி கல்லூரி மாணவ மாணவியர், மாற்றுத்திறனாளிகள், அரசுப் பணியாளர்கள், பொதுமக்கள் என ஐந்து பிரிவுகளில், ஆண் பெண் இருபாலரும் பங்கேற்கும் வகையில், தடகளம், கால்பந்து, கபடி, சிலம்பம் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மாநிலமெங்கும் நடத்தப்பட உள்ளன.

2023 ஜனவரி 11]

33. உலகளாவிய தொழில்நுட்பம் மற்றும் புதுமைத் திறன் உச்சி மாநாடு, 'UMAGINE' முதன்முறையாக சென்னையில் வரும் மார்ச் மாதத்தில் நடைபெற உள்ளது. தொழில்நுட்ப நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், கல்வியாளர்கள், தொழில்நுட்பத் துறை முன்னோடிகள் ஆகியோரை ஒரே தளத்தில் ஒருங்கிணைத்து தொழில்நுட்பத் துறைக்கு புதிய உத்வேகத்தை இம்மாநாடு ஏற்படுத்தும்.

34. 1920 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியில் நீதிக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்ட மதிய உணவுத் திட்டம், பல்வேறு காலங்களில் தொடர்ந்து விரிவுபடுத்தப்பட்டு, நாட்டிற்கே முன்மாதிரியாக இன்று திகழ்கிறது. ஏழை எளிய மாணவர்கள் அதிக அளவில் பள்ளிகளில் சேர்வதற்கும், தொடர்ந்து பயில்வதற்கும் இத்திட்டம் பெரும் பங்காற்றியுள்ளது. இதன் அடுத்த பரிணாமமாக, கல்வி கற்கும் கனவுகள் பல சுமந்துகொண்டு, வெறும் வயிற்றுடன் காலையில் பள்ளிக்கு வரும் குழந்தைகள் கல்வியில் கவனம் செலுத்த இயலாத நிலையைக் களைய, 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, 1,545 அரசு தொடக்கப் பள்ளிகளில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு, 1.14 இலட்சம் மாணவர்கள் தினமும் பயன்பெறுகின்றனர். மதிய உணவுத் திட்டம் போன்றே இத்திட்டமும் நமது நாட்டிற்கே முன்னோடியாக விளங்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

35. தமிழ்நாடு, பல்துறைகளில் தலைசிறந்து விளங்கவும், நமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை வளர்ந்த நாடுகளுக்கு நிகராக உயர்த்தவும், 2030 ஆம் ஆண்டிற்குள், ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சி இலக்கை அடைய வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இலக்கிட்டுள்ளார்கள். இந்த அரசால் மேற்கொள்ளப்பட்ட பல முதலீட்டு மாநாடுகள், உலகளவில் முதலீடுகளை ஈர்க்க மேற்கொண்ட முன்னெடுப்புகள் ஆகியவற்றின் பயனாக, ஜூலை 2021 முதல் இன்றுவரை 207 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. இதனால், 2,23,210 கோடி ரூபாய் முதலீடும் 3,44,150 நபர்களுக்கான வேலைவாய்ப்புகளும் உறுதிசெய்யப்படும். இக்காலகட்டத்தில், 28,232 கோடி ரூபாய் அந்நிய முதலீட்டை தமிழ்நாடு ஈர்த்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

36. தமிழ்நாடு உயிர் அறிவியல் மேம்பாட்டுக் கொள்கை, தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை, தமிழ்நாடு காலணி, தோல்பொருட்கள் கொள்கை, தமிழ்நாடு விண்வெளி பாதுகாப்புத் தொழில் கொள்கை போன்ற பல துறைசார் கொள்கைகள் 2022 ஆம் ஆண்டில் இந்த அரசால் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், எரிபொருட்களில் எத்தனால் சேர்த்தல், பசுமை ஹைட்ரஜன், மின் வாகனங்களுக்கான கொள்கைகள் ஆகியவை மிக விரைவில் வெளியிடப்படும்.

37. சென்னை தவிர பிற நகரங்களிலும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைந்திட உகந்த சூழலை உருவாக்க, ஏழு இடங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், மாநிலத்தின் மூன்றாவது டைடல் பூங்கா மதுரையில் 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

38. காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் ஒரு புதிய பன்னாட்டு விமான நிலையத்தை அமைப்பதற்கான ஆயத்தப் பணிகளை மாநில அரசு தொடங்கியுள்ளது. இது நமது மாநிலத்தின் அதிகரித்து வரும் விமானப் போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்வதோடு, அப்பகுதி மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் வழிகோலும்.

39. கோவிட் பெருந்தொற்றால் கடும் பாதிப்பிற்குள்ளான குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளால் பெருமளவில் மீண்டு வந்துள்ளன. இந்நிதியாண்டின் முதல் ஆறு மாதங்களில் இந்நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடன்கள் 20 சதவீதமும், கடன் கணக்குகளின் எண்ணிக்கை 19 சதவீதமும் உயர்ந்துள்ளன. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், 2,344 கோடி ரூபாய் மதிப்புள்ள, 16,000-க்கும் மேற்பட்ட சுயதொழில் திட்டங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளதோடு, நடப்பு ஆண்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கென ஐந்து புதிய தொழிற்பேட்டைகளையும் அரசு தொடங்கியுள்ளது.

40. தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் (StartupTN) வாயிலாக மாநிலத்தில் உள்ள புத்தொழில்களுக்கு உகந்த சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. மே 2021 முதல் மாநிலத்தில் பதிவுசெய்யப்பட்ட புத்தொழில்களின் எண்ணிக்கை

2023 ஜனவரி 11]

இரட்டிப்பாகியுள்ளது. மேலும், நம் நாட்டிலேயே முதன்முறையாக பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினரின் புத்தொழில்களுக்கு உதவ, 30 கோடி ரூபாய் சிறப்பு நிதி அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதனால், அனைவரையும் உள்ளடக்கிய புத்தொழில் சூழல் மாநிலத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

41. தமிழ்நாட்டு இளைஞர்கள் உலகத்தரம் வாய்ந்த திறன் பயிற்சி பெற்று திறமையிலும், தகுதியிலும், சிறந்து விளங்கிட 'நான் முதல்வன்' திட்டத்தை அரசு தொடங்கியுள்ளது. கற்கும் கல்விக்கும், தொழில் துறைகளின் தேவைக்கும் இடையே உள்ள இடைவெளியை நிறைவு செய்து, வேலைவாய்ப்புகளைப் பெற்றுத்தரக்கூடிய திறன் பயிற்சிகளும் தொழில்சார்ந்த பயிற்சிகளும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இத்தகைய சீரிய முன்னெடுப்புகளின் மூலம், 3 இலட்சம் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு திறன் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மேலும், 4.5 இலட்சம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களும் இதன் மூலம் பயனடைவர். கல்லூரிப் படிப்பு முடியும் தருவாயிலேயே மாணவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப வேலைவாய்ப்பினை உறுதி செய்வதோடு, தொழில் நிறுவனங்களில் பணியாற்ற, திறன்மிகு மாணவர்களை உருவாக்குவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

42. கிராமப்புரப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி, கட்டமைப்புகளை மேம்படுத்தி, வாழ்வாதாரத் திட்டங்களின்மூலம் வறுமையை அகற்றிடும் முயற்சிகளில் இந்த அரசு முழுமையாக ஈடுபட்டுள்ளது. மாநிலத்திலுள்ள அனைத்துக் கிராமப்புரக் குடியிருப்புப் பகுதிகளிலும் சமமான முழுமையான வளர்ச்சியை உறுதிசெய்யும் நோக்கத்துடன், 'அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' இந்த அரசால் மீண்டும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 2022–23 ஆம் ஆண்டில் மொத்தம் 1,155 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,544 ஊராட்சிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

43. மக்கள் அனைவரும் ஒற்றுமையுடனும் சகோதர உணர்வுடனும் வாழ வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட 'பெரியார் நினைவு சமத்துவபுரம்' திட்டத்தை இந்த அரசு

[2023 ஜனவரி 11

மீட்டெடுத்து வருகின்றது. முதற்கட்டமாக, 149 சமத்துவபுரங்களில் 190 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொண்ட புதுப்பிக்கும் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

44. அதேபோல், நகர்ப்புரப் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட, வரும் நான்கு ஆண்டுகளில் 20,990 கி.மீ. நீளமுள்ள நகர்ப்புர சாலைகள் 9,588 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படுமென சென்ற கூட்டத்தொடரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இப்பணிகள் விரைவில் முடிக்கப்படும். 53 இடங்களில் தேங்கியுள்ள பழைய கழிவுகளை (legacy waste) சுற்றுச்சூழலுக்கு உகந்தவாறு, உயிரி–அகழ்ந்தெடுத்தல் (Bio–mining) முறையில் அப்புறப்படுத்தி, நிலங்கள் மீட்டெடுக்கப்படவுள்ளன. இதற்காக, அரசு 122 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. இதுவரை, 369 ஏக்கர் நிலங்கள் மீட்டெடுக்கப்பட்டு, பசுமையான பகுதிகளாக மாற்றப்பட்டு வருகின்றன. மக்களின் குடிநீர் தேவைகளை நிறைவு செய்வதற்காக, 15,734 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 103 கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கு, உயிர்நீர் இயக்கத்தின்கீழ் (Jal Jeevan Mission) அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், நகர்ப்புரப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் பணிகளுக்காக அம்ருத் திட்டத்தின்கீழ் 3,166 கோடி ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், மாநிலம் முழுவதும் 1.64 கோடி மக்கள் பயன்பெறுவார்கள்.

45. நகரங்களின் திட்டமிட்ட வளர்ச்சியை உறுதி செய்யவும் முறைப்படுத்தவும் ஆறு புதிய நகர வளர்ச்சிக் குழுமங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றன. இப்பெரும் நகரத் தொகுப்பின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து, பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் வகையில், சென்னைப் பெருநகரின் எல்லை ஐந்து மடங்காக 5,904 சதுர கி.மீ. அளவிற்கு விரிவாக்கப்பட்டுள்ளது.

46. சென்னைப் பெருநகரப் பகுதிக்கான போக்குவரத்துத் திட்டங்களைத் தயாரிக்கவும், பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் போக்குவரத்து அமைப்புகளையும், சேவைகளையும் ஒருங்கிணைத்திடவும், சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமம் (CUMTA) 2010 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. பல ஆண்டுகளாக செயல்படாமல் இருந்த இக்குழுமத்திற்கு, இந்த அரசு புத்துயிர் அளித்துள்ளது.

2023 ஜனவரி 11]

கடந்த நவம்பர் மாதத்தில் இக்குழுமத்தின் முதல் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. ஒருங்கிணைந்த பயணச்சீட்டு முறை, பல்வழிப் போக்குவரத்துத் திட்டம், பெண்களுக்கும், மாணவர்களுக்கும் பாதுகாப்பான பயணத்தை உறுதிசெய்தல் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

47. சென்னை பெருநகரின் வேகமான வளர்ச்சி நீடித்து நிலைக்கத்தக்கதாக இருக்க வேண்டுமெனில், இந்தப் பெருநகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் திட்டமிட்ட வளர்ச்சி அவசியம் என்பதை இந்த அரசு முழுமையாக உணர்ந்துள்ளது. இந்த வகையில், சென்னைக்கு அருகே உள்ள மாடம்பாக்கத்தில் 600 ஏக்கர் பரப்பளவில், நிலத்திரட்டு (Land Pooling) முறையில் புதிய வளர்ச்சிப் பகுதியை உருவாக்குவதற்கான ஒரு முன்னோடி முயற்சி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நில உரிமையாளர்களின் ஒப்புதலோடு நிலங்களைப் பெற்றுத் திரட்டி, திட்டமிட்ட வளர்ச்சிக்கு ஏதுவாக பல்வேறு நிலப் பயன்பாடுகளுக்கு ஏற்றவாறு அவற்றை நில வகைப்பாடு செய்து, நில உரிமையாளர்களுக்கு பங்கீடு செய்து வழங்கி, புறநகர் வளர்ச்சிக்கு வித்திடும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. பெரும்பாலான நில உரிமையாளர்கள் மனமுவந்து ஒப்புதல் அளித்துள்ள இப்பணிகள் விரைவில் நிறைவுறும். இதன் அடுத்தகட்டமாக, இதே நிலத்திரட்டு முறையைப் பின்பற்றி, கிழக்கு கடற்கரைச் சாலையை ஒட்டி, மாமல்லபுரம் அருகே புதிய துணை நகரம் ஒன்று அமைக்கப்படும். இச்சாலையும் நான்குவழிச் சாலையாகத் தரம் உயர்த்தப்படுவதால், சென்னை பெருநகரப் பகுதியின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு அச்சாணியாக இத்திட்டம் விளங்கும்.

48. பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத, தரமான, பாதுகாப்பான சாலை இணைப்புகளை மாநிலம் முழுவதும் அமைத்திட இந்த அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 5,582 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,263 புதிய பணிகளை மேற்கொள்ள அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும், 560 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 131 தரைப்பாலங்களை உயர்மட்ட மேம்பாலங்களாக மாற்றுதல், 142 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புறவழிச்சாலைகள் அமைத்தல், 327 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

எட்டு இரயில்வே மேம்பாலங்கள் அமைக்கும் புதிய பணிகள் போன்றவை நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

49. வாழ்வாதார மேம்பாடு, திறன் வளர்ச்சி, சுயசார்பு வாயிலாக, மகளிரின் முன்னேற்றத்திற்கு முக்கிய காரணியாக சுய உதவிக் குழுக்கள் திகழ்கின்றன. இவ்வாண்டில், 3.97 இலட்சம் மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு, 42,845 புதிய சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிதியாண்டில், இதுவரை 3.07 இலட்சம் சுயஉதவிக் குழுக்களுக்கு 16,949 கோடி ரூபாய் வங்கிக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. சுயஉதவிக் குழுக்களால் தயாரிக்கப்படும் பொருட்களின் தரத்தை மேம்படுத்தி, மின் வணிக தளங்களின் வாயிலாக விற்பனை வாய்ப்புகளை உயர்த்திட, 'மதி' என்ற முத்திரை (brand) அரசால் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

50. சாதாரண நகரப் பேருந்துகளில் 'மகளிர் அனைவருக்கும் கட்டணமில்லாப் பயணம்' என்ற புரட்சிகரமான திட்டத்தின் மூலம், மாநிலத்தில் பெண்களிடையே பொருளாதார மேம்பாடு மட்டுமன்றி சமூக எழுச்சியும் ஏற்பட்டுள்ளது. நாள்தோறும் 36 இலட்சம் பயணங்கள் செய்து மகளிர் பயனடைந்து வரும் இத்திட்டத்தின்மூலம் ஒவ்வொரு பெண்ணும் சராசரியாக மாதத்திற்கு 888 ரூபாய் அளவிற்கு சேமிக்கின்றனர் என்று மாநில திட்டக் குழுவின் ஆய்வு தெரிவித்துள்ளது.

51. தற்போதுள்ள பழைய பேருந்துகளை மாற்றி சுற்றுச்சூழலுக்கு உகந்த புதிய பசுமைப் பேருந்துகளை அறிமுகப்படுத்த அரசு உறுதிபூண்டுள்ளது. 2,213 BS–VI பேருந்துகள் மற்றும் 500 மின்சாரப் பேருந்துகள் KfW நிதியிலும், 1,000 BS–VI பேருந்துகள் மாநில அரசு நிதியுதவியிலும் கொள்முதல் செய்யப்பட்டு, இவ்வாண்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

52. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதற்கட்டத்தில் அமைக்கப்பட்ட 54 கி.மீ. நீளமுள்ள 2 வழித்தடங்களில், உலகத்தரம் வாய்ந்த சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. கோவிட் பெருந்தொற்றிற்குப் பின், நாள்தோறும் பயணிக்கும் நபர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. 2022 ஆம் ஆண்டில் ஜூன் மாதத்தில் நாள் ஒன்றிற்கு 1.76 இலட்சம் பயணிகள் என்று இருந்த எண்ணிக்கை, டிசம்பர்

2023 ஜனவரி 11]

மாதத்தில் 2.07 இலட்சமாக உயர்ந்துள்ளது. 63,246 கோடி ரூபாய் மதிப்பில் 118.9 கி.மீ. நீளமுள்ள சென்னை மெட்ரோ இரயிலின் இரண்டாம் கட்டப் பணிகள் துரிதமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

53. மாநிலத்தில் குவிந்துகிடக்கும் சுற்றுலா வளர்ச்சிக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்தி, சுற்றுலா சார்ந்த பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஓர் ஒருங்கிணைந்த அணுகுமுறையை அரசு பின்பற்றுகிறது. சுற்றுலாப் பயணிகளுக்கு தனித்துவமான அனுபவங்களை ஏற்படுத்தவும், உள்ளூர் மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களில் சாகசச் சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

54. ஒப்பாரும் மிக்காரும் இல்லா தமிழ் மாமன்னர் இராசராச சோழனின் அரும்பெருமைகளைப் போற்றும் நோக்குடன் அவரது பிறந்தநாளான 'சதயவிழா' இனி அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என அரசு அறிவித்துள்ளது. மேலும், சோழப் பேரரசின் புகழைக் காட்சிப்படுத்தும் வகையில் இராசராச சோழனின் மணிமண்டபம் புதுப்பிக்கப்பட்டு மெருகேற்றப்படும் எனவும், உலகாண்ட தமிழ் மாமன்னர் இராசேந்திர சோழனின் பிறந்தநாளான ஆடி திருவாதிரை இனி அரசு விழாவாகக் கொண்டாடப்படும் எனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

55. மாநிலத்தில் உள்ள தொல்பொருள் மற்றும் வரலாற்று நினைவுச் சின்னங்களின் செழுமையான மரபினைப் பாதுகாப்பதற்கான தீவிர நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கீழடி அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்காக அமைக்கப்படும் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன. இதுபோன்றே, ஆதிச்சநல்லூர், கொற்கை, சிவகளை ஆகிய பகுதிகளில் அகழ்ந்தெடுக்கப்பட்ட தொல்பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்கான 'பொருநை அருங்காட்சியகம்' அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

56. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து கோயில் நிலங்களையும், உடைமைகளையும் பாதுகாப்பதற்கு

தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது. இதுவரையில் 3,657 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலங்களும், சொத்துகளும் மீட்டெடுக்கப்பட்டுள்ளன. மகத்தான இப்பணிகளுக்காக தமிழ்நாடு அரசிற்கு என் மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு, 158 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 34 கோயில்களின் புதிய கட்டுமானப் பணிகளை அரசு தொடங்கியுள்ளது. மேலும், திருச்செந்தூர் திருக்கோயில் பகுதியில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெருந்திட்ட வளாகப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

57. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற கொள்கையுடன் செயல்படும் இந்த அரசு, சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ள அடித்தட்டு மக்கள் அனைவரும் சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டினை அடைவதற்காக பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கான புதிய விடுதிக் கட்டடங்கள், திறன்மிகு வகுப்பறைகள் அமைத்தல், உண்டு உறைவிடப் பள்ளிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் 425.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

58. மாநிலம் முழுவதும் வீடின்றி வசித்துவரும் அழிவின் விளிம்பில் உள்ள பழங்குடியினருக்கு 1,537 வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. வனங்களில் வசிக்கும் பழங்குடியின மக்களின் உரிமைகளை உறுதிசெய்யும் பொருட்டு, கடந்த ஒன்றரை ஆண்டுகளில் வன உரிமைச் சட்டம் 2006-ன்கீழ் 2,293 பழங்குடியின குடும்பங்களுக்கு வன உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

59. தமிழ்நாட்டில் சமூகநீதியை நிலைநாட்டி, சமூகத்தில் பின்தங்கியுள்ள மக்களின் முன்னேற்றத்தினை உறுதி செய்யும் வகையில், சிறப்பான இட ஒதுக்கீட்டு முறையை தமிழ்நாடு அரசு பின்பற்றி வருகிறது. பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினருக்கு 10 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்குவது சமூகநீதிக் கொள்கைக்கு எதிராக உள்ளதால், தற்போது நமது மாநிலத்தில் பின்பற்றப்படும் இடஒதுக்கீட்டு முறையே தொடரும் என்ற கொள்கைக் கோட்பாட்டில் இந்த அரசு உறுதியாக உள்ளது.

2023 ஜனவரி 11]

60. சமூகத்தில் பின்தங்கியுள்ளோரின் பொருளாதார மேம்பாட்டை உறுதி செய்ய, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின்மூலம், *210* கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

61. கண்ணை இமை காப்பது போல் சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. ஹஜ் மற்றும் ஜெருசலேமிற்கு புனிதப் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கு மானியம் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

62. சமூகத்தில் நலிவடைந்த பிரிவினரின் நிலையை மேம்படுத்துவதை இந்த அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது. மாற்றுத் திறனாளிகள் பெறும் மாதாந்திர ஓய்வூதியத்தை *1,000* ரூபாயிலிருந்து *1,500* ரூபாயாகவும், தங்களைத் தாங்களே பராமரித்துக்கொள்ள இயலாத மாற்றுத் திறனாளிகளுக்கு பராமரிப்பு உதவித்தொகையை *1,500* ரூபாயிலிருந்து *2,000* ரூபாயாகவும் உயர்த்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக, ஆண்டொன்றிற்கு *388* கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். இதனால் மாநிலம் முழுவதும் உள்ள *6.45* இலட்சம் மாற்றுத்திறனாளிகள் பயன்பெறுவார்கள்.

63. அரசுப் பணியாளர்களின் நலனை கருத்தில் கொண்டு, சுமார் *16* இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறும் வகையில், இந்த அரசு *01.01.2023* முதல் அகவிலைப்படியை *34* சதவீதத்திலிருந்து *38* சதவீதமாக உயர்த்தி வழங்கியுள்ளது. இதனால் ஆண்டொன்றிற்கு அரசிற்கு *2,359* கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். ஓய்வூதியர்களுக்கான வாழ்நாள் சான்றிதழ் வழங்கும் முறை மின்னணு முறையில் எளிமையாக்கப்பட்டு, ஓய்வூதியதாரர்கள் இருக்கும் இடத்திலிருந்தே இச்சேவையைப் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

[*2023 ஜனவரி 11*

64. இந்த அரசு பதவியேற்ற பின் . . .

- *2021ஆம் ஆண்டில்,நம் மாநிலத்தில் மழைவெள்ளத்தால் சேதம் ஏற்பட்டு, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. அந்தப் பேரிடரை எதிர்கொண்ட அனுபவத்தின் அடிப்படையில், சமீபத்தில் ஏற்பட்ட புயலையும், கனமழையையும் இந்த அரசு மிகச் சிறப்பாகக் கையாண்டது.*

- *கோவிட் பெருந்தொற்று உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் மாநிலத்தின் பொருளாதாரம் தேக்க நிலையை அடைந்திருந்தது. கடந்த ஒன்றரை ஆண்டுகளில், இந்த அரசு மேற்கொண்ட பொருளாதார சீர்திருத்தங்களாலும், நலத் திட்டங்களாலும், வளர்ச்சிப் பணிகளாலும், இந்நிலை மாறி, தற்போது தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் முன்னேறிச் செல்கிறது.*

- *சட்டம் ஒழுங்கை சிறப்பாக நிலைநாட்டுவதால், தமிழ்நாடு தொடர்ந்து அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. இதனால், பன்னாட்டு முதலீடுகளை ஈர்த்து, அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.*

65. சமூகநீதி, சுயமரியாதை, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சமத்துவம், பெண்ணுரிமை, மதநல்லிணக்கம், பல்லுயிர் ஓம்புதல் ஆகிய கொள்கைகள் இவ்வரசின் அடித்தளமாக அமைந்துள்ளன. தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற மாபெரும் தலைவர்களின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பின்பற்றி, பார்போற்றும் திராவிட மாடல் ஆட்சியை இந்த அரசு வழங்கி வருகின்றது.

66. தமிழர்களின் நலன், தமிழ்நாட்டின் வளம் ஆகியவற்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இவ்வரசு அயராது உழைத்து வருகின்றது. எத்தனை இடர்பாடுகள் இந்த இலட்சியப் பாதையில் எதிர்நின்றாலும், அவற்றையெல்லாம் கடந்து தமிழ்நாட்டை

2023 ஜனவரி 11]

வளர்ச்சிப் பாதையில் வெற்றிகரமாக இந்த அரசு தொடர்ந்து, வழிநடத்திச் செல்கிறது. இவ்வாண்டில், மக்கள் நலனுக்காகவும், மாநிலத்தின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்காகவும், உரிய சட்டங்களை இயற்றி, சட்டமன்ற விவாதங்களில் தங்களது அரிய கருத்துகளை வழங்கி, இந்த அரசின் செயல்பாட்டிற்கு நீங்கள் அனைவரும் உறுதுணையாக இருப்பீர்கள் என நம்புகிறேன்.

67. அனைவருக்கும் மீண்டும் எனது புத்தாண்டு, பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகாகவி பாரதியாரின் வைர வரிகளுடன் எனது உரையை நிறைவு செய்கிறேன்.

வாழிய செந்தமிழ்!

வாழ்க நற்றமிழர்!

வாழிய பாரத மணித்திரு நாடு!

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.